# ஸ்ரீ ராம்சந்த்ரஜீயின் சுயசரிதம்

## பாகம் 2

## தொகுதி 3

## பங்களிப்பு

உருதுமொழி கையெழுத்துப் பிரதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து தொகுத்தவர்

மற்றும்

அறிமுகம், பின்னுரை மற்றும் குறிப்புகள் எழுதியவர்

## எஸ்.பி. ஸ்ரீ வஸ்தவா

முதல் தொகுதி – தயாரிப்பு

1944 மே முதல் செப்டம்பர் வரை

2வது தொகுதி – பொதுஅறிவிப்பு

1944 அக்டோபர் முதல் 1945 மார்ச் வரை

## 3ஆம் தொகுதி – பங்களிப்பு

1945 ஏப்ரல் முதல் 1955 ஜூன் வரை

## பதிப்பாளரின் குறிப்பு

வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் குடும்பத்தின் சார்பில், என் சகோதரர்கள் ஸ்ரீ உமேஷ் சந்த்ர சக்ஸேனா மற்றும் ஸ்ரீ சர்வேஷ் சந்த்ர சக்ஸேனா ஆகிய இருவருடன் நானும் சேர்ந்து, ஸ்ரீ ராம் சந்த்தரின் சுயசரிதம் – பாகம் 2ன் மூன்றாவது மற்றும் கடைசி தொகுதியைப் பதிப்பித்து வெளியிடும் கௌரவம் பெற்றிருக்கிறோம். இது உருது மொழியில் இருக்கும் மூல (பாபுஜியின் சொந்தக்) கையெழுத்துப் பிரதியிலிருந்து, குறிப்புகள், அறிமுக உரை, பின்னுரை ஆகிய இவற்றுடன் லக்கிம்பூர் – கேரியைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் எஸ்.பி.ஸ்ரீவஸ்தவா அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. வணக்கத்திற்குரிய மாஸ்டரின் வாழ்க்கைக் கதையின் மிக விசேஷமான நிகழ்ச்சிகள், ஆங்கில மொழியறிந்த அவரது பக்தர்கள் மற்றும் சீடர்கள் அனைவருக்கும், மற்றும் முறையான ஒழுங்கமைப்புடைய ஞானம் மற்றும் ஒரு பயிற்சியாக ஆன்மீகம் மற்றும் பிரம்ம வித்யாவில் ஆர்வமுடைய மற்றவர்கள் அனைவருக்கும், அதன் அசலான குறைக்கப்படாத வடிவத்தில் இப்போது கிடைக்கிறது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதான ஒரு விஷயம். காலப்போக்கில் இதர மொழிகளிலும் இது கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

ஸ்ரீ ராம் சந்த்தரின் சுயசரிதம் பாகம் – 2ன் மூன்றாம் தொகுதியாகிய இதன் தனித்தன்மை, இந்தியாவின் உத்திரப்பிரதேச மாநிலம் ஷாஜஹான்பூரில் ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன் என்ற அமைப்பை நிறுவியது மட்டுமின்றி, யோக சாதனாவின் (பயிற்சியின்) சகஜமார்க்கப் பயிற்சி முறைக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பங்களிப்பையும் உள்ளடக்கியதாக உள்ளது. வணக்கத்திற்குரிய மாஸ்டரின் மூத்த மகன் என்ற முறையில், இந்தப் பயிற்சி முறை அதன் துவக்கம் மற்றும் வளர்ச்சி நிலையில் இருந்த போது, அதைக் கவனித்தறியவும், அதில் தொடர்புடையவனாக இருப்பதற்கும் போதுமான அளவு, வயதில் வளர்ந்தவனாக இருந்தது என் நல்லதிர்ஷ்டமேயாகும். வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பெரும் கனிவு, மற்றும் அருளினால் அதன் ஆரம்ப உறுப்பினராகவும் இணைந்திருந்தேன்.

எங்களின் குடும்பத்தில் ஒருவராகவே இருக்கும் டாக்டர் எஸ்.பி.ஸ்ரீவஸ்தவா அவர்களுக்கு எங்கள் நன்றியை எவ்வளவு சொன்னாலும் போதாது. வணக்கத்திற்குரிய மாஸ்டரின் ஆயுட்காலத்தில் வாய்மொழியாக அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பணியினை அவர் மிகச் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறார். இந்தப் பெரும்பணியைச் செய்து முடிப்பதில்

அவருக்கு உதவியாக இருந்த அனைவருக்கும், எங்கள் நன்றிகளை போதுமான அளவு சொல்வது ஒருபோதும் இயலாது எனினும், அவர்களுக்கும் எங்கள் நன்றிகள். வணக்கத்திற்குரிய மாஸ்டரின் எந்நாளும் விளங்கும் அருளுக்கும், ஆசிகளுக்கும் உரியவர்களாக, இனிவரும் பணிகளையும் நிறைவேற்றும் திறனை அவர்கள் பெறுவார்களாக.

இந்தப் புத்தகம் சரியான முறையில் அச்சிடப்பட்டு வெளிவருவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்த ஹைதராபாத்தைச் சேர்ந்த சகோதரர்களுக்கு எங்கள் நன்றிகளை இதன் மூலம் பதிவு செய்கிறோம். வணக்கத்திற்குரிய மாஸ்டருக்கு அவர்கள் எப்பொழுதும் பிரியமானவர்களாக இருக்கிறார்கள். அவரையும், அவரது பங்களிப்பையும் மனித குலத்துக்கு எப்போதும் புதிதாகக் கிடைக்கச் செய்யும் நோக்கத்தில் எல்லா முயற்சிகளுக்கும் அவருடைய நல்லாசிகளே மிகப்பெரும் ஆதரவும் துணையுமாக விளங்குகின்றன.

ப்ரகாஷ் சந்த்ர சக்ஸேனா
யக்ஞ வல்கியர் ஜயந்தி (பிறந்தநாள்)வழக்கறிஞர்
8-11-1989 ராய் பகதூர் பில்டிங்க்ஸ்,
ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன்,
ஷாஜஹான்பூர் (உ.பி.),
இந்தியா

## தொகுப்பாசிரியர் குறிப்பு

வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீ பாபுஜியின் சுயசரிதம் பாகம் இரண்டின் இந்த மூன்றாவது கடைசித் தொகுதியில், இந்தத் தொகுதிகளை அதாவது கருத்துத் தொகுப்புகளை கவனமாகவும், உண்மையாகவும் படிக்கின்ற வாசகர்களும், மாணவர்களும், எங்கும் காணப்படுகின்ற ஆன்மீகத்தையும், தெய்வீகத்தையும் பற்றிய கருத்துக்களாகவும், புகழ் பெற்ற ஸ்தாபனங்களாகவும் விளங்குகின்ற மிகச் சிறப்பான ஒழுங்கமைப்பு மற்றும் விஞ்ஞானத்தை அழிக்கும் முயற்சிகள் மற்றும் அதில் செய்யப்படும் சீர்குலைவுகளுக்கு எதிராக, வணக்கத்திற்குரிய மாஸ்டரின் கவனமாக அக்கறையையும், உண்மையான ஆன்மீகம் மற்றும் அதற்கும் அப்பால் உள்ளது எதுவாயினும் அதன் இயற்கைப் பண்பு, தன்மை பற்றிய உள்ளுணர்வின் ஆழத்தையும், அளவற்ற தன்மையையும் காண்பார்கள். இயல்பாகவே அவர் மிகவும் பணிவும் தன்னடக்கமும் மரியாதைப் பண்பும் நிறைந்தவராக இருந்தாலும் கோட்பாடுகள் சம்பந்தமான உண்மைகளைப் பற்றிய விஷயத்தில், எந்த ஒரு தனிமனிதர் அல்லது சம்பிரதாயத்துக்கும் எதிராக சிறிதும் விட்டுக்கொடுக்காத உறுதியுடன் நின்றார். இத்தொகுதியில் சகஜமார்க்க யோகப் பயிற்சி முறை மற்றும் அதன் கொள்கைகளின் வளர்ச்சி பற்றியும், ஷாஜஹான்பூர் (உ.பி) ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன் என்ற இந்த அமைப்பின் அடித்தளங்களை உருவாக்கி முறையாக ஒன்றுபடுத்தியது பற்றியும் விரிவான செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் நாம் பார்க்கிறோம். மேலும் பௌதீக உலகிலும், சமுதாய, அரசியல் கட்டமைப்புக்களில் நிகழும் கண்கூடான சம்பவங்களில், இயற்கையின் மறைமுகமான பணியைப் பற்றி, வெளிப்புறமாக கவனித்து அறிவதால் மற்றும் மனிதனின் ஆர்வம் மற்றும் கூருணர்வுத்திறனால் கிடைக்கக்கூடிய, அவ்வப்போதைய குறிப்புக்களும் இதில் இருப்பதைக் காண்கிறோம். வெவ்வேறு தரப்பட்ட (தரத்தில் உள்ள) மக்களுக்கு, அவரவருடைய தனிப்பட்ட நாட்டங்கள் மற்றும் மனப்பான்மைகளுக்குத் தகுந்தவாறு, வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீ பாபுஜியின் பங்களிப்புகளின் இந்த வித்தியாசமான அம்சங்கள், ஆர்வத்தை அதிகரிப்பதாக அல்லது குறைப்பதாகத் தோன்றலாம். இவையே அதாவது அவர்களின் விருப்பங்களும், மனப்பான்மைகளுமே. இத்தொகுதியின் ஆசிரியருடையபணி மற்றும் தனி மனிதப் பண்பின் மீதான பற்றுதலுக்கு அல்லது வேறு ஏதோ ஒன்றுக்கு அடிப்டையாக அமைகின்றன. ஆரம்பத்திலேயே சொன்னபடி இந்த மாபெரும் நூலைத் தொகுக்கும் பணி, அவர் எழுதியவை முழுவதையும், உள்ளது உள்ளபடி

மறைக்காமல் கொடுப்பதிலேயே கவனம் உடையதாக இருந்தது. எங்கே தேவைப்பட்டதோ அதைத் தவிர எந்த இடத்திலும் குறுக்கிடாமல், பொருள் படுத்திச் சொல்லாமல், விரிவுபடுத்தாமல் இருக்க அக்கறை செலுத்தப்பட்டது. அப்படி அவசியம் ஏற்பட்ட இடங்களில், இனம், இடம், காலம் போன்ற எல்லைகளைக் கடந்து இந்தத் தொகுப்புக்களைப் பயன்படுத்தப்போகின்ற பல்வேறுவிதமான மக்களின் நலனுக்காகவே அது செய்யப்பட்டது. ஸ்ரீ பாபுஜியுடன் தொடர்பு பெற்றிருந்த ஒரு மாணவனாக, முக்கியமாக அவரின் சொந்த விருப்பத்திற்கேற்ப அவரது இந்த மகத்தான பங்களிப்புக்கு, அதாவது பொதுவாகச் சொன்னால், இந்த மூன்று தொகுதிகளுக்கு, சிறப்பாகச் சொன்னால் இந்த மூன்றாம் தொகுப்புக்கு நான் அளிக்கும் முதன்மை மற்றும் முக்கியத்துவமானது, காலங்காலமாக நமக்குக் கிடைத்து வந்த ஆன்மீகம் மற்றும் பிரம்மவித்யா (பரம்பொருள் பற்றிய விஞ்ஞானம்)வின் தூய்மையான மற்றும் உண்மையான நீரோட்டத்தை வருங்காலத்துக்காக இவை தொடரச் செய்கின்றன மற்றும் புத்துயிரூட்டுகின்றன என்பதேயாகும். இவ்வாறாக அது எனக்கு வருவது போல, அதில் ஆர்வமுடைய எந்த ஒருவருக்கும் வணக்கத்திற்குரிய மாஸ்டரின் கருணையால், தொடர்ந்து செய்யும் பயற்சிக்கு இன்றியமையாததாகவும், மிகவும் பயனுடையதாகவும் கிடைக்கிறது. இது சம்பந்தமாக, வேறு எந்த விஷயத்தையும் விட அதிகமாக, அவருடைய பங்களிப்பின் இந்த அம்சத்தை (அதாவது உண்மையான ஆன்மீகத்தை வருங்காலத்துக்காக அப்படியே வைத்திருப்பதை) நாம் பாதுகாக்கவும், மேலும் சிறப்பிக்கவும் வேண்டும் என்ற கருத்தில் வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீ பாபுஜிக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற என் கருத்தையும் உணர்வையும் சகோதரர்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்வது எனக்கும் கடமையாகிறது. இதை நான் அடிக்கடி பலமுறை சொல்லியும் இருக்கிறேன். எந்நாளும் மறையாத அவருடைய அருள் மற்றும் கருணையால் அது அப்படியே நடப்பதாக.

## நன்றி அறிவிப்பு

இதற்கு முந்தைய இரண்டு தொகுதிகளில் வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் சுயசரிதம் பாகம் இரண்டு - மூன்றாம் தொகுதி என்னும் இப்புத்தகத்தை சிறப்பாகக் கொண்டு வருவதில் – எனக்கு உதவி செய்த அனைவருக்கும் என் நன்றிகளைத் தெரிவிப்பதற்கு இயலாமற் போய்விட்டது. வழக்கம் போல, ஆம்ஸ்டர்டாம் (ஹாலந்து) நகரைச் சேர்ந்த சகோதரிகள் ஹெடியான்னே போஷ் மற்றும் மேடா வான்டென் ப்ரோக் ஆகிய இருவரும் இந்த இரண்டாம் பாகத்தின் வாசகங்களை முடிவு செய்து தட்டச்சு செய்து கொடுப்பதில் முன்வந்து உதவினார்கள். எனினும் இந்த மூன்று தொகுதிகளின் அளவும், வணக்கத்திற்குரிய மாஸ்டருடைய அருளினால் நடந்த சில குறிப்பிட்ட சந்தோஷமான நிகழ்வுகளும், இப்பணியை முடிப்பதில் மற்றவர்களின் உதவியையும் பெறவேண்டிய தேவையை உருவாக்கின. அன்புடைய சகோதரர் மான்ஸியர் (உயர்திரு) டவெர்னா அட்ரியானோ, மேடம் (திருமதி) டவெர்னா சண்டல் மற்றும் மேடம் ஆந்த்ரே ஆன்னி, மேடம் டாவர்னா தெரஸே ஆகியோர் அந்த உதவியை உண்மையாகவும், மகிழ்ச்சியோடும் செய்தார்கள். இவர்களுடன் பெல்ஜியத்தைச் சேர்ந்த மெல்லி மிக்கிஷே குல்ஸெப்பா (பினா)வின் மிகத் திறமையான உதவியும் கிடைத்தது. மேலும் அன்புமிக்க சகோதரிகளாகிய மேடம் பிரிச்சார்டு கேரின், மெல்லி பின்ஸ் ஆன்னி, மேடம் வெஸல் மேரி லௌஸி, மேடம் டெகுயல்ட்ரே டொமினிக் மற்றும் மெல்லி டவெர்னா மாக்கி ஆகியோரும் உற்சாகமுடன் உதவி செய்தார்கள். இப்படி உற்சாகமான விதத்தில் உதவி செய்ய முடியாமல் இருந்தவர்களும் மாஸ்டரின் இந்தப் பணியில் குறிப்பிடத்தகுந்த விதத்தில் பங்களிப்பைத் தந்திருக்கிறார்கள் என்பதால், மேலே குறிப்பிட்ட அனைவரும் தங்கள் பெயரை இங்கே குறிப்பிடுவதில் தயங்கி சங்கடமாக உணர்ந்தார்கள். எனவே, ஷாஜஹான்பூர் (உ.பி) ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன் மூலமாக சகஜமார்க்க யோகப் பயிற்சி முறையில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்களாகிய பெல்ஜியம் நகரைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் என் நன்றிகளைத் தெரிவிக்கிறேன். அவர்கள் அனைவருக்கும் இங்கு குறிப்பிட்டுச் சொல்லப்படாத இன்னும் பலருக்கும் வணக்கத்திற்குரிய மாஸ்டரின் எந்நாளும் நிலைத்திருக்கும் பேரருள் பொழிவதாக.

தீபாவளித் திருநாள். எஸ்.பி. ஸ்ரீவஸ்தவா.

29-10-1989

**1-4-1945**

(ஃபடேகரில் இருக்கும் வணக்கத்திற்குரிய லாலாஜி சாஹிப் அவர்களின் சமாதியில்) சுவாமி விவேகானந்தாவின் ஆலோசனைக் குறிப்புக்கள். (காலை 7 மணி): ''உன்னைப்போன்ற சிலரைத் தவிர மற்றவர்களுக்கு முழுமையாகப் பழுதுபார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. வழிமுறையில் மாற்றம் தேவைப்படுகிறது. பொதுவாக மக்கள் பழைய வழிகளிலேயே போய்க்கொண்டிருக்கிறார்கள். சூஃபி வழிமுறைகளின் கோட்பாடுகளில் அவர்கள் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். நடைமுறை காரணங்களுக்காக இப்போது இனியும் அவை தேவையில்லை. பொதுவாக காலாவதியாகிவிட்ட நூல் தொகுப்புகளில் இருந்தே மேற்கோள்கள் தரப்படுகின்றன. இப்போது அவை சரித்திர பூர்வமான மற்றும் கல்வி சம்மந்தமான ஆர்வத்துக்கு மட்டுமே பொருந்தும். நாளை தவறாமல் நீ ஷாஜஹான்பூருக்குப் புறப்படவேண்டும்.''

**3-4-1945 (ஷாஜஹான்பூரில்)**

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது. ''இந்த வெற்றிக்கான மணிமுடி (கிரீடம்) R2 - ன் தலையை அலங்கரித்திருக்கிறது. சகாக்களின் கூட்டம் சம்பந்தமான உனது எண்ணங்கள் முழுவதற்கும் இதுவே பதிலாகும். காலத்திற்கு ஏற்றபடி செய்யவேண்டிய கடமை என்று அப்போது நீ நினைத்திருந்ததை நிலைநிறுத்துவது அவசியம் என்று நான் கருதவில்லை என்பதாக எனக்கு எதிரான உனது புகார்கள் அனைத்திற்கும் கூட இதுவே பதிலாகும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் மற்றும் நேரத்தில் எது சிறந்த முறையை உள்ளடக்கியதாக இருக்கும் என்பதை மட்டுமே நான் சிந்திக்கிறேன். சகாக்களின் அந்தக் குறிப்பிட்ட கூட்டத்தில் யாரெல்லாம் இருந்தார்களோ அவர்கள் அச்சமயத்தில் அடையப்பெற்ற தங்கள் தன்மையை இன்னமும் கைவிடவில்லை. அந்த மாதிரி ஒரு சவாலின் வடிவத்தில் நிலைமை வந்திருந்தால், நான் என் இதயத்தை திறந்திருப்பேன் என்பதில் நம்பிக்கையோடு இரு. எத்தனையோ நாட்களின் உழைப்பு ஒரு சவாலின் வடிவத்தில் வீணாகிப்போகவிடப்பட்டிருக்கும் என்பதை உன்னால் புரிந்து கொள்ள முடிகிறதா? இப்போது இன்னொரு திட்டம் வந்து கொண்டிருக்கிறது. இது உனக்கு ஒரு தகவல்.''

**சுவாமி விவேகானந்தா:**

''தென்னிந்தியாவின் பணிகளுக்காக உனது வேண்டுகோளின்படி வணக்கத்திற்குரிய உன் மாஸ்டரால் உனக்கு ஒரு வருட கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. (இப்போது) எச்சமயத்திலும் நீ ஓய்வாக இல்லை.

ஆன்மீக சகாக்களுக்கான உனது சங்க அமைப்பினை உருவாக்கும் திட்டம் சம்பந்தமான கடமைகள் வந்து கொண்டிருக்கின்றன. இதில் ஒரே ஒருவரை மட்டுமே சார்ந்து நிற்கவும், இதற்கான திட்டம் மற்றும் செயல்பாட்டு வழிமுறைகளை பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து நீ பெறுவாய். நாங்கள் இருவரும் (பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் நானும்) இவ்விஷயத்தை ஒப்புக்கொண்டிருக்கிறோம். அதாவது இந்த சங்க அமைப்பினை உருவாக்கும் வேலை முற்றிலும் என் வழிகாட்டுதலின் கீழ் இருக்கும். இது சம்பந்தமாக வணக்கத்திற்குரிய உன் மாஸ்டருக்கு எந்தப் பொறுப்பும் இல்லை. இந்த மார்க்கத்தை கட்டமைப்புடன் உருவாக்கும் இலாக்காவுக்கு நான் தலைமை வகிக்கிறேன். ஆன்மீகப் பணியை அவர் செய்வார். இது ஒரு நிரந்தரமான ஏற்பாடாகும்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (இரவு 7.00 மணி):**

''R7 - ஐ நான் அழிவிலிருந்து தவிர்த்திருக்கிறேன்.''

**சுவாமி விவேகானந்தா:**

''என் பாராட்டுக்களை ஏற்றுக்கொள். அவர் செய்துள்ள அற்புதமான வேலைக்காக I1 - ஐ நான் மிகவும் பாராட்டுகிறேன். அவரது வேலையில் நான் முழு திருப்தியடைந்திருக்கிறேன். I1 - க்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட பரிசுக்காக எனக்கு மூன்று நாட்கள் தேவை.''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''தென்னிந்திய சுற்றுப்பயணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கான காலம் அளிக்கப்பட்டுள்ளது.''

**வணக்கத்திற்குரிய மகான் கபீர்.**

''என்னுடைய வேலை தவிர்க்கப்படுகிறது. (வேறு வேலையில் கவனம் அளிக்கப்படுகிறது)''.

**சுவாமி விவேகானந்தா:**

''நமது பிரபுவுடன் (கிருஷ்ணருடன்) சேர்ந்து கபீருடைய பெயரும் சரித்திரத்தில் இடம் பெறும்.''

5-4-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - இடம் கூறியது. :**

''என் பிரியமான ராம் சந்த்தர் சொல்வதை நான் கடவுளின் கட்டளையாக எடுத்துக் கொள்கிறேன். அவர் எனக்கு என்ன வேலையை நியமித்தாலும், அதில் நான் தலை முதல் கால் வரை - அதாவது முழுமையாக

ஈடுபடுகிறேன். உங்களுக்கெல்லாம் நான் ஒப்படைக்கும் வேலை என்னவெனில், நான் இதுபற்றி வேறு உத்தரவு இடும் வரையில் இந்த மார்க்கத்தை கட்டமைத்து, அதை வளரச்செய்யும் பணியை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே. இந்த வேலையை முடித்த பிறகு தான் நான் அமைதியை உணர்வேன். ''

6-4-1945

**சுவாமி விவேகானந்தா:**

''நமது பிரபுவை நீ அவருடைய இடத்திலேயே இருக்க விட்டிருக்கிறாய். இப்போது எந்நேரமும் எனக்குக் கவலை தந்து கொண்டிருக்கிறாய். (சற்று இடைவெளி) கடந்த காலத்தில் இருந்த பயிற்சிக்கும், இக்காலத்தில் ஷகல் – இ – ராபிதா (Shaghal – e – Raabetaa) (மாஸ்டரின் உருவத்தை தியானித்தல்) என்று நீ கூறும் முறைக்கும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது. நீ இப்போது (உன் கட்டளைப்படி செயல்படும்) முழுமையான ஆற்றலுடன் இருக்கிறாய். நீ என்னைப் பற்றி எந்தநேரமும் நினைத்துக் கொண்டிருக்கிறாய். நானும் அதே அளவுக்கு எந்நேரமும் உன்னை நினைத்துக் கொண்டிருக்கிறேன்.''

11-4-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''எனது பிரியமான ராம்சந்த்தரிடமிருந்து வேலை வாங்குவதற்கு இப்போது ஒரு புது வழிமுறையை உருவாக்கியிருக்கிறேன். அதாவது, நான் 'நானாகவே' அவருடைய உடலினுள் வசிக்கிறேன். அதன் பிறகு நான் விரும்பியவாறு செயல்களைச் செய்வார், நடந்து கொள்வார். தேவைகளுக்கு ஏற்றவாறு நான் அவருக்குள் வருவேன், போவேன். அவருக்குப் பயிற்சியளிக்கும் நோக்கங்களுக்காக வெளியே தங்கியிருப்பேன். இந்த விஷயம் யாருடைய சிந்தனைக்கும் சிறிதும் எட்ட இயலாதது. கடவுள் எங்கும் பரவியிருக்கிறார். 'நானாகவே' என்ற வார்த்தைகளின் மூலமாக, நான் மேலுலகில் நான் இருக்கின்ற அதே நிலையைத்தான் குறிப்பிடுகிறேன். அதே சக்தியுடன்தான் அவருக்குள்ளே நான் வசிக்கிறேன். அந்த நோக்கத்திற்காக அவரை ஒரு தகுதியுள்ள பாத்திரமாக ஏற்கனவே நான் உருவாக்கியிருக்கிறேன்.''

**சுவாமி விவேகானந்தா:**

''அடேயப்பா! என்ன ஒரு புதுமையான விஷயம் இது. நான் இதற்கு விளக்கம் சொன்னால், அதை பக்கம் பக்கமாக எழுத வேண்டியிருக்கும். இம்மாதிரி உதாரணம் இதற்கு முன்பு ஒருபோதும் நிகழ்ந்ததில்லை.''

டேராடூன் எக்ஸ்பிரஸ் மூலமாக R6 - உடன் ஹரித்வார் செல்லப் புறப்பட்டேன்.

12-4-1945

**(ஹரித்வாரா என்ற ஊரில் 12 வருடங்களுக்கு ஒருமுறை கங்கை நதியில் யாத்ரிகர்கள் வந்து நீராடும் கும்பமேளா என்ற திருவிழா)**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்.:**

''இங்கே புனிதமானவை என்று கருதப்படுகின்ற இடங்கள் அனைத்தையும் சுத்திகரிப்பு செய். இந்த ஊரின் நிலத்திலிருந்தும் கூட கடினத்தன்மையை நீக்கிவிடு. இங்கிருக்கும் பூஜாரிகள் இனம் அழிவுக்கு உள்ளாக்கப்பட வேண்டும். இங்கு வரும் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த சாதுக்களை நீ சென்று சந்திப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. 14ஆம் தேதி ஹரித்வாராவை விட்டு டெல்லிக்குப் புறப்பட்டு விடு. டெல்லியில் உனக்காக ஏராளமான வேலை காத்திருக்கிறது.''

**மேலும் அவர் அளித்த கட்டளைகள். (இரவு 10.30 மணி) :**

''கங்கை நதிக்கரையில் மக்கள் நீராடும் துறையில் நாளை காலை 8 மணி முதல் நீ இருக்கவேண்டியது உன் கடமை. குறைந்தது ஒரு மணி நேரம் நீ அங்கே இருக்கவேண்டும். (சற்று இடைவெளி) ஹரித்வாராவின் கடினத்தன்மை சுத்திகரிப்பில் நீக்கப்பட்டிருக்கிறது. இரவு நேரத்தில் அழிவு வேலையை எடுத்துக்கொள். பகல்நேரத்தில் ஹரித்வாராவை ஒளியூட்டும் பணியில் ஈடுபட்டிரு.''

13-4-1945

**(கும்பமேளா திருநாள்)**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (காலை 8.40 மணி) :**

''நீ டெல்லி செல்வது பற்றிய தகவல் அங்கே தெரிவிக்கப்பட்டுள்ளது.''

காலை 9 மணிக்கு டெல்லியின் ஒரு மூத்தமுனிவர், நான் அங்கு வந்து சேரும் நாள் மற்றும் நேரம் பற்றி விசாரித்தார்.

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''நாளை பிற்பகல் டெல்லிக்குப் புறப்படு. நீ இங்கே தங்கியிருக்கும் நேரம் வரையில் ஹரித்வாராவுக்கு தொடர்ந்து ஒளியூட்டிக் கொண்டே இரு. ஒன்றிரண்டு இடங்களில் நீ செய்ததைப் போல எல்லா சக்தியையும் உடனடியாக ஒருமுகப்படுத்தாமல் / ஒரு இடத்தில் குவிக்காமல் இருப்பதில் கவனமாக இரு. அது பற்றிய லேசான எண்ணத்துடன் இரு. (சிறிது இடைவெளி) (நேரம் பகல் 12 மணி) இப்போது ஹரித்வாரா போதுமான அளவுக்கு மிகச் சிறப்பான நிலையில் இருக்கிறது.''

டெல்லியின் தெய்வீக ஒழுங்கை பராமரிக்கும் பொறுப்பில் உள்ள கண்ணுக்குப் புலப்படாத ஞானி, நான் டெல்லிக்கு வரப்போகும் நாள் மற்றும் நேரம் பற்றி மீண்டும் விசாரித்தார். என்னுடைய பாதுகாப்பை கவனித்துக் கொள்ளும்படி அவருக்கு கட்டளைகள் கிடைத்திருப்பதாக என்னிடம் தெரிவித்தார்.

**15-4-1945 (டெல்லி)**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :**

''பரமாத்மாவிடமிருந்து நீ வேலையை எடுத்துக் கொண்டிருக்கும் வழிமுறை வேறு யாராலும் செய்ய முடிந்திராத ஒன்று.''

டெல்லியில் செய்யப்படவேண்டிய வேலை கர்முக்தேஸ்வர் ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. டெல்லி ரயில்நிலையத்தில் கால் வைத்தவுடன் டெல்லியின் பொறுப்பில் இருந்த கண்ணுக்குப் புலப்படாத ஞானி வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். தன் கடமையைச் செய்யத் துவங்கி விட்டதாக அவர் என்னிடம் தெரிவித்தார்.

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :**

''டெல்லியில் நிறைய வேலை இருக்கிறது. அதற்கு ஏராளமான உழைப்பு தேவைப்படுகிறது. நாளை நீ டெல்லி முழுவதையும் சுத்திகரிப்பு செய். அதன் பிறகு அதன் ஒவ்வொரு துகளின் மூலமாகவும் சத்தியத்தின் ஒளி மெல்லியதாக ஒளிரும்படி அருளை நிரப்பு. அதன் பிறகு மேலும் பணி உனக்கென நியமிக்கப்படும். இப்போது நான் போகிறேன். இரண்டுமணி நேரம் ஓய்வெடுத்துக் கொள். இன்றிரவு வேலை ஆரம்பமாகும்.'' (நேரம் பிற்பகல் 3 மணி).

16-4-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்.:**

''டெல்லியில் வேலை நல்லவிதமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஆலோசகரின் (Naib Deputy) (நைப் உதவியாளர் / ரகசியமான அரசியல் வேலை பற்றிய குறிப்பு) பதவியை கவிழ்த்து விடு. இன்று இந்த வேலை மட்டும் தான் இருக்கும்.''

**சுவாமி விவேகானந்தா:**

''டெல்லியில் நீ நன்றாக வேலை செய்திருக்கிறாய்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்.:**

''நாளை முதல், மீண்டும் டெல்லிக்கு ஒளியூட்டு. டெல்லியில் அருள் தொடர்ந்து பெருகி ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த முறையிலும் கூட அதே விஷயம் அங்கிருக்கிறது. பரமாத்மாவின் சக்தி டெல்லியின் மீது நேரடியாகத் திரும்பியிருக்கிறது. இந்த வேலை நாளை முடிவடைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.''

**ஒரு கேள்விக்கு விடையாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது. :**

''டெல்லியில் அருள் மிக நுட்பமாகவும், சூட்சுமமான வகையிலும், அது பற்றிப் புரிந்து கொள்வது சிரமமாக இருக்கும் அளவுக்கு பாய்ந்து கொண்டிருக்கிறது. வெற்றிடத்தில் (ஆகாயத்தின்) துகள்களும் அணுக்களும் ஒளியூட்டப்பட்டுள்ளன. அதிலிருந்து இந்த மண்ணின் அணுக்களில் இந்த விளைவு பரவிக்கொண்டே இருக்கும். மக்களின் மீது இந்த விளைவு சிறிதளவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. காலப்போக்கில் உனது புத்திக்கூர்மையின் மூலமாக நீ உருவாக்கியுள்ள இந்த அணுக்கள் மக்களையும் பாதிக்கும். டெல்லியின் ஒவ்வொரு துகளும் (அதாவது இந்த மண்ணின் ஒவ்வொரு அணுக்களும்) ஒளியூட்டப் பெற்றுள்ளன. (நேரம் இரவு 10.30 மணி)

17-4-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''டெல்லியின் வேலையை நீ இப்போது செய்து முடித்திருக்கிறாய். இங்கிருந்து நாளை நீ புறப்படு. டெல்லியின் மண்ணில் பாதாள நிலைகளில் ஒரு ஆன்மீக நீர்த்தேக்கத்தை (அணையை) நீ உண்டாக்கியிருக்கிறாய். வேறு வார்த்தைகளில் சொன்னால் இதை தெய்வீக

அருளின் இல்லமாக ஆக்கியிருக்கிறாய். இந்த நிலம் சுத்திகரிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த வெற்றிடத்தில் தெய்வீக ஒளியை தொடர்ந்து நிரப்பிக் கொண்டிரு. நிறைய காலத்திற்குப் பிறகு டெல்லியின் மக்கள் இதன் தரத்துக்கு வருவார்கள். நீ உன் வேலையைச் செய்து முடித்துவிட்டாய். இந்த டெல்லி நிலத்தை சுத்திகரிப்பு செய்வதற்காகவே நீ இங்கு அனுப்பப்பட்டாய்.''

## டெல்லி நகரின் பொறுப்பில் இருக்கும் கண்ணுக்குப் புலப்படாத ஞானி:

''டெல்லி நகரத்தின் புனிதமான நிலம் தெய்வீக அருளை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளது. ஐயோ, அதைப் பார்ப்பதற்கான கண்கள் யாருக்கும் இல்லையே! ''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

"அன்புள்ள ராம் சந்த்தர், நீ மனநிறைவுடன் இருப்பாயாக. அதுவே கடவுளின் சித்தம். அதன் விருப்பப்படியே நீ எதையும் செய்ய வேண்டும். நீ கண்டுபிடித்துள்ள இடங்களில் பொருத்தமான கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு உன்னாலேயே முடியும் என்பதால் இம்மாதிரி அறிகுறிகள் உனக்கு வரும். நீ B10 - ன் இடத்திற்குப் போகலாம். பணத்தின் போதையூட்டும் கர்வத்தினால், உன்னை லேசாக அவமதிக்கும் பார்வையை உன்மீது அவர் செலுத்தினாலும், அவருடைய தலைமையையும், சொத்து முழுவதையும் நான் திரும்ப எடுத்துக்கொள்வேன். இதை கடவுளின் கட்டளையாக எடுத்துக்கொள். இதன் காரணமாக, அவரிடம் போகும் எண்ணத்தையே மொத்தமாக கைவிட்டு விடுவதே மேலானது. சக்ரவர்த்திகளுக்குக் கூட கிடைக்க முடியாத அவ்வளவு பெரிய செல்வத்தை நான் உனக்கு அளித்திருக்கிறேன். இந்த உலகில் நீண்ட காலத்துக்கு நீ நினைவு கூறப்படுவாய். உன்னுடைய பணியை செய்து முடிப்பதற்கும், மேலும் செம்மைப்படுத்துவதற்கும் யாராவது ஒருவர் வருவார். மதுராவில் நீ கண்டறிந்துள்ள இடங்களைக் கண்டுபிடிக்கும் சக்திவேறு யாருக்கும் இருக்க முடியாது. பொதுவாக இவற்றை வெளிப்படுத்துவதற்கான சரியான நேரம் வரும் வரையில், இவற்றை மக்களிடம் தெரிவித்துப் பரப்புவதற்கு யாராவது தயாராகும் வரையில் பொதுவில் அறிவிக்கக் கூடாது.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் இப்போது R6 - க்காக தொடர்ந்து கூறியது:**

‘‘உன் சகோதரர் ராம் சந்த்தரின் உண்மையான உள்நிலைத் தன்மையை நீ நன்றாக அறியவில்லை என்பதை நான் மீண்டும் சொல்ல வேண்டியிருக்கிறது. உண்மையில், இங்கு வந்திருக்கிற யாருக்குமே இன்னமும் அதைப் பற்றிய ஒரு மதிப்பு தெரியவில்லை. அவருக்கு ஒப்பாக அவருக்கு சமமாகச் சொல்லும்படி உலகில் எந்த ஒரு சக்தியும், எந்த ஒரு தனி மகானும் இல்லை. மேல் உலகில் மிகப் பொருத்தமான பாராட்டைப் பெறும்படியாக நான் அவரை உருவாக்கியிருக்கிறேன். ராம் சந்த்தர் பிறப்பிக்கும் கட்டளைகள் எதுவாயினும் மேல்உலகில் வசிப்பவர்கள். அதாவது முக்தி பெற்ற ஆன்மாக்களைச் சொல்கிறேன். அதற்குக் கட்டுப்பட்டு, (அதற்குக் கீழ்படிந்து) நடக்க வேண்டியது கட்டாய கடமையாகும். நானும் கூட இதற்கு விதிவிலக்கு அல்ல. அவரைப் பற்றி மக்கள் எந்த சரியான மதிப்பீடும் செய்ய முடியாத அளவுக்கு அவர் எளிமையில் தன்னை மறைத்துக் கொண்டிருக்கிறார். நான் மீண்டும் சொல்கிறேன். அவரிடமிருந்து நன்மை பெறுகிறவர்கள் மற்றும் அவருடன் கூடவே இருப்பவர்கள் நல்லாசி பெற்றவர்கள். இந்த சந்தர்ப்பம் நீண்ட காலம் இருக்கும் என்று சொல்ல முடியாது. இந்த மாதிரி தன்மை உடைய மகாபுருஷர் தோன்றுவதும் மிக அரிது. அவருடைய பதவி நிலை ஒரு அவதாரம் போன்றது. இது ரகசியமான ஒரு விஷயம். மிகச்சிறந்த உயர்நிலை எய்திய மூத்த மகான்கள் பலர் அவரையே தங்கள் பிரதிநிதியாக, பதவிக்கு உரியவராக உருவாக்கியிருக்கிறார்கள். இன்னும்பலர், தங்கள் நம்பிக்கையை அவர் மீது வைத்து எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். இதன் காரணமாக, R6 - ஆகிய உனக்கு நான் சொல்கிறேன். உனக்கு வேண்டிய நன்மை எதுவாயினும் அதை அவரிடமிருந்து பெற்றுக்கொள். அவரை நேசிப்பது என்னையே நேசிப்பதாகும். என்னுடைய ஒவ்வொரு அணுக்கூறும் அவரிடம் ஐக்கியம் அடையச் செய்திருக்கிறேன். அவருடனேயே என்னை முற்றிலும் அடையாளப்படுத்திக் கொண்டிருக்கிறேன். இம்மாதிரி ஒரு ஐக்கிய நிலையை வேறு எங்கும் காண முடியாது. வருங்காலத்தில் இப்படி நடக்குமென எதிர்பார்க்கவும் முடியாது. என்னிடம் சரணாகதியளிக்காமல் எதையும் அவர் விடவில்லை. இதுவும் கூட எங்கும் காணமுடியாத ஒன்று. அவரை ஒரு உதாரணமாக எடுத்துக்கொண்டு, அதைப்போல பின்பற்றி நடக்க முயற்சி செய்.

இப்போதைக்கு நான் சொல்வது இவ்வளவு தான்.'' (நேரம் காலை 9.30 மணி).

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் பிறகு கூறியது. (நேரம் இரவு 7.20 மணி):**

''டெல்லியில் நீ வேலையை செய்து முடித்திருக்கிறாய். இனியும் இங்கே கவனம் செலுத்த வேண்டிய தேவை இல்லை. பரமாத்மாவிடமிருந்து டெல்லிமீது 36 மணி நேரமாக அருள்மழை பெய்து கொண்டிருக்கிறது.

R2 - இடம் ஒப்படைக்கப்பட்ட வேலையை இரவில் நீ எடுத்துக்கொள்.'' (அரசியல் நிலைமை சம்பந்தமாக செய்யப்படவேண்டிய வேலையை இது குறிப்பிடுகிறது.)

**இதற்குப் பிறகு இந்த வேலை சம்பந்தமாக என் கேள்விக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் பதிலளித்தார். (இரவு 11 மணி):**

''நீ இவ்விதத்தில் தொடர்ந்து லேசாக எண்ணம் கொண்டிருந்தால் இனிமேலும் அதற்கு தேவை எதுவும் இல்லையென்றாலும் கூட, அதை நான் தடை செய்ய மாட்டேன். இந்தத் தடவை பரம்பொருளின் எல்லையற்ற சக்தியின் மூன்று பலமான உந்துதல்களை இங்கு செலுத்தியிருக்கிறாய்.''

மதுரா வழியாக ஷாஜஹான்பூருக்கு 18 மற்றும் 19-4-1945 தேதிகளில் திரும்பிச் செல்லும் பயணம்.

**21-4-1945**

**சுவாமி விவேகானந்தா:**

''நான் இன்னும் K,..... என்ற இடத்தில்தான் இருக்கிறேன். இங்கு வேலை முடியும் வரை இந்த இடத்தை விட்டுச் செல்லமாட்டேன். உனது குரு பெரும்பாலும் என்னுடனேயே இருக்கிறார். நாங்கள் இப்போது ஒளியுலகிற்குப் போகவில்லை. எங்களுக்கு முன் இருக்கும் முக்கியமான வேலை முடிவடைந்த பிறகு ஆன்மீகப் பணி குமிழியிட்டுக் கிளம்பும். இங்கே (K ...... என்ற இடத்தில்) பெரும் களேபரமும், உணர்ச்சிகளின் எழுச்சியும் இருக்கிறது. ஏதோ ஒரு இனந்தெரியாத சக்தி வேலை செய்து கொண்டிருக்கிறது. அது N1- இன் நிலை மாறிப்போன அந்தஸ்தில் (பதவி நிலையில்) இருந்து, பொதுவாக மக்களைத் தனிமைப்படுத்தி வைத்திருக்கிறது.''

22-4-1945

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''இப்போது, ராம் சந்த்தர் மிகச்சிறப்பாக வேலை செய்திருக்கிறார். என் மகிழ்ச்சியை என்னால் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. அதனால் நான் இங்கு வரவேண்டியதாயிற்று. அவர் எதற்காக பனாரஸ்ஸுக்கு (பிறகு வாரணாசி, காசி என்று பெயர் பெற்றது) அனுப்பப்படுகிறாரோ அந்த வேலையையும் சிறிது காலத்திற்கு நான் ஒத்தி வைத்திருக்கிறேன். இந்தக் காலகட்டத்தில் அவர் இங்கு இல்லாதிருப்பதால் எந்தத் தொல்லையும் ஏற்படாமல் இருப்பதற்காக அப்படிச் செய்தேன். இது விசேஷமான ஒரு மனிதரின் பங்குக்கு உரியது. இம்மாதிரி ஒரு வேலையை ஒப்படைப்பதற்கு அவரைப்போல ஒரு மனிதரை வேறு எங்கே காணமுடியும்? இவையனைத்தும் வணக்கத்திற்குரிய அவருடைய மாஸ்டருக்குச் சொந்தமான ஒரு அற்புதம் தான்!''

**என் பிரார்த்தனைக்கு இணங்கி, வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தொடர்ந்து கூறியது :**

''உனது பிரார்த்தனைக்கு பலன் அளிக்கப்படுகிறது. வணக்கத்திற்குரிய உனது மாஸ்டரும், சுவாமி விவேகானந்தாவும் வேறு யாருக்கும் ஒரு போதும் கிடைக்க முடியாத ஒரு பதவிநிலை அளிக்கப்படுகிறார்கள். அவர்கள் விரும்பித் தேர்ந்தெடுக்கிற எந்த ஒருவரையும் அந்த மாதிரி விதத்தில் உருவாக்குவதற்கான தனி உரிமை அவர்களுக்கு இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - க்குக் கூறியது :**

''எனது அதிர்ஷ்டத்தை நான் பாராட்டுகிறேன். சுவாமி விவேகானந்தாவும் இதே வார்த்தைகளைச் சொன்னார். இந்த சூட்சுமமான சுத்திகரிப்புக்கு ஒரு பாராட்டு! (சபாஷ்). ராம் சந்த்தர் இயற்கையே கூட ஏற்றுக் கொள்ள மறுக்க முடியாத அளவு மிகவும் நியாயமான காரணமுடைய ஒரு விஷயத்தைக் குறித்து கேள்வி எழுப்பினார். தனது மானிடக் கடமையாகிய கடனை அவர் முழுவதும் திரும்பிச் செலுத்திவிட்டார். ஆனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள பதவியை தக்க வைத்துக் கொள்வதால் எனக்கு என்ன லாபம்? அதை நான் அவருக்குத்தான் மாற்றிக்கொடுக்க வேண்டியிருக்கும். இந்த நிலைக்கு ஒரு உதாரணமாக அமீர் குஸ்ரூவைத்தான் சொல்ல முடியும். ஆனால் அது கொஞ்சம் வேறு விதமானது. உண்மையைச் சொல்வதானால், இந்த மாதிரி அன்பு குஸ்ரூவிடத்தில் கூட காணப்படவில்லை என்று சொல்வேன். இதை

கீழ்ப்படிதல் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஒருமுறை ராம்சந்த்தரிடம் என்னையும், ஸ்வாமி விவேகானந்தாவையும் ஒருவராகவே கருதி அப்படியே நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லியிருந்தேன். இதன் காரணமாக, இதே எண்ணத்தைக் கருத்தில் கொண்டு பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் புனிதமான பிரசன்னத்தின் போது எங்கள் இருவருக்காகவும் அவர் பிரார்த்தனை செய்தார். எனவே, இருவரும் அதன் பலனைப் பெற்றோம். அந்தப் பிரார்த்தனை இதுதான்: ''மிகவும் சிறிய செயல்களுக்காக எனக்கு நிறைய அளவு பரிசளிக்கப்பட்டுள்ளது. நான் எப்படி இருக்கவேண்டுமோ, அப்படி என்னை வடிவமைத்து உருவாக்கிய என் வணக்கத்திற்குரிய என் மாஸ்டருக்கே இந்த அற்புதங்கள் அனைத்தும் சொந்தம் என்று பிரபுவாகிய நீங்களே சொல்கிறீர்கள். அப்படியானால் இதற்கு நியாயமான பிரதிபலனாக வணக்கத்திற்குரிய என் மாஸ்டருக்கு என்ன அளிக்க வேண்டுமோ அதற்குத் தடையாக எதுவும் நிற்பதாகத் தோன்றவில்லை. மேலும், இதுவும் என்னுடைய பிரார்த்தனை. அதாவது சுவாமி விவேகானந்தா எனக்கு எதுவும் கொடுக்காமல் குறையாக விட்டுவிடவில்லை என்பதால் அவருக்கு இதே நன்மை அளிக்கப்பட வேண்டும்.''

(அமீர்குஸ்ரூ பற்றி மேலே கூறப்பட்டிருப்பதன் விளக்கக்குறிப்பு: அமீர் குஸ்ரூ என்பவர் 14ஆம் நூற்றாண்டில் டெல்லியில் வாழ்ந்து வந்த சூஃபி மார்க்க மகான் க்வாஜா நிஜாமுதீன் அவுலியா என்பவரின் பிரதம சீடராக இருந்தவர். இவரைப் பற்றி இவருடைய குருநாதர், ''இஸ்லாம் மதத்தின் நன்னடத்தை பற்றிய தெய்வீக விதிமுறைகள் (ஷரியத் சட்டம்) அதற்கு எதிராக இல்லையென்றால் (இல்லாதிருந்தால்) தனது சீடனுடன் அதே சமாதியில் சேர்ந்து தானும் புதைக்கப்படுவதை விரும்புவேன் என்று சொன்னார்.'' க்வாஜா நிஜாமுதீன் இறந்தபோது ஒரு படைத்தலைவராக குஸ்ரூ வெகுதொலைவில் ஒரு ராணுவப்பணியில் இருந்தார். நிஜாமுதீன் தனது சீடர்கள் அனைவருக்கும் தனது மரணச் செய்தியை குறைந்தது நாற்பது நாட்களுக்காவது குஸ்ரூவிடம் தெரிவிக்கவேண்டாம் என்று உத்திரவிட்டிருந்தார். எனினும் குஸ்ரூ மனதில் அமைதியிழந்திருந்தார். டெல்லி திரும்பியவுடன் நேராக தனது குருவின் இருப்பிடத்திற்குச் சென்றார். அது அவருடைய குருநாதர் நிஜாமுதீன் மறைந்து நாற்பதாவது நாளாக இருந்திருக்கலாம். அதன் பிறகு விரைவிலேயே குஸ்ரூவும் இறந்துவிட்டார். அவருடைய உடல் குருவின் உடல் புதைக்கப்பட்ட இடத்திற்கு சில கெஜ தூரத்தில் குருவின் பாதங்களை நோக்கி இருக்கும்படி

புதைக்கப்பட்டது. குஸ்ரூ ஒரு கவிஞர். நவீன ஹிந்தி மொழியை உருவாக்கிய முக்கியமான ஸ்தாபகர்களில் ஒருவர். தன் குருநாதர் மறைந்தது பற்றி அவர் அறிந்தவுடன் கூறிய இருவரிக் கவிதை மிகவும் புகழ்பெற்றது. ''பொன்னிறக் கூந்தல் உடைய காதலி முதலிரவுக் கட்டிலில் தன் தலைமுடி கொண்டு முகத்தை மூடியவளாய் உறங்குகிறாள். ஓ குஸ்ரூ, உன் வீட்டிற்குப் புறப்படு, ஏனெனில் இரவு நேரம் வந்துவிட்டது.'')

### சுவாமி விவேகானந்தா:

''நமது மிஷனில் (மார்க்கத்தில்) எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால் இந்தவிதமான விவேகம் வேறு யாருக்கும் இல்லை. அவர்கள் நடைமுறையில் ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். உன் குருவுடன் நான் அருகருகே தொடர்ந்து செல்வேன். வேறு யாராவது இப்படி ஒரு விஷயத்தைக் கூறி பெருமைப்பட முடியுமா? என்னையும் உன் குருவையும் தவிர வேறு யாருமில்லை என்று நான் நினைக்கிறேன். இந்த நாள் முதல், உன்னால் அப்படி ஆணையிடப்பட்டால், என் கடமையைச் செய்வதில் எந்த ஒரு கல்லையும் திருப்பிப்போடாமல் (புரட்டிப்போடாமல்) விடமாட்டேன். (எந்த வேலையாயினும் செய்யத் தவறமாட்டேன்) என்று வாக்குறுதியளிக்கிறேன். உன் குருவை நினைப்பது போலவே என்னையும் நினைப்பாயாக. இப்போது மிகப்பெரிய சக்தியானது எங்களுக்குத் துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பதவியை நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். பகவான் ஸ்ரீ கிருஷ்ணராகிய மிக மேலான அதிகாரியினால் எங்களுக்கு அளிக்கப்பட்ட பரிசு இது.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர். (காலை 10.40 மணி) :

''வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் எங்களுக்கு அளித்திருக்கும் பதவிநிலை சம்பந்தமான உத்தரவுகள் கிடைக்கத் துவங்கியுள்ளன.''

### சுவாமி விவேகானந்தா:

''இவையெல்லாம் உன் குருவுடன் கூட இருந்ததன் காரணமாகக் கிடைத்தவை.''

### அகஸ்திய முனிவர். (மாலை 4.15மணி) :

''வருங்காலத் தலைமுறைக்கு தனது உதாரணத்தை விட்டுச்செல்கின்ற ஒரு காரியத்தை நீ செய்திருக்கிறாய். உனது வணக்கத்திற்குரிய மாஸ்டர் உன்னிடம் எதையும் குறையாக இருக்க விடவில்லை. இம்மாதிரி உள்ளுணர்வு நிறைந்த புரிந்துகொள்ளும் தன்மையுடைய புத்திக்கூர்மையை நீ பெற்றிருப்பது அவருடைய மிகச்சிறப்பான சாதனை.''

**அத்ரி முனிவர்.:**

''கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்.:**

''M2 - ஐ உன்னுடைய (ராம் சந்த்தரின்) பயிற்சியின் கீழ் விடுகிறேன். நான் கட்டளையிடும் வரையில் M2 - க்கு, M1 - உடன் தொடர்பு இருக்காது. M2 - க்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படும் காலத்தில் M1 - அவர் மீது (M2) கவனம் செலுத்தவேண்டிய தேவையில்லை. ஆயினும் ராம் சந்த்தர், இதை நினைவில் வைத்துக்கொள். M1 சம்பந்தமாக எந்த விஷயத்திலும் நீ அவசரப்படவேண்டாம். M1 - க்கு ஏற்றபடி அவரைத் தயார் செய்த பிறகு M2 - ஐ அவரிடம் ஒப்படைப்பேன். அதன்பிறகு அது M2 மற்றும் M1 க்கு இடையே நடக்கும் விஷயமாக இருக்கும்.''

**25-4-1945**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர். (காலை 11.15 மணி) :**

''இன்று M1 - க்கு ஒரு கடமையை ஒப்படைக்கிறேன். இன்று தொடங்கி தனது ஆயுட்காலம் முழுவதும் இந்த வேலையை அத்தியாவசியமான கடமையாகக் கருதி அவர் செய்யவேண்டும். பிரியமான ராம் சந்த்தருக்கு அவர் எதிரில் இல்லாதபோது (அவர் அங்கு இல்லாத சமயத்தில்) ஆன்மீக ஆற்றலை நிரப்பிக்கொண்டே இருக்கவேண்டும். அது அவசியம் என்று கருதும்போது தனக்குள்ளேயும் நிரப்பிக்கொள்ள வேண்டும். (காலை 11.30 மணி). எனக்கு நல்லதிர்ஷ்டமாகக் கிடைத்திருக்கும் இந்தப் பதவியை இன்று ராம் சந்த்தருக்கு மாற்றிக்கொடுத்து விடலாம் என்று எண்ணியிருந்தேன். அது பற்றி அவருடைய கருத்தைக் கேட்டேன். அவர், 'என் பிரபுவின் பெருமைக்குத் தான் அது தகுந்தது. வேறு எதுவாக இருந்தாலும் சரி. அது என் பிரபுவுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கட்டும்.' என்று பதில் சொன்னார். இந்தப் பதிலைக் கேட்டு என் இதயத்தை நான் இறுகப்பிடித்துக்கொண்டேன். இப்போது என்னால் என்னையே கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. அவர் அவருடைய கடமையைச் செய்துவிட்டதால், நானும் என் கடமையைச் செய்தாக வேண்டும். (காலை 11.40மணி). நான் அதை அவருக்கு மாற்றிக்கொடுத்து விட்டேன். நான் என்ன செய்ய முடியும்? இதை நானாக முன் வந்து செய்யாமல் இருந்திருந்தாலும், இது தானாகவே நிகழ்ந்திருக்கும். இதுதான் ரகசியம். என்னை நான் தடுத்துக் கொள்வது சரியானதாக இருக்காது.''

**சுவாமி விவேகானந்தா:**

‘‘நமது பிரபு தனது புதிதாகப் பெறப்பட்ட நிலையை மாற்றிக் கொடுத்திருக்கிறார். நான் உனக்கு (M1க்கு) உறுதியாகச் சொல்கிறேன். இந்த விதமான அன்பு இதற்குப் பிறகு ஒருபோதும் இருக்காது. தகுதியுடைய மனிதர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்று இருப்பதுபோல இந்த அளவுக்குத் தகுதியுடையவர்களாக அல்ல. இப்போது இருக்கும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்வதற்கு மக்கள் வராமலிருக்கிறார்களே என்று சில சமயம் நான் மனவருத்தம் அடைகிறேன். நான் வருங்காலத்தை உணர்ந்து சொல்கிறேன். இம்மாதிரி ஒரு நேரம் மறுபடி ஒருபோதும் வராது. இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள், நல்லாசி பெற்றவர்களாவர். நமது பிரபு, மகாத்மா ஃபடேகர் ஸ்ரீ ராம் சந்த்தராவைப் போல ஒரு குரு மீண்டும் இவ்வுலகிற்கு வரமாட்டார் என்பதையும் உறுதியாகச் சொல்கிறேன். மேலும், என்னைத் தனது அன்பில் என்னை சிக்கவைக்கக் கூடிய உன்னைப்போன்ற (ராம் சந்த்தர்) ஒருவரும் மீண்டும் வரமாட்டார் என்பதையும் சொல்கிறேன். உன் காலத்திற்குப் பிறகுதான் மக்கள் உன்னைப்பற்றி உணர்ந்துகொள்வார்கள். நீ உலகில் வாழ்ந்திருக்கும் போதும், இறந்தபிறகும் கூட எந்த நேரத்திலும் உன்னைவிட்டுச் செல்லமாட்டேன் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.’’

**வணக்கத்திற்குரிய மாஸ்டர். (M1 - க்குச் சொன்னது):**

‘‘இங்கே அவருடைய (ராம் சந்த்தரின்) சிறப்புத் தகுதி யாருக்கும் தெரியவில்லை. யாராவது முடிந்தால் மேலுலகம் சென்று பார்க்கட்டும். அல்லது திறந்த கண்களை உடையவர் யாராயினும் அதைக் கண்கூடாகக் காணலாம். இவையனைத்தும் காலத்தின் விசேஷ அம்சங்களேயாகும்.’’

**பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது (இரவு 9–10மணி):**

‘‘இன்று முழுநேரமும் நான் வேறு ஒரு வேலையில் ஈடுபட்டிருந்தேன். சுவாமி விவேகானந்தா இந்தியாவில் நிறுவியுள்ள எல்லா (ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன்) ஆசிரமங்களுக்கும் சென்றிருந்தேன். வேறு நாடுகளில் உள்ள அதன் ஆசிரமங்களுக்கும் சென்றேன். அந்த ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள் நன்கு கற்றறிந்தவர்களாக இருக்கிறார்கள். அந்த இயக்க அமைப்பு மிகச்சிறப்பாக இருப்பதைக் கண்டேன். அதைச் சார்ந்த மக்கள் அனைவரும் ஒருவரை மட்டும் நம்பிச் சார்ந்து இருப்பதைக் காணமுடிந்தது. இந்த விஷயம் நீங்கள் அனைவரும் பாடமாக எடுத்துக்கொள்ளத் தக்கதாகும். என் சங்கத்திலும் கூட மக்கள் அனைவரும், அவர்கள் யாராயினும், ஒரு மனிதருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே அவர்களின் கடமையாக இருக்கும். என்னையடுத்து இந்தப் பதவிக்கு வரிசையாக (அடுத்தடுத்து) வரப்போகிற ஒவ்வொருவரும் இதன் தலைவர் என்ற பதவியும், அதற்குரிய நிலையும் பெற்றிருப்பார்கள் மற்ற அனைவரும் அவரிடம் தங்கள் பணிகளைச் செய்ய வேண்டியிருக்கும். தலைவருடைய பணிக்கான அறிவும், வழிகாட்டுதல்களும் நேரடியாக அவருக்கு வந்து கொண்டிருக்கும் என்பது நிச்சயம். இவை மட்டுமே மற்றவர்களுக்கான கட்டளைகளாக இருக்கும். ஷாஜஹான்பூர் இதன் தலைமை நிலையமாக இருக்கும். வேறு இடத்தைப் பற்றிக் குறிப்பிட்டு நான் கட்டளையிடும் வரையில் இந்தத் தலைமையகம் மாற்றப்படமாட்டாது மற்ற இடங்கள் மடங்கள் என்று சொல்லப்படும். (மடம் என்பது கல்கத்தாவில் உள்ள தலைமையகமாகிய பேளூர் மடம் உட்பட ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் பல்வேறு மையங்களைக் குறிப்பிடுவதற்கு சுவாமி விவேகானந்தா பயன்படுத்திய ஒரு விசேஷ வார்த்தையாகும். ஷாஜஹான்பூரை நான் ஏன் தலைமை நிலையமாக நிலைநிறுத்தியிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா? வருங்காலத்தில் இப்படி ஒருவர் உருவாக்கப்படுவார் என்று எதிர்பார்க்க முடியாத அற்புதமான மனிதராகிய ஒருவர் (அது நீ தான்) கடவுளின் அருளினால் தோன்றியிருக்கும் இடமாக இது இருப்பதால், இந்த இடமே அதன் ஆரம்ப இடமாக இருக்கவேண்டும் என்பது தான் காரணம்.''

**சுவாமி விவேகானந்தா:**

''இன்று நமது பிரபு என் குருவின் மடங்கள் அனைத்திற்கும் சென்று வந்திருக்கிறார். அங்கு இருக்கும் நிலைமையை அவரே கவனித்து அறிந்திருக்கிறார். இனி வரும் ஆண்டுகளில் ஷாஜஹான்பூரை தலைமையகமாக வைத்திருக்கவேண்டும் என்ற நமது பிரபுவின் ஆலோசனையை நான் ஒப்புக்கொள்கிறேன். இந்த விஷயத்தில் நமது பிரபுவை நான் பின்தொடரக்கூடும் என்பது யாருக்குத் தெரியும்.''

## 26-4-1945

**சுவாமி விவேகானந்தா:**

''இப்போது உன்னை எல்லா விதங்களிலும் கவனித்துக்கொள்வது எனக்கு அத்தியாவசியமாக மாறியிருக்கிறது. உன்னிடமிருந்து நாங்கள் வேலை வாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு மிகப்பெரிய முனிவரை, அவர் இவ்வுலகில் இருக்கும் வரையில் அவரே நேரடியாக உன்னுடைய உடல்நலத்தைக் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று நியமித்திருக்கிறோம். அவர் இவ்வுலகை விட்டுச்சென்ற

பிறகும் அவர் இக்கடமையை தன்னுடன் கொண்டுசெல்வார். தனது இந்தக் கடமை ஒரு வினாடி நேரம் அவர் விலகினால் கூட, கடுமையான உறுதியான நடவடிக்கை அவர்மீது எடுக்கக்கூடும்.''

## இலங்கையின் முனிவர்:

''உங்கள் உடல்நலத்தை எல்லா விதத்திலும் கவனித்துக்கொள்வதாகிய உடமை சற்றுமுன் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடந்தகாலச் செயல்களின், சேர்த்து வைக்கப்பட்டுள்ள பதிவுகளின் போகம் (அனுபவித்துத் தீர்த்தல்) இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அந்த விஷயத்தில் வேறு யாரும் ஒன்றும் செய்ய முடியாது. உங்களுக்கு பலவீனம் வரும்படி நான் விடமாட்டேன். இந்தச் சேவையை நான் வெற்றிகரமாகச் செய்ய முடிந்தால், இந்தக் கட்டளைகளைப் பிறப்பிக்கும் அதிகாரிக்கு நெருக்கமாக ஒரு பதவி அளிக்கப்படும் என்பதைச் சுட்டிக்காட்டி இந்த உத்திரவு எனக்கு வந்தது. நான் என் வேலையை ஆரம்பித்து விட்டேன். என் வாழ்க்கை முழுவதும் இந்தக் கடமையைச் செய்வதாக நான் வாக்குறுதி அளித்திருக்கிறேன். இதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வேலையைத் துவங்கிய உடனேயே நான் பெறத் துவங்கியிருக்கும் பேரின்பத்தை சரியானபடி சொல்வதற்கு என் நாவினால் இயலாது. இந்த இன்பமும், இந்த உள்நிலையும் எந்த இடத்திலும் ஒருபோதும் என் அனுபவத்திற்கு வந்ததில்லை. வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டர் உங்களை முழுமையாக எதுவும் குறையில்லாதபடி நிரப்பியிருக்கிறார். உங்கள் ஒவ்வொரு அணுக்கூறும் ஆற்றலினால் அதன் கொள்ளளவு முழுக்க நிரப்பப்பட்டிருக்கிறது. இந்தக் கடமை ஏன் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றி மிக அற்புதமான, புரிந்து கொள்ளவும், சிந்திக்கவும் மிக மிகக் கஷ்டமான காரணத்தை நான் சொல்கிறேன். நீங்கள் உங்களை குருவுக்கு முழுமையாக சரணாகதியாகக் கொடுத்து விட்டீர்கள். இதன் காரணமாக அந்தப் பெரியவர்கள் உங்கள் உடல்நலத்தைக் கவனித்துக் கொள்ளும் இந்தவேலையை தங்கள் பொறுப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டியதாகிவிட்டது. உங்கள் உள்நிலை தன் தாயைத் தவிர வேறு யாரையும் அடையாளம் அறிந்து கொள்ளாத சிறு குழந்தையைப்போல இருக்கிறது. ஒரு முதியவனாக, வயதினால் உங்களை விட மூத்தவனாக, உங்களுக்காக நான் பிரார்த்தனை செய்வதோடு, நீங்கள் இவ்வுலகில் வாழும் காலம் வரையில், எரியும் சுடரில் விட்டிற்பூச்சிகள் விழுந்து மாள்வது போல, உங்கள் ஜீவிதத்தில் மக்கள் தங்களை தியாகம் செய்து கொள்வார்களாக. இவ்வுலகிற்கு நீங்கள் எந்த நோக்கத்திற்காக

வந்தீர்களோ அது நிறைவேறுவதாக என்று ஆசீர்வதிக்கிறேன். நம் அனைவருக்கும் அதில்தான் மேன்மை இருக்கிறது. எனவே இந்தப் பிரார்த்தனையை உண்மையில் எனக்காக நான் செய்து கொள்கிறேன். உங்களுக்கு கட்டாயப் பொறுப்பு எதுவும் இல்லை. உங்கள் பௌதிக மறைவுக்குப் பிறகு உடனடியாக, இயற்கையின் பார்வையில் உள்ள நோக்கத்தை நிறைவேற்ற முழு திவ்ய சக்தியுடன் பணியாற்றுவதற்கு வேண்டிய ஒரு ஆற்றல் உங்களுக்குள் நிரப்பப்பட்டு வருகிறது. அந்த சக்தி இப்போது தோன்றியிருக்கிறது. இம்மாதிரி சக்திகள் ஒரு மனித உடலுக்குள் இருக்க இயலாது என்பதை நான் உறுதியுடன் சொல்கிறேன். உங்களை அம்மாதிரி வடிவமைத்து உருவாக்கியிருப்பது குருநாதரின் திறமையே ஆகும்.''

### 27-4-1945

### சுவாமி விவேகானந்தா:

''நமது பிரபு இப்போது என் வேலையை எடுத்துக் கொண்டிருக்கிறார். அவருடைய வேலை மிக விரைவில் ஆரம்பிக்கிறது. கல்கத்தாவில் இருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் தலைவரிடம் அவர் சென்று வந்திருக்கிறார். அவர் சரியான பாதைக்கு வந்தால், எல்லோரும் அவரைப் பின் தொடர்வார்கள்.''

### வணக்கத்திற்குரிய பகவான் கௌதம புத்தர்:

''துறவு மேற்கொள்வதற்காக நான் அரச பீடத்தையே உதறித் தள்ளினேன். நீ, உனது வேலை (அரசுப் பணியை) விட முடியவில்லை. முன்பே ஒருமுறை நான் சொல்லியிருக்கிறேன்!''

(வணக்கத்திற்குரிய கௌதம புத்தர் தனது அரச பதவியை, மணிமுடியை உதறித்தள்ளியதால் என்ன பயன் பெற்றாரோ, அது இந்த சாதாரண வேலையில் தொடர்ந்து இருக்கும் போதும் கூட, ஏற்கனவே தனக்கு அளிக்கப்பட்டுவிட்டது. எனவே வேலையை விட்டுவிடுவது தேவையில்லை என்ற பதில் தனக்கு நாக்கு நுனி வரையில் வந்துவிட்டது. ஆனால் பகவான் புத்தரைப்போல ஒரு மாமனிதரிடம் நேருக்கு நேராகப் பேசும் ஒரு நிலைமையில் அனுசரிக்க வேண்டிய மரியாதைப் பண்புகளை அவர் அறியாமலிருந்ததால், அப்போது அவர் தனது மாஸ்டர் லாலாஜியைப் பார்த்தார். லாலாஜி, ''பகவான் புத்தர் சொல்வதை கேள்வி - பதில் என்ற வழியில் ஈடுபடாமல் அவர்சொல்வதை மட்டும் கவனித்துக் கேட்டுக்கொள்'' என்று சொன்னார் என்பதை பாபுஜி வேறு ஒரு இடத்தில் தெரிவித்துள்ளார்.)

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (இரவு மணி 9.00) M1 மற்றும் R2 ஆகியோருக்குச் சொன்னது :**

''நடத்தையில் தூய்மை பெற்ற நிலை என்ற வகையில் ராம் சந்த்தர் அதன் உச்சநிலையைத் தொட்டிருக்கிறார். அது எவ்வளவு சூட்சுமமானது என்பதைப் பாருங்கள். அது ஒரு சிறு புள்ளி. உங்களை சுத்திகரிப்பு செய்யத் துவங்கும் போது, அந்த அசுத்தம் (கடினத்தன்மை) எதுவாக இருந்தாலும் அதை முதுகின் வழியே தள்ளுவதற்குப் பதிலாக தன் பக்கத்தில் இழுத்துக் கொண்டார். நான் அங்கே உங்களுக்குப் பின்னால் உட்கார்ந்திருப்பதை மனதில் கொண்டு அவர் இப்படிச் செய்தார்.''

**சுவாமி விவேகானந்தா:**

''ராம் சந்த்தர், இங்கே பார். இந்த முறை எல்லாம் வல்ல பரம்பொருளின் உதவியைப் பெற நான் விரும்பினேன். நீ அதையே செய்தாய். (கிடைக்கச் செய்தாய்.) எனக்கு அது தேவையாக இருந்த போது நீயாகவே இந்த முறை அந்த மிகவும் சிரமமான பணியை எடுத்துக் கொண்டாய். இது நான் ஏற்கனவே சொன்னதைப்போலவே இருந்தது.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - க்குக் கூறியது:**

''ராம் சந்த்தர் இந்தமுறை பரமாத்மாவுக்கு (ஜாட்) அசைவைக் கொடுத்திருக்கிறார். அன்புள்ள M1 - இதுவரையில் பரமாத்மாவிலிருந்து வேலை வாங்கிக்கொள்ளும் திறமை ஹிந்து மத ரிஷிகளைத் தவிர வேறு யாருக்கும் இருந்ததில்லை. இன்னும் சரியாகச்சொன்னால், ஹிந்து ரிஷிகள் கூட தங்கள் மூளையை இம்மாதிரி பயன்படுத்தவில்லை என்றே நான் சொல்லியிருக்கவேண்டும்.''

**29-4-1945**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (மாலை 6.45 மணி):**

''எவ்வளவு சந்தோஷமான விஷயம்! ராம் சந்த்தரின் புரிந்து கொள்ளும் திறனை கடவுள் ஆசீர்வதிக்கட்டும். இக்காலம் பற்றிய ஒரு கண்ணோட்டத்துடன் மிகவும் தேவைப்படுகின்ற அம்மாதிரி விஷயங்கள் (கருத்துக்கள்) அவருடைய சிந்தனையைத் தாங்குகின்றன. இதுவரையில் பெரியோர்கள் இதயத்துக்கு (க்வல்பா) (QALBA) பிராணாஹூதி அளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அதன்பிறகு பௌதிக உடல்சார்ந்த புள்ளிகளை (சுக்ரா பிண்டம்) (SUGRA – PINDA) அடுத்து அண்டவெளி (குப்ரா = பிரம்மாண்டம்) (KUBRA – BRAHMANDA) மற்றும்

அதற்கு அப்பாலுள்ள புள்ளிகளை எடுத்துக்கொண்டு, பயிற்சியின் முடிவில் இதயத்திற்கு கீழே முக்கியமாக தொப்புளுக்குக் கீழே உள்ள புள்ளிகளை நோக்கித் திரும்புவார்கள். மாறிவிட்ட காலங்களைக் கருத்தில் கொண்டு இந்தப்புள்ளிகளையும் கூட ஒரே சமயத்தில் எடுத்துக்கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ராம் சந்த்தர் மிகவும் அடிக்கடி இந்தக் கீழான (உலகியல் சார்ந்த (லௌகீகமான கடினத்தன்மை உடைய) (IASFAL) புள்ளிகளை / சக்கரங்களைத் தானே சுத்திகரிப்பு செய்வதற்கு எடுத்துக்கொண்டிருக்கிறார். இன்று முதல், இதய சக்கரத்தை சுத்திகரிப்பு செய்தபிறகு, அதன் கீழிருக்கும், இந்த உலகியல் சார்ந்த சக்கரங்களை எடுத்துக்கொண்டு முழுமையாக சுத்திகரிப்பு செய்யவேண்டும். ஆனால் அவற்றை விழிப்பு நிலைக்குக் கொண்டுவரக்கூடாது என்று உத்திரவிடுகிறேன். இந்தக் கீழ்நிலை சக்கரங்களை சுத்திகரிப்பு செய்த பிறகு, சரீர மண்டலம் சுத்தமாகிறது. அதன்பிறகு மீண்டும் இதயத்திலிருந்து பயிற்சி தொடரவேண்டும். அது ஏற்கனவே வழிவழியாக வந்த முறைப்படி இருக்கவேண்டும். இக்காலத்தைக் கருத்தில் கொண்டு இந்தக் கீழ்நிலை சக்கரங்களை முதலில் எடுத்துக்கொள்வது, அமைதியற்ற தன்மையை சரியான திசைக்குக் கொண்டு வருவதற்கு உண்மையாகவே அவசியமாகிறது. இந்தப் புள்ளிகளில் காரணமில்லாமலும், ஒரு சரியான நோக்கம் இல்லாமலும் ஆற்றலைச் செலுத்த வேண்டாம் என்று எனது பிரியமான ராம் சந்த்தருக்கு மட்டும் நான் உத்திரவிடுகிறேன். இந்த உத்திரவுக்குக் காரணம் என்னவென்றால், ராம் சந்த்தர் இப்படிச் செய்யுமாறு நேர்ந்தால் (அதாவது இந்தப் புள்ளிகளில் தன் ஆற்றலைப் பயன்படுத்தினால்) அற்புதமான சக்திகள் உடனடியாக விழிப்படைந்து விடும். அப்படி நடந்தால், கடவுளுக்கு எதிராக அவர் திரும்பி விடுகின்ற ஆபத்து உண்டாகும். (அவர் நாத்திக மனப்பான்மை உடையவராக ஆகிவிடுவார்) இந்த முன்னெச்சரிக்கையை பெரும்பாலும் எல்லோரும் அனுசரிக்கவேண்டும். அன்புள்ள M1, இம்மாதிரி விஷயங்கள் ராம் சந்த்தர் மூலமாக வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கும். அவர் பௌதிக உடம்பு மறைந்தபிறகு உலகம் இவற்றையறிந்து வியப்படையும். அவரது ஆயுட்காலத்தில் அவரை அறிந்து கொண்டாடும் திறன் யாரால் இயலும். அவருடைய வெளி உருவத்தைப் பார்த்தால், அவர் உடம்பில் சில பல எலும்புகள் தான் இருக்கின்றன. ஆனால் அதற்குள் நான் அனைத்தையும் நிரப்பியிருக்கிறேன். இன்றைய நாள் முதல், ராம் சந்த்தரால் கண்டறியப்பட்ட வழிமுறைதான் நடைமுறையில் இருக்கும்.’’

**சுவாமி விவேகானந்தா:**

''இலங்கையின் முனிவருக்கான அடுத்த உத்திரவு அளிக்கப்பட்டுள்ளது. உன் சம்பந்தமான கடமையைச் செய்வதில் இன்று செய்தது போல அவர் மீண்டும் தவறு செய்தால் அவருடைய சக்திகளை நான் திரும்பி எடுத்துக் கொள்ளவேண்டியிருக்கும்.''

3-5-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1க்குக் கூறியது:**

''மூத்தவராகிய ஒரு மகான் முக்திநிலையடைந்தவராக இருக்கும் போது அவருடைய பிராணாஹூதியைப் பின் தொடர்வது மிகவும் சிரமம். அப்படி ஒரு திறமை பெற்ற மனம் இனி ஒருபோதும் வராது. முக்திபெற்ற ஆன்மாக்கள் கையாளும், பிராணாஹூதி அளிக்கும் வழிமுறையை, பிரியமான ராம் சந்த்தர் சற்றுமுன் அனுபவத்தில் உணர்ந்து அதைத் தெரிந்து கொண்டார். உடம்புடன் கூடிய உருவில் இருக்கும் போதும் கூட, பௌதிக உடலின் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டுள்ள ஒருவரைப் போலவே மிகச் சரியாக அதேவிதமான பிராணாஹூதி அளிக்கக் கூடியவராக இருப்பது என்ற இந்தமுறை மிகவும் அதிகபட்ச சிரமமானது. நாம் ராம் சந்த்தருடன் ஐக்கியமாகி இருக்கிறேன் என்பது மிக வெளிப்படையானது. எனவே, அவர் அளிக்கும் ஒவ்வொரு பிராணாஹூதியும், என்னுடைய பிராணாஹூதியாக இருக்கும்படி ஆகிறது. இப்போது அவர் தெரிந்து கொண்டிருக்கும் இந்த வழிமுறை மற்றும் அந்த வழிமுறையில் பிராணாஹூதி அளிப்பது, ஆகியவை, அப்படியிருப்பினும், அவரே முக்தியடைந்தவராக மாறி பிராணாஹூதி அளிக்கிறார் அல்லது எனது இப்போதைய நிலையிலிருந்து நான் பிராணாஹூதி அளிக்கிறேன் என்றே பொருள்படுகிறது.''

4-5-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''டெல்லி முழுமையாக மெய்யொளி பெற்றுள்ளது. ராஜஸ்தானை பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று இப்போது விட்டுவைத்து, மீதி வடஇந்தியா முழுவதையும் உன் பணிக்கு எடுத்துக்கொள்.''

5-5-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - க்குக் கூறியது:**

''அவருடைய (ராம் சந்த்தரின்) சிந்தனையில் தோன்றியுள்ள இந்த பிராணாஹூதி முற்றிலும் புதிய ஒரு வகையானது. (செயல்நுட்பம்

உடையது). யாருக்கு பிராணாஹூதி அளிக்கப்படுகிறதோ அந்த இன்னொருவருடைய புலன் உணர்வுகளின் மீது தனது இழந்துவிட்ட புலன் உணர்வுகளை நாட்டம் கொள்ளச்செய்வதை இந்தச் செயல்நுட்பம் உள்ளடக்கியுள்ளது. ஆயினும் இந்தப் புதிய செயல்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு முன், பிராணாஹூதி யாருக்கு அளிக்கப்படுகிறதோ அவருடைய புலன் உணர்வுகள் சுத்திகரிக்கப்படவேண்டும். இந்த வழிமுறையை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும். பிரியமுள்ள ராம் சந்த்தர் இதைக் கண்டுபிடித்தவராக மதிக்கப்படவேண்டும்.''

## J1 – ன் கருத்து:

''அன்புள்ள சகோதரரே, ஆன்மீக உலகமே உங்களுடன் தொடர்பு கொண்டிருக்கும்போது, பொதுவாக மக்கள் உங்களிடமிருந்து நன்மை பெறாமலிருக்கிறார்களே என்பது மிகவும் வருந்தத்தக்க ஒரு விஷயம்!''

9–5–1945

## சுவாமி விவேகானந்தா (இரவு 10.00 மணி):

''என்ன ஒரு அற்புதமான கண்டுபிடிப்பு. உன் குரு இதைப் பற்றி விளக்கிச் சொல்வார். இந்த விஷயங்கள் எனது ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என நான்விரும்புகிறேன்.''

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 – க்குச் சொன்னது:

''ராம் சந்த்தரின் கண்டுபிடிப்புகளின் அளவுக்கு அதைக் கற்றுக் கொள்ளவும் அவரிடம் பயிற்சி பெறவும் யாரும் வரவில்லையே என்பது மிகப்பெரிய வருத்தத்துக்குரிய விஷயம். அவருடைய மதிப்பை அறிந்து பாராட்ட என்னைத் தவிர யார் இருக்கிறார்கள்? அவர் மூலமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் சூட்சுமத் தன்மை மற்றும் அதன் நன்மைகளை சரியான விதத்தில் புரிந்துகொள்ளக் கூடிய அறிவுத்திறன் என்னைத்தவிர யாருக்கும் இல்லை. M2 - இன் கூருணர்வுத் திறனை ராம் சந்த்தர் புகழ்ந்து கொண்டிருக்கும் போது, இந்த நுட்பமான கூருணர்வுத்திறன் ஏன் எல்லோரிடத்திலும் வளரச் செய்யக்கூடாது என்ற எண்ணம் அவருக்கு எழுந்தது. இதன் காரணமாக இயற்கை அவருக்கு உதவி செய்தது. உடனே இந்த வழிமுறை அவருடைய சிந்தனையில் வந்து இறங்கியது. அந்த வழிமுறை இங்கே விவரிக்கப்படுகிறது. ஒருவருடைய கூருணர்வுத் திறனை அதிகரிக்க வேண்டும் என்று விரும்பினால், முதலில் அந்த மனிதரின் இதயத்தில் அது அனுபவத்தின் (கூருணர்வுத் திறனின்) ஒளி குறைந்த ஒரு நட்சத்திரம் இறங்கியிருக்கிறது என்ற உறுதியான

எண்ணத்தை நிலைநிறுத்த வேண்டும். அதன்பிறகு அந்த நட்சத்திரத்தின் தன்மை பிரகாசமாகத் தோன்றும்படியாக ஆவதற்கு அந்தக் கூருணர்வுத் திறனின் ஒளி தனது சொந்த சங்கல்பத்தின் முயற்சியால் மேம்படுத்தப்பட வேண்டும். அதற்குப் பிறகு சம்மந்தப்பட்ட அம்மனிதரின் இதயத்தின் மீது அந்தப் பிரகாசம், சுற்றிலும் லேசாகப் பரவச் செய்யப்பட வேண்டும். அந்த நட்சத்திரத்தின் நிலையை மூளையுடன் இணைத்து நிலைநிறுத்த வேண்டும். சில நாட்களுக்கு இதை, அது ஒரு நிரந்தர வடிவை அடைவதற்காக, அவ்வப்போது கவனித்துக்கொள்ள வேண்டும். கூருணர்வுத்திறனை இன்னும் கூர்மையாக்க விரும்பினால் அந்த உறுதியான எண்ணத்தை நிலைநிறுத்தலாம். ஆயினும் மிக விசேஷமான சூழ்நிலை ஏற்பட்டால் தவிர மற்ற சமயங்களில் இதை நான் அனுமதிக்கமாட்டேன். இந்த வழிமுறை சம்பந்தமாக என்னிடம் அல்லது பழங்கால மூத்தோர்களாகிய முனிவர்களிடமிருந்து ஒளியும் அனுமதியும் பெற்றவர்களாக, எங்களுடன் தங்கள் இணைப்பை அடைந்து அதில் ஆழ்ந்து நிலை பெற்றிருப்பவர்களாக இருப்பவர்களைத் தவிர பிறருக்கு இதைப் பற்றி மதிப்பிடுவது மிகவும் சிரமம். இந்த உள்நிலைத் தன்மை உலகில் பிறந்திருப்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். இதனால் இது பொதுவாக கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதில் சந்திரன் பற்றிய எண்ணத்தை ஒருபோதும் நிலைநிறுத்தக் கூடாது. அது வெம்மையைக் குறைத்து மந்தநிலையை (கடினத்தன்மையை) உண்டாக்குகிறது. அதே போல சூரியன் பற்றிய எண்ணத்தை நிலைநிறுத்துவதிலும் மிகவும் முன்னெச்சரிக்கையும் சரியாக மதிப்பீடு செய்வதும் தேவைப்படுகிறது. என்னிடமிருந்து அனுமதி கிடைத்தாலன்றி இந்த வழிமுறைகள் எதையும் பயன்படுத்துவதை நான் உறுதியாகத் தடை செய்கிறேன். இந்த வழிமுறையைக் கையாள்வதற்கு (அதாவது நட்சத்திரத்தை நிலை நிறுத்தும் எண்ணம் பற்றியது) மிக அவசியமான விசேஷத் தேவை (தகுதி) என்னவெனில், இந்த முறையை செயல்படுத்துகிற மனிதனின் புலன் உணர்வுகள் உறங்கும் நிலைக்கு வந்திருக்க வேண்டும். இந்தச் சூழலில் (நிலையில்) மிகப் பொருத்தமான மனிதர், இத்தன்மையில் (புலன் உணர்வுகள் உறங்கியிருக்கும் தன்மை) நிரந்தரத் தன்மை அடைந்திருக்கும் ஒருவராகவே இருப்பார். மற்றும் அவர் அதைப் பற்றி நினைக்கும் போதும் கூட புலன் உணர்வுகள் காணப்படாத நிலையில் எந்த விதத்திலும் அனுபவத்திற்கு வராத நிலையில் இருப்பார். மற்றவர்களைப் பொறுத்த வரை, அது எவ்வளவு காலத்துக்காக இருப்பினும் தங்கள் புலன் உணர்வுகளை உறக்கநிலையில் வைத்திருக்கக் கூடியவராக இருப்பவர்கள், மற்றவர்களுக்கு இந்த வழியை, அந்தக்

குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் கையாளலாம். எனினும், அப்போதும் கூட, இதை நான் தடை செய்கிறேன்.”

10-5-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - க்குச் சொன்னது:**

‘‘இந்த முறை பிரியமான ராம் சந்த்தர் ஒரு அற்புதத்தை சாதித்திருக்கிறார். பிராணாஹூதி முறையை முழுமையாக மாற்றிவிடு. இந்த வேலையில் ஈடுபட்டிருக்கும் உனது சீடர்களுக்கு, இனி இந்தப் புதிய செயல்நுட்பத்தின் மூலமாக அளிக்கப்படும் என்று தெரிவித்துவிடு. சிறிது காலமாக ராம் சந்த்தரின் எண்ணத்தில் ஒரு கோட்பாடு எதிரொலித்துக் கொண்டிருந்தது. அதாவது, இந்தப் பிரபஞ்சத்தின் சிருஷ்டி நடந்த தருணத்தில், பரமாத்மாவில், (ஆதிப் பரம்பொருளில்) ஒருவிதமான மிகவும் தொல்லை தரும் ‘கலக்கம்’ அல்லது இன்னும் சரியாகச் சொன்னால் ‘நிலை குலையச் செய்யும் ஆசை’ (சமஸ்கிருத மொழியில் ‘க்ஷோபம்’ எனப்படும்) தோன்றியது. சமநிலையின்மையை ஏற்படுத்தும் அந்த ஆசை பல்வேறு வடிவங்களை ஏற்றுக்கொண்டது. அதற்குப் பின்னால் பரம்பொருளின் சக்தி இருந்தது. இருக்கின்றது. அதனுடைய பெரும்பகுதி ‘மனம்’ (சமஸ்கிருத மொழியில் மனஸ்) என்ற வடிவத்தில் மனிதனிடத்தில் தோன்றியது. பரம்பொருள் அதன் பின்னால் ஓட ஆரம்பித்தது. அதன் விளைவாக பல்வேறு வடிவங்கள் தோன்றலாயின. இது அவருடைய (ராம் சந்த்தரின்) மூளையின் வழியாகத் தோன்றிய அல்லது வந்திறங்கிய மிகப் புதுமையான ஒரு விஷயம். அது மிகச் சரியானது என்பதை யாரும் மறுக்க இயலாது. இந்த விதமாக, உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆன்மீக ஜீவனிடத்திலும் விளங்குகின்ற நிலை மனிதனிடத்திலும் ஒரு மேன்மையான வடிவத்தில், அதனுடன் ஒரு விசேஷமான வசீகரம் சார்ந்ததாக இருப்பது காணப்படுகிறது. அந்த முதல் ஆசையினால் ஏற்படுத்தப்பட்ட அந்த சமநிலையைக் கெடுக்கும் அசைவு (கலக்கம்) மனிதனிடத்தில் ஒரு விசை (ஆற்றல்) என்ற வடிவத்தில் வந்திறங்கியது. அதைத்தான் நான் மனம் (மனஸ்) என்று மனிதனிடத்தில் விளங்குகிறது என்று பெயரிட்டும் சொன்னேன். க்ஷோபம் எனப்படும் சமநிலையைக் கெடுக்கும், கலக்கம் அல்லது அசைவின் அடிப்படைக்குப் பின்னால் இருக்கின்ற அதே நிலை மனதின் பின்னாலும் இருக்கிறது. மனிதனிடத்தில் மனம் என்ற வடிவில் இருக்கின்றதாகிய இந்த ஆதி முதலான சமநிலையைக் கெடுக்கும் கலக்கம் அல்லது க்ஷோபம், மனிதனிடத்தில் மிகவும் கூர்ந்த தன்மையை அடையப் பெற்றிருப்பதனால், க்ஷோபத்தின் பின்னால் உள்ள கலக்கமற்ற சமநிலை

உடைய தன்மையின் சக்தி தனது முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. அது மங்கலாக மாறிவிட்டதுபோலத் தோன்றுகிறது. இதன் காரணமாக, பிராணாஹூதி அளிக்க ஆரம்பிக்கும் போது, முதலில் (ஆதி முதலான சமநிலையைக் கெடுக்கும் ஆசையின்) அந்த நிலையை சுத்திகரிப்பு செய்ய வேண்டும். அதாவது மனம் என்ற வடிவில் தோன்றியுள்ள அந்த அடிப்படைக் கலக்கத்தை, சரிவிகிதம் குலைந்து போயிருக்கும் அதன் அணுக்கூறுகள் தங்கள் சீர்குலைக்கும் விளைவை இழப்பதற்காக அல்லது குறைந்தபட்சம் குறைத்துக் கொள்வதற்காக சுத்திகரிக்கப்பட வேண்டும். அதன்பிறகு அந்த ஆதிமுதலான கலக்கத்துக்கு சக்தியை அளிக்கின்ற பரம்பொருளின் சக்தியை, தனது ஆன்மீக ஆற்றலைக் கொண்டு அதன் மூலமாக எண்ணத்திற்குக் கொண்டு வந்து, மனித ஜீவிதத்தின் மீது மூடிக்கொண்டிருக்கின்ற மனம் என்ற அந்த விஷயத்தை நோக்கி திசை திருப்பி விடவேண்டும். இதை ஒவ்வொரு சக்கரத்திலும் செய்யவேண்டும். இந்த வழிமுறை ஆதிமுதலான அந்தக் கலக்கத்தின் பின்னால் இருக்கும் பரம்பொருளின் சக்தி தானாகவே அதன் பிரதிபலிப்பை உண்டாக்குகின்ற பலனைத்தரும். இதனால் இதைத் தொடர்ந்து வரும் முன்னேற்றம் எதுவாயினும் அது மிகச் சரியாகவும், நிரந்தரமாகவும் இருக்கும். இந்த முறையின் மூலமாக பிராணாஹூதி அளிக்கும் போது, இதனுடைய சூட்சுமங்கள் சிந்தனைக்கு எட்டத் துவங்கும்.''

11-5-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''பிரியமான ராம் சந்த்தர் ஒருசமயம் தன் சகோதரர் M1 - இடம் சூட்சுமமாக இருக்கும் ஒன்றுக்கு பற்பல சுற்றுக்கள் ஆற்றல் செலுத்தப்பட்டால் அது திடத் தன்மையை அடைகிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார். பரம்பொருளிடமிருந்து பெற்ற உந்துதலின் பயனாக இம்மாதிரி சுற்றுக்கள் அந்தச் சக்திப்பெருக்கில் லட்சக்கணக்கான ஆண்டுகள் நீடித்திருந்தன. அந்த அணுக்கள் ஒன்றுக்குள் ஒன்றாக சுழன்று கொண்டே இருந்தன. மேலும் மிகப்பெரிய ஒன்று குவிக்கப்பட்ட ஆற்றல்களை ஒன்று சேர்த்து உருவாக்குவதற்காக சுற்றிச் சுற்றிச் சென்றன. அந்த ஒன்று குவிக்கப்பட்ட ஆற்றல்களுக்கு இடையே இருக்கும் சக்தியே அந்தச் சக்திகளின் தெய்வங்கள் (தங்களை அதில் அர்ப்பணித்துக் கொண்ட ஆதரவாளர்கள்) என்று நியமிக்கப்பட்டனர். நான் சொல்லவருவது என்னவென்றால், அந்த அணுக்கள் தங்கள் சுழற்சியின் போக்கில், தங்கள் சொந்த வகையைச் சார்ந்த அணுக்களை தங்களின் பக்கம் இழுத்துக்கொண்டு காலப்போக்கில்

பெரிய ஆற்றல்களாக தங்களை வளர்த்துக்கொண்டன. இந்த நிலைதான் தொடர்ந்து நீண்டகாலம் நீடித்திருந்தது. மேலும் இவைதான் பல்வேறு விதமான கோளங்களாக அல்லது வட்டமான பொருட்களாக வடிவங்களை அடையப் பெற்றன. அப்போது இருந்த மூலப்பொருட்களுக்குத் தேவைப்பட்ட அம்மாதிரி வடிவங்களை அவை ஏற்றுக்கொள்ளும் வரையில் அந்தச் சுழற்சி நிற்கவில்லை. அப்படிச் சுழல்வதும், பிரிந்து விலகிச் செல்வதும் இப்போதும் தொடர்ந்து நடைபெறுகின்றன. இப்பிரபஞ்சம் அழியும் வரையில் இது இப்படியே இருக்கும். மனிதன் தன்னைப் பொறுத்த வரை ஒரு மிகப்பெரிய பரந்த மண்டலமாக இவையனைத்தையும் தன்னிடம் சூட்சுமமான உள்பகுதிகளாகக் கொண்டவனாக இருக்கிறான். இதனால் தான் முன்னோர்களாகிய மகான்கள் மனிதனை ஒரு பிசையப்பட்ட கூட்டுப்பொருள் (பிண்டம்), பிரம்மாண்டம் போலவே வடிவம் கொண்டவன் என்று நியமித்திருக்கிறார்கள். மனிதனிடத்தில் சுழன்று கொண்டிருக்கும் அணுக்களின் திடத்தன்மையும் காணப்படுகிறது. அதன் பூரண வடிவில் பரம்பொருளின் தன்மையும் அதன் பின்னால் இருப்பதாகச் சொல்ல முடியும். இப்போது அழியும் சமயத்தில், பிரளயத்தில் என்ன நிகழ்கிறது? ஒன்று குவிக்கப்பட்ட கூட்டுப்பொருட்கள் அல்லது அணுக்களின் திடத்தன்மை அழிக்கப்படுகிறது, அதாவது சுழலும் அணுக்களினால் அதன் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட சக்தி தானாகவே முடிவுக்கு வந்து, அதுவே அழிவுக்கு (பிரபஞ்சத்தின் முடிவுக்கு) ஆரம்பமாகவும், முடிவாகவும் இருப்பதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.''

''நேற்று குறிப்பிடப்பட்ட பிராணாஹூதி அளிக்கும் வழிமுறை மேலும் தெளிவாக, இயற்கையின் கோட்பாடு பற்றிய கண்ணோட்டத்தில் செம்மையாக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக சுழலும் இயக்கத்தினால் திடத்தன்மை அடைந்துள்ள அந்த அணுக்களை நோக்கி பூரணமான வடிவத்தில் விளங்கும் பரம்பொருளை திசைதிருப்புவதை இது உள்ளடக்கியிருக்கிறது. எனினும் அந்த அணுக்களின் வடிவம் தக்க வைத்துக் கொள்ளப்படவேண்டும். முற்றிலும் அழித்துவிடக்கூடாது. இங்கு ஒரு எச்சரிக்கை அளிக்கிறேன். அதாவது இந்தவிதமான பிராணாஹூதியை அடுத்தடுத்து விரைந்து அளிக்கக்கூடாது. அதே போல எல்லோருக்கும் இதைப் பெறும் தகுதியும் இல்லை. இந்தவிதமான பிராணாஹூதி வழிமுறையை 'சாரதத்வா' (தனி சாராம்ச தத்துவம்) என்று பெயரிட்டுக் கூறுகிறேன்.''

**சுவாமி விவேகானந்தா:**

''இந்த மாதிரி ஒரு வழிமுறை இதற்கு முன்பு ஒருபோதும் கண்டறியப்பட்டதில்லை மற்றும் உன்னைத் தவிர வேறு யாருக்கும் அதைக் கையாள்கின்ற திறமையும் இல்லை. இந்த வழிமுறையினால் நீ ஒரு உலக மாற்றத்தையே கொண்டு வர முடியும். இந்த வழிமுறைக்கு தன்னை இசைவித்துக் கொள்ளும் திறமை ஒருவனுக்கு இருந்தால், அம்மனிதன் உடனடியாக மாற்றம் அடைய முடியும்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''பிரியமான ராம் சந்த்தரால் கூறப்பட்டுள்ள மேற்கண்ட விஷயம், அவருடைய மூளையில் சிறிதுகாலமாக எதிரொலித்துக் கொண்டிருந்த வழிமுறையின் அடிப்படையாகும். அதை வெளிப்படுத்துவதற்கு பொருத்தமான வார்த்தைகளை அவர் கண்டறியாமல் இருந்தார். இப்போதும் கூட அது சரியான விதத்தில் சொல்லப்படவில்லை, அதில் திருத்தம் தேவைப்படுகிறது, அதை நான் பிறகு ஒரு சமயம் செய்வேன்.''

**சுவாமி விவேகானந்தா:**

''தென்னிந்தியாவில் இலங்கை சம்மந்தப்பட்ட வேலையில் உலக சாதனையை நீ (ராம் சந்த்தர்) ஒருக்கால் முறியடித்திருக்கலாம் என்று சொல்லியிருந்தேன். இந்த முறை நீ செய்ததைப் பற்றி என்னால் ஒன்றும் சொல்லமுடியாது.''

12-5-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''நீ துவங்கியிருக்கும் விஞ்ஞானத்தை செய்து முடித்துவிடு. அதனபிறகு மேலும் தொடர்ந்து செல். யாராவது தன்னை அந்த நிலையில் ஐக்கியம் செய்து கொள்ளக்கூடியவராக இருந்தால், பரம்பொருளின் மிகவும் தொல்லை தரும் ஆசையின் பின்னால் உன்னை இருத்திக் கொண்டு அதன்பிறகு பிராணாஹூதி கொடு. அதன் விளைவு மிக அற்புதமாக இருக்கும். ஆயினும் இந்த வழிமுறை எல்லோரிடத்திலும் பயன்படுத்தக்கூடியது அல்ல. (சற்று இடைவெளி) ராம் சந்த்தர், இப்போது இந்த வழிமுறையில் இன்னும் அபிவிருத்தி (முன்னேற்றம்) செய்திருக்கிறார். அதாவது மனிதனிடத்தில் விளங்குகின்ற அமைதியைக் குலைக்கும் ஆசையில் ஈடுபட்டுள்ள அணுக்களின் இருள் தன்மையை முதலில் நீக்கிவிட வேண்டும். அதன்பிறகு, ஒருவிதமான திடப்பொருள் என்றும் குறிப்பிடக்கூடிய ஒளியையும் வெளியே இழுத்துவிடவேண்டும்.

ஆனால் இந்த முயற்சி முழுவதிலும் அந்தக் கட்டமைப்பு வடிவம் குலையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதைவிட மேலானதாகிய மூன்றாவது நிலை, இப்போதுதான் ராம் சந்த்தரின் எண்ணத்தில் உதித்திருக்கிறது; அதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது. அணுக்களில் மிக நீண்ட காலத்துக்கு இடம் பெற்றிருந்த ஒளியின் விளைவை – அப்படி அவை அதனில் இடம் பெற்றிருந்ததனால் அதைத் தொடர்ந்து தன்னுள் இழுத்துக்கொண்டதான ஒளியின் விளைவையும் கூட நீக்குவதை அது உள்ளடக்கியிருக்கிறது. இப்போது அங்கு முழுத் தூய்மை இருக்கிறது. இந்தப் புள்ளியை முனிவர்களும் மெய்ஞ்ஞானிகளும் சென்றடைய இயலவில்லை. எத்தனையோ காலமாக வழிபாடுகளும், பிரார்த்தனைகளும் செய்தபிறகும் கூட, அந்தப் புள்ளி இன்னும் மிகத் தொலைவிலேயே இருக்கிறது. இந்த மேற்கூறிய (ராம் சந்த்தரால் கண்டறியப்பட்ட) வழிமுறைகளின் மூலமாக, அதைச் சென்றடைவது மிகவும் சிரமமானதாகவே இன்னமும் இருக்கிறதோ அதே இடத்துக்குச் செல்வதில் சாதகன் தனது முதல்படியை கண்டறிகிறான். வேதங்களிலும் மற்ற ஞான நூல்களிலும் உள்ள துதிகளில் புகழ்ந்து கூறப்பட்டிருப்பது எதுவோ, எதைக் கடந்து செல்வதே உயர்ந்தது என்று விவரிக்கப்பட்டிருப்பது எதுவோ, அது முதல்தடவை அளிக்கும் பிராணாஹூதியிலேயே கூட அடைய முடியம் என்பது தெளிவாகிறது. அந்தப் புள்ளி என்ன? இஸ்லாமிய மதத்தின் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட சூஃபி மகான்கள், அதை தூய்மை அல்லது மிக உயர்ந்த இறைத்தன்மையின் மண்டலம் (ஆலம் – இ – க்யுட்ஸா) (Aalam – e – Qudsa) என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது ஹிந்து மத நூல்களில் இது வேறுபாடற்ற நிலை (அவ்யக்த கதி) அல்லது நிகழ்வுகளின் பொய்த் தோற்றத்தைக் கடந்த நிலை (மாயா ரஹித தசா / Maya Rahit Dasa) என்று கூறப்படுகிறது. இந்த வழிமுறைகளைப் பின்பற்றி நடந்தால் அதன் ஆரம்பமாக மாயையின் முடிச்சுக்கள் தளர்ந்து விடுகின்றன. (சிறு இடைவெளி), இதுவரையில் இந்த வழிமுறை யாருடைய சிந்தனையிலும் தோன்றவில்லை. இது எல்லா சிரமங்களையும் சுலபமாக கரைந்து போகச் செய்து விடுகிறது. பயிற்சியளிப்பவருக்கு ஏராளமான உழைப்பு மீதமாகிறது, தொடர்ந்த பயிற்சியில் இந்த வழிமுறை கடைபிடிக்கப்பட்டால், என் அதிர்ஷ்டத்தினால் எனக்குக் கிடைத்த அந்த உள்நிலைத் தன்மையை சுலபமாக அடைய முடியும்.’’

**விசேஷ உத்திரவு:**

‘‘மூன்றாவது நிலை பிராணாஹூதியை மிகவும் கடைசியாகத்தான் செலுத்த வேண்டும். முதல் நிலை பிராணாஹூதிக்கு பொதுவான அனுமதி உண்டு, இரண்டாவது நிலை விசேஷமானவர்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது.’’

**கட்டளை:**

‘‘இந்தக் காலத்தில் மனம் மிகவும் அமைதியற்றதாக மாறிக்கொண்டிருக்கிறது. அதற்குத் தகுந்தவிதமாகவே சூழ்நிலை அதற்கு அளிக்கப்படுகிறது. இதனால், உணர்வுறு நிலையின் (சித்தம்) ஏற்ற இறக்கங்கள் (குணபேதங்கள்) (விருத்திகள்) அதாவது மனத்தின் சுபாவங்கள் (மனப்போக்குகள், மனப்பான்மைகள்) அமைதியை அடையத் தவறுகின்றன. ஆகையால், எனது ஆன்மீக வம்சத்தைச் சேர்ந்தவர்களில், யாருக்குத் தகுதி இருக்கிறதோ, அவர்கள் முதலில் தங்கள் சித்த விருத்திகளை (மனப்பான்மைகளை) கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கட்டளையிடுகிறேன். பொதுவாக, எந்தப் புள்ளிகளில் எவ்வளவு ஆற்றலைச் செலுத்த வேண்டும்; இந்த வழிமுறைகளின் மூலமாக எந்தப் பயிற்சிகளைப் பின்பற்ற வேண்டும் என்பது பற்றிய சரியான புரிந்து கொள்ளும் திறன் இல்லாதவர்களுக்கு, அவர்களின் இதயத்தை மட்டும் மேன்மைப்படுத்தும் பணியை நான் ஏற்கவேண்டியிருக்கும். இதயத்தை மட்டும் எடுத்துக்கொண்டாலும், இதுவரையில் வழக்கமாகச் செய்து வந்தது போல, கூடவே ஒவ்வொரு புள்ளியையும், சுத்திகரிப்பு செய்து கொண்டே இருக்கவேண்டியதாகும்.’’

**வணக்கத்திற்குரிய மாஸ்டர், M1 மற்றும் R2 - க்காகச் சொன்னது:**

‘‘இந்த வழிமுறையில் ராம் சந்த்தர் மேலும் ஒரு கண்டுபிடிப்பைச் செய்திருக்கிறார். இந்தக் கண்டுபிடிப்பு பயிற்சிக்குத் தொடர்புடையது அல்ல. அவருடைய கடமை சம்பந்தப்பட்டது. தன் கடமைக்கு மேலும் சிறப்புத்தன்மை அளிப்பதற்காக இந்த வழிமுறையை அவர் பின்பற்றுகிறார். அதன் சீர்குலைந்த (உருக்குலைந்த) நிலையில் கூட சில சமயம் அதைப் பயன்படுத்தியிருக்கிறார். பரம்பொருளின் சக்தி சுற்றியுள்ள எல்லாவற்றிலும் வெளிப்படுகிறது. க்ஷோபம் (Kshobha / கலக்கும் ஆசை) என்பதாக அந்த குணத்தின் தன்மையைப் பற்றி அறிகுறி காட்டும் விதமாக குறிப்பிடப்பட்டிருந்த அணுக்களில் விளங்குகிறது. இந்த உலகின் இப்போது இருக்கும் தன்மையை எப்படி மாற்றுவது, அதை ஆதி மூலநிலையில் அல்லது அதற்கு சற்று முன்பிருந்த நிலைக்குக் கொண்டு வருவதை எப்படி

சாத்தியமாக்குவது என்பது சம்மந்தப்பட்ட வழிமுறை அதுவாகும். பரம்பொருளின் சக்தி அங்கே கொண்டு வரப்பட வேண்டும். அதைப் பற்றிப் புரிந்துகொள்வதற்காக ‘வெளிப்புற உறை‘ என்று குறிப்பிடக் கூடியதாகவும், க்ஷோபத்தின் நிலை என்று நான் பலமுறை கூறியதும் ஆகிய அதனை நோக்கி இதன் விளைவு ஈர்க்கப்பட வேண்டும். ஆனால் அந்த இடையூறு செய்யப்பட்ட உள்நிலைத்தன்மை அப்படியே இருப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டும். மேலே கூறப்பட்ட செயல்நுட்பத்தை விட இன்னமும் மேன்மையானதாக இருப்பதும், இன்னமும் கண்டுபிடிக்கப் படவேண்டியதாக இருப்பதும் ஆகிய மிகச்சிறந்த வழிமுறை, பரம்பொருளின் சக்தியாகிய அந்தப் பெரிய ஆற்றலில் ஒருவர் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டு, எந்த ஒரு விசேஷ நிலையை அல்லது மாற்றத்தை அறிமுகப்படுத்த வேண்டியிருக்கிறதோ அதைப்பற்றிய எண்ணத்தை மனதில் எடுத்துக்கொண்டு, அந்த எண்ணம் அந்த சக்தி முழுவதிலும் பரவச் செய்து, அதன்பிறகு தேவைப்படுகிற விசேஷ நிலை அல்லது மாற்றத்தின் விளைவோடு அது முழுமையாக அதில் தோயும் வரையில், அணுக்களின் விளைவை அழிப்பதற்காக ஆற்றலுடன் அதைத் தொடர்ந்து உந்தித்தள்ளும் செயலை உள்ளடக்கியதாகும். இந்தக் கடமையைச் செய்வதற்கு நியமிக்கப்பட்டிருப்பவர் யாரோ அந்த மனிதரால் மட்டுமே இந்த வழிமுறை பின்பற்றப்பட வேண்டும். (சிறு இடைவெளி) இதையும் தாண்டி முழு அழிவு நிலையை (பிரபஞ்சத்தின் பேரழிவு அல்லது பிரளயம், அல்லது க்வய்யாமத் / Qayaamat) எப்படிக் கொண்டு வருவது என்பதற்கான வழிமுறையையும் கூட ராம் சந்த்தர் சிந்தனையில் கண்டறிந்திருக்கிறார். இந்த வழிமுறை ராம் சந்த்தரின் நெஞ்சில் மட்டுமே நீடித்திருக்கும். அது பற்றிய குறிப்பை நான் சொல்ல விரும்பவில்லை.’’

14-5-1945

## சுவாமி விவேகானந்தாவிடமிருந்து விசேஷப் பணிக்காக வந்த குறிப்பாணைகள்:

‘‘எங்கேயாவது தனியாக ஐந்து நாட்களை உனக்காக ஒதுக்கிக்கொள். அந்தச் சமயத்தில் உன்னுடன் வேறு யாரும் தங்கக்கூடாது. உனது அந்த இடத்தில் நீ மட்டும் தனியாக இருப்பாய். நீ யாரையும் சந்திக்கமாட்டாய். இந்தக் காலகட்டத்தில் ஒருநாளைக்கு ஒருமுறை மட்டும் சாப்பிடு.’’

15-5-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''நீண்ட அனுபவத்திற்குப் பிறகு, நான் இதை உணர்ந்திருக்கிறேன். அதாவது வெறும் ஒரே ஒருவரை மிகச் சரியான முறையில் முழுமையாக ஒருவர் உருவாக்கி விட்டால், அவர் தனது மாஸ்டருக்குப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்திவிட்டார் என்று சொல்லலாம். என் விஷயத்தில் இதுதான் நடந்திருக்கிறது. அவருடைய அருளினால் R2, K2, M1 போன்ற மிகச்சிறந்த மனிதர்கள் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது வேறு விஷயம். உண்மையில் என் ஆயுட்காலம் முழுவதிலும் ஒரே ஒருவரை மட்டுமே நான் தயார் செய்ய முடிந்தது. ஆனால், அந்தோ, யாரும் அதை அறிந்து பாராட்ட முடியவில்லை. பொதுவாக மக்களை கவர்ச்சிதான் மகிழ்விக்கிறது என்பது காலத்தின் மனப்பான்மையாகி விட்டது. விசேஷமான மனிதர்கள் கூட வெளிக்கவர்ச்சிக்கே முதன்மை தருகிறார்கள். நிறம் மங்கியதாக, வறண்டு இருக்கும் ஒன்றை (உண்மையான ஆன்மீகத்தை) யாருமே பாராட்டுவதில்லை.''

''இப்போது நான் சொல்ல வந்த உண்மையான கருத்துக்கு வருகிறேன். பிரியமான ராம் சந்த்தர் என் வாழ்க்கையின் நோக்கமாகவே மாறிவிடும்படி ஆகிவிட்டது. முதிய பெரும் முனிவர்களின் கண்கள் தானாகவே அவரை நோக்கித் திரும்பி அவர்மீது நிலை பெற்றுவிடும் அளவுக்கு இது வளர்ந்திருந்தது. அவரிடம் எதுவும் குறையாக இருக்கும்படி நான் விடவில்லை. மற்றவர்கள் அனைவருக்கும் எட்டாமல் நழுவிக் கொண்டிருந்த, கடினத்திலும் கடினமான முடிச்சுக்கள், அவர் மூலமாக விடுவிக்கப்படுகின்ற ஒரு அற்புதமான பலன் விளைந்தது. பல நாட்களாகவே, நடுநிலைத்தன்மைக்கு மேலாக உயர்கின்ற மனதின் அதிகப்படியான செயல்பாட்டைக் குறைப்பதற்காக ஏதாவது வழிமுறையைக் காணவேண்டும் என்ற ஒரு எண்ணம் அவர் உள்ளத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. அப்படி ஒரு வழிமுறை இப்போது அவருக்குத் தெரிந்து விட்டது. அதைக் கவனித்தறிந்தபின் அது சரியானது என்பதை நான் கண்டறிந்தேன்.''

**அந்த வழிமுறை இதுதான்:**

''மனதின் உள்நிலைத்தன்மை இதயத்தில் தேவையில்லாமல் அமைதியற்றதாகவே இருக்கிறது. இங்கு மனதை பரம்பொருளின் பிரிக்க முடியாத பகுதியாக எடுத்துக்கொள்ள வேண்டும். மனமும், பரம்பொருளும் ஒரே மாதிரி நிறமுடையதாக இருப்பது போல ஒரு விதத்தில் அதை

நினைக்க வேண்டும். நிறம் என்னும்போது சிவப்பு, மஞ்சள், நீலம், கருப்பு போன்ற நிறங்களை நான் சொல்லவில்லை. பரம்பொருள் அதைப் பற்றி விவரிக்கப்பட்டிருப்பது போல, ஒளியாக இருப்பதால், மனமும் கூட அதே பரம்பொருளின் பகுதியைப் போல இருக்கிறது. அப்படி பரம்பொருள் போலவே அதேமாதிரி இருக்கின்ற மனத்தின் முகம், அதே பரம்பொருளுக்குள், ஈர்த்துக் கொள்ளப்படும்படியாக அதை நோக்கித் திரும்பியிருக்கச் செய்ய வேண்டும். இன்னும் சரியாகச் சொன்னால் மனத்தின் முகம் வெளிப்புறத்திலிருந்து உட்புறமாக பரம்பொருளை நோக்கித் திரும்பச் செய்ய வேண்டும். ஒரு சாதகனுக்கு கொடுக்கப்படும் சிட்டிங் முழுவதிலும் இதே கருத்துடன் பிராணாஹூதி தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும். இது மனத்தின் எல்லாக் குறைபாடுகளையும் நீக்குவதற்காகவே.''

## இரண்டாவது வழிமுறை:

''அனைத்துப் புள்ளிகளும், சக்கரங்களும் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு, அவற்றில் விளங்கும் உள்நிலை சுத்திகரிக்கப்பட்டு, அதன்பிறகு பரம்பொருளே அந்த வடிவத்துக்கு அல்லது உள் நிலைக்கு உயர்ந்திருப்பதாகத் தோன்றுவதற்காக, பரம்பொருளின் தன்மையுடன் ஒன்றுபட்டிருப்பதாகக் கருத வேண்டும். அதன்பிறகு முதல் வழிமுறையில் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, அந்த ஒரேமாதிரியான நிலை, அதே பரம்பொருளை நோக்கி இழுக்கப்பட்டு, ஐக்கியமடையச் செய்ய வேண்டும்.''

''ஒரு சிறிய விஷயம் ஒரு பெரிய விஷயத்தினால் எல்லாப் பக்கங்களிலிருந்தும் அழுத்தப்படும்போது அல்லது அதற்குள் மூழ்கியிருக்கும்போது, அந்தப் பெரியது சிறியதை தன்னுள் அடக்கிக் கொண்டுவிடுகிறது என்பது என்ன ஒரு நுட்பமான விஞ்ஞானம்! அதாவது ஒரு சிறிய பொருள் ஒரு பெரிய பொருளினால் எல்லாப் பக்கங்களில் இருந்தும் நீண்ட காலத்துக்கு அழுத்தப்பட்டிருந்தால், அது உருக்குலைந்த நிலையில் எதனுடைய ஒரு பகுதியாகவே இருக்கிறதோ, அந்தச் சிறிய பொருளும், பெரியதும் ஒரே அமைப்பாக ஒன்றாகக் கலந்தாக வேண்டியுள்ளது. இந்தப் புதிய முறையின் மூலமாக அனைத்து சக்கரங்களும் கடந்து செல்லப்பட்டிருக்கும்போது, அதாவது அனைத்து சக்கரங்களும் பரம்பொருளுடன் சேர்ந்த ஒரேமாதிரி தன்மைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும்போது, அந்த உள்நிலை முழுவதும் பரம்பொருளில் மூழ்கியிருக்க வேண்டும். சீடனிடத்தில் இந்தப் பயிற்சி சிறிது காலம்

தொடர்ந்து செய்யப்படவேண்டும். அது எத்தனையோ நன்மக்களின் அதிர்ஷ்டத்தாலும், அடைய இயலாத மிகக் கடினமான ஒரு உள்நிலையை சீடனிடம் வளரச்செய்யும். இதை எத்தனையோ ஆண்டுக்கால கடுமையான பயிற்சியினாலும் அடைய இயலாது. முதல் வழிமுறையின் மூலமாக மனத்தின் அமைதியற்ற தன்மை முடிவுக்கு வந்து விடும். இந்த (இரண்டாவது) வழிமுறை மிகவும் கஷ்டமானது. எல்லோரும் இதைக் கையாள முடியாது. கடவுள் யாருக்கு தன் தொடர்பை அளிக்கிறாரோ அவர்தான் இதைச் செய்யலாம். குறித்து வைப்பதற்காக வேண்டி ரகசியமான விஷயத்தை நான் சொல்கிறேன். கடவுளுடன் பூரண ஐக்கியம் (ஃபானா ஃபில்லாஹ் / Fana - Filliah) அடைவதற்கு இது தான் வழி.''

**சுவாமி விவேகானந்தா:**

''நீங்கள் இந்த வழிமுறையைக் கண்டறிந்தவுடன், நமது பிரபு (பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்) என்னிடம் வந்து, நீங்கள் செய்த இந்த சமீபத்திய கண்டுபிடிப்பு பற்றிப் பேசினார். வார்த்தைகளில் வெளிப்படுத்த இயலாத அளவுக்கு அவர் மகிழ்ச்சியுடன் இருந்தார். இம்மாதிரி விஷயங்கள் மனிதர்களிடம் மிக அரிதாகவே காணப்படுகிறது.''

17-5-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர், M1 - க்குக் கூறியது:**

''பிரியமான ராம் சந்த்தரின் காலடிகள், இந்த நிலையிலும் கூட, ஒவ்வொரு நாளும் முன்னோக்கிப் போய்க் கொண்டே இருக்கின்றன. இந்த மகாசமுத்திரம் எல்லையற்றது. கடக்க முடியாதது என்றே அதைக் குறிப்பிடலாம். அன்புள்ள M1, என்னை இந்த அளவுக்குப் பற்றிக் கொண்டிருக்கின்ற, ராம் சந்த்தரின் இதயத்தைப்போல, வேறு எங்கும் நான் கண்டதில்லை. மக்கள் இதைப்பற்றி திகைப்படையலாம், இதற்காக என்னை குறைசொல்லி விமர்சனமும் செய்யலாம். முழு வேகத்துடன் நான் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்ற கறையில்லாத இந்த மகா சமுத்திரத்தை, இப்போது நான் அவருக்கு மாற்றிக் கொடுத்திருக்கிறேன். இப்போது நான் இருக்கும் இடத்திலேயே இருக்கிறேன். அவர் யாருக்கு இதைக் கொடுப்பதற்கு விருப்பப்பட்டாலும், அப்படியே செய்வதற்குரிய தேர்ச்சித் திறனையும் அவருக்குக் கொடுத்திருக்கிறேன்.''

**சுவாமி விவேகானந்தா:**

''அன்புக்கு இம்மாதிரி ஒரு உதாரணத்தை நான் வேறு எங்கும் கண்டதில்லை. இந்த உலகம் எந்நாளும் இதை நினைவில் வைத்திருக்கும். நீ (ராம் சந்த்தர்) மீண்டும் வரவேண்டியதில்லை.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''அனைவரையும் என்னைப் போலவே உருவாக்க வேண்டுமென்ற ஆசையின் தீவிர எழுச்சி எனக்கு இருந்தது. என்னிடம் இருப்பது எதுவாயினும் அதை அனைவருக்கும் முழுமையாகத் திறந்த மனத்துடன் அளிக்க விரும்பினேன். ஆனால், உண்மையாகவே தீவிரமாக முனைந்து கற்றுக்கொள்ள விரும்புகிற ஒருவரை என்னால் கண்டறிய முடியவில்லை. இப்போதும் கூட நிலைமை அப்படியேதான் இருக்கிறது. அவர் மீது வெள்ளமாகப் பெருகும்படி மழையாகப் பொழிய ஆரம்பிக்க எனது பாதிப்பைப் பெறும் அளவுக்கு தனது உள்ளார்ந்த தீரத்தை யாரும் வளர்த்துக்கொள்ளவில்லை. உண்மையில் இதில் உண்மை நிலை என்னவெனில், அனைவரையும் நான் என்னைவிட அதிகமாக நேசித்தேன் என்பதேயாகும். சமீபகாலத்தில் M1, R2 மற்றும் K2 ஆகிய மிகச் சிறப்பு வாய்ந்த மாமனிதர்களை நான் உருவாக்கியிருக்கிறேன். ஆனால் உண்மையைச் சொன்னால், அவர்கள் மீது நான் தெய்வீகச் சுவைகளைப் பொழியும் அளவுக்கு அவர்களில் யாரும் உயர்வடைய முடியவில்லை. யாருக்குமே அதன் மீது உண்மையான நன்மதிப்பு இல்லை. அதனால் ஐக்கியமடைதலில் பல நிலைகள் இன்னமும் திறக்கப்படாமலே நின்றுவிட்டன. அதாவது, என்னை வந்தடைவதற்கு இன்னமும் பல நிலைகள் கடக்கப்பட வேண்டியவையாக உள்ளன. நான் இப்போது குறிப்பிட்டுச் சொன்னது, அதை விட சுலபமானது வேறு எதுவும் இருக்க முடியாது என்னும் அளவுக்கு அவ்வளவு சுலபமானது, ஒரு விளக்குமாற்றின் பின்னால் ஒரு மலை மறைந்திருக்கிறது, தீவிரமான ஏக்கம் ஒன்று தான் அதற்குத் தேவையாக இருக்கிறது.''

**வழிமுறை :**

''ஒருவன் தனக்குள் சாத்தியமான அளவுக்கு – எவ்வளவு முடியுமோ அவ்வளவு – ஊடுருவிச் செல்ல வேண்டும். தனது குறைபாடுகளை ஒருவன் தெரிந்து கொள்ளவேண்டும். அவற்றை ஒவ்வொன்றாகக் களைந்து (நீக்கிக்) கொண்டே இருக்கவேண்டும். எங்கெல்லாம் சிரமம் உண்டாகிறதோ, அங்கு மாஸ்டரின் உதவியைக் கேட்க வேண்டும்.''

19–5–1945

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது:**

‘‘ஹடயோகம் சம்பந்தமாக உன் மனதில் (ராம் சந்த்தரின் மனதில்) முளைத்திருக்கும் எண்ணம் உண்மையில் என் கருத்தாகும். ஹடயோகம், ராஜயோகம் ஆகிய இவ்விரண்டும் அடிப்படையில் ஒன்றேயாகும். ஒன்று – அதாவது ராஜயோகம் - லேசானது. மற்றது அதாவது ஹடயோகம் - கனமானது. இவ்விரண்டிலும் தேர்ந்த நிபுணனாக இருந்தாலும், என் ஆயுள் முழுவதும் ராஜயோகத்தையே நான் மேன்மையானதாக மதித்தேன். இப்போது நீ இவ்விரண்டையும் இணைத்து விடு. உன் மாஸ்டர் இப்போது தன் வேலையில் சுறுசுறுப்பாக இருக்கிறார். சுவாமி விவேகானந்தா இன்னும் மேல் உலகிற்குத் திரும்பவில்லை. ஐந்து வருடங்களுக்குப் பிறகு உனது வேலைச் சுமை இன்னும் அதிகரிக்கும். தெய்வீகப் பணி உனக்காக வந்து கொண்டிருக்கிறது. இதயம் மற்றும் மனத்தின் பலவீனம் காரணமாக இப்போது நீ செய்து கொண்டிருக்கும் அளவுக்கு அப்போது உன்னால் வேலை செய்ய முடியாமல் போகும். சிறிது காலத்திற்கு நீ தனிமையில் வசிக்க வேண்டியதாக வரலாம். அதிக அளவு வேலைச்சுமை என்று நான் சொல்வது நீ (அரசாங்க நீதிமன்றத்தில்) செய்யும் வேலையைத் தான், மேலும் அப்போது (ஆன்மீகம் மற்றும் தெய்வீகமாகிய) இந்தப் பணியைத் தவிர வேறு எதையும் கவனிப்பதற்கு உனக்கு ஓய்வுநேரம் இருக்காது. ராதை தன் நல்லாசிகளை உனக்கு அளிக்கின்றாள்.’’

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடன் ராதா அவர்களும் வந்திருந்தார். உனக்கு அவர் பிராணாஹூதி அளித்தார்.’’

20–5–1945

**சுவாமி விவேகானந்தா:**

‘‘பல நாட்களுக்குப் பிறகு நான் இங்கே வந்திருக்கிறேன். நிதிகளைப் பாதுகாக்கும் விழாவைத் துவக்கி வைப்பதற்கு வந்திருக்கிறேன். நமது பிரபுவின் பெயரால் நீ கொஞ்சம் பணத்தை இருப்புக் கணக்கில் வைத்திருக்கிறாய். அதே வழியில் நானும் பின்தொடர விரும்புகிறேன். எனக்காகவும் கூட அவ்வளவு இருக்க வேண்டுமென விரும்புகிறேன். இருப்புத் தொகைகளின் பட்டியலில் அவருடைய பெயருக்குப் பின்னால் என் பெயர் வரும். நான் இங்கே மீண்டும் வருவேன். பணத்தை இருப்பிலிருந்து எடுப்பதில், வேறு யாரும் செய்வதை நான்

விரும்பவில்லை. வணக்கத்திற்குரிய உனது மாஸ்டரிடமிருந்து, அது சம்பந்தமான உத்தரவுகள் நேரடியாக உனக்கு வரும்.''

''ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன்'' என்ற பதிவு பெற்ற (பதிவு செய்யப்பட்ட) ஒரு அமைப்பை நீ ஏற்படுத்த இருப்பதால், அதற்கு ஒரு ஆரம்பமாக, இதன் உறுப்பினர்களாக இருக்கப் போகின்றவர்களின் ஒரு கூட்டத்தை நடத்த வேண்டும். அந்தக் கூட்டத்தில் இம்மாதிரி ஒரு அமைப்பைத் துவக்குவதற்கு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும். மேற்கூறிய பெயரில் ஒரு சங்கத்தைப் பதிவு செய்வதற்காக சபைக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட வேண்டும். உங்களிடையே சட்ட அறிவில் தேர்ந்தவராக இருக்கும் ஒருவரால் இதன் விதிகளும், துணை விதிகளும் வடிவமைக்கப்பட வேண்டும். முக்கியமான அலுவலகப் பதவிகளில் இருக்க வேண்டியவர்களின் பெயர்களை நமது பிரபு ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறார். இதனுடைய நிதி 'ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன் ஷாஜஹான்பூர்' என்ற பெயரில் ஏதாவது ஒரு வங்கியில் இருப்புத் தொகையாக வைக்கப்பட வேண்டும். அதிலிருந்து பணம் எடுப்பதற்கும் மற்ற கணக்குகளை பராமரிக்கவும், தலைவரின் சார்பாக உதவிச் செயலாளருக்கு அதிகாரமளிக்கப்படவேண்டும். இந்த சங்க அமைப்பு 'ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன், ஷாஜஹான்பூர் (உ.பி. இந்தியா)' என்று அழைக்கப்படும். அனைத்து கடிதங்களும், பணவிடை அஞ்சல்களும் இதே முகவரியில் செயலாளர் அல்லது உதவிச் செயலாளருக்கு வந்து சேரவேண்டும். செயற்குழு கூட்டங்கள் பற்றிய அறிக்கைகள் தயாரிக்கப்படவேண்டும். இதே பெயரின் கீழ்தான் உறுப்பினர்கள் பட்டியலிடப்படுவார்கள். நீங்கள் அதை விரும்பும்போது அச்சமயங்களில் நேரடியாக என்னிடமிருந்தே வழிகாட்டுதல் பெறலாம். எப்படியிருந்தாலும் இந்த மிஷனின் தலைவராக நீயே இருப்பாய். வருங்காலத்துக்கு வழிகாட்டுவதற்காக இவையனைத்தையும் நமது பிரபு ஏதோ ஒரு இடத்தில் பேசியிருக்கிறார்.''

22-5-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''ஆன்மீகப் பயிற்சியளிப்பதில் ராம் சந்த்தர் ஒரு புதிய வழிமுறையைக் கண்டறிந்திருக்கிறார். அது நிச்சயமாக முன்பே எங்கோ குறித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் அது இதுதான். அதாவது சரீர மண்டலத்திலிருந்து ஒருவரை மேலே பிரம்மாண்ட (பேரண்ட) மண்டலத்துக்குக் கொண்டு செல்லும் போது சரீர நிலையிலிருந்து அதை பிரம்மாண்ட நிலைக்கு மேலே இழுத்துக்

கொள்வதற்கு பதிலாக (அதில் ஒன்று சேர்ந்திருப்பது பற்றிய நினைவின் போக்கு) சுராத் (Surat) என்பது அந்த பிரம்மாண்ட மண்டலத்திலேயே (குப்ரா / Kubra) உருவாக்கப்படவேண்டும். சுராத் (Surat) என்ற இதனுடைய (ஒன்றுபட்டிருப்பது பற்றிய நினைவுப்போக்கினுடைய) இரண்டு செயல்முறைகளும் (இது மேல்நோக்கிப் போவது, அது இதனை தன்னை நோக்கி இழுப்பது ஆகிய இரண்டு முறைகளும்) அருகருகே இருந்து பூரணத்துவம் அடைய அனுமதிக்கப்பட வேண்டும். மற்றும் இது மேலே மேலே போக வேண்டும். இப்போது சற்று முன்பு I-2க்கு அளிக்கப்பட்ட வழிமுறை ஒரு விசித்திரமான வழிமுறையாகும். அது இது தான். எண்ணத்தின் (சுராத்) ஒரு முனை சரீர மண்டலத்திலேயே வைக்கப்படுகிறது. இன்னொரு முனை பிரம்மாண்ட மண்டலத்தை நோக்கி திசை திருப்பப்படுகிறது. சரீர மண்டலத்தை நோக்கியதாக வைக்கப்பட்டுள்ள முனையிலிருந்து சரீர மண்டலத்தின் ஐந்துவிதமான மேலோங்கிய நிலைகளுக்கு சக்தி அலைகள் திசை திருப்பி விடப்படுகின்றன. அதன் நோக்கம் என்னவெனில் பிரம்மாண்ட மண்டலம் அதற்குத் திறந்து விடப்படுவதற்காக சரீரமண்டலம் பூரணத்துவநிலைக்கு வரவிடுவதேயாகும்; மற்றும் இரண்டு மண்டலங்களுக்கும் வலிமையைக் கொடுப்பதேயாகும். இந்த மண்டலங்களை அடுத்து மேலும் இருக்கின்ற மண்டலங்களுக்கும் புள்ளிகளுக்கும் இதே முறையை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். இது ராம் சந்த்தரின் எண்ணத்தில் தோன்றியிருக்கின்ற ஈடு இணையில்லாத வழிமுறையாகும். அவரிடமிருந்து நன்மைபெறக் கூடியவர்களாக இருப்பவர்கள் அதிர்ஷ்டசாலிகள். இந்தக் காலம் மீண்டும் இங்கு வருவது அரிது என்பதை நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். இப்போது இருப்பது போல இயற்கை அலை எழுவதும் மிக அரிது. இந்த முறையில் இருக்கும் அனைத்து முடிச்சுக்களையும் அவர் விடுவித்துக்கொண்டே செல்வார். இந்தப் பயிற்சி முறை புதுப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மக்கள் இதை அறியாமலிருக்கிறார்கள்.''

24-5-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இப்போது I2 - பிரம்மாண்ட மண்டலத்தில் உலவிக் கொண்டிருக்கிறார். அவர் இப்போது பின்பற்றிக் கொண்டிருக்கும் வழிமுறையில், அதைக் கற்றுக்கொள்ள விரும்பி வருகிறவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு நான் அனுமதியளிக்கிறேன். அவர்களுக்கும், பிராணாஹூதி அளிக்கவேண்டிய சந்தர்ப்பம் வந்தால் அவருக்கு (I2 - க்குப்) பதிலாக நான் அங்கு உட்கார்ந்து

பிராணாஹுதி அளிக்கிறேன் என்ற எண்ணத்துடன் அதைச் செய்யவேண்டும். நிர்வகிப்பு ஏற்பாட்டின் வழியில் இச்சமயத்தில் இது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு புதியவரை ஏற்றுக் கொள்ளும் போது நான்தான் பிராணாஹுதி அளித்துக் கொண்டிருக்கிறேன், அந்தப் புதிய சாதகரின் இதயம் சுத்திகரிப்பு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று நினைக்க வேண்டும். அந்தப் புதியவருக்கு இப்படி இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு தனி சிட்டிங்குகள் கொடுக்க வேண்டும். அதன் பிறகு அவரை குழுவுடன் சேர்த்து உட்காரச் செய்து, என்னிடமிருந்து பிராணாஹுதி வருவதாக ஒரே சமயத்தில் எல்லோருக்கும் இதே எண்ணத்துடன் சிட்டிங் கொடுக்க வேண்டும். I2 - தன்னிடத்தில் அசுத்தம் அல்லது கடினத்தன்மை இருப்பதாக உணர்ந்தால், அவர் தனியாக அமர்ந்து பிராணாஹுதி அவர் மீது பொழிவதாகவும், அவருடைய கடினத்தன்மை சுத்திகரிப்பு செய்யப்படுவதாக, அது முதுகுப்புறமிருந்து நீராவி அல்லது புகைவடிவில் வெளியேறுவதாக நினைக்கவேண்டும்.''

## 26-5-1945

### சுவாமி விவேகானந்தா:

''மார்க்கண்டேய முனிவர் வரவிரும்புகிறார். முதலில் உன் குருவின் மீது மனம் நாடியிரு, (சற்று இடைவெளி) இந்த நோக்கத்திற்காக உன் குரு ஞாயிற்றுக்கிழமையை நிர்ணயிக்கிறார். வெவ்வேறு ஆசிரியர்களின் பணிகளை (வெவ்வேறு முனிவர்கள் அல்லது ரிஷிகளின் தெய்வீக ஞானக் கருத்துக்களை) தொகுப்பதற்கான நேரம் வரும்போது, அதற்காக முக்தி பெற்ற ஆன்மாக்களை உனக்கு உதவுவதற்காக நாங்கள் ஒதுக்கி வைத்திருக்கிறோம். எனவே இப்போது மார்க்கண்டேய முனிவரை அழைக்க வேண்டிய தேவை இல்லை.''

## 27-5-1945

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''இதுவரையில் நடைமுறையில் இருந்ததாகிய தெய்வீக அருளை வரவேண்டி அழைக்கின்ற பயிற்சி உடனே நிறுத்தப்பட வேண்டும். மக்களுக்கு ஆசீர்வாதத்தை (நன்னெறிப் பண்பில் மேன்மை அதாவது சிறந்த குணநலம்) அளிப்பதற்கு காயத்ரி மற்றும் பிற வேத மந்திரங்களைப் பயன்படுத்து.''

29-5-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இப்போது M1 - இடம் சோதித்துப் பார்க்கப்பட்ட வழிமுறை மிக நன்றாக இருக்கிறது. அதில் சாதகமான விஷயங்களும், நன்மைகளும் நிறைந்துள்ளன. இதை நோய்களைத் தீர்ப்பதற்குக் கூட பயன்படுத்த முடியும். உடல் சார்ந்த மற்றும் ஆன்மீகம் சம்மந்தப்பட்ட நோய்களை இந்த வழிமுறையைப் பயன்படுத்துவதன் மூலமாக நீக்கமுடியும்.

**இதுதான் அந்த வழிமுறை:** சக்திகளின் உண்மையான சேமிப்புக் கிடங்குடன் தொடர்பினை உடைய (இணைந்துள்ள) ஒரு சக்தி மனிதனின் மனதில் நிலைபெற்று விளங்குகிறது. தெய்வீக ஒளியாக உருவாக்கப்பட்டுள்ள அந்த சக்தியை எடுத்துக்கொண்டு அதை கை, கால்கள், சக்கரங்கள் மற்றும் எல்லா உறுப்புகளுக்கும் இறக்கிக் கொண்டு வந்து இவற்றின் மூலமாக அதைக் கடக்கச் செய்து, பிறகு வெளியே எடுக்கப்படுகிறது. பிறகு உடம்பின் மறு பக்கத்துக்கும் இதே விதத்தில் சக்தியை உடுருவச் செய்து வெளியே கொண்டு வரவேண்டும். தெய்வீக ஒளியின் ஒரு பகுதி மூளையின் மிக மேலான பகுதியிலிருந்து இறங்கி வருவதாகக் கருதப்பட்டு அது மெதுவாக நகர்ந்து உடலின் வெவ்வேறு பகுதிகளின் வழியாகச் சென்று, ஒன்றன் பின் ஒன்றாக அதை சுத்திகரிக்கிறது என்று நினைக்க வேண்டும். முடிவில் அசுத்தம் மற்றும் கடினத்தன்மை ஆகியவற்றுடன் சேர்ந்து உடம்பிலிருந்ந் வெளியே தள்ளப்படுவதாக நினைக்க வேண்டும். ஏதாவது ஒரு உறுப்பில் ஏதாவது நோய் இருந்தால், தெய்வீக ஒளி அந்த உறுப்பின் வழியே கடந்து செல்கிறது, அது அந்த நோயையும் தன்னுடன் எடுத்துக் கொண்டுவெளியே போகிறது என்று உறுதியாக நினைக்க வேண்டும். இந்த வழிமுறையை எல்லோருக்கும் சொல்லவும்.''

''ஒருவர் இந்த வழிமுறையை தானே தன்மீது பயன்படுத்தும் வலிமையற்றவராக இருக்கும்பட்சத்தில், ஒரு சாதகர் அவருக்காக இந்த வழிமுறையைப் பயன்படுத்தலாம். இப்படிச் செய்கின்ற அந்த சாதகர் தன் மனத்தின் தெய்வீக ஒளியை தான் அடைந்துள்ள நிலையிலிருந்து சற்று மேலான நிலையிலிருந்து எடுத்துக் கொண்டு, சம்மந்தப்பட்ட அந்த மனிதரின் மூளையின் மிக உயர்ந்த நிலையை லேசாகத் தொடும்படி செய்ய வேண்டும். அதன்பிறகு அந்த ஒளி அந்த மனிதரின் உடம்பின் பல்வேறு பகுதிகளில் மேலே விவரிக்கப்பட்டிருப்பது போல தலையிலிருந்து கீழேநோக்கி மெதுவாக தவழச் செய்ய வேண்டும். உடம்பில் பல

பகுதிகளிலிருந்தும், சக்கரங்களிலிருந்தும் நீக்கப்பட்ட அசுத்தம் கடினத்தன்மை ஆகியவற்றுடன் சேர்த்து உடம்பின் கீழ்ப்பகுதி வழியாக உந்தித்தள்ள வேண்டும். இப்படி மற்றவருக்காகச் செய்யும் போது அந்த சாதகர் தன் சொந்த நிலையிலிருந்து சற்று மேலான நிலையிலிருந்து மட்டுமே ஒளியை எடுத்துக் கொள்ளவேண்டும். தான் அடைய வேண்டிய மிக அதிகபட்ச நிலையிலிருந்து அந்த ஒளியை எடுக்கக் கூடாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதை ஒரு கடுமையான எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு சாதகர் இன்னொருவர் மீத பயன்படுத்தவதற்கான இந்த மாற்றப்பட்ட வழிமுறை, தனது சொந்த மனதின் ஒளியை தனது நிலையை விட சற்று உயர்ந்த நிலையிலிருந்து எடுத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட மனிதரின் மூளையின் உயர்நிலைக்கு மேல் லேசாகத் தொடும்படி செய்து அங்கிருந்து கீழ்நோக்கி மெதுவாகத் தவழ்ந்து வரும்படி செய்வதை ஒரு முழுமையாகக் கொண்டது. அதற்கு மேல் இதைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை.''

''இம்மாதிரி ஆன்மீக ஆராய்ச்சிப் பணியை செய்து கொண்டிருப்பதிலேயே உன் வாழ்க்கை செலவிடப்படும். விடுவிக்கப்பட வேண்டிய எத்தனையோ முடிச்சுகள் இன்னமும் இருக்கின்றன. இயற்கை உன் முன்னால் மறைப்பு இழந்து கொண்டிருக்கிறது. மிகப் பெரியவரை விடப் பெரியவருக்கும் கூட இந்த அதிர்ஷ்டம் கிடைக்க முடியாது. அது ஒரு பௌதீக உருவத்தை ஏற்றுக்கொண்டால், அதன் உறவுமுறை, என் பௌதீக ஜீவிதத்தில் அது என்னுடன் இருந்தது போல அவருக்கு வரும். இதை மேலும் விளக்கமாகச் சொல்ல நான் விரும்பவில்லை.''

30-5-1945

## H4 - க்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

''J...... என்ற இடத்துக்கு நீ போகும் போது, M-10-இடம், அன்புள்ள ராம் சந்த்தருக்கு அவர் எழுதிய கடிதத்திற்குப் பதிலாக எழுதப்பட்டது எதுவாயினும், அதற்காக இன்னமும் காத்திருக்கிறோம் என்று சொல். இப்போது அவரது ஆன்மீக உள்நிலை பூஜ்ஜியமாக இருக்கிறது. அவருடைய ஆன்மீக உள்நிலை முழுவதையும் ராம் சந்த்தர் நீக்கிவிட்டார். அவர் அப்படிச் செய்யாமல் விட்டிருந்தாலும்கூட, அது தானாகவே நிகழ்ந்திருக்கும். ஏனெனில் அவருடைய ஆன்மீக இணைப்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன."

**தொடர்ந்து எனக்காக அவர் கூறியது:**

''என் சார்பாக H4 - இடம், தன் சகோதரர் ராம்சந்த்தரை அவர் எப்படி வேண்டுமானாலும் சோதித்துப் பார்க்கலாம் என்று சொல். மூலசக்தியுடன் அவருடைய (H4) இணைப்பும் கூட இல்லாமற் போய்விட்டது, நான் அதை இன்னமும் தொடர்ந்து அவருடன் நீடித்துக்கொண்டிருக்கிறேன் என்பதில் சந்தேகமில்லை.''

அன்று இரவு உலகியல் நோக்கங்களுக்கான சில கவசங்கள், (பாதுகாப்பு முறைகள்) தாயத்துக்கள் பற்றி வணக்கத்திற்குரிய மாஸ்டர் குறிப்பிட்டுச் சொன்னார். ''யாராவது தூக்கமின்மை, அல்லது மனத்தில் ஏதோ தொல்லை அல்லது உடல்நலக்குறைவால் அமைதியின்மை, அல்லது பயங்கரக் கனவுகள் அல்லது காரணம் தெரியாமல் ஒரு குழந்தை பயங்கரமாக வீறிட்டு அழுதல் அல்லது வறுமையினாலோ, வேலையின்மை காரணமாகவோ மிக நெருக்கடியான சூழ்நிலையில் இருந்தால் அல்லது சிரமமான பிரச்னைகளை சந்தித்தால் என் பிரியமான ராம் சந்த்தரின் பெயரால் ஒரு தாயத்து கொடுக்கலாம். போர்முனையில் இருக்கும் ஒருவருக்கு பாதுகாப்பு தேவைப்பட்டால் அல்லது ஒரு தாயின் கருப்பையில் இருக்கும் சிசுவுக்கு பாதுகாப்பு வேண்டியிருந்தால் அல்லது குழந்தை பிறந்த உடன் அதற்கு மரணம் ஏற்படுத்தக்கூடிய நோய்கள் வந்தாலும் கூட வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் பெயரால் ஒரு தாயத்து கொடுக்கலாம். ஒரு பெண்ணுக்கு அடிக்கடி கருச்சிதைவு ஏற்பட்டால் அந்தப் பெண் கருவுற்றிருக்கும் போது அவள் கழுத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் பெயரால் தாயத்து செய்து அணிந்து கொள்ளலாம். குழந்தை பிறந்தவுடன் அதே தாயத்தை குழந்தையின் கழுத்தில் அணிவிக்கலாம்.''

''அத்தாயத்துகளில் ஹிந்தி மொழி வார்த்தைகளுக்கு முதலிடம் தரவேண்டும். அதாவது அதில் தெய்வத்தின் பாதுகாப்பு வேண்டி பிரார்த்தனையாக எழுதும் வாசகத்தின் மந்திரங்கள் ஹிந்தி மொழியில் இருக்கவேண்டும். இந்தத் தாயத்துக்களின் விஷயத்தில் ஒரு முன்னெச்சரிக்கையைப் பின்பற்ற வேண்டும். அதாவது இந்தத் தாயத்துக்களைக் காலால் மிதித்துவிடக் கூடாது. கோரிக்கை நிறைவேறிய பிறகு அத்தாயத்தை ஏதாவது ஆற்றில், நீரோட்டத்துடன் விட்டுவிட வேண்டும். (சற்று இடைவெளி) கிருமித்தொற்றினால் வரும் வியாதிகளை நீக்க என்னை நினைக்கலாம். ஆனால் என் பெயரைச் சொல்லும் போது கூடவே சுவாமி விவேகானந்தாவின் பெயரையும் நினைக்கவேண்டும்.''

''ஒவ்வொரு தாயத்தும் 'ஓம்' என்ற எழுத்துடன் தொடங்க வேண்டும். இந்தத் தாயத்துக்கான என் அனுமதி பெற்றவர்கள் மட்டுமே கொடுக்கலாம். அல்லது என் மூலமாக முறைப்படி அங்கீகாரம் பெற்றவர்கள் கொடுக்கலாம். இந்தத் தாயத்துக்கள் அனைத்தும் இதனால் மக்கள் நன்மை பெறும் பொருட்டு பொதுவாக ஆக்கப்படவேண்டும். 'பொதுவாக' என்று நான் சொல்வதன் பொருள் இவை நல்ல மனிதர்களுக்கும், கடவுள் நம்பிக்கையுள்ளவர்களுக்கும் மட்டுமே கூறப்படவேண்டும் என்பதேயாகும். தாயத்துக்கள் சம்பந்தமாக இதுவும் கூட ஒரு அத்தியாவசியமான நிபந்தனையாகும்.''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''என்னுடைய பெயருடன் ராதாவின் பெயரும் சேர்ந்து இருக்க வேண்டும்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''உலகியல் சம்பந்தமான விஷயங்கள்பற்றிய பாதுகாப்பு இதுவரை சொல்லப்பட்டது. இதனையடுத்து ஆன்மீக மண்டலம் வருகிறது. முதலாவது ஆன்மீக வழிமுறையும், இன்னும் மேம்படுத்தப்பட்ட இரண்டாவது வழிமுறையும், யாருடைய பிரம்மாண்ட மண்டலத்துக்குக் கீழே உள்ள அனைத்துப் புள்ளிகளும் கிட்டத்தட்ட விழிப்படைந்துள்ளனவோ, அம்மாதிரியான சாதகர்களின் பயன்பாட்டுக்காகவே ஆகும். (இவ்விரண்டும் ஏற்கனவே 29-5-1945 தேதியில் விவரிக்கப்பட்டுள்ளன.)''

31-5-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இந்தக் கூர்மையான புரிந்து கொள்ளும் திறனுக்கு பாராட்டுக்கள்! ஏதாவது ஒன்றைச் சொன்ன உடனேயே, அது கண்டறியப்பட்டு விடுகிறது! எனது சந்தோஷத்தையும், தெய்வீகத்திடம் இருந்து வரும் இந்தப் பரிசையும் நான் எப்படித்தான் வெளிப்படுத்துவது! ராம் சந்த்தரை நாடி வராதிருப்பவர்களுக்காக வருந்துகிறேன்.''

''மாயையும் (சத்திய நிகழ்வு நிலை – பெண்மை கோட்பாடு – இயற்கை) புருஷனும் (செயல்படாதிருக்கும் அறிவுத்திறன் - ஆண்மை கோட்பாடு) ஒன்றாக இணைந்துவிடும் ஒரு புள்ளி இருக்கிறது. இதுதான் மாயையின் (அல்லது இயற்கையின்) கடைசி நிலை; புருஷ சக்தியின் (அல்லது கடவுளின்) ஆரம்பநிலை. இப்படி இந்த இரண்டும் (இரண்டு கோட்பாடுகளும்) இணைவதால் ஆற்றல்நிறைந்த ஒரு சக்தி பிறக்கிறது. அதிலுள்ள விசையாற்றல் காரணமாக அது சுழலின் நிலை என்றும்

சொல்லப்படலாம். ஆகையால் மிகவும் அதிக பலவீனமான நிலை உண்டாகும் போது சுழல் என்ற வடிவத்தில் அந்த விசையாற்றலுடன் ஒருவரின் எண்ணம் தொடர்புகொள்ளச் செய்யவேண்டும். மேலும் ஒருவரின் உடம்புக்குள் அது வந்தடைவதற்கான வழியும் திறக்கப்படலாம். எண்ணத்துடன் அந்த விசையாற்றலுக்குத் தொடர்பு ஏற்படுத்தும் போது, அந்தச் சுழல் ஒரு இடத்தில் நிலையாக இருப்பதாக சிந்திக்கப்படவேண்டும். அதனுடைய அதிர்வலைகள் மனிதனின் சரீர அமைப்புக்குள் புகுந்து விடாதிருப்பதற்காக இப்படி செய்யவேண்டும். ஆயினும் இந்தப் பயிற்சி அனைவரும் பயன்படுத்துவதற்கானதுஅல்ல. இந்தப்புள்ளி வரையில் உட்கார்ந்திருப்பவர் யாரோ அவர்கள் மட்டுமே இதைச் செய்யலாம். எனினும் அனைவருமே சிறிதளவு பயன்பெறலாம். புண்யநிலை மண்டலத்தை (க்யுத்ஸா / Qudsa) அடைந்துள்ள ஒருமனிதர் இதை மிக நன்றாகப் பயன்படுத்தக் கூடியவராக இருப்பார். இதில் ஒன்று அல்லது இரண்டு நிமிடங்கள் மட்டுமே ஈடுபடவேண்டும். ராம் சந்த்தரின் கற்பனையின் உயர்வுபற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவருக்குக் கொடுக்காமல் நான் எதையும் நிறுத்தி வைத்துக் கொள்ளவில்லை. அப்படி ஏதாவது கொடுக்கப்படாமல் மீதியிருந்தால் அதையும் அவருக்குக் கொடுத்துவிட நான் தயங்கவே மாட்டேன்.''

### சுவாமி விவேகானந்தா:

''நீ என் அன்புக்கு இலக்கானவனாக உருவாகி வந்திருக்கிறாய். இந்தச் சிறப்பை நான் வேறு யாரிடமும் காணவில்லை. இன்னமும் ஒரு பெரிய சிரமமான பணி இருக்கிறது. உனது தோள்களின் மீது ஒரு பெரிய சுமை இருக்கிறது. உன் உடல்நலம் பற்றிய அக்கரையும் அளிக்கப்படுகிறது.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''இதோ இன்னொரு கண்டுபிடிப்பு! நம் மக்களிடையே சோம்பல் என்ற வியாதி அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அதற்கான தீர்வு காணப்படாமலிருந்தது. இப்போது இந்தப் பிரச்சனையையும் கூட தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் ராம் சந்த்தருக்குத் தோன்றியிருக்கிறது. இதனால் கடவுள் அவருக்கு உதவி செய்தார். எனவே நன்மையளிக்கும் ஒரு வழிமுறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.''

### அந்த வழிமுறை:

''மாயையும், புருஷனும் சந்திக்கின்ற அந்தப் புள்ளியின் சுழல்நிலையைப் பற்றி சற்றுமுன்பு சொன்னேன். அந்தச் சுழல்நிலைக்கு சற்று கீழே மனதின்

எண்ணம் நிலைநிறுத்தப்படவேண்டும். அந்த இடத்தின் தன்மை ஒருவனுடைய உடம்பில் பரவுகிறது. இதனால் சோம்பல் ஆவியாகிப் போய்விடுகிறது என்று உறுதியாக நினைக்க வேண்டும். இதற்குக் கடுமையான உழைப்பு தேவை. இந்த முன்னோடியான கண்டுபிடிப்புக்கு ஒன்று அல்லது இரண்டு நிமிடங்களே தேவை. இந்த வழிமுறையை எல்லோருமே பயன்படுத்தலாம். இந்த மண்டலம் வரையில் அணுக்கம் பெறாதவர், தனது எண்ணம் இந்த இடத்துடன் தொடர்பு கொண்டிருப்பதாக நினைத்து, அதன் விசையாற்றல்களையும் சக்தியையும் தன் உடம்பினுள் ஈர்த்துக்கொள்வதாக எண்ண வேண்டும். இதுதான் அந்த வழிமுறை. இந்த முயற்சி சோம்பலை நீக்குவதற்காகவே. சோம்பல் ஏற்பட்டால் இந்த வழிமுறையைப் பயன்படுத்தலாம். சோம்பலை ஒரு நோயாகவே வளர்த்துக் கொணடிருந்தால், அதாவது சோம்பல் குறையவில்லையென்றால், தொடர்ந்து இதே வழிமுறையைப் பின்பற்றலாம். இதைப் பயன்படுத்த அனைவருக்கும் அனுமதி உண்டு.''

''ஓரளவுக்கு கால நிலவரங்களும், இன்னும் ஓரளவுக்கு வாழ்க்கைக்கான போராட்டமும், இந்த அம்சங்களின் (காலம் மற்றும் வாழ்க்கைப் போராட்டம்) விளைவிலிருந்து வெளிளிருவது சிரமமாகி விடும்படி நின்றுபோன நிலைக்கு வந்துள்ளன. ஆயினும் மனிதன் இவற்றுக்கு பலியாகாதவனாக இருக்கிறான். என் வாழ்க்கைச் சூழ்நிலைகளை அறிந்தவர் யாராயினும், நான் எந்த அளவுக்கு எப்போதும் சந்தோஷமாகவே இருந்தேன் என்பது பற்றிய ஒரு மதிப்பீட்டைச் செய்வார்கள். என் முகம் எப்போதுமே ஆனந்தநிலையில் நான் மூழ்கியிருப்பதைச் சுட்டிக் காட்டுவதாக இருந்தது. எனக்கு ஏற்பட்ட வாழ்க்கைப் பிரச்சனைகள் வேறு யாருடைய கஷ்டங்களுக்கும் குறைந்ததல்ல. இதன் மையமாக இருந்த விஷயம் என்னவெனில், எனக்கு வந்த கஷ்டம் ஒவ்வொன்றையும் ஏதோ ஒரு நன்மைக்காக கடவுளிடமிருந்து வந்திருக்கிறது என்று எடுத்துக்கொண்டு, எல்லாச் சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாகவும், மனநிறைவுடனும் இருக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொண்டு, கடவுளின் சித்தத்துக்கு இந்தவிதமாக அடிபணிகிறவனாகவே இருந்தேன். நேசிக்கப்படுகிறவரிடமிருந்து வருகின்ற ஒரு பரிசு வெறுக்கப்படக்கூடாது. அது அன்பின் விதிமுறைக்கு ஒவ்வாது. நான் முன்பு ஒரு இடத்தில் மேற்கோள் காட்டியிருப்பது போல, பக்த மீராவின் வாழ்வில் நடைபெற்ற ஒரு சம்பவம் இதற்கு தக்க உதாரணமாக இருக்கும். அவளுக்குப் பிரியமானவராக இருந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து வந்த கருணைமிக்க பரிசு என்று சொன்னபோது கொடுக்கப்பட்ட கொடும் விஷத்தையே அவள் விரும்பிக் குடித்தாள்.

(16ஆம் நூற்றாண்டில் ராஜபுத்திர (ராஜபுதன) அரசின் ஆட்சிக்கு உட்பட்ட மேர்தா என்ற சிற்றரசின் இளவரசியாக இருந்த மீரா, தன் சிறு வயதிலிருந்தே பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் மீது பக்தி மிக்கவளாக இருந்தாள். மேவார் ராஜ்யத்தின் மூத்த இளவசரனுக்கு அவள் திருமணம் செய்து கொடுக்கப்பட்டாள். தன் கணவனிடம், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரையே தான் தனது கணவனாக நினைத்திருப்பதை அவள் தெரிவித்தாள். அக்கணவனும் அவள் மீது அனுதாபம் கொண்டு அவள் விருப்பம்போல் கிருஷ்ணரை வழிபட அனுமதித்தான். அந்த இளவரசன் விரைவில் ஒரு போரில் உயிரிழந்தான். அவனுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த மீராவின் கணவனின் ஒன்றுவிட்ட தம்பி / மாற்றான் தாயின் மகன் ராஜகுடும்பத்தின் கௌரவத்திற்குப் பொருந்தாத வகையில் மீரா நடந்து கொள்வதாகக் குறை கூறி அவளுக்குப் பல வழிகளில் கொடுமை செய்தான். அவளைக் கொன்று விடுவதற்கு அவன் செய்த பல முயற்சிகள் தோல்வியடைந்தன. இவற்றால் மனவேதனை அடைந்து மீரா அரண்மனையை விட்டு வெளியேறி துறவியாக, திருத்தலங்களுக்கு யாத்திரை செய்தார். அவள் ஹிந்தி மொழியில் சிறந்த கவிதாயினியாகி, கிருஷ்ணனின் மீது ஏராளமான துதிப் பாடல்களைப் பாடினாள். கிருஷ்ணரின் பக்தர்களில் மிகச்சிறந்த ஒரு பெண்மணியாக, கிட்டத்தட்ட ராதைக்கு சமமாக அவள் மதிக்கப்பட்டாள். அவளுடைய முடிவு எப்படி நேர்ந்தது என்பது மர்மமாகவே இருக்கிறது. அது சோகமானதாகக் கூட இருக்கலாம். குஜராத் மாநிலத்தில் இருக்கும் துவாரகாவில் உள்ள புகழ்பெற்ற ஸ்ரீ கிருஷ்ணரின் கோவிலில் இருக்கும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் சிலையில் அவள் ஐக்கியமடைந்ததாக சொல்லப்படுகிறது.)

**M1 – இன் கேள்விக்கு பதிலளித்து வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

‘‘ஒரு நெருங்கிய உறவினராக இருந்தாலும், அல்லது வேறு வகையில் பழக்கமானவராக இருந்தாலும் நட்பு என்ற விதிமுறைக்கு யாருமே விதிவிலக்கு அல்ல. நட்பு என்பது அன்புடைய உறவுமுறையின் பெயர் ஆகும். ஊன்றிக் கவனித்துப் பார்த்தால் பகைமையும் கூட ஒருவிதமான உறவுமுறைதான். அதன் முறைப்படியான விதிமுறையை முழுமையான அளவுக்கு ஒருவரால் தொடர்ந்து கடைபிடிக்க இயலும் பட்சத்தில் அதுவும் கூட ஒருவரது வாழ்க்கைப் பிரச்சனையை தீர்க்க முடியும்.’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘இன்றைய தினம் முதல் (இன்றிலிருந்து) நீ எனக்கு என்ன கட்டளை இட்டாலும் அது நேரடியாக கடவுளிடமிருந்து வருவதாகவே கருதுவேன் என்று வாக்குறுதி அளிக்கிறேன். இந்த உலகம் உள்ளவரையில் உனக்கு ஒரு நண்பனாக விசுவாசத்துடன் இருப்பேன். உன்னால் அகம் மகிழ்ந்து இருக்கும் எனது சந்தோஷ உணர்வைத் தெரிவிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை. நமது பிரபு லாலாஜி சாகேப் அவர்களும் நானும் ஒரே வகையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறோம். நாங்கள் உன்னையே எங்கள் மாஸ்டராக எடுத்துக் கொள்கிறோம். கீழ்ப்படிந்து நடத்தலே என் கடமை. உலகத்தில் உள்ள அனைத்து முனிவர்களும் இதே விஷயத்தைத் தான் திருப்பிச் சொல்வார்கள். உனது பதவி நிலையும் தகுதிச் சிறப்பும் உனக்குத் தெரியாது. ஏனென்றால் எங்களுக்குள் உன்னை முழுமையாக கரைத்துக் கொண்டிருக்கிறோம். உனது ஆன்மீக முன்னேற்றத்துக்கு எல்லையே இல்லை. அது கட்டுக்கடங்காமல் தாண்டிக் குதித்து போய்க் கொண்டு இருக்கிறது. உனது திடீர் வளர்ச்சி நிலைகளுக்கு நாங்கள் அங்கங்கே தடைகளும், எல்லைகளும் உண்டாக்குகிறோம்.’’

**2-6-1945**

**சுவாமி விவேகானந்தா:**

‘‘எங்கள் வேலையில் இதுவரை நாங்கள் ஏன் வெற்றியடையவில்லை என்பதற்குக் காரணம் நீ மந்த நிலையடைந்துவிட்டதுதான். பரமாத்மாவுக்குள், (பரம்பொருளின் ஜீவத்தன்மைக்குள்) உன்னை முழுமையாகச் சேர்த்து பின்னிப் பிணைந்துள்ளாய். இந்த நிலை பொதுவாக மரணத்திற்குப் பிறகுதான் வரும். எங்களால் ஒரு சின்ன அதிர்ச்சி கொடுக்கப்பட்டால் அது உன் வாழ்வை முடித்துவிடும். இந்த நிலையில் இருக்கும் ஒரு மனிதர் உலகில் நீண்டகாலம் வாழ வேண்டியதில்லை. எனவே, இந்த திடப்பொருள் (பருப்பொருள், ஸ்தூலப்பொருள்) சார்ந்த மண்டலத்தில், அல்லது ப்ரகிருதி எனப்படும் இயற்கையில் (அதாவது நிகழ்வு சார்ந்த பௌதிக சத்தியத்தில்) உன்னை நிறுத்தி வைத்துக் கொள்வதற்கு நாங்கள் விழிப்பாக கவனித்துக்கொண்டே இருக்கவேண்டியுள்ளது. பருப்பொருள் அல்லது மாயையுடன் தொடர்புடையவளாக உன்னை வைத்திருந்து, அதன் மூலமாக சிலசமயம் குழப்பம் மற்றும் ஒழுங்கின்மைக்கு இடம்தரச் செய்கிறேன். உன்னைப்போன்ற உயர்ந்த ஆன்மீக நிலையில் இருக்கும் ஒரு மனிதரிடமிருந்து எதிர்பார்க்கப்படாத சில விஷயங்களைச் செய்ய

வைக்கிறேன். இதன் காரணமாகத்தான் ஆன்மீக மகாசமுத்திரத்தைக் கடக்க இன்னும் அடியெடுத்த வைக்காத ஒரு சாதாரண மனிதன் செய்யும் குறிப்பிட்ட சில விஷயங்களை நீயும் செய்கிறாய்.''

5-6-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''பிரியமான ராம் சந்த்தருக்கு, பூகம்பம் பற்றிய எண்ணத்தில் தன் மனத்தை வருங்காலத்தில் ஒருமுகப்படுத்தக்கூடாது என்று எச்சரிக்கிறேன்.''

7-6-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''பொதுவாக ஒரு விஷயம் எந்த ஒருவருடைய சிந்தனைக்கும் (புரிந்து கொள்ளும் திறனுக்கும்) அப்பாற்பட்டதாக இருக்கிறது. சத்சங்கத்திற்காக ஒரு குழுவிற்கு பிராணாஹூதி அளிப்பதற்கு) ராம் சந்த்தர் உட்கார்ந்த உடனே பரமாத்மாவிடமிருந்து (பரம்பொருளின் ஜீவத்தன்மையில் இருந்து) அருளின் வெள்ளம் சூழ்ந்து கொள்ளும் ஒரு சுழலாக உடனடியாகப் பெருகி வர ஆரம்பிக்கிறது. இது நேற்று ஆரம்பமானது. இன்றும் கூட அதேநிலை தொடர்கிறது. அருள் வெள்ளம் பெருகி வருவது தொடர்ந்து கொண்டிருக்கிறது. (நேரம் இரவு 9.35) இந்தநிலையில் தான் இருப்பதாக யாராவது சொல்லிக்கொள்ள முடியுமா? முடியவே முடியாது. (சிறிது இடைவெளி) K, என்ற இடத்தில் முழுமையான அழிவு ஆரம்பமாகி விட்டது.''

**சுவாமி விவேகானந்தா:**

''ஆன்மீக முன்னேற்றத்தின் முடிவான நிலை இது. நீ இப்போது எல்லாம் வல்ல பரம்பொருளின் சுழலில் நகர்ந்து கொண்டிருக்கிறாய்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இந்த அருளைப் பெறுவதற்காக தெய்வங்கள் தேடி வருவது ஆரம்பமாகியிருக்கிறது.''

8-6-1945

**சுவாமி விவேகானந்தா:**

''முந்தைய காலங்களில் மக்கள் இந்த வழிமுறை பற்றி அறிந்திருந்தார்கள். ஹிந்துக்களின் மதம் சார்ந்த வரலாற்றில் இருண்ட காலம்

தொடங்கியதிலிருந்து, அதனால் இப்போது இக்கருத்து மறக்கப்பட்டு விட்டது. இந்த ரகசியத்தை பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் பணி உனக்கு வந்திருக்கிறது. இந்த வழிமுறையைக் கண்டறிந்தவர் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர். அது எத்தனையோ ரிஷிகளால் பின்பற்றப்பட்டது. அப்போது மக்கள் அதைப் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு மனவலிமையுடன் இருந்தனர். ஒரு சாதகனுக்கு அவனது முதலடியிலேயே – ஆன்மீகத்தில் அடியெடுத்து வைத்த உடனேயே ஆன்மீக நன்மையைக் கிடைக்கச் செய்த வழிமுறையாக இது இருந்தது, எனினும் சாதகனுடைய உள்நிலையைச் சார்ந்துதான் வெற்றியடைவது இருந்தது என்பதும் உண்மைதான்."

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''சாதகரின் சூட்சும சரீரத்தை ஒருவர் தன்னுடைய எண்ணத்தில் எடுத்துக் கொள்வதில் இந்த வழிமுறை அடங்கியுள்ளது. அப்போது சாதகரின் உடலின் அணுக்கூறுகளை தொடாமல் அப்படியே இருக்கவிட வேண்டும். எண்ணத்தில் எடுத்துக்கொள்வது என்று சொல்லும் போது, சாதகருக்கு பிராணாஹூதி அளித்து, சாதகரிடம் என்னென்ன நன்னெறி ஒழுக்கங்கள் இருக்கவேண்டுமென்று பயிற்சியளிப்பவர் விரும்புகிறாரோ, அவை அவருக்குள் நுழைகின்றன என்று நினைப்பதைத்தான் குறிப்பிடுகிறேன். ஆயினும் சாதகருக்குக் கொடுக்கும் முதல் சிட்டிங்கிலேயே இதைச் செய்து முடித்துவிட முயற்சிக்கக் கூடாது. அதைச் செய்வதற்காக உள்ளிருந்து ஒளி கிடைத்த பிறகே அதைச் செய்யவேண்டும்."

### சுவாமி விவேகானந்தா:

''இந்த வழிமுறையைப் பயன்படுத்துவதால், சக்தி நேரடியாக சூட்சும சரீரத்துக்குச் செல்கிறது. உன்னைப்போன்ற ஒரு மகத்துவம் மிக்க ஆன்மா மீண்டும் பிறக்காமல் போகலாம். ஒரு இயற்கையான போக்கில் உன்னைச் சுற்றிலும் நீ பரவச் செய்து கொண்டிருக்கின்ற விளைவு மகத்துவத்தின் ஒரு அடையாளம் ஆகும். தங்கள் சொந்த வடிவத்தில் உள்ள தெய்வீக சக்திகளால் நீ சூழப்பட்டிருக்கின்றாய். இப்போது இந்த சக்திகள் எந்த நேரத்திலும் உன்னை விட்டு நீங்காது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பூமிக்கு மனித உருவத்தில் வந்த போது இதே மாதிரிதான் இருந்தது. வேறுபாடு என்னவெனில் நீ இப்போது இந்த நிலையை அடைந்திருக்கிறாய். அவர் தான் பிறந்ததில் இருந்தே இந்த நிலையில் இருந்தார். இதன் காரணம் என்னவெனில் உனது இப்போதைய நிலைக்கு உன் குருவினால் நீ கொண்டு வரப்பட்டாய். அவர் ஆரம்பத்திலிருந்தே அப்படி இருந்தார். முழுமையாகத் தேவைப்பட்டாலன்றி வருங்காலத்தில் வேறு ஒருவருக்கு

இந்த நிலை வராது. உனது மானிட உருவம் இப்போது மனிதன் என்ற கருத்தாக மட்டும் இருக்கிறது. வேறு எதுவாகவும் இல்லை.''

(காலை மணி 9.19க்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு கட்டளை பிறப்பித்தார். அது இன்னமும் தெளிவாகவில்லை.)

''உன்னுடைய சொந்தத் தரத்தின் தகுதியைப் பாதுகாப்பதில் உன்னைக் கொஞ்சம் மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கிறது. மக்கள் உன்னை மதித்து கௌரவிக்கும் விதத்தில் உன்னைக் காட்டிக்கொள். இப்போது உன்னை மதியாமல் இருப்பது, முக்தி பெற்ற ஆன்மாக்களாகிய எங்கள் அனைவரையும் மதியாமல் இருப்பது என்று பொருள்படும். உன்னை அடையாளம் காணத் தவறுகிறவர்களுக்கு ஏதாவது தண்டனையும் விதிக்கப்படலாம் என்று நான் அஞ்சுகிறேன். மனிதத்தன்மைக்கு மனித குலத்துக்கு உரியதான கடமை எதைக்கோருகிறது என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். அதனால்தான் உனது இப்போதைய பதவி நிலைக்குத் தக்கவாறு ஒரு வடிவத்தில் உன்னைக் கொண்டுவர நான் விரும்புகிறேன். தெய்வீக சக்திகள் உன்னைச் சூழ்ந்திருப்பது இரண்டு நாட்களுக்கு முன்பு தொடங்கியது. நான் முன்பே குறிப்பிட்டவாறு இதுவே ஆன்மீக முன்னேற்றத்தின் முடிவான நிலையாகும். மகிழ்ச்சியடைவாயாக.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''இப்போது என் பதவிநிலையை M1 - உணர்ந்திருக்கலாம். நான் இன்னும் என்ன சொல்வது? வாழ்க்கையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் உருவத்தை (கிருஷ்ண ரூபத்தை) நான் எய்தியிருக்கிறேன். இதற்கு மேல் சொல்ல நான்விரும்பவில்லை. அது அவமரியாதையாகிவிடும்.''

### சுவாமி விவேகானந்தா:

''தென்னிந்தியாவிலிருந்து உனக்கு மீண்டும் ஒரு அழைப்பு வந்திருக்கிறது. அதற்கான நேரம் அனுமதிக்கப்பட்டுள்ளது.''

### வணக்கத்திற்குரிய ராதாஅம்மையார்:

''என் சகோதரரின் இப்போதைய நிலையைக் காண்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.''

### சுவாமி விவேகானந்தா:

''K2 - க்கு என் நல்லாசிகளைப் பொழிகிறேன், அவருக்கு நல்ல ஒரு வாழ்க்கைத் துணை அமைவதாக!''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''சோம்பல் தன்மையை நீக்குவதற்கு நீ கண்டுபிடித்த வழிமுறையை எல்லோருக்கும் தெரியப்படுத்து.''

**சுவாமி விவேகானந்தா:**

''நல்ல குணநலன் என்பது ஒருவரது சொந்த எண்ணங்களில் ஒட்டு மொத்தப் பலனாகும். அது பகுதியளவு ஒருவரது சொந்தப் பயிற்சி மற்றும் அவன் பழகுகின்ற சூழ்நிலைகளைச் சார்ந்தது. சரணாகதியடைதல் என்பது இந்த அனைத்து விஷயங்களையும் தனது மாஸ்டரின் பொறுப்பில் ஒப்படைத்துவிட்டு இனிமேல் அதைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் இருக்கும் நிலை பற்றிய கருத்தாகும். இந்த நிலையை எப்படி அடைவது? ஒரே வாக்கியம் இந்தக் கருத்தைப் பூர்த்தி செய்கிறது. அது. 'உங்களையே மாஸ்டருக்குக் கொடுத்து விடுங்கள்' என்பதே. இதைச் செய்வது எப்படி சாத்தியமாகும்? 'அவருடைய கோட்பாடுகளை அனுசரித்து நடப்பதால்' என்பதே இதற்குப் பதில். பயிற்சியைத் துவங்குகிறவர்களுக்கு முதல்படி இது தான். இதைப் பற்றி இன்னும் அதிகமான நாளை சொல்வேன்.''

'' M2 - இப்போது மாறிவிட்ட மனிதனாக இருக்கப்போகிறார். அவர் தன் நேரத்தை தனது குருவுக்குக் கொடுக்க வேண்டும். நீ வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பிரதிநிதியாக இருக்கவேண்டும். அவர் தன்மீது பொழிந்து கொண்டிருக்கின்ற ஆன்மீக சக்தியால் உறை போல மூடப்பட்டிருப்பதாக உணர வேண்டும். அவர் இன்னும் இங்கே எவ்வளவு காலம் உயிர் வாழ்கிறாரோ அது வரையில், அந்த உணர்விலேயே தன்னை ஒட்டிக் கொண்டிருக்கவேண்டும். இப்படிச் சொல்வதால் இந்த உலகைவிட்டுச் சென்ற உடனேயே அவர் அதை விட்டுவிடவேண்டும் என்று அர்த்தமில்லை. வணக்கத்திற்குரிய உனது மாஸ்டர் ஒளியுலகையே மொத்தமாக விட்டு விட்டு வந்திருக்கிறார். மிகவும் முக்கியமான தன்மை உடைய ஒரு வேலை அங்கு இருந்தாலன்றி அவர் அங்கு செல்வதைத் தவிர்க்கிறார். எப்படியிருந்தாலும் நீ உனது சேவையை விட்டுச் செல்ல முடியாது. இவ்வுலகில் நீ நீண்டகாலம் வாழ வேண்டியதில்லை. ஆனால் அப்படியிருந்தும் நீ உலகைப் பற்றிக் கவலைப்படுகிறாய். சேவைக்காக ஒதுக்கப்பட வேண்டிய நேரத்தை நான் தீர்மானிப்பேன். அதைக் கடந்து போக முடியாது. ஒரு விஷயம் எனக்கு வருத்தத்தை உண்டாக்குகிறது. அதாவது நீங்களெல்லாம் உங்கள் சோம்பலான பழக்கங்களைக் கைவிடுவதில்லை. இந்த விஷயங்களுக்கெல்லாம் நீங்களே தான் பொறுப்பாளிகளாக இருக்கிறீர்கள். முதலில் உங்களை சரிப்படுத்துங்கள். நல்லவிதமாக வடிவமைத்துக்

கொள்ளுங்கள். அதற்குப் பிறகு மற்றவர்களுக்கு அறிவுறுத்துங்கள். வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டர் உங்கள் ஈடுபாடுகளுக்கு தாராளமாக இடமளித்திருக்கிறார். நான் இந்த விஷயங்களில் இன்னும் அதிக கண்டிப்புடன் இருப்பேன். சோம்பலாக உட்கார்ந்திருப்பது என்பது குப்பைக் கூடையில் வீணாகக் கிடப்பது போன்றது. (சற்று இடைவெளி)''

''இங்கே பார், ஹிந்துக்களிடையே நிலவியிருந்த ஆன்மீக இணைப்புக்கள் அனைத்தும் இப்போது பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடன் இணைக்கப்படும். இது சம்பந்தமான வேலை விரைவில் உனக்கு வரும். அவதார புருஷர் ஒருவரைத் தவிர வேறு யாரும் ஆன்மீக இணைப்புகளை உடைக்க இயலாது என்று B1 நினைக்கிறார். இது உண்மைதான். உன்னைப் பார்க்கும் திறனுடைய கண்களை அவர் பெற்றிருந்தால் அவர் அதைப் பார்க்கலாம். நீ இதை அவருக்குச் சொல்ல முடியும்.''

10-6-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இதுவரை செய்யப்பட்ட அனைத்துக் கண்டுபிடிப்புகளும் பாராட்டத்தக்கவையாகவே இருந்திருக்கின்றன என்றாலும் சற்று முன் செய்யப்பட்ட கண்டுபிடிப்பு பற்றி அறிந்து கொண்டபோது என் இதயம் துள்ளிக் குதித்தது. இதன் மூலமாக எந்த ஒரு முடிச்சும் (சக்திகளின் பிணைப்பு) விடுபடாமல் இருக்க முடியாது. இங்கே பார் M1, இது ஒரு அற்புதமான கண்டுபிடிப்பு. ஆனால், அந்தோ! இந்த வழிமுறைகளை அவர்கள் மீது பயன்படுத்தும் விதத்தில் யார் இருக்கிறார்கள்? எப்படியிருந்தாலும் இருக்கும் விஷயங்களைக் கொண்டு நாம் திருப்தியடைவோம். அவர் கண்டுபிடித்த வழிமுறை இதுதான். இந்த மிகச்சிறந்த, ஈடு இணையில்லாத பயிற்சியை யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறோமோ அந்த மனிதரை குரு தனது இதயத்துடன் இணைத்துக்கொள்ள வேண்டும். குரு தனது எண்ணத்துடன் அந்த இணைப்பை சேர்த்துக்கொண்டு உண்மையான சக்திக் கிடங்கிற்குகுள் ஒருமுறை மூழ்கச் செய்ய வேண்டும். அந்த மனிதருக்கு ஒரு உயர்ந்த ஆன்மீக நிலையை அளிக்க விரும்பினால், அந்த மனிதருடன் குரு ஏற்படுத்திக் கொண்டுள்ள இணைப்பை தன் இதயத்தில் இழுத்துக்கொள்ள வேண்டும்; அந்த மனிதருடைய ஆன்மீக நிலையை அங்கே ஒரு கால் ஊன்றி நிற்கச் செய்ய வேண்டும். இவ்வாறாக, உண்மையான அருளின் ஊற்று, யாருடைய இணைப்பு அதுவரையில் கொண்டுவரப்பட்டுள்ளதோ அவருக்குள் அது கசிந்து கொண்டே இருக்கும். மேலும் உண்மையான

அருளின் நன்மை அவருக்குத் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்கும். பிரியமான ராம் சந்த்தர் இந்த வழிமுறையை இன்னும் சிறப்பானதாக்க முயற்சி செய்.''

**சுவாமி விவேகானந்தா:**

''பழங்காலத்தில் இந்த வழிமுறை இருந்தது. அது இந்தியாவின் ஒரு பெரிய முனிவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த விஷயங்கள் எல்லாம் தற்காலத்துக்கு ஏற்றவாறு ஒரு புதிய வடிவில் உனக்கு வந்து கொண்டிருக்கின்றன.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''ராம் சந்த்தர் இந்த வழிமுறையை அபிவிருத்தி செய்திருக்கிறார். அது சிறிய விஷயம்தான். அதாவது மாஸ்டருடைய ஆன்மீக நிலை எங்கு விளங்குகிறதோ, அங்கு சாதகரின் இணைப்பை நிலைநிறுத்துவதுதான். இங்கே மாஸ்டர் என்பது என்னைக் குறிப்பிட்டுச் சொன்னது அல்ல. இந்த வழிமுறை யார் பயன்படுத்துகிறாரோ அவரை அது குறிப்பிடுகிறது. எனக்கு இந்த விஷயம் தெரிந்திருந்தது. அதை ராம் சந்த்தரிடம் நான் பயன்படுத்தினேன். அதன்பிறகு தனது இதயத்தில் இருபத்து நான்கு மணிநேரமும் மாஸ்டருடைய ஆற்றல் வந்து கொண்டிருப்பதை உணர்வதாக தன் நாட்குறிப்பில் எழுதினார். அதை எனக்கும் தெரிவித்தார். இந்தக் கடைசியான மிக அதிகபட்சமான வழிமுறையைப் பயன்படுத்துகிறவர் தன் எண்ணத்தை என்னுடைய கருத்துடன் சமன்படுத்திக் கொண்டிருந்தாலன்றி பொதுவாக இதைப் பயன்படுத்தவது தடை செய்யப்பட்டிருக்கிறது. (சிறிது இடைவெளி) இந்த வழிமுறையில் ராம் சந்த்தர் இன்னும் அதிக அபிவிருத்தி செய்திருக்கிறார். அதாவது ஏதாவது ஒரு சக்கரத்தை விழிப்படையச் செய்யவேண்டுமென விரும்பினால் அல்லது அருளினால் நிரப்புவதற்கு விரும்பினால், குருவானவர் தனது எண்ணத்தின் சக்தியுடன், யாருக்கு அது அளிக்கப்பட வேண்டுமோ, அந்த சாதகரின் எண்ண சக்தியை ஒன்றுபடுத்தி அதை அந்தக் குறிப்பிட்ட சக்கரம் வரை கொண்டு செல்ல வேண்டும். அதன் பிறகு சாதகரை அங்கே விட்டுவிட்டு தன் எண்ணத்தை மீண்டும் தன்னிடமே கொண்டு வந்துவிட வேண்டும்.''

நமது யோக சாதனா முறையில் புதிதாகச் சேர வருகிறவர்களுக்கு, பரிந்துரைக்க வேண்டிய ஏதாவது ஒரு பயிற்சி இருக்க வேண்டிய தேவையைப் பற்றி எங்களுக்குள் நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம்.

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் அப்போது கூறியது:**

''அவர்களுக்கு ஏதாவது பயிற்சி செய்யும்படி சொல்ல வேண்டுமென்று நானும் விரும்பினேன். இதனால், எனது பிரியமான ராம் சந்த்தரின் மூளையிலிருந்து மிகச்சிறந்த பயிற்சிமுறை வெளிப்பட்டிருக்கின்றது. அவர்மீது எவ்வளவுதான் பாராட்டுக்களைப் பொழிந்தாலும், அது போதுமானதாகவே இருக்காது. இந்த விஷயங்கள் இவ்வுலகில் நினைவில் கொள்ளத்தக்கவையாக நீடித்து இருக்கும். இது சம்பந்தமாக மக்கள் என்னையும் கூட நினைவில் வைத்துக் கொள்வதும் கூட சாத்தியம்தான். நான் உனக்கு அறிவுறுத்துகிறேன். M2, இம்மாதிரி ஒருநேரம் திரும்ப வருவது மிகவும் அரிது. நீ விரும்பும் அளவுக்கு, இந்த நேரத்திலிருந்து எவ்வளவு முடியுமோ அவ்வுளவு நன்மையை எடுத்துக்கொள். நான் பல்வேறு மகாபுருஷர்களை உருவாக்கியிருக்கிறேன்.''

**பயிற்சியைத் துவங்குகிறவர்களுக்கான பொதுவான பயிற்சி முறை:**

''இதயத்தில் தெய்வீக ஒளி இருப்பதாக ஒரு உறுதியான பாவனையை உருவாக்கிக் கொள்ளவேண்டும். அந்த ஒளியின் ஒருபகுதியை மூளையின் உயர்ந்த புள்ளிக்கு, உச்சி எனப்படும். (அதாவது பொதுவாக பிரம்ம ரந்திரம்) என்று கூறப்படும் பகுதிக்கு மேல்நோக்கி இழுக்கவேண்டும். அந்த இடத்தை எட்டியவுடன் **ஓம் (அவ்ம்)** என்று உச்சரிக்க வேண்டும். பிறகு தெய்வீக ஒளியின் அப்பகுதியை, கீழ்நோக்கி **'தத்'** என்று சொல்லிக்கொண்டே இழுக்க வேண்டும். முடிவாக அந்த ஒளி தொப்புள் என்ற புள்ளியில் ஒரு அதிர்ச்சியைத் தருவதாக நினைத்து **'சத்'** என்று சொல்ல வேண்டும். **ஓம் தத்ஸத்** என்ற புனிதமான ஜபத்தைக் கூறும் மும்முனை கொண்ட மந்திர ஜெபத்தின் பயிற்சியின் முதல்நிலை இது.''

‘‘இப்பயிற்சியின் இரண்டாது நிலை உத்தேசமான, பாவனையான அந்தத் தெய்வீக ஒளி இதயத்தில் ஒரு பைசா நாணயத்தின் முக்கால் பகுதியை விடக் குறைவான பரப்பளவில் இருப்பதாகக் குறைப்பதாகும். (பைசா என்பது 1945ஆம் ஆண்டு காலத்தில் தம்படி என்ற பெயரில் இருந்த சுமார் அரை சென்டி மீட்டர் விட்டமுடைய மிகச் சிறு மதிப்புடைய இந்திய நாணயம்) அப்படிக் குறைத்த பிறகு அந்த ஒளியை முன்பு குறிப்பிட்டவாறு பல்வேறு நிலைகளுக்கு, முன்பு சொன்ன (**ஓம் தத்ஸத்** என்ற) மந்திரத்தை உச்சரித்தபடியே மேலும் கீழும் இழுத்துச் செல்ல வேண்டும். அதன் பிறகு மூன்றாவது நிலை வருகிறது. அதைக் குறிப்பிட்ட முறைப்படி செய்தால் நன்கு பயிற்சி செய்கிறவர்களிடையே மிகச் சிறந்தவர்களால் கூடத் தாங்கிக்கொள்ள முடியாது. இந்த மூன்றாவது முறையில் அந்த பாவனையான தெய்வீக ஒளியை, அது ஒளி என்ற கருத்துமட்டும் எஞ்சியிருக்கும்படி பெருமளவுக்கு இல்லாமற் செய்து விடுவது அடங்கும். அந்த ஒளி என்ற கருத்தை முன்பு சொன்னது போல மேலும் கீழும் கொண்டு செல்ல வேண்டும். முடிவாக அதன் நான்காவது நிலையையும் கேளுங்கள். மூன்றாவது நிலையில் ஒளி என்ற எண்ணம் மட்டும் பாவனை செய்யப்பட்டதும் கூட மறைந்துவிடுகிறது. அதன்பிறகு என்ன மீதியிருக்கிறதோ அதை முன்பு போல மேலும் கீழும் அதே விதத்தில் கொண்டுசெல்ல வேண்டும். இதை எண்ணத்தில் பாவனை செய்வது ஒரு பக்கம் இருக்கட்டும். அதை சரியாகப் புரிந்து கொள்வது கூட கஷ்டம்தான். இந்த நிலைக்கு வந்தவர் யாராயினும் சரி, அவர் அதை ஏன் செய்ய வேண்டும்? செய்ய வேண்டிய தேவையே இல்லை. ஒருக்கால் இதை பரிசோதித்துப் பார்ப்பதற்காக வேண்டுமானால் செய்யலாம்.’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘இதோ உனது புதிய கண்டுபிடிப்பு. இயற்கை இப்போது உன்னிடத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறது. மக்கள் பொதுவாக இயற்கையோடு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கருத்தை யாரும் புரிந்து கொள்ள முடியாது. இது உன் குருவினால் கண்டறியப்பட்ட ஒரு புது விஷயம். இந்த உலகம் படைக்கப்பட்டதில் இருந்து உலகில் ஜீவிதத்திற்கு வந்த முதல் கண்டுபிடிப்பாளர் என்று அவரை நான் சொல்வேன். இது உன்னுடன் தொடர்ந்து வரும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின்

காலத்திலிருந்து, அதற்குப் பின் இன்று வரை வேறு யாருக்கும் இந்தவிதமான திறமை இருக்கவில்லை. அது உனக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.''

11-6-1945

### வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது:

''வடஇந்தியாவை ஒளியூட்டுதல் சம்பந்தமாக நீ மிக லேசாக (குறைவாக) வேலை செய்து கொண்டிருக்கிறாய். அந்தத் திசையில் வேலையே செய்யாமல் அடிக்கடி விட்டுவிடுகிறாய். நீ தென்னிந்தியாவில் செய்து கொண்டிருந்ததைப் போலவே, இந்த வேலையிலும் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''என் ஆயுட்காலம் பயிற்சியளிப்பதிலேயே செலவிடப்பட்டது. இப்போதும் கூட அதே தான் நடைபெறுகிறது. யாராவது என்னை நாடியிருக்காமல் போகலாம் என்பது வேறு விஷயம். ஆனால், என் கட்டாயக் கடமைகளைச் செய்வதை நான் ஒருநாளும் கைவிட்டதில்லை. இப்போது எனக்கு குறிப்பான ஒரு ஆலோசனை கிடைத்திருக்கிறது. அதாவது ஒரு சாதகர் மிச்சம் மீதி எதுவுமில்லாமல் தன் உணர்ச்சிகளைத் துறந்துவிடக் கூடியவராக இருந்தால், அதற்குப் பின் செய்ய வேண்டியது ஏதும் இல்லை. பிரியமான ராம் சந்த்தரை கூர்மையாக நிறைய கவனித்த பிறகு, இந்த விஷயம் அவரிடம் அதன் உச்சத்தில் இருப்பதைக் கண்டறிந்தேன். இப்போது கடைசியில் அது உண்மையானதாகவே மாறும் வகையில் அதை அப்படியே பின்பற்றிச் செய்வது எப்படி? இதற்கான வழிமுறை ஒருவர் தனது உள்ளார்ந்த சுபாவங்களை மனப்பான்மை அமைதிப்படுத்தி, மௌனமாக்கிக் கொண்டே போவதுதான். M2 தனது உள்நிலையை கவனித்துப் பார்க்கலாம். இரவு முழுவதும் அவருக்கு உள்ளார்ந்த மனப்பான்மைகளை மௌனமாக்கும் தனது தன்மையை ராம் சந்த்தர் பிராணாஹூதியாக அளித்துக்கொண்டிருந்தார். அது M2 - க்கு மிகப்பெரிய ஒரு பரிசு. ஆயினும் M2 - ன் உள்நிலை ஒரு செயலற்ற உறங்கு நிலையில் இருக்கிறது. அதனுடைய சுவை விழிப்படைவதற்கு நீண்ட காலம் ஆகும். உண்மையைச் சொன்னால், அன்புள்ள M2, உன்னிடம் செய்யவேண்டிய வேலையை ராம் சந்த்தர் செய்து முடித்துவிட்டார். அதைப் பழக்கமாக்கிக் கொள்வதுதான் (நடைமுறைக்குக் கொண்டு வருவது) பாக்கியிருக்கிறது. காலப்போக்கில் அது வந்துவிடும்.''

**சுவாமி விவேகானந்தா:**

‘‘ஒரே நாளில் M2 - ஐ எல்லா வகையிலும் முழுமையாக்கி விட்டாய். அவருடைய விருத்திகள் (உள்ளார்ந்த மனோபாவங்கள்) இப்போது ஒரேமாதிரி சமமாகி விட்டன. நீண்டகாலமாக விரும்பப்பட்ட விழிப்படைந்த ஒரு ஆன்மீக நிலையாக அது வருவதற்கு நீண்டகாலம் ஆகும். சில நாட்களுக்கு முன்பு M2 - உன்னிடம் வந்தபோது அவர் ஆன்மீகத்தில் குழந்தைப் பருவம் போன்ற நிலையில் இருந்தார். ’’

12-6-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘நமது சங்க அமைப்பு சம்பந்தமான பிரச்சனை நீண்டகாலமாகவே மனதில் அதிர்ந்து கொண்டிருக்கிறது. இந்தக் கோட்பாட்டை கிரகித்துக் கொண்டு அதைக் கருத்தில் வைத்திருந்து, தனது இந்தக் கண்டுபிடிப்பை செயலுக்குக் கொண்டு வந்த ராம் சந்த்தரின் அறிவுக்கு ஏராளமான பாராட்டைப் பொழிய வேண்டும். ஒரு குடும்பத்தில் அதாவது கல்வியறிவும், பண்பாடும் உடைய மனிதர்களைக் கொண்ட குடும்பத்தில், சொந்த அபிப்பிராயம் மற்றும் புரிந்து கொள்ளும் தன்மை ஆகியவற்றில் சில சிறிய மோதல்கள் ஏற்படும் சாத்தியம் உண்டு என்றாலும், முடிவில் அதற்கான சந்தர்ப்பம் வரும்போது, அவசியமானால் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கின்றார்கள். ஏனெனில் ரத்த சம்பந்தமான உறவில் அவர்கள் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கேயும் அந்த மாதிரிதான் இருக்கவேண்டும். இங்கு இருக்கும் மனிதர்களிடையே சில கருத்து வேறுபாடுகள் தோன்றலாம்; சரியான தீர்மானத்திற்கு வருவதற்காக அது அவசியம்தான்; ஆனால், முடிவில் அனைவரும் ஒன்றுபட்ட நிலைக்கு வரவேண்டும். மற்ற அனைத்து பிராணாஹூதிக்கும் வேறுபட்டதாக ஒருவிதமான பிராணாஹூதியின் ஆற்றல் ஒவ்வொருவரின் வழியாகவும் பாய வேண்டும். அது அவருடைய குணநலன்களின் ஒரு பகுதியாகவே மாற்றப்பட வேண்டும். அது என்ன? இதை நேரடியான நடைமுறை வழியில் மட்டுமே தெரிவிக்க முடியும்.’’

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

‘‘எண்ணற்ற கண்டுபிடிப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. அது இன்னும் தொடர்கிறது. ஆயினும், அந்தோ, யாரும் அதை பயிற்சி செய்வதில்லை; தங்கள் ஆன்மீக மற்றும் நன்னெறி ஒழுக்கம் சம்பந்தமான நோயை நீக்கவும் யாரும் முயற்சிப்பதில்லை. இவற்றை நடைமுறையில்

(பயிற்சியில்) கொண்டுவராமலிருந்தால் இந்தக் கண்டுபிடிப்புகளால் என்ன பயன்? உதாரணமாக சோம்பல் உடைய மந்த நிலையை நீக்குவதற்கான உதவிக்குறிப்பை யாராவது முயற்சி செய்தால், அதை ஏதோ என்றும் கடமையை நிறைவேற்றுவதற்காக அவர் செய்கிறார். நேர்மையான, உண்மையான, தீவிர முயற்சி ஒருபோதும் செய்யப்படுவதில்லை. இந்த விஷயத்தில் பிரியமான ராம் சந்த்தரை உதாரணமாக மேற்கோள் காட்டினால் அல்லது அவரைக் குற்றம் சொன்னால் அது முறையாக இருக்காது. ஏனென்றால் அவர் தனது அனைத்து சக்திகளுடனும் ஒன்று சேர்ந்து தன்னை உள்ளிழுத்துக் கொண்டவராக நிலைத்திருக்கிறார். இது நிச்சயமாக அவரது உடம்பையும், முகத்தையும் பாதிக்கும். தன்னை இந்த அளவுக்கு அவர் உள்ளிழுத்துக் கொண்டிருப்பதை நான் விரும்பவில்லை. இதனால் அடிக்கடி அவரை நான் கீழே இழுத்துவர வேண்டியிருக்கிறது. அவருடைய செயலற்ற மந்தநிலையின் காரணம் இப்படி அவர் தன்னை உள்ளிழுத்துக் கொள்வதேயாகும். ஆனால், மற்றவர்களிடத்தில் இந்த உள்நிலை வளர்ச்சியடையவில்லை. அதனால் அவர்கள் இந்தப் பயிற்சியை பின்பற்றுவது அவசியமாகிறது. (சிறிது இடைவெளி) இதோ இப்போது பார், சோம்பல் மிக்க மந்தநிலையை நீக்குவதற்கு அவர் இன்னுமொரு வழிமுறையைக் கண்டுபிடித்திருக்கிறார். அது மிகச் சுலபமானது; மற்றும் எல்லோரும் பயிற்சி செய்யக்கூடியது. அந்த வழிமுறை பின்கண்டவாறு: ஒவ்வொருவருக்குப் பின்னும் மறைந்து கிடக்கும் விசேஷ சக்தியின் மூலமாக ஒருவருடைய முகத்துக்கு பிராணாஹூதி அளிக்கப்பட வேண்டும். அதற்கு முன் கண்களைப் பாதுகாப்பு செய்து வைத்திருக்கவேண்டும். பிறகு அந்த சக்தி அந்த முகத்தில் ஆனந்தம் நிறைந்த தன்மையைக் கொண்டு வருகிறது என்ற எண்ணத்தை எடுத்துக்கொண்டு பிராணாஹூதி அளிக்க வேண்டும். இது அவருக்கு நன்மையை உண்டாக்கும்.''

''ஒரு விஷயத்தை நான் எல்லோருக்கும் சொல்கிறேன்; இன்னும் சரியாகச் சொன்னால் தண்டோரா (முரசு) போட்டு அறிவிக்கிறேன். அதாவது சாதகர் ஒவ்வொருவரும் ஆரம்பத்திலிருந்தே தனது நன்னெறி ஒழுக்கத்தில் அக்கறையுள்ளவராக, அதை மேலும் சிறப்படையச் செய்வதற்காக முயற்சிக்கவேண்டும். மற்றவர்களால் விரும்பப்படாத எந்தக் காரியமும் செய்யக்கூடாது. இந்த இரண்டு நியதிகளையும் மனதில் கவனமாகப் பின்பற்றி நடந்துதான் ஒருவர் தனது நடத்தை மற்றும் குணாதிசயத்தை அபிவிருத்தி செய்து கொள்வதில் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும். இவையெல்லாம் மக்கள் தங்கள் கவனத்தில் எடுத்துக்

கொள்ளாமலிருக்கின்ற ஆரம்பநிலை கோட்பாடுகள் – நல்ல குணநலன்களை நான் மதித்துப் பாராட்டும் அளவுக்கு, ஆன்மீகத்தைக் கூட விரும்பிப் பாராட்டியதில்லை. தனது உள்ளார்ந்த சுபாவங்களை, (மனப்பான்மைகளை) மௌனமாக்குவதற்கு (செயலிழக்கச் செய்வதற்கு) யாருமே முயற்சி செய்வதில்லை. யாராவது நிலையான அடித்தளமாக விளங்கும் இறைநிலையின் பதவி அடையும் அளவு, தனது அணுகுமுறையை உருவாக்கிக் கொண்டிருந்தாலும், ஆனால் இன்னமும் நன்னெறி ஒழுக்கத்தில் பலவீனத்தன்மையை தக்க வைத்திருக்கிறார் என்றால், அவர் சத்தியத்தின் சாராம்சத்தை இன்னமும் எட்டவில்லை என்றே நான் கருதுவேன். ஒரு மனிதனிடத்தில் இருக்கும் அனைத்தும் சமநிலைக்கு – நடுநிலைபெற்ற நிதானத்தன்மைக்கு வந்து, அதே உள்நிலையை அனுசரிக்கும் போதுதான் பூரணமான – குறையற்ற முழுமைபெற்ற - நல்ல குணாதிசயம் உண்டாகிறது. இதுவும் கூட நீக்கப்பட்ட நிலைக்குக் கொண்டுவரப்பட்டால், அதனுடன் ஒப்பிட்டுச் சொல்வதற்கு எதுவுமே இருக்கமுடியாது. இந்த நிலை மிகவும் சிரமப்பட்ட பிறகு தான் ஒருவனுக்கு நிச்சயமாக வருகிறது. ஆனால் அதற்காக அதை அடைவதற்குத் துணியவே கூடாது என்று பொருளாகாது. இந்த விஷயங்களை பிராணாஹுதியின் மூலமாகவும் உண்டாக்க முடியும்.''

**சுவாமி விவேகானந்தா:**

''நீ கண்டுபிடித்த விஷயத்தில் மேலும் ஒன்றைச் சேர்ப்பதற்கு நான் விரும்புகிறேன். அதாவது எப்போதெல்லாம் யாராவது இந்த வழிமுறையைப் பயிற்சி செய்வதற்கு நினைக்கும்போது அல்லது பயிற்சி செய்யத் துவங்கும் போது, அப்போதெல்லாம் உனக்குள் இருக்கும் மாபெரும் சக்தியுடன் தன்னை அவர் இணைத்துக் கொள்ள வேண்டும். இந்த வழிமுறையைப் பயன்படுத்தும்போது, அவர் உனக்குள் அடித்தளமாக அமைந்துள்ள சக்தியுடன்தான் முழுமையாக இணைக்கப்பட்டிருப்பதாகக் கருத வேண்டும்.''

13-6-1945

**சுவாமி விவேகானந்தா:**

''உன்னுடைய மிக உயர்ந்த மேன்மையான தலைமைத் தன்மை அனைத்து இடங்களிலும் நிலைநிறுத்தப்படுகின்ற நேரம் விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதே வேலையில் நாங்கள் அனைவரும் மும்முரமாக இருக்கிறோம். தேவையில்லாத, விரும்பத்தகாத அம்சங்களை

புதைப்பதற்கு நாங்கள் குழிதோண்டிக் கொண்டிருக்கிறோம். கடவுளின் சித்தம் கட்டாயம் நடக்க வேண்டும். சிலர் உன்மீது பகை உணர்வுடன் இருப்பதைக் காண்கிறேன். மனச்சோர்வூட்டுகின்ற, குறுக்கீடு செய்யும் வழியில் உன்னிடம் யார் வந்தாலும், அழிவுநிலைப் புள்ளியை பயன்படுத்த நீ அனுமதிக்கப்படுகிறாய்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர், M1 - இடம் குறிப்பிட்டுச் சொன்னது:

''சற்றுமுன் M2 - க்கு ஒரு நிமிடத்தில் பிரம்மாண்ட மண்டலத்தின் தன்மையை பூரணத்துவம் பெற்ற நிலைக்குக் கொண்டுவரும்படி ஒரு கண்டிப்பான உத்தரவை பிரியமான ராம் சந்த்தருக்கு இடும் படி உள்முகமாக வற்புறுத்தலை நான் உணர்ந்தேன். இதன் காரணமாக அது உடனே செய்யப்பட்டது. கடவுள் அவரை ஆசீர்வதிக்கட்டும். M2 தனது நாட்குறிப்பை ஒவ்வொரு மாதமும் அனுப்பிக் கொண்டிருக்க வேண்டும்.''

### சுவாமி விவேகானந்தா:

''ஒரு நிமிட நேரத்தில் பூரணத்துவ நிலையைக் கொண்டு வருவதற்கு உன்னால் மட்டுமே முடியும். ஒரு இரவு, எளிதான உணவு மட்டும் சாப்பிட்டு, M2 - உன்னையே நினைத்திருக்க வேண்டும், சத்சங்கம் இன்று இரவு 10 மணிக்கு முடிய வேண்டும், அந்த நேரத்தில் மக்கள் உன்னை விட்டுச் செல்ல வேண்டும்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - க்காக சொன்னது:

''என்னுடைய ரகசியங்கள் எதுவும் அவரிடமிருந்து (ராம் சந்த்தரிடமிருந்து) மறைக்கப்படவில்லை. அவருடைய ஜீரண சக்தியை ஓரளவுக்கு சரியாக்குவதற்காக சற்று முன்பு தான் அவரை நான் ஒரு பக்கமாக அழைத்துச் சென்றேன். அவருக்கு நான் என்ன செய்தேன் என்பது அவருக்குப் புரிந்தது. அவருக்கு நான் என்ன செய்தேன் என்பதை வார்த்தைகளில் விவரிக்க இயலாது.''

### சுவாமி விவேகானந்தா:

''எல்லா வேலைகளையும் உன் கைகளில் நான் கொடுத்து உன்னை அதற்குப் பொறுப்பாளியாக்கி விட்டேன், (இப்போது) வேலை நடப்பது சிரமமாக இருக்கிறது.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''உண்மையான வழி 'சுலபமான வழியாக' (சகஜ மார்க்கம்) இருக்கிறது. பொருட்களுக்குப் பெயரிடும் முறை எப்படியோ, சிலசமயம் உச்சரிப்பதற்கு நன்றாக இல்லாததாகத் தோன்றுகிறது.''

**14-6-1945**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''பிரியமான ராம் சந்த்தரின் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, அவருக்கு ஒதுக்கப்படுகிற வேலை எதுவாயினும், அது தானாகவே நடைபெற்று முடிகின்றவாறு இருக்கும்படி ஒரு வழிமுறையை நான் பின்பற்றினேன். ஆயினும், அவர் இதை ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ள முடியாது என்று இதற்குப் பொருளாகாது.''

**15-6-1945**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''M2 - மூன்று மாதங்களுக்கு தியானம் மற்றும் எந்தவிதமான சடங்குகள் அல்லது வழிபாடுகளிலும் ஈடுபடக்கூடாது என்று உத்திரவிட வேண்டும். அதற்குப் பதிலாக தன் உள்நிலைகளை அடிக்கடி ராம் சந்த்தருக்கு தெரிவித்துக் கொண்டே இருக்கவேண்டும்.''

*(M2 - என்பவர் ஒரு வழக்கறிஞராக, சட்ட வல்லுநராக இருந்தார். அவர்தான் ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன், ஷாஜஹான்பூர் என்ற சங்கத்தின் விதிமுறைகளையும், துணை விதிகளையும், வேறு சிலருடன் இணைந்து, அந்த வாரத்தில் வடிவமைத்துக் கொடுத்தவர்.)*

**சுவாமி விவேகானந்தா:**

''ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன் என்ற பெயருடைய சங்கத்தை முறைப்படி பதிவு செய்வது கட்டாயம் நடக்க வேண்டும். இந்த சங்கத்தின் விதிமுறைகள் அனைத்தும் எனக்கு முன் வைக்கப்பட வேண்டும். இந்த விஷயத்தில் எனக்கு முழுமையான அதிகாரம் இருக்கிறது. பதிவு செய்வது எவ்வளவு விரைவில் செய்யப்படுகிறதோ, அவ்வளவுக்கு அது நல்லது. சங்கத்தின் உறுப்பினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய படிவத்தில் இரண்டு பகுதிகளுக்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும்; அதாவது நன்னெறி ஒழுக்கம் மற்றும் ஆன்மீகம், ஒருவர் காலத்துக்கு ஏற்றபடி நடந்துகொள்ள வேண்டும் என்ற குறிப்புகள் இடம்பெற வேண்டும். மக்களின் பொதுவான மனப்பான்மைக்கு ஏற்றபடி அதைக் கொண்டு வந்தாலன்றி எந்த ஒரு சங்கமும் நிலைக்க முடியாது. சமுதாயம் முழுமையாக ஒழுங்குமுறைக்குக் கட்டுப்பட்டு

இருந்தாலன்றி, ஒரு மரத்து நிழலின் கீழ் கற்பித்தல் என்ற கருத்தை மறந்துவிட வேண்டியது தான்.''

17-6-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (காலை 10 மணி):**

''M1 - ஐ நான் மேலும் கூர்மையாக்கியிருக்கிறேன், அவருடைய சக்தி மதிப்புயர்த்தப்பட்டிருக்கிறது. எனவே மன எழுச்சியுடன் அவர் யாரிடம் சென்றாலும், அந்த மனிதரிடம் அந்த மன எழுச்சியின் உடனடியான விளைவு ஏற்படும். அவருடைய (M1 - ன்) இந்த ஆனந்தத்தை நான் தொடர்ந்து நீடிக்கச் செய்யவேண்டும். அவர் மேலும் சக்திகளை அடைந்து கொண்டே செல்வார்.''

''I2 - பரப்பிரம்மாண்ட மண்டலத்தில் சென்று கொண்டிருக்கிறார். அது இப்போதுதான் செய்யப்பட்டது. இப்படி விரைவில் முழுமை பெறச் செய்ய வேண்டிய தேவை வந்து கொண்டிருக்கிறது.''

**வணக்கத்திற்குரிய கேப்ரியல் தேவதை:**

''உலகம் முழுவதையும் உன் வேலையின் வரம்புக்குள் நீ எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது கடவுளிடமிருந்து வந்த கட்டளை. இந்தியாவில் நீ செய்துள்ள பணி எதுவாயினும் அதை உலகம் முழுவதற்கும் செய்யத் துவங்க வேண்டும்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இது ஒரு தெய்வீகக் கட்டளை, மூன்று நாட்களுக்கு முன்பு, நான் உன்னிடமிருந்து தன்னிச்சையாக வேலை வாங்கிக்கொள்ள ஆரம்பித்த போது இது தொடங்கியது. இந்த வேலையின் வேகம் மிகவும் தீவிரமாக ஆரம்பித்தது. அதைக் கொஞ்சம் வேகம் குறைக்க வேண்டியிருந்தது. ஏனெனில் அது உன் இதயத்தை பாதித்துக்கொண்டிருந்தது. உன் பலவீனத்தின் காரணமாக அது உனக்கு சுமையளிப்பதாக இருந்தது.''

18-6-1945

**சுவாமி விவேகானந்தா:**

''மனிதகுலத்தின் கீழ் அடுக்குகளுக்கும் கீழே போவது ஆன்மீகம். அங்கே சென்றடைகிறவர் யார்? பூஜ்யமாக (ஏதுமற்றவராக) மாறுகின்ற ஒருவர்தான். அதற்குமேல் அங்கே ஒரு கருத்தைத் தவிர வேறு ஏதுமிலலை. அங்கே காணுதல் என்பது கிட்டத்தட்ட மறைந்து போகிறது.''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் :**

''துறவிகளாக ஒதுங்கி வாழும் முறை தொடர்வதை நான் விரும்பவில்லை. சங்கராச்சாரியாரின் இந்த வழிமுறை முடிவுக்கு வரவேண்டுமென விரும்புகிறேன். உனக்காக (ராம் சந்த்தருக்காக) நான் ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். உன் அலுவலக வேலைக்கு இனி தேவை இருக்காது. வணக்கத்திற்குரிய உன் மாஸ்டர் உத்திரவிடும்போது, வேலையை ராஜினாமா செய்துவிடு. அலுவலக வேலையில் உன் உடம்பை வருத்திக்கொள்வதில் பயனில்லை. அது உன் உடலின் பலவீனத்தைத் தான் அதிகரிக்கிறது. அதனால் தெய்வீகப் பணி தடைபட்டு தாமதப்படுகிறது. உனக்கு அதற்குப் போதுமான நேரம் இருப்பதில்லை.''

**வணக்கத்திற்குரிய ராதா அம்மையார்:**

''அன்புள்ள சகோதரரே, உங்கள் பாதையில் எந்த ஒரு தொல்லையும் ஒருபோதும் வரவிடமாட்டேன் என வாக்குறுதியளிக்கிறேன். உங்கள் மதிப்பு பிறகு உணர்ந்து கொள்ளப்படும்.''

**சுவாமி விவேகானந்தா:**

''நீ ஒரு புதிய மதத்தை ஆரம்பித்திருக்கிறாய். ஒரு புதிய வாழ்க்கை முறையாக மற்றும் நம்பிக்கையாக அமையும்படி, நிர்வகிக்கும் முகமையின் அருளால் (Governing Agency) அது விதிக்கப்பட்டுள்ளது. நீ எல்லா ஆசைகளையும் அழித்துவிட்டாய். ஆகவே, நீ மகிழ்ச்சியோடு இருப்பாய். இந்த உலக முழுவதிலும் உள்ள வேலை உன்னை நாடிவருவது ஏற்கனவே அதன் லேசான வடிவத்தில் வர ஆரம்பித்திருக்கிறது. நீ யாராக (எந்த ஒரு உயர்நிலையில்) இருக்கிறாய் என்பதை நீ உணராமலிருக்கிறாய். அது உன் மகத்தான தன்மையின் அடையாளம். இந்தக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.''

19-6-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இப்படி ஒரு கடினமான வழியிலான ஆன்மீகப் பயிற்சியை மேற்கொள்வதற்குத் தயாராக இருக்கும் துணிவு யாருக்காவது இருக்கிறதா? இதற்கு அவசியமான நிபந்தனைகள் என்னவெனில் இருபத்தைந்து ஆண்டுகள் கடுமையான பிரம்மச்சரியம் அனுசரிக்க வேண்டும்; மற்றும் ஒரு திடகாத்திரமான உடம்பை வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்; பிறகு இல்லற வாழ்க்கை நடத்த வேண்டும்; குழந்தைகள் பிறந்த பிறகு கணவன் மனைவி உறவு நிலையான வேத நெறிக்கோட்பாடுகளுக்கு இணங்க சிறிது

காலம் தொடர வேண்டும். இந்தக் காலகட்டத்தில் தியானம் முதலான பயிற்சிகளும் தொடர வேண்டும். உடல்நலம், மனநலம் இவற்றை ஒவ்வொரு படியிலும் கவனித்து அக்கறை செலுத்த வேண்டும். நாற்பது வயது ஆகும் வரையில் தெய்வீகப் பிரசன்னம் பற்றிய விஞ்ஞானம் மற்றும் ஒழுக்கத்தில் தேர்ச்சியடைவதற்காக அதிகபட்ச முயற்சி செய்யப்பட வேண்டும். நாற்பது வயது முடிந்து நாற்பத்து ஒன்றாம் வயது தொடங்கும் போது இல்லற வாழ்வைத் துறந்து குருவினுடைய இருப்பிடத்துக்குச் சென்று வாழத் துவங்கவேண்டும். குரு சீடன் என்ற உறவைத் தவிர வேறு உறவு ஏதும் நீடிக்கக் கூடாது. இப்போது பிரியமான ராம் சந்த்தர் கண்டுபிடித்துள்ள பயிற்சி ஆரம்பமாக வேண்டும். இந்தப் பயிற்சியில், ஒருவர் தனது முழு ஆற்றலுடன், தன் ஒவ்வொரு அணுக்கூறும் பரமாத்மாவின் (பரம்பொருளின் ஜீவத்தன்மையின்) முழு ஆற்றல் நிரப்பப்பட்டிருப்பதாக விதத்தில் ஒவ்வொரு சக்கரத்தையும் நாடிச் சார்ந்து இருப்பது அடங்கியுள்ளது. இதற்கு நீண்ட காலம் ஆகும். ஒவ்வொரு அணுக்கூறையும் ஒவ்வொன்றாக தனித்தனியே கையாள வேண்டியிருக்கும். மற்றும் முழுமையாக சுத்திகரிக்க வேண்டியது தேவைப்படும். இப்படியே ஒவ்வொன்றாக ஒவ்வொரு சக்கரத்தையும் எடுத்துக்கொண்டு கையாளவேண்டும். சரீர மண்டலத்தின் (மனித உடலமைப்பின்) அனைத்து சக்கரங்களையும், இப்படி சுத்தம் செய்து சரிப்படுத்தியிருக்கும் போது, அடுத்து பிரம்மாண்ட மண்டலத்தில் உள்ள சக்கரங்களை எடுத்துக்கொள்ள வேண்டும். அதன்பிறகு அவர் பரப்பிரம்மாண்ட மண்டலத்திற்கு சென்றடைய வேண்டும். அங்கு இருக்கும் புள்ளிகளையும் கூட இதே விதத்தில் கையாள வேண்டும். அந்த நிலை வரையில் வேலை செய்து முடித்தபிறகு, ஒருவரது உடம்பின் ஒவ்வொரு அணுக்கூறையும் எடுத்துக்கொண்டு இதே அளவு உழைப்பை அதற்கு அளிக்க வேண்டும். உடம்பின் எல்லா அணுக்கூறுகளும் இப்படி சுத்திகரிக்கப்பட்டிருக்கும் போது, உச்சி முதல் பாதம் வரையில் அதே ஆற்றல் அல்லது மனப்பான்மை ஈர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதாகத் தோன்றும்படி, அவற்றில் ஒரு சக்தியின் நீரோட்டம் அல்லது மனப்பான்மை கொண்டு வரப்படவேண்டும். இதைச் செய்து முடித்திருக்கும் போது, அந்த (ஆன்மீக நிலை முழுவதும், பரம்பொருளாகிய உச்சநிலையின் அடித்தளத்தில் ஆழ்ந்திருக்க வேண்டும். இந்த வழிமுறையை வாழ்வில் பின்பற்றினால், ஒரு ஆயுட்காலம் முழுவதிலும் ஒரே ஒரு மனிதரைத்தான் இப்படி உருவாக்குவது சாத்தியமாகும் என்பது எனக்குப் புரிகிறது. ஆனால், இவ்விதமாக உருவாக்கப்பட்ட ஒரு மனிதருக்கு ஈடு இணையாகச் சொல்ல வேறு உதாரணம் இருக்காது.''

‘‘இப்போது என் வழிமுறை பற்றிக் கேட்டுக்கொள்ளுங்கள் என ஆயுட்காலத்தில் எனது பிரியமான ராம் சந்த்தரை நான் முழுமையடையச் செய்தேன். ஆனால் நான் மேலே விவரித்தபடி என் உழைப்பை ஈடுபடுத்தவில்லை, அவரை மிக உயர்ந்தநிலைக்கு நான் கொண்டு வந்த பிறகு, என் உடம்பைவிட்டு நான் நீங்கியபிறகு, இந்தத் திசையில் (அதாவது அவரை சிறப்பானத் தன்மையில் வடிவமைக்கும் கருத்தில்) தீவிர கவனம் கொடுத்து, என் வேலையைத் தொடர்ந்து செய்தேன். அது மிகச் சிறப்பாகப் பயனளிக்கும் விதத்தில் நீடித்தது. பிறகு அதற்கான தேவை எழுந்த போது, ராம் சந்த்தருக்கு பற்பல வேலைகள் அடுத்தடுத்து வந்து கொண்டே இருந்த சமயத்தில், அவர் தென்னிந்தியப் பயணம் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்ட போது, நான் இந்த முறையை அவரிடம் பிரயோகித்தேன். அதாவது அவரது பூரணத்துவம் முழுமையாக எய்தப்படும் விதத்தில் அவருடைய ஒவ்வொரு மூலக்கூறின் (அணுக்கூறின்) வழியாகவும் என்னைக் கடந்து போகவிடத் துவங்கினேன். இந்த வேலையை நான் செய்து முடித்தபின், முன்பு நான் விவரித்தது போல மூன்றுமணி நேரத்தில் A முதல் Z வரை (ஆரம்பம் முதல் முடிவு வரை) அதேமாதிரி உள்நிலையை உருவாக்கினேன். இந்த விஷயம் சம்பந்தமாக ஏற்கெனவே நான் குறிப்பாக ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறேன். ஆனால், இன்று அதை விரிவாகச் சொல்லியிருக்கிறேன். ஒருவருடைய ஆயுட்காலத்திற்குப் பிறகுதான் இதை நன்றாகச் செய்ய முடியும். பிரம்மச்சாரியம் போன்றவை சம்பந்தமான விதிமுறைகளில், முறைப்படியான கட்டுப்பாட்டை ஒருவருடைய ஆயுட்காலத்திற்குப் பிறகுதான் பயன்தரும் விதத்தில் அடையமுடியும். ஏனென்றால் வாழ்க்கையின் மிகவும் மதிப்புயர்ந்த பகுதி பிரம்மச்சரியம் போன்ற ஒழுங்குமுறைகளை அனுசரிப்பதிலேயே செலவாகிவிடும். இந்த வேலை முழுவதும் ஒரே முயற்சியில் செய்து முடித்துவிடுவதும் சாத்தியம் தான். ஆனால், இதற்குத் தேவையான ஏற்புத்திறன், தகுந்த உள்நிலை யாரிடமும் காணப்படவில்லை. கூர்ந்து கவனித்தால் மனிதனின் ஒவ்வொரு அணுக்கூறும் அதற்கு ஈடு இணையில்லாத விசேஷ சக்தியை உள்ளடக்கியிருக்கிறது. (சிறிது இடைவெளி) .....இன்னும் சிறந்த ஒரு வழிமுறையும் இருக்கிறது. அதாவது பரமாத்மா (பரம்பொருளின் ஜீவத்தன்மை) சம்பந்தப்பட்ட அம்மனிதரை நோக்கி உந்தித் தள்ளப்படும் முறை அது. ஆனால், அதனால் உண்டாகும் பலத்த அதிர்ச்சியை, எல்லோராலும் தாங்கிக்கொள்ள இயலாது. இதை நான் செய்திருக்கிறேன். மற்றவர்கள் இதைச் செய்வதை நான் கண்டிப்பாக தடை செய்திருக்கிறேன்.’’

<u>20-6-1945</u>

**<u>சுவாமி விவேகானந்தா</u>:**

‘‘பதஞ்சலி முனிவரின் தத்துவத்தில் நான் தேர்ச்சி அடைந்திருக்கிறேன். என் சொற்பொழிவுகளிலும், நான் எழுதிய புத்தகங்களிலும் அவருடைய புத்தகத்தின் மதிப்பை நான் முக்கியத்துவம் தந்து தெரிவித்திருக்கிறேன். நான் உண்மையைச் சொன்னால், மக்கள், அதிலும் குறிப்பாக பூஜாரி வகுப்பினர் உன் மீது (தாக்குவதற்காகப்) பாய்ந்துவிடக்கூடும். யாருக்குத் தெரியும்? (சிறிது இடைவெளி) எப்படியிருந்தாலும் பதஞ்சலி மிகவும் அறிவுத்திறனும், மெய்ஞ்ஞானமும் உடையவராக, புத்தகங்களைப் படித்தறிவதில் தன்னை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டவராக, சில விஷயங்களை மட்டுமே பயிற்சி செய்கிறவராக இருந்தார். சில விஷயங்களில் நான் அவருடன் பெரிதும் வேறுபட்ட கருத்து உடையவனாக இருந்தேன். அவரைப் பற்றி நினைத்து நீ சிறிது தியானம் செய்தால், அவருடைய உள்நிலையை நீ அறிந்து கொள்வாய். அது எந்தப்புத்தகத்திலும் கிடைக்காது. பதஞ்சலி ஒளியுலகில் இல்லை. அவருடைய வேலை மற்றும் செயல்பாடுகளாகிய முடிவற்ற வளையத்திலிருந்து அவரால் தன்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. அவருடைய ஞானம் செயல்முறை ஞானமல்ல. அவருடைய புத்தகங்கள் பாதுகாக்கத் தகுந்தவை என்பது உண்மைதான் என்றாலும், அவருடைய புத்தகங்களில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை முழுமையாகச் சார்ந்திருக்க வேண்டாம் என்றே நான் உனக்கு அறிவுரையளிக்கிறேன். மற்றவர்களால் ஓரளவு அனுசரிக்கப்பட்ட வழிமுறைகளை அவை கொண்டுள்ளன. நீ விரைவில் அந்த வேலையை எடுத்துக்கொள்ளப்போகிறாய். தலைமை அணு மற்றும் அதன் இரண்டு துணை அணுக்கள் பற்றிய உனது தத்துவத்தை நான் முக்கியமாக நினைக்கிறேன். ஆனால், நீ அதுபற்றி அதிக சிந்தனை செலுத்தாமலிருக்கிறாய். அதை நீ கவனித்து உன் பணியைச் செய்தால், இது பற்றிய ரகசியம் முழுவதையும் அது வெளிப்படுத்தும். உன் குருவினால் உனக்குக் கொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு தீர்வு காண இதுவரை நீ முயற்சி செய்யவில்லை. இப்போது இந்த விஷயங்களுக்கு ஒரு புதிய திருப்பம் கொடுப்பது உன் கடமையாகும்.’’

## 21-6-1945 (காலை 9.15 மணி)

**ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு:**

''என்னிடமிருந்து நீ ஏன் வேலைவாங்கிக் கொள்ளக்கூடாது? நான் என்னை உன்னுடன் ஐக்கியம் செய்துவிட்டேன். உன்னுடைய மிஷனின் பணி நலமாக அமையட்டும் என்று ஆசீர்வதிக்கிறேன். இந்த சங்கத்தை முறைப்படி பதிவு செய்ய வேண்டும் என்ற சுவாமி விவேகானந்தாவின் கருத்தை நான் ஒப்புக்கொள்கிறேன். உன் ஆன்மீக/தெய்வீக நிலை பற்றி நீ அறியாமலிருக்கிறாய். உன் கட்டளைகளின்படி நடப்பது எங்கள் கடமையாக மாறியிருக்கிறது. இவையனைத்தும் உன் குருவினுடைய அருளால்தான் கிடைத்தன. இந்த மாதிரி ஒரு மாஸ்டர் ஒருபோதும் பிறந்ததில்லை. அவருடைய உண்மைநிலையைப் பற்றிய ஞானத்தை யாருமே பெற முடியாது. இப்போது யாருக்கெல்லாம் (ஞானக்) கண்கள் இருக்கிறதோ அவர்கள் அதைக் காணலாம். சுவாமி விவேகானந்தா அவர் சம்பந்தப்பட்ட வேலையில் முனைப்பாக இருக்கிறார். அவர் இன்னும் மேல் உலகிற்கு திரும்பிச் செல்லவில்லை. உனது குருவும் கூட உனக்காக வேலை செய்கிறார். இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு அவர் இங்கு வர இயலாமல் போவதும் சாத்தியமாகலாம். எனவே, ஏதாவது தேவைப்பட்டால் நீ என்னை அழைக்கலாம்.''

**சுவாமி விவேகானந்தா:**

''அவர் முற்றிலும் உன்னிடம் லயித்திருக்கிறார். நீ நடத்துகின்ற வாழ்க்கை நிலையின் தரம் ஆன்மீக மண்டலத்தில் வேறு எந்த இடத்திலும் காணமுடியாத ஒன்றாக இருக்கும். ஒளியுலகில் முக்தி பெற்ற ஆன்மாக்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களும் உனக்கு இணையாக மாட்டார்கள்.''

## 23-6-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இன்று மாலை, பிரியமான ராம் சந்த்தர் தனது நிலையான உள்நிலை பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார். அன்புள்ள M1 - அதன் மீது பிரியத்தை (விருப்பத்தை) வளர்த்துக்கொண்டார். அவர் அதற்காக முயற்சி செய்யலாம். அதற்கான வழிமுறை எல்லாச் சமயத்திலும் இயற்கையை கவனித்து அறிவதில் அடங்கியுள்ளது. அதாவது இயற்கையின் எளிமையையும், நறுமணத்தையும் கவனிக்க வேண்டும். இயற்கையின் ஒரேமாதிரி தன்மை பற்றிய ஒரு மதிப்பீட்டை உருவாக்கிக் கொண்டு, அதை மனக்காட்சியில் நிரந்தரமாக வைத்துக்கொள்வதோடு, அது (ஒன்றுபட்ட தன்மை) தனக்குள்

ஊடுருவிக் கொண்டிருக்கிறது என்ற எண்ணத்துடன் இருக்க வேண்டும். எல்லா இடங்களிலும் சுற்றிலும் பரவியிருக்கும் ஒரே மாதிரியான – ஒன்றிணைந்த தன்மை தனது உள்ளும்புறமும் கூட இருக்கிறது என்ற பாவனையுடன், இந்த எண்ணத்திலேயே எப்போதும் நிலைத்திருப்பதற்ற் முயற்சி செய்ய வேண்டும். ஆனால், குணாதிசயத்தின் இந்த சுத்திகரிக்கப்பட்ட தன்மையை, கனிவான கடவுள் அதை பெருந்தன்மையுடன் அளிக்காவிட்டால், வேறுவகையில் ஆயுதபலத்தின் மூலமாகவும் கூட அடைய இயலாது. குதுப் (Qutub) என்ற துரவ நட்சத்திர நிலையைக் கடந்து சென்றவர் இதைப் பயிற்சி செய்யலாம் என்று நான் அனுமதிக்கிறேன். இந்த வழிமுறை எனது பிரியமான ராம் சந்த்தரால் கண்டுபிடிக்கப்பட்டது. அது முற்றிலும் சரியானது. மற்றவர்களுக்கும் அவருக்கும் இடையிலான வித்தியாசம் அவர் அதை ஒரே கருத்துடன் தொடர்ந்து சென்றார். அதைப் பின் தங்கவிட்டுப் போகும் ஒருகாலம் வரும் வரையில் அவர்அதை ஒருபோதும் கைவிடவில்லை. அதனால் அனைத்தும் அடையப்பட்டது. அதில் விருப்பமுள்ளவர்கள் இப்போது அதைப் பயிற்சி செய்யலாம். அக்கருத்தை எடுத்துக்கொள்வதை, அதாவது பூரண சரணாகதியை நான் தடை செய்யவில்லை. எந்த வழியில் அதை அடைந்தாலும் சரி. லட்சியத்தை அடைவதுதான் நோக்கம். இரண்டு வழிகளுமே சரியானவைதான்.''

25-6-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''ஆன்மீகப் பயிற்சி முறையில் உணர்ச்சிகளின் எழுச்சிச் சிக்கலை பிரியமான ராம் சந்த்தர் நீக்கிவிட்டார். அவருடைய பிராணாஹூதியை சாம்பல் மூடிய நெருப்பின் அல்லது சுடுமணலின் வெப்பம் என்று ஒப்பிட்டுச் சொல்லலாம். இது அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட மிக விசேஷமான ஒரு விஷயமாகும். ஆன்மீக முன்னேற்றத்துக்கு உணர்வுகளின் எழுச்சி தேவையில்லாமலேயே இருந்திருக்கிறது. ஆயினும், அவரது பிராணாஹூதியிலிருந்து போதுமான அளவு நன்மை பெற்றுள்ளவர்களால் மட்டுமே அத்தகைய பிராணாஹூதி அளிக்க முடியும். பயிற்சி பெறும் மனிதரிடம் ஆரம்பத்திலிருந்தே பரமாத்மாவின் நிலை (பரம்பொருளின் ஜீவியத்தன்மையின் நிலை) பாய்ந்து ஓடும். அவருடைய பிராணாஹூதியை இப்போது கவனித்துக் கொண்டே இருந்தேன். அதில் முழுமையான ஒரு தூய்மை இருந்தது. மற்றும் பரமாத்மாவின் நிலை பார்வைக்கு மிக நன்றாகத் தெரிந்தது. அதற்காகக் கூக்குரலிடுவதும், கண்ணீர் விட்டு

அழுவதும் இப்போது ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. உணர்ச்சிகளும், அதன் எழுச்சிகளும் சாதிக்க முடியாததை நன்னடத்தையின் வழி நிறைவேற்றும். ராம் சந்த்தர் எந்த நிலையில் இருக்கிறாரோ, அந்த உள்முகமான கனன்று கொண்டிருக்கும் உள்நிலையை அவருக்கு உண்டாக்கும். இந்தப் பயிற்சியின் வழிமுறையை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. ஆனால், தேவைப்படும்போது, சிந்தனையில் புரிந்து கொள்ளச் செய்ய முடியும்.''

### சுவாமி விவேகானந்தா:

''உன் வாழ்க்கையில் இது ஒரு விசித்திரமான விஷயம். மற்றும் எல்லோருக்கும் முற்றிலும் ஒரு புதிய விஷயத்தின் துவக்கம். இதுவரையில் ஆன்மீகத்துக்குச் செல்லும் பாதையை அதன்மீதான ஈர்ப்பு, அல்லது அதில் மனம் ஆழ்ந்த தன்மை, அல்லது அதன் மீது தீவிர மோகம் அல்லது ஏக்கத்தின் மூலமாக முயற்சி செய்தார்கள். இந்த தீவிர மோகம் அல்லது ஏக்கத்தை சூஃபி மார்க்கத்தில் ஜஸ்பா (Jazba) என்று சொல்கிறார்கள். நீ உண்மையாகவே ஒரு புதிய மதத்தைக் கொண்டு வந்திருக்கிறாய். இதுவரை யாரும் கற்பனை செய்ய முடியாத ஒரு ஆரம்பப் புள்ளி அது. நீண்ட காலத்திற்குப் பிறகே அதன் பயனளிக்கும் திறன் உணர்ந்து கொள்ளப்படும். உங்களைச் சேர்ந்தவர்களிடையே இருப்பதாக நீ அடிக்கடி கவலைக்கொண்டு, விவாதித்து வந்த குறைபாடுகள் ஒரு மனிதர் ஆரம்பத்திலேயே உன்னிடம் பயிற்சி பெற வந்துவிட்டால் இனிமேல் அவரிடம் இருக்காது.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''முடிவான நோக்கமாக எது இருக்கக்கூடுமோ அதை முதலிலிருந்தே எடுத்துக் கொள்வதை விட மேலான வழிமுறை எதுவும் ஒருபோதும் இருக்க முடியாது.''

### சுவாமி விவேகானந்தா:

''இந்த வழிமுறையின் இணைபிரியாத அங்கமாக லேசான சங்கல்பம் இருக்கவேண்டும். அது ஒருவரை இயற்கையாகவே இந்தப்பக்கமாக (அதாவது உண்மையான ஆன்மீகத்தின் பக்கமாக, பொருள் சார்ந்த முறையில் கவனித்து அறியக்கூடியதும், முக்கியமானதுமாகிய, கடினத்தன்மையுடைய விளைவுகளுக்கு எதிராக) கவர்ந்து இழுக்கும். இதன் ஒவ்வொரு படியிலும், உயர்நிலைகள்அருகருகே இணைந்து செல்லும்.''

30–6–1945

**இலங்கையின் முனிவர்:**

‘‘உங்கள் ஆட்களைத் தவிர, அதாவது உங்கள் சகோதரர்களைத் தவிர மற்ற அனைவருக்கும் எந்தக் கடமையும் இல்லாமல் நீக்கப்பட்டிருக்கிறது என்பது இப்போதுதான் எனக்குத் தெரியவந்தது. சிலசமயம் அதற்கும் அப்பாற்பட்ட சில வேலைகள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டாலும், என் வேலையின் வரம்பு, இலங்கை மட்டுமே, மற்றும் தென்னிந்தியாவின் சில பகுதிகளும் உண்டு.’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘மனம் ஒருமுகப்பட்டிருத்தலின் கடைக்கோடி நிலை என்றால் மரணம் என்று பொருள். இது உனக்கு மட்டுமே ஒரு விதிவிலக்காக இருக்கிறது.’’

8–7–1945

**சுவாமி விவேகானந்தா:**

‘‘நீ கண்டுபிடித்துள்ள மதம் முற்றிலும் புதியதான ஒன்றாகும். அதை நீ ஒட்டுமொத்தமாக மாற்றியிருக்கிறாய். அதன் வளர்ச்சிக்கு சிறிது காலம் ஆகும். இதில் ஒரு மிகப்பெரிய பிரச்னை இருக்கிறது. அதாவது உன்னிடம் வருகிறவர்கள் தங்கள் சொந்த முயற்சியை, உழைப்பை அதில் கொடுக்க விரும்பாதவர்களாக இருக்கிறார்கள். அதாவது இதில் ஒரே ஒருவர்தான் (அதாவது நீ மட்டும் தான்) வேலை செய்பவர் என்று சொல்லலாம். (சிறிது இடைவெளி) உன் உதாரணத்தை எல்லாவிதத்திலும் அவர்கள் பின்பற்றுகிறார்கள்; அதாவது உனது சோம்பலான பழக்கங்களைத் தவறாமல் பின்பற்றுகிறார்கள். உனது (உண்மையான) உள்நிலை அவர்களுக்குத் தெரியாது. அவர்களிடமிருந்து இந்த சோம்பல் பழக்கங்களை நீக்கிவிடு. தாண்டிக் குதித்து முன்னேறிக் கொண்டிருக்கின்ற ஒரு மனிதர் கொஞ்சம் நின்று, தன் உற்சாகத்தைக் கைவிடுகிறார். ஏனென்றால், அந்த நிலையை அடைவதற்கு தன் சங்கல்பத்தை உபயோகிப்பதில்லை. ஆன்மீக நிலைக்கு முரண்பாடான பழக்கங்களை விட்டுவிடுவதற்கு மிகவும் கவனம் கொடுக்க வேண்டும். இந்தவிதத்தில் தங்கள் பழக்கங்களை கட்டுப்படுத்திக் கொள்ள அவர்கள் முயற்சி செய்வதில்லை மற்றும் தவறான பாதையில் போகாமல் தங்களைத் தடுத்துக்கொள்வதும் இல்லை.’’

9–7–1945

## தன்வந்த்ரி (வைத்திய சாத்திர) முனிவர்:

''20 தானிய எடை அளவுள்ள (1945ஆம் ஆண்டில் இருந்த ஒரு இந்திய காசின் எடை) காலா பங்க்ரா (Black Eclipta Fraling) என்ற மூலிகையை ரசாயனப்பொருட்கள் கலக்காத சர்க்கரையுடன் (நாட்டுச்சர்க்கரை) சுத்தமான தண்ணீர் கலந்து காலையில் உட்கொண்டால் அது கல்லீரலின் செயல்பாட்டை முன்னேறச் செய்யும். நீண்டகாலமாகவே உன் கல்லீரல் சரியாக வேலை செய்யவில்லை. அதன்காரணமாக அடிக்கடி உனக்கு வயிற்றுப்போக்கு உண்டாகிறது. மேலும் குடலின் பலவீனமும் உண்டாகிறது. இதற்கு காலாபங்க்ரா என்ற மூலிகைதான் சிறந்த பயனளிக்கும். புகையும் நெருப்பில் கஞ்சாவின் சாற்றை இட்டால், அந்தப் புகையை வெளிப்புறமிருந்து வயிற்றின் பக்கம் திசைதிருப்பி விட்டால் வயிற்று நரம்புகள் விரைவில் இளகி மிருதுவாகும்.''

## சுவாமி விவேகானந்தா:

''உன்னை அவ்வப்போது கவனித்துக்கொள்ளும்படி தன்வந்த்ரியிடம் கேட்டுக் கொண்டேன். அவருடைய காலத்தில் அவர் தான், முதல் ரிஷியாக, மருத்துவத்தை கண்டுபிடித்தவராக (முறைப்படியான மருத்துவ விஞ்ஞானம்) இருந்தார். அவர் காயஸ்தா சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற வரலாறு சரியானதே. (மறைமுக வழிமுறையாகிய ஏவல், சூனியம் மற்றும் சிறு தெய்வ) வசிய சக்திக்கு எதிராக வேதமுறைப்படியான சிகிச்சை வழியைக் கண்டு பிடித்தவர் அவர்தான். அச்சமயத்தில் நோய்களும், உடல்நலக் குறைபாடுகளும் அதிகம் இருக்கவில்லை. மக்களின் ஆரோக்கியமும் பொதுவாக நன்றாகவே இருந்தது. மனோதத்துவ முறையிலான மருத்துவம் பிறகு வளர்ச்சியடைந்தது. ஜாதிகளின் பிரிவு என்பது நடைமுறைக்கு வந்தபோது, காயஸ்தா இனம் மற்றவர்களை விட மேலாக உயர்வடைந்தது. உடலின் வலியை மற்றும் அதன் பயன்பாடுகள் என்பதை ஆராய்வதை விட, மூளையைக்கொண்டு ஆராய்ந்தறியும் விஞ்ஞானங்களில் தங்களைப் பெரிதும் ஈடுபடுத்திக்கொண்டார்கள். தங்களுக்குப் பெருமை சேர்க்கும் அற்புதமான கண்டுபிடிப்புகளை அவர்கள் செய்தார்கள். ஆனால், அவை காலத்தால் அழிந்துவிட்டன. வில் வித்தையைக் கண்டுபிடித்தவரே ஒரு காயஸ்தாதான் என்று நான் சொன்னால் நீ ஆச்சரியமடைவாய். காலப்போக்கில் அது வளர்ச்சியடைந்து பிறகு மற்ற வகுப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது. காயஸ்தா என்பது ஒரு தனிப்பட்ட வகுப்பாக இருந்தது. உண்மையில் ஒரேமாதிரி வகுக்கப்பட்ட

ஜாதி அமைப்புடன் அதற்குத் தொடர்பில்லை. ஆன்மீக தத்துவத்தை (அல்லது ஆன்மீக ஒழுக்கமுறையை முதலில் தோற்றுவித்தவர் ஒரு காயஸ்தா தான். இயற்கை இந்தப் பகுதியை காயஸ்தர்களுக்காக மட்டுமே ஒதுக்கி வைத்திருந்தது. ஏனெனில், பரம்பொருளின் மூலத்தையே, அனைத்து விஷயங்களும் துவங்குகின்ற மையத்தையே தங்களிடம் வளர்த்துக் கொண்டார்கள். எனவே, இந்த விஷயம் அவர்களிடமிருந்து ஒருபோதும் மறையாது. எனினும், அவர்கள் அதை நோக்கி மனத்தை ஒருமுகப்படுத்தினாலன்றி ஆன்மீகத் தத்துவ ஞானம் (ஆன்மீக ஒழுக்க முறை) வளர்ச்சியடைய முடியாது. அவர்களுடைய உதவியில்லாமல் சமுதாயம் குறைபட்டிருக்கிறது. அவர்கள் வேலை செய்வதற்கு இடமளிக்காமல் மறுத்துவிட்டது பல்வேறு ஜாதிகள் மற்றும் இனத்தாரின் மிகப்பெரிய குற்றம். எழுதப்பட்ட வடிவமாக வருவதற்கு முன்பு ராஜயோகத்தைக் கண்டறிந்தவர் ஒரு காயஸ்தாதான். ஒவ்வொரு சிறந்த மதமும் காயஸ்தா வகுப்பினராலேயே ஆரம்பிக்கப்பட்டது. மகாத்மா புத்தர் இதற்கு ஒரு உதாரணம். விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் பெரும்பாலும் காயஸ்தர்களாலேயே செய்யப்பட்டிருந்தன. உலகின் மிகச்சிறந்த முனிவர்கள் காயஸ்தர்களாவர். உன்னுடைய மாஸ்டர் அதற்கு ஒரு உதாரணம். இப்போது ஒரு புதிய மதத்தை ஆரம்பித்ததில் நீயும் ஒரு உதாரணம் ஆகியிருக்கிறாய். உண்மையாகவே சொல்கிறேன், அனைத்து மதங்களையும் நீ கரைத்து ஒன்றாக்கிவிட்டாய் மற்றும் ராஜயோகப் பயிற்சி முறையை முழுமையாகப் பழுதுபார்த்திருக்கிறாய். அதுவும் ஒரு காயஸ்தா வகுப்பைச் சேர்ந்தவர் கண்டுபிடித்ததுதான். அதே வகுப்பைச் சேர்ந்த என்னைப் பற்றி நான் எதுவும் சொல்லிக்கொள்ளமாட்டேன். காயஸ்தர்களின் தாராள மனத்தை, பூஜாரிகள் இனத்தார், இந்தியாவில் தங்கள் மேலாதிக்கம் மற்றும் தலைமை நிலையை நிலைநிறுத்துவதற்கு தங்களுக்கு சாதகமாக எடுத்துக்கொண்டார்கள். முஸ்லீம்கள் மன்னர்களாகவும், இந்தியாவின் தலைவர்களாகவும் இருந்த காலத்திலும் பூஜாரிகள் இனம் வகையில் நட்புடன் இருந்து காயஸ்தர்கள் பூஜாரிகளை காத்திருந்த போதிலும் இப்போது பூஜாரி இனத்தவர்களால் விழுங்கப்படுகின்றனர். பூஜாரி வகுப்பினர் ஆன்மீக ஒழுக்கத்தின் கீழ் அடுக்கில் இருப்பவர்கள்; ஆனால் தங்களை மேலானவர்களாக நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணம் என்னவெனில் முன்பே நான் சொன்னதுபோல, ஆரம்பத்தில் காயஸ்தா வகுப்பினர் தாராள மனத்துடன் இருந்ததுதான். தாங்கள் என்ன சிந்தித்தார்களோ அதை ஒரு புத்தக வடிவத்தில் தொகுப்பதில் அக்கறை கொள்ளாத பொதுவான மனோபாவம்

காயஸ்தர்களிடம் இருந்தது. அதே விஷயம் மற்றவர்களின் கைகளில் கிடைத்த போது, அதைத் தங்கள் சொந்தப் பெயரால் பதிப்பிக்கும் பெருமையை எடுத்துக்கொண்டார்கள். மேலும் அந்த அசலான சிந்தனைகளையும், கோட்பாடுகளையும் தங்கள் சொந்த வழியில் கொண்டு வருவதற்காக மாற்றியமைத்தார்கள்.''

''மனித சமுதாயம் உலகில் தோற்றுவிக்கப்பட்டபோது, பல்வேறு விதமான வகுப்புக்கள் அந்த ஆதி ஊற்றிலிருந்து பிறப்பிக்கப்பட்டன. அங்கே அப்போது ஜாதி என்ற அமைப்பு முறை இல்லை. அதாவது ஜாதிகள் அல்ல, மனிதர்களில் பலவிதமான வகுப்பினர் இருந்தார்கள். அது ஒரு குடியேற்ற முறைக்குத் தேவைப்பட்டது. இதில் முதலாவது இயக்கம் சித்தகுப்தா என்ற பெயருடைய ஒரு மனிதரைப் பிறப்பித்தது. அவரிடம் விவேகத்தின் அணுக்கூறுகள் ஒரு முழுமையான நிலையில் இருந்தன. பிறகு அந்த நீரோட்டம் மற்ற திசைகளில் பாய்ந்தோட ஆரம்பித்தது. விவேகத்தின் ஊற்றுக்கண்ணாக இருந்த அவரை சித்தகுப்தாஜி என்று சொல்வது முற்றிலும் பொருந்தும். அகர எழுத்து வரிசைகளும், கணிதத்தில் தசம முறையும் அவர்களுடைய மனத்தின் செயல்பாட்டின் (மனத்தில் கண்டறிந்த) பலனாகும். சப்தரிஷிகள் என்று நியமிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் காயஸ்தர்களே.''

*(வணக்கத்திற்குரிய பாபுஜியின் தகப்பனார் ராய் பகதூர் பத்ரி ப்ரசாத் சக்ஸேனா அவர்கள், ஒரு வழக்கறிஞராக இருந்தார். அவர் இந்திய வரலாறு பற்றிய ஒரு புத்தகம் எழுதினார். அதில் காயஸ்தர் என்ற வகுப்பினர் பற்றிய ஆராய்ச்சித் தொகுப்பும் இடம் பெற்றுள்ளது. அந்தப் புத்தகம் இன்னும் அச்சிடப்படவில்லை. வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் அணுகுமுறை, ஒரு கருத்து எங்கிருந்து வந்தாலும் சரி. அதைப் பற்றிய உண்மையை பாரபட்சமில்லாமல் கண்டறிந்து, அதன்பிறகே ஏற்றுக்கொள்வதாக இருந்தது. இந்தப்புத்தகம் பற்றி நான் அவரிடம் ஒருசமயம் கேட்டேன். அவரது உறுதியான கருத்து ''எந்த ஒரு வகுப்பு பற்றிய முன்கணிப்பும், மற்றொரு வகுப்புக்கு எதிராக குறைகூறப்பட்ட முன்கணிப்புகளுக்கு தைரியமின்றிப் பணிந்து போவதாக இருக்கக்கூடாது; அதுவும் தன் சொந்த வகுப்பைப் பற்றியதாக இருந்தால் இன்னும் கவனம் தேவை'' என்பதாகும். காயஸ்தா என்பதன் உண்மையான பொருள் (காயம் என்றால் உடம்பு என்று பொருள்) உருவமைப்பு சார்ந்தது என்பதேயன்றி. உடல் உறுப்புகள் பற்றிய முழுக் கருத்து அல்ல. வேதங்களில் உருவகமாகக் கூறப்பட்டபடி, படைப்புக் கடவுள் பிராமணர்களை முகத்திலிருந்தும், ஷத்திரியர்களை இரு*

*தோள்களிலிருந்தும்ம் வைசியர்களை தொடையிலிருந்தும், சூத்திரர்களை பாதத்திலிருந்தும் தோற்றுவித்தார். காயஸ்தர்களை மொத்த உருவத்திலிருந்தும் தோற்றுவித்தார். இப்படி உருவகமாக வர்ணிப்பது ஒருபுறம் இருக்க, சமூக அமைப்புரீதியாக காயஸ்தா என்ற வார்த்தைக்கு, அவர்கள் விவேகம் உடையவர்கள், சமுதாயத்தை ஜாதிகளாகப் பிரிக்கும் முறைக்கு எதிராக இருந்தவர்கள் அல்லது அதிலிருந்து ஒதுங்கியிருந்தவர்கள் என்று பொருள் கூறலாம். ஏற்கெனவே இருந்த அல்லது ஜாதிப் பிரிவுகள் துவங்கியபோது வெளிப்பட்ட இந்த வகுப்பு, தீவிரமான ஜாதிப்பிரிவுக்கு வெளியே மேலும் ஒரு ஜாதியாக அமைந்திருக்கக் கூடும். இதுபற்றி எத்தனையோ கல்வியறிவு சார்ந்த மற்றும் பிரபலமான வகுக்கப்பட்ட கொள்கைகளும், கருத்து முரண்பாடுகளும் உள்ளன. வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜி இனப்பிரிவு சார்ந்த கண்ணோட்டத்திற்கு எதிராகவே எப்போதும் இருந்தார்; எந்த ஒரு வகுப்பைச் சார்ந்த எந்த ஒரு தனிமனிதனுக்கும் எதிராக, அவனது பலவகையான சொந்த அனுபவங்களைத் தவிர, அவன் மீது எந்த தனிப்பட்ட முன்கணிப்பும் ஒருபோதும் இல்லாதவராக இருந்தார். அவருக்கு ஒரு மனிதருடைய பெருமைக்குரிய பண்புகளும், குறைபாடுகளும் தான் முக்கியமேயன்றி அவர் ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சார்ந்தவர் என்பது முக்கியமில்லை. – தொகுப்பாசிரியர்.)*

11-7-1945

**சுவாமி விவேகானந்தா:**

''உன்னுடைய ரத்த ஓட்டம் இயல்பான நிலையில் இல்லை. உன்னுடைய ஆன்மீக உள்நிலை நிலையாக இருந்து கொண்டிருப்பதால் அது உன் உடல்நலத்தை மிகவும் எதிர்மறையாக பாதிக்கிறது. இதனால் ஏதாவது ஒருவிதத்தில் உடல்நலத்தைத் தூண்டுவது அவசியமாகிறது. சிலசமயங்களில் நீ சுவாசிப்பது கூட நின்றுவிடுகிறது. அது இரவும் பகலும் பெரும்பாலான நேரம் நீடித்தாலும் கூட, நீ எல்லாச் சமயங்களிலும் அதை அறிந்து கொள்வதில்லை. உனக்கு உடற்பயிற்சி அவசியம் தேவை. ஓடுவது உனக்குப் பயன்தருவதாக இருக்கலாம். காலா பங்க்ரா (Black Sclipta Frailing) என்ற மூலிகை உனக்காகவே சொல்லப்பட்ட மருந்து.''

12-7-1945

**தன்வந்த்ரி முனிவர்:**

''சுற்றுப்புறச் சூழ்நிலையை சுத்தமாக வைத்திருப்பதற்காக ஒவ்வொரு வீட்டிலும் சில மரங்களை அல்லது செடிகளை வளர்க்க வேண்டும். இக்காலத்தில் உடல்நலத்துக்கு உபயோகமான சில அம்சங்கள் காற்றிலிருந்து நீங்கிப்போகும்படி செய்யப்படுகிறது. உன் வீட்டில் நீ இரண்டு செடிகளை வளர்க்க வேண்டும். அது மிகவும் நன்மையளிக்கும். ஒன்று துளசிச்செடி. (Artemisia Indica) இன்னொன்று தேவ்னா மார்வா (தாவரவியல் பெயர் தெரியவில்லை) எனப்படும் கற்பூரவல்லி. இவற்றை சிறு தொட்டிகளில் வளர்த்து குழந்தைகள் புழங்கும் இடத்தில் வைத்தால், எத்தனையோ நோய்களுக்கு எதிராக அவர்களுக்கு நோய் எதிர்ப்புத்தன்மையை அளிக்கும். ஒரு வீட்டில் இந்தச் செடிகளை நிறைய வளர்த்தால், ஊதுபத்தி, சாம்பிராணி போன்ற தூபங்கள் போட வேண்டிய தேவை இல்லை. அரசமரம் மிகவும் புனிதமானது; ஆனால், அதை வீட்டுக்குள் வளர்க்க முடியாது. இரவுநேரத்தில், உடல்நலத்துக்குத் தீங்கான சில வாயுக்களை அது வெளிவிடுகிறது. இந்த மரத்தின் நிழலில் உட்கார்ந்தால் (உணர்வுகளின் எழுச்சி அல்லது ஆக்கிரமிப்புத் தன்மை உடைய) எண்ணங்களின் சூடு குறையும். அது வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் இருக்கவேண்டும். வேப்பமரம் எல்லாச் சூழ்நிலைகளிலும் மிகவும் நன்மையளிப்பதாகும். அதன் நிழலில் இரவு நேரத்தில் தூங்குவது கூட நன்மையளிக்கும். (சிறிது இடைவெளி) காலா பங்க்ரா மூலிகையுடன் சிறிது (ஒருசில) மிளகுகள் சேர்த்து, தண்ணீர் விட்டு நன்கு அரைத்து அதனுடன் நாட்டுச்சர்க்கரை கலந்து உட்கொள்ள வேண்டும். கருவேல மரத்தின் இலைகள், தொழுநோய்க்கு நல்ல மருந்தாகும். இந்த சிகிச்சையைத் துவங்குவதற்கு சிலநாட்களுக்கு முன்பு, கங்கை ஆற்றில் உள்ள மணலை அந்தத் தொழுநோயாளி சாப்பிட்டால், நோய் விரைவில் குணமாகும். ஆனால், அந்த மணலில் எலும்புத்துகள்கள் இல்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.''

''நன்கு சுண்டக் காய்ச்சிய பாலை நீ உட்கொண்டால், அது உனக்கு இன்னும் அதிக நன்மையளிக்கும். பால்கோவாவுக்கு பாலை திரிப்பதற்கு உப்பைப் போடுவது மிக மிகத் தவறு. எலுமிச்சை சாறு ஊற்றிதான் அதைச் செய்யவேண்டும்.''

13–7–1945

**தன்வந்த்ரி முனிவர் தொடர்ந்து கூறியது :**

‘‘மூலிகைகளின் குணங்களை அறிந்துகொள்வதற்கு சில பொதுவான கோட்பாடுகளை உனக்குச் சொல்கிறேன். மஞ்சள் நிறப்பூக்களை உடையவை பித்தப்பை நோய்களுக்கு மருந்தாகப் பயன்படும். வெள்ளை நிறப்பூக்களை உடையவை கபம் சம்பந்தமான நோய்களுக்கு மருந்தாகும். கறுப்புநிறம் போல இருக்கும் கரும்பச்சை நிறமுடைய இலைகள் குடல் சம்பந்தமான நோய்களுக்கு மருந்தாகும். ஒட்டும் தன்மை உடைய உணவுப்பொருட்கள், ஜீரணமாவது சிரமம் என்பதால் அவை வயிற்றுக்கும், குடலுக்கும் நல்லதல்ல. ஏதாவது மருந்தின் மூலமாக, ஜீரணிக்கும் சக்தி அதிகரிக்கப்படுமானால், வயிற்றுக்குத் தீங்கு செய்யும் தன்மை நீங்கிவிடும். கடினமான கொட்டையைச் சுற்றி பருப்பு அல்லது கெட்டியான சதைப்பகுதி சூழ்ந்துள்ள பழம் வாயு உபத்திரவங்கள், மற்றும் குடலுக்கு மருந்தாகப் பயனாகும். சிவப்பு நிறப்பூக்களை உடைய மூலிகைகள் பெரும்பாலும் தீமை செய்பவை. ஆனால் இவையும் கூட சில குறிப்பிட்ட நோய்களுக்கு நிவாரணமளிக்கும் மருத்துவ குணம் உடையவையாகும். இவை பெரும்பாலும் விஷ மருந்தின் விளைவுகளை நீக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. மரத்துடன் ஒட்டிக் கொண்டிருக்கின்ற மரப்பட்டைகளைக் கொண்டு வெளிப்பூச்சுக்கு வேண்டிய, தடவும் பசை மருந்துகளைத் தயாரிக்கலாம். மரத்துடன் ஒட்டாமல் சிறிது இடைவெளியுடைய மரப்பட்டைகள், வேனல்கட்டிகள், முகப்பருக்கள், வேறுவகை கட்டிகள் இவற்றுக்கு மருந்தாகவும், அதிகப்படியான உஷ்ணத்தை நீக்கவும் உதவும்.’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘ஒரு மனிதனின் சாதாரண தரநிலை பூஜ்யமாக மாறுவதுதான். அதற்கு மேல், எல்லாம் வல்ல இறைசக்தி ஒரு விசேஷப் பணிக்காக கையசைக்கும்போது நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு வரும் சமயத்தில்தான் உயர்நிலை அடையப்படும். ஹிந்து மதத்தின் வழிகளும், பழக்கங்களும் பொதுவாக சில விஞ்ஞான பூர்வமான மற்றும் சுகாதார அடிப்படையிலான கோட்பாடுகளின் மீது அமைந்துள்ளன. அதற்கு மிகப்பெரிய மரியாதை அளிக்கப்பட்டது. அதில் அறிமுகப்படுத்தப்பட்ட அநேக விஷயங்கள் மதம் என்ற விதத்தில் தேவையில்லாதவை. ஆனால் அவை சுகாதார அடிப்படையில் அமைந்தவை. உதாரணமாக, கழிப்பறைக்குப் போகும் போது பூணூலை காதில் மாட்டிக்கொள்வது

குடலிறக்கம், மூலநோய் போன்ற வியாதிகளைத் தடுக்கும். ஆயினும் பூஜாரி இனத்தவர், அதை சமுதாய அந்தஸ்தில் தங்களை உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொள்வதற்காக, அதை தங்களுக்கு உரியதான ஒரு அடையாளமாக உருவாக்கிக் கொண்டார்கள். இப்படி ஒரு எளிமையான சுகாதார முன்னெச்சரிக்கை முறையை மனிதகுலத்தின் பெரும்பகுதியினருக்குக் கிடைக்காதபடி செய்துவிட்டார்கள்.''

### தன்வந்த்ரி முனிவர்:

''கற்பூரம், சந்தனமரத்தூள், மற்றும் டாகர் (Tagar) என்ற நறுமணப்பொருள் இவற்றை ஒன்றாகக் கலந்து, தூபமாகப்புகை போட்டால் (சாம்பிராணி போல புகையச் செய்தால்) அது குறிப்பிட்ட சில மன வியாதிகளுக்கு நிவாரணம் அளிக்கும். இதை மெழுகுவர்த்தி மாதிரி செய்து வைத்துக்கொள்ள விரும்பினால் இதை ஒரு குழைந்த வடிவத்துக்குக் கொண்டு வருவதற்காக, ஏதாவது ஒன்றுடன் கலந்து பசைபோலச் செய்யலாம். இதை ஏதாவது குச்சியில் பூசி ஒட்டி வைக்கலாம். இதில் சந்தனமரத்தூள் அதிக அளவில் இருக்கவேண்டும். இதற்குத் தேவையான நிறம் கொடுப்பதற்காக டாகர் என்ற வாசனைப்பொருளை போதுமான அளவு சேர்க்கவேண்டும். யாருக்காவது மனநிலை பாதிக்கப்பட்டு உளறும் நிலையில் இருந்தால் அகர் (Agar) என்ற இன்னொரு வாசனைப்பொருளை உபயோகித்து இதேபோல ஊதுபத்தியாக செய்து எரியவிடலாம். இதற்கு விளக்குமாற்றுக் குச்சியை உபயோகிக்கக் கூடாது. ஏனெனில் அது மூளையில் சூட்டை (உஷ்ணத்தை) உண்டாக்கும் குணம் உடையது. அது மூளைக்குக் கெடுதலானது. சன்னமான நீளமான மூங்கில்குச்சி இதற்கு சிறந்தது. இதனுடன் துளசி இலைகளின் சாறு அதிகமாகச் சேர்த்தால், அது எல்லாவகையான ஜுரத்தையும் குறைக்கும். இம்மாதிரி செய்முறைகளில் தேவைக்கேற்ப சரிசெய்தல், மாற்றுதல் தேவை. இது ஒரு மருத்துவரின் திறமையைப் பொறுத்தது.''

14-7-1945

### வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:

''நீ (ராம் சந்த்தர்) ஆன்மீக முன்னேற்றத்தின் உச்சத்தைத் தொட்டுவிட்டாய். இன்னும் மேல்நோக்கிப் போவதைத் தடுக்கவேண்டிய தேவை இருக்கிறது.''

### சுவாமி விவேகானந்தா:

''இப்போது உனக்கு அனைத்தும் அதிர்வுகள் வடிவத்தில் வருகின்றன.''

19–7–1945

### வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:

‘‘H4 - இன் சரீரமண்டலம் முழுமை அடையச் செய்யப்பட்டிருக்கிறது. மூன்று நாட்களில் அவர் என்னுடைய நோக்கங்களுக்கு ஏற்றபடி தயாரிக்கப்பட வேண்டும் என்று நான் உத்திரவிட்டேன். ஆயினும், காலம் அவருக்கு அதை அனுமதிக்கவில்லை. இதன் காரணமாக அவருக்கு என்ன கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டதோ, அது மீண்டும் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த உள்நிலைத்தன்மையை அடைவதற்கு முன்பு அவர் K…….என்ற இடத்துக்குப் போயிருந்தால், அதாவது சரீரமண்டலம் பூரணத்துவம் பெறுவதற்கு முன்பு அங்கு போயிருந்தால், இந்த உள்முக அனுபவத்தையும், மனநாட்டத்தையும் அங்கிருந்து கொண்டு வந்ததாக அவர் நினைத்திருக்க மாட்டார். அவரைவிட மிகவும் சிறந்த மனிதர்களுக்கும் கூட எதிராக அங்கே அனுபவம் இருக்கிறது. எனவே இது சரியாக இன்னும் சிறிது காலம் செல்லட்டும்.’’

### சுவாமி விவேகானந்தா:

‘‘உன்னுடைய திரையை ஒருபக்கமாக ஒதுக்கிவிடு. அதைக் கிழித்து எறிந்துவிட்டு, அடுத்துள்ள பணிக்காக உன்னைத் தயார்படுத்திக்கொள். மாற்றம் வந்தேயாக வேண்டும். நேற்று இரவு உன்னால் உண்டாக்கப்பட்ட பேரழிவு இருக்கிறது.’’

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் M6 - க்காக சொன்னது:

‘‘உன் வாழ்க்கையில் பெரும்பகுதியை நீ வீணாக்கிவிட்டாய். ஆயினும், ஒருவன் காலையில் எங்கோ வழிதவறிப் போய்விட்டான்; மாலையில் வீடு திரும்பிவிட்டான் என்றால், அவன் காணாமற் போய்விட்டதாகக் கருதமுடியாது. யாருடன் சிறிது காலம் நீ பழகியிருந்தாயோ, அந்த மரியாதைக்குரிய பெரியவர் (S4 - என்ற ஞானி) இன்னமும் முக்தியைக் கூட அடையவில்லை. இவ்வுலகில் தன்னைக் கறைபடியாமல், குற்றம் குறையில்லாமல் வைத்திருப்பது யாருக்கும் சிரமம் தான். தனது தீவிர உணர்வுமிக்க பற்றினை உயர்ந்த ஆன்மீகத்தின் திசையில் செலுத்தியிருப்பவன்தான் உண்மையான மனிதனாவான். நான் பூமியிலிருந்து மறைந்தபிறகு அதைத் தொடர்ந்து குழப்பமும் இருண்டநிலையும் உடைய ஒரு காலம் ஏற்பட்டிருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அப்போதும் என்னை விட்டு நீங்காத சிலர் அங்கு இருந்தார்கள். அவர்களின் தைரியத்துக்கு பாராட்டுக்கள். உன்னுடைய

மனநாட்டத்தை அந்தப்பக்கம் ஈடுபடுத்தி, உன் வேலையில் ஈடுபட்டிரு. கடந்துபோன காலம் திரும்ப வராது. பிரியமான ராம் சந்த்தருடன் ஒப்பிடும் போது அவரைவிட மேலான ஒரு உறவினரையோ அல்லது நண்பரையோ நீ கண்டறிய முடியாது. அவர் என்னிடம் அனைத்தையும் சரணாகதியாகக் கொடுத்துவிட்டார்; நானும் அவருக்குக் கொடுக்காமல் எதையும் தக்க வைத்துக் கொள்ளவில்லை. அவருடைய உயர்நிலை கடவுளுக்கு மட்டுமே சரியாகத் தெரியும். மரியாதைக்குரிய பெரியோர்கள், மாஸ்டர்கள், மகான்கள் அனைவரும் அவரையே தங்கள் பிரதிநிதியாக ஆக்கியிருக்கிறார்கள். அந்தப் பெரியோர்கள் அனைவரும் தங்கள் அருள் பார்வையையும், நம்பிக்கை மிக்க எதிர்பார்ப்புகளையும் அவர்மீது வைத்திருக்கிறார்கள். இப்படியொரு காலம் மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருக்க முடியாது. இந்தநிலை நீண்டகாலம் வளர்ந்து கொண்டிருக்கும் என்பதையும் எதிர்பார்க்க முடியாது. இதன் காரணமாக இப்போதே இந்த சந்தர்ப்பத்தின் நன்மையை உன் இதயம் நிறையப் பெற்றுக்கொள்.''

*(21-7-1945 இந்தநாளில் 'ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன், ஷாஜஹான்பூர் (உத்திரப்பிரதேசம்), இந்தியா, என்ற பெயரில், இந்தியாவின் உத்திரப்பிரதேச மாநிலத்தின், சங்க அமைப்புகள் பதிவுச் சட்டத்தின் கீழ், பரேலியில் உள்ள உதவி சார்பதிவாளர் அலுவலகத்தில் நமது மிஷன் பதிவு செய்யப்பட்டது.)*

23-7-1945

**சுவாமி விவேகானந்தா (இரவு 9.30 மணி):**

''இந்த மிஷனின் பணியாளர்களுக்கு என் இதயம் நிறைந்த நல்லாசிகளையும், கருணையையும் தெரிவிக்கவும். இம்மாதிரியான ஒரு சங்கம் நிரந்தரமாக நடக்கவேண்டும் என்பது நம்மை ஆளும் இறையருளின் சித்தம். இது வெறும் மானிட அறிவின் செயல் அல்ல. நான் இதற்கெனக் கொடுத்துள்ள செயல்பாட்டு திட்டம் (எனதல்ல) தெய்வீகமானது. சில குறிப்பிட்ட விஷயங்கள் பற்றி முரண்பாடுகள் ஏற்படலாம்; ஆனால் அது இதன் மீது எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. நான் கூடவே இருந்து எல்லா விஷயங்களிலும் வழிகாட்டுவேன். (சிறிது இடைவெளி) நான் இப்போது வேறு ஒரு விஷயத்துக்கு வருகிறேன். அது மனிதனின் மனோதத்துவம் சம்பந்தமாக சொல்கிறேன். தங்கள் சுயநலமான எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக பொதுமக்களால் சுற்றிலும் எல்லா இடங்களிலும் சிதறித் தெளிக்கப்பட்டுள்ள விஷத்தன்மையுடைய

விளைவுகளால், சுற்றுப்புறச் சூழ்நிலை முழுவதும், ஒழுங்கின்மையும், தகராறுகளும் வளர்ந்திருக்கின்றன. இந்த மாதிரி ஒரு சூழ்நிலையின் அலைகள் கடவுளின் படைப்புக்களின் மூளையை, அறிவை மாசுபடுத்துகின்றன. தங்கள் சொந்த சங்கல்பத்தின் ஆற்றலினால் அதை மேலும் அதிகரிக்கும் மக்கள் உலகில் இருக்கிறார்கள். இப்போது அதை முழுவதும் சுத்தமாக்க வேண்டியது நம் கடமையாகிறது. இந்த விஷயமாக பொதுமக்களிடம் கடுமையாக நடந்துகொண்டு, அவர்களுக்கு இதுபற்றிய ஒரு மறதி நிலையைக் கொடுப்பதற்காக, அவர்களை அப்படிக் கையாள உனக்கு நான் அனுமதியளிக்கிறேன். இந்த வேலை மிகவும் பெரியது. ஆனால் உன் ஆயுட்காலத்திலும், அதற்குப் பிறகும் அதை நீ செய்ய வேண்டியிருக்கும். அது சரியான நிலைக்குத் திரும்பவும் கொண்டுவருவதற்கு வேண்டிய பூரணமான சக்திகளை நீ பெற்றிருக்கிறாய். அவர்கள் இந்தக் சூழ்நிலையில் ஓட்டைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.''

''பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் உன்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். உன்னைப் பற்றி அவருக்கு மிக நல்ல கருத்து இருக்கிறது. ஆனால் நீ மேலும் மேலும் முன்னேறிப்போய்க் கொண்டிருக்கின்ற இந்தப் பாதையில், உன்னை சரியான விதத்தில் பின் தொடர்ந்து வருகிறவர்கள் உங்களிடையே அதிகமில்லை என்பதில் மிகவும் வருத்தம் அடைந்திருக்கிறார். அவர்கள் அப்படி பின்தொடராமல் இருப்பதற்கு, தங்கள் சொந்தக் கதைகளைச் சொல்வதிலேயே கவனமாக இருக்கிறார்கள். தீர்க்கமாக சிந்திக்காமல், எந்த ஒருவருக்கும், சுற்றுப்புறச் சூழ்நிலை சம்பந்தமான சக்திகளைக் கொடுக்க வேண்டாம் என்ற அறிவுரையை, உனக்கு வழிகாட்டுதலுக்காகச் சொல்கிறேன். சூழ்நிலையுடன் இணைப்பு ஒருமுறை ஏற்படுத்தப்பட்டுவிட்டால், எல்லையற்ற சக்திகளை உடைய உன்னைத் தவிர வேறு யாரும் அதை சுலபமாக உடைக்க முடியாது. இந்த சங்கிலித் தொடரை தன் உத்தரவின் பேரில் இணைக்கவும், பிரிக்கவும் சக்தி உடைய உன்னைப்போல் வேறுயாரும் வராமலே போய் விடலாம். அது யாருக்குத் தெரியும். இந்த விஷயங்களில் நீ எப்போதுமே விழிப்பாக இருக்கவேண்டும். இயற்கையால் தேவைப்படாத, கேட்கப்படாத ஒரு விஷயத்தைச் செய்வதில் நீ விடாமல் முயற்சித்தால், அது இயற்கையை மதியாது நடக்கும் தன்மை என்று விளக்கத்தின் கீழ் வரும். மலிவாக சம்பாதித்த ஒன்று, மலிவாக இழக்கப்படும். சாதாரண வழக்கப்படி நீ

பிராணாஹூதி அளிப்பதை நான் இங்கே குறிப்பிடவில்லை. நீ அளிக்கும் விசேஷ விஷயங்கள்பற்றித்தான் சொல்கிறேன்.''

**வணக்கத்திற்குரிய சுவாமிஜி தொடர்ந்து கூறிய விளக்கம்:**

''உன் கருத்தை நாங்கள் அலட்சியம் செய்வதில்லை, அதனால் கஷ்டம் தோன்றுகிறது. உன் கருத்துக்களைப் பற்றிக்கொண்டிருப்பதில் நீ ஒருபோதும் தவறு செய்யவில்லை என்பதை உறுதியாகச் சொல்கிறேன். இவை எங்களின் இதயங்களோடு தொடர்புடையவை; எங்களையறியாமலே எங்களிடமிருந்து வரும் வழிகாட்டுதலை முழுமையாகப் பெற்றவை. இவையெல்லாம் உனக்கான ஆலோசனைகள் மட்டுமல்ல. உனக்குப் பிறகு வரும் தலைமுறைகளுக்கும் சேர்த்துத்தான்.''

25-7-1945

**சுவாமி விவேகானந்தா (இரவு 9.25 மணி) :**

''நீ உச்ச நிலையில் இருக்கிறாய். R8 - தென்னிந்தியாவின் பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் என் கட்டுப்பாட்டின் கீழ் நீடித்திருப்பார். அவருடைய இணைப்பும் முற்றிலும் என்னுடனேயே இருக்கும். தேவையான சமயத்தில் அவர் என்னை மட்டுமே நினைக்க வேண்டும். அவரைப் பயிற்றுவிக்கும் முறை, என்னிடமிருந்து தொடரும். இதற்கிடையே, அவர் முன் தயாரிப்பு இல்லாமல், பயனளிகும் சிறப்பான முறையில் சொற்பொழிவு செய்ய முயற்சிக்க வேண்டும். என் வழிகாட்டுதலுக்கு மதிப்பளித்து R8 - பற்றி நீ நினைத்தால், அது அதே விஷயத்துக்கு வரும். R8 - நமது பிரபுவை (வணக்கத்திற்குரிய லாலாஜி அவர்களை) நினைத்தாலும், அதுவும் அதே நோக்கத்தை நிறைவேற்றும். (சிறிது இடைவெளி) நீ எனக்குப் பிரதிநிதியாக இருக்கிறாய். நமது மார்க்கம் சகஜ மார்க்கம். R8 - அதே பாதையைப் பின்பற்றுவார். அதே முறையின்படி அவர் பயிற்சியளிப்பார். தென்னிந்தியாவின் பணிக்கான நேரம் வரும்போது, அதற்கான ஆலோசனைகளை நான் தருவேன். R8 – நமது பிரபுவை நினைக்க மாட்டார் என்று நான் சொல்லவில்லை. சில குறிப்பிட்ட தயாரிப்புகளுக்குப் பிறகு அவருக்கு வருகின்ற வேலையில் அவர் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். அவருக்கு நான் நேரடியாக சக்தி கொடுப்பேன். நமது பிரபுவின் பெயரால் உருவாக்கப்பட்டுள்ள, ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்த மிஷனை அவர் முறைப்படுத்த வேண்டும். இது இவ்விதமாகத் தொடரும்.''

26-7-1945

**சுவாமி விவேகானந்தா:**

''மிக விரைவாக R8 - ஐ பணிக்காக தயார் செய்து கொண்டிருக்கிறேன். அவரை புத்தகப் புழுவாக - புத்தகங்களை படித்துக் கொண்டே இருப்பவராக – தொடரும்படியும், அதில் மகிழ்ச்சியோடு இருக்குமாறும் அவரிடம் சொல்லவும்.''

27-7-1945

**தன்வந்த்ரி முனிவர்:**

''ஒரு சேர் எடையளவு (250 கிராம்) கூப்காலா (Khoob Kala) மூலிகையை மண்பானையில் வைத்து மூடி, நிழலான இடத்தில் மண்ணுக்குள் நாற்பது நாட்கள் புதைத்து வைத்திருக்க வேண்டும். பிறகு அதை குக்ராவுந்தா (Kukraundha) என்ற இந்திய மூலிகையின் சாற்றுடன் கலந்து பசைபோலக் குழைத்து இரண்டு கிராம் எடையுள்ள சிறு குளிகைகளாகச் செய்து, ஒருநாளைக்கு ஒன்று என்று நாற்பது நாட்களுக்கு மன நோயாளிக்குத் தரவேண்டும். அது உடலின் சூட்டைக் கிளப்பினால், பாலுடன் சேர்த்துக் கொடுக்க வேண்டும். தீவிர மனநோயாளிக்கு இளம் வெள்ளரிப்பிஞ்சு ஒருபோதும் தரக்கூடாது. அவர் மிளகாய், எண்ணை, ஊறுகாய் இவற்றையும் தவிர்க்க வேண்டும்.''

28-7-1945

**சுவாமி விவேகானந்தா:**

''நமது மிஷன் - சங்க அமைப்பின் விதிமுறைகளை நீயும் பின்பற்ற வேண்டும்; மற்றவர்கள் பின்பற்றுவதை கட்டாயமாக்கவும் வேண்டும். புதிதாக வருகிறவர்கள், விண்ணப்பப் படிவத்தை கட்டாயம் பூர்த்தி செய்து தரவேண்டும்.''

29-7-1945

**சுவாமி விவேகானந்தா:**

''இந்த மிஷனின் தலைவர் என்ற உன் பதவி வெறும் பெயரளவில் தான் உள்ளது. தற்போது உன் உருவத்தில் நான் வேலை செய்து கொண்டிருக்கிறேன். உன்னைத் தொடர்ந்துவரும் ஒவ்வொரு தலைவர் விஷயத்திலும் இதே நடைமுறைதான் தொடரும். இந்தப் பதவி மிக முக்கியமானது. எல்லோருக்கும் கிடைக்கக்கூடியது அல்ல. நான் ஒரு விஷயத்தை உனக்கு உறுதியாகச் சொல்வேன்; உன்குருவும், இதையே

வேறு எங்கோ சொல்லியிருக்கிறார். அதாவது ‘உன்னுடைய தவறுகள் அனைத்தும் கணக்கில் வைக்கப்படும்; அவை சுலபத்தில் மன்னிப்பு பெற இயலாது.’ ஒருவர் எத்தனை உயர்ந்த பதவியில் இருக்கிறாரோ, அத்தனை சுமைகள் அவருக்கு இருக்கும். எனவே விழிப்புடன் இருந்து, உன் கடமையை அமைதியாகச் செய்வதில் ஜாக்கிரதையாக இரு. உங்கள் குழுவினருக்குள் கலந்து ஆலோசனை செய்து கொள்ளலாம். அதில் தவறில்லை. ஆனால் என்னிடம் அது பற்றிக் கலந்தாலோசித்து, அதை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் நீ அவற்றை அனுசரிக்கக்கூடாது. குறிப்பாக, மிஷன் சம்பந்தமான விஷயங்களில் நிச்சயமாக அப்படிச் செய்ய வேண்டும். மேலும், பொதுவாக மற்ற விஷயங்களிலும் இப்படி ஆலோசனை கேட்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. மிஷன் வேலை சம்பந்தப்பட்ட காரியங்களில் நானே அதற்கு அதிகாரியாக இருக்கிறேன். மற்றவை இந்த அதிகாரத்தை எனக்கு அளித்த உன் மாஸ்டரைச் சார்ந்தவையாக உள்ளன. இங்கேயும் சரி, மேல் உலகிலும் சரி, அனைத்து விஷயங்களும் வணக்கத்திற்குரிய உன் மாஸ்டரின் கட்டுப்பாட்டில்தான் உள்ளன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், தன் வேலையில் சில பகுதிகளை பல்வேறு முனிவர்களுக்கு அவர் பிரித்துக்கொடுத்துவிட்டு, உனக்காக தன்னை விடுபட்டவராக வைத்திருக்கிறார்.’’

## 4-8-1945

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

‘‘பிரியமான ராம் சந்த்தர் சற்றுமுன் செய்த பணி பெரும் ஓநாய்களின் வேட்டைக் கொள்கை சார்ந்ததாக இருக்கிறது. அதாவது, நமது சரீர அமைப்பில் இருக்கும் ஆன்மீக அணுக்கூறுகள், ஆன்மீகத்தின் வேக விசையை தடை செய்கின்ற அந்நியப் பொருட்களை கடித்து விழுங்கிவிடும் அளவுக்கு கூர்மையாக்கப்படுகின்றன என்று சொல்லலாம். இது ஒரு மிகச் சிறந்த வழிமுறை. ஆன்மீக சம்பந்தமான விஷயத்தில் தனிப்பட்ட விசேஷமுடையது. ஒவ்வொரு (ஆன்மீகப்) புள்ளியிலும் இதை தனித்தனியாக பயனளிக்குமாறு செய்ய முடியும். இந்த செயல்திறன் மிக்க கருவியினால் ஒவ்வொரு சக்கரமும் சரியான நிலைக்குக் கொண்டு வரச் செய்ய முடியும். இது முற்றிலும் தானாகவே நடைபெறும் காரியம் ஆகும். குறைபாடுகளை தன்னிடம் ஈர்த்துக் கொள்கிற திறமையை அல்லது தடை செய்யும் அம்சங்களை விழுங்கிவிடுகின்ற ஆற்றலை அவை அடையப் பெறுவதற்காக தனது சங்கல்ப சக்தியை அல்லது ஆன்மீக சக்தியைப் பயன்படுத்தவதன் மூலமாக, ஒருவனுடைய எண்ணத்தின் அணுக்கூறுகளை

அங்கு அறிமுகப்படுத்துவது இந்த வழிமுறையில் அடங்கியுள்ளது. இந்தவிதமாக சரீர அமைப்புக்குள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள எண்ணத்தின் அணுக்கூறுகள் அந்த அளவுக்கு திறமை உடையவையாக இருக்க வேண்டும். சீரழிக்கும் நிலைகள் அல்லது தடை செய்யும் மூலகங்கள் ஆகியவற்றை ஈர்த்துக் கொள்வதன் மூலமாக அவைகளே கெட்டுப்போய்விடாதபடி காப்பதற்காக அதிக சக்திவாய்ந்த (வீரியம் மிகுந்த) அணுக்களை அறிமுகப்படுத்துவது மேலும் சிறந்தது. இந்த அணுக்கூறுகளை அவ்வப்போது வலுவூட்டுவது அல்லது ஆரம்பத்திலேயே, அவற்றை அவ்வப்போது வலிமையாக்கும் தேவை ஏற்படாத அளவுக்கு நன்கு கூர்மையாக்கி விடுவது நல்லது. எனினும் அதை அவ்வப்போது வலிமையூட்டும் வழிமுறையே மேலானது என்று நான் கருதுகிறேன்.''

**சுவாமி விவேகானந்தா:**

''நீ விடுதலை பெற்ற சுதந்திர மனமுடையவனாக இருப்பதால், வேலை செய்வதற்கு உனக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கவேண்டும். உன்னை இந்த வேலையிலிருந்து தனிமைப்படுத்தி வைக்கின்ற அனைத்து விஷயங்களிலிருந்தும் உன்னை நீ விடுவித்துக்கொள்ள வேண்டியதுதான் தேவைப்படுகிறது. நான் மீண்டும் சொல்கிறேன். இந்தக் காலம் ஒருபோதும் திரும்பி வராது. எனவே, இயற்கையின் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். இது உனக்கான விசேஷமான வேலையாகும். நீ ஏதாவது மலை வாசஸ்தலத்துக்குச் சென்று, அங்கு குறிப்பிட்ட காலம் தங்கியிருக்க வேண்டும். அங்கே உனது பேனா மற்றும் எழுதுவதற்கான அட்டை மற்றும் காகிதங்களுடன் நீ தனியாக இருப்பாய். அங்கே உடல் நலத்திலும் கூட நீ முன்னேற்றம் அடைவாய்.''

6-8-1945

**சுவாமி விவேகானந்தா:**

''உண்மையாகவே சொல்கிறேன்; ஆன்மீகம் தவிர வேறு எந்த வேலைக்கும் உனக்கு நேரம் இல்லை. உன்னுடைய பொறுப்பு இந்த உலகுடன் மட்டும் அடங்கிவிடவில்லை என்பது ஒருக்கால் உனக்குத் தெரியாமல் இருக்கலாம். வாழ்க்கையில் என் அனுபவத்தை உனக்குச் சொல்கிறேன். எனது அடுத்த வேளை உணவுக்காக நான் ஒருபோதும் கவலை கொண்டதில்லை. ஆனால் நான் ஒருபோதும் பசியோடு (உணவின்றி) இருந்ததில்லை என்பதை உனக்கு உறுதியாகச் சொல்கிறேன். உனக்கு மனைவி

இருக்கிறாள், பிள்ளைகள் இருக்கிறார்கள். மற்றவர்களும், உன்னையே முழுவதும் நம்பிச் சார்ந்து இருக்கிறார்கள். ஆனால் நீ உன்னை உனது மாஸ்டரின் பணியிலேயே முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு இருக்கையில், அவர்களை நாங்கள் பாதுகாத்து, அக்கறை காட்டாமல் இருப்போம் என்று நீ நினைக்கிறாயா? உன் குழந்தைகள் உன்னை மிகச்சிறந்த மனிதர் என்று உணர்ந்திருக்கிறார்களே, அது உனக்கு எவ்வளவு அதிர்ஷ்டமான விஷயம்! இது உன் குருவினால் அளிக்கப்பட்ட விசேஷ சலுகை. உன் குடும்பத்துக்கு கல்வியறிவு ஒருபோதும் இல்லாமல் போகாது. ஒரு அசாதாரண மனிதராக நீ உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாய். எனவே, ஒரு விசேஷமான பொறுப்பு உனக்கு இருக்கிறது. உனது பணிக்காக நாங்கள் எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். உன்னால் மட்டுமே உண்டாக்கப்படப் போகின்ற ஒரு பலமான மாற்றத்துக்காக உலகம் காத்திருக்கிறது. உன்னுடைய வேலையை இயற்கையின் சக்திகளிடையே நீ பிரித்துக் கொடுக்க முடியும்.''

15-8-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''பயிற்சி செய்யத் துவங்கும் முதல் நாளிலிருந்தே மாயையின் நிகழ்விலிருந்து விடுதலை பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஏதாவது வழிமுறையைக் கண்டறிவதில் இன்று என் பிரியமான ராம் சந்த்தர் வெகு ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தார். தான் அடைந்திருக்கும் உச்சநிலையின் அளவுக்கு அவர் ஏராளமான நீச்சல் (பயிற்சி) செய்திருந்தார். கடைசியில் இறையருள் அவருக்கு உதவி செய்ததால், இதுவரை தீர்வு காணப்படாமலிருந்த பிரச்னைக்கு இன்று தீர்வு கிடைத்தது. இந்தக் கண்டுபிடிப்பு அவருடைய பெயருடன் இணைந்து விளங்கும். மூத்தோராகிய மகரிஷிகள் எத்தனையோ வெவ்வேறு புள்ளிகளில் தியானத்தையும் மனம் ஒருமுகப்படுத்தலையும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்; ஆனால், யாராலுமே இந்த இலக்கை எட்ட இயலவில்லை. முன்னேற்றமடைந்த முனிவர்களின் தரிசனத்திற்கு சிந்திக்கவும் தகுதியற்றது என்று மதிக்கப்படாத, பொதுவாக மக்களால் புறக்கணிக்கப்பட்டது எதுவோ, அதுவே தன்னுள் எல்லாவற்றையும் கொண்டுள்ளது. அவர் (ராம் சந்த்தர்) கண்டறிந்த வழிமுறை இதுதான்: வலது பாதத்தின் பெருவிரலை பார்வையில் நிலைக்கச் செய்து, அதில் ஏதாவது ஒரு புள்ளியை மனதில் நிறுத்தி தியானம் செய்யவேண்டும்.''

‘‘கடவுள் அனைத்தும் அறிந்தவர். அவர் எங்கெங்கும் பரவியிருக்கிறார். இந்தநிலை எந்நாளும் அப்படியே இருக்கவேண்டும். பிரபஞ்சம் முழுவதும் அழிக்கப்படும் சமயத்திலும் கூட, கடவுள் இப்போது இருப்பது போலவே, அனைத்தையும் சுற்றி வளைத்திருப்பார். பிரபஞ்ச சிருஷ்டிக்கான நேரம் வந்தபோது, அங்கு கொதித்தல் ஆரம்பித்தது. மற்றும் உருவங்களும் அதில் பலவகைகளும் தோற்றம் பெற்றன. கடவுள் மனிதனிடத்தில் பரவியிருக்கின்ற முறை சிந்திப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் சிரமமான ஒரு புதுமையான வழியில் நிகழ்ந்தது. அதைப் புரிந்து கொள்வதற்காக, மனித மூளைதான் பரம்பொருளின் (Asal Zaat) ஜீவத்தன்மை என்று கருதலாம். அங்கிருந்துதான் உடலமைப்பு முழுவதற்கும் ஒளி அல்லது சக்தி திரட்டி அனுப்பப்படுகிறது. அதன் கடைக்கோடி அல்லது முடிவு உண்மையான வழியில் சிந்திக்கும் திறனின் பிடிக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கிறது. ஏனென்றால் அது எல்லையற்றதாக இருக்கிறது. புரிந்து கொளவ்தற்காகவும் மனிதனிடத்தில் அது கோயில் கொண்டுள்ள புதுமையான வழியை மதிப்பதற்காகவே அதனுடைய கடைசிப்பகுதி கால்பாதத்தின் கடைக்கோடியில் அமைந்திருப்பதாக, அதற்கு இடமளிக்க வேண்டியிருக்கும். இதில் ரகசியம் என்னவென்றால், இந்த கால் பெருவிரலும், மூளையின் உச்சநிலைப் புள்ளியும் ஒன்றேயாக, எந்தக் கலப்படத்தக்கும், சீர்கேட்டுக்கும் சாத்தியமின்றி அப்பாற்பட்டதாக இருக்கிறது. இதன் காரணமாக இந்த வலதுபாதத்தின் பெருவிரல் மீது ஒருமுனைப்பட்ட கவனம் கொடுப்பது, ஒருவனது ஆரம்ப ஸ்தானத்தை எண்ணி ஒருமுனைப்பட்ட கவனம் கொடுப்பதாகவே பொருள்படுகின்றது. ஆரம்பத்தில் உருவான பிரச்னையை நீக்குவதற்கு, விரும்பிய பலனை இந்தப் பயிற்சி கொடுக்க முடியும். தங்கள் பாதங்களைப் பற்றி சடங்கு ரீதியாக தங்களை வேறுபடுத்திக் கொண்டிருக்கும் மக்கள் இந்தப் பயிற்சியை தவறாமல் செய்யவேண்டும் என்று நான் அறிவுறுத்துகிறேன். இதைப் பற்றி சிந்தித்து புரிந்து கொள்வதால், அல்லது விரும்பிய பலனை அடைந்திருப்பதால் இது மக்களை ஆச்சரியமடையச் செய்யும் ஒரு விஷயமாகும். ஆனால், பொதுவாக சமுதாயம் இதை அறிந்து பாராட்டுவதில்லை. ஏனெனில் இது அவர்களின் புரிந்துகொள்ளும் தன்மைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. இது அவர்கள் புத்தகங்களில் படித்து அறிந்த விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு எட்டாத ஒன்றாக இருக்கிறது. அன்புள்ள M1, இந்த விசேஷப் பொருளுக்கு விலைமதிப்பு சொல்ல முடியாது. உண்மையைச் சொல்வதானால், ராம் சந்த்தர்

சத்தியத்தையே வெளிப்படுத்தியிருக்கிறார். M2 - இடம் இந்த வழிமுறையில் ஒருமுனைப்பட்ட கவனத்துடன் பயிற்சி செய்து, தனது உள்நிலை பற்றி எழுதி வைக்கச் சொல்ல வேண்டும். இதற்கு முன்பு விதிக்கப்பட்டிருந்த தடையை மூன்று மாதங்களுக்கு நான் இதற்காக நீக்கியிருக்கிறேன். இப்போது கூறப்பட்டதன் ஒரு பிரதியை M2 - க்கு அனுப்ப வேண்டும். யாராவது இந்தப் பயிற்சியைச் செய்ய ஆரம்பிக்கும் முன் தனது வழிகாட்டியை கலந்து ஆலோசிக்க வேண்டும். ஏனெனில் அவர் இதையெல்லாம் சிறப்பாகப் புரிந்து கொள்வார்.''

17-8-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''நான் முக்கியத்துவம் அளித்துச் சொல்ல விரும்புவது என்னவெனில், நமது மிஷன் இப்போது ஒரு பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனமாக இருக்கிறது. இப்போது இது தன் வேலையைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும். வேலை செய்வதற்காக மனிதர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர்கள் இளம் வயதினராக, நன்றாக வேலைசெய்யும் திறமை உடையவர்களாக இருக்க வேண்டும். எனினும் ஒரு ஆன்மீக சங்கத்தில் வயது பற்றிய சிந்தனை, கேள்வி இருக்கக்கூடாது. வேலையைச் செய்யும் திறன் உடையவர் யாராயினும் அவருக்கு, அதிக தீவிரமும், வேகமும் இல்லாதபடி அந்த வேலை செய்ய அனுமதிக்க வேண்டும். உங்களுக்குள்ளாகவே வேலைகளை பிரித்துக் கொள்ளுங்கள். நீங்கள் அனைவரும் இந்த மார்க்கத்தின் கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு காரியத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டும். யாருடைய வேலையிலாவது கொஞ்சம் தொய்வு ஏற்படுவதை நீங்கள் கவனித்தால், அவருக்கு உதவியாக அல்லது அவர் சார்பாக நீங்களே அந்த வேலையைச் செய்யுங்கள். தன் கைகளில் அதிக நேரம் இருக்கின்ற ஒரு மனிதர் அதிகமாக வேலை செய்ய வேண்டும். ஒருவர் மீது ஒருவர் அன்பைத் தொடர வேண்டும். இதில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற கேள்வியே இல்லை. இதை என் வாழ்க்கை உதாரணத்திலிருந்து தெரிந்துகொள்ளுங்கள். என் சங்கத்தில் வாதங்களின் போட்டி நடப்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்; இந்த வேலைகள் அனைத்தும் என் வேலைகள். இவையனைத்தையும் என் வேலையாகவே கருதிச் செய்யுங்கள். ஏதாவது விஷயத்தில் விவாதம் ஏற்படுமானால் என்னிடம் கலந்து ஆலோசிக்கவேண்டும். அந்த விஷயத்தில் என் உத்தரவே முடிவாக இருக்கும்''

**சுவாமி விவேகானந்தா:**

‘‘இந்த விஷயத்தில் நான் இன்னும் அதிகமான கண்டிப்புடன் இருப்பேன். இந்த மிஷன் அமைதியாகவும் இயல்பாகவும் நடக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இங்கே போராட்ட உணர்வு தேவையே இல்லை. உங்களைப் போர்முனைக்குச் செல்வதற்காக நாங்கள் தயார் செய்யவில்லை. ராம் சந்த்தரின் நிலைமை எனக்குத் தெரியும். அவர் தன் சுபாவத்தில் மிகவும் சலுகை காட்டும் தன்மையுடன் இருக்கிறார். இதை அவர் தன் குருவிடமிருந்து வாரிசுரிமையாகப் பெற்றிருக்கிறார். நமது இந்த சங்கம் அமைதித்தன்மை என்ற வலுவான அடிப்படையில் நிற்க முடியும். அன்பு அனைத்தையும் சுலபமாக்குகிறது. நீங்கள் செய்யவேண்டிய முதல் விஷயம் உங்களுடைய அமைதியான மற்றும் சுலபமான பழக்கங்கள் மற்றும் நடைமுறைப் பண்புகளைக் கொண்டு உங்கள் சகோதர மனிதர்களைக் கவர்வது தான். இந்தக் கவரும் தன்மையை நீங்கள் அடைந்திருக்கும் போது அன்பின் அடிப்படையில் அவர்களுக்கு விஷயங்களைக் கற்றுக்கொடுங்கள். அவர்கள் பின்பற்றி நடப்பதற்கு ஏற்ற விதிமுறைகளைக் கொடுங்கள். மனிதர்களுக்கு சேவை செய்வதையும், சகோதர உணர்வை வளர்த்துக் கொள்ளவும் அவர்களுக்குக் கற்றுத்தாருங்கள். ஒரு சகோதரனைப் போல அவர்களுக்கு உங்கள் கடமையைச் செய்யுங்கள். அவர்களை உங்கள் சொந்தமாகவே கருதுங்கள். அவர்களிடத்தில் உண்மை நிறைந்த பக்தியுணர்வு மற்றும் நேர்மையை வளரச் செய்யுங்கள். இந்த மிஷனின் நலனைக் கருதுவதற்காக மிகச்சிறந்த வழி மற்றவர்கள் எப்படி இருக்க வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்களோ அப்படியே உங்களை உருவாக்கிக் கொள்வது தான். இந்த மிஷன் சம்பந்தமான அம்சம் எதுவாயினும், உங்கள் மரியாதைக்குரிய உங்கள் குருவையே அதற்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள். அவர் தனக்காக என்ன செய்து கொண்டாரோ அதைத் தவிர வேறு எதையும் மற்றவர்களுக்குச் செய்ய ஒருபோதும் முயற்சித்ததில்லை. பொதுவாக மக்களிடம் ஒரு பெரிய தவறு இருப்பது காணப்படுகிறது. அதாவது என்ன செய்ய முடியவில்லையோ அதை மற்றவர்கள் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். இம்மாதிரி மனிதர்கள் எப்போதுமே தங்கள் வாழ்க்கையில் தோல்வியடைகிறார்கள்.’’

‘‘நல்ல உள்ளமும், அமைதியான குணம் மற்றும் நல்ல பழக்கங்கள் உடைய மனிதர்களை நமது மிஷனின் பல்வேறு வேலைகளில் நியமிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். எந்த ஒரு மனிதரையும் அன்பு மற்றும் இரக்க உணர்வுடன் அவர் இருக்கிறாரா; மற்றவர்கள் எதைச் செய்ய

வேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ அதை முதலில் அவர் செய்யும் பழக்கமுடையவராக இருக்கிறரா என்று, அவரை நீ எடைபோட்டு (மதிப்பீடு செய்து) பார்க்க வேண்டும் என்பது என் அறிவுரையாகும். என்ன செய்ய வேண்டுமென்று நீ உன் இதயத்தில் எண்ணியிருக்கிறாயோ, அதைச் செய்யும்படி உனக்கு பலமுறை எச்சரிக்கை செய்திருக்கிறேன். இந்த உலகமே உனக்கு எதிராக நின்றாலும் அதைப் பொருட்படுத்தாதே. உன் சகோதர சகோதரிகள் உன்னைக் கைவிட்டாலும் கவலைப்படாதே. வேலை செய்வது அதை செய்து முடிக்கத்தான். எனவே, நீ என்ன செய்கிறாயோ அதில் உறுதியாக இரு. மூத்தவர்களாகிய நாங்கள் பலர் இருக்கும்போது, உனக்கு வழிகாட்டவும், அறிவுரையளிக்கவும் நாங்கள் தயாராக இருக்கும்போது நீ எதற்குமே பயப்படத் தேவையில்லை. விரைவிலோ, தாமதமாகவோ வெற்றி கிடைக்கும் என்பதில் உறுதியாக இரு. சூரியனே வெடித்துச் சிதறினாலும், ஆகாயம் உன் மீது விழுந்தாலும், நீ என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய். (சிறிது இடைவெளி) வேலை செய்வது பற்றிய உன் குருவின் கட்டளைகள் இவை; ஆனால் நீ அதைச் செய்யாமலிருக்கிறாய். உன் பங்கில் இப்போது ஏன் இந்தத் தயக்க நிலை இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். இச்சமயத்தில் இந்த வேலையை நீ செய்வதை உன் குரு விரும்பவில்லை. அவர் வேறு ஏதோ ஒரு வேலைக்காக உன்னைத் தயார் செய்து, அதற்காக வடிவமைத்துக் கொண்டிருக்கிறார்.''

''யாருக்குத் தகுதி இருக்கிறதோ அவர்களையே வெற்றி சென்றடைகிறது. தத்துவ ஞானிகளுக்குப் பின் தத்துவ ஞானிகளாக இந்த உலகிற்கு வந்து போயிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் கூட தாக்கப்படாமல், தொல்லைக்குள்ளாகாமல், காயம்படாமல் சென்றதில்லை. பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை நினைவுபடுத்திப் பார். அவரது வாழ்க்கை முழுவதும் ஒவ்வொரு நிலையிலும் அவர் தொல்லைக்கு உள்ளானார். நீ இந்த உலகிற்கு எதற்காக வந்தாய்? என் (சுவாமி விவேகானந்தாவின்) குறிப்புப்புத்தகங்கள் இதற்கு பதிலளிக்கின்றன. உன் பிரபுவை உறுதியாகப் பின்பற்று. நீ எதையாவது செய்யத் தவறிவிட்டால் அதைச் செய்ய ஆரம்பிக்கும்போது, அது பற்றி மீண்டும் கலந்து ஆலோசிக்க வேண்டும்.''

19-8-1945

## ஜன்மாஷ்டமி பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் பிறந்தநாள்.

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இப்போது முதல் ஒவ்வொரு ஆண்டும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் பிறந்தநாளில் முதல் நாளில், உபவாசம் (விரதம்) இருந்து கொண்டாட வேண்டும் என்று அனைவருக்கும் கடிதங்கள் அனுப்ப வேண்டும். பகல் நேரத்தில் ஒரு தடைவ மட்டும் எளிய உணவு சாப்பிடலாம். அன்றைய தினம் முழுவதும், தன் எண்ணங்களை இறைவனின் நினைவிலும், நல்ல விஷயங்களை நினைப்பதிலும் செலவிட முயற்சி செய்ய வேண்டும்.''

*(பொதுவாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் பிறந்தநாள், இந்தியாவில் ஹிந்துக்களில் இரண்டு வேறுபட்ட பிரிவைச் சேர்ந்த மனிதர்களால் இரண்டு நாட்கள் கொண்டாடப்படுகிறது. சாஸ்திரங்களை சம்பிரதாய முறையைப் பின்பற்றுகின்ற இல்லறத்தார், (சமார்த்தர்கள் எனப்படுவோர்) அதை ஒருநாள் (ஆவணி மாதம் அஷ்டமி நாளில்) கொண்டாடுகிறார்கள். ஆசாரமான வைணவர்கள் அதை ஸ்ரீ ஜெயந்தி என்ற பெயரில் வேறு நாளில் – அல்லது அடுத்த நாளில் கொண்டாடுகிறார்கள். சில சமயங்களில் அது ஒரு மாத இடைவெளியாக இருக்கும்.)*

20-8-1945

**சுவாமி விவேகானந்தா:**

''கிருஷ்ண ஜன்மாஷ்டமி நாளன்று மாலையில் ஒரே ஒரு தடவை மட்டும் பால் உட்கொண்டு நீ உபவாசம் இருக்கவேண்டும். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அன்றைய தினம் விரதம் அனுசரிக்கின்ற மனிதர்களின் மீது கவனம் செலுத்துவது உன் வேலையாக இருக்கும். இந்த வேலையை மொத்தம் இரண்டு நாட்கள் தொடர்ந்து செய்ய வேண்டியிருக்கும். இந்த நாட்களில் கட்டாயம் மௌனம் கடைபிடிக்க வேண்டும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரையும், கடந்த காலத்தின் வணக்கத்திற்குரிய முனிவர்களையும் பற்றிய விஷயங்களைத் தவிர, பயனற்ற விஷயங்களைப் பேசுவதை அனுமதிக்கக்கூடாது. ஆயினும், நீ இதில் கவனம் செலுத்துவதில் மிகையாகப் போகக் கூடாது. அந்த நாளில் நீ முழுமையான சக்தியோடு இருப்பாய்; எனவே, உன் சொந்தக் குழந்தைகளாயினும், மற்றவர்களின் குழந்தைகளாயினும், அவர்களுடன் பழகுவதைத் தவிர்க்க வேண்டும். குழு தியானம் (கூட்டு தியானம்) நடைபெறும் அந்த மாலை நேரம் வரை நீ தனிமையில் இருக்கவேண்டும் என்றே நான் கூறுவேன்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''சுவாமிஜி கூறியிருக்கும் அனைத்துக் குறிப்புக்களும் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும். வம்பு பேசுவதில் யாரும் ஈடுபடக்கூடாது. குழந்தைகள் சம்பந்தமாக உரிய கவனம் அளிக்கப்படவேண்டும்.''

**23-8-1945**

**சுவாமி விவேகானந்தா:**

''இந்த மிஷனின் வேலையை நடத்திச் செல்வதற்கு ஒரு வலுவான அடிப்படை சம்பந்தமாக நீ கற்பனையில் இருந்து கொண்டிருக்கிறாய். ஆனால் அதைப் பற்றி நாங்கள் சொல்லப்போவது, அதை எழுதி வைப்பதோடு நின்றுவிடக்கூடாது என்று நான் நினைக்கிறேன். (சிறிது இடைவெளி) உன் சங்கத்தில் உயர்ந்த தரத்தில் உள்ள மனிதர்கள், மற்றவர்கள் பின்பற்றுவதற்காக முதலில் தாங்கள் உதாரணமாக இருந்து இவற்றைப் பின்பற்றிக் காண்பிக்கவேண்டும்.''

**ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன் உறுப்பினர்களாகிய சத்சங்க சகோதர சகோதரிகளுக்கு பொதுவான கடமைகள்:**

1) விடியற்காலையில் விழித்து எழுந்து, இயற்கை விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

2) பழக்கங்களில் எளிமை அல்லது எளிமையான பழக்கங்களை பின்பற்றுதல், உணவு, உறக்கம், வேலை ஆகியவற்றில் ஒழுங்குமுறையை அனுசரித்தல்.

3) கருணையும், பக்தியும் உடையவராக தாராள மனத்துடன் இருத்தல்.

4) பேசும் வார்த்தைகள், நினைக்கும் எண்ணங்கள், செய்யும் செயல்கள் இவற்றில் உண்மையுடன் இருத்தல்.

5) எல்லோர் மீதும் இரக்கம் மற்றும் அனுதாபத்துடன் இருத்தல், தன் குழந்தைகள் மீதும் அவ்விதமே இருத்தல்.

6) ஒருவரின் சுற்றுப்புறத்தில் வாழும் சக மனிதர்களுக்கு முடிந்த அளவு எல்லாவிதங்களிலும் சேவை செய்தல்.

7) இந்த உலகம் முழுவதும் ஒரே சமுதாயமாக, அனைவருக்கும் பொதுவான உரிமைகள் உடையதாக இருப்பதாகக் கருதி நடக்க வேண்டும்.

8) மிக மேலான பிரபுவுக்கு (மாஸ்டருக்கு) மற்றும் அவருடைய மிஷனுக்கு விசுவாசம் உடையவராக இருக்கவேண்டும்.

9) பூஜாவுக்காக (தியானம்) தினமும் இரண்டுவேளை, குறிப்பிட்ட நேரம் ஒதுக்கவேண்டும்.

10) இந்த மிஷனின் ஒவ்வொரு உறுப்பினரும் இரவு தூங்கப் போவதற்கு முன்பு இந்த மிஷனின் வெற்றிக்காகவும், இயற்கையின் சட்ட திட்டங்களை மதித்துப் பின்பற்றி நடப்பதற்கு தனக்கு வலிமையை வேண்டியும், நமது மிஷனின் கட்டாயமான விதிமுறைகளை கடைபிடிப்பதற்கான மன உறுதியை நாடியும் பிரார்த்தனை செய்ய வேண்டும். இது மிகவும் முக்கியமான விஷயமாகும்.

''இந்த மிஷனின் உறுப்பினர் பெரியவராயினும், சிறியவராயினும் எல்லோரையும் இந்தக் கடமைகள் கட்டுப்படுத்தும். சில விசேஷமான மனிதர்களுக்கு இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கலாம். அவர்கள், அவர்களுக்கு இடப்படும் கட்டளைகள் எதுவாயினும் அதற்கு இணங்கி நடக்க வேண்டும்.''

## ஒரு ஆசானின் (பிரிசெப்டர் அல்லது வழிகாட்டியின்) கடமைகள்:

1) பயிற்சிக்கு வருகிறவர்களை தாங்கள் சொந்த சகோதரர்கள் அல்லது சகோதரிகளாகக் கருதி, அவர்களுக்கு அன்புடன் பயிற்சி அளிக்க வேண்டும்.

2) சீடர்களின் மீது (மாணாக்கர்களின் மீது) சகோதர அன்பும், இரக்கமும் இருக்கவேண்டும். இந்த விதத்தில் உங்கள் குருவை (வணக்கத்திற்குரிய லாலாஜி) இந்த விஷயத்தில் தவறாமல் பின்பற்ற வேண்டும்.

3) பேசுவதும், அறிவுரைக் குறிப்புகள் கொடுப்பதும் பணிவாகவும், மென்மையாகவும் ஒருவர் தனக்குத் தானே சொல்லிக்கொள்வதுபோல இருக்கவேண்டும். அமைதியான நீரோட்டம் கொண்ட ஒரு நதியின் வெள்ளம் போல, பேசுகின்ற வார்த்தைகள் இருக்கவேண்டும்.

4) தனது பொறுப்பில் உள்ள சீடர்களை மதிக்கவேண்டும். மற்றும் நம்மைப் படைத்த அதே கடவுள்தான் அவர்களையும் படைத்திருக்கிறார் என்ற உணர்வுடன் உள்ளத்தில் அன்பு செலுத்த வேண்டும்.

5) சத்சங்கம் நடைபெறும் நேரத்தில் மற்றும் அந்த இடத்தில் வீண் பேச்சுக்கள், வம்புபேசுதல் ஆகியவைகளை அனுமதிக்கக் கூடாது.

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இந்த மிஷனின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு நோட்டுப் புத்தகத்தில் இந்தக் குறிப்புக்களை எழுதிவைத்துக்கொள்ள வேண்டும்; தன் குறைபாடுகளை நீக்கி சரிப்படுத்திக்கொள்வதற்காக அவ்வப்போது அவற்றைப் படிக்க வேண்டும். அந்த நாட்குறிப்பில் தன்னால் பூர்த்தி செய்ய இயலாமல் இருக்கும் விதிமுறைகள் என்ன, எந்தக் குறைபாடு இன்னும் நீடித்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு எழுத வேண்டும்.''

**சுவாமி விவேகானந்தா:**

''ஒவ்வொரு மாதமும் அந்த நாட்குறிப்பு நோட்டுப்புத்தகத்தை உன் பரிசீலனைக்காக அனுப்பிவைக்க வேண்டும். அந்த நோட்டுப்புத்தகத்தில் தனது ஆன்மீக உள்நிலை பற்றியும் எழுதிவைக்கும் உரிமை உண்டு. நீ கண்டறியும் விசேஷமான நிலைகள் மற்றும் சூழ்நிலைகள் பற்றியும் என்னிடம் அல்லது உன்குருவிடம் குறிப்பிடலாம். உன்னுடைய சங்கத்தில் நிலவுகின்ற குறைபாடான செயல்கள் நீக்கப்படாவிட்டால், அதுபற்றிய ஒரு விளக்கம் கூறுவதற்கு நீ அழைக்கப்படுவாய். இதற்கான பொறுப்பு உன் தோள்களில் சுமத்தப்பட்டுள்ளது. 'குறைபாடான செயல்கள்' என்று நான் கூறுவது, இயற்கையின் சட்டதிட்டங்களுக்கு எதிராக, தினசரி வாழ்வில் காணப்படும் குறைகளைத்தான். ஏனெனில் இயற்கை விதிகள்தான் உலகில் அனைத்தையும் நிர்வகிக்கின்றன; நிர்வகிக்க வேண்டும்.''

25-8-1945

**சுவாமி விவேகானந்தா:**

''பிரளயத்துக்கு (பிரபஞ்சத்தின் அழிவுக்கு) அப்பால் முழுமையான அமைதி (மௌனநிலை) இருந்தது. பிரபஞ்சம் தோன்ற வேண்டிய படைக்கப்பட வேண்டிய காலம் வந்தபோது, பரம்பொருளின் ஜீவத்தன்மையில் ஒருவிதமான நொதித்தல் (புளித்துப் பொங்குதல்) உருவாகி வளர்ச்சியடைந்தது. அங்கிருந்து செயல்பாடு தொடர்ந்தது. இதேபோல, பிரியமான ராம் சந்த்தரால் அளிக்கப்படும் பிராணாஹூதி வரும் இந்தச் சமயத்தின் தன்மை, பரம்பொருளின் ஜீவத்தன்மையிலிருந்து தொடர்ந்த

அதே புளித்துப் பொகும் தன்மைபோல இருந்தது. அது எந்த ஒருவருடைய எண்ணத்தின் விளைவாகவும் ஏற்பட்டது அல்ல. இந்த வழிமுறையை அதிகமாகப் பயன்படுத்தினால், மூளையிலுள்ள ரத்தக்குழாய்கள் சிதறிவிடத் துவங்குவது சாத்தியமாகும். இந்த வழிமுறை இந்தப் பிரபஞ்சம் தோன்றியபோது என்ன நிலைமை இருந்ததோ அதே தன்மையை உண்டாக்குகின்ற செயலை உள்ளடக்கியது. எனவே, நான் இந்தவிதமான பிராணாஹூதியை தடை செய்திருக்கிறேன். என்னுடைய உலக வாழ்க்கை முடிவடைந்த பிறகு இந்தத் திறமை எனக்குக் கிடைத்தது. இந்த நிலையை நான் ஏற்கெனவே ராம் சந்த்தருக்கு மாற்றிக்கொடுத்து விட்டேன். இது சம்பந்தமாக சொல்ல வேண்டியதையும் முன்பே சொல்லி விட்டேன். அன்புள்ள M-1, இந்த அளவு முன்னேற்றத்தை கவனித்தறியும் திறமை கொண்டவர் யாருமே இல்லாமலிருந்தார்கள். அப்படி ஒரே ஒரு மனிதர் இங்கு வந்திருந்தாலும், என் இயற்கையான மகத்துவத்தை மதிப்பீடு செய்வது ஒருக்கால் சாத்தியமாகி இருக்கலாம். M1-ன் கேள்விக்கு என் பதில் என்னவென்றால், மிக உயர்ந்த ஆன்மீகத் தகுதியுடைய ஏதாவது ஒரு மூத்த மகான் இப்படிச் செய்தாலும் அது ராம் சந்த்தர் செய்த உண்மையான சாதனையின் ஒரு பிரதிபலிப்பாக மட்டுமே இருக்கும்.''

26-8-1945

**ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன் சின்னம் சம்பந்தமாக சுவாமி விவேகானந்தா கூறிய கருத்துக்கள்:**

''மலைகளுக்கு இடையே இருக்கும் பாதை தெளிவாக, சின்னத்தில் காணப்படும் மற்ற அனைத்திலிருந்தும் வேறுபடுத்திக் காணத்தக்கதாக இருக்க வேண்டும். ஒளி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து முடிவில் கிட்டத்தட்ட இல்லாமலே போவதாகக் காண்பிக்க வேண்டும். அந்தப் பாதையில் சூரியன் அல்லது சந்திரன் இருக்கக்கூடாது. இந்தச் சின்னத்தின் ஒருபக்கம் உதிக்கும் சூரியன் இருக்கவேண்டும். அது அடித்தளத்தில் பிரகாசித்து ஒரு மூலையில் அடிவானத்தை உண்டாக்க வேண்டும். சின்னத்தின் கீழ்ப்பகுதியில் அலைபோல இருக்கும் பகுதியில் சகஜ மார்க்கத்தைக் குறிப்பிடும், ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன் போன்ற வார்த்தைகள் இருக்க வேண்டும். நீ ராம் சந்த்ரா மிஷன் என்று எழுதியுள்ள நடுப்பகுதியில் காலி இடம் இருக்க வேண்டும்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''என்னைப் போல ஒரு சமநிலையை வளர்த்துக்கொள்ள அனைவரும் முயற்சிக்க வேண்டும். அப்போது அங்கே இனி எந்த ரகசியமும் இருக்காது. அதில் எவ்வளவு குறைபாடு இருக்கிறதோ (சமநிலை எவ்வளவு குறைகிறதோ) அவ்வளவு கோளாறு அதில் இருக்கும். என்னைப் போன்ற நிலையை எய்துவதே உண்மையான ஐக்கிய நிலையாகும். அதை எய்துவதற்கு ஏராளமான பயிற்சி தேவை.''

**27-8-1945**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''பரம்பொருளின் ஜீவத்தன்மையில் ஐக்கியம் அடையும் வழிமுறை எளிமையானது மற்றும் சுலபமானது. அது மிக நல்லவிதத்தில் கண்டறியப்பட்டிருக்கிறது. ஒரு வழிமுறை தனது குருநாதருடன் (மாஸ்டருடன்) ஐக்கியம் அடைந்து விடுவது. இன்னொரு வழிமுறை நேரடியாக பரம்பொருளின் ஜீவத்தன்மையில் தொடர்பு கொண்டு அதில் ஐக்கியமாகி விடுவது. நேரடியாக பரம்பொருளில் ஐக்கியமடையும் வழிமுறை. ஒருவர் தனது எண்ணத்தின் மூலமாக அதை உணரும் அளவுக்கு தன்னை விரிவடையச் செய்து கொள்வதை உள்ளடக்கியிருக்கிறது. மேலும் தனது சொந்த விரிவாக்கம் சுற்றுப்புறச் சூழ்நிலை மற்றும் பூகோள (பிரபஞ்ச) (Geography) அமைப்பு முழுவதும் தான் வியாபித்திருப்பதை (பரவி விரிவடைந்திருப்பதை) அனுபவிக்கின்ற அளவுக்கு அதை உணரவேண்டும். இந்தப் பயிற்சி மேலும் சிறப்புத்தன்மை அடையும்படியாக தன்னுடைய விரிவாக்கமும், சுற்றுப்புறச் சூழ்நிலை மற்றும் புவியமைப்பு முழுவதும் சேர்ந்த விரிவும் ஒன்றேதான் என்று அனுபவத்தில் உணர்வது துவங்க வேண்டும். அதன் பிறகு தன்னைப் பற்றிய உணர்வு இழக்கப்படுவது ஆரம்பமாகி, அதன்பிறகு அதுவும் கூட படிப்படியாக மறைந்து போகவேண்டும். மாஸ்டருடன் ஐக்கியம் அடைகின்ற முறையையே முயற்சி செய்ய வேண்டும் என்பது என் கருத்து. எதற்காக என்றால் அதில் அடையப்பட்டிருப்பது எதுவாயினும், அது அப்படியே தக்க வைத்துக் கொள்ளப்படுவதோடு, அப்படியே பராமரிக்கப்படுவதற்காகவே ஆகும். அதை அடைவது சாத்தியமாகுமென்றால் அது மிகவும் நல்லதேயாகும். ஆனால், இதுவரையில் அதற்கு ஒரே உதாரணமாக இருப்பவர் கபீர்மட்டுமே. அவரிடம் இருந்த இந்த சிறப்புத் தகுதி ஒரு தெய்வீக வரம். அது அவரிடம் முதல் நாளிலிருந்தே விளங்கி பிறகு முழு மலர்ச்சியடைந்தது. வணக்கத்திற்குரிய என் மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்)

தன்னுடைய மாஸ்டருடன் முழு ஐக்கியம் அடைந்த பிறகு அந்த நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மிக உயர்ந்த நிலைக்கு ஏறிச் சென்ற பிறகு தானாகவே இப்பயிற்சி வெளிப்படுகிறது.''

29-8-1945

**சுவாமி விவேகானந்தா:**

''இரண்டு நாட்களாக நீ பட்டினியாக வைக்கப்பட்டிருந்தாய். சக்தி உள்ளே வருவதற்கான களத்தை நாங்கள் சுத்தமாக்கியிருக்கிறோம். தன்னுடைய பிறந்த நாளில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உனக்குத் தந்த விசேஷப் பரிசு இது.''

30-8-1945

**சுவாமி விவேகானந்தா:**

''இன்று பிற்பகல் 1.15 மணிக்கு மூன்று குவியல்களாக சக்தி உனக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (சற்று இடைவெளி) பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து இதோ மீண்டும் சக்தி பாய்ந்து வருகிறது.''

மொத்தம் ஆறு மணிநேரத்தில் பல்வேறு இடைவெளிகளில் வணக்கத்திற்குரிய மாஸ்டர் எனக்கு பிராணாஹூதி அளித்தார்.

**சுவாமி விவேகானந்தா:**

''தியானம் செய்வதை நிறுத்து. அதைத் தாங்கிக் கொள்ள உனக்கு சக்தி இல்லை.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (இரவு 10 மணி) :**

''என்னை நம்பிச் சார்ந்திருத்தவர் யாராயினும், அவரை நான் முழுமையடையச் செய்துள்ளேன்.''

31-8-1945

**சுவாமி விவேகானந்தா:**

''இந்த அறை (பாபுஜியின் வீட்டில் அவர் தியானம் செய்யும் அறை) மிகவும் பெருமளவு சக்தியூட்டப்பட்டுள்ளது. சாதாரண நிலையில் உள்ள மனிதர்கள் இங்கே தனியாக உட்கார்ந்து தியானம் செய்வதை அனுமதிக்கக் கூடாது. இங்கே சுவர்களிலிருந்தும் சக்தி பீறிட்டு வந்து கொண்டிருக்கிறது.''

6–9–1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''என் சொந்த அனுபவத்திலிருந்து மிக முக்கியமான ஒரு விஷயத்தை உங்களுக்குச் சொல்கிறேன். ஒருவருக்கொருவர் அறிந்து பாராட்டுவதும், மரியாதையும் இரண்டு பேருடைய இதயத்திலும் இருக்கும் போதுதான் நட்பு நீடிக்க முடியும். இதுதான் என் வழியாக (நான் செயல்படும் விதமாக) இருந்திருக்கிறது.''

கேள்வி: ஆன்மீகத்துக்கு விஷமாக இருப்பது என்ன?

பதில்: ''கோபம்''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் இதுபற்றி விரிவாகச் சொன்னார்:**

''கோபத்தினால் என்ன விளைவு உண்டாகிறது? நமது சரீர அமைப்பு பளுவான தன்மையை அடைகிறது. அழுத்தம் உற்பத்தியாகிறது. இதன் பலனாக ஆன்மீகத்தின் சுதந்திரமான மற்றும் சிறந்த மேன்மையுடைய சக்திப் பெருக்கு நம் உடம்புக்குள் ஊடுருவி, உடலமைப்பு வழியாகப் பாய்வது இயலாமல் போகிறது. நமது எண்ணமும் அதை அழுத்துகின்ற அதிகப்படியான சுமையிலிருந்து விடுபட முடியாமல் போகிறது. எனவே, கோபம் மற்றும் அதன் விளைவிலிருந்து எப்படி ஒருவர் விடுதலை அடைய முடியும் என்ற கேள்வி (விடுதலை பெறுவது எப்படி என்ற கேள்வி) தோன்றுகிறது. அதற்கான பரிந்துரை இதுதான். ஒருவர் தன்னைப் பணிவுடையவராகவும், மாஸ்டருக்கு அடங்கியிருப்பவராகவும் நினைக்க வேண்டும். இது அக்கருத்தில் முழு நம்பிக்கையுடையதாக மாற வேண்டும். இதே பணிவான தன்மை தன் உடலமைப்பின் ஒவ்வொரு உறுப்பிலும் புகுந்திருப்பதாக மாறும்படி தொடர்ந்து பயிற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். இப்படி கோபத்தை கட்டுப்படுத்திக்கொள்வது எங்கும் பாராட்டப்படுகிறது. துர்வாச மகரிஷி (கோபத்தில் பிரசித்தி பெற்றவர்) பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் விருந்தாளியாக வந்து, அங்கிருந்து பூரண சந்தோஷத்துடன் திரும்பிச் சென்ற சம்பவம் இங்கே குறிப்பிடத் தகுந்தது அல்லவா? பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடன் ஒப்பிடக்கூடியவாறு, உயர்ந்த மகாபுருஷர் யாராவது இதுவரையில் இருந்திருக்கிறார்களா? அனைத்து இடங்களிலும் குளிர்ந்த (சாந்தமான) இதயம் தான் புகழை அடைந்திருக்கிறது. அந்தவிதமான இதயம் தான் ஆன்மீக மார்க்கத்தில் தேவைப்படுகிறது. இனிமையாக வீசும் காற்றின் போக்கில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டாலும் வாடிப்போகத் துவங்குகின்ற அப்படி ஒரு மிருதுவான, மெல்லிய பொருளாக இதயம் இருக்கிறது.''

(இங்கு கூறப்பட்டுள்ள சம்பவம், துர்வாசருடன் சம்பந்தப்பட்டதாக அன்றி, பிருகு முனிவர் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. முதல் மூவராகிய கடவுள்களில் உண்மையில் உயர்ந்தவர் யார் என்று கண்டறிந்து முடிவெடுத்துச் சொல்லும்படி பிருகு முனிவரை தெய்வங்கள் கேட்டுக்கொண்டார்கள். (ஸ்ரீமத் பாகவத புராணம், பத்தாவது காண்டம், அத்தியாயம் 89) பிருகு முனிவர் முதலில் படைக்கும் தெய்வமாகிய பிரம்மாவிடம் சென்றார். அவர் ஒரு மிக உயர்ந்த முனிவராகிய தன்னை சரியாக மதிக்காமல், பணிவாக வரவேற்காத பிரம்மாவிடம் மிகவும் கோபம் கொண்டார். ஆயினும், பிரம்மா தனது தந்தையென்பதால் அவரை மன்னித்தார். பிறகு சிவபெருமானிடம் சென்றார். அழிக்கும் தெய்வமாகிய சிவன், அவரை மிகவும் பிரியத்துடன், கைகளை விரித்து வரவேற்றார். ஆயினும், பிருகு முனிவர் அவருடைய அணைப்பை ஏற்க மறுத்து, வேத நெறிக்கு மாறான, சமுதாயப் பண்பற்ற நிலைக்காக குறைகூறிப்பேசினார். இதனால் சிவன் கோபமுற்று தனது திரிசூலத்தினால் பிருகு முனிவரைத் தாக்க வந்தார். உடனே அவரது மனைவி பார்வதி அவரை சமாதானப்படுத்தினாள். கடைசியில் பிருகு முனிவர் காக்கும் கடவுளாகிய விஷ்ணுவிடம் சென்றார். அவர் பாம்புப் படுக்கையில் சாய்ந்து படுத்திருந்தார். செல்வத்தின் தெய்வமாகிய மகாலஷ்மி தன் கணவராகிய மகாவிஷ்ணுவின் பாதங்களை வருடிக் கொண்டிருந்தாள். தன்னை அவர் வரவேற்காததால் கோபம் கொண்ட பிருகு முனிவர் விஷ்ணுவின் மார்பை காலால் எட்டி உதைத்தார். உடனே விஷ்ணு, முனிவரை மரியாதையுடன் வரவேற்காததற்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டு, அவர் தன்னைக் காண வரப்போவது, முன்பே தனக்குத் தெரியாததால் தவறு நேர்ந்தது என்று சமாதானம் சொன்னார். மேலும் தனது கடினமான மார்பில் எட்டி உதைத்ததால் முனிவருடைய மென்மையான பாதம் நோகுமே என்று கனிவுடன் கூறி அவருடைய பாதங்களை வருடினார். இவ்விதமாக மகாவிஷ்ணுவின் தலைமை நிலை உறுதிப்படுத்தப்பட்டது.'' பின்குறிப்பு:– (பிருகு முனிவருக்கு பாதத்தில் ஒரு கண் இருந்ததாகவும் அதனால் அவர் அகந்தை மிக்கவராக இருந்ததாகவும், விஷ்ணு இந்தச் சந்தர்ப்பத்தில் தந்திரமாக அவர் பாதங்களை வருடுவது போல, அந்தக் கண்ணை நசுக்கி அழித்து விட்டதாகவும் ஒரு கதை உண்டு – தமிழ் மொழி பெயர்ப்பாளர்.)

*பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மகாவிஷ்ணுவின் மிகச்சிறந்த நேரடியான அவதாரம் ஆவார். பிருகு முனிவர் முன்கோபம் மிகுந்த ஜமதக்னி முனிவரின் மூதாதை ஆவார். ஜமதக்னி முனிவரின் மகன் பரசுராமர்.*

*பகவான் விஷ்ணுவின் வேறு ஒரு அவதாரம். அவரும் மிகவும் கோபம் உடையவர். தன் தந்தை ஜமதக்னியின் கட்டளைப்படி தன் தாயையே அவர் கொன்றுவிட்டார். பரசுராமருக்குப் பிறகு மகாவிஷ்ணுவின் அடுத்த அவதாரமாக வந்த ராமர் பரசுராமரை தோல்வியடையச் செய்து, தனியே ஒதுங்கிவிடுமாறு செய்தார். இவை யாவும் ஹிந்துமத புராண நூல்களில் காணப்படுகின்றன. ஆனால், இவற்றில் துர்வாச முனிவர் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் விருந்தாளியாகச் சென்றது பற்றிய சம்பவத்தை (இந்த நூலின்) தொகுப்பாசிரியர் காண முடியவில்லை. இது விஷயமாக தகவல் அளிப்பவருக்கு நான் கடமைப்பட்டிருப்பேன். இந்தக் தகவலைக் கொடுக்கின்ற அந்த மனிதருக்கு நன்றி கூறுவதோடு, அதை இதில் சேர்த்துக்கொள்வேன். – தொகுப்பாசிரியர்.*

*(திரு.ரா.கணபதி என்பவர் இது பற்றி ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார். அதாவது பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு வேடனின் அம்பினால் உயிர் நீத்துச் செல்வார் என்பதை துர்வாச முனிவர் தனது ஞானதிருஷ்டியில் அறிந்துகொள்கிறார். உடனே எப்படியாவது கிருஷ்ண பகவானைப் பாதுகாக்க வேண்டும் என்று தீர்மானித்து, கிருஷ்ணனை நாடி துவாரகைக்கு வருகிறார். ஸ்ரீ கிருஷ்ணர் அவரை சகல மரியாதைகளுடன் வரவேற்று தன் மாளிகையில் தங்கச் செய்கிறார். துர்வாசர் தன் தவ வலிமையையெல்லாம் திரட்டி தன் வாயில் எச்சிலாக மாற்றி வைத்துக்கொண்டு, ஸ்ரீ கிருஷ்ணரிடம் வேண்டுமென்றே கோபம் கொண்டு, ''என்னை உபசரிப்பதில் பெரும் தவறு நேர்ந்துவிட்டது. இதற்கு அபராதமாக என் எச்சிலை நீ உடம்பு முழுவதும் ஒரு துளி இடம் கூட பாக்கியில்லாமல் பூசிக்கொள்ள வேண்டும்'' என்று கட்டளையிட்டார். ஸ்ரீ கிருஷ்ணரும் அதற்கு ஒப்புக்கொண்டு, உடலில் அந்த எச்சிலைப் பூசிக் கொள்ளும்போது, உயர்ந்த முனிவராகிய அவருடைய புனிதமான எச்சில் தன் பாதங்களில் படக்கூடாது அது மரியாதையாகாது என்று கருதி, பாதங்களை விட்டு விட்டு மற்ற பகுதிகளில் தடவிக்கொண்டார். துர்வாசர் கிருஷ்ணரைக் காப்பாற்றி விட்டதாகக் கருதி மகிழ்ச்சியோடு திரும்பிச் சென்றார். ஆயினும், வேடனின் அம்பு, ஸ்ரீ கிருஷ்ணர் தூங்கும்போது பாதங்களில் பட்டதால், அவர் உலகை நீத்துச்சென்றார். – தமிழ் மொழியாக்கத்தின் பின் இணைப்பு)*

## 27-9-1945 (இரவு 11 மணி)

இன்று, இச்சமயத்தில், எனக்குக் கிடைத்த கட்டளைகளின் படி, B2 - இன் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘I1 ஃபடேகரிலிருந்து திரும்பி வரும்போது, அவர் விரும்பினால் ஆன்மீக சக்தியின் அற்புதத்தை நேரில் காணத் தயாரா? என்று சவால் விடு. ஏதாவது நிலையான விதமான நேரடித் தொடர்பை உண்டாக்கி, இம்மாதிரி விஷயங்கள் நிகழமுடியுமா? முடியாதா? என்பதை செயல்முறையில் நிரூபித்துக் காட்டு. இது தூய்மையான ஆன்மீக சக்தி. அந்தத் தெருமுனை வித்தை சங்கல்ப சக்தியின் அற்புதம் – இந்த இரண்டுக்கும் இடையே பெரிய வித்தியாசம் இருக்கிறது. ஆன்மீக மண்டலத்தில் ஆடம்பரம், கூரியதன்மை ஆகிய அனைத்தும் போயிருக்கும். மாயை என்ற புலன்களால் உணரக்கூடிய நிலை அங்கே முற்றிலும் இல்லாமல் போயிருக்கிறது. அதன் தூய்மை நிலையில் ஆன்மாவின் வேகத்தைத் தாங்குவதை எதுவும் குறுக்கீடு செய்வதில்லை. அதற்குக் கீழே வெறும் சங்கல்பம் மட்டும் இருக்கிறது. அதை அற்புதங்களை செய்து காட்டுவதற்குப் பயன்படுத்த முடியும். உண்மையான ஆன்மீகத்திலிருந்து அற்புதங்களை நிகழ்த்தும் திறமையுடையவர் யாரும் இதுவரையில் பிறக்கவில்லை. K.........என்ற இடம் சம்பந்தமான விஷயம் என் பார்வையில் இருக்கிறது. நானும் பிரியமான ராம் சந்த்தரும் தூய்மையான ஆன்மீக மண்டலத்தில் இருக்கிறோம். எங்களுக்குள் ஒரே வித்தியாசம் என்னவெனில் நான் எல்லையற்ற தன்மை உடையவனாக இருக்கிறேன்.’’

‘‘அவருக்கு பிராணாஹூதி அளிப்பதற்கும், அவருக்கு வேலையை நியமிப்பதற்கும் R - 2-ஐ நான் அழைத்திருந்தேன். நேற்று அழிவு ரீதியான வேலைபற்றிய ஒரு பேச்சு வந்தது. அது இன்றியமையாதது; வாதத்திற்கு அப்பாற்பட்டது. அந்த வேலை தாமதப்பபத்தப்பட்டுவிட்டது. ஏனென்றால், மக்கள் அதைத் தங்கள் சொந்த வேலையாக எடுத்துக்கொள்ளவில்லை. சில மனிதர்கள் பிரார்த்தனை செய்வதை ஏற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் இதர பணிகளில் கவனம் செலுத்த வேண்டும். பிரார்த்தனை செய்யும் பணியை நான் தேர்ந்தெடுக்கும் மனிதர்களுக்குக் கொடுப்பேன். 9–10–1945க்குப் பிறகு, R2 அவருக்கு நியமிக்கப்பட்ட வேலையை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு முன் – அதாவது அந்த நாள் வருவதற்கு முன் – பிரார்த்தனையில் கவனம் செலுத்த வேண்டும்.’’

## 3–10–1945 (இரவு 11.20 மணி)

### சுவாமி விவேகானந்தா:

''எனது மிஷனாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் தலைவர் உள்பட எந்த உறுப்பினருக்கும் பிராணாஹூதி அளிக்க R8 - க்கு அனுமதியளிக்கிறேன். என் பெயரால் உன் மூலமாக அவர் இதற்கென தீட்சை அளிக்கப்பட்டிருக்கிறார்; என் சார்பாகவும், உன் குருவின் சார்பாகவும், அவர் இதற்கான முழு அதிகாரத்தை உடையவராக இருக்கிறார் என்பதைச் சொல்வதற்கு அவர் தயங்க வேண்டியதில்லை. உன் குருவைப் போல நானும் உன்னிடத்தில் ஐக்கியமாகி இருக்கிறேன். பிராணாஹூதி அளிக்கும் போது, தனது குருவின் திறமையுடன், அவர் இருப்பதாக R8 நினைக்க வேண்டும். தேவை ஏற்படும் போது என்னை அழைக்கலாம்.''

## 16–10–1945

### சுவாமி விவேகானந்தா:

''M1, R2, I-2, R8 ஆகிய நீங்கள் அனைவரும் ராம் சந்த்தர் இந்த உலகில் இல்லை என்பதை அறியவேண்டும். விரைந்து செல்லுங்கள். காலம் கடந்துகொண்டிருக்கிறது. அவர் மீது நம்பிக்கை உடைய எல்லோருக்கும் இதைச் சொல்லுங்கள்.''

### வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:

''அவரைப் போல ஒரு மனிதரை இந்த உலகம் பார்த்ததில்லை என்ற உண்மை நீடித்து நிலைக்கிறது. அவருடைய குருவைப் பற்றி நான் என்ன சொல்வது? ராம் சந்த்தரைப் பார்ப்பதன் மூலமாக அவருடைய குருவைப் பற்றி ஒரு சரியான முடிவுக்கு அவர்கள் வரலாம். அவருடைய குருவைப் பற்றிய உண்மையான மதிப்பு பற்றி இதுவரையில் யாருமே உணர்ந்தறிய முடியவில்லை. எல்லோருமே அவரைப் பற்றிய பொய்த் தோற்றத்திலேயே இருந்துவிட்டார்கள்.''

### சுவாமி விவேகானந்தா:

''பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு என் பணிவான பிரார்த்தனை என்னவெனில் ராம் சந்த்தரை பௌதீக வடிவத்தில், அவருக்காக நியமிக்கப்பட்ட பணியை செய்து முடிப்பதற்கு எவ்வளவு காலம் தேவைப்படுமோ அதுவரையில், உயிர்வாழ அனுமதிக்க வேண்டும் என்பதேயாகும்.''

17-10-1945

**சுவாமி விவேகானந்தா (லக்கிம்பூர் கேரிக்கு பஸ்ஸில் போகும் வழியில்:**

''நீ இந்த உலகில் தோற்றத்தையே மாற்றுவதற்காக இருக்கிறாய் என்பதில் சந்தேகமில்லை. ஒருவருடைய வாழ்க்கையின் ஓட்டத்தில், அவரால் உருவாக்கிக்கொள்ளப்பட்ட பழக்கத்தின் மூலமாக அவரது மனதின் நிலை மோசம் என்ற நிலையிலிருந்து மிகமிக மோசம் என்ற நிலைக்குப் போயிருக்கிறது. அதை சரிப்படுத்துவதற்கு ஒருவர் வந்த பாதையில் திரும்பிச் செல்ல வேண்டும். உன்னால் கண்டுபிடிக்கப்பட்ட புள்ளி ஆன்மீக தத்துவ ஞானத்தில் ஒரு விலைமதிப்புயர்ந்த ரத்தினமாகும். எனினும் இது இன்னும் அதன் குழந்தைப் பருவத்தில் இருக்கிறது. நற்குணமுடைய பண்புகளை (நல்ல குணாதிசயத்தை) வளர்த்துக் கொள்வதற்கு அது தேவைப்படுகிறது. அதைப் பயன்படுத்திக் கொள்.''

18-10-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''என் பிரியமான ராம் சந்த்தர் லக்கிம்பூர் - கேரிக்கு பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தபோது, மனிதனின் மனதில் எது நிலைபெற்றதனால் விரும்பத்தகாத விளைவுகளை அது உருவாக்கத் துவங்கியதோ அது என்ன என்பது பற்றி ஒரு எண்ணம் அவருக்குத் தோன்றியது; அதை எப்படி சரிப்படுத்துவது என்றும் யோசித்தார். அந்த எண்ணத்திற்கு உடனடியாக பதில் கிடைத்தது. எல்லாவற்றையும் சரியாக்குவதற்கு, தாழ்வுநிலை அடையும் செயல்முறையை, அப்படியே திசை திருப்பி விட்டுவிட வேண்டும் என்பதே அந்த பதில். இவ்விதமாக மிக எளிமையாக, ஆயினும், மிகவும் பயனளிக்கின்ற செய்முறைக் குறிப்பு அவருடைய எண்ணத்தில் தோன்றியது. ஒவ்வொரு மனிதனும் இந்த தியானத்தைத் தவறாமல் செய்ய வேண்டியது அவசியமான கடமையாகும். இரவு தினந்தோறும் பதினைந்து நிமிடங்கள் செய்யலாம். இதை சத்சங்கத்தில் உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்து. இந்த மிஷனின் ஒவ்வொரு உறுப்பினரும் இதைப் பயிற்சி செய்ய வைப்பது M1 - ன் கடமையாகும்.''

## இந்த தியானம் செய்யும் முறை:

''உங்கள் இடதுபக்க மார்பின் காம்பிலிருந்து வலப்புறமாக உங்களின் இரண்டு விரல் நீளம் அளந்து, அங்கிருந்து நேர் கீழே உங்களின் மூன்று விரல் நீளம் அளந்தால் அங்கு A புள்ளி இருக்கிறது. இந்தப் புள்ளியில்

கவனம் செலுத்தி உலகிலுள்ள அனைத்து பெண்மணிகளும், உங்கள் சகோதரிகள் என்ற எண்ணத்தை தியானம் செய்ய வேண்டும். தியானம் செய்யும் நேரம் முழுவதும் இந்த எண்ணத்தை தொடர்ந்து மனதில் வைத்திருக்க வேண்டும். மேலும் இந்த எண்ணம் உண்மையானது என்ற நம்பிக்கையுடன் இருக்கவேண்டும்.''

''இது ஒரு சிறிய தியானம்தான்; ஆனால் இதற்கு ஒரு விரைவான பலன் இருக்கிறது. அதாவது இதை உறுதியான மற்றும் முழு மனதுடன் பயிற்சி செய்தால் அதன் பலன் விரைவிலேயே தெரிய ஆரம்பிக்கும். இந்தப் பயிற்சியைச் செய்ய ஆரம்பித்த உடனேயே கூட பலன் தரும். அது ஒரு போதும் அழிந்து போக முடியாதபடி, அந்தப் பலன் உறுதியாக நிலைத்திருக்க வேண்டும். மூத்தோர்களாகிய முனிவர்கள் மிகவும் மேலான மதிப்புடைய பற்பல பயிற்சிகளையும் தியான முறைகளையும் கண்டறிந்திருக்கிறார்கள். ஆனால், இந்தச் சிறிய விஷயத்தை யாருமே அறியவில்லை என்று நான் பந்தயம் கட்ட முடியும். இந்த வழிமுறை வேறு எங்கேயும் கிடைக்காது. இந்தத் தியானத்தைப் பயிற்சி செய்வதை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஆரம்பித்து விடவேண்டும். வெளியூரில் இருப்பவர்களுக்கு கடிதங்கள் மூலமாக இந்தப் பயிற்சியைப் பற்றித் தெரியப்படுத்தி, இதைப் பயிற்சி செய்யாதவர்கள், நமது மார்க்கத்தின் பொறுப்பிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்று விசேஷமாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். (சிறிது இடைவெளி) ஒருவரின் குணாதிசயத்தில் குறைபாடு இருக்குமானால் அவர் இந்தப் புள்ளியை தியானம் செய்வதற்கு எடுத்துக் கொள்ளலாம்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் மேலும் கூறியது:

''இந்தத் தியானத்தின் ஒரு பலனாக சஞ்சல புத்தி (எதையும் முடிவெடுக்க இயலாமல் அலைபாயும் மனம்) மறைந்து போகும்; ஒருவனுடைய உள்ளார்ந்த மனஅமைப்பு (மனத்தின் சுபாவம்) நேர்மையானதாக மாறி,

சரியான விகிதத்தில் நல்லவிதமாக உருவாகும். சம்பந்தப்பட்ட சரியான விஷயங்களை கிரகித்துக்கொள்வது அபிவிருத்தி அடையும். மனம் தன்னுடைய சொந்த சத்திய நிலையை தானாகவே மெய்யாக உணர்ந்து கொள்ளும். பெண்மணிகளுக்கு இந்தத் தியானம் லேசான மாறுதலுடன் அறிமுகம் செய்யப்பட வேண்டும். ஏனெனில் எதற்காக இந்த வழிமுறை கண்டுபிடிக்கப்பட்டதோ, அது (அக்குறைபாடு) பெரும்பாலும் ஆண்களிடத்தில்தான் காணப்படுகிறது. அதிகப்படியான சஞ்சல குணமும், ஆன்மீகத்தில் நாட்டமற்ற நிலையும் இருப்பதால், கஷ்டப்படுகின்ற ஒரு பெண்மணிக்கு இந்தப் பயிற்சி நிச்சயமாக பரிந்துரை செய்யப்பட வேண்டும். அனைவருக்கும் கடவுளின் அருள் இருக்கிறது; அனைவரும் இன்னொரு மனிதனை மற்றும் பெண்மணியை தன் சொந்த சகோதரனாக மற்றும் சகோதரியாக நினைக்கிறார்கள்; அவளும் அப்படியே விதிவிலக்கின்றி நினைக்கிறாள் என்ற இந்த உறுதியான எண்ணத்தை தன் மனதில் நிலைநிறுத்தி (இந்தப் புள்ளியில் அவள் தியானம் செய்ய வேண்டும்.''

19-10-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இந்த உலகத்தில் சில விஷயங்கள் அனைவருக்கும் இன்றியமையாதவை. அந்தக் கோட்பாடுகளை அந்த மனிதனோ, பெண்மணியோ பின்பற்றினாலன்றி அவனை அல்லது அவளை மனிதர் என்று சொல்லப்படுவதற்குத் தகுதியற்றவராகிறார். மனிதாக இருக்க விரும்புறீர்களா அல்லது கடவுளாக இருக்க விரும்புகிறீர்களா என்று என்னிடம் யாராவது கேட்டால் நான் மனிதனாக இருப்பதையே விரும்புகிறேன் என்று நான் சொல்வேன். தெய்வங்கள் ஒரு கைகடிகாரத்துக்கு சாவி கொடுத்திருப்பதுபோல இருக்கிறார்கள். அந்த சாவி இருக்கும் வரை (அதாவது கடிகாரத்தினுள் சுருள் கம்பி முறுக்கி விடப்பட்டிருப்பது சிறிது சிறிதாகத் தளர்ந்து முழுவதும் தளரும் வரையில்) அவர்கள் வேலை செய்து கொண்டிருப்பார்கள். அந்தக் கம்பிச்சுருளின் முறுக்கு தளர்ந்து விட்டால் அவர்கள் தங்கள் பதவியை இழப்பார்கள். இப்படி அவர்களுக்கு சாவி கொடுக்கப்படுவது நீண்டகாலமாக செய்யப்படவில்லை. இதனால் தங்கள் செயல்பாட்டில் பயனுறுதித்தன்மையை அவர்கள் இழந்திருக்கிறார்கள். எனவே, தேவையான பலன்களை உண்டாக்கும் திறமை அற்றவர்களாக இருக்கிறார்கள். தீயில் இடப்படும் படையல்கள் வீணாகிக்

கொண்டிருக்கின்றன (வேள்விகளில், யாகங்களில், ஹோமங்களில் அக்னியில் இடப்படும் அர்ப்பணங்கள் பலனின்றிப் போகின்றன). பயிர்கள் நன்கு விளைச்சல் தருவதில்லை. இந்த மாதிரி எத்தனையோ விஷயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எவ்வளவுதான் நான் சொல்வது? மனிதனுக்கு பிரபஞ்ச சிருஷ்டி சமயத்தில் கொடுக்கப்பட்ட 'சாவி' இன்னும் தீராமல் இருக்கிறது. அது தீர்ந்து போய்விடும் சாத்தியமும் ஒருபோதும் இல்லை. இது கடைசிவரையில் அப்படியே இருக்கும். இப்போது மனிதனுக்கு கடவுளால் கொடுக்கப்பட்டுள்ள இந்தத் தனிச் சலுகைக்கு நன்றியாக நாம் செய்ய வேண்டிய கடமை என்ன? என்பதே கேள்வி. மனிதன் என்ற கடிகாரம் சரியான நேரம் காட்டத் துவங்கும்படியாக, இந்த சாவி கொடுப்பதை ஒழுங்குபடுத்துவது எப்படி? இதற்காக மூத்த மகான்கள் கூறிய பழங்கால அறிவுரைகள் நிறைய இருக்கின்றன. அவற்றைப் பின்பற்றி நடந்தால் மனிதனின் நல்ல தரத்தை நிலைநிறுத்துவதை அவை உறுதிப்படுத்தும். தினசரி கடைபிடிக்க வேண்டிய பழக்கங்கள், நல்ல நடத்தை, நிதானம் மற்றும் நடுநிலைப் பண்பு ஆகியவை அந்த நற்பண்புகளாகும். சமநிலைப்பட்ட வாழ்க்கை முறை இதன் சாராம்சமாகும். இந்த அடிப்படைப் பண்புகளுடன் இசைந்திருக்கும்படி எல்லாவற்றையும் சரிப்படுத்துவதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன? வெளிப்புறத்தில் கவனித்து அறியக்கூடிய நடத்தையை முதலில் ஒழுங்குபடுத்திக் கொள்வது மேலானது. உதாரணமாக விடியற்காலையில் துயில் நீங்கி எழுவது, உடம்பை சுத்தமாக வைத்துக்கொள்வது, குறிப்பிட்ட நேரத்தில் உணவு உண்பது, மக்களிடமும் சுற்றுப்புறத்திலும் பழகும் அனைத்து நடைமுறைகளிலும் குறிப்பிட்ட ஒழுங்கில் இருப்பது ஆகியவை நன்மை அளிக்கும். இவையெல்லாம் ஆரம்பநிலை விஷயங்கள். முதலில் இவற்றை கடைபிடிப்பதில் வெற்றியடைய வேண்டும். அதன்பிறகு அடுத்தபடிக்கு முன்னேற வேண்டும். இக்காலத்து இளம் வயதினர் பொதுவாக இந்த விஷயங்களில் குறைபட்டவர்களாக – இந்த அடிப்படைப் பழக்கங்களே இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இது மிகப்பெரிய ஒரு தவறு. அன்றாட வாழ்வில் இந்த நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொண்ட பிறகு வீட்டு வேலைகள் மற்றும் குடும்பக் கடமைகள் ஆகியவற்றில், சில குறிப்பிட்ட கோட்பாடுகளை அனுசரித்து நடப்பதில் ஈடுபட வேண்டும். தன் வாழ்க்கைக்கு வேண்டிய வருமானத்தை சம்பாதிப்பதில் மற்றவர்களுக்கும் இதனால் நன்மையளிக்கும் விதத்தில் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஆனால், இந்த விஷயங்களில் தேவையில்லாமல் கவலைப்படவும், குழப்பமடையவும் கூடாது. எந்தவேலை செய்தாலும் சரி,

கடவுள் பற்றிய நினைவு அதில் இருக்கவேண்டும். மற்றவர்களுடன் பழகும் விதம், ஒன்றுபட்ட தன்மையை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். அதாவது இதன் பொருள் என்னவெனில் இந்த மனிதர் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட கடமையை நிறைவேற்றுவதில் தவறமாட்டார் என்ற எண்ணம் எல்லோருக்கும் ஏற்பட வேண்டும் என்பதேயாகும். ஒருவர் பேசுகின்ற வார்த்தை மற்றும் நடந்து கொள்ளும் விதத்தில், ஒவ்வொரு துளியிலும் அன்பு வழிய வேண்டும். ஒருவருக்கொருவர் சேவை செய்வது அனைவராலும் தம் கடமையாகக் கருதப்பட வேண்டும். ஒருவருடைய தனிப்பட்ட கட்டாயக் கடமை ஒவ்வொரு மனிதரின் விஷயத்திலும் தேவைப்படுகிற அவர்களது தனி உரிமைகள் மற்றும் பதவி, தகுதிகள் இவற்றுக்கு ஏற்றவிதத்தில் கையாளப்பட வேண்டும். தவறு செய்வது சம்பந்தமான எண்ணம் இதயத்திலிருந்து ஆவியாகிப் போய்விட வேண்டும். எல்லோரும் கடவுளின் படைப்புக்கள் என்று கருத வேண்டும். அவரை மட்டுமே அனைவருக்கும் மாஸ்டராக (அனைத்திற்கும் எஜமானராக) நினைக்க வேண்டும். அதே கருத்தின்படி அனைவருக்கும் மரியாதை அளிக்க வேண்டும். ஒருவர் தனது மார்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், இல்லையென்றாலும், எந்த வேறுபாடுமின்றி இப்படி மரியாதை கொடுக்க வேண்டும். மேற்சொன்ன விதிமுறைகள் யாவும் பொதுவாக எல்லோரிடமும் கடைபிடிக்கப்பட வேண்டும்.''

### சுவாமி விவேகானந்தா (இரவு 10 மணி):

''தன் ஆயுள் முழுவதும் மிஷன் வேலை செய்வதாக சபதம் எடுத்துக் கொண்டு, அந்தப் பணியில் மட்டுமே ஈடுபட விரும்பி யாராவது ஒரு பெண்மணி முன் வந்தால், அவளுக்கு கணவன் மற்றும் குழந்தை இல்லையென்றால் அப்போது ஒரு விசேஷ சலுகையளித்து அவளை இங்கு வேலை செய்ய அனுமதிக்கலாம். அவள் இந்த மிஷனின் உண்மையான உறுப்பிராகக் கருதப்படுவாள். மற்றவர்கள் சாதாரண உறுப்பினர்களாக இருப்பார்கள். பெண்மணிகள் உறுப்பினர் படிவங்களை பூர்த்தி செய்வது சரியாக இருக்காது. ஏனென்றால் பிறர் அதனை ஆட்சேபிப்பார்கள். சத்சங்கம் நடைபெறும்போது பெண்கள் ஆண்களுடன் அருகருகே உட்காருவதை நான் விரும்பவில்லை. அவர்களுக்கென்று (பெண்களுக்கென்று) திரைக்குப் பின்னால் ஒரு தனியறை இருக்க வேண்டும். இம்மாதிரி தனித்தனியாக இன்றி சேர்ந்து உட்கார அனுமதிக்கப்படும்போது, ஒழுங்கீனங்கள் நிகழ்ந்துவிடுவதுபற்றி பல உதாரணங்கள் உள்ளன. இந்த விஷயத்தில் உன் குருவைப் பின்பற்ற

வேண்டும். பெண்களிடையே இருந்து உற்சாகமான யாராவது வந்து, மிஷன் வேலை செய்வதற்கு தீவிர ஆவலுடன் இருந்தால், அவளுடைய இதயத்திலிருந்து இருண்ட நிழல் விலகும் வரையில் அவள்மீது நம்பிக்கை கொள்ள வேண்டாம். இந்த விஷயத்தில் நீயே சிறந்த நீதிபதியாக இருப்பாய். மேலை நாடுகளிலிருந்து வரும் பெண்கள் விஷயத்தில், இது வேறுபடும். இந்தியாவின் பெண்களை விட அவர்கள் மிகவும் தாராளமாகவும், ஆசாரமில்லாமலும் இருக்கிறார்கள். உன் ஆயுட்காலத்தில் இம்மாதிரி சந்தர்ப்பம் ஏதாவது ஏற்பட்டால், என்னிடம் ஆலோசனை கேள். நான் எழுதிய விஷயங்கள் அனைத்தும் மேடையில் பேசுவதற்கானவை. மிஷன் வேலையில் உதவி செய்வதற்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. பெண்களும் இந்த மிஷன் உறுப்பினர்களே. அவர்களும் தங்கள் மூலப் பிறப்பிடமாக அதே மெய்ப்பொருளை உடையவர்கள் என்பது பதிவு செய்யப்பட வேண்டும். அவர்களுக்கும் தீட்சை அளிக்கலாம்; ஆனால் அடிக்கடி இது நடக்கக் கூடாது.''

24-10-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''உருவ வழிபாடு எப்படி ஆரம்பித்தது? எதற்காக அது ஆரம்பித்தது? இந்த இரண்டு கேள்விகள் மக்களுக்குப் பெரும்பாலும் கவலையை ஏற்படுத்துகின்றன. சிலர் அதற்கு ஆதரவாக இருக்கிறார்கள். சிலர் அதற்கு எதிரான கருத்துடன் இருக்கிறார்கள். இந்த இரு சாராரும் சத்திய நிலையுடன் அறிமுகமற்றவர்கள். எதிர்ப்பு மற்றும் ஆதரவு ஆகிய இந்த கடைக்கோடிகளுக்கும் இடையே இருக்கும் நடுநிலை யாருடைய அனுபவத்துக்கும் தோன்றவில்லை. சிலர் ஒரு கல்லை (சிலையை) வழிபாட்டுக்கு எடுத்துக்கொண்டார்கள். வேறு சிலர் வேறு ஏதாவது ஒன்றை வழிபடும் பொருளாக ஏற்றுக்கொண்டார்கள். இந்த மனப்பான்மைக்கு சம்பந்தப்பட்ட வேறுவிதமான விஷயங்கள் சிலவும் பொதுவான வழிபாட்டுக்கு உரிய இடங்களாக ஆயின. சிலர் புத்தகங்களுக்கு மலர்களை இட்டு வணங்கினார்கள். சிலர் வேறு ஒருவிதமாக வழிபட்டார்கள். நதிகளும் சாக்கடைகளும் கூட வழிபடும் விஷயங்களாக மாறத் துவங்கின. மூங்கில் கம்புகளும், சவுக்கு (சாட்டை) களும் வழிபடத்தக்க பொருட்களாக மாறின. அடிமைகளையும், வேலைக்காரர்களையும் கூட வணங்கும்நிலை வந்தது. கடவுள், தெய்வம் என்ற மனப்பான்மையுடன் தொடர்புடையதாக எண்ணற்ற வழிபாட்டு முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் பலனாக, பன்மைத்தன்மைக்கு முக்கியத்துவம் அளிப்பது தொடங்கியது. கடவுளின்

ஒன்றேயான தன்மை திரையிட்டு மறைக்கப்படுவது துவங்கியது. மேலும் திரைக்கு மேல் திரையாக வந்து அதை மறைத்தன. வழிபடுவதற்காக நிர்ணயிப்பதற்கு ஒரே ஒரு தனிப்பொருளை இதயத்துக்குக் கொடுத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். இது பற்றி மேலும் சொல்கிறேன் கேளுங்கள். ஒரு திடப்பொருளாக ஒரு உருவம் ஒருவனின் முன் வைக்கப்படும் போது அது (அவனைப் பொறுத்தவரையில்) கடவுளின் இடத்தை எடுத்துக் கொள்கிறது. இந்த திட உருவத்தை கடவுளின் திவ்வியப் பிரகாசம் அதில் இடம் பெற்றுள்ளது என்று பாவனையில் ஏற்றுக்கொண்டு, அதை தன் கவனத்தில் மையமாகக் கருதப்படுவதற்குப் பதிலாக, கடவுளை வணங்குவதற்கான தேவை வரும்போதெல்லாம் இந்த உருவத்தையே உற்றுப் பார்க்கும்படியாக அது அவனைக் கவர்கிறது. உண்மையில் மக்கள் தங்கள் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக கடவுளிடம் அதைத் தெரிவிக்கிறார்கள்; ஆனால், அவர்களின் எண்ணம் அந்த உருவத்தில் மட்டுமே கவனம் கொண்டிருக்கிறது. அவர்கள் இதை விட்டு சற்று மேல் நோக்கிச் சென்றால், தொடர்ந்து அதே வழியில் உயர்வடைந்தால், அவர்கள் முன்னேற்றமடைகிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தி அவர்களுக்குக் கிடைக்கும். ஆனால், மக்கள் அந்த உருவத்தின் மீதான குறுகிய பற்றை கைவிடுவதற்குத் தயாராக இல்லை. உருவ வழிபாடு பற்றி யாருமே அறிந்திராத ஒரு காலம் இருந்தது. அதன் பிறகு தெய்வங்களின் மீது ஈடுபாடுகொள்ளும் அளவுக்கு எண்ணம் சுழலத் தொடங்கியது. புதிதாகக் கற்பனை செய்து கண்டறியும் திறன் தோன்றி, அத்தெய்வங்கள் சிற்பங்களாக செய்யப்படுவதை நிர்ணயித்தது. ஆயினும், ஆரம்பத்தில் இவை வழிபடத்தக்க உருவங்களாக நினைக்கப்படவில்லை. பிறகு படிப்படியாக அவற்றின் மீது மதிப்பு ஏற்படத் துவங்கி அது இதயத்தில் எதிரொலிக்கத் துவங்கியது. கடவுள் பற்றிய எண்ணம் அந்த சிற்ப உருவத்தில் இணைக்கப்படுவது ஆரம்பித்தது. அந்த சிற்பத்தைச் செதுக்கியவரின் கலைத்திறமை, அந்தத் திசையில் (அதாவது அந்தச் சிலை உருவம் தெய்வம் என்று நினைப்பதில்) மக்களை மேலும் கவர்ந்து இழுத்தது. இவ்வாறு சீரழிந்து வரும் காலங்களுக்குத் தக்கபடி கடினத்தன்மையும் அதிகரித்தது. இந்தவிதமாக ஸ்தூலமான பொருளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மேலாதிக்கம் பெற்றது. சுயநலநோக்கம் உடைய மனிதர்கள், இந்த உருவ வழிபாட்டுக்கு மேலும் கவர்ச்சி சேர்த்தார்கள். முடிவில் அது இவ்வாறாக மனத்தின் நாட்டத்தையும், சார்பையும், அதன் பக்கமே திருப்பிவிட்டுவிட்டது. இந்தவிதமான ஈடுபாடு அதிகமாகி, உயர்ந்த தெய்வீகத்தன்மையை இதயம் சார்ந்திருக்கும்

இணைப்பையே அறுத்து, சுயநலம் தேடும் தாழ்ந்த மண்டலங்களைத் தேட வைத்தது. எனவே உருவ வழிபாடு மிகத் தீமையானது; அதே போல நன்மையும் அளிப்பது. யாருடைய மன நாட்டம் கடவுளுடன் மட்டுமே இணைந்திருக்கிறதோ, யாரொருவர் இந்த உருவத்தை கடவுள் மீது மனம் நிலைக்க வைப்பதற்கான திடமான வழியாகக் கருதுகிறாரோ அவரால்தான் இந்த முறையினால் நன்மைபெற முடியும் என்பதை நான் மீண்டும் உறுதியாகச் சொல்கிறேன், மேலும் ஒருவர் இந்த வழிமுறையை ஒருவர் ஆயுட்காலம் முழுவதற்கும் கடைபிடிக்கக் கூடாது. உருவ வழிபாட்டின்மீதான இந்தப் பற்று தானாகவே நீங்கும் காலத்திற்காக அவர் காத்திருக்க வேண்டும். உருவ வழிபாட்டை, கடவுளை நினைப்பதற்கு ஒரு வழியாக மட்டுமே நினைக்கும்போதுதான் இது சாத்தியமாகும். தங்கள் கடினத்தன்மை உடைய மனப்பான்மையை திருப்திப்படுத்திக்கொள்வதற்கு திடப்பொருளான ஏதோ ஒன்றை ஏற்றுக்கொண்டாலன்றி வழிபட இயலாது என்ற நிலையிலேயே இருக்கின்ற மூடர்களுக்கு இந்த உருவ வழிபாடு பயன்படலாம். உண்மையில் இதற்கும் கூட ஒரு வழிகாட்டி தேவைப்படுகிறார். இந்த மூடரை அவரது ஸ்தூலமான (கடினத்தன்மை உடைய) நிலையில் வைத்துக்கொண்டே முன்னோக்கி அழைத்துச் செல்லும் அந்த அளவு திறமையையாவது அடைந்திருக்கிறவராக அவர் இருக்க வேண்டும்.''

''நான் இப்போது கூறிய இந்தக் கருத்துரை, சில விஷயங்களை சுட்டிக்காட்டுவதற்காகவே ஆகும். சூழ்நிலைகள் எப்படி இருக்கிறதோ, அந்த நிலைமைக்கு ஏற்றவாறு எதையும் கேட்டறியும் ஆர்வமுடைய சாதகன் முன்னோக்கிக் கொண்டுசெல்லப்பட்டு எல்லாக் கட்டுப்பாடுகளையும் கருத்தில் கொண்டு, அடுத்தடுத்த நிலைகளை அடையும்படி செய்யப்பட வேண்டும். என் ஆயுட்காலத்தில், ஏதோ ஒரு சமயத்தில் இந்த விஷயத்தை நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது, ஒரு இடத்தில் தங்காமல் நாடெங்கும் சுற்றி அலையும் முனிவர்கள் (பரிவ்ராஜக சன்னியாசிகள்), ஏதாவது ஒரு இடத்தின் அமைதியான தன்மையைக் கண்டால், அங்கே அந்த இடத்தை நோக்கி தங்கள் அன்பு நிறைந்த பார்வையைச் செலுத்தி, அந்த இடத்துக்கு அருள் சக்தியினால் நிரப்புவார்கள் என்பதைக் கூறினேன்.''

### சுவாமி விவேகானந்தா:

''இந்த செயல்நுட்பம் இடைக்காலத்தில் அதாவது வேதகாலத்திற்கும், இக்காலத்திற்கும் இடைப்பட்ட ஒரு காலத்தில் நடைமுறையில் இருந்தது.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இது பெரும்பாலும், பெரும் எண்ணிக்கையில் மக்கள் அடிக்கடி செல்கின்ற கோயில்களில் நடைபெற்றது. அந்த சன்னியாசிகள் அங்கு இருக்கும் தெய்வச்சிலைக்கு, அந்தச்சிலையின் முன்னால் இருந்தால் மூடனுக்கும் கூட சிறிதளவு நன்மை உண்டாகும்படியாக, தங்கள் மனோசக்தியை அளித்தார்கள். முக்கியமான தெய்வ ஆற்றலை அந்தச்சிலையினுள் செலுத்தும் மற்றொரு விதமான செயல்நுட்பம் இது. இது அந்த முனிவர்களின் கண்டுபிடிப்பு. கோயில்கள் என்ற அமைப்பு நடைமுறைக்கு வந்த போது அவர்கள் இப்படிச் செய்யத் துவங்கினார்கள்.''

**சுவாமி விவேகானந்தா:**

''துளசிதாசர் குறிப்பிட்டுள்ள செயல்நுட்பம், உண்மையில் இப்போது எங்கும் இல்லை.''

*(துளசிதாசர் தனது ராமாயண காவியத்தில் எழுதியுள்ளபடி ஸ்ரீராமன் ராமேஸ்வரம் என்ற திருத்தலத்தில் சிவலிங்கத்தை மண்ணினால் செய்து அதற்கு சக்தியளித்து, பூஜை செய்த கதை இங்கு குறிப்பிடப்படுகிறது.)*

26-10-1945

**சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய அறிவுரைக் குறிப்புகள்:**

''நீ (ராம் சந்த்தர்) வழக்கமான அனைத்து வேலைகளையும் நிறுத்திக்கொண்டு மூன்று மாதங்கள் நிம்மதியாக இருக்க விரும்பும் உன் கருத்தை நான் ஆதரிக்கிறேன். அது துவங்கும் தேதியை நான் நிர்ணயிப்பேன். அந்தக் காலகட்டத்தில் சரியான விதத்திலான கற்றலும், என்னோடு நிரந்தரமான இணைப்பும் இருக்கும். நீ அவர்கள் எதிரில் இல்லாமலே உன் சீடர்களுக்கு உதவி செய்ய முடியும். சிலசமயம் யாரையாவது நான் அழைக்க வேண்டிய தேவை இருந்தால் நான் அவரை அழைப்பேன். அந்தச் சமயத்தில் ராம் சந்த்தருக்கு முழு ஓய்வு அளிக்க வேண்டும். எந்தப் புதிரான பிரச்னையையும் அவரிடம் கொண்டு போகக்கூடாது. சுய ஆய்வுக்கான சந்தர்ப்பம் மட்டுமே அவருக்கு அளிக்கப்பட வேண்டும். அவரை சந்திக்கச் செல்வதையும், அவருடன் கலந்து பேசுவதையும் குறைத்துக் கொள்ள வேண்டும். அவருடைய இதயத்துக்கும் மூளைக்கும் ஓய்வளிப்பதற்காக அவருக்கு விடுமுறை தரப்பட்டுள்ளது என்று மக்களிடம் சொல்லலாம். இந்தச் சமயத்தில் அவர் யாருடனும் அதிகம் பேசமாட்டார். மிஷனில் இருக்கும் கருத்து மோதல்கள் அவருக்குத்

தெரியாமல் வைத்திருக்க வேண்டும். அவருக்குத் தேவைப்படுவது எதுவாயினும் அதை முன்னதாகவே தயார் செய்து வைத்து, அவருடைய இதயத்திற்கும், மனத்திற்கும் சிரமம் ஏற்படாதபடி கவனித்துக் கொள்ள வேண்டும். மக்கள் தொடர்ந்து நன்மை அடைந்து கொண்டிருப்பதற்காக இரவு 9 மணிக்கு என் பிராணாஹூதி தொடங்கும். அவருடைய நினைவில் என் பிராணாஹூதி இருக்கும். அவராக யாரையாவது அழைத்தால், அவர் வந்து அவரால் (ராம் சந்த்தரால்) விரும்பப்படும் காலம் வரை மட்டும் அவருடன் இருக்கலாம். தங்கள் இடங்களில் அதாவது அவரவர் சொந்த வீடுகளில் உட்கார்ந்து தியானம் செய்கிறவர்கள், இங்கே கிடைப்பது போலவே அதே மாதிரி சக்தி அதிர்வலைகளைப் பெறுகிறார்கள் என்பதை நான் அறிவேன்: என் அருள் பிரபஞ்சம் எங்கும் பரவியிருப்பதாகும்.''

29-10-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''என் பிரியமான ராம் சந்த்தரின் மனம் ஆன்மீகப் பயிற்சியளிப்பதில் இந்தப் புதிய முறையின் சாராம்சம் முழுவதையும் கிரகித்துக் கொண்டிருக்கிறது. அவருடைய பயிற்சி முறை குறையில்லாத முழுமை உடையது. ஆனால், அவரிடமிருந்து பயிற்சி பெறுகின்ற ஒவ்வொரு மனிதருக்கும் அவரது அவதாரத்தின் உள்நிலை அளிக்கப்பட்டுவிடலாம் என்ற இதன் விளைவு பற்றிய அச்சம் நீடிக்கிறது. இதனால் பயிற்சியின் முடிவான நிலை உள்ளத்தில் மறைத்து வைக்கப்பட வேண்டும். இந்தச் செயல்முறை மேலும் தொடரப்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஒரு குறிப்பிட்ட நிலை வரையில் பயிற்சி அளிக்கப்படலாம். ஆனால், அனைவருக்கும் அதைக் கொடுக்கக்கூடாது. இது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் உத்தரவு.''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''ராம் சந்த்தரிடத்தில் எல்லாப் புள்ளிகளும் மிகச்சிறந்த முழு மலர்ச்சியில் உள்ளன. அனைவரையும் இந்த உன்னதமான உச்சநிலைக்குக் கொண்டு வருவது இயற்கைக்கு எதிரானது. இந்த சக்தி மிக விசேஷமானது; எனவே, விசேஷமான ஒரு மனிதரிடத்தில் மட்டும்தான் இதை வைத்திருக்க வேண்டும். இதற்கு உதாரணமாக நான் இருக்கிறேன். நான் இந்த விசேஷ சக்தியை என்னோடு கொண்டு வர வேண்டியிருந்தது.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''மூத்தோர்களாகிய முனிவர்கள் யாராயினும் அவர்கள் அனைவரும் தங்கள் பணியை உன்னிடம் ஒப்படைத்துவிட்டு, தங்கள் சுமையிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டார்கள். ஆன்மீக குருமார்களின் குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் நீ அவர்களுக்காகப் பணிசெய்ய அனுமதி பெற்றிருக்கிறாய். நீ விரும்புகின்ற எந்த ஒரு மார்க்கத்திலும் நீ பயிற்சியளிக்க முடியும். அப்போது அந்த மார்க்கத்தின் உறுப்பினர்களுக்கு அதே இணைப்பு (குருமார்களுடன்) உருவாக்கப்படும்.''

6-11-1945

**மக்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். தன்னிடத்தில் ஆனந்தக்களிப்பு உடைய உற்சாகம் அதிகரிக்கப்படுமானால், தன்னால் இன்னும் நிறைய அளவு வேலை செய்ய முடியும் என்று R2 - சொன்னார். அதற்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''சகஜமார்க்கம் என்ற இந்த முறை என் பிரியமான ராம் சந்த்தரிடமிருந்து தொடங்கியது. இது ஹிந்து மத சம்பிரதாயத்தைப் பின்தொடர்வதாகும். ஹிந்து மதம் எப்போதுமே அசலான சத்தியத்தின் நகலாக இருந்திருக்கிறது. தேவைப்பட்ட சமயத்தில் அசலான சத்தியத்தின் விசேஷ சக்தியும் கூட பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதுபற்றி நான் முன்பே (25-6-1945) சொல்லியிருக்கிறேன். கொதித்து எழுதல் அல்லது பொங்குதல் என்று அறியப்படுகின்ற ஆனந்தக்களிப்புத் தன்மை என்பது இஸ்லாமியர்களின் காலத்தில் ஆரம்பித்தது. அதுவும் கூட அக்கால நிலைமைக்கு ஏற்றதான ஒரு செயல்நுட்பமாக இருந்தது. நீங்கள் (R2 மற்றும் அங்கு உடனிருந்தவர்கள்) கூர்ந்து கவனித்தால், ராம் சந்த்தரிடமிருந்து இந்த உள்நிலைத்தன்மை முற்றிலும் நீக்கப்பட்டிருக்கிறது; சகஜமார்க்கம் என்ற இந்தப் புதியமுறை அவரிடமிருந்து உருவாகி சரியானபடி வளர்ச்சியடைவதற்காகவே அப்படிச் செய்யப்பட்டது என்பதைக் கண்டறிவீர்கள். இந்தப் பயிற்சிமுறை முன்னேறுவதற்கு ஏற்ப இதுவும் அதிகரித்துக் கொண்டே போகும். ஆனந்தக்களிப்பின் உற்சாகம் என்பது R2 நினைப்பது போன்றது அல்ல. ஆனந்தக் களிப்பின் உற்சாகம் என்பது உண்மையான அர்த்தத்தில் நெருக்கமான பற்று எனப்படும். அது உலகியல் தன்மையை (பொருள் சார்ந்த தன்மையை) உள்ளடக்கிய பொங்குதல் தன்மையாக இருந்தது. இது தூய்மையாக இருக்கிறது. இதனுடைய வேகம்

அதனுடன் ஒப்பிடும் போது பலமடங்காக இருக்கிறது. இது ஆயுட்காலம் முழுவதும் வாடி மறைய இயலாது. ஆனால் அது (ஆனந்தக் களிப்பின் உற்சாகம்) அதன் கூர்மையை அதிகரிப்பதற்காக எப்போதும் தூண்டிக் கொண்டே இருக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த உற்சாகத்தினால் மட்டுமே வேலையில் வெற்றி வரும் என்பது அவசியமில்லை. இது (சகஜமார்க்கம்) அதைவிட பலமடங்கு சிறப்பாக அந்த வேலையைச் செய்ய முடியும். இந்த மௌனமான பற்றின் தாக்கத்துக்கு உட்பட்டவர்கள் விடுபட இயலாது. இது மட்டுமே அவர்களிடம் நிலைபெற்று விளங்கும். ஆனந்தக் களிப்பின் உற்சாகத்தை உருவாக்கிக் கொள்ளும் பழக்கம் உடையவர்களும் கூட இந்த மௌனமான பற்றுக்கு வரவேண்டியிருக்கும். ஆனால், அவர்களுக்கு இது மிகவும் கடைசியாக வருகிறது. இந்த ஒரு விஷயமே காரியத்தைச் செய்து முடித்துவிடுகிறது.''

R2 - ஐ தியானத்தில் உட்காரும்படி சொல்லப்பட்டது.

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுரைக் குறிப்புக்கள் தொடர்ந்தன:**

''இந்தக் கூர்மை R2 - ன் பார்வைக்கு (கருத்துக்கு) இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை இன்னும் அதிகரிக்கவும் முடியும். அதனுடைய பூர்ணமான தன்மையில் இப்போதைய உள்நிலை அவரிடம் வந்திறங்கியிருக்கின்ற இந்த விதமான ஒரே ஒரு பிராணாஹூதியே கூட ஆயுட்காலம் முழுவதும் மங்காமல் நிலைத்திருக்கும் விளைவு உடையதாக இருக்கும் என்பதை நான் மிக உறுதியோடு சொல்கிறேன், எனினும் சாதகர் அதை வீணாகப் போகும்படி விட்டுவிட்டால், அது மறைந்து போகும் என்பது உண்மைதான். இது மெல்லப் புகைந்து அந்த இடம் முழுவதும் வெப்பமாக்கும். அதன் விளைவு கொஞ்சம் கொஞ்சமாக தெளிவாகப் புலப்படும். இந்தியாவில் ஒரு பழமொழி கூறுவதுபோல இரண்டே வெள்ளிக்கிழமைகள் எட்டு நாட்களாக ஆகும். இது உண்மை. நான் இரண்டு விஷயங்களை (அதாவது ஆனந்தத்தின் போதையையும்) இதில் ஒன்றாகக் கலந்து வைத்திருக்கிறேன். ஆனால், இப்போது தூய்மை மட்டுமே மேலோங்கி நிற்கிறது.''

8-11-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இப்போது எனக்கு சலிப்பு உண்டாகி விட்டது. இவர்கள் எல்லோரும் சேர்ந்து என் பொறுமையை அலுப்படையச் செய்து விட்டார்கள்.''

**சுவாமி விவேகானந்தா:**

''யார் உன்னை நாடி (ராம் சந்த்தரை) வருகிறார்களோ அவர்களுக்குப் பயிற்சி கொடு. அதற்கு மேல் உன்னை நீ சிரமப்படுத்திக் கொள்ளத்தேவையில்லை. உன்னுடைய உடல் ஆரோக்கியத்தை இன்னும் அதிகரித்துக்கொள். நாம் வெட்டவெளியில் வந்து உட்காரக்கூடியவாறு உன் உடல்நலம் திடமாக இருக்கவேண்டும். மக்கள் உனக்காகக் காத்திருக்கிறார்கள். நல்ல முழுமையான பயிற்சி பெறுவதற்காக அவர்கள் உன்னிடம் தனித்தனியாக வரவேண்டுமே தவிர வெட்டுக்கிளிகளின் கூட்டம் போல அலையலையாக அல்ல. உன்னுடைய பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு நமக்கு மனிதர்கள் தேவை. ஏற்கனவே, உன்னுடன் இணைந்து இருக்கின்ற அனைவருக்கும், இந்தச் சமயத்தை தங்கள் அதிகபட்ச நன்மைக்காகப் பயன்படுத்திக்கொள்ளும்படி அறிவுரைகொடு. எல்லா இடங்களிலும் மனிதர்களை உன் சார்பாக வேலை செய்ய நியமிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். உன் குரு உன்னுடைய திடமில்லாத உடல்நிலையை எண்ணி எப்போதும் அதை கவனத்தில் கொண்டிருக்கிறார். (சிறிது இடைவெளி) ஒரு சிங்கம் போல இரு. சிலரை துண்டு துண்டாகக் கிழித்தெறிய வேண்டியதாக இருந்தாலும், அது பற்றி ஒருபோதும் பெரிதாக எண்ணாதே.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''அவருடைய மூளைக்கு தேவையில்லாத அழுத்தம் தராமல் தவிர்ப்பதில் நான் எப்போதும் எச்சரிக்கையாக இருக்கிறேன். ஏனெனில் இயற்கை அவரைக் கொண்டு வேலைகளை நடத்த வேண்டியிருக்கிறது. அதற்கான அறிகுறிகளும் ஏற்கெனவே தெரிகின்றன.''

10-11-1945

**புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட வழிமுறை வணக்கத்திற்குரிய மஸ்டர் அதில் தேவையான மாற்றங்களைச் செய்த பிறகு ஏற்றுக்கொண்ட வடிவில் கொடுக்கப்பட்டுள்ளது.**

**வழிமுறை:**

''தனி மனிதனின் உடலமைப்பு சுத்தமாக வைத்திருக்கப்பட வேண்டும். அதாவது வெளிப்புறத்தில் அழுக்கு இல்லாமல், உள்ளே மனதில் அசுத்தமான எண்ணங்கள் இல்லாமலும் வைத்திருக்க வேண்டும். மனத்தின் சுபாவம் எப்போதும் நிரந்தரமாக சுத்தமாக வைத்திருக்கப்பட வேண்டும். இதயத்தை பாரம் (பளுவான தன்மை) மற்றும் வருத்தம் இல்லாமல்

வைத்திருப்பதற்கு முயற்சிகள் செய்யப்படவேண்டும். இதை பயிற்சியின் மூலமாக அதிகரிக்க வேண்டும். சுத்தமான தண்ணீர் மேலேயிருந்து பெருகி வந்து தூய்மையாகவும், எளிதாகவும், தடையில்லாமலும் அது எவ்வளவு தூரம் பாய்ந்தோட முடிகிறதோ அதுவரையில் சென்று கொண்டிருக்கிறது என்ற உதாரணத்தைப்போல ஒருவன் தனது உள்நிலையை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இதுதான் அந்தக் கோட்பாடு. இம்மாதிரி ஒரு உள்நிலையை ஒருவர் தன்னிடத்தில் உருவாக்கி வைத்திருந்தால் ஆதிப்பரம்பொருளிடமிருந்து இறங்கி வர ஆரம்பித்தது எதுவோ, அது நேரடியாக வந்து கொண்டேயிருக்கும். இதை, இயற்கை அல்லது தெய்வீக நிலையை அதே மாதிரி பின்பற்றுவது, மற்றும் தெய்வீக நிலையுடன் ஒரு இணைப்பை எய்துவது என்று சொல்லலாம்.''

### 14-11-1945

இப்போது ராஜஸ்தான் என்று கூறப்படும் ராஜபுதன பயணம் ஆரம்பமானது.

**ஆக்ராவுக்கு ரயிலில் பயணம் செய்யும்போது வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''இந்தப் புள்ளியைப் பற்றி நிச்சயமாக எனக்குத் தெரியும் என்பதை உன்னிடம் ரகசியமாக நான் சொல்லலாம். அதற்கு முன்பு அது கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த அற்புதமான விஷயம் இதயத்திலேயே விளங்குகிறது என்பது இயற்கையின் மிகச் சிறப்பான குணம். இந்தப் புள்ளிதான் மக்கள் ஆழ்ந்த தூக்க நிலையில் (சுஷுப்தி) நுழைகின்ற இடம். இந்த ஞானம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இங்கே எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. இது அதிசயமடையும் தன்மையின் இடம் என்று அறியப்படுகிறது. (உபநிஷதங்களிலும், கீதையிலும் இது ஆன்மா என்று விவரிக்கப்படுகிறது) எத்தனையோ மூத்த முனிவர்கள் இதில் நீந்திக் கொண்டிருந்தார்கள். இதயமாகிய இந்தப் புள்ளிதான் தெய்வீகச் செய்திகள், (Wahee) மற்றும் அவற்றின் மர்மம் பற்றிய அறிகுறிகள் வந்திறங்குகின்ற இடமாகும், நல்லது. இதைப் பற்றி பிறகு இன்னும் அதிகமாகச் சொல்வேன். இந்தப் புள்ளி இறைதூதர்களிடம் (தெய்வீக தீர்க்கதரிசிகளிடம்) மட்டுமே மலர்ச்சி அடைந்திருந்தது. இந்தப் புள்ளியைக் கண்டறிந்த மனிதரிடமிருந்து (ராம் சந்த்தரிடமிருந்து) ஆன்மீக விஞ்ஞானம் சம்பந்தமான எந்த விஷயமும் மறைக்கப்பட்டிருக்க முடியாது என்று நான் ஆசீர்வதிக்கிறேன்.''

**சுவாமி விவேகானந்தா:**

''உன்னுடைய மிகத்திறமையான மூளையின் விரிவான நிலையைக் கண்டு பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே வியப்படைந்தார். இந்தப் புள்ளியைப் பற்றிய அறிவு (ஞானம்) முதலில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் பிறகு உன் குருவுக்கும் தவிர வேறு யாருக்கும் இல்லை! ஆன்மீகம் என்ற பரந்த களத்தில் இந்தப் புள்ளியின் பங்கைக் கண்டறிவதற்கு இந்தியாவின் முனிவர்கள் நீண்டகாலம் தவம் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், அதில் அவர்கள் வெற்றியடையவில்லை. இது எல்லையில்லாத மற்றும் முடிவில்லாத ஒரு பரந்த வட்டமாகும். யாரும் இதை அளவெடுத்துச் சொன்னதில்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வீணாகிப்போயின; எத்தனையோ பேர் இந்த அலைகளின் மீது நீந்தியிருக்கிறார்கள். ஆனால் ஒருவரால் கூட அதன் ஆழத்திற்கு செல்ல முடியவில்லை. நீண்டகாலப் பிரச்னைக்குத் தீர்வாக உனக்குக் கிடைத்த விஷயம் ரகசியமான குறிப்புக்களில் வைக்கப்படும். இம்மாதிரி ரகசியமான விஷயங்கள் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இயற்கையின் ரகசியம் எல்லோருக்கும் தெரிவிக்கப்பட்டுவிட்டால், அந்த சக்திகள் தவறான வழிகளில் பயன்படுத்தப்படும். இயற்கையின் பல்வேறு சக்திகள் இந்தப் புள்ளிக்கு அடுத்தநிலையில் (இசைந்து நடக்க வேண்டிய நிலையில்) உள்ளன. தெய்வீகப் பணி சம்பந்தமான தெய்வீகக் கட்டளைகள் இதன் மூலமாகவே வந்திறங்குகின்றன. இந்த இதயப்புள்ளியைப் பற்றி எவ்வளவு தான் நாம் விளக்கிச் சொல்ல முயற்சித்தாலும், இது சொல்லி முடிக்க இயலாததாகவே நிலைத்திருக்கும். இந்த மிகப்பெரிய மையத்தில் கடவுளின் சக்தி இடம் பெற்றுள்ளது.''

## 15-11-1945 (ஆக்ராவில்)

**சுவாமி விவேகானந்தா:**

''நீ ராஜபுதனத்தின் நுழைவாசலில் இருக்கின்றாய். இங்கே உன் வேலையை செய்யத் துவங்கு. இந்த வழியாக நீ மீண்டும் வேலைக்காக வரவேண்டியிருக்கும். இந்தப்பகுதி ஆன்மீகத்தில் கிட்டத்தட்ட பாலைவனமாக இருக்கிறது.''

## 17-11-1945 (சிகார் என்ற ஊரில்)

**சுவாமி விவேகானந்தா:**

''ராஜபுதனத்தின் வேலை ஒரு நல்ல விதத்தில் துவங்கியது. ஆனால் இந்த இடத்தில் நீ தங்கவில்லையாதலால் பாதி வேலைதான் நடந்துள்ளது.

மேலும், உனக்கு இன்று உடல்நிலையும் சரியாக இல்லை. இல்லையென்றால் ஒரு இரவு நீ செய்யும் பணியே போதுமானதாக இருந்திருக்கும். ஆனால், இந்த வேலையை செய்து முடிப்பதற்கு உனக்கு இன்னமும் நேரமும் ஆயுளும் இருக்கிறது.''

''P3 - என்பவரின் வீழ்ச்சி இப்போது ஆரம்பித்து விட்டது என்ற உன் கருத்து முற்றிலும் சரியானது. அவர் நல்ல மனிதரல்ல. தன் மாமியாருக்கு அவர் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார். அந்தப் பெண்மணி ஒரு நல்ல பக்தியுள்ள ஆன்மா. அவளது ஆன்மாவைக் காணும் கண்கள் P3 – க்கு இல்லாமற் போய்விட்டது. P3 - இன் இந்த நடத்தை எங்களை மிகவும் பாதித்திருக்கிறது. அது பழி தீர்க்கப்படாமல் போகாது. நீ அவர் வீட்டுக்குச் செல்லும்போது தன் மனைவியை நல்லவிதமாக நடத்தும்படி அவரிடம் சொல். அவளுடைய கூருணர்வுத் திறன் சரியான திசையில், நமது பிரபுவாகிய வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பணியில் தோளுடன் தோளாக அவள் நிற்கும்படியாக, சரியான முறையில் பயன்படுத்தப்படவேண்டும்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''என் பிரியமான ராம் சந்த்தரிடம் எனது இரட்டைத் தன்மையை தக்க வைத்திருக்கிறேன். அவருக்கும் எனக்கும் இடையே ஏதோ ஒருவிதமான திரை நீடித்திருக்க வேண்டும் என்பதற்காகவும், என்னுடன் மொத்தமாக ஐக்கியத்தை அடைவதற்காகத் தன் பௌதீக உடலை அவர் உதறிவிடாமல் இருப்பதற்காகவும், இப்போது குறிப்பிட்டதுபோல நான் செய்திருக்கிறேன். இந்த உள்நிலைத்தன்மையின் வடிவம் எப்படி இருக்கிறது என்றால், யாரோ ஒருவர் வேறு யாரோ ஒருவருடன் சேர்த்து ஒட்டப்பட்டிருக்கிறார்; ஆயினும், தன் சுய அடையாளம் அந்த இன்னொரு மனிதரிடமிருந்து இன்னும் வேறாகவே இருப்பதைக் காண்கிறார் என்பதுபோல இருக்கிறது. இது ஏதோ ஒரு நன்மையைக் கருத்தில் கொண்டு தக்க வைக்கப்பட்டுள்ள வெறும் கருத்தாக இருக்கிறது. அவர் விஷயத்தில் இது அவருடைய முடிவு நேரும் சமயத்தில், அதாவது இந்த பௌதீக உலகிலிருந்து அவர் விடைபெற்றுச் செல்ல விரும்பும்போது மறைந்து போகும். இயற்கை வேறு ஏதாவது பாதையை பின்பற்றாமல் இருக்கும் காலம் வரையில், இது பற்றிய முடிவை அவருக்கே விட்டுவிட்டேன். நீ உண்மையாகவே இந்த உலகை விட்டுச் செல்ல விரும்பும்போது, உடனடியாக உன்னை வரவேற்பதாக நான் வாக்குறுதியளித்திருக்கிறேன் என்று தெரிவிப்பதற்கே இதைச் சொல்கிறேன்.''

### 18-11-1945 (ரயிலில் திரும்பும் பயணத்தின் போது)

**சுவாமி விவேகானந்தா:**

‘‘இந்த உலகம் படைக்கப்போவதற்கு முன்பாக, எல்லாமே மென்மையாக, எழுச்சியும் வீழ்ச்சியும் இல்லாமல் இருந்தன. ஜீவிதத்தின் கருத்தில் திருமணம் (இணைதல்) என்ற விஷயத்துக்கு இடமளித்த கருத்து வேர்விட்டிருந்தது. ஒவ்வொரு அணுவிலும் (atom) அணுக்கூறிலும் (molecule) இணைதல் என்ற கருத்துநிலவியது. அந்த அணுத்துகள்கள் முழுவதிலும் இந்த அலை பரவி, அவை வடிவமும் உருவமும் பெற்றன. இயற்கையின் வேலையை முழுமை பெறச் செய்வதற்காக நேர் மற்றும் எதிர்மறை அலைகள் ஒன்றையொன்று கவர்ந்து இழுத்தன. அதாவது, ஜீவிதத்தின் கருத்தைச் சொல்கிறேன். சுகானுபவம் என்ற வடிவத்தில் பண்படாத மகிழ்ச்சி என்ற கருத்தே அவற்றை ஆட்சி செய்தது. இந்தப் பண்படாத மகிழ்ச்சி ஏன் புலன்களுக்குப் பின்னால் தேடப்பட்டது? சிருஷ்டியை தொடர்ந்து அன்றாட வாழ்வில் கொண்டு வருவதற்காக சிருஷ்டியின் ஆதியான சக்தியால் (பிரம்மா) உண்டாக்கப்பட்ட இனிய பொழுதுபோக்கின் காரணமாக இது ஏற்பட்டது. பிரபஞ்சத்தைப் படைத்த பரம்பொருளின் சித்தத்தின் அழுத்தத்தினால், இந்த உணர்வு ஜீவராசிகளின் சூட்சும சரீரத்தில் ஆழமாக வேரூன்றியிருந்தது. இந்தக் கருத்து முற்றிலும் பூரணமாக இருந்தது. தனி மனிதர்களாக உங்களில் யாராவது இயற்கை அதை எப்படி வளர்ச்சி பெறச் செய்ததோ அந்த அளவுக்கு அது சென்றடையும்படி அதை மாற்றியமைக்க விடுவதற்குத் தயாராக இருக்கிறீர்களா? அப்படியானால் இந்த விஷயத்தில் நீங்கள் இயற்கையுடன் அருகருகே போகிறீர்கள். காலம் செல்லச் செல்ல, தங்கள் முன்னோரிடமிருந்து தலைமுறை தலைமுறையாகப் பெறப்பட்ட அந்தவிதமான சுகானுபவத்திற்கு மக்கள் பழக்கப்பட்டுவிட்டார்கள். இதன் விளைவு உங்கள் கண்களுக்கு முன்னே தெளிவாகத் தெரிகிறது. இந்த விஷயங்கள் ஒருவருடைய சீடர்களுக்குள் நுழையக் கூடாது. இம்மாதிரி பணிகளுக்காக உனக்கு விசேஷ சக்தி அளிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரி சுகானுபவ விஷயத்தில் அதிக ஈடுபாடுடையவர் யாராவது உன் முன்னே வருவதைக் கண்டால், அவரை மழுங்கச் செய்து விடு – அதாவது அவரது ஈடுபாட்டைக் குறைத்து விடு. இப்போது நான் சொன்னவையெல்லாம் போதுமான அளவுக்கு ஒடுக்கப்பட்டுள்ள அவர்களது வளர்ச்சியின் போக்கு தவறான முனைக்கு திசை திருப்பப்பட்டுள்ள மக்களுக்குப் பயனளிக்கும். ஒவ்வொரு மனிதனும் இதற்கு இரையாகி இருப்பதை நீ காண்பாய்.

ஷாஜஹான்பூர் திரும்பிச் சென்றவுடன் இந்தத் தொற்று நோயிலிருந்து விடுதலை அடைவதற்கு அவர்கள் பின்பற்ற வேண்டிய வழிகளையும் செயல்முறைகளையும் சீடர்களுக்குத் தெரிவிப்பது உன் கடமையாகும். நீ யார்? உனது மகத்துவம் என்ன என்பதை மக்கள் உணராமல் இருக்கிறார்கள். ஆரம்பத்திலேயே உனக்கான பயிற்சி பரம்பொருளின் மையத்திலிருந்து துவங்கியது. அது ஏன் அப்படிச் செய்யப்பட்டது என்பது உனக்குத் தெரியுமா? நமது பிரபு இதற்கான பதிலை தனது நோட்டுப் புத்தகங்களில் எங்கேயோ கொடுத்திருக்கிறார். அதாவது, நீ ஒரு மாற்றத்தை விளைவிப்பதற்காக வந்திருக்கிறாய். உன் ஆயுள் முழுவதும் இதுவே உனது செயல்பாடாக இருக்கும். எதற்காக நீ விதைகளை விதைத்தாயோ அந்த வாழ்க்கை முறையில் உனக்குப் பின்னால் வருகிறவர்கள் பயிற்சியளிப்பதற்காக மிக உயர்வான முயற்சியே உன் வேலையை சுலபமாக்கும்.''

## 19-11-1945 (ஜெய்ப்பூர் ரயில்நிலையத்தில்)

### சுவாமி விவேகானந்தா:

''இங்கே மிஷன் பணி ஆரம்பிப்பதற்காகவும், மேலும் தொடரவும் களத்தை நாங்கள் அளந்தோம். உங்கள் உறுப்பினர்களில் மிகவும் கல்வியறிவுடைய, உள்ளொளி பெற்ற இதயம் கொண்ட மனிதர்கள் இங்கே வெற்றிகரமாக இருப்பார்கள். அதற்கான பாதையை நாங்கள் உந்தித் தள்ளிக் கொண்டிருக்கிறோம். ஒரு குறுகிய இடைவேளையிலேயே அதற்கான விதைகள் உன்னால் விதைக்கப்பட்டுள்ளன. வேலை செய்வதற்குப் பொருத்தமான மனிதர்களை தென்னிந்தியா மற்றும் வடஇந்தியாவிலிருந்து நீ பெறுவாய். விரைவிலேயே உனக்கான இடத்தைப் பெறுவாய் என்று உறுதியளிக்கிறேன். உன் மாஸ்டருடைய சக்தியினால் மனிதர்களை வேலை செய்வதற்குத் தகுதியானவர்களாக ஆக்க உன்னால் முடிந்த அளவு முயற்சி செய். ஒவ்வொரு பகுதியும் முழுமையாக வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக உள்முகமாக நீ மிகவும் கண்டிப்போடு இருக்க வேண்டும். இந்த வேலையைச் செய்ய ஏற்றுக்கொள்ளும் ஒரு மனிதருக்கு ஒரு சிறப்பான விதத்தில் பயிற்சி அளிப்பது தேவைப்படுகிறது. இது உனது மிஷன் அனைவராலும் மிக உயர்வாக மதிக்கப்படுவதற்காகவே தேவையாகிறது. அதுபற்றி மற்ற சமயங்களில் இன்னும் அதிகமாகச் சொல்வேன்.''

2–12–1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘ M2 பற்றி உன் எண்ணம் சரியானது. அவருக்கு ஏற்கெனவே நிறைய அளித்திருக்கிறாய். அதை தனக்குள் ஜீரணித்துக் கொள்வதற்கு (கிரகித்துக் கொள்வதற்கு) அவருக்கு நேரம் தேவைப்படும். இப்போது அவருடைய உள்நிலை ‘சுழல்’ என்ற வார்த்தையால் நீ விவரித்துள்ள தன்மையில் இருக்கிறது. அவரை இப்போது அதிலிருந்து கலைப்பது தேவையில்லை.’’

3–12–1945

**கேள்வி:** ‘‘மிகப்பெரிய (மிகவும் அபாயகரமான) எதிரி யார்?’’

**பதில்:** ‘‘வீண் பெருமை’’

15–12–1945

**சுவாமி விவேகானந்தா:**

‘‘இங்கே பார். தெய்வீகப் பணி சரியாக நடைபெறவில்லை. அதைச் செய்து முடிப்பதற்கு உனக்கு ஆறு மாதங்கள் அவகாசம் கொடுக்கிறேன். ஜுன் மாதத்தில் வாரணாசிக்கும் அதன்பிறகு ஒரிஸ்ஸாவுக்கும் செல். இங்கு இருக்கும் ஸ்ரீ சைதன்ய மஹாப்பிரபு தன் சீடர்களிடம் அதிருப்தி அடைந்திருக்கிறார். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஹிந்து மதத்தின் தலைமை நிலைநிறுத்தப்பட்டது. எகிப்து (இப்போது ஐக்கிய அரபுக் குடியரசு) பகவான் மனுவின் இருப்பிடமாக இருந்தது. அது இந்தியாவின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டிருந்தது. ஆன்மீகம் என்ற தீப்பந்தத்தை நீ அங்கேயும் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கும். உனக்கு முன்னால் இருக்கும் வேலை உன் கற்பனைக்கும் அப்பாற்பட்டதாக இருக்கிறது. அதை உன் ஆயுட்காலத்திற்குள் செய்து முடிக்கவேண்டும். நீ எவ்வளவு வலிமையாக உருவாக்கப்பட்டிருந்தாயோ அவ்வளவு வலிமையோடு உனக்குப் பின்னால் யாரும் வருவதாகத் தோன்றவில்லை. இந்த விஷயங்களில் உன் விசேஷ சக்திகளைப் பயன்படுத்து. மேலும் அதிகபட்சம் சாத்தியான விரைவில் இந்த வேலைக்காக மனிதர்களைத் தயார் செய். நீ செய்யவேண்டிய வேலைகளின் தேங்கிய இருப்பு உனக்காகக் காத்திருக்கிறது. ஆனால் தினசரி பாடங்களைக் கூட உன்னால் இன்னும் செய்து முடிக்க முடியவில்லை. இது உன் உடல்நிலை பாதிப்பினால்தான் நிகழ்ந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதற்கு வேறு மாற்று வழி இல்லை.’’

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘நீ ஒரிஸ்ஸாவுக்குப் போக வேண்டியிருக்கும் என்று தோன்றுகிறது. முதலில் வாரணாசிக்குப் போ. அங்கு வேலை செய்து முடித்த பின்னர், ஒரிஸ்ஸாவுக்குப் போகலாம்.’’

**சகோதரர் J1:**

‘‘அங்கே பெருமைகளோடு (பாராட்டுதல்களுடன்) திரும்பிவாருங்கள். அன்பு சகோதரரே!’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘ஒரிஸ்ஸா சென்ற பின் அங்கே முக்கியமான வேலை உன்னிடம் கொடுக்கப்படும். நீ நல்ல திடமான ஆரோக்கியத்துடன் இருந்திருந்தால் அடுத்ததாக எகிப்து செல்லும்படி உனக்கு உத்திரவிட்டிருப்பேன். எங்கே ஒரு சங்கல்பம் இருக்கிறதோ, அங்கே அதைச் செய்வதற்கான வழியும் இருக்கிறது. (மனம் இருந்தால் மார்க்கம் உண்டு)’’

16-12-1945

**சுவாமி விவேகானந்தா:**

‘‘இந்தக் குறிப்பை, உன் நாட்குறிப்பில் விட்டுச் செல்கிறேன். ஏதோ ஒரு காரணத்தினால் நீ அதைச் செய்ய இயலாமல் இருந்தால், உனது தலைமைச் சீடர் அதைச் செய்து முடிப்பதற்காக விட்டுச் செல்கிறேன்.’’

17-12-1945

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

‘‘எல்லாப் பயிற்சி முறைகளும் (இணைப்புக்களும்) உடைத்தெறியப் பட்டுவிட்டன என்று என் சார்பில் அறிவித்துவிடு. பழைமையான ஹிந்து மதம் சார்பான பயிற்சிமுறை நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அதனுள் எல்லோரும் தீட்சை அளிக்கப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த விதமாக சில குறிப்பிட்ட மனிதர்கள் மற்றும் பயிற்சி முறைகளின் இணைப்புக்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.’’

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (M1-க்குச் சொன்னது):**

‘‘ஒரு பிரச்னை வந்து கொண்டிருக்கிறது. அதாவது, இந்த விளக்கங்களில் எல்லாம் யாருமே நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவில்லை. இவையனைத்தும் கற்பனையின் மூலமாக உருவாக்கப்பட்டவை என்று அவர்கள் கருதுகிறார்கள். மக்களுக்கு, அவர்கள் யாராக இருந்தாலும்

அவர்களுடைய ஆன்மீக முன்னேற்ற சாத்தியங்களைக் கெடுக்கும் நோக்கம் சிறிதும் இன்றி, அல்லது அவர்களை மோசடி செய்யும் எண்ணம் இன்றி, இந்தப் பயிற்சி முறையில் அவர்களுக்கு தீட்சை அளித்திருக்கிறாய் என்பதை அவர்களால் பார்க்க இயலவில்லை. S1 - முதலானவர்கள் தங்கள் சீடர்களுக்கு தாங்களே பொறுப்பாளிகள் என்று கருதினால் நீயும் அதுபோலவே நினைக்காதே. அவர்களுடன் ஒப்பிட்டால் உனது சீடர்களுக்கு நீயும் எதிலும் குறைந்த பொறுப்பாளி என்றும் நினைக்காதே. ஒரு கேள்வியை நிச்சயமாக அவர்கள் கேட்கக்கூடும். அதாவது ராம் சந்த்தருக்கு பயிற்சியளிப்பதற்கு எல்லோரும் தயாராக இருந்த போது – குறைவான அளவிலோ அதிக அளவிலோ அவருக்கு நிஜமாகவே பயிற்சியும் அளித்த போது – எல்லா விஷயங்களுமே அவரிடம் மட்டுமே தோற்றம் பெறுமாறு (இடம் பெறுமாறு) வந்தது எப்படி நடந்தது? இது பற்றி எனக்கு ஒரு விஷயம் தோன்றியது. வணக்கத்திற்குரிய என் மாஸ்டரின் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) காலத்தில் இம்மாதிரி விவகாரங்கள் தோன்றியிருந்தால் அப்போது ஒருக்கால் என் மாஸ்டரின் சமவயதினரால் ஆட்சேபணைகள் எழுப்பப்பட்டிருக்கலாம்; அவர்கள் அவர் மீது நம்பிக்கைக் கொள்ள மறுத்திருக்கலாம். அப்போது என்ன நடந்திருக்கும்? என்னுடைய இணைப்பு மட்டும் நீடித்திருக்கும். இப்போதும் அதை அப்படியே எடுத்துக் கொள்ளலாம். அதாவது, அவர்கள் இதற்கு இணங்கி நடக்காவிட்டால் அதேமாதிரி செய்யலாம். இந்த முடிவான விஷயம் பற்றிய ஞானத்தை அடைந்திருக்கும் மனிதர் ஒரு சமயத்தில் எப்போதுமே ஒரே ஒருவராக மட்டுமே இருந்திருக்கிறார். ஏனென்றால் தன்னுடன் முழுநிறைவான ஒத்திசைந்த நிலையை எய்தியிருக்கின்ற மனிதர்களை மட்டுமே தனது கருவிகளாக இயற்கை உருவாக்குகிறது. அந்த ஒருவருக்கே ஞான வெளிப்பாடுகளும் வந்திறங்குகின்றன. அந்த ஒருவர் மட்டுமே இயற்கையின் நோக்கத்திற்காகப் பணி செய்கிறவராக ஆகிறார். இந்த சங்கிலித்தொடர் (இயற்கைக்காக பணி செய்யும் மகாபுருஷர்கள் அடுத்தடுத்து வருதல்) அந்த மனிதர் மூலமாக மட்டுமே வளர்கிறது.''

''இப்போது மற்றவர்களை இதை நம்பி ஒப்புக்கொள்ளச் செய்யும் விஷயத்தைப் பொறுத்தவரை அது அவர்கள் மீதான அன்பின் ஒரு வெளிப்பாடாக இருக்கிறது. இதற்காக ஒரு முயற்சி செய்யப்பட வேண்டும். தற்செயலாக அல்லது அதிஷ்டவசமாக இம்மாதிரி ஒரு மனிதர் பெருந்தன்மை உடையவராக இருப்பதை மக்கள் அறிந்து கொண்டால் இயற்கையின் நோக்கத்திற்கிணங்க, வேற்றுமைகளும், இணக்கமின்மையும் அங்கே நீக்கப்படும். ஆயினும், அது எப்படி ஏற்படும் என்றால், ஒருவர்

மட்டும் இப்படி முழுமையான சிறந்த தன்மைகளோடு வரவேண்டுமென்று இயற்கை விரும்புகிறது; அப்படியே நிகழ்கின்றது. ஒரு உண்மையான காதலர், தனக்கு ஒரே ஒரு காதலி மட்டுமே இருக்கவேண்டுமென விரும்புகிறார். இது இயற்கையின் நிலைவரையில் மேலே சென்றிருக்கிறது. நானும் இதையேதான் விரும்பினேன். தன் கணவனின் மீது மிகவும் அன்பு கொண்ட ஒரு பெண்மணி அவனை மட்டுமே விரும்புவாள். அதே போல ஒரு கணவனும் தன் மனைவியை மட்டுமே விரும்புவான். இதையும் அதுபோல அப்படியே எடுத்துக்கொள். இதற்கு அதிக விளக்கம் தேவையில்லை.''

'' S1 - என்னை நேசித்ததாகச் சொல்லிக்கொள்ள முடியுமா? முடியாது. என் மீது அவருக்கு அன்பு இருந்திருந்தால், இந்த விஷயம் பற்றிய ஞானோதயம் முதலில் அவருக்குத்தான் வந்து இறங்கியிருக்க வேண்டும். என் வாழ்க்கையின் கடைசி நிமிடம் வரை அன்பின் தீவிரமான அவசரம் மற்றும் விளையாட்டுத் தன்மையைத்தான் அவர் தக்க வைத்திருந்தார். எனக்குத் தேவைப்படும்போது ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வந்து கொடுப்பது மற்றும் நான் சொல்லாமலே என் தேவைகளைக் கவனித்து நிறைவேற்றுவது ஆகிய இவையெல்லாம் அவருடைய அன்புக்கு அத்தாட்சியாக இருந்தன என்று வாதம் செய்ய முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இதையெல்லாம் அன்பு என்று சொல்ல முடியாது. தன்னுடைய மாஸ்டருடைய எண்ண ஓட்டங்கள் மற்றும் மனப்பான்மைகள் பற்றி மிகச் சரியான ஒரு மதிப்பீடு செய்து வைத்துக்கொண்டு, மாஸ்டருக்கு அவ்வப்பொழுது என்ன தேவைப்படுகிறதோ அதைச் செய்கிறவனே சரியான சேவகன் என்பதற்கு உதாரணம் இருக்கிறது. இப்போது அதைப் பற்றி நினைப்பதை விட்டுவிட்டு, உன்னை அவர் கவனிப்பதில் அக்கறையுடன் இருக்கிறாரா? என்று பார். இப்போது நான் ஒரு விஷயம் சொல்கிறேன். S1 - க்கு என் மீது அன்பு இருந்தது என்றே வைத்துக் கொள்வோம். அப்படியிருந்தால் அவர் ஏன் எனது பிரியமான ராம் சந்த்தருக்கு தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கவில்லை. *(தான் நேசித்த லைலாவின் நாய்க்கும் கூட அன்பு காட்டிய மஜ்னுவின் கதை இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.)* என் மீது பூரண அன்பு அவருக்கு இருந்திருந்தால், தானாகவே அவர் மீதும் (ராம் சந்த்தர்) அன்பு ஏற்பட்டிருக்க வேண்டும். ஒரு மூத்த முனிவர் உலகை விட்டுச் சென்ற பிறகு, அவருக்கு அடுத்து பதவிக்கு வந்தவரை, அவருடைய ஆன்மீக வாரிசாக நியமிக்கப்பட்டவரை மற்ற சீடர்கள் மரியாதை கொடுத்து

நேசித்ததில்லையா? அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்கள்? உலகை விட்டுச் சென்றுவிட்ட மாஸ்டரின் விதை அவரிடம் விளங்குகிறது; அவர் அந்த மாஸ்டரின் இன்னொரு உருவமாக இருக்கிறார் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தது இல்லையா? ஆம், அது அப்படித்தான் இருக்கிறது! எல்லா இடங்களிலும் எல்லா நாட்களிலும் நாம் கவனித்தறிவதற்குக் கிடைக்கக் கூடியதாக இந்த வழிமுறை இருக்கிறது. (என் உடலை எரித்த சாம்பல் கலசம் புதைக்கப்பட்டுள்ள) சமாதி அவருக்குப் பிரியமானதாகத் தோன்றவில்லையா? அது ஏன்? எனது சிதைந்த எலும்புகள், வெறும் சுண்ணாம்பாகக் குறைந்த பிறகும், அங்கே இடம் பெற்றுள்ளன என்பதால் தான். அந்த எலும்புகளின் மீது இப்போது அவருக்கு நாட்டம் ஏன்? அந்த எலும்புகளின் மீது அவர் பற்று வைத்திருப்பதால், என் பரத்துவ உச்சநிலை ஜீவனின் (Ultimate Being) மீது அன்பும் பற்றும் அவரிடம் சிறிதும் இல்லை. அது இருந்திருந்தால் ராம் சந்த்தரிடம் நான் மேலே குறிப்பிட்டபடி நடந்து கொள்ள ஆரம்பித்திருப்பார். நான் உனக்கு ஒரு கதை சொல்கிறேன். கவனித்துக் கேள். என் பிரியமான ராம் சந்த்தருக்கு இம்மாதிரி தன் உசிதப்படி செய்யும் குணம் ஒருபோதும் ஏற்பட்டதில்லை. என் சொந்த விருப்பத்தின்படி, அவருக்குத் தேவைப்படும்போது அவருடைய குரு மகராஜ் ஆடை அணிவதற்கு உதவி செய்யவும் அல்லது அவர் நீதிமன்றத்துக்குச் செல்லும் முன்பு அவருடைய காலணிகளைத் துடைத்து, அதற்குரிய மெருகு பூசி வைக்கவும் வேண்டும் என்ற விசேஷ சூழ்நிலைகளைத் தவிர, அவருக்கு தானே விரும்பி முடிவு செய்து ஒரு வேலையைச் செய்யும் குணம் இருந்ததில்லை. இதன் காரணம் என்ன? இந்த மாதிரி விஷயங்கள் பற்றி யோசிப்பதற்கும், முடிவெடுக்கவும் அவருக்கு ஓய்வு இருக்கவில்லை; ராம் சந்த்தர் என்னோடு தன்னைப் பசை போட்டது போல ஒட்டியிருந்தார்; உள்முகமாக கவனித்து அறிவதில் தன்னை இழந்திருந்தார். நமது உண்மையான நோக்கம் என்னவோ அதைப் பற்றி மட்டுமே அவர் அக்கறை கொண்டிருந்தார். வேறு எதுவும் தன் எண்ணங்களில் நுழைவதற்கு அவர் ஒருபோதும் அனுமதித்ததில்லை. இவ்வாறு ஒப்பிடுவது தேவை இல்லையென்றாலும், தன்னுடைய அன்பை ராம் சந்த்தரின் அன்புடன் ஒப்பிட்டு அளவிட்டுப் பார்த்து, என் ஆயுட்காலத்தில் என்னை அவர் பெருமளவு நேசித்தார் என்ற எண்ணத்தை S1 கைவிடவேண்டும் என்பதற்காகவே, இந்த ஒப்பீட்டை நான் கூறினேன். இந்த எண்ணங்கள் முன்னேற்றத்தின் பாதையை தடை செய்கின்றன. M1 நடத்துகின்ற

விவாதங்களில் தேவைப்பட்டால் பயன்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள சூட்சுமமான விஷயங்கள் இவை.''

''என் மீது அவருக்கு அன்பு இருந்திருந்தால், எனக்கு அவர் செய்து வந்தது போல அதே செயல்களை ராம் சந்த்தருக்கும் அவர் செய்திருப்பார் என்ற மேலே சொன்ன எனது கருத்தை எதிர்த்துத் தர்க்கம் செய்யும் விதத்தில் உன்னிடம் (M1), S1 - ஒரு கேள்வி கேட்கக்கூடும். ராம் சந்த்தர், லாலாஜியாகவே உருவமும் குணங்களும் உடையவராக மாறியிருந்தால், S1 - எனக்குச் செய்து வந்த அதே மரியாதைகளைத் தானாகவே அவருக்குச் செய்திருப்பார் அல்லவா என்று நீ அதற்கு எதிர்வாதம் செய்யலாம். ஆனால், அது எப்படி நிகழ முடியும்? எனக்குள் உள்முகமாக தனது ஐக்கிய நிலையை அதாவது என்னிடம் உள்ள ஆன்மீக சாராம்சத்தில் தனது ஐக்கியத்தை அடையப் பெறாமல், சதையும், தோலும் சேர்த்து வடிவமைக்கப்பட்ட உருவத்தை S1 நேசித்திருக்கிறார். இப்போது கூட எனது ஆன்மீக சாராம்சத்தில் ஐக்கியடைவதை அவரால் செய்ய முடிந்தால், அதே அன்பு அவருக்கு உண்டாகி, பிரியமான ராம் சந்த்தரின்பால் அவர் ஈர்க்கப்படுவார். ஒரு சேவகன் அல்லது வேலைக்காரன் கூட ஒரு தனி மனிதன் என்ற விதத்தில், தனது குருவின் தேவைகளை நிறைவேற்ற முடியும். ஆனால், அவரது ஆன்மீக சாராம்சத்தில் ஐக்கியமடைகின்ற இந்த அதிர்ஷ்டம் அவருக்குக் கிடைக்காது. அந்த வேலைக்காரன் செய்த சேவைகளுக்கு சில காசுகள் கூலியாகக் கிடைக்கலாம். S1 போன்ற இந்தவிதமான அன்பினை உடையவர்கள் அதற்குப் பதிலாகப் பெறுவது என்ன? வெறும் மேலோங்கிய ஆணவம் தான். ராம் சந்த்தரின் அன்பைப்போல நேசிப்பவர்களுக்கு அதற்கு ஈடாக என்ன கிடைக்கும்? ஒன்றுமில்லை! ஏன் அப்படி? அப்படி ஒரு அற்புதமான அன்புக்கு இப்படி ஒரு (ஒன்றுமில்லாத) பரிசு! இவ்விஷயத்தில் மையக்கருத்து அது வெறும் ஒரு நிலை என்பதுதான்! அதற்குப் பதிலாக ஏதோ ஒன்று எங்கே கொடுக்கப்படுகிறதோ, அங்கே அது ஒரு கூலிக்கு மதிப்பீடாக இருக்கிறது. நான் சொல்வது என்னவென்றால் 'ஒன்றுமில்லை' என்று குறிப்பிடப்பட்டுள்ள விஷயம் மாயைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. உண்மையைச் சொன்னால் நான் இந்த 'ஒன்றுமில்லை' என்ற வார்த்தையை மிகச்சரியாகவே உபயோகித்திருக்கிறேன். ஏனெனில் 'ஒன்றுமில்லை' என்ற இதைப் பெறுகின்றவர், அவர் எந்த இடத்துக்கு சொந்தமானவரோ அங்கேயே நிலைத்திருக்கிறார். அவருக்குச் சொந்தமான இடத்தில் நிலைத்திருக்கிறார் என்ற இக்கருத்துக்குப் பொருள் என்ன?

அவர் எங்கேயிருந்து இங்கு வந்திருக்கிறாரோ, அந்த இடத்திலேயே சென்று அவர் வசிக்க ஆரம்பித்திருக்கிறார் என்பதேயாகும். எங்கே வந்து சேர்ந்திருக்கிறார்? அவரது சொந்த வீட்டிற்கு! அவர் என்ன லாபம் அடைந்தார்? ஒன்றுமில்லை!''

''அன்புள்ள சகோதரரே, இந்த விஷயங்களை யாரிடம் சொல்வது? யார் இந்த விஷயங்களை சிந்திக்கவும், புரிந்துகொள்ளவும் போகிறார்கள்! ஒரு நல்ல முத்தின் தரத்தை ஒரு மன்னர் அல்லது ரத்தின வியாபாரிதான் அறிந்து பாராட்டுவார். (இதுபுகழ் பெற்ற பாரசீகப் பொன்மொழி). ஒரு கனமான கோலை வைத்திருக்கின்ற எல்லோரும் திறமைமிக்க படைவீரராக ஆவதில்லை. இந்த ஒரு உயர்நிலைபற்றி கிரகித்துக்கொள்ளும் அளவுக்கு திறமை எல்லோருக்கும் கிடைத்துவிடாது. அப்படியானால் எதற்காக அழுவது? ஒரு காரியத்தைச் செய்வதற்கான தகுதி இல்லையென்றால், அதற்கான திறமையும் மறைந்தாக வேண்டும். அதன் பிறகு என்ன மீதியிருக்கிறது? வெறும் துப்பாக்கியால் சுடும் பதவிதான் இருக்கிறது. கல்வி கற்றவர்கள் வெறுமே புத்தகங்களை வைத்திருக்கிறார்கள். படிக்காதவர்கள் என்ற பெயரில் கொடுமையான மூடத்தனம் இருக்கிறது. படித்தவர்கள் தங்களிடம் வைத்துள்ள புத்தகங்களில் என்ன இருக்கிறது என்று புரியாதவர்களாக இருப்பதற்கு உதாரணங்கள் இருக்கின்றன அல்லவா? என் நல்ல சகோதரரே, அப்படிப்பட்டவர்கள் நிச்சயமாக இருக்கிறார்கள். அவர்கள் யார்? பிரிசெப்டர்கள்தான் (பயிற்சியளிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டவர்கள்) நான் புதிய அமைப்பில் இருப்பவர்களைச் சொல்லவில்லை. பழைய முறையில் இருப்பவர்களைச் சொல்கிறேன். அவர்கள் அறுநூறு சீடர்களை இதில் சேர்த்திருப்பதாக எண்ணி ஒரு போதை மயக்கத்தில் இருக்கிறார்கள்.''

## சத்சங்கத்தின் (ஆன்மீகப் பயிற்சி செய்யும் சகாக்களின் கூட்டத்தின்) இப்போதைய நிலை சீர்திருத்தப்படவேண்டும் என்பதை ப்பற்றி வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறினார்:

''ரயில் நிலையத்தில் அவர் வந்து இறங்கும் சமயத்தில் ஏதோ ஒரு சிங்கம் வந்துகொண்டிருப்பதுபோல ஒரு எண்ணத்தை உருவாக்கும் விதத்தில் மிகப்பெரிய வரவேற்பு ஆரவாரம்; தேவையில்லாத அளவுக்கு, வியப்பை ஊட்டும் ஒரு சூழ்நிலை; இப்போது அவருடையவீட்டில் சத்சங்கம் ஆரம்பமாகிறது. சொற்பொழிவு இப்படி ஆரம்பிக்கிறது: 'நமது

வணக்கத்திற்குரிய மாஸ்டர் மிக உயர்ந்த நிலையை எட்டியுள்ள ஒரு முனிவராக விளங்கினார். அவருடைய சமாதி ஃபடேகரில் இருக்கிறது. தன்னுடைய வழிகாட்டியை அவர் தீவிரமாக நேசித்தார். அம்மாதிரி ஒரு உதாரணத்தை இப்போது எங்கும் காண இயலாது. அதைக் காணவும் அறிந்து பாராட்டுவதற்கும் விசேஷமான ஞானக் கண்கள் தேவைப்படுகிற மதிப்புமிக்க பணியை அவர் செய்திருக்கிறார். ஒருசமயம் வயது முதிர்ந்த ஒரு முனிவரை அவர் சந்திக்க நேர்ந்தது. அந்த முனிவர் அவருக்கு மிகவும் மரியாதை செலுத்தி, 'ஐயா, உங்களுடைய இந்த ஒரு உள்நிலை ஏன் எனக்குக் கிடைக்கவில்லை?' என்று கேட்டார், அது மாஸ்டரின் பெருமைதான் என்று அவர் கூறினார். மாஸ்டர் யாரை விரும்புகிறாரோ, தேர்ந்தெடுக்கிறாரோ அவரை இப்படி அவர் உருவாக்குகிறார். எந்த அளவுக்கு சாத்தியமோ அந்த அளவு அவருடைய சந்தோஷத்தை நிலைக்கச் செய்ய வேண்டும். ஆன்மீகத்தில் இது ஒன்றுதான் முக்கியமானது. மற்றவை யாவும் வெறும் புத்தகங்களை பராமரிப்பதே ஆகும். நானும் கூட அவரைப்போலவே செய்திருக்கிறேன். என்னால் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு என் மாஸ்டரின் சந்தோஷத்தை நான் கவனித்து அதைப் பராமரித்திருக்கிறேன். அவருடைய அருளினால்தான் இந்த அடிமைக்கு அந்த உள்நிலைத் தன்மையாகிய அதிர்ஷ்டம் கிடைத்திருக்கிறது எனலாம். சகோதரர்களே, இதுவே சாத்தியமான விஷயமாகத் திகழ்கிறது. உங்கள் பிடியிலிருந்து அதை ஒருபோதும் நழுவ விடாதீர்கள். சாராம்சத்தில் இந்த விஷயம்தான் பயனளிக்கும். முடிவில் இந்த விஷயங்கள்தான் நன்மையளிக்கும் என்பது நிரூபணமாகும். ஏனென்றால் மாஸ்டர் உந்தித் தள்ளவில்லையென்றால் ஒருவர் பாவ சாகரத்தை (துன்பமாகிய கடலை) கடக்கமுடியாது', என்று அவர் பேசுகிறார். மக்கள் இந்தச் சொற்பொழிவைக் கேட்கிறார்கள். உடனே மாஸ்டருக்கு சந்தோஷம் அளிக்கின்ற சாதனங்களைத் தேட ஆரம்பிக்கிறார்கள். ஒருவர் ஒரு வேட்டியை எடுத்துக் கொண்டு ஓடுகிறார். (இந்தியாவின் குருமார்கள் சுமார் 20 அடி நீளமுள்ள ஒரு காவிநிறத் துணியை இடுப்பில் கட்டிக் கொண்டு, அது போக மீதியுள்ள துணியை அப்படியே கழுத்தைச் சுற்றி மேலே போர்த்திக்கொள்வார்கள்.) இன்னொருவர் ரகசியமாக அவருடைய பையில் பணத்தைப் போடுவார். இப்படி பணத்தைப் போட்டவுடன் அந்த மாஸ்டரின் (!) உதடுகளில் புன்னகை உண்டாகும். உடனே அந்த சீடர் மாஸ்டரை சந்தோஷப்படுத்துவதற்கு இதுதான் வழி என்று புரிந்து கொள்கிறார். அதன் பிறகு என்ன; காசுகளும் ரூபாய் நோட்டுகளும் மாஸ்டரை சந்தோஷப்படுத்துவதற்காக மரியாதையுடன் அளிக்கப்படுகின்றன. பரிசுகள்

வந்து குவிகின்றன. சுவை மிக்க தின்பண்டங்களும் வரத் துவங்குகின்றன. இப்படி மாஸ்டருடைய தேவைகள் எல்லாம் நிறைவேறத் துவங்குகின்றன.''

''இவ்வாறு சீடர்கள் ஒரு பிரச்னையை மிகவும் சுலபமாகத் தீர்த்துக் கொண்டார்கள். மாஸ்டருடைய சந்தோஷத்தை தனக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளும் ஒரு மிகச் சுலபமான சாதனத்தை அவர்கள் கண்டுபிடித்து விட்டார்கள். எனவே 'வாருங்கள், கொண்டு வாருங்கள்' என்ற விஷயம் செயல்பட ஆரம்பித்தது. சீடர்கள் இந்த மதிப்பீட்டை மேலும் செம்மையாக்கினார்கள். அதாவது அவர் (மாஸ்டர்) தனது குருவைப் புகழ்ந்து பேசியதுபோல, இவரைப் போற்றிப் புகழ்வது தேவை என்று பிரச்சாரம் செய்வது துவங்கியது. நிச்சயமாக அவர் முதன் முதலில் பேசிய சொற்பொழிவு நினைவில் நீடித்திருந்தது. யாருக்கெல்லாம் இந்தச் செய்தியை தெரிவிக்க வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் இந்த விஷயம் (எப்படியாவது மாஸ்டரின் சந்தோஷத்தை நீடிக்கவைப்பதன் மற்றும் அதை கவனித்து நிர்வகிப்பதன் மதிப்பு). இந்த நன்கொடை விஷயம் புரிந்து கொள்ளச் சுலபமாக இருப்பதால், தெரிவிக்கப்பட்டது. பத்து ரூபாய் அல்லது இருபது ரூபாய் கொடுத்து உதவி செய்வது பெரும்பாலோருக்கு சுலபமாக இருந்தது. சிலருக்கு இந்தப் பத்து ரூபாய் கொடுப்பதுகூட கஷ்டமானதாக இருக்கலாம் என்பதும் உண்மைதான். ஆனால் அவர்களும் கூட இப்படிக் கொடுக்கும்படி நேரும்போது ஒரு வைத்தியருக்குத் தன் குழந்தையின் நோயைக் குணமாக்குவதற்குப் பணம் கொடுப்பதுபோல நினைத்துக் கொண்டார்கள். இப்போது அந்த மாஸ்டரின் தொண்டர்களின் கூட்டம் கூடுகிறது. 'அந்தப் பட்டியலில் எவ்வளவு தொகை வந்திருக்கிறது என்று பாருங்கள்.' அது கணக்கிட்டு சொல்லப்படுகிறது. அங்கு வசூலிக்கப்பட்ட பணம் தங்களின் சொந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளத் தேவைப்படும் அளவைவிடக் குறைவாக இருக்கிறது என்று ஒரு மதிப்பீடு செய்யப்படுகிறது. எனவே, இப்போது அங்கே நிலைமை எப்படி இருக்கிறது? அந்த வழிகாட்டி ஆன்மீகத்தை மறந்து விட்டார். சீடர்களின் எண்ணிக்கை மற்றும் வசூலான தொகை இவற்றைப் பற்றியே அவர் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார். மாஸ்டரின் சந்தோஷம் எதில் இருக்கிறது என்பது பற்றிய சொற்பொழிவை சீடர்கள் ஏற்கெனவே கேட்டிருக்கிறார்கள். எனவே, அந்தக் கடமையிலேயே தங்களை இணைத்துக் கொள்கிறார்கள். அதில் சுறுசுறுப்பாகவும், உண்மையாகவும் ஈடுபடுகிறார்கள். இப்போது மேலும் ஒரு பதற்றம் உண்டாக்கப்படுகிறது. அதாவது குருவின் சந்தோஷத்தை கவனித்து நிர்வகித்து அதைப் பராமரித்து வரும் சீடர்களும் கூட குருவினால் திருப்திப்படுத்தப்பட வேண்டியதாக

இருக்கிறது. இது அவர்கள் எல்லாவற்றையும் போட்டது போட்டபடி விட்டுவிட்டு ஓடிவிடாமல் இருப்பதற்காக செய்யப்படுகிறது.''

''ஆன்மீக சகாக்களின் கூட்டத்தின் நிலைமை இப்படித்தான் இருக்கிறது. இதைப் பற்றி வெளிப்படையாக S1, C1 முதலிய அவர்களிடம் தெரிவிக்கவும். உன்னுடைய (M1 - இன்) நண்பர்கள் அவர்களுடைய நிலையை இது மிகச் சரியாகத் தெரிவிக்கிறதா? இல்லையா? என்பதை சத்தியம் செய்து சொல்லட்டும்! கடவுளே, என் ஆன்மீக பரம்பரையில் ஒருபோதும் இப்படியான விஷயங்கள் நடக்காமலிருக்கட்டும்! தற்செயலாக இந்த விஷயங்கள் அதில் புகுந்து விடுமானால் உடனே அவற்றை நீக்கித் தள்ளிவிட வேண்டும்.''

''என் வம்சத்தார் யார் என்று உனக்குத் தெரியுமா? இனியும் என் (ரத்த சம்பந்தமான) வம்சமாக யாருமில்லை. என்னைத் தங்களிடத்தில் வசிப்பவனாக எடுத்துக்கொண்டிருப்பவர் யாரோ மற்றும் யாரை நான் என்னுடையவராக எண்ணியிருக்கிறேனோ அவரை மட்டுமே அருள் பெறுவதற்காக நாடியிருப்பவர் யாரோ அல்லது வேறு வார்த்தைகளில் சொன்னால் என்னால் விரும்பப்படுகிறவர் யாரோ அவர்தான் என் வம்சத்தார் ஆவார். (சிறிது இடைவெளி) யாரோ ஒருவருடைய அல்லது ஏதோ ஒரு அதிகாரியுடைய மனத்திருப்தியைப் பெறுவதற்காக (அவரை மகிழ்விப்பதற்காக) மக்கள் எத்தனை சிரமங்களை மேற்கொண்டார்கள்; அதற்காக என்னென்ன வழிமுறைகளைப் பயன்படுத்தினார்கள் என்பது கடவுளுக்குத்தான் தெரியும். கடைசியில் அந்த அதிகாரியின் அன்பைப் பெற்றுள்ள அல்லது அந்த அதிகாரியை மகிழ்விக்கத் தெரிந்த ஒரு மனிதரை அவர்கள் கண்டறிகிறார்கள். பிறகு எப்படியோ அந்த மனிதரையே நேசிக்க ஆரம்பிக்கிறார்கள். அவருக்குச் செய்யும் சேவைகளின் மூலமாக அந்த அதிகாரியை மகிழ்விப்பதாக நினைக்கிறார்கள். இதன் மூலமாக, அநத மனிதரின் இதயத்தில் இடம் பிடித்து, சம்பந்தப்பட்ட அந்த அதிகாரியிடம் இவரது சிபாரிசின் மூலமாக, தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். இந்த உதாரணம் சாதாரணமான ஒரு உலகியல் சம்பந்தமான காரியத்தைத்தான் குறிப்பிடுகிறது என்றாலும், இதை உங்கள் கூட்டத்தின் சூழ்நிலைகளுக்குப் பொருந்துவதாக நீங்கள் எடுத்துக்கொண்டால், அதற்கேற்றவாறு என்னுடைய அருள் பெருகிவரத் துவங்காமலிருக்குமா? ஆயினும் இம்மாதிரி புரிந்து கொள்ளும் தன்மை யாருக்கு இருக்கிறது?

**சுவாமி விவேகானந்தா:**

‘‘குருத்துவம் பற்றிய இக்காலத்திய கருத்து இது. அதைத்தான் நமது பிரபு வரைபடம் போட்டுக் காண்பித்திருக்கிறார். சில குறிப்பிட்ட விஷயங்களில் அவர்களின் கருத்து ஒருவருக்கொருவர் வேறாக இருந்தாலும் S1 மற்றும் C1 ஆகிய இரண்டு பேருக்கு இது முற்றிலும் பொருத்தமாக இருக்கிறது. M1 - தனது சுற்றுப்பயணத்திலிருந்து திரும்பி வந்தபிறகு, இங்கு நாங்கள் கூறியதன் பிரதி, சரியான முறையில் எழுதப்பட்டு, உங்கள் கூட்டத்தாருக்கு விநியோகிக்கப்பட வேண்டும். இந்த மிஷனின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு பிரதியை நமது மிஷன் செயலாளர் கொடுப்பது சரியாக இருக்கும். இதில் சில திருத்தங்கள் தேவைப்படலாம். அதற்கான குறிப்புகளை நான் கொடுப்பேன்.’’

18-12-1945

**சுவாமி விவேகானந்தா:**

‘‘நாம் வாத்துக்களைப் போலத் தாவியும், ஓநாய்களைப் போலக் குதித்தும், மகிழ்ச்சியைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறோம். அது எதற்காக? மகிழ்ச்சி! அது எங்கே இருக்கிறது? வைத்தியரின் இதயத்திலா அல்லது அவரது நோயாளிகளிடமா அல்லது மருந்துகளிலா? மருந்துகள் என்று நீங்கள் எதைச் சொல்கிறீர்கள்? ஏதேதோ மருந்துகள்! இவை மலிவாகக் கிடைக்கினறன. முன்பு சில பைசாக்கள் விலை; தற்போது சில ரூபாய்கள் விலை. இப்போது பணம்தான் மகிழ்ச்சி; அது சுலபமாக வாங்கப்படுகிறது; சுலபமாக விட்டுப்போய் விடுகிறது. அது எவ்வளவு காலம் நிலைத்திருக்கும்? அதேபோல மருந்தின் குணம் ரத்த ஓட்டத்தில் இருக்கும் வரை பலன் இருக்கும். அந்த மருந்தின் விளைவு தீர்ந்து போனால் அதன்பிறகு என்ன ஆகும்? அது பணமாக இருந்தாலும் சரி. மருந்தாக இருந்தாலும் சரி. அது போன பிறகு அது பற்றிய ஏக்கம்தான் இருக்கிறது. மகிழ்ச்சி இல்லை. அந்த மகிழ்ச்சி எங்கே போனது? அது தற்காலிகமானதாகவே இருந்தாலும், பணம் மகிழ்ச்சியளிக்கும் ஒரு முக்கியமான விஷயமாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. குளோரோஃபார்ம் என்பது ஏதோ ஒரு வகையில் புலன்களை செயலிழக்கச் செய்வதால் மிகச்சிறந்த மருந்தாக இருக்கிறது. எனவே உங்களுக்கு வேறு என்ன வேண்டும்? குளோரோஃபார்ம் என்ற மருந்தின் மூலமாகவோ அல்லது வேறு மருந்துகளின் மூலமாகவோ மகிழ்ச்சியைப் பெற வேண்டும். பொதுவாக மக்கள் இம்மாதிரி மகிழ்ச்சியைத்தான் விரும்பி

வரவேற்கிறார்கள். அது பணத்தினால் பெறப்படுகிற மகிழ்ச்சி. நாம் தேடிப் பெறுவதற்கான தகுதியை உடைய அந்த மகிழ்ச்சி என்ன? ஒன்றுமில்லை. ஆனால் மகிழ்ச்சி என்ற கருத்தே எங்கே முற்றிலும் போய்விடுமோ அந்த நிலை அது. அது என்ன நிலை? தான் என்ற ஒன்று மறைந்து விடுவதற்காக அந்த ஒன்றினுள் தன்னைத் திரட்டிக் கொள்ளும் போது சென்றடைகின்ற பூர்ணத்துவ நிலைதான் அது.''

''எல்லோருமே மகிழ்ச்சியை நாடி ஓடுகிறார்கள். அதில் தனது சக்தியின் எல்லையைத் தாண்டி ஓடுகிறார்கள். அதற்கப்பால் உள்ள விஷயங்களை அவன் உற்றுப் பார்க்கிறான் மற்றும் சிந்திக்கிறான். அதன் பிறகு விஷயங்களை அழகாக இருப்பதாக அவன் கருதத் துவங்குகிறான். தன் இதயத்தில் அவன் குறிப்பை ஏற்படுத்திக் கொள்கிறான். தன் திறமைகளினால் உருவாக்கிக் கொண்டுள்ள இதன் விளைவு, அவன் இதயத்திலும் மூளையிலும் ஆழ்ந்து வேரூன்றியதாக மாறுகின்றன. இவ்விதமாக அவன் தனக்காக ஒரு வலையை நெய்ய ஆரம்பிக்கிறான். அவனுடைய எல்லைகளுக்கு அப்பாற்பட்ட கருத்துக்கள் அவன் சொந்த இதயத்தில் எல்லையற்ற ஒரு பாதையை உருவாக்குகின்றன. பிறகு அதுவே சிந்திப்பதற்கும், தீவிரமாக யோசிப்பதற்கும் உரிய விஷயமாக மாறுகின்றது. இப்படி அவனால் வடிவமைக்கப்பட்ட ஒருவலை அவனையே மொத்தமாகச் சிக்க வைத்துவிடுகிறது. அவன் தானே எதில் கவர்ந்திழுக்கப்பட்டிருக்கிறானோ, அந்தக் கருத்துக்களைத் தவிர வேறு எதையும் சிந்திப்பதில் அவன் ஈடுபடுவதில்லை. அந்தக் கருத்துக்களே அவனுடைய சொந்த எண்ணங்களில் வாழத்துவங்கி ஒரு பெரிய மரத்தின் ஒட்டுண்ணியைப் போல அவனைச் சுற்றிக் கொண்டு சுற்றிலும் புதராக உருவாகின்றன. இப்போது இது போன்ற விஷயங்கள் தடை செய்வதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''அதாவது நாம் கடைத்தெருவுக்குச் சென்று அங்கிருந்து தொல்லையை விலைக்கு வாங்கி வந்திருக்கிறோம். (உருதுமொழிச் செய்யுளில் இரண்டுவரிகள்).''

### சுவாமி விவேகானந்தா (தொடர்ந்து கூறியது):

''இந்த விஷயங்கள் சமீபத்தில் சேர்ந்தவர்களுக்கு எதிராக அவரை விலக்கி எடுத்துச் செல்கின்றன. மேலும், இதற்கு இரையாகிவிட்ட ஒருவன் அதற்குப் பழக்கமுடையவனாக ஆகிவிடுகிறான். நாம் நமது மகிழ்ச்சியைத்

தேடுகிறோம்: ஆனால், பின்னோக்கிய நிலையைச் சென்றடைகிறோம். மகிழ்ச்சி என்ற முக்கிய விஷயம் இப்போது போய்விட்டது. தனது சொந்த எண்ணங்களிலேயே ஒருவன் சிறைப்பட்டவனாக மாறிவிடுகிறான். அதிலிருந்து விடுதலை பெறுவது சிரமமான காரியம். பொதுவாக நிலைமை இந்த மாதிரிதான் இருக்கிறது.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''அதன்பிறகு தொல்லை செய்யும் எண்ணங்கள் ஏராளமாக வருவதாக அவர்கள் குறை சொல்கிறார்கள்.''

**சுவாமி விவேகானந்தா:**

''அவர்கள் உங்களை நாடி வந்தாலும் வராவிட்டாலும் தங்கள் சொந்த விளையாட்டுக்கு ஒரு உலகையே உருவாக்கி, அதிலேயே மடிந்து போகிறார்கள். ஓ, மனித வாழ்க்கையின் என்ன ஒரு சோகம் நிறைந்த கதை இது!''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

'அன்புள்ள M1, இந்தச் சுற்றுப்பயணத்தில் நீ யாரைச் சந்திக்கிறாயோ அந்த மக்களுக்கு இது ஒன்றே நல்ல சந்தர்ப்பமாக இருக்கும் என்று உறுதியான தீர்மானத்தை நான் மேற்கொண்டிருக்கிறேன். அவர்கள் நீ சொல்லும் உண்மைகளை தங்கள் பயிற்சியின் மூலமாக ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் இவைகளைப் பற்றி சிந்திக்கவோ, ஆராய்வதற்கோ இனிமேலும் நேரம் அனுமதிக்க இயலாது.' என்று நான் கூறியவைகளுடன் சுவாமி விவேகானந்தா கூறியதன் ஒரு பிரதி இணைக்கப்பட வேண்டும்.

''S6 நல்ல புரிந்து கொள்ளும் திறன் எதுவும் உடையவரல்ல. ஆண்டு விழாவின் போது (பண்டாரா நடக்கும் போது) உணவு விநியோகிப்பதில் மட்டுமே அவர் நாட்டம் கொண்டிருந்தார். ஆண்டுவிழாவில் அவர் கலந்து கொண்டார் என்றாலும் அதன்பிறகு ஸ்தூலத்தன்மையுடைய இன்பநுகர்வுகளில் அவர் பழக்கப்பட்டுப் போகிறவராக இருந்ததால், சரியான முறையிலான ஆனந்தநிலைக்கு அவர் இன்னும் பழக்கம் அடையவில்லை. F1 போன்ற மற்றவர்கள் தகராறு மற்றும் தீமைகளைச் செய்வதில் சம்பந்தமில்லாதவர்கள். அவர்களின் விஷயத்தில் அவசரமாக எந்த நடவடிக்கை எடுத்தாலும் அது கொடுமை செய்வதன் எல்லைக்கோட்டைத் தொடுவதாக இருக்கும். மற்றவர்களை அங்கே எப்போது காணநேர்ந்தாலும், M1 அவர்களைச் சந்தித்து அவர்கள் தங்கள்

பரீட்சையை செய்து  பார்க்கட்டும் என்று அவசியம் சொல்ல வேண்டும். இந்தப் பரீட்சை சம்பந்தமாக ஒருவிஷயம் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. உண்மையான (சத்தியநிலையின்) உள்நிலைத் தன்மையில் இருந்து பிராணாஹூதி  அளித்தால், அதை அவர்கள் எப்படித் தெரிந்து கொள்வார்கள்? யாரை நாம் பரீட்சை செய்து (பரிசோதனை செய்து) பார்க்கிறோமோ அந்த மிக உயர்ந்த ஆன்மீக நிலையில் இருக்கும் மனிதருடன் ஒன்றுபட்டதன்மையை எய்தியுள்ள ஒருவரால் மட்டுமே இதை சரியாக இனம்பிரித்து அடையாளம் கண்டுகொள்ள முடியும். எனவே அதே நேரத்தை அவர்கள் சத்சங்கத்தில் செலவிடுவது மேலானதாக இருக்கும். தன்னை முன்னிலைப் படுத்திக்கொள்வதை அவர் கைவிட்டுவிட்டால், C1 - இதைப்புரிந்து கொள்ள முடியும் என்பதில் சந்தேகமில்லை. S1- க்கு அவருடைய மதிப்பீட்டின்படி இனிமேலும் சத்சங்கத்தில் கலந்து கொள்வதும், பயிற்சி செய்வதும் தேவையில்லை. உண்மையாகவே அவருக்கு இதெல்லாம் தேவையில்லை என்றாலும் அதனால் பரவாயில்லை; ஆனால் சகோதரத்துவ உறவுமுறையுடன் இருக்கும் கடமை அவருக்கு சந்தேகமில்லாமல் இருக்கிறது என்று சொல்லவும். என்னதான் இருந்தாலும், இப்போது நடந்து கொண்டிருக்கிற பண்டாராக்களுக்கு இப்போது என்ன தேவை இருக்கிறது; ஏனென்றால் அவர்களுடைய தலைவரின் கருத்து இதுவாக இருக்கும்போது, அவரைப் பின்பற்றுகிறவர்களும் அதே மனப்பான்மையை ஏற்றுக்கொள்வது ஏன் ஒரு பிரச்னையாக ஆக வேண்டும்; மற்றும் உண்மையாகவே அவர்களுக்கு எந்த வழிகாட்டுதலும் கொடுப்பதற்கு அவருக்கு (C1 - க்கு)  எந்த உரிமையும் இல்லை. அதை அவர் இழந்துவிட்டார். எனவே, அவருடைய சொந்த வார்த்தைகளில் சொன்னால் அவர் (S1)  தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு ஒரு எதிரியாகத் தோன்றுகிறார். M1  இந்த விஷயங்களைப் படித்தறிந்து, தேவைக்குத் தகுந்தபடி உரையாடல் நடத்துவதற்குத் தயார் செய்து கொள்வதற்காக இவை கொடுக்கப்பட்டுள்ளன.’’

‘‘ராம் சந்த்தரை, நீ தான் (M1),  உச்சநிலைக்கு உயர்வு பெறச் செய்ததாக மேலும் ஒரு கருத்து மிகவும் சாதாரணமாக நிலவுகிறது. இந்தக் கருத்தை நானும் குறிப்பிட்டுச் சொல்கிறேன். இதற்கு விடை இதுதான்: பதின்மூன்று வருடங்களாக நீ ஏன் அவரை உயர்வடையச் செய்யவில்லை? இம்மாதிரி ஆற்றல்விசை மிக்க உள்நிலைகள் ஏன் முன்பே உருவாக்கப்படவில்லை? ராம் சந்த்தரின் ஆன்மீக உள்நிலை நன்றாக இருக்கிறது என்பது எல்லோரும் ஒப்புக்கொண்டதாக இருக்கிறது. S1 - க்கும்  இந்த விஷயம்

தெரியும். ராம் சந்த்தரின் கூருணர்வுத்திறன் மற்றும் அனுபவத்தின் தகுதிச் சிறப்பு பற்றியும் கூட அவருக்கு உறுதியாகத் தெரியும். ராம் சந்த்தர், S - ன் இடத்திற்குச் சென்றிருந்தபோது, தன்னுடைய உள்நிலைத் தன்மையை ஒரு விநாடியில் S1 - உணரும்படி செய்தார் என்பதையும் அவருக்கு நினைவுபடுத்து மற்றும் அவரிடம் தனது குறிக்கோளையும் நோக்கத்தையும் கூறினார்; எதற்காக மட்டுமே அவர் எப்போதும் முயற்சி செய்து கொண்டு இருந்தாரோ அந்தப் பூரண ஐக்கியத்தை அவர் அதிர்ஷ்டவசமாகப் பெற்றுள்ளார் என்பதையும் சொன்னார். தானோ அல்லது வேறு யாராவது ஒருவரோ அப்படி ஒரு உயரிய லட்சியத்தைத் தன் கருத்தில் எடுத்துக் கொண்டதாகவோ, அந்த நிலைக்கு வருவதற்காக அமைதியற்றுத் தவித்து இருக்க முடியும் என்பதாகவோ? S1 - சொல்ல முடியுமா? ஐயோ! இந்த அமைதியற்ற நிலை எப்படியாவது மற்றவர்களிடமும் வளர்ச்சி அடைந்திருந்தால் நம் சங்கத்திலும் விசேஷமான மனிதர்கள் இருந்திருப்பார்களே! இது சாதாரணமான ஒரு விஷயம் அல்ல. இதைப் பற்றிப் பேசுவதும், இதில் நான் இதை அடைந்தேன், அதை அடைந்தேன் என்று சொல்லிக் கொள்ளவும் சுலபம். இப்போதாவது அவர்கள் அதை முயற்சி செய்து அதன் பலனைப் பார்க்கலாம். எவ்வளவோ காலம் வீணாகப் போயிருந்தாலும் கூட, இப்போதாவது அதைச் செய்யலாம். M1 – னுடைய கேள்விக்குப் பதில் என்னவென்றால், அவர்கள் இப்போது அதை எடுத்துக் கொண்டாலும், அவர்கள் இந்தப்பக்கமாக ஈர்க்கப்படுவது நிச்சயம்.''

19-12-1945

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (M1 - க்குத்) தொடர்ந்து கூறிய அறிவுரைக் குறிப்புக்கள்:**

''C1 - மறைமுகமாக சூழ்ச்சி செய்கின்ற தந்திரமும், வஞ்சகமும் அதிகபட்சமாக உடைய ஒருவராக, மற்றவர்களை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வரக்கூடிய திறமை பெற்றவராக இருக்கிறார். இன்னொரு மாமா (அல்லது சித்தப்பா) ஆகிய N1 – ஐப் போலவே இவரையும் கருதவேண்டும். இவர்களிடையே வேறுபாடு என்னவெனில் அங்கே N1 - சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார். இங்கே இவர் (C1) வியாபார மனப்பான்மையுடன் இருக்கிறார். கடையை நடத்துவது மட்டுமே முக்கியமான விஷயமாக நீடிக்கிறது; இனிமையாகப் பழகுவது முக்கிய நோக்கமாக இருக்கிறது. அவர் மீது நூறு குற்றங்களை சுமத்திப் பேசினாலும், அவர்

உணர்ச்சிவசப்படாமல் கேட்டுக்கொள்வார். அவர் காதுகளைத் திறக்கச் செய். அவரிடமிருந்து பதிலைப் பெறு. மக்களை அவர் ஏமாற்றுகிறாரா? இல்லையா? என்று சத்தியம் செய்து அறிவிக்கச் சொல்லிக் கேட்கலாம்'. தனது சீடர்களின் காதுகளில் ஒரு மந்திரத்தைச் சொல்கின்ற பழையவிதமான குருவின் அந்தஸ்தில் (சமுதாய நிலையில்) தன்னை வைத்துக்கொள்வதில் அவர் மனத்திருப்தியை உணர்கிறார். அவர் தனது ஆன்மீக விதியை கெடுத்துக்கொண்டு மற்றவர்களையும் ஏமாற்றுகிறார். இந்தக் குற்றத்துக்குப் பரிகாரம் எதுவும் இல்லை. இதிலிருந்து விடுபடச் செய்யும் பாவமன்னிப்பும் இல்லை. மக்களின் நம்பிக்கையை அவர்களைப் பாழாக்குவதற்கு சாதகமாக எடுத்துக்கொண்டதற்கு நிச்சயமாக தண்டனை உண்டு. தனது சொந்த நிலையையும் தகுதியையும் முழுமையாக அறிந்திருந்தும், இக்காலத்தின் வணக்கத்திற்குரிய மாஸ்டராக தன்னைக் காண்பித்துக்கொண்டு மற்றவர்களை தன்மீது பற்றுக் கொண்டு சார்ந்திருக்கச் செய்ததைவிட பெரிய குற்றம், பெரும்பாவம் வேறு என்ன இருக்கமுடியும்! இந்த மாதிரி நிலைமைகள் நீடித்துக் கொண்டிருக்கிறது என்றால் C1 - முதலானவர்கள் பொதுவாக மக்களுக்குச் செய்து கொண்டிருக்கும் பயங்கரமான தீமையை நினைத்துப் பார். பாவம், அந்த மனிதர்கள் பிரம்ம வித்யாவை (பரம்பொருள் பற்றிய விஞ்ஞானம், ஒழுங்குநெறி) கற்றுக்கொள்ள வந்து என்ன அடைந்தார்கள் என்பதை அவர்களே மதிப்பிட்டுக்கொள்ளட்டும். இதில் யார் அவமானமடைகிறார்கள்! C1 – இன் எளிய விஷயங்களுக்கு உதவி செய்கிற என் பெயர்தான் கெடுகிறது. இப்போது நான் ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்கிறேன். இனி வரும் நிகழ்ச்சிகள் என்னை வேறொருவிதமாக நடக்கும்படி கட்டாயத்துக்கு ஆளாக்கினால் அல்லது காலம் என்னை வேறு ஏதாவது செய்யத் தூண்டினால், அதுவேறு விஷயம்; ஆனால் ஒரு மனிதர் ஆசையற்றவராக அல்லது பேராசையில்லாதவராக மாறினாலன்றி அல்லது (சில விசேஷ மனிதர்கள் விஷயத்தில் மட்டும்) கிட்டத்தட்ட அப்படி இருந்தாலன்றி பயிற்சியளிப்பதற்கு அனுமதி தரக்கூடாது. C1 - அந்தப் பதவியைப் பாய்ந்து வந்து பறித்துக்கொண்டார். அவருக்கு அதுபற்றி எல்லா அறிவும் கிடைத்துவிட்டதுபோல அதில் உட்கார்ந்து கொண்டார். தானே மாஸ்டராக மாறிவிட்டார்; தன் குருவின் பெயரையும் தானே எடுத்துக் கொண்டார். தனக்காக நன்மைகளைப் பெற்றுக் கொண்டதோடு தன் நோக்கங்கள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொண்டார். இதற்கு மேல் சிறப்பாக அடைவதற்கு என்ன இருக்கிறது? இதுவே அவருக்குப் போதுமானதாக

இருக்கிறது. அவருக்கென்று மரியாதை கிடைக்கத் துவங்கியிருக்கிறது. இப்படி குருத்துவம் என்ற வியாபாரம் அகலத்திலும் நீளத்திலும் பரவிக்கொண்டிருக்கிறது. மக்கள் அவரைப் பாராட்டிப் புகழ்ந்து பேச ஆரம்பித்துவிட்டார்கள். நன்கு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட, பொது நிகழ்ச்சிகளினால் அவருடைய இதயம் இன்பம் பெறத் துவங்கியிருக்கிறது. மக்கள் வந்து குவிய ஆரம்பித்திருக்கிறார்கள். இதற்கு மேல் வேறு என்ன ஆசை நிறைவேற வேண்டும்? அவர் வந்து சேர்ந்து, நிறைய வேலைசெய்திருக்கிறார் என்று – அதாவது அவருடைய இறப்புக்குப் பின்பும் அவர் பெயர் நிலைக்கும்படியாக, ஒரு தொற்று நோய் போல, பிரசாரம் செய்யும் குற்றம் நடந்திருக்கிறது.! என்ன ஒரு சிறந்த சாதனை!!

‘‘உலகியல் சார்ந்த விஷயங்களில் பயிற்சிக்காக ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. கொள்ளைக்கூட்டத்தின் தலைமைப் பதவிக்காக எவ்வளவு ரத்தம் சிந்தப்படுகிறது! ஒருவனுடைய தலைமையை நிலை நிறுத்திக்கொள்வதற்காக எவ்வளவு பெரிய கொடூரங்கள் நடக்கின்றன! ஒருவனுடைய கௌரவத்தைப் பராமரிப்பதற்காக எத்தனை அகௌரவமான வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன! எத்தனை விருந்துகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது! எத்தனை பேருடைய கால்களைப் பிடிக்க வேண்டியிருக்கிறது. ஒருவருடைய கௌரவத்தையும் நன்மதிப்பையும் மேம்படுத்திக் கொள்வதற்காக எவ்வளவு உழைப்பு அளிக்கப்படுகிறது என்பதை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! அதற்கு எவ்வளவு பணமும் நேரமும் செலவழிக்க வேண்டியிருக்கிறது. இதெல்லாம் எவ்வளவு கஷ்டம்! இப்படி உலகியல் சாதனைகளை அடைகின்ற பைத்தியக்காரத்தனமான பந்தயத்தில் வாழ்க்கையின் பெரும்பகுதி செலவிடப்படுகிறது. அப்படியிருந்தும் கூட, ஒருவன் தன்னுடைய திட்டங்களின்படி பெரும்பாலும் வெற்றியடைவதில்லை. அதுவுமல்லாமல் இதில் எத்தனையோ அபாயங்கள், எத்தனையோ விதமான இழப்புக்கள், எத்தனையோ வகையான தொல்லைகளும் உண்டாகின்றன.’’

‘‘ஆகையால் தற்கால நிலைமைப்படி அந்த விதமான குருத்துவம் என்ற விளையாட்டை ஆடத் துவங்குவதே சிறந்தது. இப்போது அதுதான் பரவலாகவும் பிரபலமாகவும் இருக்கிறது! யாருடைய காதிலாவது எதையாவது உச்சரிக்கவேண்டும்; ஒருவருடைய கையை மற்றவர் கைமீது வைக்க வேண்டும்; அல்லது தலைமீது, தோள்மீது, நெஞ்சின் மீது – இப்படி ஏதோ ஒரு இடத்தில் வைக்கவேண்டும். சீடருக்கும் தனக்கும் இடையே இணைப்பு சரியாக ஏற்படுத்தப்பட்டுள்ளதா? அல்லது அந்த இணைப்பை

ஏற்படுத்துவதற்கு அந்த குரு என்று சொல்லப்படுகிறவருக்குத் தகுதி இருக்கிறதா? என்பதையெல்லாம் பற்றி எந்த அக்கறையும் இல்லை. தன் சொந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்பதில்தான் ஒரே அக்கறை; குருவாக இருக்க வேண்டும் என்பது தான் ஒரே திட்டம். இந்தப் பதவி தனக்கு பணமும் செல்வாக்கும் தேடிக்கொள்வதற்காகவே. தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில்தான் பரபரப்பும் ஆர்வமும் உள்ளன. ஆகவே அப்படித்தான் இந்த ஆசாமியும் சுலபமாக ஒரு குரு ஆகிவிட்டான். இதன் மூலமாக எந்தத் துன்பமும், இழப்பும் இல்லாமல் தப்பித்துவிட்டான்.''

''சகோதரரே! இது ஒரு நல்ல உதவிகரமான சிபாரிசாக இருக்கிறது. இதை எல்லோரும் ஏன் பின்பற்றுகிறார்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன். ஆயினும் (இதற்குப் பிறகு) மிக உயர்ந்த (நிலை) விதி உறுதியளிக்கப்படுகிறதா? இல்லவே இல்லை. இம்மாதிரி ஒரு மனிதரை முதலில் வரவேற்பதற்கு ஆழ்ந்த பள்ளம் தயாராக இருக்கிறது. இம்மாதிரி ஒரு மனிதருக்கு கடவுளின் அருளைப்பெறும் வாய்ப்பு ஒருபோதும் கிடைக்காது. அவருடைய குடும்ப உறுப்பினர்கள் ஒருபோதும் இந்தப் பள்ளத்தாக்கில் அடியெடுத்து வைக்கமாட்டார்கள். மிக விரைவிலேயே அந்த போலி குருவின் ஆயுட்காலத்தில் அதற்குப் பிறகு, உண்மையான தகுதியுடைய யாரையாவது சந்திக்க நேரும் போதுதான் இந்த போலிகுரு ஒரு மோசடிப் பேர்வழி என்பதை உணர ஆரம்பிக்கிறார்கள். இந்த மனிதர்கள் கடவுளின் பெயரால் ஆள்மாறாட்டம் செய்தவர்கள் அல்லவா? இது மன்னிக்கக்கூடிய ஒரு விஷயமா? இல்லவே இல்லை. விதிவசப்பட்டவர்கள்தான் அங்கே இருக்க வேண்டியுள்ளது. பேரழிவு நிகழ வேண்டியிருக்கிறது! இதை வேறு விதத்தில் சொன்னால், கொள்ளைக்காரனிடம் ஒருவன் தன்னை ஒப்படைப்பதாக இருக்கிறது. ஆரம்பமே தலைகீழாக இருக்கும்போது மிக உயர்ந்த விதிநிலையை அடையப்பெறுவது பற்றி என்ன சொல்வது? ஆரம்பத்தில் இருந்தே தனது அற்பத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் பேராசை இருக்கும் போது ஆன்மீகம் பற்றிப் பேச என்ன இருக்கிறது? இந்த மனிதர்கள் என்னைச் சார்ந்திருக்க ஏற்றுக்கொண்டிருப்பதாக எப்போதாவது சொல்லிக்கொள்ள முடியுமா? அப்படி அவர்கள் செய்திருந்தால் இம்மாதிரி விஷயங்கள் ஒருபோதும் நடந்திருக்காது. இந்தப் பலவீனங்களையெல்லாம் அழித்துவிடுகின்ற திறமையைப் பெற்றுள்ள ஒருவரின் முன்னால் தன் பலவீனங்களை முன் வைத்து விடுவது மனிதப் பண்பல்லவா? அவர்கள்

ஏன் இதைச் செய்வதில்லை? அவர்களுடைய குறைபாட்டை யாராவது புரிந்துகொண்டுவிட்டால், அவர்களுடைய ஆட்டமெல்லாம் ஓய்ந்து போகும், அவர்கள் கஷ்டத்துக்கு ஆளாக நேரும் என்ற அவமான உணர்வு மற்றும் வெட்கத்தினால்தான். சீடர்களுடைய மனங்கள் மாஸ்டரைவிட மேலானது ஒன்றுமில்லை என்ற சிந்தனையில் ஏற்கெனவே மூடி முத்திரையிடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படி நினைத்தாலும் ஏற்கெனவே முத்திரையிட்டு மூடப்பட்டிருப்பதால், அவர்கள் எப்போது புரிந்து கொள்ளப்போகிறார்கள்! என்ன ஒரு சிறப்பான பாதுகாப்பு சாதனம்! கடவுள் நம்மைக் காப்பாற்ற வருவாராக.''

*(இப்போது கூறிய இக்கட்டுரை 17-12-1945 ஆம் தேதி கூறப்பட்ட முந்திய கட்டுரையோடு சேர்க்கப்படவேண்டும்)*

''சபாஷ்! பலே! என்ன ஒரு சிறப்பான விஷயம்! இதை நாம் பிரதி எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்! உலகியலின் தன்மை பற்றி இது நிச்சயமாகச் சொல்கிறது. இதற்குப் பிறகும் இந்த உலகை யார் கவனிப்பார்கள். அப்படி நடப்பது கடவுளுக்கு மட்டுமே தெரியும்! சகோதரரே! இனி இதை நாம் கடவுளின் புனிதப் பெயரால் பின்பற்றுவோம். உலகியல் தன்மை நிச்சயமாக நீடிக்கப்படவேண்டும்; மற்றொரு விஷயமாகிய (இதற்குப் பிறகு வரும் பரம்பொருள் தன்மையை அடைய நாம் செய்ய வேண்டியிருப்பது என்ன? அதற்காக வணக்கத்திற்குரிய மாஸ்டர் (குருஜி மகராஜ்) பொறுப்பாளியாக இருக்கின்றார்; அவர் அதை நல்லவிதமாக கவனித்துக்கொள்வார். அன்புள்ள சகோதரர்களே! இதை நான் மிகவும் நன்றாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த விஷயத்தில் நான் திறமை உடையவனாக இருந்திருந்தால் குருவிடம் நான் புகலிடம் தேடியிருப்பேனா? என்ன இருந்தாலும் அவரும் இதற்குக் கொஞ்சம் பொறுப்பாளியாக இருக்கத்தான் வேண்டும், அல்லது நாமாகவேதான் எல்லாவற்றையும் செய்துக் கொள்ளவேண்டுமா? இதற்குப் பிறகு வரப்போகிற முடிவுக்குப் பொறுப்பு எடுத்துக் கொள்கிறவரும், அதைப் பாதுகாப்பவரும் அவர் மட்டுமே ஆவார். அதில் நாம் ஒன்றும் செய்ய இயலாது. அவர் அதைச் செய்கிறாரோ இல்லையோ அது அவருடைய வேலைதான். எப்படியிருந்தாலும் அவர் அதை நிச்சயமாகச் செய்வார்; இதில் நான் முழு நம்பிக்கையுடன் இருக்கிறேன். அது அவருடைய பொறுப்பேயாகும். அவர் அதைச் செய்யவில்லையென்றால், அவர் அதற்குப் பதில் சொல்ல வேண்டியவராகிறார் இல்லையா? நிச்சயமாக, அவரும் கூட அதைத் தவிர்க்க இயலாது. அவர் மற்றும் நாம் ஆகிய இருவருக்கும் கடவுள்

இருக்கிறார். எனவே, குரு மற்றும் சீடன் இருவருடைய கடமைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு நீதி வழங்காதிருப்பது எப்படி சாத்தியமாகும்? அவர் அப்படிச் செய்யவில்லையென்றால் அப்போது, சகோதரரே! கடவுள் இருக்கிறார் என்பதையே நான் சந்தேகப்பட வேண்டியிருக்கும். அவருடைய கடமையைப் பொறுத்தவரையில் அவர் கண்காணாமல் மறைந்துபோய் விடுவது சாத்தியமா? நல்லது, இவையெல்லாம் அன்றாடப் பழக்கம்பற்றிய விஷயங்கள்! உதாரணமாக, ஒருசமயம் நான் நீதிமன்த்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தேன். அப்போது எனக்குப் பின்னாலிருந்து இரண்டு கழுதைகள் சண்டையிட்டுக் கொண்டபடி ஓடிவந்தன. நான் தியான நிலையில் இருந்ததனால், இந்த ஆசாமி (நான்) அந்தக் கழுதைகளால் தள்ளப்பட்டு நசுங்கிப் போவான்; எனவே, இவன் மீது பக்தியுடைய பக்தர்களுக்கு அடிமையாக விளங்குகின்ற இவன் அவர்களுக்குக் கிடைக்க முடியாதவனாகப் போய்விடுவான் என்று கடவுள் கவலைப்பட்டார். அதன் பிறகு என்ன நடந்தது? இந்தப் பரிதாபமான ஆசாமி காயம்பட்டுவிடாமல், தொல்லைக்குள்ளாகாமல் அந்த இரண்டு கழுதைகளையும் பிரித்து விரட்டி விடும்படி ஒரு தேவதைக்கு உத்தரவிட்டார். அந்த உத்தரவு உடனே நிறைவேற்றப்பட்டு, அந்தக் கழுதைகள் பிரித்து அனுப்பப்பட்டன. இந்த ஒரு உதாரணத்தை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இன்னும் எத்தனையோ நிகழ்ந்திருக்கும்! எவ்வளவு நான் சொல்வது? கடைசியாக கடவுள் நிச்சசமாக உதவி செய்கிறார்; துணையாக இருக்கிறார் என்ற இந்த உறுதியான நம்பிக்கை எனக்கு வந்துவிட்டது. இது மிகவும் வெளிப்படையாகத் தெரிகிறது. அவர் அந்தக் கழுதைகளைத் துரத்துவதில் உதவி செய்திருக்கிறார் என்னும் போது, ஒரு மனிதருக்கு உதவி செய்யத் தவறிவிடுவாரா? அதற்காக ஒரு மனிதன் செய்தது என்ன? குருவின் கையில் முழு வேகத்துடன் சுத்தியல் கொண்டு ஆணி அடித்ததுதான். (ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டதைக் குறிப்பிடுவதாக இருக்கலாம்.) – தமிழ்மொழி பெயர்ப்பாளர். குருவின் கையின் மீது தன் கை வைத்து, தன் பொறுப்புக்களை குருவுக்குக் கொடுத்து விடுவதுதான்! இந்த விஷயங்களுக்கு சான்றுகள் இல்லாமல் போய்விட்டதா? கையைப் பிடிப்பது என்பது இன்று சிரிக்கும் விஷயமாக ஆகிவிட்டது. குருவின் கையைப் பிடித்துக்கொள்வது என்றால் ஆயுட்காலம் முழுவதும் அந்த உறவை நீடிப்பது என்று பொருளாகும். இதைவிட மேலாக, ஒரு குரு ஒருவரின் கையைப் பிடித்துக் கொண்டால் ஆயுட்காலத்திற்குப் பிறகும் அதை அவர் நீடித்திருக்க வேண்டும். ஏனென்றால் அவர் குருவாக விளங்குகிறார். மாற்றங்கள் மற்றும் துன்பம் அனுபவித்தலின் சமுத்திரத்தைத் (பவ

சாகரத்தைத்) தாண்டி நம்மை அழைத்துச் செல்பவர். அவர் அதைக் கைவிட்டு விடுவார் என்பது நகைச்சுவையான விஷயம் அல்ல. அவர் என்னுடையவராகவே மாறியிருக்கிறார். அதற்கான பரிசையும் கூட அவர் பெற்றிருக்கிறார். ஏனென்றால் அவர் கையால் தீட்சை பெற்ற அச்சமயத்திலேயே என்னையே அவருக்கான பரிசாகக் கொடுத்துவிட்டேன். எனவே, குரு பரிசுப் பொருளையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்; சரணாகதியையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்; என் கையையும் பிடித்துக் கொண்டிருக்கிறார்! இதை ஒரு விநாடி நேரம் சிந்தித்துப் பாருங்கள்! இப்போது அவர் நமக்கு உதவி செய்யமாட்டார் என்ற எண்ணம் எப்படி ஏற்படமுடியும்? நமக்கு இதைத் தவிர வேறு என்ன தேவை? இதற்கு மேல் என்ன வேண்டும்? இதை விட செலவு குறைவான ஒரு குரு யாருக்காவது எப்போதாவது கிடைக்க முடியுமா? இல்லவே இல்லை! சகோதரர்களே! இதன்பிறகு செய்ய வேண்டியது என்ன இருக்கிறது? வணக்கத்திற்குரிய என் மாஸ்டருடன் நான் என்ன செய்தேனோ அதே வழிமுறையை நீங்கள் ஏற்றுக்கொண்டு பின்பற்றக்கூடியவாறு போதுமான தகுதியுடன் இருங்கள். அதுவே உலகையும் முடிவான உச்சநிலையையும் சரியான நிலையில் வைக்கப்படுவதை உறுதிசெய்யும். அதற்கு மேல் எதுவும் செய்ய வேண்டியதாக இருப்பதில்லை. ஒரு குருவை நாம் அடையப்பெற்ற பிறகும் கூட, இன்னும் ஏதாவது செய்ய வேண்டியது பாக்கி இருந்தால் அப்படி ஒரு அளவற்ற தகுதிச் சிறப்புடைய குருவை அடைந்திருப்பதில் என்ன பயன்? நம் விருப்பம்போல எந்த ஒருவரிடமிருந்தும் நாம் தீட்சை பெற்றிருக்கலாமே! இதனால் அதிகபட்சம் ஆண்டுக்கு ஒரு கோடி வேஷ்டி வாங்கும் செலவு அதிகமாகியிருக்கும்! (சீடர்கள் குருவுக்கு ஆண்டுதோறும் செய்யும் மரியாதையின்படி). அவர்களை மற்ற விதங்களில் அக்கறையுடன் கவனித்துக் கொள்வதோடு இதுவும் சேர்க்கப்படும். ஆயினும் அந்த குரு ஒவ்வொரு நாளும் நம்முடன் கூடவே தங்கிவிடும் பட்சத்தில், சிறிது நஷ்டமும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர் இந்தவிதமான குரு (அதாவது சீடனுடன் அவனது வீட்டில் தங்குகிறவர்) என்பது தெரியும்போது, 365 சீடர்களை உடையதாக ஒரு சீடர் வீட்டில் ஒரு நாள் தங்குகிறவராகப் பார்த்து தேர்ந்தெடுப்பதில் நமக்கு சிரமம் இருக்காது. நண்பர்களே! இதற்குப் பிறகு எந்நாளும் இதுவே முடிவு என்கிற இந்த விஷயங்களெல்லாம் தகுதியுடைய குருவின் பொறுப்பாகவே இருக்கின்றன; ஏனெனில் என் நிலையை நான் தெளிவாக, அவரை நான் ஏன் எனது குருவாகத் தேர்ந்தெடுத்தேன் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். இல்லையெனில் குருமார்களுக்குப் பஞ்சமே

இருக்காது. தன் விருப்பம் போல யாரை வேண்டுமானாலும், ஒருவர் தன் குருவாக அடையலாம்! கடைசியில் மன்னிப்பைப் பெற்றுவிடலாம் என்ற எண்ணம் அங்கே இல்லாதிருந்தால், அவர் ஒருவர் மட்டுமே என் குருவாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு எஞ்சியிருப்பார்! எப்படியிருந்தாலும், இந்தவிதமாக அது வந்திருக்கும்போது, (இதற்குப் பிறகு) அந்த முடிவான உச்சநிலை எனக்கு ஏன் வந்திருக்காது; அதற்குக் காரணமேயில்லை. நிலைமை இப்படி இருக்கும்போது நான் என் பெயரை உலகில் ஏன் பிரகாசிக்கச் செய்யக்கூடாது என்பதற்கும் காரணமில்லை. கவனியுங்கள் அன்பரே! தன்னுடைய முடிவான உச்சநிலை தனக்கென உறுதி செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒருவருக்கு என்ன பயம் இருக்க முடியும்! அவனுடைய இறுதிநிலையின்போதும் அதற்குப் பிறகும் அவனுக்கு மன்னிப்பு கிடைப்பதை உறுதிப்படுத்தும் திறமையும் தகுதியும் இல்லாத குருவைப் பெற்றுள்ள ஒருவனுக்குத்தான் பயம் இருக்க வேண்டும்! 'துன்பங்கள் மற்றும் மாற்றங்கள் நிறைந்த சமுத்திரத்தைக் கடந்து என்னை கொண்டு செல்ல உங்களால் (குரு அல்ல கடவுள்) முடியும் என்றால், அதுவும் என் பங்கில் பக்தி இல்லாத போதும் என்னை சம்சாரக் கடலைத் தாண்டச் செய்ய முடியும் என்றால் அப்போதுதான் உண்மையாகவே என்னை நீங்கள் காப்பாற்ற முடியும் என்று தெரியும்' என்று பிரபலமான ஹிந்தி மொழி மேற்கோள் ஒன்று உண்டு.''

''இதற்கும் மேலாக என் குருவின் மீது எனக்கு மிகவும் அன்பு உண்டு. என் குருவை அவமரியாதையாகப் பேசுவதற்கு யாராவது ஒரு எழுத்தை உச்சரித்தாலும் அப்படிப் பேசிய மனிதரின் மண்டையை உடைக்க என் கனமான கைத்தடி தயாராக இருக்கும். இப்படி தன் குருவுக்கு எதிராக யாராவது ஒரு வார்த்தை பேசினாலும் அவருடைய மண்டையில் அடிப்பதற்கு கைத்தடியை ஓங்குகின்ற செயலைவிட அன்புக்கு வேறு சிறந்த உதாரணம் இருக்க முடியுமா? இன்னும் சிறந்தவிதமான பக்தியின் வழியை குரு கண்டறிந்து சொல்ல முடியும் என்பதை நான் அறிவேன். (சிறிது இடைவெளி) ''தன்னையே தனக்கு அடையாளம் தெரியாத அளவுக்கு தன்னையே இழந்து விடுகிறபடி தனது சுயத்தை தியாகம் செய்துவிடுவது தான் விரும்பத்தக்கதாக இருந்திருக்கிறது. இது வாழ்க்கையையே தியாகம் செய்வதாக ஆகும்; அதுதான் அன்பு! வெறும் சீர்கெட்டிருந்த சுயத்துடன் விடப்படாதவாறு இப்படி இந்தவிதமான சுயதியாகத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்; இதுதான் அங்கே நடந்தது. இது மிகவும் நுணுக்கமான (ஒரு சூட்சுமமான வழியில்) நடந்தது. அந்தச் செயல்முறை

மேலும் மேலும் தொடர்ந்தது. இதன் விளைவு என்னவாக இருந்தது? நீயே இதைக் கவனித்து அறிந்து சுயம் மட்டுமே எஞ்சியிருக்கிறது; தியாகம் இல்லாமற் போய்விட்டது என்பதைக் குறித்துக்கொள். இதன் பொருள் என்ன? **சுயம்** என்பது இழக்கப்பட்டு விட்டது; சுயத்தின் தன்மை மட்டும் தக்க வைத்துக்கொள்ளப்பட்டது என்பதுதான். அதாவது தான் என்பது மட்டும் அல்ல; அதைச் சார்ந்த அனைத்தும் மறைந்து போய்விட்டன. கற்றுக்கொண்டவை, பயிற்சி பெற்றவை ஆகிய இவையும் கூட இழக்கப்பட்டுவிட்டன. அங்கே என்ன இருந்ததோ அதையே கூட தக்க வைத்துக் கொள்ளப்பட முடியவில்லை என்னும் போது, ஏதோ ஒன்றை அடைதல் என்பது பற்றிய எண்ணம் எங்கே இருக்க முடியும்? இப்போது மீதி என்ன இருக்கிறது? உலகியல் தன்மையைத் தவிர வேறு எதுவுமில்லை!''

''இப்போது தன்னை மறந்த நிலையைப் பற்றிய கதையைக் கேள்! இந்த வார்த்தையின் பொருள் ஏற்கெனவே தெரியும். தன்னையே மறந்து விடுதல்; அதாவது மாஸ்டர் பற்றிய நினைவு மட்டுமே மீதியிருக்கும் நிலை. (இகழ்ச்சியான பொருளில் சொல்கிறார்) இது N1 – இனால் மிக நன்றாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. உண்மையில் அவரேதான் இந்தப் பிரச்னையைத் தீர்த்தார்; வருவோர் போவோர்க்கெல்லாம் அதைச் செய்து காட்டினார். அவர் அதை எப்படிச் செய்தார்? நல்லது, நீ செய்யும் ஒவ்வொரு வேலையையும் குருவுடன் இணைத்துவிடு. அப்போதுதான் அவர் அந்த வேலையைச் செய்தார்; அதை மாஸ்டருடன் இணைத்துவிட்டார். இதனால் என்ன நிகழ்ந்தது? அவர் சொற்பொழிவுகள் செய்யத் துவங்கி, குருவின் பெயரால் வேலை செய்தார். இப்போது சொல். இந்தப் பிரச்னை தீர்ந்து விட்டதா? இல்லையா? இப்போது அவர்கள் செய்வதெல்லாம் அது எதுவாயினும் குருவின் செயலாகவே அவர்கள் கருதுகிறார்கள். பணம் வரும்போது அதை அவர்களுடையதாக நினைக்கிறார்கள். இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு குரு என்ன செய்யப்போகிறார்? தீட்சையின் போது முதல் தடவை கொடுத்த பணமே அவருக்கு போதுமானதாக இருக்கிறது. அதற்குமேல் அவருக்கு பணம் தேவையில்லை. நல்லது, ஏதோ கொஞ்சம் கொடுத்ததே, உண்மையில் எல்லாம் கொடுத்ததாக ஆகிறது. என் வேலை நிறைவேறிவிட்டது; உன்னுடையதும் கூட முடிவடைந்துவிட்டது. தன்னை மறந்த தன்மை என்ற விஷயமும் கூட காசாக்கப்படுகிறது. (விற்கப்படுகிறது). இப்போது என்ன மீதியிருக்கிறது? இப்போது சொல்! என்னிடம் ஆன்மீகத்தில் என்ன குறையிருக்கிறது? வணக்கத்திற்குரிய என்

மாஸ்டரின் பெயரால் நான் செய்யாதது, செய்யாமலிருந்தது ஏதாவது இருக்கிறதா?''

''என்ன! நீ அந்த மாதிரி மனிதர்களை விரும்புவதில்லையா? என் மனதுக்கு, அவர்கள்தான் மிகவும் நல்லவர்களாகத் தெரிகிறார்கள்! உலகம் இந்த விஷயங்களைத்தான் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. இதன் மூலமாகவே ஆன்மீகம் பற்றிய ஒரு மதிப்பீட்டைச் செய்கிறது. இவ்வாறாக, இந்த விஷயம் ஒருவரிடத்தில் இருக்கும் அளவுக்கு, அந்த அளவுக்கு அவர் ஆன்மீகச் சிறப்பு பெற்றுள்ளவராக உலகத்தின் கண்களால் காணப்படுகின்றன. இப்படியிருக்கையில், எதுவுமே இல்லாத வறண்ட எலும்புகளை யார் மதிக்கப்போகிறார்கள்? அவற்றில் எதுவுமே இல்லை என்பது உண்மையல்ல. உண்மையில் அவற்றில் எல்லாமே அடங்கியுள்ளன. மக்கள் இந்த வழியில் தொடர்ந்து வந்திருந்தால் அது எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். குறிக்கோளைச் சென்றடைவது சுலபமாக இருந்திருக்கும்; மனித வாழ்வின் நோக்கம் அடையப்பட்டிருக்கும்; ஆன்மீகத்தின் சுவை ருசித்து உணரப்பட்டிருக்கும்; இதில் வரக்கூடிய கஷ்டங்கள் சுலபமாக்கப்பட்டிருக்கும்; முழு நிறைவான ஐக்கிய நிலை எய்தப்பட்டிருக்கும்; ஏக்கம் ஒரு முடிவுக்கு வந்திருக்கும்; அன்பின் லட்சியத்தைச் சென்றடைய முடிந்திருக்கும்; நமது ஆன்மீகப் பயிற்சியின் லட்சியம் முழுவதும் நிறைவேறியிருக்கும்; எவ்வளவு தான் சொல்வது; எல்லாமே முழு நிறைவு பெற்றிருக்கும்!''

''அமைதி என்ற வறண்ட பள்ளத்தாக்கில் சுற்றிலும் உள்ள நறுமணத்தை அனுபவிப்பதனால் இன்ப நுகர்வுகளுக்கு மேலாக உயர்வடைவதற்கு அடியெடுத்து வைக்க இன்று தயாராக களத்தில் நிற்கும் வீரன் யார்? களத்தில் இன்றைய தினம் அம்மாதிரி நிற்கின்ற வீரன், முழுமையான வீரமும் தைரியமும் உடைய மனிதன், எங்கோ ஒருவன்தான் இருக்கிறான். அவனைக் கருவியாகக் கொண்டுதான், அவன் வழியாகத்தான் ஒவ்வொரு மனிதருடைய கடற்படையும் கரையைக் கண்டறியும்! அது அவ்வாறே நிகழ்வதாக!''

### சுவாமி விவேகானந்தா:

''நமது பிரபு கடந்த இரண்டு நாட்களாக நகைச்சுவைமிக்க வார்த்தைகளில், இகழ்ந்து கேலி செய்யும் விதத்தில் (போலி ஆன்மீகவாதிகள் பற்றி) கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். அவை மிகச் சிறப்பான தன்மையில் இருந்தன. கற்பிப்பதில்,

பயிற்சியளிப்பதில் இது ஒரு புதிய வழியாகும். குரு என்ற பதவி அதன் சீரழிந்த நிலையில் இருப்பது பற்றி நாம் புரிந்து கொள்வதற்காகவும், இந்தக் குறிப்புக்களில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், மிகச்சிறப்பாக கூறப்பட்டுள்ளது. என் கதை, உங்கள் கதையிலிருந்து வேறுபட்டது. அவர்கள் காலத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். கல்வியறிவு சார்புடைய மனங்கள் ஒரு சமுதாயத்தில் இருக்கத் தகுந்த குறிப்பிட்ட சில கோட்பாடுகளைப் பின்பற்றி வேலை செய்து கொண்டிருக்கின்றன. சீரழிந்துபோன, ஒழுங்கீனமான வடிவத்தில் இவை இல்லையென்றாலும் இவற்றின் விளைவும் அதேமாதிரி தான் உள்ளது. ஏல்லா இடங்களிலும் கலாசாரப் பண்பு தேவைப்படுகிறது. இரண்டு சங்க அமைப்புக்களிலும் இந்த விஷயங்கள் குறையாக உள்ளன. அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு சரியான ஒரு தலைமை இல்லாமல் உன்னுடைய சங்கம் கெட்டுப் போயிருக்கிறது, ஒரு ஆன்மீகவாதி இல்லாத குறையினால் என் சங்கம் கெட்டுப்போயிருக்கிறது, மற்ற அனைத்து ஆன்மீக சங்கங்களும்கூட தங்கள் சொந்தப் பெருமை குறைந்து போனதால் அல்ல! அவற்றை நடத்திச் செல்ல திறமையும் தகுதியும் மிக்க குருமார்கள் இல்லாமல் போனதால் தாழ்ந்து போய்விட்டன. இப்போது இவையனைத்தும் ஒன்றில் ஐக்கியமாகிவிட்டன. நமது வருந்தத்தக்க கதைகளின் விளைவு இதுதான். (சிறிது இடைவெளி) உனது குரு தியாகத்தில் மிகச் சிறந்தவராக விளங்குகிறார். இந்த உண்மைகளிலிருந்து நீ ஊகித்து உணர்கின்ற நன்னெறி ஒழுக்கம் பற்றிய கருத்து என்ன? உழைப்பும் தியாகமும் வீணாகிப் போவதில்லை என்பதுதான்.''

## 22-12-1945

**சுவாமி விவேகானந்தா:**

''நான் ஏதோ ஒரு இடத்தில் சொன்ன கருத்துபோல எலும்புகளின் குவியல்தான் இதன் விளைவு.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (M1 - க்குச் சொன்னது):**

''மக்கள் என்னிடம் பொறுப்பை விட்டுவிடுகிறார்கள் என்பது வேடிக்கையான விஷயமல்ல. என் பிரியமான ராம் சந்த்தர் என்னைக் கடுமையாக இருக்க விடுவதில்லை என்பதால் இது அவரின் தவறு. அவர் தனது மனத்தில் உள்ளார்ந்த மையத்தை கடினப்படுத்திக் கொண்டிருந்தால், ஒரு உறுதியான மனப்பான்மையை மேற்கொண்டிருந்தால், இந்த நேரத்திற்குள் எல்லாக் காரியமும் முடிந்திருக்கும். என் பிரியமான M1,

நான் என்ன செய்ய முடியும்! என்னுடைய உள்நிலையை நீ அனுபவித்திருந்தால், நான் ராம் சந்த்தரிடம் ஐக்கியம் அடைந்தது போல நீயும் யாருடனாவது ஐக்கியம் அடைந்திருந்தால், அந்த மனிதரின் விருப்பத்திற்கும், சந்தோஷத்திற்கும் எதிராக நீ எப்படிப்போவாய் என்பதை நான் பார்க்க விரும்புவேன். ராம் சந்த்தரின் ஒவ்வொரு முடியிலும் (மயிரிலும்) ஒவ்வொரு நரம்பு மற்றும் தசைநாரிலும், ஒவ்வொரு மயிர்க்காலிலும் நான் இருக்கிறேன். இம்மாதிரி ஒரு ஐக்கியமடைந்த நிலை எந்த ஒருவராலும், இதுவரையில் ஒருபோதும் அடைய முடிந்ததில்லை.''

''இந்தக்காரியத்தை செய்து முடிப்பதற்கான ஒரேவழி ராம் சந்த்தரை சீற்றம் கொள்ளச் செய்வதுதான். நேருக்கு நேர் பேச்சுவார்த்தை நடக்கும் போதுதான் இது சாத்தியமாகும். அம்மாதிரி ஏதோ ஒன்றுதான் அவரைக் கடுமை கொள்ளச் செய்யும். இந்த விஷயத்தில் C1 வெற்றியடைய முடியும், ஏனென்றால் இந்த நிலைமை துடுக்கான குறை கூறும் கருத்துக்களால் உண்டாக்கப்பட்டது. அந்தப் பழக்கம் C1 க்கு இருக்கிறது. இதன் காரணமாக மிகப் பெரும் தீமைக்கு ஆளாகிவிடக்கூடும். (சிறிது இடைவெளி) கடந்த சில நாட்களாக கூறப்பட்ட குறிப்புக்கள் மிகவும் மதிப்புடையவை. இவை நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைக்கப்படலாம். M1 - க்கு நான் கூறிய குறிப்புக்கள் தேதிவாரியாக, அவற்றின் ஞானத்தெளிவூட்டும் சாராம்சத்திற்கு மதிப்பளித்து குறித்து வைக்கப்படவேண்டும். இவற்றுடன் சேர்ந்து மீதியுள்ள குறிப்புக்கள் ஒரு சிறிய வெளியீட்டுக்குள் அடங்கும். M1 அவர்களுடன் அதாவது S1, C1 மற்றும் பிறருடன் நடத்தும் உரையாடல்களும் தேதி வாரியாக எழுதிவைக்கப்பட வேண்டும். இதுதான் கடைசி சந்தர்ப்பம். இதற்குப் பிறகு இனி எது நடந்தாலும் அது அவர்கள் பொறுப்பு என்பதை அவர்களிடம் தெரிவித்துவிடு. அதற்குப் பிறகு நம் பக்கத்திலிருந்து எந்த முயற்சியையும் அவர்கள் எதிர்பார்க்க முடியாது.'' (M1, 22-12-1945 என்ற இத்தேதியில் வணக்கத்திற்குரிய லாலாஜி மகராஜின் பழைய சீடர்களை சந்தித்து லாலாஜியின் உண்மையான ஆன்மீகப் பிரதிநிதி மற்றும் அவரையடுத்து தலைமைப் பதவிக்கு உரியவர் ஸ்ரீ பாபுஜிதான் என்பதை எடுத்துச் சொல்லி, அவர்களை ஒப்புக் கொள்ளச் செய்வதற்காக பதினைந்து நாள் பயணமாக புறப்பட்டார்).

30–12–1945

**சுவாமி விவேகானந்தா:**

‘‘நீ இப்பொழுது சூட்சும ரூபத்தில் ஒரிஸ்ஸா மாநிலத்தில் அங்கங்கே ரயில் நிலையங்களில் நின்று பயணம் செய்து கொண்டிருக்கிறாய். அங்கே உனது வேலையும் கூட ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். வேலையை ஆரம்பிப்பதில் மிகச்சிறந்த வழி சொற்பொழிவு செய்வதுதான். அதற்கென்று நீ இன்னும் யாரையும் தயார் செய்யாமல் இருக்கின்றாய். R8 - முதலில் இவற்றை நன்கு படிக்கட்டும். பிறகு அவரால் வரமுடிந்தால், நீ செல்லும் இடங்களுக்கு அவரையும் அழைத்துச்செல்.’’

‘‘அவர் அங்கு பிரபலமான மனிதர்களைப் பார்த்துப் பேசி, அவர்களை இந்தச் சொற்பொழிவுக்கு (இடம் முதலியவை) ஏற்பாடு செய்ய வைக்க வேண்டும். அங்கே R8 - நமது மிஷன் சார்பாக உரையாற்ற வேண்டும். இந்தப் பயணத்துக்காக அவரை நீ தயார் செய்ய வேண்டியிருக்கும். இந்த வேலைக்கு முன்னேற்பாடாக அவர் பல புத்தகங்களை நன்றாகப் படிக்க வேண்டும். R2 - என்ற சிறந்த மனிதர் உன்னிடம் இருக்கிறார். அவருக்கு ஈடுஇணை யாருமில்லை. M1 தன்னுடைய சுற்றுப்பயணத்தில் நல்லவிதமாக வேலை செய்திருக்கிறார்.’’

31–12–1945

**சுவாமி விவேகானந்தா:**

‘‘பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து ஒரு விசேஷமான வேலை உனக்கு வந்து கொண்டிருக்கிறது. காலம் கடந்து போய்க் கொண்டே இருக்கிறது; இதைச் செய்வதற்கு உனக்குச் சமமான வேறு யாரும் எனக்குக் கிடைக்கவில்லை. நாளை 1945ஆம் ஆண்டின் முதல்நாள். நீ அப்போது உனக்கு முன் உள்ள வேலையைச் செய்வதில் ஈடுபட வேண்டும். அந்த நோக்கத்திற்குத் தகுந்தபடி உன்னை மாற்றிக்கொள். நீ அலுவலகப் பணியில் இருப்பது ஒரு பெரிய குறைபாடாக இருக்கிறது. (அலுவலகத்திற்குப் போவதற்கு முன்பு) காலை நேரத்தை இதற்கு பயன்படுத்து. நான் அடிக்கடி உன்னிடம் சொல்லிக் கொண்டே இருப்பது போல உனது உறுதியான சங்கல்பத்தை ஏற்படுத்திக் கொள். உனது நெருங்கிய நண்பர் R2 - க்காக, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து ஒரு பரிசு வருகிறது. நீ மிகவும் நேசிக்கிற R2 – க்கு உனக்காக மத இலயக்கியங்களை (மதம் சார்ந்த நூல்களை) சேகரித்துக் கொடுக்கும்

மேலும் ஒரு பணியையும் நான் நியமித்திருக்கிறேன். அந்தப் புத்தகங்களை உனக்காகப் படித்துக் காட்டும் ஒரு மனிதரையும் தேடிக்கொள். வேதங்கள் பற்றிய கருத்துத் தொகுப்புக்களையும் தேடி வாங்கலாம். உன்னுடைய நீதிமன்ற உத்தியோகத்திற்காக பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஐந்து வருடங்கள் அனுமதித்துள்ளார். என்னுடைய இதயமும் ஆன்மாவும், அதேபோல நமது பிரபுவின் உள்ளமும் ஆன்மாவும் இந்த வேலை முடிவடைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றன. நமது பிரபு ஒருவிதத்தில் ஒட்டுமொத்தமாக தன்னையே உனக்கு விற்றுவிட்டார். அது தீட்சையின் விளைவு. உண்மையில் உன்னுடைய பதவி நிலையைப் பற்றி வெளிப்படுத்திச் சொல்ல நான் விரும்பவில்லை. என்னைப் பற்றி என்ன சொல்ல! வணக்கத்திற்குரிய உன் மாஸ்டருன் அருகருகே நான் சென்று கொண்டிருக்கிறேன்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''உண்மையில் நான் என்னையே உன்னிடத்தில் அடகு வைத்திருக்கிறேன் என்று சுவாமிஜி மிகச்சரியாகச் சொன்னார். இந்த மாதிரி உதாரணம் மிக அரிதானது. என் கருத்தின்படி ஜனவரி 10, 1946 என்ற இந்தத் தேதியிலிருந்து, நான் சொல்லும் காலம் வரை நீ விடுமுறை எடுத்துக்கொள்ள வேண்டும். அது சுமார் மூன்று மாதங்களோ அல்லது அதற்கும் குறைவாகவோ இருக்கலாம். அது உன் இதயத்திற்கும், மனத்திற்கும் மிகவும் நன்மையளிக்கும். ஏனெனில், அந்தச் சமயத்தில் உன்னைத் தொந்தரவு செய்ய யாரும் இருக்கமாட்டார்கள்.''

''என் பிரியமான ராம் சந்த்தர்! உனக்கு ஒரு விஷயம் சொல்கிறேன். உனது தோழமை அமிர்தம் போன்றது; அது என்னை உன் ஜீவனின் தனித்தன்மையில் ஊறிக் கரைந்திருப்பவனாகப் பார்க்கின்ற மனிதருக்கு மட்டும்தான், ஒருவரை எந்த ஒருவராலும் ஆன்மீக நிலையைக் கடக்குமாறு செய்ய முடியும். அதாவது, நான் இப்படிச் சொன்னாலும், அது யார் வேண்டுமானாலும் செய்யக்கூடியது என்று அர்த்தமாகாது, 'எந்த ஒருவராலும்' என்று நான் சொன்னது என்னுடைய ஜீவனில் ஊடுருவிப் பரவும் தன்மை பெற்றுள்ள என் சீடர்களைத்தான். நீ அனுமதித்தால், மேலும் கொஞ்சம் சொல்கிறேன். அதாவது தோழமை என்பது ஆபத்தானதும் ஆகும். ஆனால் அது

என்னை உனக்குள் பார்த்த பிறகும், உன்னை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்புகிற மனிதருக்குத்தான். மக்கள் கவனித்தறிதலை அல்லது செயல்படுவதைத் தவிர்க்கிறார்கள் என்று நான் கூறவில்லை. நான் பொதுவாக விளங்கும் விஷயத்தைச் சொல்கிறேன். இது உன்னிடத்தில் வெறுப்பை ஏற்படுத்தவில்லை என்பது சந்தேகமில்லாமல் பாராட்டத்தக்கது. ஆனால் உன் இதயத்திலும், மனத்திலும் நிச்சயமாக இதன் விளைவு இருக்கிறது; அதன் விளைவை என்னிடம் உண்டாக்குகிறது. என்னுடைய நிலையும் கிட்டத்தட்ட இதே மாதிரிதான் இருக்கிறது. நீ பொறுமையுடன் எதுவும் செய்யாமலிருந்தால் இந்த விளைவு தவிர்க்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. அன்புள்ள சகோதரா, மாஸ்டருடன் முழுமையாக ஐக்கியம் அடைந்திருக்கும்போது இம்மாதிரி ஒரு நிகழ்வு நடப்பது நிச்சயம் என் ஆயுட்காலத்தில் எனது நிலையும் இதே மாதிரிதான் இருந்தது. இந்த விஷயங்கள் மிகப்பெரிய பாடங்களைக் கற்பிக்கின்றன. என்னுடைய நிலையை யாராவது வந்தடைந்து, நான் செய்தது போல தன் சீடருடன் ஐக்கியம் அடைந்திருந்தால், அவரும் கூட இதே விதியினால் சிரமப்படுவார், இது இயற்கைதான், யாரும் இதைத் தடுக்க முடியாது. நான் மேலும் சொல்கிறேன். அம்மாதிரி ஒரு சீடர் தேவைப்பட்ட அளவுக்கு (சாராம்சத்தில்) எடுத்துக்கொள்ளப்படும் போது இதனால் ஏராளமான நன்மைகள் உள்ளன. உனக்குத் தெரியுமா, இப்போது எந்த நிலையையும் கடந்தவனாக இருக்கிறேன். என்னிடம் என்ன இருக்கிறது? ராம் சந்த்தராகிய உன்னிடத்தில் என்ன இருக்கிறதோ அதேதான் இருக்கிறது. இது எப்போதும் அப்படித்தான் இருந்திருக்கிறது. அதில் புதியதாக எதுவும் இல்லை. இதற்கு வேறு உதாரணமே இல்லாத அளவு உன்னிடம் முழுமையாகவும், மிக அதிக அளவிலும் ஐக்கியம் அடைந்திருக்கிறேன் என்ற ஒரு விசேஷ விஷயம் இருக்கிறது. அதில் சந்தேகமில்லை. இதற்கு இனிமேலும் வேறு உதாரணம் இருக்காது என்பதும் சாத்தியமே. அப்படி ஏதாவது நிகழ்ந்தால் அதை கடவுளின் கட்டளை, தெய்வச்செயல் என்று எடுத்துக்கொள்ளவேண்டும்.''

‘‘சரி, சொல்ல வந்த விஷயம் முடிந்துவிட்டது; இப்போது மேலும் சில விஷயங்களைக் கேள். இயற்கையின் வேலை இப்போது முற்றிலும்

உன்னிடமே விடப்பட்டுள்ளது. நீ ஒருவன்தான் அதை முழுவதுமாக (அதாவது அந்த வேலை முழுவதையும்) செய்யவேண்டும். எங்களுக்கு அதில் சிறிதும் பங்கு இல்லை. அந்த வேலையை இப்போதும் சரி, உனது உடலை நீத்த பிறகும் நீ செய்ய வேண்டும். எனவே அன்புள்ள சகோதரா, அந்த வேலையை விரைவாகச் செய்து முடி. வேலைகள் இன்னும் காத்திருக்கின்றன. நீ ஏராளமாக வேலை செய்ய வேண்டியுள்ளது. இந்த விஷயத்தை சரியாகப் புரிந்துகொள். நீ பிறந்த போது எப்படி இருந்ததோ, அதன் பிறகும் எப்படி இருந்ததோ, இப்போதும் கூட எப்படி இருக்கிறதோ அப்படியேதான் இந்த உலகத்தை இருக்கும்படி விட்டு விட்டுப் போவாயா? இல்லை. அது அப்படி இருக்கக்கூடாது! இந்த வேலையை முழுமையாக முடித்துவிட்டுத்தான் நீ செல்வாய்; இலையுதிர் காலத்துக் காற்று அதை அணைத்துவிட முடியாதபடி ஆன்மீக விளக்கை ஏற்றிவிட்டுத்தான் நீ செல்வாய்; உன் மாபெரும் சிறப்புத்தன்மை எனக்கு மட்டுமே தெரியும் என்பதில் எனக்கும் மிகவும் மகிழ்ச்சிதான். உன்னைப் பற்றி நான் என்ன சொல்வேன்? உன் ஆயுட்காலத்திற்குப் பிறகு இந்த விஷயம் உனக்குத் தெரியும். வணக்கத்திற்குரிய பழங்காலப் பெரியோர்கள் (மகான்கள்) உனது பாதுகாக்கும் நிழலாக இருக்கும் அதிர்ஷ்டத்தைப் பற்றி வேறு யாராவது சிந்திக்க முடியுமா? அது உனக்குத்தான் கிடைத்துள்ளது! கடவுள் உனக்கு இன்னும் கூட அதிகமாக நன்மை அளிக்கட்டும். என்னுடைய விளைவு ஒவ்வொரு நொடியிலும் புத்தம் புதியதாக நீடிக்கட்டும். கண்ணில்லாதவர்கள் இப்போதும் கூட (உனக்கும் எனக்கும் இடையே வேறுபாடு இல்லை என்பதைக்) காண முடியாமலிருக்கிறார்கள். இதன் காரணம் என்னவெனில் தங்கள் சுயத்தின் கர்வத்துடன் தாங்களே மாஸ்டர்களாக (தெய்வங்களாக) மாறி சௌகரியமாக உட்கார்ந்திருப்பதுதான். இதற்காக அவர்கள் உள்ளுக்குள் அச்சமில்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. சிலர் பயத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் தாங்கள் போட்ட முதலீடு நஷ்டமாகி விடுமா என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனக்குப் பிரியமானவனே! நீ உன் வேலையைச் செய்து சிக்கல்களை ஒருபக்கமாக ஒதுக்கி விட்டுவிடு! யார் வந்தாலும் சரி, என்ன வந்தாலும் சரி, அதை மட்டும் கவனி.

இந்த விஷயத்தில் R2 – இன் கருத்தை நான் ஒப்புக்கொள்கிறேன். ஒட்டகம் மலையின் அருகே வரும் வரையில், தன்னைத்தான் மிகவும் பெரிய வடிவம் உடையது என்று நினைத்திருக்கும் (இது ஒரு பிரபலமான இந்தியப் பழமொழி). இந்த நிலையை அனுபவத்தில் உணர யாருமே வராமலிருக்கும்போது உனக்கு நான் சொல்கின்ற இக் கருத்தக்களை யார் நம்புவார்கள்? அது நடந்திருக்க வேண்டும்; ஆனால் இதயத்தை இதற்குக் கொடுப்பார்களா? என்ற கேள்வி இதில் இருக்கிறது.''

**சுவாமி விவேகானந்தா:**

''உன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்தவேலை முழுவதையும், இரவில் இரண்டு மணிநேரம் வேலை செய்தால் முடிந்து விடும். ''

**2-1-1946**

**R2 - ன் கேள்விப் பதிலாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''N1 - முன் பிறவியில் ஒரு குஷ்டரோகியின் மகனாக இருந்தார். N1- ன் தந்தைக்கு பெரிய குடும்பம் இருந்தது. அவருக்கு வந்த நோயின் காரணமாக, தன் கடைசி காலத்தில் அவர் கங்கை நதிக்கரையில் வசித்தார். அவர் ராமநாமத்தை உச்சரித்தவாறு கடவுளின் நினைவில் ஈடுபட்டிருந்தார். மற்றவர்கள் கொடுத்த தர்மத்தில் அவர் உயிர் வாழ்ந்திருந்தார். இதுவே அவருடைய நல்ல சம்ஸ்காரங்கள் வளர்ச்சி அடைவதற்குக் காரணமாக இருந்தது. இந்தவிதமாக தன்னால் முடிந்த அளவுக்கு நன்மையை சேர்த்துக் கொள்ள அவரால் முடிந்தது.''

**சுவாமி விவேகானந்தா:**

''அவர் காயஸ்தா குடும்பத்தில் பிறந்தவர். தனது முந்திய பிறவியில் அவர் மிகவும் இன்ப நாட்டத்தில் ஈடுபட்டார். தனது முன்னோர்களிடமிருந்து பாரம்பரியமாக பெற்ற தொற்றுநோய் அவரை கங்கைக்கரையில் வசிக்கும் நிலைக்குக் கொண்டு சென்றது. அவருக்கு சிபிலிஸ் எனப்படும் மேக நோய் இருந்தது. இதனால் தனது உலகியல் சொந்தங்களையெல்லாம் அவர் உடனே துறக்க வேண்டியதாக ஆயிற்று. இது கடவுளின்மீது அவருக்கு இருந்த அன்பினால் அல்ல; அவருடைய கடுமையான தொற்றுநோயினால் தான்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''என்னைப் பற்றித் தெரிந்துகொள்ள நீ என்ன கேட்டாய்! நான் என்னுடைய முன்பிறவியிலும் ஏழையாகவே இருந்தேன்; இந்தப்

பிறவியிலும் அப்படியே இருந்தேன். என் வாழ்க்கை புனிதமானதாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை. எனக்குக் கிடைத்தது எதுவாயினும் அதற்காக நான் கடவுளுக்கு நன்றி சொன்னேன். என் வருமானத்திற்கேற்ப குழந்தைகளை வளர்த்தேன். உழைப்பு மிகுந்த நேர்மையான வாழ்க்கை முறையில் எப்போதும் என்னைப் பராமரித்து வர வேண்டியிருந்தது. உலகத்தின் மீது பற்று இல்லாதிருந்தது. மனைவி மற்றும் குழந்தைகளின் மீது அபரிமிதமான பாசம் வைக்கும் அளவுக்கு, அந்த வலையில் சிக்கும்படியாக நான் அவர்கள் மீது மிகையான அன்பு வைக்கவில்லை. கடவுள் அல்லது மாஸ்டர் பற்றிய நினைவை நான் ஒருநாளும் மறந்ததேயில்லை. நீண்டகாலம் இந்த வழியில் நான் இருந்ததால் நடுநிலைப் பண்பு (நிதானம்) என்னிடம் நிலைபெற்றிருந்தது. மாறுகின்ற உலகின் விரிவாக்கம் (மாயை நிறைந்த உலகம்) பொய்யாகத் தோன்ற ஆரம்பித்தது. தெய்வீக அன்பு பெருகிப் பொங்கியது. துன்பங்கள் சகித்துக்கொள்ளக் கூடியவையாக மாறின. இந்த உலகம் நிலைமாறக் கூடியதாக, நிலையற்றதாகத் தோன்றியது. முன்பிறவியில் உடல் என்ற கூட்டை விட்டுச் செல்வதற்கு மிகவும் முன்னதாகவே, என் நிலை இருந்த விவரம் இது. அந்த வாழ்க்கையின் முடிவில் நான் அதே தன்மையில் நிலை பெற்றிருந்தேன். இப்போதைய நிலையில் அதைத் ‘துறவுநிலை’ எனலாம். பொறாமை மறைந்து போயிருந்தது. கடவுளின் நினைவு மட்டுமே எஞ்சியிருந்தது. அந்த முந்தைய பிறவியில் எனது மரணம், எனது கடைசிப் பிறவியின் ஆயுட்காலத்தை விட ஏழு அல்லது எட்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே நிகழ்ந்தது. அந்த முந்திய பிறவியில் நான் ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்திருந்தேன். எங்கள் தொழில் விவசாயமாக இருந்தது. அந்தப் பிறவியில் எனக்கு குரு கிடைக்கவில்லை. குரு எனக்குக் கிடைத்திருந்தால், எனக்கு அதற்குப்பின் பிறவி இருந்திருக்காது. தெய்வீக அன்பு அந்த அளவு எனக்கு முன்னேறிய நிலையில் இருந்தும், நான் மீண்டும் ஏன் பிறந்தேன் என்பது எனக்கு விளங்கவில்லை! இதில் குறிப்பிட வேண்டிய செய்தி என்னவென்றால் என் ஆயுளின் கடைசி விநாடி வரை கடவுள் மீதான நினைவு இருந்தது. அந்த நினைவுடனேயே உயிர் நீத்ததால் அதுவே மீண்டும் எனக்குப் பிறவியைக் கொடுத்தது.

அதற்குமேல் ஆன்மீக முன்னேற்றம் அடைவதற்கு அதுவே (கடவுள் பற்றிய நினைவு) அடித்தளம் அமைத்தது. அந்த நினைவுதான் என்னை இப்போதைய நிலைக்கு, என்னை வழிதவறிப் போய்விடாதபடி காத்து, இந்த உயர்நிலைக்குக் கொண்டு வந்தது. என் அன்பின்நிலை கடைசி வரையில் ஒரேமாதிரியாக மாறாமல் இருந்தது. எனது முதுமைக்காலத்தில் என் ஜீவன் முழுவதையும் அன்பே ஆட்சி கொண்டிருந்தது. எந்தப் பற்றும் இல்லாமல் அதில் ஒரு சமத்துவம் இருந்தது. தெய்வீகமான அன்பு ஒரேவிதமாக அல்லது மாற்றம் இல்லாமல் நிலைத்து இருக்கிறது என்று அதை நீ புரிந்து கொள்ளலாம். எனது இந்தக் கடைசிப் பிறவியில் இந்த அன்பு ஒன்று மட்டுமே இருந்தது.''

**சுவாமி விவேகானந்தா:**

''தனது இந்தக் கடைசிப் பிறவியில் நமது பிரபு அனுபவித்த அந்தநிலை ஆன்மீக சாதகர்கள் பெரும்பாலோரால் அடைய முடியாத ஒன்றாகும். அது நம் பிரபுவுடைய முன்பிறவியின் பலனாகும். அதை நீ இன்று அறிந்துகொண்டாய்.''

## பிராமணக் குடும்பம் மிகவும் உயர்வானது என்று கருதப்படும் போது பிராமண குலத்தில் பிறந்துவிட்டு, அதன் பிறகு அடுத்த பிறவியில் காயஸ்தா குலத்தில் பிறந்தது ஏன்? என்று R2 கேட்டதற்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''அந்த கலாசாரம் மற்றும் குடிமைப் பண்புகளில் (பழகும் நடத்தையில்) எனக்குப் பயிற்சி தேவைப்பட்டது. எனது பற்பல முந்திய பிறவிகளில் வறுமை நிலைதான் இருந்தது.'' *(லாலாஜி பிறந்தபோது அவருடைய குடும்ப மிகவும் செல்வவளம் உடையதாக இருந்தது. அவர் தன் இளமைக் காலத்தில் செல்வச் செழிப்புடன் நடை, உடை, பாவனைகளுடன் இருந்தார் என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. – தமிழ் மொழி பெயர்ப்பாளர்.)*

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

''உன்னுடைய அன்பு மொத்தமாகப் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. நேசிப்பது பற்றியோ அல்லது யாரோ ஒருவரால் நேசிக்கப்படுவது பற்றியோ எந்தக் கருத்தும் (எண்ணமும்) உனக்கு இல்லை. உண்மையைச் சொன்னால் இதுவே அன்பின் உச்சநிலையாகும். அதில் நீ இருக்கிறாய்.

அன்பின் ஆரம்பமே அதன் முடிவாக இருக்கிறது. இந்தநிலை வேறு யாருக்கும் வெளிப்படுத்தப்படவில்லை. மக்கள் இதேபோல தாங்களும் செய்து பார்க்கக்கூடாது; ஏனெனில் அது திசை திருப்பி விட்டுவிடும்.''

**சுவாமி விவேகானந்தா:**

''நீ செய்து கொண்டிருக்கிற இந்த மாதிரியான தெய்வீகப் பணியை உன்னைப்போன்ற மனிதர்களிடம் மட்டுமே ஒப்படைக்க முடியும். இந்த உனது உள்நிலைத்தன்மை மிகவும் அபூர்வமானது. உன்னைத் தவிர வேறு யாரும் இதையெல்லாம் செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்ள முடியாது. இது நமது பிரபுவின் விசேஷமான தயாரிப்பாகும். இம்மாதிரி உன்னை உருவாக்குவதற்கு அவர் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்திருந்தார்.''

3-1-1946

**சுவாமி விவேகானந்தா:**

''ராம் சந்த்தர்! என்ன ஒரு தேர்ந்த அறிவு உனக்கு!! இதற்கு சமமான திறமையுடையவர்களின் மூளைகளில் இம்மாதிரி விஷயங்கள் ஏன் நுழைவதில்லை என்பது உனக்குத் தெரியுமா? ஆன்மீக வாழ்க்கையில் நுழைந்திருக்கும் மனிதர்களுக்கும் மூளைகள் உள்ளன. ஆனால், அவர்கள் தங்களிடத்தில் செய்ய வேண்டிய எத்தனையோ விஷயங்கள் உள்ளன; அதனால் ஆன்மீகத்தின் உண்மையான அலையை அவர்கள் உணர்வதற்கு குறைந்த நேரம்தான் கிடைக்கிறது. அவர்கள் என்ன செய்ய வேண்டியதில்லையோ அதைச் செய்கிறார்கள். (சிறிது இடைவெளி) நல்லவேளை! நீ என் வேலையை உன் பொறுப்பில் எடுத்துக்கெகண்டாய். இதனால் உனக்கு விஷயங்களைத் தெரிவிப்பதற்கு எனக்கு நேரம்கிடைத்துள்ளது. (சிறிது இடைவெளி) அதாவது செய்யத் தேவையில்லாத காரியங்களை அவர்கள் செய்வதன் விளைவாக அவர்களின் மூளைகள் தங்கள் சொந்த விஷயங்களையே கவனமாகப் பார்க்கத் துவங்குகின்றன; மற்றும் அதிலேயே ஆழ்ந்து ஈடுபட்டு விடுகின்றன. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சக்தி ஒரு இடத்தில் அதிகரிக்கிறது. அவர்கள் தாங்களே உற்பத்தி செய்து கொண்ட சக்தியும் இன்னொரு முனையை நோக்கி அதிகரிக்கிறது. இதன் விளைவு என்னவெனில் இந்த இரண்டு இணைப்புக்களையும் ஒரேயடியாக ஒரே பாதையில் போகச்செய்வது மிகவும் சிரமமான வேலை; மற்றும் பெரும்பாலோருக்கு எட்டாமலிருக்கின்ற ஒன்று என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், அதனால் நாம் அதற்காக முயற்சி செய்யக்கூடாது என்று அர்த்தமில்லை. இதை வேறு வார்த்தைகளில் சொன்னால், இதற்கு முக்கியத்துவமான இடமளித்து அந்த ஆன்மீக அலையை நோக்கி உங்களை முழுமையாக ஆழ்ந்திருக்கச் செய்வதற்கு முயற்சி செய்தால், இன்னொரு பக்கத்தில் வருகின்ற விஷயங்களும் காலப்போக்கில் முழுமையாக இந்தப் பக்கம் வந்துவிடும்.''

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் (R2 - க்குச் சொன்னது):

''ராம் சந்த்தரின் மூளையை நான் எவ்வளவு தான் புகழ்வேன்! முதலில் 'இறையருளினால்' என்ற வார்த்தையுடன் துவங்கி குறிப்பெடுத்துக் கொள். முறைப்படுத்தப்படாத ஒரு கூட்டத்திற்கு பிராணாஹூதி அளிப்பதற்கு எவ்வளவு சுலபமான ஒரு வழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அங்கு இருக்கும் அனைவருடைய மனங்களும் கயிறுகளைப் போல இழுக்கப்பட்டு ஒரு இடத்தில் நிலைநிறுத்தப்படுகின்றன. ஒரு உறுதியான சங்கல்பத்துடன் இந்த இடத்திற்கு பிராணாஹூதி அளித்தால் பெரும்பாலான மக்களின் மனங்கள் ஒரு தற்காலிக செயலற்ற நிலைக்கு வந்திருப்பது காணப்படும். இந்த விளைவிலிருந்து ஒதுங்கியிருப்பது யாராலும் இயலாது. தனது உறுதியான சங்கல்பத்தின் மூலமாக நிலைநிறுத்தப்பட்டுள்ள அந்தப் புள்ளியே ஒருமுகமாக திசை திருப்பப்பட்ட பிராணாஹூதியின் கூர்மையின் விகிதத்துக்கு ஏற்றபடி அதன் விளைவு (பலன்) இருக்கும். இது அந்த பிராணாஹூதியில் முதல்நிலை. இப்போது அதன் இரண்டாவது பகுதி தொடங்குகிறது. கவனித்துக் கேள்! கயிறுகளால் கட்டி இழுக்கப்பட்டது போல இழுக்கப்பட்ட மனங்கள் ஒரு இடத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன அல்லவா, இவற்றை மேல்புறம் நோக்கி இணைத்தால் அந்தப் பெரிய கூட்டத்தின் எண்ணங்களின் மீது சூட்சுமமான விளைவு இருக்கும். இதை இன்னும் மேலே உயர்மட்டத்தில் உள்ள சக்தியோடு இணைத்தால், அந்த இணைப்பு பரமாத்மாவில் (பரம்பொருளின் ஜீவத்தன்மையில்) கலந்து தன்னை இழந்து, அந்த சக்தி அங்கிருந்து இதற்கு வந்து, பிராணாஹூதி அளிக்கும் மனிதர் அதில் கட்டுப்பட்டு அதிகாரம் பெறாதிருக்கும் பட்சத்தில் அந்த மனங்கள் சிதறிப்போய்விடக்கூடிய அபாயத்திற்கு சாத்தியம் உண்டு. இந்த வழிமுறையைப் பயன்படுத்தும் ஒரு சந்தர்ப்பம் வந்தால், அப்படி ஒரு சக்தியின் இறையருள் பெற்ற அம்மனிதர், இதில் தனது சங்கல்பத்தின் முழு ஆற்றலோடு இதில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும். தேவைக்குத் தகுந்த அளவில் இதைப் பயன்படுத்தலாம். இவை அற்புதமானவை; நிபுணத்துவம் மிகுந்தவை. வேறு ஒருவருடைய பார்வை இந்த விஷயங்களைக் கணநேரம்

காண்பதற்கும் கூட போதுமான விரிந்த தன்மையை ஒருநாளும் அடைய இயலாது. இது மனத்தை பாதிக்கின்ற ஒரு ஆற்றல்; அதன் வடிவம் ஆன்மீகமாக மாறியுள்ளது! அன்பான சகோதரர்களே, கேள்விகளைக் கேட்டு அதற்குத் தீர்வு காணுங்கள். இந்தக் காலம் மீண்டும் மீண்டும் வராது!''

**சுவாமி விவேகானந்தா:**

''அன்று நீ பயன்படுத்திய வழிமுறை எனக்குப் பிடித்திருக்கிறது. சில சமயங்களில் நீ அதைப் பயன்படுத்தியிருக்கிறாய். என் கையிலுள்ள வேலையிலிருந்து என்னை விடுவிப்பதற்கு இது ஒரு நல்லவழி; ஆனால் இதை மீண்டும் மீண்டும் செய்யக்கூடாது. உயர்நிலை பெற்ற ஆன்மாக்கள், மிகவும் வேலையின் தீவிரத்தில் இருக்கிறார்கள். இங்கே நீ செய்து கொண்டிருக்கும் வேலை பற்றி உனக்குத் தெரியாது. கடந்த மார்ச் மாதம் பண்டாராவுக்கு முன்பு அந்தத் தேதிகளில் எழுதிவைக்கப்பட்டுள்ள குறிப்புக்களைப் பார். முக்திபெற்ற ஆன்மாக்களுக்கு சிறிதுகாலம் (வேலைப் பளுவிலிருந்து) விடுபடச் செய்வதற்கு பலவழிகள் உள்ளன. அது மனித சரீரத்தில் இருக்கும்போது மட்டுமே சாத்தியமாகும். உனக்கு அந்த வழிமுறை தெரியும்.''

7-1-1946

**M1 22-12-1945 முதல் 6-1-1946 வரை தனது சுற்றுப்பயணம் பற்றிய அறிக்கையை சமர்ப்பித்தார்; வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்தரவின்படி ஸ்ரீ பாபுஜிதான் வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப்பின் பிரதிநிதி மற்றும் அவரையடுத்து தலைமைப்பதவிக்கு உரியவர் என்பது சம்பந்தமாக C1, S1 மற்றும் சிலரை சந்தித்து, லாலாஜியின் இக்கருத்தை அவர்களிடம் வற்புறுத்திக்கூறி, அதற்கு அவர்களிடமிருந்து தெளிவான, உறுதியான பதில்களைப் பெற்று வருவதற்காகச் சென்றிருந்தார். அதன்படி M1 - அளித்த அறிக்கை:**

''22-12-1945 இரவு ரயில் வண்டியில் ஷாஜஹான்பூரிலிருந்து புறப்பட்டு மறுநாள் காலை B.......என்ற இடம் சென்றடைந்தேன். M2 - உடன் ஒருநாள் தங்கிய பிறகு 24-12-1945 அன்று மாலை E .......என்ற இடத்தை அடைந்தேன். அங்கே விழா நடைபெற்றுக்கொண்டிருந்தது. சிறுத்தையின் தோலினால் மூடப்பட்ட ஒரு மரக்கட்டிலின் மீது அமர்ந்து கொண்டு C1 - உரையாற்றிக் கொண்டிருந்தார். S1 - கீழே தரையில் உட்கார்ந்திருந்தார். நானும் (M1), S1 - க்குப் பின்னால் உட்கார்ந்தேன். உள்ளார்ந்த ஆற்றலின்

ஒரு வேகமான சக்தி என்மீது பொழிய ஆரம்பித்தது. சிறிது நேரத்துக்குப் பிறகு நின்றுவிட்டது. நான் எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்து உணர்ந்து கொண்டிருந்தேன். அங்கே வெளிப்புறக் கவர்ச்சியைத் தவிர வேறு ஏதுமில்லை. அருள் முற்றிலும் இல்லாமற் போயிருந்தது. இசை (வாய்ப்பாட்டு மற்றும் இசைக்கருவிகளின் இசை) கட்டுரைப்போட்டி (சொற்பொழிவுகள்), இனிப்புகள் சமர்ப்பித்தல் மிகையான அளவில் இருந்தன. சத்தியம் சிறிதளவும் இல்லை. 25-12-1945 அன்று C1 - மற்றும் S1 – குழு தியானம் நடத்தினார்கள். பாடல்களைக்கேட்டு, S1 - ஆனந்தக்களிப்பில் இருந்தார். தியானம் ஆரம்பித்தவுடன், அவரே தியானம் நடக்கிறது என்பதை மறந்த நிலைக்குப் போய், குறட்டைவிட ஆரம்பித்தார். குழு தியானம் இப்படித்தான் அருள் அதில் இருப்பதற்கான அடையாளமே இல்லாததாக இருந்தது. நான் தியானம் செய்யாமல் இந்த வேடிக்கையைக் கவனித்துக் கொண்டு இருந்தேன். அன்று பகல் நேரத்தில் S1- க்கு அவரது மைத்துனரிடமிருந்து S…….. என்ற இடத்திலிருந்து ஒரு தந்தி வந்தது. அவர் காரில் ஏறிச்சென்றார்; மறுநாள் காலை (26-12-1945) திரும்பி வந்தார். C1 - என்னுடன் தனியாகப் பேச வாய்ப்பு கொடுக்கவில்லை. C1 - னுடைய செயல்களும், அவரது நடவடிக்கையும் என்னுடன் தனித்துப் பேசுவதை அவர் தவிர்க்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டின. ஆயினும் நான் இந்தச் செய்தியை குழு தியானத்திற்கும், சொற்பொழிவுக்கும் இடையில் கிடைத்த நேரத்தில் அவரிடம் நேரடியாகச் சொன்னேன். இந்தமாதிரி விஷயங்களில் ஈடுபடுவதற்கு அவர் விரும்பவில்லை என்று அவர் சொன்னார். அவருடைய மனப்பான்மையும் என்னை நடத்திய விதமும், முன்போல அதே விதமாகவே இருந்தன. வெளிப்படையாகச் சொன்னால் அவரிடம் எந்த வித்தியாசமும் ஏற்பட்டுள்ளதாகத் தோன்றவில்லை. நான் தூய்மையான இதயம் உடையவனாக இருப்பதால், நானே மதிப்பிட்டுக் கண்டுபிடிக்க முடியும் என்று C1 - சொன்னார். நான் ஒன்றும் அவ்வளவு தூய்மையான இதயம் உடையவனோ, மரியாதைக்குரிய பெரியவனோ இல்லை என்று நான் சொன்னேன். பிறகு C1 - தனது தினசரி காலைக்கடன்களுக்காக வீட்டுக்குள் சென்றார். சத்சங்கத்திற்கு மக்கள் வந்து கூடும்வரை வெளியே வரவில்லை. தினசரி வழக்கமாகச் செய்யும் வேலைகள் முடிந்தவுடன் அவர் தனது சீடர்களுடன் அவரது வீட்டுக்குள் வராந்தாவிவில தனியாக ஏதோ வம்பு பேசிக்கொண்டிருந்தார். வேறு வார்த்தைகளில் சொன்னால் என்னுடன் தனிமையில் பேசும் சந்தர்ப்பத்தை தவிர்த்துக்கொண்டிருந்தார். அவருடைய மகன்கள், எங்களிடையே

இருக்கும் கருத்து வேறுபாடுகளை அறிந்திருந்தாலும், எப்போதும் போலவே என்னோடு பழகினார்கள். இந்த விஷயம் சிந்திக்கத்தக்கது. சுருக்கமாகச் சொன்னால், C1 - இதைப் பற்றிப் பேசுவதைக் கூட விரும்பவில்லை. இப்படியிருக்க இந்த விஷயம் பற்றி ஒரு தீர்வுக்கு வருவதைப் பற்றி என்ன சொல்வது? இந்த விழாவிற்குப் பிறகு பேசலாமா என்பதுபற்றியும் அவர் எதுவும் சொல்லவில்லை. அப்படியிருந்தால் நான் அங்கே தங்கி இந்த விஷயம் முழுவதையும் பேசியிருப்பேன். அங்கு நான் கவனித்து அறிந்ததன் அடிப்படையில் நான் உணர்வது என்னவெனில், C1 - தொடர்ந்து நாளுக்கு நாள் கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார் என்பதேயாகும். அவரது பிராணாஹூதியில் எந்த விளைவும் இல்லை. அவர் முகத்தில் எந்த ஒளியும் இல்லை. உயர்ந்த குருவாக (சத்குருவாக) இருப்பதாக எண்ணும் கர்வம் மட்டும்தான் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. மிக உயர்ந்த பதவி நிலையில் இருக்கும் ஒரு மூத்தவராக ஒரு மதிப்பை அவர் பெற்றிருப்பதால், அல்லது அவரது சீடர்கள் அவரை அப்படி அறிவித்துவிட்டதால், சாத்தியமான அனைத்து முயற்சிகளாலும் அதே மதிப்பை அவர் எப்போதும் நிலைநிறுத்திக்கொள்வதில் பரபரப்புடன் ஈடுபட்டிருக்கிறார். அந்த விழா முடிவடைந்தபிறகு 26-12-1945 அன்று M2 - இன் முன்னிலையில் S1 மற்றும் C1 ஆகிய இருவருக்குமிடையே ஒரு உரையாடல் நடந்தது. S1 - சத்சங்கம் நடத்துவதற்காக தன் வீட்டை நன்கொடையாக அளிக்க விரும்பியதாகவும், அதற்கு C1 - இந்த வேலைகள் அனைத்தும் எப்படி தொடர்ந்து நடைபெறப்போகிறது என்ற வேலையில் அவர் முழுவதும் பரபரப்புடன் இருந்ததாலும் S1 - இன் இந்த எண்ணம் சரியானதே என்று சொன்னார். அவர் உயிருடன் இருக்கும் காலம் வரையில் எப்படியாவது ஆண்டுவிழா முதலியவற்றை சிரமப்பட்டாவது செய்து முடித்துவிடுவார்; ஆனால் அவருடைய காலத்திற்குப்பிறகு இதையெல்லாம் யார் தொடர்ந்து செய்வார்கள்; இந்த வேலை எப்படி தொடர்ந்து நடைபெறப்போகிறது என்பதே தனது முக்கியமான கவலையாக இருக்கிறது என்று C1 - சொன்னார். அதற்கு S1 - இது நிச்சயமாக கவலையளிக்கும் விஷயம்தான்; ஆனால் வருங்காலம் பற்றி கடவுளுக்கு மட்டுமே தெரியும் என்று பதில் சொன்னார்.’’

## S1 - உடன் நான் (M1) நடத்திய உரையாடல்களின் சுருக்கம் (தேதிவாரியாக):

''24-12-1945 அன்று இரவு S1 இடம் அவருடனான கடிதப் போக்குவரத்து முழுவதையும் நான் கொண்டு வந்திருப்பதையும், அவர் (S1) அதை நன்கு பரிசீலித்து பார்க்கலாம் என்றும் அதன்பிறகு அவருடைய மனதில் லேசாக இருக்கும் சந்தேகங்கள்கூட நீக்கப்படுவதற்காக, அவரது குற்றச்சாட்டுக்கள், புகார்கள் எது இருந்தாலும் அவர் தெரிவிக்கலாம் என்றும் சொன்னேன். தனது குரு மகராஜ் வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களிடமிருந்து அவருக்கு நேரடியாக உத்தரவு வந்தாலன்றி அல்லது மதிப்பிற்குரிய பெரியவர் யாராவது ராம் சந்த்தரின் உள்முக அனுபவம் பற்றி மதிப்பிட்டுச் சொன்னாலன்றி ராம் சந்த்தரின் எந்த ஒரு உள்முக அனுபவத்தின் மீதோ, வெளிமுக அனுபவத்தின் மீதோ, கூருணர்வுத்திறன் மீதோ தான் எந்த நம்பிக்கையும் வைப்பதற்குத் தயாராக இல்லை என்று அவர் சொன்னார்.''

**S1 மேலும் கூறியது:** ''நான் ஆசைப்படுவது எதுவாயினும் அதை எனக்கு அவர் அளிப்பார்'' என்று லாலாஜி என்னிடம் கூறினார். அதற்கு நான் அவர் மீதான அன்பைத்தவிர வேறு எதுவும் எனக்குத் தேவையில்லை என்று சொன்னேன். இதன் காரணமாக ''வணக்கத்திற்குரிய லாலாஜி என்மீது அதிருப்தி கொண்டிருந்தார் என்று யாராவது என்னிடம் சொன்னால்'' எனக்கு மிகவும் வருத்தம் உண்டாகிறது. தன்னுடைய ஆயுட்காலத்தில் வணக்கத்திற்குரிய லாலாஜி என்னிடம் கூறிய கோட்பாடுகளை நான் பின்பற்றிக்கொண்டிருக்கிறேன் மற்றும் வருங்காலத்தில் அவர் என்னிடம் சொல்லப்போவதையும் நடைமுறையில் பயிற்சி செய்வேன். இதுதான் என்னுடைய நம்பிக்கை மற்றும் என் மதம். ஷாஜஹான்பூரிலிருந்து எனக்கு எழுதிய கடிதங்கள் கிடைத்தவுடன், அவற்றின் அசலான தன்மை, நம்பகத்தன்மை பற்றிய சில மதிப்புக்குரிய பெரியவர்களிடம் கலந்து ஆலோசித்தேன். ராம் சந்த்தரின் வெளிப்பாடுகள் அனைத்தும் தவறு என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

**(M1 - இன் குறிப்பு):** மதிப்புக்குரிய பெரியவர்கள் என்று சொல்லப்படுகிற இரண்டுபேர் அங்கு இருக்கிறார்கள். அவருடைய ஊராகிய S........என்ற இடத்திற்கு நான் இதற்கு முன்பு ஒருமுறை போயிருந்தபோது அவர்களை, S1 எனக்கு அறிமுகப்படுத்தினார். அவர்களில் ஒருவர் ஸூஃபி மார்க்கத்தைச் சேர்ந்த ஞானி, அவர் M ...... என்ற ஊரிலிருந்து இங்கு வந்து, S ....... என்ற ஊரில் வசிக்கிறார் (பெயர் மறந்துவிட்டது). தன் மதம்

தவிர மற்ற மதங்களை தீவிரமாக எதிர்க்கும் குணம் உடைய முதல்தரமான மதவெறியர் அவர். ஒரு ஹிந்து ஒருபோதும் மதிப்புக்குரிய ஒரு பெரியவராக ஆகமுடியாது என்ற கருத்து உடையவர். அவர் ஏதோ பிரார்த்தனைகள் முதலியவைகளைச் செய்கிறார். இரண்டாவது நபர் நாக்பூர் பாபா தாஜுதீன் என்பவரின் சீடர். அவருடைய வீட்டில் பாபா தாஜுதீன் அவர்களின் பெரிய அளவு புகைப்படத்தை வைத்திருக்கிறார். அவரும் அவரது சீடர்களும் அந்தப் படத்தின் முன்பு நமாஸ் (முஸ்லீம்கள் செய்யும் தொழுகை) செய்கிறார்கள். அவருடைய ஆன்மீக சகோதரர்களில் ஒருவர் ராம்பூரைச் சேர்ந்தவர். அங்கு வந்து அந்தப் படத்தின் முன்பு விழுந்து வணங்கி துதிப்பாடல்களும், தோத்திரங்களும் சொல்வார். S1 மேலும் ‘இதை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு நீங்கள் (M1) கூறுகின்ற ஆன்மீகப் பெரியவர் வேறு யாரையாவது சந்திக்க நான் தயாராக இருக்கிறேன்’ என்று சொன்னார். நான் சுவாமி ஆத்மானந்தாவின் பெயரைச் சொன்னேன். அவர் ஷாஜஹான்பூரைச் சேர்ந்தவர் என்பதால் இதில் S1 - க்கு சம்மதமில்லை. இதற்காக K1 மற்றும் A1 ஆகிய இருவரின் பெயரைக் குறிப்பிட்டார். சுவாமி வைராக்யானந்தாவிடம் போகலாம் என்பதற்கும் சாதகமான கருத்துடன் இருந்தார். ஆனால் வாக்குறுதி எதுவும் தர விரும்பவில்லை. மேலும் ராம் சந்த்தர் எனக்கு என்ன எழுதினாரோ அதற்கு எதிராக லாலாஜி மகராஜிடமிருந்து எனக்கு உத்தரவுகள் கிடைத்தன. எனவே, ராம் சந்த்தரின் அனுபவங்கள் மற்றும் ஞான வெளிப்பாடுகளில் அசலான தன்மை இருப்பதாக நான் எப்படி நம்புவது? (சிறிது இடைவெளி) என் குருவின் மீது எனது ஆயுட்கால அன்பின் அடிப்படை எனக்கு இருக்கிறது. அந்த அன்பு இப்போதும் தொடர்கிறது. ஆனால் என்னுடைய ஆன்மீக உள்நிலை பறிக்கப்பட்டு விட்டதாக எனக்கு எழுதப்பட்டுள்ளது. அப்படி எந்தவிதமான ஆன்மீகநிலை குறைந்து போவதும் எனக்கு ஏற்படவில்லை. இதற்கு மாறாக என் ஆன்மீக உயர்நிலை நாளுக்கு நாள் முன்னேறிக்கொண்டிருக்கிறது. எனவே, ராம் சந்த்தர் எழுதியது சரியானது என்று எப்படி நான் கருதுவது? (சிறிது இடைவெளி) ராம் சந்த்தர் எழுதியிருப்பதை நான் சிறிதளவும் நம்பவில்லை. அவர் தன் தலைமையை, ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளவிரும்புகிறார். ஆதாரம் இல்லாமல் எதையும் நம்புவதற்கு நான் தயாராக இல்லை. ராம் சந்த்தர் விரும்பினால் தன்னை சீர்திருத்திக் கொள்வதற்கு அவர் விரும்பும்பட்சத்தில் தயக்கமில்லாமல் என்னிடம் வரலாம். (சிறிது இடைவெளி) வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜி குருமகராஜ் என்னையே தனது விதிக்கப்பட்ட நிறைவளிப்பவர் (முராத்)

என்று நியமித்திருக்கிறார். மாஸ்டர் யாருடன் தனது ஐக்கியத்தை அடைந்திருக்கிறாரோ அவர் மட்டுமே முராத் ஆவார். அப்படியிருக்கையில் நேரடியான உத்தரவுகள் எனக்கு வராமலிருக்க காரணம் ஏதாவது உண்டா? (சிறிது இடைவெளி) லாலாஜி மகராஜ் எனக்கு மூன்று அறிவுரைக் குறிப்புக்கள் கொடுத்தார்: கடவுளை நேசி; அது உன்னால் முடியவில்லையென்றால் மாஸ்டரை நேசி. உன் சகோதர சகோதரிகளுக்கு சேவை செய், இந்த அறிவுரைகளின் படி நடந்து முன்னேறிச் செல். நான் (S1) நிச்சயமாக இவற்றைப் பின்பற்றி நடக்கிறேன். (சிறிது இடைவெளி) என்னுடைய ஆன்மீகநிலை பறிக்கப்பட்டிருக்கிறது என்னும்போது நான் அதை உணர வேண்டும்! அல்லது நான் இதை நம்பும்படியாக ராம் சந்த்தர் அதை மீண்டும் செய்ய வேண்டும். என்னைப் பொறுத்தவரை, என் உள்நிலை சிறப்பாக இல்லாமல் போயிருக்கிறது என்பதற்குப் பதிலாக அது இன்னும் மேலாக, இன்னும் சிறப்பாக இருப்பதையே காண்கிறேன். (சிறிது இடைவெளி) நான் விரும்புவது என்னவெனில் நான் என் வேலையை சுதந்திரமாகச் செய்கிறேன். நீங்கள் உங்கள் வேலையை சுதந்திரமாகச் செய்யுங்கள். நாம் இருவருமே ஒருவருடைய வேலையில் மற்றவர் குறுக்கிட தேவையில்லை. நாம் மூவரும் (C1, S1, M1) இப்போது ஒருவரையொருவர் சாராமல் சுதந்திரமாக இருக்கிறோம். அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கலாம்; உறவு முறையில் தொடரலாம். என்னுடன் தொடர்புடைய S3, S6, M11 ஆகியோரை நீங்கள் தொந்தரவு செய்யக்கூடாது. (சிறிது இடைவெளி) பிராணாஹூதி அளிப்பதற்கும், பயிற்சியளிப்பதற்கும் ராம் சந்த்தருக்கு யாருமே ஒருபோதும் அனுமதியளிக்கவில்லை. (வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜி அவர்கள் சொல்லச் சொல்ல எழுதிய குறிப்புக்களை நீங்கள் பார்க்கலாம் என்று நான் குறிப்பிட்ட போது அவர் சொன்னது) நான் எதையும் படித்துப்பார்க்க விரும்பவில்லை. எனக்கு (S1) இஸ்லாம் மற்றும் ஹிந்து மதங்கள் ஒரேமாதிரியாகவே தோன்றுகின்றன. இயற்கை ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினால், அது கவனிக்கத்தக்கதாக இருக்க வேண்டும். (அதாவது தெரியும்படியாக இருக்க வேண்டும்). (சிறிது இடைவெளி) சிறிதுகாலத்துக்கு முன்பு மிகவும் கவலையும், மனதில் பெருந்துன்பமும் உடையவனாக, எனக்கு லாலாஜியிடமிருந்து உத்தரவுகள் கிடைக்க வேண்டும் அல்லது என் வாழ்வை முடித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் டெல்லிக்குச் சென்றேன். அச்சமயத்தில வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் தனது சகோதரர் R1 உடன் சேர்ந்து இருக்கும் காட்சி எனக்குக் கிடைத்தது. லாலாஜி தன் சகோதரரிடம்

என்னுடைய ஆன்மீக உள்நிலையைக் கண்டறியுமாறும், என்னை கவனித்துக் கொள்ளுமாறும் கூறினார். R1 - இடம் போகும்படி எனக்கு உத்திரவிட்டார். அதன்பிறகு K......... என்ற இடத்தில், R1 ஐக் காணச் சென்றேன். அப்போது தொடங்கி, R1 மீது நான் மரியாதை உடையவனாக இருந்தேன். அதற்கு முன்பு R1 பற்றி எனக்கு எதுவும் தெரியாது. லாலாஜி மகராஜ் அவர்களின் ஆயுட்காலத்தில் R1 மீது நான் ஒருபோதும் மனச்சார்பு கொண்டதில்லை. (சிறிது இடைவெளி) என் வாழ்க்கை முழுவதும் இறைதூதர் முகம்மது நபியை வணங்கும்படியாகவே வணக்கத்திற்குரிய லாலாஜி மகராஜ் செய்திருந்தார். இப்போது அவர் பெயரால் நான் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனை வணங்க வேண்டும் என்று சொல்லப்படுகிறேன்! நான் சிறு பையனாக இருந்தபோது பகவான் கிருஷ்ணன் மீது எனக்கு அன்பு இருந்தது. அடிக்கடி அவரை மனக்காட்சியில் காண்பது உண்டு. அவரும் என் தேவைகளை நிறைவேற்றினார். வணக்கத்திற்குரிய லாலாஜி மகராஜ் அவர்களின் ஆயுட்காலத்தில், பகவான் கிருஷ்ணனை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, இறைதூதர் முகம்மது நபியுடன் அவர் என்னை இணைத்தார். இப்போது லாலாஜியின் மரணத்திற்குப் பிறகு, அந்த லாலாஜி மகராஜின் பெயராலேயே நான் பகவான் கிருஷ்ணனை நாடும்படி கட்டாயப்படுத்தப்படுகிறேன். மகான்களின் பரம்பரையைப் பற்றிக் கூறுவதற்கு எனக்குக் கற்பிக்கப்பட்டது. எப்போதுமே இஸ்லாமிய மதத்தின் மதிப்புக்குரிய பெரிய மகான்களை நாடும்படியாகவே நான் செய்யப்பட்டிருந்தேன். இப்போது அந்தத் திசையிலிருந்து திரும்புமாறு செய்யப்படுகிறேன். இப்போதும்கூட பகவான் கிருஷ்ணன் பற்றிய நினைவு எனக்கு வருகிறது. (சிறிது இடைவெளி) எனக்கு செல்வமும் தேவையில்லை; புகழும் தேவையில்லை. வணக்கத்திற்குரிய குருமகராஜ், யாரை அவர் தேர்ந்தெடுக்கிறாரோ அவருக்கே அதை கொடுக்கட்டும். அவருடைய அன்புக்காக மட்டுமே நான் ஏங்குகிறேன். அவர் விருப்பம் அப்படி இருந்தால் மற்ற அனைத்தையும் அவர் எடுத்துக்கொள்ளட்டும். எனக்கு 52 வயது ஆகிறது. இதுவரையில் என் மாஸ்டரின் மீதான அன்பை மட்டுமே என் அடித்தளமாக வைத்திருந்தேன். அதை இப்போது எப்படி விட்டுவிட முடியும்? நான் அப்படிச் செய்தால் என் வாழ்க்கை முழுவதுமே வீணாகிப்போய்விட்டதாக அர்த்தமாகும். எனவே நீ உன் வேலையைத் தொடர்ந்து செய்; என்னை என் போக்கில் இருக்க விட்டுவிடு. தனிப்பட்ட உறவு முறையும், ஒத்திசைவும் மட்டும்தான் நம்மிடையே இருக்கிறது.''

### 26-12-1945 அன்று S1 - கூறியது:

‘‘லாலாஜி எப்போதுமே இஸ்லாமிய மதத்தின் வணக்கத்திற்குரிய மகான்களுக்கு மரியாதை அளித்து வந்தார். இப்போது அந்த மனப்பான்மை ஏன் நீக்கப்பட்டு விட்டது? (சிறிது இடைவெளி) பகவான் கிருஷ்ணனைப் பற்றியோ, முகம்மது நபியைப் பற்றியோ எனக்கு அக்கரையில்லை. வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் பற்றிய நினைவுதான் எனக்குமுக்கியம். அவருடைய பிரசன்னத்தை நான் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருந்தேன். இப்போதும் அப்படித்தான் இருக்கிறேன். உங்களுடைய குறிப்புகளுக்கு முரண்பாடாக என் அனுபவங்கள் உள்ளன. அப்படியிருக்க உங்கள்மீது நான் எப்படி நம்பிக்கை கொள்ள முடியும்? (சிறிது இடைவெளி) லாலாஜி மகராஜ் இப்போது உயிரோடு இல்லை. அவரிடமிருந்து எழுத்து பூர்வமாக எதையாவது நான் பார்த்தாலன்றி நான் எதையும் ஒப்புக்கொள்ள இயலாது. அதாவது வணக்கத்திற்குரிய லாலாஜி அவர்களே நேரடியாக எனக்கு இதில் விழிப்பு அளிக்கும் வரையில் நான் ஷாஜஹான்பூருக்கும் வரமாட்டேன்; உன் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். என் வாழ்வும் மரணமும் முற்றிலும் லாலாஜி என்ற மணி நேரமும் இருக்கிறார். அவருடைய நினைவு எனக்கு ஒரு நொடி கூட இல்லாமற் போனதில்லை. அதைத்தவிர எனக்கு சொர்க்கம், நரகம் எதைப் பற்றியும் கவலையில்லை.’’

### 27-12-1945 அன்று S1 - தொடர்ந்து கூறியது:

‘‘இப்போது லாலாஜி இல்லை என்பதால் அவர் என்னிடம் கூறிய கொள்கைகளில் மட்டுமே நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். ஆயினும் அவரே எழுதிய இது பற்றிய சில விஷயங்களை நீ காண்பித்தால் நான் அதை ஏற்றுக் கொண்டு செயல்படுவதற்குத் தயாராக இருக்கிறேன். (சிறிது இடைவெளி) தனது ஆயுட்காலத்தில் ஒன்றும், ஆயுட்காலத்திற்குப் பிறகு வேறு ஒன்றும் சொல்லக்கூடிய ஒருவரை நம்பிக்கைக்குரியவராக நான் கருதவில்லை. (சிறிது இடைவெளி) உள்ளுணர்வு என்பது அவதாரங்களின் விஷயத்தில்தான் நம்பத் தகுந்தது. மகான்களின் விஷயத்தில் அது சந்தேகத்துக்கு உட்பட்டது. மதிப்புக்குரிய பெரியவர் யாராவது அதன் அசலான தன்மையை ஒப்பிட்டுச் சொன்னாலன்றி அது தவறு தான். A1 ஐ தனது மரியாதைக்குரிய பெரியவராகக் கருதி வணக்கத்திற்குரிய லாலாஜி மகராஜ் மதித்து, எப்போதுமே அவருடைய ஆலோசனையைக் கேட்டு நடப்பார். எனவே A1 லாலாஜியின் பொறுப்பின் கீழ் இருந்தார் என்பதை

இப்போது நான் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? (சிறிது இடைவெளி) ஒரு சமயம் ஐநூறு ரூபாய்கள் அடங்கிய ஒரு பை என் வீட்டிலிருந்து திருட்டுப் போய்விட்டது. வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் என் வீட்டு சமையல்காரப் பெண்மணிதான் அதைத் திருடியிருப்பதாக அவர் நினைப்பதாகச் சொன்னார். நான் போலீஸ் உதவியுடன் அந்தப் பெண்ணின் வீட்டை சோதனையிடச் செய்தேன். ஆனால் அங்கே எதுவும் கிடைக்கவில்லை. பிறகு என் வீட்டிலேயே அந்தப் பணம் கண்டுபிடிக்கப்பட்டது. லாலாஜி சாகேப் தனக்கு அந்த எண்ணம் பிழையானதாக வந்துவிட்டதாகச் சொன்னார். (சிறிது இடைவெளி) லாலாஜி சாகேப் எனக்கு கடைசியாக மூன்று அறிவுரைக் குறிப்புக்கள் சொன்னார். கடவுளின் மீது அன்பு செலுத்து. அது முடியவில்லையென்றால் மாஸ்டரின் மீது அன்புசெலுத்து. சகோதர சகோதரிகளுக்கு சேவை செய். ஆகிய அறிவுரைகள் தந்தார். நான் அவற்றை தொடர்ந்து பின்பற்றி வருகிறேன். (சிறிது இடைவெளி) நான் தெரிந்து கொள்ள விரும்புவது எதுவாயினும், அதைப் பற்றி சிறிதுநேரம் மனத்தை ஒருமுகப்படுத்தினால், அது எனக்கு வெளிப்படுத்தப்படுகிறது. வேறு எந்த ஒருவரும் எனக்கு எதைப் பற்றியும் தெரிவிக்கவோ, அறிவுரை கூறவோ தேவையில்லை.''

**29-12-1945 அன்று K..........என்ற இடத்தில் இருந்தபோது, S1 சீற்றத்துடன் சொன்னது:**

''போ, போய் அந்த நம்பத்தகாதவரிடம் (லாலாஜி மகராஜிடம்) அவருடைய ஆயுட்காலம் முழுவதும் இறைதூதர் முகம்மது நபியின் மீதும் இஸ்லாமிய மதத்தின் மூத்த மகான்களின் மீதும் நம்பிக்கை வைக்கும்படி சொல்லிவிட்டு, இறந்துபோனபிறகு பகவான் கிருஷ்ணனை வணங்கும்படி எனக்கு ஏன் சொல்கிறார் என்று கேள். அது அப்படித்தான் இருக்கவேண்டும் என்று இருந்தால் நான் ஏற்கெனவே ஆரம்பத்திலேயே பகவான் ஶ்ரீ கிருஷ்ணன் மீது பற்று வைத்திருந்தேனே, என்னை ஏன் பகவான் கிருஷ்ணனிடமிருந்து விலகச்செய்து முகம்மது நபியுடன் ஏன் இணைத்தார்? என் முதுமைப்பருவத்தில் இப்போது பகவான் கிருஷ்ணனை சார்ந்திருக்கச் சொல்கிறார். நான் அப்படிச் செய்ய வேண்டுமென்று அவர் விரும்பினால், ஏன் நேரடியாக என்னிடம் சொல்லவில்ல? நான் எப்போதும் அவர் சொற்படி நடக்கத் தயாராக இருக்கிறேன். ராம் சந்த்தரின் மீது எனக்கு எந்த மனச்சார்பும் இல்லை. (சிறிது இடைவெளி) முக்திபெற்ற ஒரு ஆன்மாவிடத்தில் கோபம், அன்பு, வெறுப்பு ஆகயவை எப்படி இன்றும் இருக்கின்றன? எனவே அவர்

(லாலாஜி சாகேப்) முக்தியடையவில்லை என்று பொருளாகிறது. உலகம் பற்றிய அத்தனை கவலைகளாலும் இன்னும் அவர் துன்பப்படும் போது அவருக்கு எப்படி முக்தி கிடைக்கும்? ராம் சந்த்தரின் இந்த உள்ளுணர்வுச் செய்திகள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. என்னுடைய ஆன்மீகநிலை நீக்கப்பட்டுவிட்டதாக ராம் சந்த்தர் எனக்கு எழுதியிருக்கிறார்! என்னுடைய உள்நிலைத் தன்மையில் எந்தக் குறைவும் ஏற்படவில்ல. அதற்கு மாறாக அது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்கிறது. ராம் சந்த்தருக்கு நான் இப்போது சவால் விடுகிறேன். அவருக்கு சக்தி இருந்தால் அவர் எனது ஆன்மீக நிலையை நீக்கட்டும்! போகட்டும், எப்படியிருந்தாலும், தனது சொந்த நலன் பற்றி அவருக்கு ஏதாவது சிந்தனை இருந்தால், அவருடைய சொந்த எண்ணங்களையும், உள்நிலைத் தன்மையையும் சரிசெய்து கொள்வதற்கு என்னைத் தேடிவரலாம்! (சிறிது இடைவெளி) வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் தன் ஆயுட்காலத்திலேயே ஏன் தனது ஆன்மீகப் பிரதிநிதியை, தலைமைப் பதவிக்கு அடுத்தவாரிசை நியமிக்கவில்லை? அது அவருடைய தவறு! அதற்காக அவர் இப்போது அவதிப்படட்டும்! என்னைப் பொறுத்தவரையில் அவரே எனக்கு இதுபற்றி விழிப்பைத் தரும்வரை நான் இதற்கு அடிபணியப்போவதில்லை. நான் முராத் (மாஸ்டரின் நோக்கங்களை நிறைவேற்ற விதிக்கப்பட்டவனாக) ஆக இருக்கிறேன்; எதைப் பற்றியும் எனக்கு அக்கறை இல்லை. நம்பத்தகாத அந்த ஒருவர் (லாலாஜி சாகேப்) தனது ஆயுட்காலத்தில் என்னிடம் என்ன கட்டளையிட்டாரோ அதைத்தான் நான் செய்கிறேன்! இப்போது அவருடைய மரணத்துக்குப் பிறகு, அதற்கு முரணான அறிவுரைக் குறிப்புக்கள் ஏன் அளிக்கப்படுகின்றன? (சிறிது இடைவெளி) அவர் இப்போது தானே கட்டளைகளைப் பிறப்பிப்பதுபோல, வணக்கத்திற்குரிய தனது மாஸ்டரும் தனக்கு உத்திரவுகள் கொடுப்பது வழக்கமாக இருந்தது என்பதை தன் ஆயுட்காலத்தில் லாலாஜி சாகேப் ஏன் ஒருபோதும் குறிப்பிடவில்லை? வணக்கத்திற்குரிய அவருடைய மாஸ்டரிடமிருந்து (ஹஸ்ரத் பூ அலி ஷா சலந்தர்) அவர் எப்போதும் உத்தரவுகள் கிடைக்கப் பெறுகிறவராக இருந்தார் என்றால், லாலாஜி சாகேப் ஏன் அதை எழுதிவைக்க ஏற்பாடு செய்யவில்லை? அவர்சொல்கிற விஷயங்களை சொல்லச்சொல்ல எழுதுவதற்கு அவருடைய ஆயுட்காலத்தில் யாருமே கிடைக்கவில்லை என்பது தவறு! இம்மாதிரி விஷயங்களை ஒப்புக்கொள்வதற்கு நான் தயாராக இல்லை! (சிறிது இடைவெளி) A1-இடம் லாலாஜி சாகேப் மிகவும் மரியாதையுடன் இருந்தார்; தன் ஆயுட்காலம் முழுவதும் எப்போதும் அவரிடம் தான் ஆலோசனை கேட்டார். ஒருமுறை உன்னிடம்,

A1 மென்மையான இதயம் உடைய மதிப்புக்குரிய பெரியவர் என்றும், இதன் காரணமாக என்னை அவரிடம் தனியே போகவேண்டாம்; தன்னுடன் சேர்ந்துதான் போகவேண்டும் என்றும் இது ஏனென்றால் என்னுடைய அசுத்தத் தன்மை A1 – க்கு சிரமத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால்தான் எனவும் லாலாஜி மகராஜ் கூறினார். இப்போது மரணத்திற்குப் பிறகு A1 தன்னுடைய பொறுப்பில் இருந்ததாகச் சொல்கிறார்!''

**''அவர் (S1) என்னுடன் நடத்திய உரையாடலின் மொத்த சாராம்சமும், அவருடைய செயல்பாடுகள் மற்றும் நடந்துகொள்ளும் போக்கு பற்றிய என் (M1) மதிப்பீடும், நான் புரிந்து கொண்டவாறு கீழே தரப்பட்டுள்ளது:''**

''மூன்று வருடங்களுக்கு முன்பு நான் (M1) அவருடைய (S1) இடத்தில் நடைபெற்ற பண்டாராவுக்கு (ஆண்டுவிழாவுக்கு) சென்றபோது அவருடைய ஆன்மீக உள்நிலை சற்று மேலானதாக இருந்தது. நான் அவரிடம், 'சகோதரா, உணர்ச்சிகள் சார்ந்த தீச்சுடரில் நீ புதைந்து கிடக்கிறாய்! நீ முன்னோக்கிச் செல்லவேண்டிய தேவை இருக்கிறது' என்று சொன்னேன். இப்போது அவரிடம் மேலான புனிதத்தன்மையும் இல்லை; அதன் சுவையும் இல்லை, அவருடைய பிராணாஹூதியில் ஆன்மீக போதையின் ஆனந்தம் கூட இல்லை, சற்று கூரியதன்மை, புகைகின்ற வெம்மை, ஸ்தூலத்தன்மை (கடினத்தன்மை) மற்றும் வறண்ட தன்மைதான் அனுபவத்திற்கு வந்தது! பிராணாஹூதி அளிக்கும்போது அவரே உணர்வில்லாமல் சாய்ந்தார். சில சமயங்களில் நீண்ட தியானத்தின்போது அவருடைய ஆன்மீகப் பிடிப்பு தளர்ந்து, அவரே குறட்டை விடத் துவங்குகிறார். அவரது சுவாசம் கனமாகிறது. அவருடைய பிராணாஹூதியைப் பெறுகிறவரைப் பற்றிய எண்ணத்தைக்கூட அவர் இழந்து விடுகிறார். தியானம் துவங்குவதற்கு முன்பாக C1 - இசையைக் கேட்டு ரசிப்பது போலவே, S1- உம் பிரார்த்தனைப் பாடல்ககளப் பாடுவதை அறிமுகப்படுத்துகிறார். இது அந்த கூட்டு தியானத்தில் பங்கேற்கிறவர்களை ஒருமுனைப்பட்ட கவனத்துடன் இருக்கச் செய்வதற்காகவே C1 போலவே S1 - ம் கூட தியானத்திற்கு ஆண்களையும், பெண்களையும் சேர்ந்து உட்கார அனுமதிக்கிறார். இதற்கு முன்பு பெண்களை, அவர் தனக்கு முன்னால் உட்கார வைப்பது வழக்கமாக இருந்தது. என் வேண்டுகோளுக்கிணங்க, இப்போது அவர் ஒரு திரைக்குப் பின்னால் உட்கார்ந்து சிட்டிங் கொடுக்கிறார். இந்த விஷயங்களின் மொத்தக் கருத்தும் சாராம்சமும் என்னவெனில்,

பிராணாஹூதி அளிப்பதை, அவரே தன்னை மறந்து தூங்கி விழுந்துகொண்டு, மற்றவர்களை தன் சங்கல்பத்தைப் பயன்படுத்தி உணர்வற்ற நிலைக்குக் கொண்டு செல்வது மட்டுமே என்று அவர் கருதுகிறார் என்பதேயாகும். S1 மற்றும் C1 ஆகிய இருவரிடமிருந்தும் பயிற்சி பெறுகிறவர்களின் இதயம் விழிப்படையச் செய்யப்படவில்லை. (இது சரீர மண்டலத்தில் உள்ள ஆன்மீகப் புள்ளிகளில் முதல் புள்ளியாகும். இது புனித நாமத்தை அல்லது மந்திர ஜபத்தை தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிற நிலை / தடையில்லாத கடவுள் நினைவுடன் இருக்கும்நிலை.) அவர்களில் பெரும்பாலோர் சிவப்பு மற்றும் வெள்ளை ஒளியைப் பார்ப்பதில் சந்தோஷமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ராதா சுவாமி என்பவரின் பயிற்சி முறையின் கீழ் யாராலும் உருவாக்கப்படாத சப்தம் (அனாஹத சப்தம்) பிரசாரம் செய்யப்படுகிறது. அவர்கள் (சிருஷ்டியின் துவக்கத்துக்கும் முடிவுக்கும் அப்பாலுள்ள) இடையறாத சப்தத்தை கவனித்துக் கேட்பதில் மனத்தை ஒருமுகப்படுத்துகிறார்கள்; மற்றவர்களையும் அம்மாதிரி செய்யும்படி உற்சாகப்படுத்துகிறார்கள்; அதாவது, தங்களையும், மற்றவர்களையும் சூட்சுமத் தன்மையிலிருந்து ஸ்தூலத்தன்மைக்கு (கடினத்தன்மைக்கு) இழுக்கிறார்கள். நமது பயிற்சி முறையின் கொள்கைக்கு முரண்பாடான விதத்தில் S1 முதலியவர்கள் தாங்களும் கீழே விழுவதோடு தங்களிடம் ஆன்மீகப் பயிற்சிக்கு வருகிறவர்களையும் கீழே விழச் செய்கிறார்கள். அதாவது தாழ்வு நிலை அடையச் செய்கிறார்கள். N2 என்று பெயருடைய தனது சகோதரரிடமிருந்து S1 இம்மாதிரி பாதிப்பு அடைந்திருக்கிறார். அந்த N2 என்பவர் ராதா சுவாமி சங்கத்துடன் தொடர்புடையவர். S1 தனது சீடர்களுக்கு ப்ரம்ம ரந்திரம் என்ற புள்ளியை (உச்சந்தலையில் நடுவில் உள்ள புள்ளி) ராதா சுவாமியின் வசிப்பிடம் என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். (ராதா சுவாமி சங்கம் என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆக்ராவில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஸ்தாபகர் ராதா சுவாமி மற்றும் அவருடைய மனைவியும் இதை நடத்தி வந்தார்கள். பரம்பொருளாகிய சத்திய நிலையின் ஆண், பெண் தத்துவங்களை இது அடிப்படையாகக் கொண்டிருந்தது.) உச்சநிலையில் விளங்கும் உண்மையான சப்தத்தை (ஸத்ஸப்தம்) S1 ஏராளமாகப் புகழ்ந்து பேசுகிறார். C1 காரணா, மகா காரணா என்ற நிலைகளைப் பற்றி விளக்கம் கூறி, தனது சீடர்களை பிராண யோகா, ஆனந்த யோகா, விஞ்ஞான யோகா எனப்படும் பல்வேறு யோக சாதனை முறைகள் பற்றியும் கேட்கச் செய்கிறார். இந்தச்

சொற்பொழிவின் போது, ஒரு பிரிசெப்டர் தன்னிடம் வருகின்ற மனிதரின் கடந்த காலப் பதிவுகளை உடனடியாகக் கண்டுபிடித்து விடுகிறார் என்று சொன்னார். மேலும் அப்படிக் கண்டறிவதற்கான செயல்நுட்பத்தை, தன் சீடர்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விசேஷமான மனிதர்களுக்கு, தனிமையில், ரகசியமாக அவர் (C1) தெரிவிப்பார் என்றும் கூறினார். ஒரு உண்மையான வழிகாட்டி, கண் சிமிட்டும் நேரத்திற்குள் சீடர்களுக்கு எதையும் செய்ய முடியும் என்று மறைமுகமாக தன்னையே அந்த சத்குரு என்று C1 குறிப்பிட்டுப் பேசினார்.

S1, C1 ஆகிய இரண்டுபேரில் C1 க்கு ஆன்மீகம் என்றால், தன்னையே சத்குருவாக பிரசாரம் செய்வதும், மற்றவர்களை தன்னையே இக்காலத்தின் வணக்கத்திற்குரிய பெரியவராக (மாஸ்டராக) பிரசாரம் செய்யும்படி செய்வதும், மற்றும் பணம் சம்பாதித்தல், சுகபோகங்கள் அனுபவித்தல், ஆடம்பரமாக வாழ்க்கை நடத்துதல், மற்றும் தேவைக்குத் தக்கவாறு தந்திர சாமாத்தியங்களுடன் தனது பலவீனங்களை மூடிமறைத்து விடுதல் ஆகியவைதான். அவருக்கு ஆன்மீகம் என்பது இதுதான்.

S1 – மாஸ்டர் மீதான அன்பின் கர்வத்தின் போதையில் இருக்கிறார். எந்தக் குறையும் இல்லாத பூரணமான துறவுநிலையில் இருப்பவர் என்று தன்னைப் பற்றி எண்ணியிருக்கிறார். C1, S1 ஆகிய இருவரில் யாருக்குமே இம்மாதிரி பயிற்சியின் முடிவில் சீடர்களுக்கு என்ன கிடைக்கும் என்பது பற்றித் தெரியவில்லை. இந்த மிஷனுக்கு (வணக்கத்திற்குரிய மாஸ்டரின் ஆன்மீக சகாக்களின் கூட்டத்திற்கு) என்ன நிலைமை ஏற்படப்போகிறதோ? என் மனதிற்கு (M1) த் தெரிந்த வரையில் வழக்கமான குரு என்ற பதவி மட்டும் இருக்குமேயன்றி வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உழைப்பும், இதைப் பற்றிய அவரது விருப்பம் மிகுந்த நோக்கங்களும் நிச்சயமாக மறைந்து போகும். கடவுள் நம்மீது இரக்கம் கொண்டு சகோத சகோதரிகள் அனைவரையும் சரியான பாதையில் கொண்டு வந்து சேர்ப்பதாக!''

''31-12-1945 அன்று காலை S1, S6 - ஐ அழைத்து தன் கட்டிலில் உட்காரச் சொல்லி, என்னை நேரடியாகப் பார்க்காமல், அவரைப் பார்த்துக் கொண்டே, அடிப்படையான கொள்கைகளிலேயே எனக்கும் அவருக்கும் வேறுபாடு இருப்பதால், இனி ஒற்றுமைக்கும், உறவுமுறைக்கும் சாத்தியம் இருக்காது என்று சொன்னார். இதன் காரணமாக ஒருவருடைய சத்சங்கத்தில் மற்றவர் (நான் நடத்தும் சத்சங்கம், மற்றும் அவருடைய சத்சங்கத்தில்) கலந்துகொள்ள வாய்ப்பில்லை என்றும் கூறினார்.

S6 - ஷாஜஹான்பூருக்குச் சென்று அந்த அனுபவத்தைப் பெற்று, அதை கவனித்துப் பார்த்து, பரிசோதனை செய்து பார்ப்பதில், இதை ஒருமுறை முயற்சிப்பதில் தவறில்லை என்று தன் கருத்தைக் கூறினார். S1 இதை ஒப்புக் கொள்ளவில்லை. எனக்குத் (M1)தெளிவாக ஞாபம் வராத வேறு ஏதோ ஒன்றும் சொன்னார். அது J என்ற இடத்தைச் சேர்ந்த K1 என்பவரோ அல்லது வேறு ஏதாவது மதிப்பிற்குரிய பெரியவரோ சான்றளித்தால் ராம் சந்த்தரை, தான் (S1) ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாக S1 குறிப்பிட்டதாக இருக்கலாம். அங்கு இன்னொரு சுவாரஸ்யமான விஷயம் நிகழ்ந்தது. கூட்டு தியானத்தை நடத்தும்படி சிலசமயம் S6 இடம் S1 கூறினார். இன்னொரு சமயம் K6 மற்றும் B2 இவர்களை நடத்தச் சொன்னார். சிலசமயங்களில் இந்த மூன்று பேரையும் தனியாகப் பிரித்து, KJ …….. என்ற இடத்தில் S6; KN என்ற இடத்தில் B2; S3 – ன் சகோதரர் மற்றும் G என்பவரை S3 - யின் வீட்டில் தனித்தனியே சத்சங்கம் நடத்தச் செய்தார். வேறு எங்கே இவை நடத்தப்பட்டன என்பதை நான் (M1) தெரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் செயல்படும் வழிகளைப் பார்த்தால் C மற்றும் S1 ஆகிய இருவரும் தங்கள் சங்கங்களில் அதிகபட்ச அளவுக்கு உறுப்பினர்களை சேர்ப்பதில் கவனமாக முயற்சித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இந்தப் பயிற்சியின் இறுதி முடிவு என்ன என்பது பற்றி அவர்களுக்கு எந்த அக்கறையும் இல்லை. S1 உடன் பேசிய உரையாடல்களில் அவருடைய பிடிவாதம் மற்றும் விடாப்பிடியான குணம் இவற்றுக்கு மேல், நியாயமான காரணத்தன்மை சிறிதும் இல்லை. அவருடைய கருத்தின்படி கடிதப்போக்குவரத்தும், எழுதப்பட்ட விஷயங்களும் பற்றி பரிசீலனை செய்வதே தவறு என்றால் இந்த விஷயங்களை தீவிரமாக எடுத்துக்கொண்டு, அதிலிருந்து நியாயமான முடிவுகளுக்கு வருவார் என்று கருதுவதைப் பற்றி என்ன சொல்வது! அவருடைய விளக்கத்தின்படி ஹடயோகம் என்பது புலன் உறுப்புக்களை கட்டாயப்படுத்தி திசை திருப்புவதற்கு ஒரு பெயராக உள்ளது. ராஜயோகம் என்பது புலன் உறுப்புக்களை நியாயமான விதத்தில் பயன்படுத்துவது. இது அவருடைய (S1) சிந்தனைப் போக்குக்கு ஒரு விளக்கமாக இருக்கிறது. A1- ன் சில கடிதங்களை நான் U1 – இடம் காட்டிய அவர் கவனமாகப் படித்தார். அதன்பிறகு S1- இடம், தன்னுடைய (U1) கருத்தின்படி S1 இந்த விஷயங்களை கவனமாக சிந்தித்துப் பார்க்கவேண்டும்; அதை அனுபவத்தில் உணரவேண்டும்; அதில் அவருக்கு திருப்தி ஏற்பட்டால்

அதில் நம்பிக்கை வைக்கவேண்டும் என்று சொன்னார். தனக்காக, குருஜி மகராஜின் உத்திரவுக்கு இணங்கி இப்போது புத்தமதத்தில் இணைந்து விட்டதாகவும், புத்தமதம் பற்றி ஒரு புத்தகம் எழுதிக்கொண்டு இருப்பதாகவும் U1 சொன்னார். ஒரு கனவில் வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களையும், புத்தபிரானையும் ஒன்றாகப் பார்த்ததாகவும், லாலாஜி அவரை (U1- ஐ) புத்தரிடம் ஒப்படைத்ததாகவும் கூறினார்.''

'' S6 - நிச்சயமாக நான் சொல்வதை கவனித்துக் கேட்கிறார். ஓரளவுக்கு அவர் நம்முடைய கருத்தில் நம்பிக்கை வைக்க விரும்புவதாகத் தோன்றுகிறது. ஆனால் S1 அவரை மிரட்டியதால், அவர் அதில் உறுதியில்லாமல் மனம் தளர்ந்து போய், முடிவெடுக்க முடியாமல் இருந்தார். புரிந்துகொள்ளும் தன்மையும் துணிவும் அவரிடம் போதாது என்றாலும், நேர்மை இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அவருக்கு ஓய்வு கிடைத்தால் வருவார் என்ற நிபந்தனையுடன், B - என்ற இடத்தில் என்னை சந்திக்க வருவதாக வாக்குறுதி அளித்தார். KJ என்ற இடத்தில் F1 வந்தார். S1 நடத்திய சத்சங்கத்தில் கலந்து கொண்டு தியானம் செய்தார்; உடனே போய்விட்டார். அவருடைய குணநலன், அவர் நடந்த கொள்ளும் விதத்தைப் பொறுத்தவரை, அவர் தன் மகளை B6 - ன் மகனுக்கு திருமணம் செய்து கொடுத்தார். கல்யாண வீட்டார் வந்து சேர்ந்த உடனேயே அவர்களுடன் தகராறு செய்யத் துவங்கிவிட்டார். இது ஒரு புதுவிதமான அணுகு முறையாக இருந்தது. இல்லையென்றால் பொதுவாக பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டாரிடம் பணிவாகவும், அனுசரணையாகவும் நடந்துகொண்டு, அவர்கள் பக்கத்திலிருந்து எந்தப் பிரச்னையும், தகராறும் வராமல் தவிர்ப்பதற்கே முயற்சி செய்வார்கள். ஆயினும் F1 – தானாகவே, பிள்ளை வீட்டாரை குறை சொல்லவும், திட்டுவதற்கும் துவங்கிவிட்டார். இது அங்கிருந்தவர்களுக்கு புரியாததாகவும், திகைப்பாகவும் இருந்தது. தனது ஆன்மீக நிலையை அவர் இந்தவிதமாக சித்தரித்துக் காட்டினார். அப்போது S6 மற்றும் B11 முதலானவர்கள் அவரை சமாதானப்படுத்த எவ்வளவோ முயன்றார்கள்; ஆனால் முடியவில்லை. B11 இதுவரையில் தன்னை யாருடைய சீடராகவும் நியமித்துக் கொள்ளவில்லை. S1 - நடத்தும் கூட்டங்களில் அடிக்கடி அவர் கலந்து கொள்வார். என்னிடமும் பல ஆண்டுகளாக தியானத்திற்கு வந்து கொண்டிருக்கிறார். சிறிதுகாலமாக நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகள் மற்றும் இங்கிருக்கும் சூழ்நிலைகள் பற்றி அவர் மிகவும் மனவருத்தம்

அடைந்திருக்கிறார். இதனால் அவர் திகைப்படைந்து என்ன செய்வதென்று அறியாமல் குழம்பிப் போயிருக்கிறார். அவர் தனக்குள் மங்கலாக எரியும் நெருப்பின் புகையைத் தான் உணர்கிறார். ஆனால் பாவம், அவர் இதுபற்றி வருந்தி அழுகிறார்; உணர்வற்றவராக உருவாகிக் கொண்டிருக்கிறார். தன் இந்த உள்நிலையை S1 இடம் 30-12-1945 அன்று இரவு அவர் விவரித்தார். அதற்கு S1 நேரடியாகவே, அவருக்கு எங்கே திருப்தியாக இருக்கிறதோ அங்கே, அதாவது B11 இடம் போய்விடுமாறு சொன்னார். NP ……. என்ற கிராமத்தைச் சேர்ந்த M….. என்ற தபாலாபீசில் KJ என்ற தாலூக்காவில் இருக்கின்ற H5 என்பவர் வணக்கத்திற்குரிய மாஸ்டரின் ஒரு சீடர். C1 ஏற்பாடு செய்கின்ற ஆண்டு விழாவில் எப்போதும் அவர் கலந்து கொண்டிருந்தார். இந்த வருடம் H5, S1 உடன் KJ என்ற இடத்துக்கு வந்து அந்த ஆன்மீகக் கூட்டத்தில் சேர்ந்துகொண்டார். பிறகு அவருடனேயே Kn என்ற இடத்திற்குச் சென்றார். KJ என்ற இடத்தில் அவருக்கு பிராணாஹூதி அளிக்கும் ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் தன் தலையில் வலுவான அதிர்வுகளை உணர்ந்தார். இம்மாதிரி ஆன்மீக உள்நிலையை இதற்கு முன்பு ஒருபோதும் அவர் உணர்ந்தது இல்லை என்று சொன்னார். அதன்பிறகு என்னிடம் அவர் வருவதற்கு சந்தர்ப்பமே கொடுக்காமல், எல்லாச் சமயங்களிலும் S1 தானே அவருக்குப் பிராணாஹூதி கொடுத்தார்.’’

‘‘3-1-1946 அன்று B…… என்ற இடத்திற்கு, S6 வருவார் என்று காத்திருந்தேன். நேற்று இரவு மற்றும் இன்று காலையிலும் வரவில்லை என்பதால் மீண்டும் நான் KJ என்ற இடத்திற்கு காலை 11 மணிக்கு ரயிலில் புறப்பட்டேன். அங்கே சென்ற பிறகு S6 ஐ சந்தித்து, லாலாஜி சொல்ல எழுதிய செய்திகளை மற்றும் கடிதங்கள் முதலியவற்றை படிக்கச் செய்தேன். அதற்கு 6 மணிநேரம் ஆனது. S1 - க்கு என்மீது மிகுந்த மரியாதையும் நன்மதிப்பும் இருப்பதாகவும், நான் சொல்வதை அவர் ஒப்புக்கொள்ளத் தயாராக இருந்ததாகவும், ஆனால் ராம் சந்த்தரின் மீது அவருக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை என்றும் அவர் தெரிவித்தார். மேலும் ஷாஜஹான்பூரிலிருந்து, நாம் S1 - க்கு எழுதிய கடிதங்கள் கடுமையாக இருந்ததாகவும், இதனால் S1 - க்கு ஆத்திரம் உண்டாயிற்று என்றும் S6 என்னிடம் சொன்னார். இதன் காரணமாக ஷாஜஹான்பூர் ஸ்ரீ ராம் சந்த்தர் சம்பந்தமாக எதற்கும் அவர் இணக்கமாக இருக்க முடியாது என்று கூறினார். வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களும், அவருடைய

பிரதிநிதி மற்றும் பதவிக்கு வாரிசுமாக இருப்பவரும் சேர்ந்து S1- ன் மனக்காட்சியில் வந்து, S1 க்கு லாலாஜி தனது பிரதிநிதியை அறிமுகப்படுத்தி இன்னார் தான் தனது பிரதிநிதி அவரிடம் நேரடியாகச் சொல்லி, அவரும் அதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று சொல்லமுடியுமா என்றும் S6 என்னிம் கேட்டார். என்னால் முடிந்தவரை நான் அவரிடம் நிறையப் பேசினேன். B11 மற்றும் பிறர் அங்கே காணப்படவில்லை. இங்கு வந்த உடனேயே அவர்கள் Pb என்ற இடத்திற்குப் புறப்பட்டுவிட்டார்கள்.''

''இதன் முடிவாக நான் (M1) பணிவோடு சொல்வது என்னவெனில், நான் என்னால் முடிந்த அளவு சிறப்பாகப் புரிந்து கொண்டபடி, C1 மற்றும் S1 ஆகிய இருவருடைய சத்சங்கத்திலும், தியான சமயத்தில் பெரும்பாலோர் தூங்கிவிடுகிறார்கள். இந்தத் தூக்க நிலையை அதீத உணர்வுறு நிலை (சமாதிநிலை) என்று நினைத்துக்கொள்கிறார்கள். அங்கு நடைபெறும் விஷயங்கள் நாளுக்கு நாள் மோசம் என்பதிலிருந்து மிகவும் மோசம் என்ற நிலைக்கு நலிவடைந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தொற்றுநோய் போன்ற தீமை நூற்றுக்கணக்கான எண்ணிக்கையில் பரவிக் கொண்டிருக்கிறது. எவ்வளவு விரைவில் முடியுமோ அத்தனை விரைவில் இதை அழிக்கவில்லையென்றால், இந்த நோய் குணப்படுத்த முடியாத அளவுக்கு மாறிவிடும் ஆபத்து இருக்கிறது. நாளுக்கு நாள் பெரும் எண்ணிக்கையில் மக்கள் இதனால் கவரப்படுகிறார்கள். C1 மற்றும் S1 ஆகிய இருவரும் முழு உற்சாகத்துடன் மிகவும் தீவிரத்துடன் தங்கள் சுயநலம் தேடும் மதக்கோட்பாடுகளை பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். தங்களைப் பின்பற்றுகிறவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் அவர்கள் மிகவும் முனைப்பாக இருக்கிறார்கள். இம்மாதிரி தவறான மனப்பான்மைகளால் மக்களுக்கு நேரக்கூடிய அபாயகரமான விளைவுகளைப் பற்றியோ மற்றும் இந்த மனிதர்கள் இம்மாதிரி பயிற்சிக்குத் தகுதியானவர்களா? என்பது பற்றியோ அவர்களுக்கு எந்த அக்கறையும் இல்லை. அவர்களுடைய ஒரே அக்கறை மிகுந்த சிந்தனை எண்ணிக்கையை அதிகரிப்பது; மற்றும் தங்கள் சொந்த மேலாதிக்க நிலையை மக்களிடத்தில் பதியச் செய்வது ஆகிய இதில்தான் உள்ளது. ஆயினும் வணக்கத்திற்குரிய மாஸ்டர் தனது ஆயுட்காலத்தில் பிறப்பித்த கட்டளையைத்தான் அவருடைய சொற்படியே இப்போது மக்களிடம் பரவச் செய்வதாக சொல்லிக்கொள்கிறார்கள். இப்படி ஒரு

விசித்திரமான குழப்பம் அங்கு நிலவுகிறது. பாடல்கள் மற்றும் இசையின் மூலமாகவும், சங்கல்ப சக்தியைப் பயன்படுத்துவதன் மூலமாகவும் மக்களை சிறிதுநேரம் தூங்க வைப்பது அல்லது உணர்வற்றுப் போகச் செய்வது ஆகியவை மட்டுமே ஆன்மீகம் என்று கருதப்படுகிறது மற்றும் புரிந்து கொள்ளப்படுகிறது. அறியாத மக்களிடம் த்ரிஷ்ட யோகம், ஞான யோகம், விஞ்ஞான யோகம், ப்ராண யோகம், ஆனந்த யோகம், காரண யோகம் மற்றும் மகாகாரண யோகம் என்பது போன்ற புதிய கருத்துக்கள் மற்றும் பாதைகள் பற்றிய விளக்கங்களைக் கூறி தவறாக வழிநடத்த சொற்பொழிவுகள், பேருரைகள் நிகழ்த்தி இதன் மூலமாக இப்போது இருக்கும் உலகநிலையில் தங்களையே மாஸ்டராக முன்னிலைப் படுத்தும் செயல் நடக்கிறது. இந்த விதமாக அவர்கள் வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பயிற்சி முறையை அழித்துக்கொண்டிருப்பது மட்டுமன்றி, அப்படி நேராமல் கடவுள் தவிர்ப்பாராக – வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பெயரும் அவமதிப்புக்கு உள்ளாகக் கூடும் என்ற தீவிர அச்சமும் தோன்றுகிறது. வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பெயரால் அவரது சீடர்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்ட அறிவிப்பு சிறிதும் பயனின்றிப் போயிருக்கிறது. அதற்கு மாறாக இவர்கள் தங்கள் சீடர்களுடன் சேர்ந்து, நாளுக்கு நாள் அதை எதிர்த்துப் பேசவும் துவங்கியிருக்கிறார்கள். எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் இந்த நிலைமைகளை எதிர்த்து சரிப்படுத்தவதற்கு எதுவும் செய்யாமல் போனால் அதன்பிறகு என்ன மாதிரி அபாயகரமான விளைவுகள் ஏற்படுமோ, அது கடவுளுக்குத் தான் தெரியும். நான் புரிந்து கொண்ட வரையில் கீழ்க்கண்ட தீர்வுகள் இதற்கு இருக்கமுடியும்:

1) C1 அல்லது S1- க்கு தேவையான அளவுக்கு, அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படச் செய்வதற்கு உள்முகக் காட்சி அளிக்கப்பட வேண்டும்; **அல்லது**

2) சகஜ மார்க்கத்துக்கு அவர்களை வலுக்கட்டாயமாக இழுக்க வேண்டும்; **அல்லது**

3) இந்த மாதிரி மாற்றுமுறைகளை அவர்களின் மீது முயற்சித்துப் பார்க்க அவர்கள் தகுதியற்றவர்கள் என்று கருதப்பட்டால், எனக்குத் தோன்றுகிற எண்ணத்தினபடி C1, S1 ஆகிய இருவரையும் ஆன்மீகப் பயிற்சி அளிப்பதற்கு இயலாதவர்களாகச் செய்வது; **அல்லது** பாதையை சுத்தப்படுத்துவதற்கு அங்குகிடக்கும் குப்பைகளை அகற்றுவதுபோல

நீக்கிவிடுவது ஆகிய இவற்றைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த மனிதர்களிடமிருந்து எந்த விளக்கமும் தேவையில்லை என்று கருதும்பட்சத்தில், வணக்கத்திற்குரிய மாஸ்டரின் ஆன்மீக சகோதரர்களின் சமுதாயத்தைச் சீர்ப்படுத்துவது, சிரமமானது மட்டுமல்ல, முடியாத காரியமும் ஆகிவிடும் என்பதில் நாம் முற்றிலும் திடநம்பிக்கையோடு இருக்கிறேன்.''

M1 சமர்ப்பித்த இந்த அறிக்கையைத் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''இந்த விஷயங்கள் அனைத்தையும் முழு கவனமுடன் சிந்தித்துப் பார்த்தேன்.''

### வணக்கத்திற்குரிய ஆதி குரு (ஹஸ்மத் பூ அலி ஷா கலந்தர்):

''பரம்பொருளின் ஜீவிதத்தன்மையிலிருந்து நான் புறப்பட்டு வந்திருக்கிறேன். வணக்கத்திற்குரிய உன் மாஸ்டரும் என்னுடன் இருக்கிறார். இந்தச் சூழ்நிலைகள் அனைத்தும் கவனிக்கப்பட்டன. நமது இந்த மார்ககத்தில் அக்கறையில்லாத மனிதருக்கு அழிவைத்தவிர வேறு எந்த நடவடிக்கையும் இருக்க முடியாது.''

''நான் மூக்கணாங்கயிறுகளை இறுக்கியிருக்கிறேன். இதுவே கடவுளின் கட்டளை.'' ''மிகப்பெரிதினும் பெரியவர்களுக்கே இந்த ஞானம் வரவில்லை. அப்படியிருக்க S1 பற்றி என்ன சொல்ல இருக்கிறது! மிக விசேஷமான சிலருக்குத்தான் இது தெரியும். அவர்கள் ஹிந்து மதத்தின் வணக்கத்திற்குரிய பெரியோர்கள் ஆவர். கடைசியில் சத்தியத்தை அனைவருக்கும் ஒளிபெறச்செய்யும் ஒரு மலர்ச்சிக்கு இது வரப்போகிறது. குறைந்த எண்ணிக்கையில் இருந்தாலும், நல்ல அறிவுத்திறன் மிக்க பேச்சுத்திறமை உடையவர்கள் நிறைய வேலை செய்ய முடியும். உண்மையான அனுபவத்தை சிந்திப்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் S1- க்கு திறமை இல்லை. அவருக்கு (ராம் சந்த்தரைப் பற்றி) ஒப்பிட்டுப் பார்க்கவும், சான்றளிக்கவும் திறமை உடைய யாரும் கிடைக்க முடியாது. இந்த மனிதர்களைப் பற்றிய சிந்தனையை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, உங்களோடு சிறிதளவும் சம்பந்தமில்லாதவர்களாக நினைத்துக்கொள். சாத்தானின் குணம் உடைய மனிதர்களின் எண்ணிக்கை இந்நாட்களில் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. ஒளியுடன் சேர்ந்து இருளும் நிச்சயமாக

வருகிறது. அவர்களுடைய ஆன்மீக நிலையை பறித்துக்கொண்டது பற்றிய விஷயத்தில், அது அவர்களுக்கு சவால்விடும் விதத்தில் செய்த வேலை! அதற்கு அவர்களுடைய பதில், அவர்களின் கண்களை திரைகளால் மூடிக் கொண்டதுதான். இந்த விஷயத்தை என்னிடம் விட்டுவிடுங்கள். இந்த முரட்டுத்தனமான உரையாடலிலிருந்து நீ (M1) முடிவு செய்த விஷயம் என்ன? (M1- இன் பதிலைக் கேட்ட பிறகு) உன் அனுபவம் சரியானது. அங்கே புனிதமான தன்மை ஆவியாகிப் போய்விட்டது; கடினத்தன்மைதான் இருக்கிறது. மனிதனுக்கு சக்தி இருப்பதாகச் சொல்லப்படுகிறது; இந்த சக்தியை ஒருமனிதர் அவருடைய விருப்பத்தின் அளவுக்கு மேம்படுத்த முடியும். ஆனால் சக்தி என்பது ஆன்மீகமல்ல. ஆன்மீகத்தில் மிக முக்கியமான மையமான விஷயம் என்னவெனில், ஆன்மீகம் சம்மந்தப்பட்ட விதிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் அனுசரிக்கவில்லையென்றால் அதில் முன்னேற்றம் அடைய முடியாது. இதை அவர்களுடைய நிலையாக எண்ணிக்கொள்.''

''அங்கே ஆன்மீகமே இல்லை என்னும்போது, அங்கு என்னவிதமான உள்முக அனுபவம் இருக்கும்; என்னவிதமான ஒளி இருக்கும்! எதுவும் இருக்காது. அவர்களது உள்முக அனுபவத்துக்கு உதாரணமாக, தன் குருமகராஜ் தன்னை புத்தரிடம் ஒப்படைத்ததாகச் சொல்லும் U1- இன் கனவைச் சொல்லலாம்! சரி. நீங்கள் உங்கள் வேலையைக் கவனியுங்கள். அவர்களுடன் இருக்கும் தொடர்பை விட்டுவிடுங்கள். உங்களைத் தேடி யார் வருகிறார்களோ அது போதுமானது.''

''அந்த மனிதர்களின் சீடர்கள் உண்மை என்று நம்பியது, வெறும் கானல் நீர் போன்றது என்பதற்கான சாட்சிகளை காலம் கொடுக்கும். ஒளியைக் கொடுக்கும் விளக்கு இதுவாக மட்டுமே (இந்த மிஷனாக, ராம் சந்த்தரின் தெய்வீகநிலையாக) இருக்கும். அது நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இதுவே கடவுளின் கட்டளையாகும். இங்கிருந்து மட்டுமே ஒளி கிடைக்கும் என்ற காலம் வரும். மற்றவர்கள் அனைவரும் ஒளிமங்கிப் போவார்கள். இந்தக் காலத்தைக் கடந்து போகவிடுங்கள். பெரியோர்களுடைய கதைகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். மகான்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும், ரிஷிகளுக்கும் அவர்களின் ஆயுட்காலத்தில் என்ன வெற்றி கிடைக்க முடிந்தது என்பதை நீங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதன்பிறகு அவர்களுடைய போதனைகள் எவ்வளவு பிரபலமடைந்தன என்பதை அறியுங்கள். வணக்கத்திற்குரிய இறைதூதர்களின் வாழ்க்கைபற்றியும்

நீங்கள் படிக்க வேண்டும். காலங்காலமாக இதுவே வழக்கமாக இருந்து வருகிறது!''

**மேலிருந்து இறங்கிய 'எலும்புகளின் குவியல்கள்' என்ற வார்த்தைகள் பற்றி வணக்கத்திற்குரிய ஆதி குருநாதர் தொடர்ந்து கூறியது:**

''அது சரியாகவே கூறப்பட்டுள்ளது. நீ (ராம் சந்த்தர்) ஏராளமான முட்களையும், புதர்களையும் நீக்கி சுத்திகரிக்க வேண்டியிருக்கிறது. இயற்கையே இந்த உள்நிலைத்தன்மையை (பதவியை) உனக்கு அளித்திருக்கிறது. அதற்கு ஏதாவது காரணம் நிச்சயமாக இருக்கத்தான் வேண்டும். உண்மையில் இதன் கருத்து என்னவெனில், பாதையில் குறுக்கீடுகள், தடைகள் தோன்றாதிருக்கும் வரையில், இயற்கையின் வேலையில் அதை சரிப்படுத்திச் செம்மையாக்குவது என்கிற விஷயமே தோன்றாது என்பதேயாகும். வணக்கத்திற்குரிய உன் மாஸ்டரின் ஆயுட்காலத்தில் நீ அவரது பிரதிநிதியாக அறிவிக்கப்பட்டிருந்தால் அப்போதும் கூட இம்மாதிரி தடைகள் வந்திருக்கும். இவற்றை நீக்குவதற்காக அன்றி இயற்கையின் பணி முன்வராது. (சிறிது இடைவெளி) M1 இடம் அவர் தன்வேலை மிக நன்றாகச் செய்திருப்பதாகச் சொல். எனக்கு அதில் மிகவும் மகிழ்ச்சி. உன்னுடைய பாதையில் யாராவது உன் பின்னே வருகிறார்களா? இல்லையா? என்பது பற்றி சிறிதும் பொருட்படுத்தாதே. நீ உன் வேலையைச் செய்திருக்கிறாய். அதற்குரிய சந்தர்ப்பம் வரும்போது, அதற்கு சாதகமாக சாட்சியத்தை அளிப்பதற்குத் தேவையான விஷயம் கிடைக்கிறது. (சிறிது இடைவெளி) S1- உடன் பயிற்சி செய்பவர்களின் கூட்டம் இல்லாதபடி செய்யும் வேலையை R2 இப்போது செய்யட்டும். அவர்கள் அனைவரும் அவரை விட்டுக் கலைந்து போய் விடுவார்கள். இந்த விஷயங்கள் மிகவும் சாதாரணமானவையாக இருந்தால், ஒரே ஒரு மனிதரிடம் இவ்வளவு சக்தியும் திறனும் திணிக்கப்படுவது ஏன் என்பதை கொஞ்சம் யோசித்துப்பார். இந்த விஷயங்களையெல்லாம் பற்றிக் கொள்வதற்குத் தேயையான திறன் எல்லோருக்கும் இருந்தால், ஏன் உலகம் இப்படி ஒரு நின்றுபோன நிலைக்கு வரவேண்டும்? ஏனெனில் மக்களுக்கு இங்கே ஆன்மீகம் சிறிதும் இல்லாமல் போயிருக்கிறது; அது அப்படித்தான் நடந்திருக்க வேண்டும்! எப்போதெல்லாம் ஒரு புதிய பயிற்சி முறை உருவாகி வருகிறதோ, அப்போது இவை நடைமுறை சார்ந்த விளைவை அடைகின்றன! என் இதயத்தின் திருப்திக்காக எனது பிரியமான முன்ஷி புட்டுலால் (லாலாஜி சாகேப் அவர்களை அவருடைய குருநாதர் இந்தச்

செல்லப்பெயரால் அழைப்பது வழக்கம்) இந்த விஷயங்களைப் பற்றி என்னிடமிருந்து உறுதிப்படுத்தப்படுவதை நாடுகின்ற விசேஷ சூழ்நிலைகளில் பயன்படுத்திக் கொள்வதற்காக இந்த துணை விதியை நான் உருவாக்கினேன்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''வணக்கத்திற்குரிய என் மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா) மிகவும் அன்பு கூர்ந்து அவருடன் பேசுவதற்கு என்னை அனுமதித்தார்; என் சுமை குறைந்து போயிற்று. என் அன்புச் சகோதரா! கவலையை, இது பற்றிய சிந்தனையை விட்டுவிடு; கையில் உள்ள வேலையில் கவனம் செலுத்து. அன்புள்ள M1, இப்போது உன்னிடம் நமது உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்த நீ முயற்சி எதுவும் செய்யவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. அவர்களும் (நீ சந்தித்த C1, S1 போன்றவர்களும்) அப்படிச் சொல்ல முடியாது. நீ உண்மையான முயற்சி செய்தாய் என்பதற்கு சான்று இருக்கிறது.''

''இப்போது நீயும், பிரியமான ராம் சந்த்தரும் என் வழியில் நான் செயல்படுவதை தடுக்கமாட்டீர்கள். இதைக் குறித்துக்கொள். S1- ஐ என் சீடர்என்ற நிலையிலிருந்து விடுவித்துவிட்டேன் (சொல்படி கேளாது, கீழ்ப்படியாத மகனாக இருப்பதால் என் வாரிசு நிலையிலிருந்து நீக்கி விட்டேன்). இது சம்பந்தமான என் எண்ணத்தை நான் ஏற்கெனவே அறிவித்துவிட்டேன். அது ஏதாவது ஒரு கடிதத்தில் இருக்கலாம். இரண்டு மனிதர்கள் விஷயத்தில் (C1 மற்றும் S1க்கு) இதை நான் செய்ய வேண்டியிருந்தது. நான் செய்தது சரியானதே. இப்படிச் செய்யப்பட வேண்டும் என்ற உள்ளுணர்வின் ஞானம், சிந்தனை எனக்கு இருந்தது. ஆனால் பிரியமான ராம் சந்த்தரின் எதிர்பார்ப்புக்கள் (அவர்களைத் திருத்திப் பார்க்கலாம் என்ற நம்பிக்கைகள்) என்னைத் தடை செய்திருந்தன. இதுவரையில் நானும் பொறுமையைப் பின்பற்றினேன். (சிறிது இடைவெளி) இன்று நான் கூறி எழுதிய விஷயங்கள் அனைத்தும் M1- ன் பயணக்குறிப்பு விவரங்களுடன் சேர்த்து எழுதி வைக்கப்பட வேண்டும். இந்தக்கையேடு அவர் (M1) பெயரால் வெளியிடப்படும்.''

8-1-1946

**சுவாமி விவேகானந்தா:**

''நேற்று இரவு நடைபெற்று முடிந்த உரையாடல்களைக் கேட்டு நான் மிகவும் ஏமாற்றம் அடைந்தேன். நீ ஆன்மீக உள்நிலையில் மிகுந்த

உயரத்துக்கு மேலேறியிருக்கிறாய். இது மிகவும் அரிதானது மற்றும் மனித குலத்திற்கு எட்டாத மேம்பட்ட நிலையாகும். அது கடவுள் தன்மையுடைய வேலைக்குத் தான் பொருந்துமேயன்றி இப்போதைய நிலைமைக்குப் பொருந்தாது. உன் எதிராளிகளிடமும் கனிவாக நடந்து கொள்கிற உன் பழக்கத்தை நீ விடவில்லை. இதனால் அவரவரும் தங்கள் சொந்த மேலாதிக்கத்திற்காகவே ஓடி இதை சாதகமாக எடுத்துக் கொள்கிறார்கள். இப்போதைய நிலையில் நீ முற்றிலும் எதற்குத் தகுதியானவனாக இல்லையோ, அந்த வேலைக்குத் தேவைப்படும் விதத்தில் உன்னைக் கீழே இழுப்பதற்கு உன் மாஸ்டரிடமிருந்து நான் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. உன்னுடைய இப்போதைய நிலை, தெய்வீகமான வேலைக்கு மற்றவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குத்தான் தகுதியானது. இது சத்திய யுகத்தின் காலத்திற்குத்தான் மிகவும் பொருத்தமானது. நீ உன் வேலையை சரியாகத் திட்டமிடாமல் செய்கிறாய். உனது உள்நிலை கோருகின்ற குறைந்தபட்சத் தொல்லை என்ற கருத்து, அதில் ஏதாவது ஒருவிதத்தில் இருக்கிறது. இது பரம்பொருளின் ஜீவத்தன்மையுடன் தொடர்பை உடைய ஆழ்ந்து வேரூன்றிய கருத்து, அதற்கப்பால் நாம் போகமுடியாது. நான் அதன்படி தான் நடக்கவேண்டும். உன்னுடைய வழியில் அதுதான் கஷ்டமாக இரக்கிறது. நேற்று இரவு பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் நீ பிரார்த்தனை செய்தாய்; அவர் அதில் மனமிறங்கினார். ஆனால் உனது அன்பின் இணைப்பு, எல்லோருக்கும் நல்ல அதிர்ஷ்டத்தையே விரும்புகின்ற நிலையில் மையத்துடன் முற்றிலும் இணைந்திருப்பதால் இதற்குத் தேவையானதை அவரால் செய்ய முடியவில்லை என்பதைக் கண்டார்.''

''அந்த இணைப்பு நிறுத்தி வைக்கப்பட்டாலன்றி வேலை நடைபெறுவது சிரமமாகும். உண்மையில் அதுதான் கட்டளை. (சிறிது இடைவெளி) நீ உன்னுடைய சக்திகளையும், தெய்வீகமான பணிகளையும் சரியாக வெளிப்படுத்தவில்லை என்று நான் சொன்னால் நீ அதைக் குற்றமாக எடுத்துக்கொண்டுவிடலாம். உன் கடமையைச் செய்துவிட்டு, அதன் பலனை கடவுளிடம் விட்டுவிடு. உனது சங்கல்ப சக்தி வீணாகப் போய்விடும் என்று எப்படி நீங்களெல்லாம் நினைக்கிறீர்கள் என்று நான் வியப்படைகிறேன். இதன் விளைவு விரைவிலோ, தாமதமாகவோ வந்துவிடும். உங்கள் வேலைகளுக்கு உடனே பலன் வேண்டுமென எதிர்பார்ப்பது உங்கள் எல்லோருக்கும் ஒரு பொதுவான பழக்கமாகியிருக்கிறது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை விட உன்னை மேலானவனாக நீ சொல்லிக்கொள்ள முடியாது. அவர் என்ன செய்ய நினைத்தாரோ, அதைச் செய்வதற்கு அவர்

எவ்வளவு காலம் எடுத்துக் கொண்டார்! ஆன்மீக சக்தியும் அதனோடு கூடவே தெய்வீக சக்தியும் அவர் பெற்றிருந்தார். ஆனால், உனக்கு ஆன்மீக சக்தி மட்டுமே இருக்கிறது. வேலை என்பது வேலைக்காக மட்டுமே என்று கருதி செய்யப்பட்டால், அப்போது ஒருவருக்கு ஏமாற்றம் உண்டாகக் கூடாது. உன் மாஸ்டரை அல்லது என்னை நீ நம்புகிறாய் என்றால், உனக்கு சக்தி இருக்கிறது என்பதில் நம்பிக்கைகொள்; அது கண்களுக்குப் புலப்படாது என்பது உண்மைதான். இதை சோதித்துப் பார்க்க, நான் உனக்கு ஒரு வழிமுறையைச் சொல்கிறேன். அந்த சக்தியை வெளியே சூழ்நிலையில் வெளிப்படச் செய்து, அதை விரிவுபடுத்து. அப்போது வெளியே எங்கும் நிரம்பியுள்ள அதே சக்தி உன்னிடத்தில் இருப்பதை நீ காணமுடியும். (சிறிது இடைவெளி) ஏமாற்றம் என்பது விஷம் போன்றது. அதுவே நமது வேலையில் ஒரு துளையை அல்லது கசிவை ஏற்படுத்துகின்ற ஒரு சக்தியாக இருக்கிறது. (சிறிது இடைவெளி) C1-ன் இடத்திலுள்ள E.......என்ற இடத்திற்கு M1 சென்ற போது அவருடைய குருவே அவரது வலதுகரமாக இருந்தார்; யாரையாவது நிலைகுலையச் செய்வதற்கு அவர் தன் சங்கல்பத்தைப் பயன்படுத்தியிருந்தால் அவர் (M1) அங்கே நிறைய விளைவை (பெருந்தீமையை, முழு நாசத்தை) உண்டாக்கியிருப்பார். யாராவது ஒரு விசேஷக் கடமையில் ஈடுபட்டிருந்தால். அவர் ஏதோ ஒரு மிகப்பெரிய சக்தியினால் சூழப்பட்டிருக்கிறார். (அதாவது அவரை மிகப்பெரிய சக்தி சூழ்ந்திருக்கிறது) என்று எப்போதுமே நினைவில் வைத்திரு. நீ தென்னிந்தியப் பயணம் சென்ற நாட்களை ஞாபகப்படுத்திக் கொள். (சிறிது இடைவெளி) M1 தனது வேலை பாதிக்கப்படும் என்று நினைக்கிறாரா? அவர் அப்படி நினைக்கக்கூடாது என்று நான் நினைக்கிறேன். சக்தியானது சிறிய ஒரு பாதையிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. மின் உற்பத்தி நிலையத்திலிருக்கும் சிறிய சக்கரம்போல அது இருக்கிறது. அது குழந்தைப் பருவத்தில்தான் – ஆரம்பநிலையில் தான் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. காலப்போக்கில் அது வளரட்டும். பிறகு அது முழு வளர்ச்சியடைந்த நிலையில், பொதுமக்களின் பார்வையில் தெளிவாகத் தெரிகின்ற நிலையில் இருக்கும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உண்மையில் அவருடைய ஆயுட்காலத்திற்குப் பிறகுதான் பெரும்புகழ் அடைந்தார்; அவர் வாழ்ந்த காலத்தில், சில நண்பர்களைத் தவிர மற்ற அனைவரும் அவருக்கு எதிரிகளாகவே இருந்தார்கள். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பொறுமையாகக் காத்திருக்கையில் சிசுபாலன் அவர்மீது குற்றச்சாட்டுகளைக் கூறிக்கொண்டே

இருந்தது பற்றி M1 குறிப்பிட்ட உதாரணம், உனது இப்போதைய நிலைக்கு மிகவும் பொருந்துகிறது. இந்தக் காரணத்திற்காகவே நமது பிரபு பதின்மூன்று ஆண்டுகள் காத்திருந்தார். *(நீ {ராம் சந்த்தர்} 'பிறந்த போது', என்பது குருமகராஜ் லாலாஜி சாகேப் அவர்களின் ஆன்மீகப் பிரதிநிதியாக மற்றும் தலைமைப் பதவிக்கு வாரிசாக ஷாஜஹான்பூர் ஸ்ரீ ராம் சந்த்தர் அவர்கள், 1944ஆம் ஆண்டு ஏப்ரல் மாதக் கடைசியில் அல்லது மே மாத ஆரம்பத்தில் நியமிக்கப்பட்டதைக் குறிக்கிறது. இது M1 இன் கையால் எழுதப்பட்ட நாட்குறிப்பில் உள்ளது.)*

*(சிசுபாலன் என்பவரைப் பற்றிய குறிப்பு, மகாபாரதத்தில் வரும் ஒரு சம்பவத்தில் இடம் பெற்றுள்ளது. அதாவது பாண்டவர்களால் செய்யப்பட்ட ராஜ சூய யாகத்தில், அந்த மிகப்பெரிய விசேஷ வைபவத்தில், அங்கு வந்திருந்த பெரியோர்கள் அனைவருடைய ஒருமித்த கருத்தின்படி, பகவான் ஸ்ரீ கிருஷ்ணனே மிகவும் கௌரவத்துக்கு உரியதான முதல்மரியாதையைப் பெறத் தகுதியுள்ளவர் என்று முனிவர்கள் தீர்மானித்தார்கள். ஆனால், கிருஷ்ணர் மீது பொறாமையும், பகைமையும் உடைய சிசுபாலன் என்ற மன்னன் கிருஷ்ணரின் மீது சிறிதும் நியாயமற்ற அவதூறுகளைக் கூறி பழி சுமத்தி இழிவாகப் பேசினான். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் சிசுபாலனுடைய நூறு அவதூறுகளை நான் பொறுத்துக் கொள்வேன்; அதன்பிறகு அவதூறு செய்தால் மன்னிக்கமாட்டேன் என்று கொடுத்திருந்த வாக்குறுதியின்படி அவன் நூறு அவதூறுகளைக் கூறும் வரை பொறுமையாக இருந்தார். அதன் பிறகும் சிசுபாலனை எச்சரிக்கை செய்தார். அதன் பிறகும் அவன் இழிவாகப் பேசியதால் அவனுடைய தலையை வெட்டி விட்டார் – தொகுப்பாசிரியர்)*

### சுவாமி விவேகானந்தா தொடர்ந்து கூறியது:

''இது மிகவும் புதுமையாக இருக்கிறது. உங்களுக்கு மிகச்சிறந்த வழிகாட்டி மற்றும் குரு கிடைத்திருக்கும்போது, மேலும் ஒரு மிகப்பெரிய பொறுப்பு இருக்கும்போது எப்படி நீங்கள் யாவரும் உற்சாகம் குறைந்து இருக்கிறீர்கள்! என் ஆயுட்காலத்தில் நான் ஒரு சிங்கம் போல எப்போதும் அலைந்து கொண்டிருந்தேன். இதன் காரணம் எனக்கு மனைவி மற்றும் குழந்தைகள் இல்லை. எனவே குடும்பம் பற்றிய பொறுப்பு இருக்கவில்லை என்பது என்னவோ உண்மைதான். இல்லற வாழ்வில் இருப்பவர்களாகிய நீங்கள் குடும்பத்தில் எத்தனையோ சில்லரை வேலைகள் உடையவர்களாக இருக்கிறீர்கள். இவற்றையெல்லாம் செய்துகொண்டு ஆன்மீக

காரணத்துக்காக உங்கள் நேரத்தை பலனளிக்கும் விதத்தில் திறமையாக ஈடுபடுத்துவீர்களானால், என்னைவிட மேலான பாராட்டுக்கள் உங்களுக்குக் கிடைக்கும். பகவான் ஸ்ரீ ராமபிரானை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். அவர் தனது ஆயுட்காலம் முழுவதிலும் எதிரிகளால் சூழப்பட்டிருந்தார். அவர் அயோத்தியின் அரசனாக இருந்தார். தனது வாழ்வின் பிற்பகுதியில் தன் மனைவியை இழந்து துன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தார். அவர் உயர்ந்த ராஜபுத்திர (வீரர்களின்) குலத்தில் பிறந்தார். அவருடைய முன்னோர் எப்போதும் உயர்வான நன்மதிப்பும், மரியாதையும் பெற்றிருந்தார்கள். பொதுமக்களின் பார்வையில் அவரை, ஸ்ரீராமனை – தங்கள் தலைவனாக எண்ணி வணங்குவதற்கு இது ஒன்றே போதுமானதாக இருந்தது. அவருடைய வாழ்க்கை அவர் தனது வாழ்நாளில் தன் தந்தைக்கு, சகோதரர்களுக்கு, மைத்துனர்களுக்கு, தன் குடிமக்களுக்கு, தனது எதிரிகளுக்கும் கூட தன் கடமைகளைச் செய்வதாகவே இருந்தது என்பது உண்மைதான். தலைவனை வழிபடுவது என்பது இந்தியாவின் ஒரு பிரச்னையாக இருக்கிறது. அதை அனைவரும் விரும்புகிறார்கள். ஸ்ரீராமன் தன் காலத்தில் ஒரு கதாநாயகனாக, தலைவனாக இருந்தார். அதுமட்டுமல்ல. அவர் ஒரு கடவுள் அவதாரம் என்ற பதவியும் நியாயமாகவே அவருக்கு அளிக்கப்பட்டது. ஒரு தெய்வ அவதாரத்துக்கு என்ன விதமான சக்தி அளிக்கப்படுகிறதோ அந்த சக்தி அவருக்கு உண்மையாகவே அளிக்கப்பட்டிருந்ததால் அவர் அவதாரம் என்று கருதப்பட்டார். இது அவரைப் பற்றிய சுருக்கமான கருத்து. இப்போது நான் சொல்ல வந்த விஷயத்துக்கு வருகிறேன்: அவருடைய ஆயுட்காலத்திலும் அதற்குப் பிறகும் அவருக்கு மிகப்பெரிய மரியாதை கொடுக்கப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர் இவ்வுலகிலிருந்து சென்ற நிண்டகாலத்துக்குப் பிறகுதான் அவதாரங்களில் ஒருவர் என்று அவருக்கு உரிய சரியான இடம் கிடைத்தது. நான் ஏன் இத்தனையும் சொல்கிறேன்? ஒரு புதிய விஷயம் நடைமுறைக்கு வரும்போது அது முழுமை பெறுவதற்கு காலம் தேவைப்படுகிறது. அசாதாரணமான விஷயம் ஏதாவது நடந்தாலொழிய இயற்கையின் வேலை மெதுவாகத்தான் நடக்கும். சக்தி வேகமாகப் பாய்ந்து உள்ளே வருவதற்காக நீங்கள் ஒரு சுழலை உருவாக்கும்போது தான் இயற்கையில் அந்த உந்துதல் வருகிறது. அந்தச் சுழலை நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்களா? ‘‘எங்களுக்கு அதற்கான சக்தி இல்லை’’, என்று குறைசொல்வதற்கு மேல் நீங்கள் எதுவும் செய்யவில்லை என்று நினைக்கிறேன். இது சரியான வழியா? இல்லை, உங்கள் மூளையில் ஒரு கசிவு இருக்கும்போது நீங்கள் அப்படி அம்மாதிரி ஒரு சுழலை

உண்டாக்க முடியும்? இந்த விஷயங்கள் எனக்கும் மற்றும் அனைவருக்கும் வருத்தத்தை அளிக்கின்றன. உங்கள் சக்தியைப் பயன்படுத்துங்கள். இதை உங்கள் எல்லோருக்கும் சொல்கிறேன். சக்தி என்பது ஒருவருடைய கையில் மற்றவர் எடுத்துக்கொடுக்கக் கூடிய ஒரு கல்லோ, கத்தியோ அல்ல. அது நுட்பமாக உள்ளே மறைந்திருக்கின்ற ஒன்று. அது, அப்படித்தான் வேலை செய்கிறது. இந்த விஷயங்களை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். நேரத்தை வீணாக்காதீர்கள். உன்னுடைய சங்கத்தில் நிறையப்பேர் எப்போதும் ஏதாவது ஒன்றைப் பற்றி குறைசொல்லிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறேன். உண்மையில் தங்கள் மாஸ்டர்களின் மீது அவர்களுக்கு மரியாதையோ, நம்பிக்கையோ இல்லை. அவர்களுடைய மாஸ்டர்கள் பலவீனமாக இருக்கிறார்கள் என்பதையும் அது காட்டுகிறது. இது இப்படி இருக்கும்போது அவர்களுக்கு உண்மையாகவோ பொருந்துகின்ற ஒன்றுக்குள் அவர்கள் எப்படி வளர்ச்சியடைய முடியும்? நான் உண்மையைச் சொன்னால், அவர்களுக்கு என்ன கொடுக்கப்பட்டுள்ளதோ, அதைத் தக்கவைத்துக்கொள்ளும் திறன் யாருக்குமே இல்லை என்பேன். சுலபமாக அடையப்பட்டுள்ள இந்த விஷயத்தில் அவர்களுக்கு நன்மதிப்பு இல்லை. என் மாஸ்டர் (ராம கிருஷ்ண பரமஹம்சர்) கூறிய உதாரணத்தை இங்கே மேற்கோளாகத் தருகிறேன். நீங்களெல்லாம் பெற்றுக் கொண்டிருப்பதுபோல, நான் அவரிடமிருந்து பெற்ற எதையும் சுலபமாகப் பெறவில்லை. நான் பெருமளவு தியாகம் செய்ய வேண்டியிருந்தது. இந்த உலகம் எனக்கு பனிமணலின் ஒரு துளியாக அன்றி வேறு எதுவாகவும் இல்லை (அதாவது இவ்வுலகம் ஒரு அற்ப விஷயமாக இருந்தது). உண்மையிலேயே தகுதியுடைய உங்களுடைய மாஸ்டரைத் தவிர உங்களில் வேறு யாராவது ஏதாவது தியாகம் செய்திருக்கிறீர்களா? உங்களிடையே ஏன் இம்மாதிரி தீயகுணங்கள் நிலவுகின்றன? உங்கள் குருவைப்போல சேவைசெய்யும் உணர்வு உங்களுக்கு இல்லை. உயர்ந்தவனாக இருக்கிறேன் என்ற எண்ணம் உங்கள் குருவின் மூளையில் ஒருபோதும் வந்ததில்லை; உயர்ந்தவனாக இருப்பதன் உண்மையான அறிகுறி அதுதான். உங்களில் எத்தனைபேர் அம்மாதிரி இருக்கிறீர்கள்? மிகப்பெருமையுடைய அந்த மாஸ்டரின் பெயரால், ஆன்மீகம் கொடுக்கப்பட்டிருக்கிறது; இழிவு செய்யப்பட்டுள்ளது. எல்லோருக்கும் தான் பெரியவனாக, உயர்ந்தவனாக இருப்பதாக ஒரு எண்ணம் ஏதோ ஒருவிதத்தில் இருக்கிறது. இது மிகவும் விஷத்தன்மை உடையதாகும்.’’

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘இந்த ஒரு மென்மைநிலைக்கு (இளகும் தன்மைக்கு) யாருமே வரவும் இல்லை; இதன் பொருளைப் புரிந்து கொள்ளவும் இல்லை.’’

**சுவாமி விவேகானந்தா தொடர்ந்து கூறியது:**

‘‘ஒருவருடைய மனதில் இருந்து உயர்ந்தவன் என் தன்மை நீக்கப்பட்டுள்ளபோது, அதாவது ஆன்மீக வளர்ச்சியடைந்தவர்களின் மனங்களில் இருந்து நான் உயர்ந்தவன் என்ற கருத்த நீக்கப்பட்டுவிட்டால், அதன் பிறகு கடமை மட்டும் எஞ்சியிருக்கும். (சிறிது இடைவெளி) அவன் முக்தியை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறானா? என்பதை மதிப்பீடு செய்து முடிவெடுப்பதற்கு உனக்குத் தெரியுமா? அவர் விண்ணுலகில் ஒரு சிம்மாசனத்தில் வீற்றிருக்கவில்லை. அவருக்கு உன்னைப்போல் காதுகளும், கண்களும் இல்லை; கைகளும் கால்களும் இல்லை; ஆனால் அவருடைய வேலை இன்னும் எளிமையான வழியில் சரியாக நடந்து கொண்டு இருக்கிறது. மேலே சொன்ன (கை, கால், காது போன்றவை) அனைத்து விஷயங்களும் உனக்கு இருக்கின்றன. அப்படியிருக்க, கடைசியில் எல்லோருக்காகவும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு நீ எப்படிப் போகமுடியும்? நீ கடவுளைப்போல இரு. அதாவது நான் அவரைப் பற்றி மேலே விவரித்ததுபோல இரு. எனவே, கைகள், கால்கள், கண்கள், காதுகள் ஆகிய எல்லாம் பெற்றிருக்கும் நீ எளிமையான வடிவத்தில் உன்னைச் சூழ்ந்திருக்கின்ற அந்த நிலைக்குள் செல். தன் ஆயுட்காலத்தில் ஒருவர் இந்தநிலையை அடையப்பெற்றால் அவர் தன்னை முக்தியடையச்செய்துகொள்கிறார். எங்கேயாவது தன் ஆயுட்காலத்தில் ஒருமனிதரிடம் இந்த நிலை இருப்பதைக் கண்டால், அம்மனிதர் தன்னை முக்தியடையச் செய்து கொண்டிருக்கிறார் என்று எண்ணிக்கொள். மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தவம் செய்தது இதை அடைவதற்காகவே ஆகும். அது எவ்வளவு சிரமமாக இருந்திருக்கிறது? இப்போதும் சிரமமானதாகவே இருக்கிறது. முக்தியைப் பற்றி நீ பேசினால், நகைச்சுவையாகப் பேசுகிறாய் என்று நினைக்கிறேன். உலக வாழ்வில், பௌதீக உடலில் இருக்கும்போது முக்தியடைவது மிகவும் கஷ்டமானது. அதை உயிர்வாழும்போதே அடைவதற்கு ஒருவன் விரும்பினால் மிகப்பெரிய விடுதலைக்கு அதுவே துவக்கம் ஆகும். கனமான தன்மை நீக்கப்படவேண்டும். செயல்பாடுகள் மந்தமாக்கப்பட வேண்டும். வாழ்க்கை எளிமையான முறையில் இருக்கவேண்டும். தவறான விதத்திலான பற்று நீங்கவேண்டும். இதை உன் குழுவிடமிருந்து அப்படியே

பின்பற்றி நடந்துகொள். இப்போது மனிதர்களை சீர்தூக்கிப் பார்த்து, தங்களை விடுதலை (முக்தி அடையும்படி) செய்துகொள்ளப்போகிறவர்கள் யார்? என்பதைப் பார். சிலரைத்தான் நீ காண்பாய்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''அன்புள்ள M1, முக்தியடைதல் என்ற இந்த விஷயம் நமது மார்க்கத்தில் மிகவும் சுலபமானததக மாறியிருக்கிறது. கடைசியில் குரு ஒரு உந்துதல் கொடுப்பார். உடனே கப்பல் படை கரைசேர்ந்து விடும். எனவே தேவைப்படுகிற ஒரே விஷயம் ஒரு குருவை அடைந்துவிடுவதுதான். அதன்பிறகு என்னை (அதாவது சீடனை) முக்கியடையச் செய்வது குருவுடைய சுய அக்கறையில்தான், என்னால் (சீடனால்) இல்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். உன்னுடைய சகோதரர் கூட்டம் பெரியதாக வளர்ந்தால், அவர்களிடம் இந்தமாதிரி (மேற்சொன்னதுபோல எல்லாம் குருவின் பொறுப்புதான்) என்ற எண்ணம் வேரூன்றிவிட்டால், அப்படி நேராமல் கடவுள் தவிர்ப்பாராக! – இதுவும் மெய்ஞ்ஞானமில்லாத முஸ்லிம் அல்லது கிறிஸ்தவ மதத்து மக்களைப்போல, ஹஸ்ரத் முகம்மது சாஹிப், அல்லது ஏசு கிறிஸ்து தங்களுக்காக பாவமன்னிப்புக்கும், முக்தி அடைவதற்கும் சிபாரிசு செய்வார்கள். அவர்களை நம்புகிறவர்களாகிய தாங்கள் தங்கள் பங்குக்கு கல்மா அல்லது ஞானஸ்நான உரைகளை ஜெபம் செய்தால் போதும் என்று நினைப்பது போன்ற நிலைக்கு வந்துவிடும். அன்புள்ள சகோதரா, இந்த விஷயம் இந்த அளவுக்கு சுபலமானதல்ல. தன் ராஜ்ஜியங்களைத் துறந்துவிட்டு, இன்பங்களுக்கும், சுகபோகங்களுக்கும் விடை கொடுத்துவிட்டு காடுகளில் மக்கள் எதற்காகத் தேடி அலைந்தார்கள்? இந்த முக்தியை அடைவதற்காகவே. ஆயினும், குருவினுடைய மேன்மை மற்றும் தலைமை இதனால்தான் நிலைநிறுத்தப்படவேண்டும் என்று கருதப்படுகிறது என்பதில் சந்தேகமில்லை. என் ஆயுட்காலத்தில் நான் என்ன செய்யவில்லையோ, அதை இப்போது செய்து கொண்டிருக்கிறேன். இதை என்னுடைய வேலை என்றே எடுத்துக்கொள். பலமுறை சொல்லிப் பயனற்றுப் போகும் அளவுக்கு இந்த ரகசியங்களை நான் வெளிப்படுத்தியிருக்கிறேன்; இதை இனிமேலும் நான் செய்வேன். யாரும் இதைப் புரிந்து கொள்ள முடியாது. இது ஒருவிதத்தில் புதுமையானது. இந்த ஒழுங்குமுறை அந்த மாதிரியாக இருக்கிறது. பொதுவாக மக்களின் மனங்கள் இதைப்புரிந்து கொள்ளும் திறமை உடையதாக இருக்கவில்லை. ஒன்றைச் செய்ததாகச் சொல்வது மற்றும் உண்மையாகவே அதைச்செய்வது இந்த இரண்டிற்கும் இடையே மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது. இது

மிகவும் பின்னால் (கடைசியில்) உண்மையான விதத்தில் பழுக்கின்ற (முதிர்ச்சியடைகின்ற) நிலை. உண்மையான அர்த்தத்தில் நம்பிக்கை (பற்றுறுதி, விசுவாசம்) என்பது என்னவாக இருக்கிறது என்பதை நான் சொல்கிறேன். தன்னை முற்றிலுமாக இழந்துவிட்டு, பரம்பொருளின் ஜீவத்தன்மையில் (பரமாத்மாவில்) பற்று வைத்து, அது ஒருபோதும் துண்டிக்கப்படமுடியாத விதத்தில் நிலைபெற்றுள்ள தன்மையாகும். உண்மையான விதத்தில் இந்த உள்நிலை நிலைநிறுத்தப்பட்டுவிட்டால், முக்திநிலை கட்டாயமாகவும், தவிர்க்க முடியாமலும் கிடைக்கும். இந்த உள்நிலையின் கீழே, குறைபாடு என்ற அளவுக்கு, குறைவான நன்மையே கிடைக்கிறது.''

## 9-1-1946

### சுவாமி விவேகானந்தா:

''நேற்று இரவும், காலையிலும் சொல்லப்பட்ட விஷயங்கள் ஞாபகத்தில் நிறுத்திவைத்துக் கொள்ளப்படவேண்டும். பொறுப்புள்ள தலைமையான பதவிகளில் இருக்கின்ற உங்களால் மாஸ்டரின் வேலை மிகவும் பாதிக்கப்படுவதை நான் கண்டறிந்தேன்.''

''உங்கள் சத்சங்கத்தின் இன்றைய நிலைமை வணக்கத்திற்குரிய பிரபுவுக்கு (லாலாஜி அவர்களுக்கு) துன்பம் தருகின்ற கதையாக இருக்கிறது. இதில் ஒரு பெரும்பகுதியை அழித்தாலன்றி இயற்கையின் வேலை சுமுகமாக நடைபெறாது. வருங்காலத்தில் இப்படி ஒருநேரம் வராது என்று மீண்டும் மீண்டும் சொல்கிறேன். பிரியமுள்ள ராம் சந்த்தர் நான் உனக்கு உறுதியாகச் சொல்கிறேன்; மக்கள் புண்ணியம், பாவம் என்று சொல்லுகின்ற அனைத்து விஷயங்களிலிருந்தும் நீ விடுபட்டிருக்கிறாய். நீ என்ன செய்கிறாயோ அது இயற்கையின் கோரிக்கை! அழிவுப்பணி விரைவுபடுத்தப்பட வேண்டும் என்பதை நோக்கி இயற்கை உன்னை வழிநடத்திச் செல்கிறது. இன்று நீ பார்க்கின்ற உலகம் வருங்காலத்தில் இப்படி இருக்காது. இந்த விஷயத்தில் நாங்கள் உனக்கு உதவி மட்டும்தான் செய்ய முடியும்; ஆனால் இந்த வேலை முழுவதும் உன் கைகளில் தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்குமேல் இருக்கின்ற வேலையைப் பற்றி நீ கற்பனை செய்யமுடியாது. அதுவும் முழுவதும் உன் கைகளில்தான் இருக்கிறது. இந்த உலகில் நீ காண்பதுபோல மற்ற உலகங்களில் உனக்காகக் காத்திருக்கின்ற வேலையை நீ இன்னும் செய்ய ஆரம்பிக்கவில்லை. மற்ற உலகங்களிலும் தொற்றுநோய்கள்போலப் பரவும் தீமைப் பண்புகள் உளளன; ஆனால் அவை வேறுவிதமானவை.''

‘‘மற்ற உலகங்களில் இருக்கும் முனிவர்கள், சுத்தமான ஆன்மீகத்தின் சக்தியை தங்களிடத்தில் உண்டாக்குவதற்கு, தங்களிடையே ஒரு மனிதர் வேண்டுமென்று பரம்பொருளிடம் தினமும் பிரார்த்தனை செய்கிறார்கள். இந்த வேலையை யார் செய்வார்கள்? உன்னைத்தவிர வேறு யாருமில்லை! அதே நோக்கத்திற்காகத்தான் இயற்கை உன்னை வளர்த்திருக்கின்றது. இங்கேயும் எல்லோரும் உன்னைத்தான் நாடி, உன்னிடமிருந்து அதேமாதிரி நன்மையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். விழிப்புடன் தொடர்ந்து பணிசெய்.’’

**இரவு 7 மணிக்கு அவர் மேலும் தொடர்ந்து கூறியது:**

‘‘உனது நிகழ்ச்சிக்கு முந்திய நாளில் நீ இருக்கிறாய். விடியற்காலையில் எழுந்திருக்கும்படி உனக்கு நினைவுபடுத்துகிறேன். எங்களில் ஒருவர் உன்னை எழுப்புவோம்.’’

10-1-1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘மனிதனுக்கு புலன் உணர்வுகளுக்கு ஆட்பட்டிருக்கும் தன்மையை இறைவன்தான் அளித்திருக்கிறார் என்னும்போது, தன்னுடைய செயல்களுக்கு ஏன் மனிதனைப் பொறுப்பாளியாக்க வேண்டும்? எனினும் மனிதனுக்கு அறிவுத்திறனும் கூட அளிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக அவன் சுதந்திரமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதில் சூட்சுமமான கருத்தாக இருப்பது என்ன? நற்செயல்கள் சார்ந்த அல்லது கடவுள் பக்தியுடைய அறிவுத்திறன் என்று சொல்லப்படுவது என்ன? இது என்னவொரு கஷ்டமான தலைப்பு! நான் இதற்கு ஒரு தீர்வைச் சொன்னால், அது ஒருவரை தவறாக திசைதிருப்பி விடலாம். இதை ஒருவர் பயிற்சி செய்ய எடுத்துக்கொண்டால், அவர் ஒரு மூடனாக வளர்ந்து விடலாம். இதைப் பற்றி நன்கு கவனித்துப்பார்த்து, அதன் விடையைப் பெறுவாயாக!

**சுவாமி விவேகானந்தா:**

‘‘இந்த நிலை பொதுவான ஒரு விஷயமல்ல. (சிறிது இடைவெளி) நமது பிரபு வேறு எதையோ பேசியிருக்கிறார்; அது உண்மையில் மிகவும் சூட்சுமமானது. அதில் நுழைகிறவர் யார்? தன்னை இழந்தவர்தான். அதற்கு மேலானது எதுவும் இல்லை; அதற்கு அப்பாலும் எதுவுமில்லை. இறப்பதற்காகவே இந்த உலகிற்கு வருகிறோம் என்பதை நன்கு அறிந்தும், ஏன் மக்கள் இறப்பை அஞ்சி அழுகிறார்கள்? எதிர்மறையான அறிவு இது!

ஏன் அப்படி இருக்கிறது? உலக விவகாரங்களில் அளவுக்கு மீறிய பற்று தான் காரணம்!''

''மகிழ்ச்சியின் நிலை மூடத்தன்மையாக இருக்கிறது. அது இல்லையென்றால் நன்மை இருக்க முடியாது. மூடத்தன்மைதான் உண்மையான நிலை. அதுவே ஞானம்! மூடத்தன்மை என்ற நிலையில் நுழைந்திருப்பதாக யாராவது சொல்லிக்கொள்ள முடியுமா? அப்படி இருப்பதற்கு விரும்புகிறவர்கள் யார்? உன் சத்சங்கத்தில் இதற்கு ஏதாவது உதாரணம் இருக்கிறதா? ''

### M1 சட்டென்று துடுக்காகக் கேட்டார்:

''ஐயா! அப்படி மாறும்படி யாரிடமாவது கேட்கப்பட்டதா? (சொல்லப்பட்டதா?)''

### பதில்:

''அப்படி மாறும்படி நான் உனக்கு இப்போது சொல்கிறேன்.''

### சுவாமி விவேகானந்தா தொடர்ந்து கூறியது:

''மனத்தின் களைப்பு என்பது இயற்கையை மிக உயர்ந்தவிதத்தில் பின்பற்றி அப்படியே செய்வதாகும் அல்லது மனத்தின் களைப்பு என்பது இயற்கையின் மிக உயர்ந்த நகல் ஆகும். குறைபாடு என்பது பலவீனம். செல்வம் தங்கமாகும்.''

''செல்வங்களை விட்டுவிடு! தூக்கம் அது முழுவதையும் எடுத்துச்செல்கிறது! கனவு அதை மீண்டும் கைப்பற்றுகிறது! மீண்டும் கைப்பற்றுவது வீணானது! விழிப்படைதலே உண்மையான (அல்லது வெறும்) கனவு! அதன்பிறகு என்ன? ஒன்றுமில்லை! பூஜ்யம்! கோளம்!''

''முதுமை என்பது முடிவு! குழந்தைப் பருவம் என்பது அன்பு! அன்பு ஆரம்பிக்கும் போது குழந்தைப் பருவத்து அன்பின் நிலையில் இருப்பதாக உன்னை எண்ணிக்கொள். நீ முதிர்ச்சி அடையும் போது, வாழ்க்கையின் முடிவு அங்கே இருக்கிறது. ஏராளமான செல்வம் என்பது இளம் வயது! ஒரு நகரின் தலைமைப் பாதிரியார் இழப்பவராவார்; போப்பாண்டவர் பெரியமனிதர்: மரணம் துக்கமானது. கடவுளின் அன்பு என்பது மரணம்! பிறப்பு என்பது வரவேற்பு! எந்த வரவேற்பின் இணைப்பு கடவுளை நோக்கியது! மடத்தனமான அறிவுத்திறன் (விவேகம்) என்பதும் விவேகமான மூடத்தனமும் இரண்டுமே எதிர்மறையானவை!''

11-1-1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஒரு கேள்வியைக் கேட்டார்:**

''சரி. ஒரு பிரதிநிதி மற்றும் தலைமைப் பதவிக்கு அடுத்த வாரிசை நியமிப்பதற்கான தேவை என்ன? இயற்கை என்ன இல்லாமல் போய்விட்டதா?''

12-1-1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''உங்களை நான் இந்த உலகிலிருந்து ஒதுங்கி வாழும்படி சொல்லவில்லை; ஆனால் நீங்கள் எந்த வேலையில் இருக்க வேண்டியிருந்தாலும், கடவுளுடன் சேர்ந்து வாழுங்கள் என்றுதான் சொல்கிறேன். (இது புகழ் பெற்ற ஒரு பாரசீக மொழி ஈரடிச் செய்யுள்) யாராவது அம்மாதிரி (கடவுளுடன் சேர்ந்து வாழும்) ஒரு நிலைமை தனக்குள் வளர்த்துக் கொண்டிருந்தால், அவர் அல்லது அப்பெண்மணி பிரார்த்தனை என்ற அந்த நிலையிலேயே நிரந்தரமாக இருக்கிறார் என்று பொருளாகும். இப்படி பிரார்த்தனை நிலையிலேய நிலைத்திருப்பதன் கருத்து அவர் தனது மாஸ்டரை தன் எஜமானராகவே கருதி, தன்னை அவருக்கு தனிப்பட்ட அடிமை என்று எண்ணும் தன்மை அவரிடம் நிலை பெற்றுள்ளது என்பதேயாகும். இவ்வாறாக தன் மாஸ்டருக்கு அடிமையாக இருக்கின்ற நிலை உறுதிப்படுகிறது. இந்த நிலையை எல்லோரும் அடைய முடியுமா? முடியும். ஆனால் இதில் ஏராளமான அளவு பழக்கத்திற்குப் பிறகு. இந்த நிலையை அடைந்திருப்பவர்தான் பிரார்த்தனை என்ற உணர்வில் இருக்கிறார். அவர் அல்லது அப்பெண்மணி தனது மாஸ்டருக்கு எதுவாயினும் தனது மாஸ்டருக்கு பணிவோடு சமர்ப்பிக்க உரிமை பெற்றவராக இருக்கிறார். பிரார்த்தனை செய்யும்போது அனைவருமே இதே மாதிரி மனப்பான்மைக்குத்தான் வரவேண்டும். அப்போதுதான் பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படும். (பலன்தரும்) தன் சொந்த எல்லைகளுக்குள் அவர்மீதான அன்பில் உறுதியாக வேரூன்றிய பிறகு, மாஸ்டருடைய எல்லைக்குள் கொண்டுவரப்பட்டுள்ள அன்பின் உறவுமுறை இது. ஒருமுறை மாஸ்டருடன் தொடர்பு (இணைப்பு) பெற்ற பிறகு, எந்த ஒரு முயற்சியாலும் அதை சுலபமாக அறுத்துவிடமுடியாமல் இருக்கின்ற கயிறு இந்த அன்பே ஆகும். நாம் சென்றடைய வேண்டிய இடம் எங்கோ இருக்கிறது; இது எல்லோருக்கும் தெரியும்; ஆனால் நமது நினைவு (அது பற்றிய எண்ணம்) அதை அடைவதை சுலபமாக்குகிறது. நேசத்துக்குரியவர் பற்றிய நினைவு அந்தக் காதலரை தனக்கு அருகே கொண்டு வருகிறது.

இந்த உறவுமுறையின் எல்லைகளுக்குள் வளர்க்கப்பட்டுள்ள அன்பின் விகிதாச்சாரப்படி (விகிதத்தின்படி) இந்தத் திசையில் முன்னேற்றம் உண்டாகிறது. இந்த உறவுமுறையை (கடவுளுடன் அல்லது மாஸ்டருடன் தொடர்பை) நம்மோடு கொண்டு வந்திருக்கிறோம். இதை வளரச்செய்வது நம் கடமையாகவே இருக்கிறது. நமது அன்புக்குரியவரின் அருகில் நாம் இருப்பதை நாம் எப்போதும் காணும்படியாக அந்த அளவுக்கு இது வளர்க்கப்பட வேண்டும் என்று நீங்கள் சொல்லலாம். இது பக்தர்களுக்குச் சொந்தமான பிரார்த்தனையின் நிலையாக இருக்கிறது. அது அன்பு மற்றும் பக்தியின் மூலமாக மட்டுமே வலிமையைப் பெறுகிறது. பரமாத்மாவை – பரம்பொருளின் ஜீவத்தன்மையைச் சென்றடைவதற்கான ஏணியாக இது இருக்கிறது. அந்த உச்சநிலைக்கு நம்மைக்கொண்டு செல்வதற்கு இம்மாதிரி எத்தனை ஏணிகளை ஒன்றோடொன்று இணைக்க வேண்டியிருக்குமோ, அது யாருக்குத் தெரியும்! நாம் சென்றடைய வேண்டிய அனைத்து குறிக்கோள்களும் (ஆன்மீக முன்னேற்ற நிலைகளும்) இதற்குள் மட்டுமே இருக்கின்றன. பிரார்த்தனைக்கு என்று எந்த ஒரு குறிப்பிட்ட நேரமும் நிர்ணயிக்கப்படவில்லை. மேலே விவரிக்கப்பட்டபடி, அந்த மனநாட்டம் எப்போதெல்லாம் இருக்கிறதோ அப்போது பிரார்த்தனை செய்யத் துவங்கவேண்டும். அந்த மனநாட்டம் தானாக வரவில்லையென்றால், அதை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். பிரார்த்தனை எப்போதும் மாஸ்டரிடம் மட்டுமே அதாவது உண்மையாகவே மாஸ்டராக, மாஸ்டர் என்று சொல்லப்படுவதற்குத் தகுதி உடையவராக இருக்கும் மாஸ்டரிமே செய்யவேண்டும். தனது மிக மேன்மையான மாஸ்டரிடம், சில விசேஷ சந்தர்ப்பங்களைத் தவிர மற்ற சமயங்களில், உலகியல் விஷயங்கள் சம்பந்தமாக பிரார்த்தனை செய்வது மூடத்தனமாகும் மற்றும் ஞான முதிர்ச்சி அற்ற விஷயமாகும். ஆயினும், மாஸ்டராலேயே கட்டளையிடப்பட்ட விஷயத்துக்காக பிரார்த்தனை செய்வது சரியானதே. இது மிக மேலான மனித நாகரிகப் பண்பின் கீழ் வருகிறது: மற்றும் நாம் அவரை நம் இதயத்தின் மையத்திலிருந்து மாஸ்டராக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நம்மை அவருடைய ஆதரவில் ஒப்படைத்திருக்கிறோம் என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.''

''மற்றவர்களுடைய நன்மைக்காக எந்தவிதமான பிரார்த்தனை முறையை பின்பற்ற வேண்டும் என்ற கேள்வி இப்போது வருகிறது. யார் இதனால் பலன்பெற வேண்டுமோ அவர்களும், நாம் பிரார்த்தனை செய்யும் அந்த நேரத்தில் தன்னிடம் எந்தநிலை உருவாக்கப்பட்டிருக்கிறதோ

அதேநிலைக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்பதே இதன் பதில். இந்தநிலையை எப்படி அடைவது? நாம் அனைவரும் பணிவான, தாழ்மையான வேலையாட்கள் (அடிமைகள்) மற்றும் வெறும் பிச்சைக்காரர்கள்; மிக மேலான அதிகாரியின் (உயர்ந்த தெய்வீகப் பிரசன்னம்) சபையில் நமது பணிவான சொந்தநிலையுடன் அவரை நம்பிச் சார்ந்து இருப்பவர்களே என்பதை அந்த பலன் பெறுகிறவர்களையும் உணரச்செய்ய வேண்டும். தனது மாஸ்டரின் முன்னால் தனக்குச் சொந்தமான அனைத்தையும் சரணாகதி அளித்துவிட வேண்டும். மாஸ்டருடைய சித்தத்தின் அலைக்கு தன்னைக் கீழ்ப்படிந்தவனாகச் செய்துகொள்ளவேண்டும் அல்லது வேறு வார்த்தைகளில் சொன்னால் தன்னுடையதாகிய அனைத்தையும் தனது மாஸ்டருக்கு சமர்ப்பித்துவிட்டு, தனது இன்றியமையாத விஷயங்களை மட்டும் ஏற்றுக்கொண்டு, மாஸ்டரின் பக்கம் மட்டுமே சார்ந்திருக்கும்படியாக மற்ற எல்லாப் பக்கங்களையும் சுருக்கிக்கொண்டு, அதைத்தவிர உலகம் முழுவதும் இருட்டாகவும் இடிபாடுகளாகவும் இருப்பதாகக் காண்கின்ற ஒருவிதத்தில் இருக்கவேண்டும். மாஸ்டரைப் பற்றிய அந்த ஒரு நினைவில், மற்ற அனைத்து நினைவுகளும் உட்பட்டவையாக இருக்கவேண்டும். மற்றும் எல்லாவிதங்களிலும் (ஒவ்வொரு மயிர்க்காலும், அவருடைய ஜீவிதத்தின் ஒவ்வொரு அணுத்துகளும்) மாஸ்டருடைய நினைவு மட்டுமே எஞ்சியிருக்கின்றது. முழுநிறைவு பெற்ற ஐக்கியநிலை என்பது இதுதான். (ஃபானா – இ - முத்லாக்) (Fana – e - Mutar) ஒரு மனிதன் தன்னிடத்தில் இந்த நிலையை உருவாக்கிக்கொண்டால் அவரை உச்சி முதல் பாதம் வரையில் **பிரார்த்தனையின்** வடிவமாகவே கருதவேண்டும். அம்மாதிரி ஒரு மனிதரின் ஒவ்வொரு எண்ணமும் மாஸ்டருடைய சித்தத்தின் அச்சு அசலான அலையாகவே இருக்கும். ‘நடக்க வேண்டியிருப்பது எதுவாயினும் அது மாஸ்டருடைய சித்தத்தின் அலையின் மூலமாகவே நடைபெறும். எனவே அந்த அலையை நம்பிச் சார்ந்து இருங்கள். (ஹிந்தி மொழி ஈரடிச் செய்யுள்).’’

‘‘அம்மாதிரி ஒரு மனிதர் தெய்வீக மேலாண்மையின் விருப்பத்திற்கு எதிராக எதையும் ஒருபோதும் நாடிச் செல்லமாட்டார். மாஸ்டருடைய கட்டளை எதுவாக இருக்குமோ அதையே அவர் ஆசைப்படுவார். இம்மாதிரியான பிரார்த்தனை செய்வதற்கு மக்கள் தயார் செய்யப்படவேண்டும். இதைச் செய்து யாராவது அதில் முழுநிறைவு பெற்றிருந்தால் அல்லது இந்த உணர்வில் நிலை பெற்றிருந்தால், அப்போது

அவர் இன்னும் செய்ய வேண்டியது, பிரபுவின் நினைவில் இருப்பதைத் தவிர வேறு என்ன இருக்கிறது சொல்லுங்கள்? அது என்னவிதமான நினைவு? ஒருபோதும் தோன்ற வேண்டியிராத அந்த நினைவுதான். மிகப்பெரியோர்களைவிடப் பெரியோர்களும் இந்த நிலைக்காக ஏங்கியிருந்தே, அதன் கரையை அடைய இயலாமல் சென்றுவிட்டார்கள். வெறும் ஏக்கம்தான் எஞ்சியிருந்தது.''

**இந்த நிலையைப் பற்றி விவரித்துச் சொல்லும்படி R2 கேட்டார். R2 – க்கு விடையாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''R2 - நீ கேட்டது போன்ற கேள்விகளைக் கேட்பதற்கு இந்த விஷயம் அத்தனை சாதாரணமானதா? அங்கே அந்த நிலையில் (ஃபானா – இ – முத்லாக் / FANA – E – MUTAQ / முழுமையாக இரண்டறக் கலத்தல்) என்ன இருக்கிறது என்று நான் சொன்னால் நீ ஆச்சரியத்தினால் திகைத்துப் போவாய். சுரி, அதைப் பற்றி நீயே சொல். அங்கே எல்லையில்லாத எளிமை இருக்கிறது; அதனுள் அதிர்வு அலை முறைப்படி இருக்கிறது என்றாலும், அங்கே இருப்பதாக உறுதியாகச் சொல்ல முடியாதபடி இருக்கிறது. அதன் கூர்மையை, பிரகாசத்தை, மேலெழும் தன்மையைப் பற்றி என்ன சொல்வது? அதை மங்கிய ஒளி, விடியற்காலைக்கு முன் இருக்கும் ஒளி என்று சொல்லலாம். ஆனால் அது சரியாக இருக்குமா? சரி, ஒளியைப் பற்றி ஒப்பிட்டுச்சொல்வதை விட்டுவிடலாம்; இருள் என்று சொல்லலாம். அப்போது அது சரியாக இருக்குமா? நிச்சயமாக இருக்காது!''

''இப்போது எஞ்சியிருப்பது என்ன? எனது பிரியமான R2 - க்குப் பிடிக்காத நிலை இது. R2, உன்னுடன் அதைப் பங்கிட்டுக்கொள்ள முடியாமல் இருப்பதால் தனக்குள் வைத்துக்கொண்டு பிரியமான ராம் சந்த்தர் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலை இது. அது என்ன? எங்கே எல்லாமே முடிந்து போகிறதோ அந்த நிலை அது! அனைத்திற்கும் மூலமாகவும், சாராம்சமாகவும் இருக்கின்ற அது அடையப்பட்ட நிலை. சத்தியநிலை என்பது இதுதான். இங்கே அனைத்து நிலைகளும் முடிவடைகின்றன. அதற்கப்பால் இருப்பதைப்பற்றி நான் என்ன சொல்வது? உங்கள் அனைவருக்கும் அது வெளிப்படுத்தப்படுகிற ஒரு காலத்தை கடவுள் கொண்டு வருவாராக. அது அப்படியே நடைபெறுவதாக! (சிறிது இடைவெளி) இப்போது இன்னும் எஞ்சியிருப்பது என்ன? நான் மேலும் தொடர்ந்து சொல்வதற்கு ஏதுவாக R2 முதலியவர்களிடம் இதைக் கேள்! (சிறிது இடைவெளி) அடிமைகளிடமும், வேலைக்காரர்களிடமும்

பிரார்த்தனை செய்வதை சரியானது என்று நான் கருதவில்லை. அதாவது மனிதனுக்கு உதவியாளர்களாக இருப்பதற்கு அனுப்பப்பட்டிருக்கும் சக்திகளை, (மனிதர்களிடமிருந்தே சக்தியைப் பெறுகிறவர்களைப்பற்றி நான் குறிப்பிடுகிறேன்.) காலத்தின் பாதிப்புகள் தெய்வங்களின் அடிமைத்தன்மையுடைய சக்தியையும் பலவீனப்படுத்தியிருக்கிறன!''

''கர்மா தத்துவம் பற்றியும் R2 - ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். அந்தக் கொள்கையில் எத்தனையோ அபத்தமான விஷயங்களும் கூட சேர்க்கப்பட்டுள்ளன. இவை தங்களுடைய விளைவை தனியே உண்டாக்குகின்றன. எனவே, மனிதனின் நிலையிலிருந்து கிளம்பும் ஒவ்வொரு அபத்தமான விஷயத்திற்கும் பதில் எதுவும் இருக்கமுடியாது. இதன் காரணம் என்னவென்றால் இன்று ஒரு மிகச்சிறப்பான எண்ணத்தில் நீ இருக்கிறாய். ஆனால் நாளை இன்றைய எண்ணத்திற்கு முரண்பாடான இன்னொரு எண்ணத்தை நீ நினைக்கத் தொடங்கி அதை முதிர்ச்சியாக்க அதற்கு வலிமையூட்டிக் கொண்டே போகலாம்; இம்மாதிரி ஒரு சூழ்நிலையில் இதற்கான பொறுப்பு அந்த முரண்பாடான எண்ணத்தை ஆதரித்து வலிமையூட்டிய அந்த மனிதருடையதுதான். அந்த மனிதர் அதற்கேற்றவாறு தனது பங்கைப் பெறுவார். அது அவருடைய விதியில் சேரும். இயற்கையின் விதியைச் சார்ந்து அல்லது அடிப்படையாகக் கொண்டே முரட்டுத்தனமான கொள்கைகள் சொல்லப்பட முடியும். அது சாத்தியம்தான். இதை வேறு ஒரு இடத்தில் கூட நான் குறிப்பிட்டிருக்கிறேன். நீ இதை கவனித்து அறியலாம். அதன்பிறகு இதைப்புரிந்து கொண்ட நிலைக்கு அப்பால் என்ன இருக்கக்கூடும் என்பது பற்றி என்னிடம் கேட்டுத் தெரிந்துகொள்.''

**சுவாமி விவேகானந்தா:**

''இன்று நமது பிரபு பிரார்த்தனை பற்றி நிறையச் சொன்னார். இப்படி ஒரு விஷயம் வெளிப்படையாக உங்கள் முன் வைக்கப்பட்டிருக்கும்போது அதை நீங்கள் பின்பற்ற வேண்டும் என்று நான் விரும்புகிறேன் அது பற்றி போதுமான அளவு ஆர்வத்துடன் இருந்த R2- ஐப்பற்றி நான் பெருமையுடன் பேசுவேன். உனக்கு எவ்வளவு கொடுத்திருக்கிறேனோ அதே அளவுக்கு இந்தக் கடமையை R2- க்கும் கொடுக்கிறேன். ஆயினும் எளிமை என்ற நிலைக்கு (சரள அவஸ்தா) வந்தடைகின்ற மனிதர்கள் மிக அரிதாகவே இருப்பார்கள் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இதை எப்படி அறிமுகப்படுத்துவது என்ற கேள்வி வருகிறது. முதலில் நீங்கள் அதைப் பின்பற்றுங்கள். அதன் பிறகு மற்றவர்களையும் பின்பற்றச்

செய்யுங்கள். ஆன்மீக மார்க்கத்தில் வெற்றியடைவது சம்பந்தமான அடிப்படைக் கொள்கை இது. இந்த வழியில் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டால் அதாவது பிரார்த்தனையுடன் பயிற்சியைத் துவங்கினால் அது முன்னேற்றமடைவதற்கு மிகவும் உதவியாக இருக்கும். பயிற்சியை ஆரம்பிக்கிறவர்களுக்கு கீழ்க்கண்ட பிரார்த்தனையைக் கூறும்படி குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

**‘‘ஓ மாஸ்டர், மனித வாழ்வின் உண்மை லட்சியம் நீரே**

**நாங்கள் இன்னும் ஆசைகளுக்கு அடிமைகளாக இருப்பது**

**எங்கள் முன்னேற்றத்தை பாதிக்கிறது.**

**என்னை அந்நிலைக்கு இட்டுச் செல்லும்**

**ஒரே தெய்வமும் சக்தியும் நீரே.’’**

‘‘அனைவரும் இதை தினமும் கூறவேண்டும். மற்ற மொழிகளில் இதை நல்ல விதத்தில் மொழியாக்கம் செய்யலாம். பயிற்சியைத் துவங்குகிறவர்களும், நீங்கள் எல்லோரும் கூட இந்த எளிமையான பிரார்த்தனையை (சரள பிரார்த்தனா) சொல்லலாம். ஆன்மீக நிலையிலேயே நிரந்தரமாக, வாழ்கின்ற நிலையை அடைந்திருப்பவர்களை, இதிலிருநது விதிவிலக்கு அளிக்கலாம். அதாவது உங்கள் மாஸ்டர் இன்று காலை உங்கள் மூலமாகத் தெரிவித்த கடைசி நிலையை அடைந்தவர்களுக்கு இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கலாம். சிகார் என்ற ஊருக்கு [ ராஜபுதனத்தில் (ராஜஸ்தானில்) இருக்கும் ஒரு மாவட்டம் ] நீ போகும் வழியில் நான் உனக்கு ஒரு விஷயம் சொன்னேன். அது சம்பந்தமாக சமீபத்தில் நீ கண்டறிந்த புள்ளி இன்னும் உயர்வானது என்று நான் சொல்வேன். ஆன்மீக விஞ்ஞானத்தில் பெரும்பகுதி உன் மூலமாக வெளிப்பட வேண்டியிருக்கிறது. இந்த விஷயம் பற்றி நான் போதுமான அளவு சொல்லிவிட்டேன். இவை யாவும் இயற்கையின் ரகசியங்கள். இயற்கை மிக எளிமையானது; அதன் சொந்த வடிவத்தில் அது மிக மிக எளிமையானது. எனவே, மிக எளிமையான ஒன்றுதான் அதனுடன் (இயற்கையுடன்) ஒத்திசைவு அடைய முடியும். திரைக்குப் பின்னால் இருப்பவர் அதை ஒரு பிரயாணியாக அல்லது அலைந்து திரிபவராக ஏதோ போகிறபோக்கில் காண்கிறார். இயற்கையின் மண்டலத்தில் நுழைகின்றவர் தன்னையே தனது சொந்த எல்லைகளுக்கு அப்பாற்பட்டவராக உணர்கிறார். அதன்பிறகு ஒன்றுமில்லை.’’

‘‘ஒன்றுமில்லை; ஒன்றுமே இல்லை! அந்த நிலையைக் கடந்த பிறகு அவர் சொல்வதற்கு வார்த்தைகள் கடந்த ஒரு தன்மையை உணர்கிறார். ஆன்மீக நிலைகள் அதற்குப் பிறகு, அதற்குப் பிறகு என்று தொடர்ந்து, அதற்கப்பால், அதற்கு இன்னும் அப்பால் என்று உள்ளன. அங்கு என்ன நடக்கிறது என்று யார் சொல்லமுடியும்? நீங்கள் அனைவரும் குறைந்தபட்சம் அந்த நிலையையாவது அடை யவேண்டும் என்று விரும்புகிறேன்.’’

14-1-1946

**சுவாமி விவேகானந்தா:**

‘‘பிரபஞ்ச சிருஷ்டி தோன்றுவதற்கு முன்பு அமைதியைத் தவிர எதுவுமில்லை; அமைதி மட்டுமே எங்கும் பரவியிருந்தது. இவ்வுலகம் இப்போதைய வடிவத்துக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன் அந்த அமைதி இதன் மிக உள்ளார்ந்த பகுதியை எடுத்துக் கொண்டு, எப்படி வந்திறங்கியதோ அதுபோல, மனிதர்களின் இதயத்தில் ஆழ்ந்து வேரூன்றியிருந்தது. மிகப்பெரியதான ஒன்றின் பகுதியாக இவ்வாறு வந்த இந்த மையப்புள்ளி, மற்ற அனைத்தையும் அதன் சொந்த இடத்தில் பெறச் செய்தது. நாம் பிரார்த்தனையில் இதைத்தான் செய்கிறோம். நாம் அதன் மையத்தில் இருப்பதற்கு முயற்சி செய்கிறோம். இது எப்படி சாத்தியமாகும்? நம்மை அதுபோலவே உருவாக்கிக் கொள்வதால் முடியும். அப்படி நம்மை உருவாக்கிக் கொள்ள குறிப்பிட்ட பயிற்சிகளின் முலமாக நமது அதிகபட்சமான முயற்சியைச் செய்யவேண்டும். அதாவது நம் உள்நிலையை பரம்பொருளின் (பரமாத்மாவின்) நிலைக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.’’

## M1- இன் கேள்வி:

‘‘இதை பரம்பொருளின் நிலைக்கு எப்படிக் கொண்டு செல்வது?’’

**பதில்:**

‘‘இயற்கையின் சித்தப்படி – எளிமையாகவும், அமைதியாகவும் இரு. இது சிரமமான விஷயமாகத் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் அந்த நிலைக்குச் செல்ல உண்மையாகவே விரும்புகிற ஒருவருக்கு அது சிரமமானது அல்ல. (சிறிது இடைவெளி) இதைத் தன்னிடத்தில் வளர்த்துக் கொள்வதில் ஒருவர் வெற்றியடைந்தால் அவர் அல்லது அப்பெண்மணி பிரார்த்தனை நிலையில் இருப்பதாகச் சொல்லலாம். உண்மையாகவே அதை நோக்கிச் செல்கின்ற அனைவருக்கும் இந்தநிலை வருகிறது. யாராவது அந்த நிலையை ஒரு விநாடி நேரத்துக்கு உருவாக்கிக்கொண்டால், அந்த மனிதருடைய பிரார்த்தனை அந்த

விநாடியில் கேட்கப்பட்டு சாதகமான பலன்தரும். அம்மாதிரி நிலையில் இருப்பதற்கு தினசரி பயிற்சி தேவை. (சிறிது இடைவெளி) பிரார்த்தனை நிலை மற்றும் அதன் ஆரம்பம் பற்றி தர்க்க ரீதியான ஒரு விளக்கத்தை நான் கொடுத்திருக்கிறேன். அதை நான் இனிமேலும் விவரிக்க முயற்சித்தால் அது நமது பிரபு கூறிய வார்த்தைகளை மீண்டும் சொல்வதாகவே இருக்குமேயன்றி வேறு இல்லை.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''அன்புள்ள சகோதரா (ராம் சந்த்தர்) நீ என்ன செய்து கொண்டிருக்கிறாயோ அது அந்தப் பிரார்த்தனைதான்! இப்போது அதற்கு மேலும் மெருகு ஏற்றுவதற்கு நீ விரும்புகிறபடி எதையும் செய்யலாம். இதில் முக்கியமான கருத்து என்னவெனில் அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதான். ஆழ்ந்த முக்கியத்துவம் உடைய சூட்சுமமான விஷயங்களை குட்டிக்கதைகளின் மற்றும் சித்திரங்களின் உதவியோடு விளக்கினாலன்றி படித்தறியும் வடிவத்தில் சொல்லமுடியாது. முக்கிய நோக்கத்திலிருந்து திசை திரும்பாமல், ஆயினும் சொல்ல வேண்டிய விஷயம் முழுமையாகத் தெரிவிக்கப்படுவதற்கு – அது கட்டாயம் சரியாக இருக்கவேண்டும் - அதற்கு நல்ல அறிவு தேவைப்படுகிறது.''

15-1-1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''உனக்கு மிக விசேஷமான ஒரு தியானம் சொல்கிறேன். ஒருவர் எந்த நிலையில் உட்கார்ந்தாலும் அது சலிப்பை (அதில் நாட்டமில்லாத தன்மையை) ஏற்படுத்தாதபடி இருக்கவேண்டும். அதாவது உட்காரும் நிலை சுலபமாக இருக்கவேண்டும். அதன்பிறகு தியானம் செய்ய வேண்டும்; முதலில் தன்னுடைய புலன்கள் அனைத்தும் முழுமையாக சுத்திகரிக்கப்படுகின்றன மற்றும் ஞானேந்திரியங்கள் அதாவது பார்வைத்திறன், கேட்கும் திறன், முகரும் திறன், பேசும் திறன், தொடு உணர்வுத்திறன் ஆகியவை மற்றும் கர்மேந்திரியங்கள் அதாவது வெளியிலிருந்து உணர்வுகளைப் பெறும் கருவிகளாகிய கண், காது, மூக்கு, வாய், உடல் முதலிய வெளிப்புலன்கள் ஆகிய அனைத்தும் தங்கள் அசலான, உண்மையான குணத்தைப் பெற்றுள்ளன என்று உறுதியான எண்ணத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அது செய்யப்பட்டுவிட்டது என்ற உறுதியான சங்கல்பத்துடன் இருக்கவேண்டும். இந்த நிலையை அடைவது ஒரு நிமிடத்து வேலைதான். இதன் நோக்கம் என்னவெனில்

தன்னை முழுமையாக சுத்திகரித்துக் கொண்ட பிறகு ஒருவர் பரமாத்மாவின் (பரம்பொருளின் ஜீவத்தன்மையின்) மண்டலத்துக்குள் செல்ல வேண்டும் என்பதேயாகும். இதற்குப் பிறகு, இந்த விசேஷ தியானத்தின் இரண்டாவது நிலையில் – ஐந்துபுலன்களும், பார்வைத்திறன், காதுகேட்கும் திறன், முகரும் திறன், பேசும் திறன், உணவை சுவைக்கும் திறன், தொட்டால் உணரும் திறன் ஆகியவை தங்கள் உண்மையான சாராம்சத்தில் ஐக்கியமடைகின்றன. மற்றும் முன்பு அவை எப்படியிருந்தனவோ, அதற்கு எது குறிக்கோளாக இருந்ததோ அந்த முழு நிறைவுடைய குணம், அவற்றின் இடத்தை எடுத்துக்கொண்டிருக்கிறது, மேலும் அதே விதமான குணத்தை அவர் தன்னிடம் வளர்த்துக்கொண்டிருக்கிறார் என்ற எண்ணத்தை ஒருவர் மனதில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய இந்த தியான முறை பற்றி மேலும் கூறப்பட்ட கருத்து:

''பொதுவாக மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, யாரிடமாவது ஏதாவது குணம் மிகையாக இருந்தால், அதையும் சேர்த்து சுத்திகரிப்பது அவசியமாகும். தியானம் முடிந்த பிறகு, சந்தேகத்துக்கு இடமில்லாமல், தேவைப்பட்ட ஆன்மீக உள்நிலை நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்ற கருத்துடன் எழுந்திருக்க வேண்டும். இந்த தியானம் பிரம்மாண்ட மண்டலத்தை (குப்ரா) அடைந்துள்ள ஒருவர் செய்யலாம். முன்பு தாழ்வுநிலை இருந்த சமயங்களில் அடிக்கடி நிகழ்ந்ததாகிய கடந்தகால அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, வருங்காலத்துக்காக இன்னும் ஒரு விஷயம் குறிப்பிட வேண்டியிருக்கிறது. பல இடங்களிலும் இருக்கும் மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்ட, மற்றும் கண்டுபிடிக்கப்படுகிற எல்லா தியான முறைகளும் நன்மையளிக்கக் கூடியவை அல்ல என்பதை அவசியத்தின் காரணமாக நான் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. அதன் ஆரம்ப ஸ்தாபகர் ஒப்புக்கொள்ளக்கூடிய அந்த தியான முறை மட்டுமே சரியானது. அது அதனுடைய தகவல் தொடர்புகள் மேலேயிருந்து வரும் விதமாக இருக்கவேண்டும்.''

### 16-1-1946

*(தொகுப்பாசிரியர் குறிப்பு:*

*ஜனவரி 16 மற்றும் 17, 1946 இந்தத் தேதிகளில் வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியவை. 'சகஜ மார்க்கத்தின் பத்து நியமங்களின் விரிவுரை' என்ற புத்தகத்தில் இரண்டாம் நியமத்துக்கு விளக்கமாகப்*

*பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு முன்பு ஜனவரி 12ம் தேதி கூறியதில் ஒரு பகுதி அதே தலைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜி அவர்களின் பல புத்தகங்கள் அவருடைய கடிதங்கள், குறிப்புக்கள், நாட்குறிப்பு, உரையாடல்கள் ஆகிய பல அசலான எழுத்துக்களிலிருந்து உருவாக்கப்பட்டவையாகும். இதன் காரணமாக, அவருடைய அசலான படைப்புக்களின் நூல்பதிப்பு, ஏற்கெனவே எந்தப் புத்தகத்திலாவது இவற்றின் சில பகுதிகள் அச்சிடப்பட்டிருந்தாலும், அவற்றில் எதையும் விட்டுவிடக்கூடாது என்று நான் நினைக்கிறேன். பாபுஜியின் சுயசரிதத்தின் அசலான தொகுப்பு முழுவதும் அதிகபட்சம் சாத்தியமான அளவு, குறைபடாமல் அளிக்கப்படவேண்டும். வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பங்களிப்புகள் (படைப்புக்கள்) அவற்றின் அசலான வடிவத்தில் வாசகர்களுக்குக் கிடைக்க வேண்டும். இந்தக் கொள்கை மற்றும் யோகமார்க்க ஒழுங்கு முறையின் வளர்ச்சிக்கும் அதன்பிறகு இதுபற்றிய ஆய்வை, ஒப்பீட்டை, விளக்கத்தை மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களும் மேற்கொள்வதற்கு உதவியாக இருக்க வேண்டும். இவ்வாறு இந்த நோக்கத்துடன் மாஸ்டருடைய அசலான படைப்புக்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு அதில் உள்ளது உள்ளவாறு இங்கு மேலும் தொடர்கிறது.)*

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜி கூறியது:**

''அசுத்தம் இல்லாத நிகழ்நிலை சத்தியம் என்பது 'நிர்மல் மாயா' எனப்படும். பிரபஞ்ச சிருஷ்டிக்கு முன்பு சுவாமி விவேகானந்தா மகராஜ் கூறியதுபோல அமைதிதான் இருந்தது; அமைதியைத் தவிர வேறு எதுவுமில்லை. அந்த ஆதியான அமைதிநிலை கீழ்நோக்கி வந்திறங்கிய போது தன்னுடன் அதன் உண்மையான குணத்தை (பிரகாசத்தை, சாராம்சத்தை) கொண்டு வந்தது. உண்மையான சாராம்சத்தோடு இணைந்திருந்த அதன்நிலை கிட்டத்தட்ட அதேமாதிரியாகவே நிலைத்திருந்தது. பிறகு ஒன்றின்மீது ஒன்றாக உறைகள் அதைச் சுற்றிலும் சேர்ந்து கொண்டே இருந்தன. நீங்களேதான் இந்த நிலையைக் கொண்டு வந்தீர்கள். நதியின் அலைகள் ஒரு சமுத்திரத்தை உருவாக்கிவிட்டன. எத்தனையோ நீர்த்துளிகள் சேர்ந்து ஒரு நதியை உருவாக்கிவிட்டன. இதன் உண்மை என்ன? (சாராம்சம் என்ன?) சாராம்சம் அல்லது உண்மை இவை அடிப்படையில் ஒன்று சேர்ந்து அதே புள்ளிக்கு வந்து சேர்ந்தன என்பது தான். ஒரு நதியின் அடிப்படை என்ன? நீரூற்றிலிருந்து, சிறு ஓடையிலிருந்து அதில் ஒன்று சேர்ந்து விழுந்த தண்ணீர்த் துளிகள் ஒரு

நதியை உருவாக்கின. இதன் பொருள் என்ன? அந்த முதல் நீர்த்துளியுடன் தேவையில்லாத நீர்த்துளிகள் சேர்க்கப்பட்டு, அதன் அடிப்படையிலான இன்றியமையாத புள்ளி மறைக்கப்பட்டு, அதன் நிழலான உருவம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதாவது சாராம்சம் கடினத்தன்மையுடன் திடத்தன்மையாக மாறிவிட்டது.''

''யாராவது ஏதோ ஒரு விஷயத்தை கவனித்தால் எப்போதுமே அதன் திடமான அம்சம்தான் அந்த மனிதரின் காட்சிக்கு வரும். கவனிப்பது திறை மாறாமல் தொடர்ந்தால், அதனுடைய திடமான அம்சம் மறைந்துபோய் அதன் வடிவம் மட்டுமே மீதியிருக்கும் ஒரு காலம் வரும், மேலும் முயற்சியை அதில் ஈடுபடுத்தினால் இந்த வடிவம் என்பதும் மறைய ஆரம்பித்துவிடும். அதாவது அதன் அசலான விஷயத்தைச் சுற்றிலும் அதை அகலப்படுத்தவதற்காக சேகரிக்கப்பட்டது எதுவாயினும் அது மொத்தமும் மறைந்து போகும். அதன் காலியான தன்மை மட்டுமே அங்கே இருக்கும். இது எப்படி நிகழ முடியும்? நமது எல்லா வேலைகளையும், அவை முடியும் வரையில், நம் பங்குக்கு வந்துள்ள அத்தியாவசியமான மூல அம்சத்தைக் கருத்தில் கொண்டு நம் பயிற்சிக்குக் கொண்டுவரும்போதுதான் அது நிகழும். உன்னால் அந்த அத்தியாவசியமான விஷயமாக வைக்கப்பட்டுள்ள அந்தக் கருத்தையே (பார்க்கும் புள்ளியை) பிரார்த்தனைக்குரியதாக எடுத்துக் கொள்ள வேண்டும். இதையே அதற்கு ஆரம்பமாகக் கருதி நடத்த வேண்டும். எங்கிருந்து நீ கிளம்பி வந்திருக்கிறாயோ, அந்த ஒன்று பலவாக ஆகின்ற நிலையை பிரார்த்தனையின் முதல் நிலையாகக் கூறலாம். அது எல்லோரிடமும் காணப்படுகிறது. யாராவது இதை ஆரம்பித்து அந்த மனிதருடைய பார்வை செல்லும் புள்ளி அங்கேயே நிலைபெற்றால், அதன் விளைவு அந்த ஸ்தூலப் பொருளின் (திடப்பொருளின்) மீதே ஓட ஆரம்பிக்கும். போகப்போக அம்மாதிரி மனிதர் அந்தப் பார்க்கும்புள்ளியிலேயே நீடிக்கின்ற நிலைக்கு வந்துவிடுவார்; மற்றும் அந்த மனிதர் அதே புள்ளியில் நிலைபெற்றவராகவும் ஆகிவிடுவார். இது முதல் குறிக்கோளாகும். அந்த நிலைக்கு வந்து சேரும் அளவுக்கு ஒருவருக்கு தைரியம் இருந்தால், அவர் அதற்கு மேல் முன்னோக்கியிருக்கின்ற மற்றும் தொடர்ந்து கீழ்நோக்கிப் பாய்கின்ற செயல்முறையில் மொத்தமாக (ஸ்தூலமாக) வளர்ந்துள்ள ஆற்றலின் மூலமாக தன்னை சார்ந்திருக்கச் செய்யவேண்டும். இந்தப்புள்ளியை மேலும் மேலும் விரிவாக்க விரிவடைதல் என்றால் அதை பலூன் போல வீங்கச் செய்வது அல்ல. அந்த விஷயத்தை அல்லது அதிலுள்ள சக்தியை, அதாவது அதன் சாராம்சமாக

அமைந்திருப்பதை அதிகமாக்குவது என்று பொருள். அங்கே முன்னேற்றம் ஆரம்பிக்கும் போது, அந்த ஸ்தூலமான (கெட்டியான, திடமான) விஷயம், ஆதியான நிலையைவிட மிகவும் லேசாகவும் சூட்சுமமாகவும் இருக்கும் தன்மை மங்கலாகத் தெரிய ஆரம்பிக்கிறது; முடிவில் கலைந்து வாடியும் போய்விடுகிறது. அதன்பிறகு அந்தநிலையில் நீங்கள் இப்போது உங்கள் நுழைவுரிமையைப் பெற்று விட்டீர்கள் என்று பொருளாகும். அங்கே மேலும் மங்குகின்ற எண்ணம் இன்னும் இருக்கின்றது.''

''இன்றியமையாத சத்தியத்தின் சக்தியில் இருந்து, எத்தனையோ வடிவங்கள் தோன்றியுள்ளன. தங்கள் மூலமாகிய ஊற்றுக் கண்ணிலிருந்து தான் இவையனைத்தும் இறங்கி வந்துள்ளன. இந்த விஷயங்கள் பயனற்றவையல்ல. ஆனால் சரியாகச் சொன்னால் இவையெல்லாம் வெவ்வேறு உருவங்களிலும், வழிகளிலும் வேலை செய்ய ஆரம்பித்த ஆற்றல்களாகும். எங்கே அதற்கான தேவை இருந்ததோ அங்கே தங்கள் ஆற்றலின் விளைவை இவை செயல்வடிவில் காண்பித்தன. இந்த சக்திகள் அனைத்தும் இவ்விதமாக தங்கள் அசலான சாராம்சத்திலிருந்து வெளிக்கிளம்பி, தோற்றம் பெற்று தங்கள் தங்கள் விளைவுகளை செயல்முறையில் காண்பித்தன. ஒருசிறு குழந்தையின் நிலை எல்லோரும் அறிந்ததுபோல முதலில் முற்றிலும் தானாக எதுவும் செய்ய இயலாத நிலையில் இருந்தது. ஆனால் அக்குழந்தை, நகர்ந்து, தவழ்ந்து, உட்கார்ந்து, நடந்து, பேசவும், ஓடவும் ஆரம்பிக்கிறது. அந்தக் குழந்தையிடம் என்ன உள்வல்லமை இருந்ததோ, அது வளர்ச்சியடைய ஆரம்பித்து பிறகு முழுமனிதனாக உருவாகிவிடுகிறது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறும் கருத்துக்கள் அடுத்த நாளும் தொடர்கின்றன.

17-1-1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறுவது தொடர்கிறது:**

''அந்தக் குழந்தையிடத்தில் ஆரம்பத்திலேயே திணிக்கப்பட்டுள்ள விஷயங்கள், இப்போது தனித்தனியாக வடிவங்களை அடைவதற்கு வளர்ச்சியடைந்துள்ளன. இதன் சாராம்சம் என்ன? நமது பங்காகக் கிடைத்த ஒரு சிறு துளி படிப்படியாக உறைக்கு மேல் உறையாக என்று நான் குறிப்பிட்டபடி பல்வேறு விஷயங்களை சேர்த்து உள்ளடக்கிக் கொண்டது. இது எப்படி நிகழ்ந்தது? அம்மாவின் பழக்கங்கள் மற்றும் அதன் விளைவுகளால்; அப்பாவின் எண்ணங்கள், கருத்துக்கள்,

சிந்தனைகள், அவர் பயிற்சியளிக்கும் விதம் மற்றும் கல்வி இவைகளால், அது உண்டாகிறது. இதற்குப் பிறகு மற்றவர்களின் பாதிப்பினால் பெறப்பட்ட குணங்களினால் அது உருவாகிறது. இவையனைத்தும் தங்கள் செயலை தாங்களாகவே ஆரம்பித்தன; மற்றும் விரைவில் இதன் விளைவுகளை உண்டாக்கின; மேலும் இப்படி உருவாக்கப்பட்ட விளைவுகளிலும்கூட செயல்பாடு நிகழ்ந்து கொண்டே இருந்தது. எனவே எவ்வளவுதான் விவரிப்பது! செயலக்கு மேல் செயல் இப்படி மேலும் மேலும் தொடர்ந்தன; இப்படி எவ்வளவு செயல்முறைகளை அது கடந்து வந்திருக்கிறது என்ற விழிப்பு உணர்வே முற்றிலும் இழந்து போய்விட்ட ஒரு நிலைக்குக் கொண்டுவரப்படும் அளவுக்கு அது வந்து நின்றது. இப்போது இந்தச் செயல்கள் அனைத்தும் ஒரு திடமான வடிவத்தை ஏற்றுக் கொண்டுவிட்டன. இப்போது இந்த திடமான நிலை எந்த அளவு முயற்சி செய்தாலும் அசைய மறுக்கிறது. என்ன நிகழ்ந்தது என்பது பற்றிய விழிப்புணர்வைக் கூட இழந்து விட்ட அளவுக்கு அது தன்னை சிறைப்படுத்திக் கொண்டுவிட்டது அல்லது சிக்கலில் அகப்பட்டுக்கொண்டு விட்டது.’’

‘‘விஷயங்கள் மேலும் தொடர்ந்தன. அந்தக் குழந்தை அல்லது அசலான சிறுதுளி உலகைப் பார்த்துவிட்டது. அது வாழும் வழி அதன் விளைவை அடைந்தது. அதன் தனித்தன்மை மற்றும் செயல்படும் வழி அதன் பாதிப்பைப் பெற்றது. வார்த்தைப் பரிமாற்றங்கள் விளைவுகளை உண்டாக்கின. நிகழ்ச்சிகளும், சம்பவங்களும் தங்கள் சாயலை அதில் கொடுத்தன. மனக்கவலைகள், புரியாத பயங்கள் தங்கள் பிடிப்பை இறுக்கியுள்ளன. இப்போது அக்குழந்தையின் வடிவம் (அல்லது அசலான சிறுதுளியின் வடிவம்) வேறு ஏதோ ஒன்றாக மாறிவிட்டது. அதற்கும் அடுத்ததாக நடந்த கதையை இப்போது கேள். பல்வேறு நிறங்களின் வடிவில் அதற்குள் ஊக்குவிக்கப்பட்டுள்ள இந்த விஷயங்கள் தங்களைப் போலவே ஒத்தநிலையில் இருக்கும் துகள்களைக் கவர்ந்திழுக்க ஆரம்பித்தன. அவை இதனால் மேலும் மெருகூட்டப்பட்டன. இப்போது சிந்தியுங்கள். ஆதியில் அது என்ன வடிவத்தில் இருந்தது; இப்போது எந்த நிலைக்கு வந்திருக்கிறது! அந்தப்புள்ளி, சிறுதுளி அல்லது அணுத்துகள் அதனுடைய ஆதியான, அசலான பளபளப்பு இப்போது எங்குமே காணப்படமுடியாத அளவுக்கு அழுத்தப்பட்டுவிட்டது. இது மட்டுமல்ல. இது முழுமையாக உங்களுக்குள் ஊடுருவியிருக்கிறது. அதை எந்த அளவுக்கு நீங்கள் உட்புகுத்தியிருக்கிறீர்களோ மற்றும் அதில் கூர்மையை உட்புகுத்திக்

கொண்டே இருக்கிறீர்களோ அதே அளவு கூர்மையுடைய செயலும் நடைபெறுகிறது. கூர்மை எவ்வளவு அதிகரிக்கிறதோ அந்த அளவுக்கு இயற்கையின் சக்திகளிலிருந்து நீங்கள் விளைவைக் கவர்ந்திழுக்கிறீர்கள். ஆறு (நதி) உருவாகுவதற்கு முன்பு நீரூற்றின் நிலையை இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். மலையிலிருந்து சிறு துளிகளாக ஊற்றெடுத்து வருகின்ற தண்ணீர் ஒன்று சேர்ந்து ஊற்றாகச் சொட்டுகின்றன. இப்போது அம்மலையில் இருக்கும் பனியிலிருந்து கொஞ்சம் உதவிகிடைக்கிறது; எனவே சொட்டும் தண்ணீரின் அளவு அதிகமாகிறது. இப்படி பனிப்பொழிவு, மழை ஆகியவற்றால் தண்ணீர்ப்பெருக்கு அதிகமாகி அது ஒரு நீர்வீழ்ச்சியாகிறது. அதன்பிறகு இப்பக்கம் மற்றும் அப்பக்கமிருந்து வேறு பல ஊற்றுக்கள் கசிந்து வந்து நீர்ப்பெருக்கு அதிகரிக்கிறது. வழியில் ஏதோ ஒரு இடத்தில் ஒரு குழியிலிருந்தும் ஊற்றுக்கள் வந்து அதில் இணைகின்றன. இப்படி போகும் வழியில் எல்லாப் பக்கமிருந்தும் அதற்கு நீர்வரத்து கிடைக்கிறது. அதன் பிறகு என்ன, அது தோன்றிய இடத்தில் நீர்க்கசிவாக இருந்தது, சிறிது சிறிதாகப் பெருகி வளர்ந்து அகன்ற நதியாக மாறி ஏராளமான தண்ணீர் கொண்டதாக மாறியிருக்கிறது. அதை ஒரு சமுத்திரம் என்றே சொல்லலாம் என்ற அளவுக்கு அது இருக்கிறது. அதன் நிலையை இப்போது பாருங்கள். அதன் மூலம் என்ன, அது இப்போது அடைந்திருக்கின்ற வளர்ச்சி நிலை என்ன! ஒரு சிறு குழந்தை வளர்ந்து பெரியவளாகி விட்டதைப்போல அது இருக்கிறது.’’

‘‘நதியின் அலைகள்; ஒரு ஆற்றில் தோன்றுகின்ற அலைகளின் சாராம்சம் என்பது தன் பாதையில் இந்த வடிவத்தை ஏற்றுக்கொண்டு ஒன்று சேர்ந்து வந்துள்ள மற்றும் கலந்துள்ள அந்தச் செயல்களின் விளைவுதானேயன்றி வேறு எதுவுமில்லை. இந்த அலைகள் என்பவை மனிதர்கள் முடிவாக உடல் சார்ந்த இன்பம் என்று கருதுகிற விஷயங்களேயாகும். இந்த நிகழ்வு மனித வாழ்க்கையின் இளமைப்பருவத்தில் அதிகமாக நிகழ்கிறது. அதாவது மனிதனின் உருவாக்கத்தில் அதிகமாக மெருகும், இறுதிவடிவமும் ஏற்கெனவே செய்து கொடுக்கப்பட்ட நிலையில் அவன் இருக்கும்போது நிகழ்கிறது. மனிதன் அந்த நிலைக்கு வந்திருக்கும் போது (அந்த வடிவத்தை ஏற்றுக் கொண்டிருக்கும்போது) இந்த சமுத்திரம் போன்ற நிலை அங்கிருப்பதாகச் சொல்லமுடியும். இதை செயலுக்கு மேல் செயலாக நடைபெற்றதன் பலன் என்று தெரிந்து கொள்ளவேண்டும்.’’

‘‘சில முக்கியமான அல்லது சிக்கலான கேள்விகள் அல்லது பிரச்னைகள் இங்கே வருகின்றன. முதல் கேள்வியாக வருவது அந்த வடிவம் மட்டுமே அங்கே இருப்பதை விட்டு நமது பார்வையை, கருத்தை அதில் நிலைக்கச் செய்திருக்கும்போது அந்த திடமான நிலை ஏன் மங்கிப்போகத் தொடங்குகிறது, பிறகு கடைசியில் மறைந்தும் போய்விடுவது ஏன் என்பதுவாகும். ஏனெனில் திடப்பொருளுக்கு, பொருள் சார்ந்தவற்றை மட்டுமே பார்க்கும் சக்தி, திறமை, தகுதி ஆகியவை உள்ளன. அதற்கு அப்பால் கவனித்து அறிவதற்கான திறன் அந்தத் திடப்பொருளைத் தாண்டி அதனையடுத்து இருக்கும் ஆற்றலுக்கு மட்டும்தான் இருக்கிறது. அதற்கும் அப்பால் முடிவான நிலையில் விளங்கும் சக்திக்குத்தான் அதைப் பார்ர்கக்கும் மற்றும் புரிந்து கொள்ளும் திறன் இருக்கிறது. இப்படிக் கவனித்து அறியும் திறனைப் பெற்றுள்ள சக்தியின் சங்கிலித் தொடர் அதற்கும் அப்பால் தொடர்ந்து கவனித்து அறியும் திறன் முற்றிலும் மறைந்து போகும் வரையில் நீடிக்கிறது. அதற்கப்பாலும் கூட சக்தி ஏராளமாக இருக்கிறது. அது உள்முக மற்றும் வெளிமுக அனுபவம் என்ற வடிவத்தில் தொடர்ந்து தோற்றம் பெறுகிறது. அதன் பிறகு இதுவும் கூட முடிந்து போக, அதற்கும் அப்பால் இதுவும் கூட எஞ்சியிருப்பதில்லை. அதன் பிறகு என்ன நிகழ்கிறது? ஏதுமற்ற நிலை எதுவோ மற்றும் சாராம்சமாகவும் இருப்பது எதுவோ அது நிகழ்கிறது. இதைப் புரிந்து கொள்வதற்கு யாருக்காவது திறமையோ, சக்தியோ, அறிவுத்திறனோ இருக்கிறதா? அங்கே சென்றடைந்திருக்கும் ஒருவனுக்கு மட்டுமே இருக்கிறது. இதுவும் கூட ஒரு தவறுதான். ஏதுமற்றதன்மை மற்றும் **ஏதுமற்ற தன்மை** யில் மூழ்கிக் கொண்டிருக்கின்ற ஒருவனுக்கு என்றே நாம் சொல்ல வேண்டும். ஆனால் சகோதரா, இந்த **ஒன்றுமில்லை** என்பதும்கூட ஏதோ ஒன்றாக இருக்கிறது. அப்படி இல்லையென்றால், அதை ஏன் அப்படி விவரிக்க வேண்டும்? அதற்கும் மேலே இன்னும் முன்னே செல். இப்போது பேசுவது சாத்தியமில்லை.’’

‘‘அடுத்து இரண்டாவது கேள்வி அல்லது பிரச்னை எழுகின்றது. அதாவது அந்த ஆற்றல் கீழ்நோக்கி இறங்கும்போது ஏன் கடினத்தன்மையை, திடத்தன்மையைப் பெறுகிறது என்பதே கேள்வி. இது மிகவும் சூட்சுமமானது! ஆயினும் அதை இப்போது சொல்ல வேண்டியிருக்கிறது! சரி, கேளுங்கள்! வெறும் கூரைமீதிருந்தோ, சுவர் மீதிருந்தோ மனிதன் குதிப்பதுபோல இல்லாமல், ஒரு மலை உச்சியிலிருந்து கீழே குதிக்கும்போது ஒரு மனிதன் ஏன் சக்தியில்லாமல் போகிறான்? இது

பூமியின் புவிஈர்ப்பு விசையின் காரணமாகத்தான் என்று மக்கள் சொல்வார்கள். ஒரு மனிதன் உச்சியிலிருந்து கீழே குதிக்க நினைக்கும்போது, அப்படிக் குதிக்கும் மனிதனின் எண்ணத்தின் வெப்பம், கீழ்நோக்கிப் பயன்படுத்தப்படுகிறது என்று நான் சொல்வேன். வேறு வார்த்தைகளில் சொன்னால் இந்த எண்ணத்தின் வெப்பம் அதாவது முக்கிய ஆற்றல் ஒரு பலத்த அதிர்ச்சியை அடைகிறது மற்றும் கீழே குதிக்க நினைக்கின்ற அந்த மனிதனிடமிருந்து கீழ்நோக்கிச் செல்ல ஆரம்பிக்கிறது. இதே மாதிரியாகவே மேலேயிருந்து கீழ்நோக்கிப் பாய்வதற்கு அந்த ஆற்றல் விரும்பும்போது, மனிதன் கீழே குதிக்க நினைப்பது பற்றிய உதாரணத்தில் விவரிக்கப் பட்டதுபோல அதே விதத்தில் நடப்பதாகப் புரிந்து கொள்ள வேண்டும். திடத்தன்மை (தடிமனாக அல்லது அடர்த்தியுடையதாக இருக்கும் தன்மை) என்பது கடினத்தன்மையாகும். (கரடுமுரடான தன்மை, செயலற்ற மந்தநிலை அல்லது உணர்ச்சியற்ற நிலை) உயிரற்றது எதுவோ அதில் இந்த நிலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது.''

''இப்போது மக்கள் மூன்றாவதாக ஒரு கேள்வியைக் கேட்கலாம். அதாவது இயற்கையின் ஆற்றல் எப்படி உயிரற்றதாக இருக்கமுடியும் என்ற கேள்விதான் அது. அனைத்து விஷயங்களும் இயற்கையிலிருந்தே வெளிப்பட்டன என்பதே இதற்கு பதில். தாவரங்கள், பாறை, பல்வேறு தாதுப்பொருட்கள் ஆகிய அனைத்தும் ஒரே இயற்கையின் பலவித தினுசுகள். சித்திர விசித்திரங்கள்தான். ஆனால் இவற்றை உயிர்வாழும் பொருட்கள் என்று நியமிக்க முடியுமா? முடியாது. எனவே உயிரற்ற அல்லது சக்தியற்ற இயற்கையின் ஆற்றலின் நிலையையும் அப்படியே எடுத்துக்கொள்ளுங்கள். அது உயிராற்றல் உள்ளே உறைந்துள்ள (தூங்கிக் கொண்டு அல்லது கனவு கண்டு கொண்டிருக்கின்ற) நிலையாகும். மனிதன் தனது சொந்த முயற்சிகளின் மூலமாக அந்த செயலற்ற, உயிரற்ற திடப்பொருள் நிலையுடன் தொடர்பு கொண்டு, அதனுடன் தானும் அதே மாதிரி இருக்கும் நிலையை ஏற்றுக்கொள்கிறான்.''

## 23-1-1946

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

''முந்தைய பெரிய மாஸ்டர்கள் தர்மம் (கடமை அல்லது நன்னெறிகளை அனுசரித்தல்) பற்றி ஏராளமான விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் எதுவுமே சொல்லாமல் விட்டுவிடவில்லை என்று நான் கருதுகிறேன். ஆயினும் அதை மேலும் விரிவாக்கி நீங்கள் புரிந்து கொள்வதற்காகச் சொல்கிறேன். கவனித்துக் கேளுங்கள். ஒருவன் ஒரு

விவசாயிக்கு மகனாகப் பிறக்கிறான்; அவன் அதற்கேற்ற வாழ்க்கையைப் பின்பற்றுகிறான். அவன் கலப்பை மற்றும் எருதுகளுடன் வயலுக்குப் போகிறான்; நன்கு உழைத்து கோதுமை, சோளம் ஆகியவற்றை விளைவிக்கிறான். இந்த மாதிரி வாழ்க்கை முறை அவனுக்கு மிகவும் பிரியமாக, ஆர்வமுடையதாகத் தோன்ற ஆரம்பிக்கிறது. அதிலேயே நேரத்தை செலவிட ஆரம்பிக்கிறான். இப்படியே தனது மரணம் வரை தன் கடமையை செய்து கொண்டே இருக்கிறான். ஒரு கடமையை அவன் நிச்சயமாகச் செய்திருக்கிறான். இன்னொரு கடமை செய்யப்படாமலே இருக்கிறது. இந்த உலகக் கடமையுடன் கூடவே, வாழ்க்கையின் நோக்கத்தை உள்ளடக்கிய அந்தக் கடமையையும் செய்திருந்தால் அது வாழ்க்கையின் சாதாரணத் தன்மைக்கு ஒரு அழகை (மனம் கவரும் தன்மையை) சேர்த்திருக்கும் அல்லவா? உலகியல் தன்மை, மறு உலகிற்கான தன்மை ஆகிய இரண்டும் அருகருகே சென்றிருக்கும் அல்லவா? இதில் இருந்த குறைபாடு என்ன? தன் பார்வைக்கு வெளிப்படையாகத் தெரிந்த ஒன்றை மட்டும் அவன் கவனித்தான். அவனுடைய பார்வை அதற்கு அப்பால் செல்லவில்லை. தனது தந்தையும் தாயும் எப்போதும் அதே சாதாரண காரியங்களில் ஈடுபட்டிருப்பதையே அவன் பார்த்திருக்கிறான் என்னும் போது எப்படி அவன் பார்வை அதற்கு அப்பால் செல்லமுடியும்? மேலேயிருந்து வரும் சக்தி அவனிடம் தோன்றுவதற்கு ஏதுவாக, தன் வாழ்வில் தனது குறைபட்ட நிலையை அவன் கண்டறிந்து அந்த விஷயத்துக்கு முக்கியத்துவம் தரும் அளவுக்கு அவனிடம் புரிந்து கொள்ளும் திறன் இல்லை. எனவே மேலே மற்றும் அதற்கப்பால் ஏதோ இருக்கிறது என்பதை, தனது கைகால்களால் உழைத்து அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு தனது வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக்கொண்டு அதில் தனது வளர்ச்சியை அவன் பார்த்திருக்கும்போது, அப்படி அதற்குமேல் ஏதோ இருக்கிறது என்பதை அவன் எப்படி அனுபவித்திருக்க முடியும்? அவன் தனது உலகியல் வாழ்க்கையை கவனத்தில் கொண்டு அதில் ஈடுபட்டிருக்கும்போதே, தன்னை ஆன்மீகத்தின் பக்கம் அழைத்துச் சென்றிருக்கக்கூடிய ஒரு மனிதருடன் அவன் பழக்கத்தை வளர்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்பதே இதற்கு விடையாக இருக்கமுடியும். இந்தவிதத்தில் அவன் தனது உலக வாழ்க்கை சார்ந்த ஆபத்துக்களிலிருந்து விலகி இருந்திருப்பான் என்பதோடு அவனது வாழ்க்கையையும் இன்னும் சிறப்பாக, இன்னும் அழகாக விளங்கச் செய்திருப்பான்.’’

## 2-2-1946 (இரவு 9 மணி)

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுரை (முக்கியமாக M2 -க்காகக் கூறியது):

''இக்காலத்தில் குருமார்களின் எண்ணிக்கையும் சீடர்களின் எண்ணிக்கையைப் போலவே அதிகமாக இருக்கிறது. ஒருவருக்கு அவர் விருப்பப்படி எத்தனை சீடர்கள் வேண்டுமானாலும் இருக்கலாம். குருமார்களும் கூட மிகவும் மலிவாகவே கிடைக்கிறார்கள். ஆயினும் இது ஒரு தாழ்வுநிலைபெற்ற காலத்தின் அறிகுறியாக இருக்கிறது. சீடர் என்பவர் உண்மையில் குருவின் காலடிகளைப் பின்தொடர்ந்து செல்கிறவர்தான். குருவின் எண்ணம் எதுவாக இருந்தாலும், அதுவே சீடனின் மனதிலும் தோன்றும். குருவின் சித்தம் அல்லது சங்கல்பம் எதுவாயினும் சீடன் அதை நிறைவேற்றுவதில் நாட்டம் கொண்டவனாக இருப்பான். தனது மாஸ்டருடன் (குருநாதருடன்) உள்முகமான ஒத்துப்போகும் தன்மைதான் இதில் முக்கியமான விஷயம். இது குருவின் தொடர்பின் மூலமாக அடையப்படுவதாக இருக்கிறது. இது மட்டுமே ஒரு சீடனை அந்தப் பக்கமாகச் செல்ல அதாவது குறிக்கோளை அடைய உதவுகிறது என்பதை நிரூபிப்பதாக இருக்கிறது. ஒருமுனைப்பட்ட விதத்தில் இதை நாடியிருப்பது மாஸ்டருடன் உறவுமுறையை அதிகரிப்பதாக, அதாவது அடர்ந்த தொடர்புடைய (இணைப்புடைய) தன்மையை வளரச்செய்வதாக இருக்கிறது. பற்றுறுதியும் உறுதியான எண்ணமும் அதை அடையும் முறையாக இருக்க அவர்மீது வைக்கும் பெருமதிப்பு அதற்கான பாதையாக இருக்கிறது. அதுபற்றி எவ்வளவுதான் சொல்வது? ஒருவன் இதை முயற்சி செய்ய வேண்டும் என்பதே இதன் சாராம்சமும், ஒருமித்த கருத்தும் ஆகும். அது எந்த வழியில் சாத்தியமாகும் என்றாலும் சரி, இதில் முன்னோர்களின் உதாரணத்தை கருத்தில் கொண்டு பின்பற்ற வேண்டும். இந்த வேலை யாரிடம் ஒப்படைக்கப்படலாமோ மற்றும் இந்த வேலையில் ஈடுபட்டிருப்பவர் யாரோ அந்தமனிதர் தேவையில்லாத விஷயம் அனைத்திலிருந்தும் தன்னை விடுபட்டவராக வைத்திருக்க வேண்டியது கட்டாயமாகும். அதாவது அந்தத் தேவையில்லாத விஷயங்களை தன் உபாதையைத் தீர்த்துக்கொள்ள கழிப்றைக்குச் செல்வது போலக் கருதி அவர் நீக்கவேண்டும். இதன் நோக்கம் என்னவெனில் அந்தத் தேவையில்லாத விஷயங்களில் அவசியம் கருதி ஈடுபட்டிருக்கும்போது தன் இதயத்தில் பலத்த அதிர்ச்சி இல்லாதபடி கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதேயாகும். இதுதான் அதற்கான குறிப்பு. இந்த விஷயமாக ஒரு பழக்கத்தை உருவாக்கிக் கொண்டால்

அந்தப் பழக்கமே தனது உரிமைகளும் சலுகைகளும் நிறைவேற்றப்படுவதை, எங்கேயெல்லாம் மற்றும் என்னவெல்லாம் தேவைப்படுகிறதோ அதன்படி நடப்பதை சமாளித்துக் கொள்ளும். நான் இவ்வளவு சொல்லியிருப்பதன் மொத்தக் கருத்து என்ன? அது எந்தவிதத்தில் சாத்தியமானாலும் சரி, தனது வழிகாட்டி அல்லது மாஸ்டருடன் நெருக்கமான, உறுதியான உறவுமுறை நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதேயாகும். மற்ற உதவியாகவே, அதற்கு அடங்கியதாகவே இருக்கும்படி செய்ய வேண்டும். இதனால் M2 - இந்த விஷயங்களையெல்லாம் கருத்தில் கொள்ளவேண்டும்.''

**சுவாமி விவேகானந்தா:**

''ஆன்மீக முன்னேற்றத்தில் இது முதல்நிலைதான், மிக உயர்ந்த நிலையல்ல. இன்னும் மேலும் மேலும் செல்லுங்கள்! அந்த தூரம் எவ்வளவு என்று உங்களால் அளவிடமுடியாது. அந்த தூரத்தை நாமாக அளக்கும்போது நாம் ஒரு நிர்ணயிக்கப்பட்ட நிலையில் இருக்கிறோம். (எனினும்) கடவுள் உங்களுக்கு அருகில் இருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''சுவாமிஜி சுட்டிக்காட்டிய அந்தநிலையை எப்படி உண்டாக்குவது என்பது, இன்று வெளிப்படுத்தப்பட்டது மற்றும் தோற்றமடைந்தது! (சிறிது இடைவெளி) என்னுடைய சீடர் என்ற நிலையிலிருந்து S2 - ம் கூட விலக்கப்படுகிறார்.''

**3-2-1946**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இந்த முறை பயன்படுத்தப்பட்ட வழிமுறை விசேஷமானது. என்னைச் சேர்ந்த அனைத்து பயிற்சியாளர்கள் மற்றும் பிரிசெப்டர்களுக்கும் இந்த வழிமுறை கற்பிக்கப்பட வேண்டுமென விரும்புகிறேன்.''

**வழிமுறை:**

''எந்த சக்கரத்தை நாம் பணிபுரிய விரும்பி எடுத்துக்கொள்கிறோமோ அதை நோக்கி பிராணாஹூதி திசை திருப்பப்பட்டு அப்படியே தொடர வேண்டும்; அவரது தகுதிக்கு ஏற்றவாறு அது திறக்கப்பட (விழிப்படையச் செய்யப்பட) வேண்டும். இந்த விஷயம் எல்லோருக்கும் தெரியும். இதில் பாக்கியிருப்பது என்னவெனில், அச்சக்கரம் அல்லது உயரிய புனித

நிலையில் உள்ள மூலப்பொருள் தானாகவே மலர்ச்சியடைய முயற்சி மேற்கொண்டு அதே திசையில் முன்னேற்றமடையச் செய்யும்படி அதை அமைப்பதற்கு அவருடைய சொந்த சங்கல்பத்தினால் அதில் ஒரு இயக்கத்தை உண்டாக்குவதுதான் தேவைப்படுகிறது, அதாவது ஒரு குறிப்பிட்ட சக்கரத்தில் அது தனது சொந்தத் துணிவு மற்றும் முயற்சியின் மூலமாகவே, விரும்பப்பட்ட திசையில் மலர்ச்சியடைந்து கொண்டுபோகச் செய்வதற்கு அதில் சக்தியை உண்டாக்குவதாகும். இந்த விஷயத்தை சொந்த அனுபவத்தின் மூலமாக உணர்வதற்கும், கிரகித்துக் கொள்ளவும் முடியும். அந்த ஒரு சக்கரத்தை மட்டுமே பணி செய்வதற்கு எடுத்துக்கொள்ள விரும்பும்போது, இப்படி ஒவ்வொரு சக்கரத்துக்கும் இதைப் பயன்படுத்தமுடியும். எத்தனையோ பெரிய நோக்கங்களை இதைக்கொண்டு நிறைவேற்ற முடியும். வழிகாட்டியை நாடி நேரில் வருவதற்கு அதிக நேரமில்லாத ஒருவருக்கு இந்த வழிமுறை மிகவும் நன்மையளிப்பதாக இருக்கும்.''

### 4-2-1946

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''சுவாமி விவேகானந்தாவால் ஏப்ரல் 1, 1946 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள கால அவகாசத்துக்குள் எனது ஆன்மீகப் பிரதிநிதி, மற்றும் என் பதவிக்கு உரியவரை மதித்து அவர்மீது நம்பிக்கை வைத்து வரத் தவறுகிறவர்களை என் சீடர்கள் என்ற நிலையிலிருந்து விலக்கிவிட நான் தீர்மானித்திருக்கிறேன். ஏற்கெனவே C1, S1, S2 ஆகிய சிலரை நான்விலக்கியிருக்கிறேன். இனியும் யார் வரக்கூடும் என்று நம்ப இயலாதோ அவர்களுக்கும் காலப்போக்கில் இதுபற்றித் தெரிவிக்கப்படும்.''

### சுவாமி விவேகானந்தா:

''மார்ச் 31, 1945 இந்தத் தேதியில் ஃபடேகரில் நடைபெற்ற ஆண்டுவிழாவில், பண்டாராவில், உனது பிரதிநிதித்துவம் மற்றும் தலைமைப் பதவி பற்றிய அறிவிப்புக்குப் பின் உண்மையில் ஒரு ஆண்டு சென்ற பிறகு, நீ உன் வேலையைப் புத்தம் புதியதாக செய்யத்துவங்கு. ஏப்ரல் 2, 1946 முதல் நீ வேலையைத் தொடங்கியதாக உன் குறிப்புக்களில் எழுதிவைக்க வேண்டும். ஏப்ரல் 1 என்பது முட்டாள்களின் தினமாகவே இருக்கட்டும். அவர்கள் தாங்கள் விரும்பியபடி செய்யட்டும். உனக்கு ஏப்ரல் 2 தான் சரியான தேதி.''

## 6–2–1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘ G1 - அவருக்கு அளிக்கப்பட்ட உத்தரவுகளின்படி நடந்து கொண்டார். இதனால் அவருடைய இணைப்பை இன்று நான் சரிப்படுத்தினேன். அவரை சகஜமார்க்கத்தில் சேர்த்திருக்கிறேன்.’’

ஷாஜஹான்பூரில் வணக்கத்திற்குரிய லாலாஜியின் பிறந்தநாள் விழா (வசந்தபஞ்சமி) இன்று கொண்டாடப்பட்டது.

## 8–2–1946

**‘பகவான் புத்தரும் உலக சகோதரத்துவமும்’ என்ற தலைப்பை உடைய புத்தகம் பற்றிய பரிசீலனை குறித்து பகவான் புத்தர் கூறியது:**

‘‘இப்புத்தகம் வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜியின் முன்னாள் சீடராகிய U1- என்று சொல்லப்படுகிற ஈடாவைச் சேர்ந்த முக்தியார் ஆகிய ஸ்ரீ உமாசங்கர் சாக்ஸேனா என்பவரால் எழுதப்பட்டது;

**புத்தர் கூறுவது:** ‘‘நான் எங்கேயும் அமைதியைக் காணவில்லை. அது எனக்கு வந்தபோது அதை என் இதயத்தில் கண்டறிந்தேன். ராம் சந்த்தர், நீ இந்தப்புத்தகத்தைப் படித்து என் மீதும் நான் உருவாக்கிய பயிற்சிமுறை மீதும் பாராட்டுக்கள் பொழியப்படுவதை கேட்டுக்கொண்டிருக்கிறாய். ஆயினும், வணக்கத்திற்குரிய உனது மாஸ்டர் லாலாஜி சாகேப் உனக்கு என்ன அளித்திருக்கிறாரோ அது வேறு யாராலும் அடைவதற்கு சாத்தியமில்லாதது. என் வாழ்க்கையை காடுகளில் வாழ்ந்து இலை, தழைகளைத் தின்று நிர்வாணா என்ற அந்தநிலையின் நறுமணத்தின் ஒரு சிறு பகுதியையாவது நுகரும் எதிர்பார்ப்புடன் என்னென்ன விதமான விரதங்களையும் தவமும் செய்தேனோ, யாருக்குத் தெரியும்? கடைசியில் எந்த நிலையை எய்துவதற்கு விரும்பினேனோ அதை அடைய முடிந்தது. ஏராளமான நேரம் அதற்குத் தேவைப்பட்டது. நான் விரும்பிய லட்சியத்தை அடைவதற்கு எத்தனையோ நாட்கள் ஆயிற்று. நான் சுயமுயற்சி செய்து, எத்தனையோ சிரமங்களுக்கு உள்ளாகி, சம்பந்தமில்லாத எண்ணங்களுக்கு எதிராகப் போராடி புதர்களையும் முட்களையும் பாதையிலிருந்து நீக்கினேன். அப்போதுதான் மெய்யுணர்வு நிலையின் ஒளி எனக்கு அதிர்ஷ்டமாகக் கிடைத்தது. அதைச் சென்றடைந்தவுடன் இந்தத் தடைகள் அனைத்தும் தானாக மறைந்தன. அதன்பிறகு மனதில் மௌனநிலை பரவியது. எல்லா இடங்களிலும்

அளவற்ற மிகப்பெரும் அமைதி இருந்தது. உண்மையைச் சொன்னால் அதுவே சுத்தமான நிர்வாணா தன்மையின் நறுமணமாக அமைந்தது. (சுதந்திரம் – துன்பம் முற்றிலும் அழிந்து போனநிலை.) நான் எனது லட்சியத்தை அடைந்த கதை இதுதான். இப்போது உன் கதையைக் கேள். அது உனக்கு செலவில்லாமல், கைம்மாறு எதிர்பாராமல் கிடைத்தது. இதனால் இதன் மதிப்பு போதுமான அளவுக்கு அறிந்து பாராட்டப்பட இயலவில்லை. இதில் பாதையில் வரும் முட்கள், புதர்கள், இடையூறுகள் ஆகியவற்றை நீக்கி சுத்தப்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படவில்லை. அகத் தூண்டுதல்கள் தடை செய்யப்படவில்லை. உனக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் மாஸ்டரின் அருளின் அலையினால் மட்டுமே கிடைத்தது.''

''அன்புள்ள சகோதரா, அந்த முட்கள், புதர்கள், தடைகள் ஆகியவற்றை நீக்கி சுத்தமாக்குவதற்கு நம் நோக்கத்தில் கலப்பில்லாத நேர்மை தேவைப்படுகிறது. அதற்கு நம் உழைப்பைச் செலுத்த வேண்டும். அது உண்மையில், உன் வேலை தான் அல்லது அந்த ஒன்றில் மட்டுமே இவையனைத்தும் ஒன்று கலந்திருப்பதாக இருக்கட்டும். ஒன்று அப்பாதையில் உழைக்க வேண்டும் அல்லது கடவுள் அல்லது மாஸ்டரின் அருளை விரும்பி அழைப்பதற்கு அல்லது தேடி அடைவதற்கு அனைத்தையும் சரணடையச் செய்துவிடுவது அல்லது மாஸ்டருடன் ஐக்கியடைந்து விடுவது வேண்டும். இந்த வழிமுறை அதனுடைய மகத்துவம் இழக்கப்படும் அளவுக்கு மிகவும் சுலபமாக அல்லது இயற்கையானதாகச் செய்யப்பட்டிருக்கிறது. உன்னுடைய குரு வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப்பை விட அதிகமாக எனக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ள இப்புத்தகத்தின் ஆசிரியரைப்பற்றி நான் சொல்ல என்ன இருக்கிறது! என்னுடைய கருத்தின்படி உன் குருவைப்போன்ற ஒருவர் முன்னெப்போதும் பிறந்ததில்லை; இந்த அளவுக்கு தியாகமும் யாரும் எப்போதும் செய்ததில்லை.''

### சுவாமி விவேகானந்தா:

''இது உன் குருவைப் பற்றி பகவான் புத்தரின் கருத்து.''

### பகவான் புத்தர்:

''எளிமையில் அவர் நிகரற்றவராக விளங்குகிறார். அவருடைய அன்பும் வேறு எங்கும் அதற்கு உதாரணம் சொல்ல முடியாத அளவு உயர்வானது. இந்த இரண்டு குணங்களும் உடைய மனிதர் ஆன்மீகத்தின் சிகரத்தை,

உச்சியை எட்டியிருக்கிறார் என்று சொல்லும் அளவுக்கு உயர்ந்தவையாகும். இது சம்பந்தமாக வேறு எந்தக் கருத்துக்கும் இடம் இருக்க முடியாது.''

## 9–2–1946

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''நேற்று இரவு அன்புள்ள ராம் சந்த்தர், நான் அவருடைய திட்டத்தை தடை செய்ய முடியாத விதத்தில் நியாயமான வாதங்களை முன்வைத்தார். சிறிது காலத்துக்கு முன்பு இங்கு எனக்கு இருந்த வேலைக்காக நான் எந்த இடத்தை விட்டு வந்தேனோ அந்த உயர்ந்த உலகிற்கு திரும்பிச் செல்வதற்கு என்னை ஒப்புக்கொள்ள வைக்கும் காரணத்தைக் கூறி, கடைசியில் என்னை அங்கே திரும்பச் செய்திருக்கிறார்.''

### பகவான் புத்தர் கூறியது (முதல் பாடம்):

''ஆன்மீகத்தில் உயர்நிலைகளை அடைவதற்கு இரண்டு வழிமுறைகள் இருக்க முடியும். முதலாவது தன்னை அந்த லட்சியம் அல்லது குறிக்கோளில் ஐக்கியம் அடைவதை அவசியமாக்குகிறது. அவரவர் தங்கள் சொந்த தனிமனித நாட்டத்தின்படி இந்த வழிமுறைகளில் ஏதோ ஒன்றைப் பின்பற்றலாம். இந்த இரண்டிலும் கடைசியில் ஒரேமாதிரி பலன் கிடைக்கிறது. பொதுவாக மக்கள் முதலாவது வழிமுறையைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இரண்டாவது வழிமுறையைப் பின்பற்றுவதற்கு ஒருவர் மிக விசேஷமான மேலான மகாபுருஷராக இருக்க வேண்டும். அது மிகவும் சிரமமானதும் ஆகும். அந்த வழிமுறையில் தனது உணர்ச்சிகளையும், தூண்டுதல்களையும் அழித்த பிறகு ஆன்மீகத்துறையில் நுழைந்த ஒருவர் மட்டுமே வெற்றியடைய முடியும். இரண்டாவது வழிமுறையை இந்த உணர்ச்சிகள் மற்றும் தூண்டுதல்களின் மீது கட்டுப்பாட்டை அடைந்த பிறகு பின்பற்றத் துவங்கவேண்டும். வணக்கத்திற்குரிய உனது மாஸ்டர் முதல் வழிமுறையில்தான் முன்னேற்றமடைந்தார். அன்பின் வழியும் அதுதான். மக்களும் அதே முதல் வழிமுறையைப் பின்பற்ற வேண்டும் என்றே நான் சொல்கிறேன். இதை என் அறிவுறுத்தலாக எடுத்துக்கொள்ள வேண்டும். இரண்டாவது வழிமுறையைப் பின்பற்றுவதற்கு அந்த வழிமுறையை அதன் உச்சத்திற்கு எடுத்துச்செல்லக்கூடிய ஒரு மகாபுருஷர் தானாகவே வரவேண்டும். அது யார் வேண்டுமானாலும் செய்யக்கூடிய காரியமல்ல. என் வாழ்க்கை முழுவதும் முதல் வழிமுறையைத்தான் சுற்றியிருந்தது. இன்னொரு விஷயம் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது இதைவிட மேலான

வழி, யார் அந்த பரமாத்மாவில் (பரம்பொருளின் ஜீவியத்தன்மையில்) ஐக்கியமடைந்திருக்கிறாரோ அவருடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்வதாகும். ஆயினும் அம்மாதிரி மனிதர்களைக் காண்பது அரிதாக (அபூர்வமாக) இருக்கிறது. எப்படியிருந்தாலும் லட்சியத்தில் அல்லது குறிக்கோளில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்வதால் ஏதோ ஒரு நன்மை நிச்சயமாக இருக்கிறது. அதாவது அந்த லட்சியத்தை நமது அதிகபட்ச உயர்ந்த நோக்கம் அல்லது நமது லட்சியம் பார்வையில் தெரிவது என்ற அந்த நிலையில் இருப்பது என்றும் இதைக் கூறலாம். அது எல்லாவிதங்களிலும் நல்லது.''

### 10-2-1946

### பகவான் புத்தர் கூறியது (இரண்டாவது பாடம்):

''நேற்று நான் கூறிய விஷயத்தை எல்லோரும் சிந்தனையில் (மனதில்) வைத்திருக்கவேண்டும். எல்லா வேலைகளையும் குருவிடமே விட்டுவிடுவது மிகப்பெரிய தவறு. உண்மையைச் சொன்னால் சீடர்களின் தேவைகளைக் கவனிப்பது மட்டுமே அவரது ஒரே வேலையல்ல; அதுவும் குறிப்பாக உங்களுடைய குரு வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களைப் போன்ற உயர்ந்த மகாமனிதருக்கு நல்ல ஓய்வும், ஓய்வு நேரமும் கொடுத்து அவர் தனது தெய்வீகப் பணியைக் கவனிப்பதற்கு உதவியாக அவருடைய இதயமும் மனமும் அமைதியாக அவர் சீடர்களைக் கவனிக்கும் சிரமமான உழைப்பிலிருந்து விடுபட்டு இருக்க விடவேண்டும். இந்த விஷயம் உங்கள் மார்க்கத்தில் பெரும்பாலும் கவனிக்கப்படாமலே இருக்கிறது. 'நான் அனைத்து விஷயங்களையும் மாஸ்டரிடம் சரணாகதியாக விட்டுவிட்டேன்' என்பது வெறும் எண்ணமாகவே இருக்கிறது. இதுவரையில் உண்மையான விதத்தில் அதை யாரும் செய்ய முடியவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. ஒரே ஒரு அரிதான மனிதரிடம் மட்டுமே இப்படி ஒரு உதாரணத்தைப் பார்க்க முடியும். இதற்காக மாஸ்டரிடம் சரணடைதல் என்ற இந்த முயற்சியையே மக்கள் விட்டுவிடவேண்டும் என்று அர்த்தமில்லை. முழு நேர்மையுடன் உண்மையாக இதற்கு நிச்சயமாக முயற்சி செய்யப்படவேண்டும். மாஸ்டருக்கு சரணடைவது என்கிற இது மிக விசேஷமான ஒருமுறையாகும். இதை பகவத்கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். அதை மேற்கொள்வதற்கு முன்பு ஒரு மனிதன் தன்னைத்தானே சிறப்பாக உருவாக்கிக் கொள்ள வேண்டும். இது சிறப்பான ஒன்று. இதன் உடன் விளைவும் முடிவான பயனும் ஒன்றேயாகும். இம்மாதிரி மகாபுருஷர்கள் ஏற்கெனவே

முழுமையாக தனிச்சிறப்புடன் வடிவமைக்கப்பட்டவர்களாவர். அப்படியிருந்தாலும் இந்தத் திசையில் ஒருவரால் செய்ய முடிவது எதுவாயினும் அது நன்மையளிக்கும்; அது அவருக்கு மேலும் சிறப்பையும் முன்னேற்றத்தையும் அளிக்கும். தனது மாஸ்டரிடமிருந்து உதவி என்ற வகையில் குறைந்தபட்சமான உழைப்பை மட்டும் பெறும்படி நடந்துகொள்வது சீடனின் கடமையாகும். இதற்காக குருநாதரிடம் உதவிநாடி வருவதை சீடன் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று அர்த்தமில்லை.''

## 11-2-1946

### பகவான் புத்தர் கூறியது (மூன்றாவது பாடம்):

''நேற்று கூறிய பாடத்தை நீங்கள் கற்றுக்கொண்டிருப்பீர்கள். இன்றைய பாடத்தை நான் தருகிறேன். தனது ஆன்மா உண்மையில் எப்படி இருக்கிறதோ அதுபோல தானும் தூய்மையாகவும் அழுக்கில்லாமலும் இருப்பதாகக் கருதவேண்டும். இந்த தியானம் உயிர்த்தன்மையை நிரப்பத் துவங்குகிறது. இதனால் கஷ்டமான விஷயங்கள் சுலபமாக மாறத் துவங்குகின்றன. எனக்கு தூய்மைநிலை (அசுத்தமற்ற தன்மை) அனுபவத்துக்கு வரத் துவங்கியபோது இந்த தியானத்தை மேற்கொண்டேன். ஆன்மீகத்தில் எத்தனையோ சிறு விஷயங்கள் நிகழ்கின்றன. இவை காலப்போக்கில் மிகப்பெருமளவு பலன்களைத் தருகின்றன. உதாரணமாக கரு குழந்தைக்கு அது வளரும்போது பலவிஷயங்கள் கற்பிக்கப்பட வேண்டியுள்ளன. சிறு குழந்தையாக இருக்கும்போதும், அது வளரும்போதும் ஏற்படுத்திக்கொண்ட சிறிய முக்கியத்துவமுடைய பழக்கங்கள், அது வளர்ந்தபிறகு அதன் தனிப்பட்ட நடத்தையில் மற்றும் குணநலன்களில் மிகச்சிறந்த பலன்களைத் தருகின்றன. இப்போது பேசப்படுகிற விஷயத்திலும் கூட இதேதான் நடைபெறுகிறது. ஒரு குழந்தை உங்களிடம் வருகிறது; அதை புத்திசாலியாக்குவதற்காக நீங்கள் அதற்கு கற்பித்து, பயிற்சியளிக்கிறீர்கள். ஆரம்பத்தில் அக்குழந்தையிடம் நடத்தை மற்றும் குணங்களுக்கான எந்த விதைகள் விதைக்கப்பட்டாலும், பிறகு அதற்கான சரியான வயதில் அவை முளைத்து வருகின்றன. இந்த எண்ணத்தின் விளைவு பெருமளவில் இருக்கின்றது. ஒரு விஷயம் என்னவாக உருவாகிறதோ அப்படி உருவாக்குவதில் அதிசயங்களை நிகழ்த்துகின்ற ஒரு விஷயம் இதுவே. இதனால் தனது சொந்த எண்ணங்களை சுத்திகரித்துக்கொண்டே இருப்பது ஒவ்வொருவரின் கடமையும் ஆகும். உங்களுக்கு அளிக்கப்படுகிற பயிற்சி அல்லது கல்வி

அப்படி ஒரு இனிமையான, மென்மையான மற்றும் எளிமையான விஷயம் அதிலிருந்து வேறு உதாரணம் காண அரியதான ஒன்றாகும். அதனுடன் ஒப்பிடும் போது மற்ற அனைத்தும் கனமாக (பளுவாக) இருப்பதாகத் தோன்றும். ஓரளவுக்கு ஆகாயத்தை அல்லது வெட்டவெளியை அதற்கு உதாரணமாகச் சொல்லலாம். ஆனால் அதிலும் கூட பிழை அல்லது குறைபாடு அல்லது தவறு இருக்கிறது. ஒரு பண்படாத, சீரற்ற முறையில் இந்த உதாரணம் சொல்லலாம் எனினும் உண்மையில், அது வெறும் உத்தேசமான, ஊகமான கருத்தாகவே இருக்கிறது. அப்படியிருக்க என்ன உதாரணம் சொல்லி இதை சித்திரிக்க முடியும்? என்னைப் பின்பற்றுகிறவர்கள் ஏராளமாக இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களில் யாருமே சத்தியநிலையை நெருங்க முடியவில்லை.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''மனம் ஆன்மீகத்துடன் சேர்த்து அதன் காற்றையும் பெற்றுக் கொள்கிறது. களிமண்ணால் செய்யப்பட்ட ஒரு பொருளின் மீது நறுமணம் பூசியதைப்போல இருப்பதாக இதை நீங்கள் புரிந்து கொள்ளலாம். அதை நீங்கள் உடைத்தால் வெறும் களிமண்தான் இருக்கும். நான் சொல்ல வருவது என்னவெனில் பகவான் புத்தர் அழுக்கு மற்றும் அசுத்தம் என்று குறிப்பிட்டதாகிய ஆன்மீகத்தின் மீது படியும் கடினத்தன்மையை ஆன்மாவுக்கே சொந்தமான தூய்மையைப் பெறும் பொருட்டு தொடர்ந்து நீக்குவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கவேண்டும். அசுத்தத்தையும் கடினத்தன்மையையும் ஆன்மீகத்தின் நறுமணம் என்று தவறாகக் கருதி அதையே ஆன்மீகம் என்று எண்ணி ஏமாந்து விடும் இந்தப் பிரச்னையில் எல்லோருமே சிரமப்பட்டிருகிறார்கள்.''

**13-2-1946**

**பகவான் புத்தர் கூறியது (நான்காவது பாடம்):**

''நான் அறிந்து கொண்ட விஷயங்களிலிருந்து நன்மையளிக்கக் கூடிய விஷயங்களை உங்களுக்கு நிறையச் சொல்லியிருக்கிறேன். உண்மையில் ஆன்மீகம் என்பது எளிமை தான். அந்த எளிமைநிலையை அடைவதற்கு முன்பு நாம் அடைவது எதுவாயினும் அதை உலகியல் ஆற்றல் என்றுதான் குறிப்பிட முடியும். அங்கே அடையப்பட வேண்டியதாக இருக்கும் குறிக்கோள்கள் எதுவாயினும் தூய்மையாக மற்றும் எளிமையாக இருக்கும் ஆன்மீகம் பற்றி ஒரு மதிப்பீடாகவே அவை உள்ளன. இங்கே புலன்கள் அனைத்தும் முற்றிலும் அமைதியாக மௌனமாக இருப்பதாகத்

தோன்றுகிறது. அவற்றின் நிலை யாரோ அதைப் பிடித்து வைத்துக்கொண்டதுபோல் இருக்கிறது. அதற்குமேல், தன்னைத்தவிர வேறு யாருடைய கட்டுப்பாட்டிலும் அது இல்லை என்ற உள் அனுபவம், புற அனுபவம் ஏற்படுகின்றது. வெறும் சப்தங்களையும், ஆரவாரங்களையும் (கூச்சலும், குழப்பமும் மற்றும் ஒரு மாதிரி பிரமிப்பைத் தரும் படாடோபம் (ஆடம்பரம்) அல்லது பெரும் அளவில் மதி மயக்கும் நிலை, ஆகியவற்றையும்) ஆன்மீகம் என்று குறிப்பிடுகின்ற மூடர்கள் அவர்கள். உண்மையான ஆன்மீகம் மிகவும் மென்மையான இளகும் தன்மை உடையது. அதை அம்மாதிரி மிருதுவானது என்று குறிப்பிடுவது அல்லது சிந்திப்பதும் கூட தவறாகிவிடும் என்னும் அளவுக்கு அது மென்மையானது. அதாவது நான் சொல்ல விரும்புவது என்னவெனில் (மென்மை, மிருதுத் தன்மை, இளகும் தன்மை இது போன்ற) இந்த வார்த்தைகளின் இதயத்தின் மீது படியும் மொழியாக்கமானது உண்மையில் அங்கே என்ன இருக்கிறதோ அந்த சத்தியநிலையைவிட பலமடங்கு கனமாக இருக்கிறது என்பதே ஆகும். இப்போது அதைப் பற்றி என்ன சொல்வது?''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இந்த நிலையை 'செயலற்ற தன்மைநிலை' என்று குறிப்பிட்டுச் சொல்லலாம்.''

**பகவான் புத்தர்:**

''இம்மாதிரி நிலையில் தெய்வீக ஞான வெளிப்பாடுகள் வரத் துவங்குகின்றன. இதனை ஒருமுறை சுவைத்தவர்கள் புனிதமானவர்கள். (பாராட்டத் தகுதியுடையவர்கள்).''

**19-2-1946**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''உண்மையான விதத்தில் அவர்கள் யாருமே ஐக்கிய நிலையை எய்தவில்லை. நான் எப்படியோ மனிதர்களை பயிற்சியளிக்க அனுமதிப்பதற்கு இழுத்தும் தள்ளியும் கொண்டு வந்தேன். மக்கள் இதனால் நன்மையடைய ஆரம்பித்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த விஞ்ஞானம், அறிவு எல்லா இடங்களிலும் பிரசாரம் செய்யப்படுவதற்காக வந்தது. உண்மையைச் சொன்னால் இந்த விஞ்ஞானம் / அறிவுக்கு அடித்தளத்தை நானே அமைக்க வேண்டியிருந்தது. பயிற்சியளிப்பதற்கு யாருக்கு அனுமதியளிக்க வேண்டுமோ அந்த நிலையிலிருந்து யாரையுமே கண்டறிய முடியவில்லை. அந்த நிலை இன்றியமையாத (சத்தியமான –

அடிப்படையான) மூல அம்சமாக இருக்கிறது. காரியங்கள் அவசரமாக செய்யப்பட்டுள்ளன. பிரியமான ராம் சந்த்தரின் கேள்விக்கு இதுதான் பதில். என் ஆயுட்காலத்தில் பிறருக்குப் பயிற்சியளிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட மனிதர்கள் கர்வம் சார்ந்த குறைபாடுகள், தவறுகள், மற்றும் தலைவணங்காத அதாவது பணிவில்லாத விதத்தில் நடந்து கொண்டது ஏன்? என்று அவர் என்னை நேரடியாகவே கேட்டார். 'ஒரு சிறு மஞ்சள் துண்டை வைத்திருப்பவரெல்லாம் தன்னை மளிகைக் கடைக்காரராக நினைக்க ஆரம்பித்துவிட்டார்.' என்ற உருதுமொழி ஈரடிச் செய்யுளை ராம் சந்த்தர் இதற்கு மேற்கோளாகச் சொன்னார்; அதை நான் ரசித்தேன். பயிற்சியளிப்பதற்குக் கொடுத்த அனுமதி மனிதர்களை ஏமாற்றிவிட்டது. இவர்களில் ஏதோ ஓரளவுக்கு சிறந்தவர்களாக இருந்தவர்கள், இந்த அனுமதியைப் பெறுவதற்கு ஆசைப்பட தங்களுக்கு தகுதியில்லை என்று கருதியிருந்தவர்கள்தான். அனுமதி பெற்றுவிட்டது பற்றிய கர்வமே உண்மையான குறிக்கோளிலிருந்து தவறிவிழுந்து விட்டதாக ஆகிறது. தன்னைப் பற்றி முக்கியத்துவத்தைத் தக்க வைத்துக் கொள்கிற அன்பு என்ன மாதிரியான அன்பு! அன்புள்ள சகோதரா, சுய முக்கியத்தவம் என்பது கடினத்தன்மை மட்டுமல்ல; அதை கர்வம் என்றே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்!

### 20-2-1946

### பகவான் புத்தர் கூறியது (ஐந்தாவது பாடம்):

''நான் ஏற்கெனவே நான்கு பாடங்களைக் கொடுத்திருக்கிறேன். இப்போது, ஆன்மீகப் பயிற்சி அளிக்கின்ற மனிதருக்கு நற்பண்புகள் / நன்னெறிகள், நற்குணங்கள் நிறைந்திருக்க வேண்டும். அந்த மனிதர் அல்லது அப்பெண்மணி தனது உள்முகமாக மற்றும் வெளிமுகமான அம்சங்களுடன் ஒன்றியத் தன்மை அடைந்திருக்க வேண்டும். இதை ஆன்மீக சம்பந்தமான விஷயங்களுக்கு மட்டுமே சொல்கிறேன். இல்லையென்றால் உலகியல் தன்மை சம்பந்தமாக, இந்தக் கொள்கைக்கு எதிராகவும் போகவேண்டியிருக்கும். இந்த நோக்கத்தில் உள்முகமான மற்றும் வெளிமுகமான இரண்டு அம்சங்கள் அடங்கியுள்ளன. இவை ஒன்றுக்கொன்று முற்றிலும் சமநிலையுடையதாக இவற்றிடையே எந்த வேறுபாடும் இருக்கவிடாதவாறு அமைந்துள்ளன. இப்படி ஒருநிலைப் பட்ட தனிமனிதப் பண்புக்கு உரியதான எந்த ஒரு பகுதியும் அதாவது ஒரு மனிதர் இருக்கும் தன்மை, அவர் மாறுகின்ற தன்மை ஆகிய எதுவும் அதற்கு எதிராக இருக்கக்கூடாது. இவை அனைத்திலிருந்தும் விடுபட்டவராக / பற்று

இல்லாதவராக ஒருவர் இருக்கவேண்டும் என்னும் போது எங்கேயாயினும், எதுவாயினும் அவருக்குத் தேவைப்படும்போது அதற்கான வலியுறுத்தல் அல்லது ஆற்றல் அதே திசையில் உணரப்பட வேண்டும். அவர் உயர்வான நிலை அடையும் போதும் கூட அந்த சமமான நிலை இருக்கவேண்டியது அவசியமாகிறது. இங்கே அந்த நிலையில் இருக்கின்ற யாரையும் நான் காணவில்லை. ராம் சந்த்தர் என்ற ஒரு மனிதர் மட்டும் அப்படி உருவாகியிருக்கிறார் என்றால் அதை கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது. அதாவது அனைவரும் அந்த நிலைக்கு வர முயற்சி செய்ய வேண்டும் என்று சொல்கிறேன். அனைவரையும் அந்த நிலைக்குக் கொண்டு வர முயற்சி செய்யவேண்டியது உன் கடமையாகும். உனக்கு அளிக்கப்பட்ட பயிற்சி ஆரம்பத்திலிருந்தே அப்படி இருந்திருக்கிறது; இன்னும் அதே வழியில் தொடர்கிறது. ஆனால் அதை அறிந்து பாராட்டுவதற்கு யாரும் இல்லை. உன்னுடன் ஏற்படும் தொடர்பின் மூலமாக மக்கள் அதன் பலனைப் பெறத் துவங்குவதும் சாத்தியம்தான். உன் விஷயம் மிக விசேஷமான ஒன்றாகும். உனது ஆன்மீக சங்கத்தின் பிரிசெப்டர்களின் கவனத்தை இந்தப் பக்கமாகத் திருப்புவதற்கு நான் விரும்புவேன். இந்த ஒரு விஷயத்துக்காகத்தான் நான் காடுகளில் சுற்றித் திரிந்தேன். எத்தனையோ கஷ்டங்களுக்கு உள்ளானேன். என் ராஜ்யத்தைத் துறந்தேன். ஆனால் இந்த ‘நிர்வாணா’ என்ற நிலை மகிழ்ச்சி மற்றும் ஆனந்தம் ஆகியவற்றில் அரச பதவியை விடக் குறைந்ததா? உண்மையைச் சொன்னால் நிர்வாணா என்ற நிலையில் எல்லையற்ற பொக்கிஷத்துடன் ஒப்பிடும் போது என் சாம்ராஜ்யம் மிகவும் சிறியதாகும். இந்த தெய்வீக நிலைக்கு எவ்வளவு விலை கொடுத்தாலும் ஈடாகாது.’’

‘‘இம்மாதிரி குணங்கள், சிறந்த பண்புகள் அனைவரிடத்திலும் வளர்ச்சி அடையட்டும். அதிகபட்சம் சாத்தியமான அளவுக்கு முழுமையாக தன்னை கடவுள் அல்லது குருவுடன் ஐக்கியப்படுத்திக் கொள்வது இந்த வழிமுறையில் அடங்கியுள்ளது. இப்படி அதிகபட்சம் சாத்தியமான அளவு ஐக்கியம் அடைவதையே குறிக்கோளாகக் கருதுபவராக – இதுமட்டுமே ஒருவருடைய கவனத்தில் இருக்கவேண்டும். ஆயினும் ஒருவர் தான் மிக அதிக அளவு முன்னேற்றத்தை அடைந்திருப்பதாக ஒரு எண்ணம் அவர்மனதில் தோன்றவும் கூடாது, அதிகமாகவும் (அதிகரிக்கவும்) கூடாது. அவருக்குள் எந்த ஒரு தடை அல்லது குறுக்கீடும் இருக்கக்கூடாது. தான் மலர்ச்சியுடன் விளங்குவதாகவும், நிலவின் ஒளியைப்போல எங்கும் பரவுவதாகவும் உணரவேண்டும். அது எப்படி இருந்தாலும் சரி தங்கள் சொந்த உள் அனுபவம் மற்றும் புற அனுபவத்தின் மூலமாக நேரடியாக

அதில் அறிமுகம் இல்லாதவர்களுக்கு இதுபற்றி விளக்கமாகச் சொல்லி போதுமான அளவுக்கு அதை விவரித்து புரிந்துகொள்ளச் செய்வது சாத்தியமில்லை. தன்னிடத்தில் இந்த குளிர்ச்சியான தன்மையை (அதாவது சாந்தமான மனநிலையை) அடையக் கூடிய மனிதர் களத்தில் யாராவது இருக்கிறார்களா? அடடா! கிட்டத்தட்ட எதுவுமே செய்யாமல் உங்களுக்கெல்லாம் என்ன கிடைத்திருக்கிறதோ அது என் வாழ்க்கையில் கிடைத்திருந்தால் காடுகளில் நான் அலைந்து சிரமப்பட வேண்டியிருக்காது. இந்தக் காலகட்டத்தை நீங்கள் ஏதோ சாதாரணமானது என்று நினைக்கிறீர்களா? இது மீண்டும் வரும் என்று எதிர்பார்க்கிறீர்களா? இது மறுபடியும் வராது என்றே நான் அஞ்சுகிறேன்; இந்த ஆன்மீக மேன்மைநிலை ஆகிய ஏராளமான செல்வம் முழுவதையும் அவர் (ராம் சந்த்தர்) தன்னோடு எடுத்துச் சென்று விடுவார் என்று நினைக்கிறேன். (சிறிது இடைவெளி) இந்த அன்பரின் உள்நிலையை நேசிக்கப்படுகிறவர் மட்டுமே புரிந்துகொள்ள முடிகிறது! பழங்கால முன்னோர்களாகிய நாங்கள் யாவரும், தானாகவே இந்தப் பாதையில் கவரப்பட்டு வருவது சாதாரண விஷயமா? அது எந்த விஷயத்துக்காக என்று சற்றே கவனியுங்கள். அகலமும், நீளமுமாக இது எவ்வளவு பெரிய விரிவாக்கம்! இந்தமாதிரி உறவுமுறை (தொடர்பு) எல்லோரிடமும் வளர்ச்சி பெறுவதில்லை. தானே முன்னுதாரணமாக விளங்குகின்ற ஒரு குருநாதர் வேறு எங்காவது கிடைக்க முடியுமா? எத்தனையோ நூற்றாண்டுகளாக காலம் ஒருபோதும் இப்படி ஒரு நிகழ்வைக் கண்டதில்லை! அப்படிப்பட்ட ஒரு மாஸ்டர் யாராவது ஒருவருடன் ஐக்கியம் அடையும்போது அதற்கு மேல் என்ன பாக்கி இருக்கிறது? இதை யாருடைய திறமை என்று சொல்வது! நான் என்ன சொல்லமுடியும்? மக்கள் இந்த உள்நிலையை தங்களிடத்தில் உருவாக்கிக் கொள்ள முயற்சி செய்வார்களாக!''

**சுவாமி விவேகானந்தா:**

''எப்போதுமே மிக உயர்ந்த நிலைக்கே முயற்சி செய்யுங்கள்! இயற்கையைப் பின்பற்றி நடந்துகொள்ளுங்கள்! அதன்பிறகு இந்த நிலைமை தானாகவே வரும்.''

## 26-2-1946

**பகவான் புத்தர் கூறுவது (ஆறாவது பாடம்):**

''என் வாழ்க்கையில் மக்கள் என்மீது மிகப்பெரிய எதிர்ப்புக்களைக் காட்டினார்கள். என் பயிற்சியின் வழிமுறை அதிகபட்சம் லேசானது.

ஏராளமான அனுபவத்திற்குப் பிறகே இந்த ஞானம் எனக்கு வந்தது. நல்வாழ்வுக்கு, இதுதான் வழிமுறையாகும். எந்த விதத்திலாயினும் சரி. நம்மைப் பற்றிய நினைவின் வாசனை தக்க வைக்கப்பட்டால், அது நிச்சயமாக 'நிர்வாணா' என்ற நிலையிலிருந்து (பூரண சுதந்திர நிலையிலிருந்து) தூரமாக விலகியிருக்கிறது. சரிப்படுத்த வேண்டிய அவசியத்தை உடைய ஒரு விஷயம் இது. அங்கு எந்தப் பக்கமும் சாயாத, சமநிலை தவறாத ஒரு நேரான மற்றும் எளிமையான நிலை இருக்க வேண்டும். சிறிதளவு பளு, மிக லேசான கனம் இருந்தாலும் அங்கே (ஆன்மாவின்) நல்வாழ்வு இல்லை. நான் ஏராளமான சன்னியாசிகளைப் பார்த்திருக்கிறேன். அவர்களிடம் இந்த நிலையை ஒருநாளும் நான் காணவில்லை. இது எவ்வளவு சுலபமான விஷயமாக இருந்தும், அதை அடைவது எத்தனை சிரமமாக இருக்கிறது! ஆன்மீகப் பயிற்சியில் இருக்கும் போது நமது குறிக்கோளை அடையும் சமயத்தில் ஒரு விஷயம் அங்கு வருகிறது. அதாவது, அது ஒருவனுடைய குறிப்பிட்ட நிலையில், அந்த நிலைக்கு எதிராக பளுவான தன்மை ஆரம்பித்திருக்கிறதா? என்பது உண்மையான (சத்திய) நிலையை அடையும் அதிர்ஷ்டம் கிடைக்கிறது. ஒரு குறிப்பிட்ட ஆன்மீக நிலையில் அதற்கு ஒரு சுமையாக அல்லது தடையாக அதனுடன் ஒட்டியிருக்கின்றவைகளைக் கண்டறியும் இந்த நிலைக்கு வருவதும் மிகவும் அவசியமாகும். அது ஒவ்வொரு நிலையிலும் குறைவாக அல்லது அதிகமாக வெளிப்படுகிறது. ஆயினும் அதிலிருந்து விடுபட்டு வெளிவரக்கூடிய ஒரு சாதகன் மிக அபூர்வமாகும்.''

**கேள்வி:**

''அதிலிருந்து வெளிவருவதற்கான வழிமுறை என்ன?''

**பகவான் புத்தர்:**

''எளிமையான மற்றும் நேர்மையான வாழ்க்கையை நடத்துவதுதான் இதற்கான வழிமுறை. அப்போது பழக்கத்தில் இருக்கின்ற நடைமுறைகளை, வழிபாட்டு முறைகளை அவசியமான அளவுக்கு மட்டுமே பின்பற்ற வேண்டும். இந்த நடைமுறைகளில் ஒருவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பதை அவனே உணர்வதில்லை. தன்னை முற்றிலும் சக்தியற்றவனாகவும், பலவீனமாகவும் உணரச்செய்யும் அளவுக்கு ஒருவன் தன்னை தாழ்த்திக்கொள்ள வேண்டியதாகிறது. மேலே விவரித்தது போல முக்தியடைந்த ஆன்மாக்களின் நிலையில் ஏற்படுகின்ற இந்த உள்நிலையை யாராவது தன்னிடம் உருவாக்கிக் கொள்ள முடிந்தால் அதை அவன் தனது குறிக்கோளின் அதாவது 'நிர்வாணா' என்ற தன்மையின்

அருகில் சென்றுவிட்டதாக எடுத்துக் கொள்ளலாம். ஆயினும், இந்த உணர்வு அல்லது உணர்வுறு நிலையும் கூட அங்கே நீடித்து இருக்கக்கூடாது. அவன் வந்து சேர்ந்திருக்கின்ற அந்த உயர்ந்த நிலை தனக்கும் சொந்தமில்லை; வேறு ஒருவருக்கும் சொந்தமில்லை என்று கருதும் அளவுக்கு அவர் மிகவும் தன்னை மறந்தநிலையில் இருக்கவேண்டும். அப்போது தன்னுடையது, மற்றவருடையது என்ற இரண்டு எண்ணங்களுமே மறைந்து விடும்! நல்லது, யாருக்கு இந்த நிலையை அடையும் அதிர்ஷ்டம் வரும்? அதற்காக தங்களுடைய அனைத்தையும் தியாகம் செய்கிறவர்களுக்குத்தான் வரும். அதற்கான ஏக்கமும், அதை அடைவதற்கு அமைதியற்றுத் தவித்து இருப்பதும்தான் அந்தப் பாதையை அமைக்கின்றன! அந்த ஏக்கம் எந்த விதமானது? அமைதியாக உருகுவது தான்! யாரொருவர் இந்த நிலையை தன்னிடத்தில் எந்த அளவுக்கு உருவாக்கிக் கொள்ள முடிகிறதோ அந்த ஒருவர், அதே அளவுக்கு அதில் வெற்றியடைவார். உன் குருநாதர் மேற்கோளாகக் கூறிய இந்த இரண்டு வரிச் செய்யுளைக் குறித்து வைத்துக்கொள். ‘அனைத்தும் அளிப்பவராகிய கடவுள் இதைத் தரவில்லையென்றால், இந்த உயர்நிலையை ஆயுதங்களின் வலிமையால் அடைய இயலாது.’ (இது அடிக்கடி பலராலும் மேற்கோளாகக் கூறப்படும் பாரசீக மொழி ஈரடிச் செய்யுள்.)

‘‘ஒரு சாதகனை பலவீனப்படுத்துகின்ற மேலும் ஒரு எண்ணம், தன்னால் அதை ஒருபோதும் அடைய இயலாது என்று நினைப்பதேயாகும். இந்த ஒழுக்க முறையில் நிபுணர்களாக விளங்குகின்ற முனிவர்கள் அல்லது மகான்கள் பற்றிய உதாரணங்கள் மேற்கோள் காட்டப்படுகின்றன. அதன் பிறகு தன்னை அவர்களுக்கு சமமாக உயர்வடையச் செய்து கொள்வது எப்படி என்பது உறுதி செய்யப்படுகிறது; ‘புத்தர் சென்றடைய முடிந்த நிலையை யாராலும் அடைய முடியாது என்பார்கள்.’ (சிறிது இடைவெளி) அந்த உதாரணத்தை தன் முன்னால் வைத்துக்கொண்டு, எந்த நிலையிலும் தைரியத்தையும் நம்பிக்கையையும் இழந்துவிடாமல், அதன் மீது அன்பை வளர்த்துக் கொண்டு பயிற்சி செய்ய வேண்டும். தன்னுடைய லட்சியத்தை அடைவதில் உதவியாக இருக்கக்கூடிய வழிமுறைகளை அனுசரிக்க வேண்டும். அந்த நிலையை அடையும் வரையில் ஓய்வடையக் கூடாது; அமைதியடையக் கூடாது. அமைதிபெற்ற நிலை தானாகவே வந்தடையும் போது அதை நாம் உருவாக்க முயற்சி செய்தாலும் கூட, அமைதியற்ற நிலை தோன்றாது என்பதைப் பேச வேண்டியதில்லை. ஒருவன் சென்றடைய வேண்டிய இடம் அந்த நிலையே ஆகும். அதற்கு முன்பாக ஓய்வு என்ற

உணர்வே இருக்கக்கூடாது. இந்த நிலை அனைவரிடத்திலும் வளர்ச்சியடைவதற்கு முயற்சி செய்யுங்கள்.''

**சுவாமி விவேகானந்தா:**

''இது பெரும்பாலும் ஆன்மீகப் பயிற்சி செய்கின்ற சீடனை அல்லது சாதகனைச் சார்ந்ததாகவே – அவனது கடமையாகவே இருக்கிறது.''

**பகவான் புத்தர் தொடர்ந்து கூறியது:**

''இந்த 'நிர்வாணா' என்ற நிலை அவர்களிடத்தில் வளர்ச்சியடையும் வரையில் இதிலிருந்து ஒருபோதும் பின்வாங்குவதில்லை என்ற உறுதியான தீர்மானத்தை அவர்கள் செய்யவேண்டும். இதில் ஒரு சபதம் (உறுதிமொழி) எடுத்துக்கொள்ள வேண்டும். இதை அவர்கள் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டே இருக்கவேண்டும். ஆன்மீகப் பயிற்சியை செய்கின்ற அனைவருக்கும் இதை நான் சொல்கிறேன். **அந்த ஒன்றுக்காக** அந்த லட்சியத்துக்காக அனைத்தையும் கைவிடுகின்ற ஒருவனை, அந்த லட்சியமும் எதிலும் குறைவுடையவனாக விட்டு விடுவதில்லை. கடவுளை அடைவதற்கு புத்தர் ஒருபோதும் பயிற்சியளிக்கவில்லை என்று மக்கள் பெரும்பாலும் உறுதியாக நினைக்கிறார்கள். நான் ஒருபோதும் அதிலிருந்து தவறவில்லை என்று சொல்ல வேண்டியிருக்கிறது. எது சத்தியமானதோ அதையே நான் எடுத்துக்கொண்டேன்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''ராம் சந்த்தர், உனக்கு எவ்வளவு அற்புதமான பயிற்சி, மெய்ஞ்ஞானம் கிடைத்துக்கொண்டிருக்கிறது! பகவான் புத்தர் எடுத்துரைத்த இந்தக் கருத்துக்கள் மிகச்சிறப்பானவை. உன் மனதில் 'வெற்றிடம்' என்று தோன்றிய வார்த்தை அவர் கூறிய நிலையே ஆகும்.''

27-2-1946

**சுவாமி விவேகானந்தா:**

''ஆன்மீக உயர்நிலைகள் பூஜ்யம் என்ற புள்ளியில் அமைந்துள்ளன. நீங்கள் எவ்வளவு ஆழமாக மேலும் மேலும் செல்கிறீர்களோ அந்த அளவு அந்தப்புள்ளி விரிவடையத் துவங்குகிறது. பூஜ்யம் என்பது என்ன? எல்லாவற்றையும் எங்கும் மூடுகின்ற ஒரு உறையாக மாறுகின்ற ஏதோ ஒன்றின் விரிவாக்கம் அது. அதில் நீங்கள் பார்ப்பது என்ன? ஒரு வரம்புக்குட்பட்ட நிலையைத்தான். அதை உடைத்துவிடுங்கள். அதன் பிறகு ஆன்மீக வாழ்க்கையில் நீங்கள் நுழைகிறீர்கள். அதற்குப் போவதற்கு

முன்பு, சூட்சும சரீரததின் ஒவ்வொரு உறையையும் நீக்கி. உங்களை விட்டு (உங்கள் சுயத்தை விட்டு) நீங்கள் வெளி வரவேண்டும். இந்தத் தயாரிப்பு உள்முகமானதாக, அழிவுக்கு வழிவகுக்கும் ஒரு சங்கிலி தொடரை உருவாக்கும் சிறு புள்ளிகளை நீக்குவதாக இருக்கவேண்டும். அழிவு என்று சொல்லும்போது உடலின் எந்த உறுப்பும் உருக்குலைந்து போவதை நான் குறிப்பிடவில்லை. இதன் கருத்து நீங்கள் உங்களை வெவ்வேறு விதமான நிறங்களில், சாயல்களில் சுற்றி மூடிக்கொள்கிறீர்கள் என்பதேயாகும். மின்சாரத்தில் நிறங்கள் இருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. அவை எப்படி வந்தன? உங்களால் உருவாக்கப்பட்ட மின்சக்தியின் உற்பத்தி ஸ்தானத்தின் காரணமாகத்தான் வந்தன. அதேபோல உங்களுக்கு உள்ளேயும் மின்சக்தியின் உற்பத்தி நிலையத்தை உருவாக்கி, உங்கள் எண்ணத்தின் பல்வேறு விதமான சாயல்களுடன் அதை உள்ளார்ந்த ஜீவனுடன் இணைத்து அவை ஒவ்வொன்றுக்கும் பல்வேறு விதமான செயல்முறைகளுக்குப் போகும்படி நிறம் கொடுத்திருக்கிறீர்கள். இந்த வித்தை எதற்கு? இதற்குப் பொறுப்பாளி யார்? நீங்களேதான். வேறு யாருமல்ல!''

3-3-1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (லக்கிம்பூர் - கேரியில் சகஜ மார்க்கப் பயிற்சி செய்யும் புதிய தலைமுறை சாதகர்களுக்குக் கூறியது):**

''என்னுடைய நம்பிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் அனைத்தும் இப்போது உங்கள் எல்லோருடனும் இணைந்திருக்கிறது. நல்லவர்களாக மற்றும் உயர்தரமாக பயிற்சி செய்யும் சாதகர்களாக நீங்கள் வளர்ச்சி பெற வேண்டும். என் காலத்தில் என்னுடையவர்களாக இருந்தவர்களில் ஒருசிலர் தவிர மற்ற அனைவரும் மிதிபட்டு நசுங்கிவிட்டார்கள். அவர்களுக்கு பெருந்தீமை காத்திருக்கிறது. அவர்கள் விட்டுவைக்கப்படமாட்டார்கள். இப்போது புதிதாகப் பயிர் செய்யப்பட்டவற்றிலிருந்து (அதாவது புதிதாகப் பயிற்சியில் சேர்க்கப்பட்டிருப்பவர்களிடமிருந்து) எதிர்பார்ப்புக்கள் உள்ளன. ஆன்மீகம் ஒரு நகைச்சுவையான விஷயமில்லை; அது குழந்தைகளுக்கான விளையாட்டும் அல்ல. இதற்கான படிகள் மிக அதிகபட்ச எச்சரிக்கையுடன் மற்றும் அக்கறையுடன் திட்டமிடப்பட வேண்டும். மனத்தின் மனப்பான்மைகள் (சித்த விருத்திகள்) கட்டுப்பாட்டில் வைக்கப்பட வேண்டும். அவற்றை தவறாக உபயோகிப்பது தடை செய்யப்பட வேண்டும். அவற்றின் கடிவாளம் எப்போதும் மனிதனின் கையில் இருக்க வேண்டும். எவ்வளவு தேவையோ அதற்கு மேல் எதையும்

அனுமதிக்கக்கூடாது. மனம் எப்போதும் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கவேண்டும். இதில் இன்னும் எத்தனையோ நியமங்கள் உள்ளன. அவை படிப்படியாக தானாகவே வெளிப்படுத்தப்படும். இவற்றுக்கான தீர்வுகளும் உள்ளன. அதற்கு சுயகட்டுப்பாடு தேவையாகிறது. ஆவலும் உற்சாகமும் மட்டும் போதாது. தீவிர ஆவலும் உற்சாகமும் என்ற வார்த்தைகளை மக்கள் தவறாக நினைத்துவிடக்கூடாது. நான் சொல்லவருவது என்னவெனில் சாதாரணமான எளிமையான நிலையை அப்படி சீர்கெடாமல் வைத்துக்கொண்டு அவர்கள் அனைத்துவிதங்களிலும் மேலான உச்சநிலையுடன் (உச்சநிலை ஜீவத்தன்மையுடன்) முழுமையாக ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். அது எப்படி இருக்கிறது என்றால் அது பற்றிய விழிப்பு உணர்வு அவர்களுக்கே இல்லை என்பது போலிருக்கிறது. அதாவது புலன்களினால் அளிக்கப்படுகிற காரசாரங்கள் (இன்ப நுகர்ச்சி பற்றிய விஷயங்கள்) அவற்றின் மீது பற்று இல்லாத விதத்தில், ஒரு பக்கமாக ஒதுக்கிவிடப்படுகின்றன. இந்த விஷயங்களை ஆற்றில் வெள்ளம் வருவது போல என்று கருதவேண்டும். நதியின் வெள்ளத்தைத் தடுக்க ஒருவன் எதுவும் செய்ய இயலாது. அவன் தான் அதில் செய்யக்கூடியதாக, தனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்பதை உணரவேண்டும். இந்த விஷயங்களை கடைசியில் ஒரு முடிவுக்குக் கொண்டு வருகின்றதாகிய, அந்த வெள்ளத்தின் அதிகரிப்பு, குறைவு ஆகியவற்றில் சம்பந்தப்படாதவனாக இருக்கவேண்டும். ஆரம்பத்தில் இருந்தே இந்த விஷயங்களை முடிவுக்குக் கொண்டுவருகிறவனாக ஒருவன் முன்னேற வேண்டும். தேவையில்லாத அனைத்தையும் விலக்கி ஒழித்துவிட்டு மிகச் சிறந்த மற்றும் மிக விசேஷமான ஒரு விஷயத்தை நான் சொல்கிறேன்.''

### சுவாமி விவேகானந்தா:

''மேலே குறிப்பிடப்பட்ட தேவையில்லாத விஷயங்கள் அனைத்தையும் நீக்குவதற்கு ஜீவிதத்தின் சக்தியின் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து தேவைப்படும் விஷயங்களை நீங்கள் எடுத்துக்கொள்ள முடியும். அதுதான் மிகப்பெரிய மந்திரம். (ஏதாவது ஒன்றை அடைவதற்காக அல்லது வேண்டாததை நீக்குவதற்காக செய்கின்ற ஜபம் அல்லது வழிமுறை)''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

''அந்த வழியில் நீக்க வேண்டியது எதுவாக இருந்தாலும் அதை நீக்குவதற்கு அந்த சக்தியின் உற்பத்தி நிலையிலிருந்து பொருத்தமான வழிமுறையை இழுத்துக்கொள்ள வேண்டும். (இது அவருடைய ஆன்மீகப் பிரதிநிதியாகிய ராம் சந்த்தருக்குக் கூறிய குறிப்பு) சக்தியின் உற்பத்தி

நிலையத்திலிருந்து இழுத்துக்கொள்ளப்பட்ட இந்த சக்தி, அடங்காமல் முரட்டுத்தனமாக வளர்ந்துவிட்டதாகிய நீக்க வேண்டிய ஒன்றின் மீது படர்ந்து அதை ஆக்கிரமித்து இப்போது அது தானாகவே தன் விளைவை இழக்கிறது என்று அந்த எண்ணத்தை உறுதியாக மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். இன்றியமையாத முக்கியமான சுத்திகரிப்புக்காக, அந்த நோக்கத்திற்குப் போதுமான அளவு ஆற்றல், அந்த சக்தியின் உற்பத்தி நிலையத்திலிருந்து வந்துக்கொண்டிருக்கிறது; அந்த வேண்டாத, விரும்பத்தகாத விளைவு முழுமையாக நீக்கப்படுகிறது என்ற எண்ணத்தை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். எப்படியிருந்தாலும், சத்தியமான தன்மை நமக்குத் தேவையில்லாத, விரும்பத்தகாத அசுத்தம் மற்றும் அழுக்குக்கும் கூட சக்தியளித்துவிடாமல் தடுப்பதற்காக சுத்திகரிப்பு மிகவும் அவசியம். (சிறிது இடைவெளி) அன்புள்ள ராம்சந்த்தர் இதுவரையில் எத்தனையோ புள்ளிகளை (அல்லது முக்கியமான விஷயங்களை) கண்டறிந்திருக்கிறார். இன்னும் கண்டுபிடிக்கப்பட வேண்டியவை எவ்வளவு இருக்கின்றன என்பதை யார் அறிவார்? அந்த நோக்கத்திற்கு ஏராளமான நேரம் தேவைப்படுகிறது. அந்தப் புள்ளிகள் பற்றிய மிக விசேஷமான தனிப்பண்புகள் (குணங்கள்) வெளிப்படுத்தப்படும். மற்றும் இந்த உதவிக்குறிப்புகளின்படி நடந்துகொள்ள வேண்டியிருக்கும் சில தனிப் பண்புகளைக் கண்டறிவதற்கு ராம் சந்த்தர் தனிமையில் ஒதுங்கிப் போகவேண்டியிருக்கும். ஏனெனில் அப்படிக் கண்டுபிடிக்கப்படும் புள்ளியை அவர் விரிவாக்கம் செய்து கொண்டிருக்கும்போது, அவருக்கு இடையூறு செய்யப்பட்டால், அதில் அவர் செய்த முயற்சியெல்லாம் வீணாகிப்போய்விடும். உதாரணமாக அதுபற்றிய கண்டுபிடிப்புக்கான செயல்திட்டத்தை உருவாக்குவதற்காக, அதற்கான அடித்தளத்தை அமைப்பதற்கு அவர் ஆரம்பிக்கும்போது மற்றும் அந்த வேலையில் நன்கு முன்னேறியிருக்கும்போது, அவரைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார் என்று யாராவது வந்து சொல்லும்போது, அவர் செய்து கொண்டிருந்த வேலை முழுமையடையாமல் அப்படியே நிற்கிறது; அதனுடைய அதிர்ச்சி அவரிடம் உண்டாகிறது என்பது இதில் கூடுதலான தீமை. இதன் காரணமாக இம்மாதிரி விஷயங்களை நீக்குவதற்காக அவர் எங்காவது வெளியே தனிமையாகப் போகவேண்டியிருக்கும். இந்த விஷயங்கள் சுலபமானவையல்ல! இவற்றை விஞ்ஞான பரிசோதனைகளைப் போலக் கருதி நடக்கவேண்டும். விஞ்ஞான பரிசோதனையில் ஒரு மின்கம்பியை தவறாக இணைப்பு கொடுத்துவிட்டால் மொத்தமும் வெடித்துவிடும். இங்கே ஒவ்வொரு தனிநரம்பிலும் உலகையே அழித்துவிடும் அளவுக்கு சக்தியை

உடைய ஆற்றல்கள் உள்ளன. இவையனைத்தும் நமக்குள் விளங்குகின்றன. அவற்றை வெளிப்புறமாக திரும்பிவிட்டால் உலகியல் சார்ந்த கண்டுபிடிப்புக்கள் ஆரம்பமாகும். உள்நோக்கியே வைத்திருந்தால் ஆன்மீகக் கண்டுபிடிப்புக்கள் வெளிவந்து கொண்டிருக்கும். பழைமையான இந்தியாவில் இருந்த முனிவர்கள் உலகியல் விஷயங்களுடன் தொடர்பை வைத்துக்கொள்ளவில்லை. அப்படிச் செய்திருந்தால் அந்த விஷயங்களையும் அவர்கள் உயர்ந்த தரத்தில் நிலைக்க வைத்திருப்பார்கள். அவர்கள் அதில் தேவைப்பட்ட அளவுக்கு மட்டுமே வேலை செய்தார்கள். அதன் பிறகு அதையும் அவர்கள் கைவிட வேண்டியிருந்தது. ஒரு உயர்ந்த நிலையில் ஆன்மீக முன்னேற்றம் உன்னால் சாத்தியமாகிறது அல்லது உன்னால் உண்டாக்கப்படுகிறது; அதே நோக்கத்திற்காக அனைத்தும் பயன்படுத்தப்படலாம் என்பதற்காகவே இந்தவிஷயங்கள் உனக்குத் தெரிவிக்கப்படுகின்றன. இந்த விஷயத்தில் ஒருவர் தன்னைத்தானே கவனித்துக்கொள்ள வேண்டும். தன்னை எடை போட்டு மற்றும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அதன் பிறகு நல்லவற்றைப் பின்பற்றி தீமையானதை ஒதுக்கிவிடவேண்டும் அல்லது உள்முகமான ஆன்மீகத்தின் பக்கமாக மிகவும் மனம் ஒருமுகப்பட்டு (நம் கவனம் தேவைப்படுகிற சீர்தூக்கிப் பார்ப்பது, ஒப்பிடுவது போன்ற) வெளிப்புற விஷயங்கள் தானாகவே விடைபெற்றுச் செல்லும்படியாக செய்யவேண்டும்.''

''எவ்வளவு சுலபமான இந்தக்கொள்கை நமது புரிந்து கொள்ளும் திறனின், சிந்திக்கும் திறனின் வசப்படாததென்ன? எது வெறுத்து ஒதுக்கப்படவேண்டியதோ, தீமையானதோ அதை நீக்குவதற்கு முயற்சி செய்வதைக்கூட தவிர்க்கின்ற அக்கறையின்மை என்ன! தங்கள் உள்ளங்களின் ஆசைகளுக்குப் பின்னே ஓடுகின்ற, அதிலேயே தொடர விரும்புகின்ற மக்களிடம் இந்தக்குறைபாடு மிகவும் பொதுவாகக் காணப்படுகிறது. என்னை கவனித்து அறியக்கூடியவர்களால் என்னுடைய நிலை பற்றி விசாரிக்கப்படலாம் என்பது உண்மைதான். மக்கள் எதைத் தேடுகிறார்களோ அதை அடையப்பெறுவதில் தாமதம் உண்டாவதில்லை. மனிதகுலத்தை மிகவும் கீழான நிலைகளுக்கு தாழ்வுபெறச் செய்துவிட்ட அந்தக் காரணங்கள் மற்றும் குறைபாடுகளை நீக்குவதில்தான் தாமதம் ஏற்படுகிறது! உதாரணமாக, முடவனாக, முதுமையில் தளர்வடைந்தவனாக இருக்கின்ற ஒருவன் அரசனாக அரியணையில் உட்கார்ந்திருக்கிறான் என்றால் அப்படி அரசனாக அரியணையில் வீற்றிருப்பதனாலேயே அவனுடைய உடலின் குறைபாடுகள் நீங்கிவிடுமா? இந்த உதாரணத்தைக்

கொண்டு நான் மேலே கூறியதை எண்ணிப்பாருங்கள். வேறுபட்ட தன்மைகள் அனைத்திலிருந்தும் விடுபட்டதாக இருக்கின்ற மிக உண்மையான (சத்தியத்தின்) உள்நிலையை எளிமையாக அடைவதில் மற்றும் ஒரு சமத்தன்மைக்கு வருவதில்தான் மெய்யழகு (நிஜமான அழகு) இருக்கிறது. இதை முழுமையான விழிப்பு உணர்வு மற்றும் கவனத்தடன் கேட்டு, என்ன சொல்லப்பட்டதோ அதன்படி நடந்து கொள்ளுங்கள். முட்புதர்களின் அடியில் மாணிக்கக் கல் புதைந்திருந்தால் என்ன பயன்? சாதாரண மக்களின் கண்களுக்கு முள்ளும் புதரும் தான் தெரியும். எனவே, மறைந்திருக்கும் பொருள் வெளியே கொண்டுவரப்பட வேண்டும். அனைத்தும் ஒன்றேயாக மற்றும் அனைத்தும் அதுவேயாக வரவேண்டும். நீங்களே இதை சிந்தித்துப் பாருங்கள். நான் நிறையச் சொல்லிவிட்டேன்.''

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் லக்கமிம்பூர் – கேரியில் காலை 11.40 மணி அளவில் கூறியது:

''வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடன் இப்போதுதான் தொடர்பு கொண்டு பேசி அவரிடமிருந்து ஒரு பதிலைப் பெற்றேன். அவர் உன்னை தன் பிள்ளையாக ஏற்றுக்கொண்டிருக்கிறார். இதனால் இப்போது அவருடைய மகன் என்ற அதே உரிமையில் உரையாட முடியும். உன்னுடைய பணியைப் பற்றி அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார். ஆன்மீகத்தில் தங்கள் வழியை இழந்துவிட்டவர்களை, மீண்டும் சத்தியநிலைக்கு நீ கொண்டு வந்திருப்பதில் அவருக்கு திருப்தி ஏற்பட்டுள்ளது. வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை மரியாதையின் காரணமாக நீ அழைக்காமல் இருந்த தடை இப்போது நீக்கப்பட்டுவிட்டது. உனக்கு தேவைப்படும்போதெல்லாம் பிரார்த்தனை வழியில் மரியாதையுடன் அவரை நீ அழைக்க வேண்டும் என்று உனக்கு நான் உத்தரவிடுகிறேன். அவரிடமிருந்து நேரடியாக அல்லது நீயாகவே அவரை அணுகி அவரது உத்தரவுகளைப் பெறுவதற்கு நான் உனக்கு அனுமதியளிக்கிறேன்.''

## வணக்கத்திற்குரிய பகவான் புத்தர் கூறியது இரவு 10.30 மணி (ஏழாவது பாடம்):

''இன்று ஏழாவது பாடத்தை நான் ஆரம்பிக்கிறேன். ஒருவருடைய நிலை இயற்கையோடு ஒன்றுபட்டு ஒத்திசைந்து இருக்கும்போது ஒப்பிட்டுப் பார்க்கையில், இருக்க வேண்டிய அளவு விகிதத்தை மீறி எதுவும் இல்லாமல் மற்றும் இது பற்றிய விழிப்பு உணர்வும் கூட மங்கிப்போயிருந்தால் அந்த மனிதர் பயிற்சியளிப்பதற்குத் தகுதியானவர் என்று எடுத்துக் கொள்ளலாம்.

ஆயினும் இதுவும் கூடப் போதுமானதல்ல. இன்னும் மேலே போகவேண்டும். இன்னும் கடந்து போனால்தான் ஒளி கிடைக்கும். இதுவும் முடிவான இறுதிநிலை அல்ல. உண்மையில் இது ஆன்மீகத்தின் ஆரம்பப் புள்ளிதான். எவ்வளவோ சிரமங்களுக்குப் பிறகு தான் நான் இந்த நிலைக்கு வரமுடிந்தது. என் காலத்தில் அந்த நிலைக்கு வர முடிந்தவர் வேறு யாரும் இல்லை. இது ஒரு சாதாரண விஷயம் அல்ல. எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதும் அல்ல. ஆயினும் இதனால் அதை அடைய முடியும் என்ற நம்பிக்கையை ஒருவன் விட்டுவிடவேண்டும் என்று அர்த்தமில்லை. அந்தமாதிரி மனிதர்கள், மனிதர்களிடையே இருந்துதான் வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள். இதில் பொதுவாகக் காணப்படும் குறைபாடு என்னவெனில் சாதகர்கள் தங்களுடைய சக்தியை தங்கள் பாதையை தடையின்றி தெளிவாக்கிக் கொள்வதற்காக தங்கள் மிக உயர்ந்த லட்சியத்துடன் இணைத்துக் கொள்ளாமலிருப்பதுதான்.''

**கேள்வி:**

''இந்தப் பயிற்சியை கற்பிப்பது எப்படி? ஆன்மீகப் பயிற்சி பெறுவதற்காக வரும் சாதகர்கள் தங்கள் மிக உயர்ந்த லட்சியத்தை அடைவதற்கு செய்யவேண்டியது என்ன?''

**பகவான் புத்தர் கூறிய பதில்:**

''இதில் மிகச் சிறந்த வழி நல்ல சகாக்களுடன் (சத்சங்கத்துடன் - சத்சங்கம் என்றால் மேன்மக்களுடன் சேர்ந்து பழகுவது என்று பொருள்) தொடர்பு கொண்டிருப்பதாகும். விரும்பத்தக்க உயர்ந்த (ஆன்மீகப்) பண்புகள் உடைய மனிதருடன் தோழமை கொண்டிருக்க வேண்டும். அந்த மனிதர் என்ன அறிவுரைகள் சொல்கிறாரோ அதை தனது சொந்த புத்தியின் குறுக்கீடு இல்லாமல் அவர் சொன்னபடி நடக்கவேண்டும். இது ஏனென்றால் ஒருவனது சொந்த புத்தி, அந்தப் பெரியவர் கூறும் மேலான நிலைக்கு எட்ட இயலாது. ஏதோ ஒரு விஷயம் ஒருவனின் சொந்த அறிவின் நீட்சிக்கு எட்டாததாக இருக்கிறது என்றால், அதை அடைவதில் ஒருவன் தனது சொந்த அனுபவத்தையும் அறிவையும் நம்பியிருக்க முடியுமா? என்ற கேள்விக்கே இடமில்லை (அது நிச்சயம் முடியாது). எனவே, இந்த விஷயத்தில் இன்னொரு நம்பத்தகுந்த மனிதரின் அறிவுரைகளைத்தான் நாம் சார்ந்து இருக்கவேண்டும். அம்மாதிரி நம்பத்தகுந்த ஒருமனிதரை தனது ஆன்மீக வழிகாட்டியாக இனம் கண்டறிவதற்கான வழிமுறை ஏற்கெனவே கூறியுள்ளேன். ஆன்மீக வழிகாட்டியாக இருந்து சேவை செய்கின்ற நல்ல மனிதர்களைக் கண்டறிவது அரிது. ஆன்மீகப் பயிற்சி

பெற விரும்புகின்ற மனிதர்கள் நிறைய இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த மிக உயர்ந்த தகுதி மிக்க நிலையை அடைந்திருப்பவர்களைக் காண்பது மிக அரிது.''

**சுவாமி விவேகானந்தா:**

''நீங்கள் மிக நல்ல பாடங்களை எளிமையான வடிவத்தில் சொல்கிறீர்கள். வேதங்கள் இதே விஷயத்தைத்தான் சொல்கின்றன. வேதங்களின் தத்துவங்களை பகவான் புத்தர் அந்த ஆதியான நிலைக்கு மாற்றியிருக்கிறார். பகவான் புத்தர் இப்போது உங்களுக்கு விவரித்த இதே கருத்துதான் ராமாயணம், மகாபாரதம் என்ற காவியங்களிலும் பரவியிருக்கிறது. ஹிந்து மதத்தின் இந்தக் காவியங்கள் இம்மாதிரி விஷயங்களின் ஆழ்ந்த வடிவமாக அமைந்துள்ளன.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இந்த விஷயம் இப்போதும் கூட சாத்தியமே. மிகவும் கொடூரமான மிருகங்கள் அல்லது மனிதர்களைக் கூட கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியும்.''

*(இது பகவான் புத்தரின் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறது. அங்குலிமால் என்ற மிகவும் கொடுமையான குணம் உடைய கொள்ளைக்காரன் மனிதர்களைக் கொலை செய்து, கொல்லப்பட்டவரின் விரல்களை மாலையாக்கி தன் கழுத்தில் அணிந்து கொள்ளும் பழக்கம் உடையவனாக இருந்தான். தன் சகாக்களும் மற்றவர்களும் தடுத்தாலும் அதை மீறி பகவான் புத்தர் அந்த பயங்கரமான கொள்ளைக்காரனைத் தேடிச் சென்றார். அவனை சீர்திருத்தி புத்தமத சங்கத்தில் ஒரு துறவியாக மாற்றினார்.*

*கொள்ளைக்காரனாகிய அங்குலிமால் என்பவன் இப்படி பகவான் புத்தரின் கட்டுப்பாட்டின் கீழ், அவருடைய அன்புமிகுந்த பாதுகாப்பின் கீழ் வந்ததாகிய இந்த சம்பவம், புத்தர் எடுத்துரைத்த மிக எளிமையான இயற்கையான நிலையில் இருப்பவரின் உயர்வைக் காட்டுகிறது. பகவான் புத்தர் தனது தகுதிமிக்க உயர்நிலையை அந்தக் கொள்ளைக்காரன் மீது முற்றிலும் குவியச்செய்து அவனை நல்வழிப்படுத்தினார்).*

## 4-3-1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது (இடம் லக்கிம்பூர் - கேரி):**

''இப்போது அவர் மீது செயல்படுத்தப்பட்ட விசேஷ வழிமுறையை M1 குறிப்பு எழுதி வைத்துக்கொள்ள வேண்டும்; அதை அவர் பயன்படுத்த வண்டும். அன்புள்ள M1, அன்புள்ள ராம் சந்த்தரை எனது பிரதிநிதியாகவும் பதவிக்கு உரியவராகவும் வடிவமைத்ததில் நான் ஏதாவது தவறு செய்துவிட்டேனா? அதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? சிறிதும் தவறு செய்யவில்லை என்றே நான் நினைக்கிறேன். அவர் அதற்குத் தகுதியானவராக இருந்தார். இதனால் நான் அவரை அவ்விதமாக உருவாக்கினேன். வேறு யாரிடமாவது இப்படி ஒரு கூர்மையான (சூட்சுமமான மற்றும் நுட்பமான) தெய்வீக மெய்ஞ்ஞானத்தை உருவாக்க முடியுமா? என்று நான் சவால் விடுகிறேன். (அவரை அப்படி உருவாக்க வேண்டும் என்பது) எனக்கு வந்த உத்தரவு. அதை நான் அப்படியே நிறைவேற்றினேன்.''

**சுவாமி விவேகானந்தா:**

''தெய்வீகமாகிய சமுத்திரத்தின் ஆழத்தில் நீங்கள் இருக்கும்போது, தெய்வீக விவேகம் அதைத் தொடர்ந்து வருகிறது. அது எந்நேரமும் உன்னுடன் (ராம் சந்த்தருடன்) இணைந்து வருகிறது. இது இயற்கையின் விசேஷமான வரம். சாதாரணமாக யாருக்கும் இது அளிக்கப்படாதது. (சிறிது இடைவெளி) M1 கூர்ந்து கவனித்தால் தன்னை மிகவும் மாறிவிட்ட ஒரு மனிதனாகக் காண்பார். அவருக்கு செயல்படுத்தப்பட்ட விசேஷ செயல்முறையை தன்மீது பயிற்சி செய்வதில் மீண்டும் மீண்டும் அவர் ஈடுபட்டு, அவரிடம் உண்டாக்கப்பட்டுள்ள உள்நிலைத்தன்மை எல்லா நேரமும் சுலபமாக செயல்படுமாறு செய்யவேண்டும்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இப்போது பயிற்சிக்கு உதவியான விஷயங்கள் நிறைய கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் ஒவ்வொரு விநாடியும் ஏதாவது ஒரு புதுமையான வழி இன்னும் வந்துக்கொண்டிருக்கிறது. ஆன்மீகமாகிய இந்த விஞ்ஞானம் அல்லது மெய்ஞ்ஞானம் அதற்கு ஒரு எல்லையே இல்லாதது போல மிகவும் விரிவாக இருக்கிறது.''

**சுவாமி விவேகானந்தா:**

''தனது மிக உயர்ந்த குரு வந்திருப்பதை I2 (ஐ2) அறியாமலிருக்கிறார். அவர் இங்கு அடிக்கடி வருகிறார். ராம் சந்த்தருக்கு ஓய்வு தருவதற்காக மற்ற சீடர்களிடம் போகிறார். ராம் சந்த்தர் தன்கையில் எடுத்துக்கொண்டிருக்கும் வேலையை அவர் செய்து கொண்டிருக்கிறார். அதெல்லாம் அவருடைய சௌகரியத்துக்காக.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (பகல் 1 மணி):**

'' P1- ன் இணைப்பை உடனே வெட்டிவிடு.''

(அவருடைய கட்டளை நிறைவேற்றப்பட்டது).

**5-3-1946**

**வணக்கத்திற்குரிய பகவான் புத்தர்:**

''என் பெயரால் இருக்கும் அமைப்பின் விவகாரங்களும் பெரும் அழிவுநிலைக்கு வந்துவிட்டன. அங்கு யாருமே சத்தியநிலையில் நாட்டம் உடையவராக இல்லை. வெறும் மதம்தான் எஞ்சியிருக்கிறது. அதில் சத்தியத்தின் சாயல் இல்லை. ஹிந்துமதத்தில் என்ன நிகழ்ந்ததோ அதேமாதிரி இதிலும் நிகழ்ந்து விட்டது என்று கூறலாம். இப்போது நேரம் வந்துவிட்டது. இயற்கையும் இந்தப்பக்கம் மனம் திரும்பியிருக்கிறது. என் மார்க்கத்தில் மட்டுமே பயிற்சி அளிக்கப்படவேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. மனிதகுலத்துக்கு ஆன்மீகத்தை கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதுதான் நோக்கம். மேலும் மனிதர்களின் நல்வாழ்வுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். இப்போது இருக்கும் நிலைமையில் இந்த சகஜமார்க்கத்தை விட சிறந்தமுறை வேறு எதுவும் இருப்பதாக நான் கருதவில்லை. இயற்கை தன் சக்திகள் அனைத்தையும் உன்னிடம் திணித்திருக்கிறது. உண்மையைச் சொன்னால் இந்தப் பயிற்சிமுறையாகிய சங்கிலித்தொடர் உன்னிடமிருந்து ஆரம்பித்திருக்கிறது. உன்னைப் போன்றவர்கள் ஸ்தாபக குரு என்ற பெயரில் குறிப்பிடப்படுகிறார்கள். இப்போதைய இந்த மார்க்கத்தை கண்டுபிடித்தவர் மற்றும் செம்மைப்படுத்தியவர் (ஆதி குரு) இவ்விரண்டும் நீயாகவே இருக்கிறாய். இந்த உலகம் எத்தனையோ முறை புதிய திருப்பங்களைக் கண்டிருக்கிறது. உலகில் விளங்கும் நிலைமைகள் எத்தனை முறை தன்மைமாற்றம் அடைந்துள்ளன என்பதற்கு எல்லையே இல்லை. எப்போதுமே நிகழ்ச்சிகளின் போக்கு அப்படித்தான் இருந்திருக்கிறது; இனியும் அந்த வழியில்தான் உலகம் இயங்கும். இது ஆரம்பம்தான். உன் காலத்திற்குப்

பிறகுதான் இந்த வேலையின் சிறப்பை, மதிப்பை மக்களால் மதிப்பிட முடியும். காலம் ஏற்கெனவே ஒரு திருப்பத்தை எடுத்திருக்கிறது. மாற்றம் தேவைப்படுகிறது. அதுதான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. உண்மையைச் சொன்னால் நான் உன்னைமட்டுமே கண்டறிந்தேன். உன் மூலமாகவே சிக்கல் அனைத்தையும் தீர்ப்பதற்கு இயற்கை முயற்சி செய்கிறது. அனைவருடைய கண்களும் உன்மீது கவனம் குவித்துக் கொண்டிருக்கின்றன. இங்கே அனைவரும் என்பது முக்தியடைந்த ஆன்மாக்களைக் குறிக்கிறது. (சிறிது இடைவெளி) நீ மிகவும் அதிகபட்ச அளவு ஐக்கியநிலையை எய்தியிருப்பதால் மக்களால் உன் உயர்நிலை பற்றிய மதிப்பீட்டை உருவாக்கிக்கொள்ள முடியாத அளவுக்கு ஒரு ஏமாந்த நிலை பொதுவாக நிலவுகிறது. ஆன்மீக சந்திப்புகளில் (சத்சங்கத்தில், சிட்டிங்குகளில்) அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற உண்மையான நிலையை (சத்திய நிலையை) மக்களால் அறிந்து மதிக்க இயலவில்லை. மிகவும் லேசான, சத்தியத்துடன் முற்றிலும் இசைந்ததாக இருக்கின்ற இந்தப் பயிற்சியின் மதிப்பை அவர்கள் எப்படித் தெரிந்து கொள்வார்கள்! உன்னுடைய மாஸ்டரை விட அதிகமான அளவில் இந்த ஆன்மீகப் பயிற்சி முறையில் சத்தியத்தையும், மிக உயர்ந்த தூய்மையையும் நீ ஏற்றுக் கொண்டு புகுத்தியிருக்கிறாய். அது மக்கள் அதை அணுக முடியாத அளவுக்கு ஆகியிருக்கிறது. இதில் நீ செய்வதற்கு ஒன்றுமில்லை. கடைசி நிலையாக இருக்கின்ற விரிவான தன்மை, ஆரம்பத்திலேயே அளிக்கப்படுகிற தன்மை இதில் உள்ளடங்கியிருக்கிறது. எவ்வளவு நேரம் இதனால் மிச்சப்படுத்தப்படுகிறது என்பதை நினைத்துப்பார்! சபாஷ்! எனது வாழ்த்துக்கள்! தன் வாழ்க்கையில் சம்பாதித்த அனைத்தையும் பிறருக்கு மாற்றிக்கொடுத்துவிடுகின்ற மாஸ்டர் என்பவர் இப்படித்தான் இருக்க வேண்டும்! உன்னிடம் விளங்கும் அதிகபட்சமான தூய்மையின் காரணம், உன் மாஸ்டர் அவர் சம்பாதித்த அனைத்தையும், அவரின் ஆயுட்காலத்திற்குப் பிறகும்கூட உனக்குக் கொடுத்திருப்பதுதான். அப்படியிருக்கும்போது முக்தியடைந்த ஆன்மாக்களின் உயர்நிலை உனக்கு எப்படி வராமல் போகும்? இது ஒரு தகுதி மிக்க மாஸ்டரின் ஆயுட்காலத்திற்குப் பிறகுதான் நிகழ முடியும். ஆயினும் எல்லோருக்கும் இந்தத் திறமை இருப்பதில்லை, மேலும் எல்லோருக்கும் இது கிடைக்கக் கூடியதும் அல்ல. நானும் கூட என்னுடையதாக இருக்கும் அனைத்தையும் உனக்கு அளித்திருக்கிறேன் என்று உனக்குத் தெரியாத ‘நிர்வாணா’ என்ற நிலையை அடைவதற்கான வழியில் பெரும்பகுதி சொல்லப்பட்டுவிட்டது. பயிற்சியைப்பற்றியும் கூட எல்லாவற்றையும் நான் குறிப்பிட்டுச் சொல்லி விட்டேன். இப்போது

முடிவாக ஆன்மீக ஞானம் மற்றும் பயிற்சியை நாடும் ஒரு நல்ல சாதகனின் குணங்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதைக் கேள். சில முக்கியமான விஷயங்களை நான் இப்போது சொல்கிறேன்.

1) சூட்சுமத்தன்மை மற்றும் லேசான தன்மையின் மீது இயற்கையின் ஈடுபாடு இருக்கவேண்டும்.

2) மனத்தின் சுபாவங்களில் (மனப்பாங்குகளில்) சீர்திருத்தத்தை நாடியிருக்க வேண்டும்.

3) கடமை உணர்வு பற்றிய எண்ணம் நிலைபெற்றிருக்க வேண்டும்.

4) பெரியோர்களிடம் மரியாதை இருக்க வேண்டும்.

5) எது சரியானதோ அதை ஏற்றுக்கொள்ளும் இயற்கையான பண்பு இருக்கவேண்டும்.

6) தேவையில்லாத பிடிவாதம் இருக்கக்கூடாது.

7) ஆசைகளிலிருந்து விடுபடுவது மற்றும் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு பின்பற்றுவதில் உதவியைப் பெறும் அளவுக்கு பிடிவாதம் இல்லாத விடாமுயற்சி செய்யும் இயல்பு.

8) அன்றாட வாழ்வில் வழக்கமான நன்னெறிக் கோட்பாடுகளை அனுசரிப்பதில் தயங்காத ஈடுபாடு.

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''ஒரு நல்ல விளைவை உடைய விரிவான குறிப்புகளை பகவான் புத்தர் கொடுத்திருக்கிறார். இதன் வெளிப்புறக் கருத்து உள்முகமான சுத்திகரிப்பை முக்கியமாகக் கூறுகின்றது. சடங்குகளிலிருந்து உறுதியாகின்ற நன்மை இதுதான். இந்த சடங்குகளைப் பின்தொடர்ந்து முக்தி வருவதில்லை. (அதாவது இந்த சடங்குகளால் முக்தி கிடைப்பதில்லை) ஒரு வாழ்க்கை முழுவதும் மக்கள் சடங்குகளைச் செய்வதிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள். அதுவும் சரியானதுதான். ஏனெனில் இந்த முக்திநிலையைத் தேடுகிறவர்கள் மிகவும் சிலர் மட்டுமே ஆவர். உண்மையில் வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் நன்மையை அடைவதற்கு சடங்குகளை ஒரு பொதுவான வழியில் பின்பற்ற வேண்டியது சரிதான். அது ஒரு கடமையும் ஆகும். ஏனென்றால் சத்தியத்தை அடைவதற்கு கற்பனையான வழியை இது உள்ளடக்கியிருக்கிறது அல்லது குறிக்கோளை அடைவதற்கு இது மாடிப்படியாக இருக்கிறது என்று சொல்லலாம். நல்ல

நடத்தை சம்பந்தமான சடங்குகளில் மனிதர்கள் மிகவும் ஈடுபட்டிருப்பதை, கடவுள் அதில்தான் இருக்கிறார் என்று கருதுவதை நான் பார்த்திருக்கிறேன். சடங்கு முறையிலான காரியங்களினால் உற்பத்தி செய்யப்படும் உஷ்ணம் (வெப்பம்) எல்லாம் சரியாக இருக்கின்றன என்று அவர்களுக்கு உறுதிப்படுத்துகிறது. சடங்கின் மூலமாக யாருக்காவது தீமை செய்யப்பட்டால், அதை தனது குறைவில்லாத காரியத்தின் பயன் என்று அவர் நினைக்கிறார்! இது அதன் அதிகபட்ச நிலை! ஒரு மனிதனிடத்தில் பணிவை, கனிவான தன்மையை உண்டாக்கத் தவறுகின்ற வழிபாடு பயனற்றது! இந்த விஷயங்கள் அனைத்தும் பிரார்த்தனையின் வழியில் செய்யப்பட்டால் நல்ல பலன்கள் பின் தொடர்ந்து வரும். ஹிந்து மதத்தின் மகத்தான அடித்தளத்தை உருவாக்கியதே பிரார்த்தனைதான்.''

6–3–1946

**பகவான் புத்தர்:**

''இப்போது நீ அனுபவிக்கும் வலி (அல்லது துன்பம்) என் ஆயுட்காலத்தில் நான் அனுபவிக்க வேண்டியிருந்த பெரும் சித்திரவதையுடன் (கடுமையான தொல்லைகளுடன்) ஒப்பிட்டால் ஒன்றுமேயில்லை.''

7–3–1946

**வேதகால மகரிஷி யாக்ஞ வல்கியர் கூறியது:**

''இங்கே வந்ததற்கு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். வணக்கத்திற்குரிய உன் மாஸ்டர் உனக்குக் கொடுக்காமல் எதையும் வைத்துக் கொள்ளவில்லை. எங்கள் வேலையின் மீது உன் கட்டுப்பாட்டைப் பெற நான் அனுமதிக்கிறேன். இப்படி ஒரு மகாபுருஷர் உலகில் வந்திருக்கிறார் என்பதைக் காண முடியாமல் மக்கள் குருடர்களாக இருக்கிறார்கள். அவர்களின் கண்கள் இன்னும் திறக்கவில்லை. (சிறிது இடைவெளி) இப்போதைய ராஜயோகப் பயிற்சி முறை அயோத்தி மன்னன் தசரத ராஜாவுக்கு முந்தைய 72 (எழுபத்திரண்டு) தலைமுறைகளுக்கு முன்பு ஆரம்பித்தது. பகவான் ஸ்ரீ ராமனின் அவதாரத்திற்குப் பிறகு பிராமண வம்சத்தின் மேன்மை எழுச்சியடைந்தது. அதற்கு முன்பு கடவுளை மெய்யுணர்ந்தவர் யாராயினும் அல்லது பிரம்மனின் வடிவத்தை அடையப் பெற்றவர் யாராயினும் அவர் பிராமணன் என்று குறிப்பிடப்பட்டார். பல சமயங்களில் ஒரு வேசியின் மகன்கூட பிராமணன் என்று குறிப்பிடப்பட்டார். சமுதாயத்தில் தனது பதவி மற்றும் உயர்நிலைக்கு ஏற்றவாறு கடமைகள் பெரும்பாலும் க்ஷத்திரியர்களாலேயே (போர்வீரர்கள் குலம்) சரியான

முறையில் செய்யப்பட்டது. சமுதாயத்தில் ஜாதிகளின் பிரிவு அகங்காரத்தின் வளர்ச்சிக்குக் காரணமானது. யாரோ ஒருவரை பிராமணன் என்று எல்லோரும் நினைத்து அவரை மதித்து நடந்தார்கள். (அவ்வளவு சுலபமாகக் கண்டுபிடிக்க முடியாததாகிய) மதிக்கத்தகுந்த தகுதியை உடையவராக இருப்பவரை அறிவதற்குப் பதிலாக சுலபமாகத் தெரிந்து கொள்ளக்கூடியவராக இருக்கும் ஒருவரை அவர்கள் மரியாதையுடன் வணங்கினார்கள். இன்னொருவிதத்தில் பிராமணர்கள் என்று சமுதாயத்தில் மரியாதை அளிக்கப்பட்ட ஒரு பகுதியினர், தனிமைப்படுத்தப்பட்டார்கள். இப்படித் தனித்துவம் தந்து மதிக்கும் இயல்பு இன்னமும் நீடிக்கிறது. இது எந்த அளவுக்கு இருக்கிறது என்றால் சுத்தமாக நல்ல நாகரிகப் பண்புகளுடன் இருப்பவர் எவரையும் பிராமணன் என்று கருதி மரியாதை செய்யப்படுகிறது. அவர்களும் தங்களை இப்படியே உண்மையான தகுதியுடன் இருப்பதற்குப் பதிலாக இந்த விதத்திலேயே மற்றவர்களை விட உயர்ந்தவர்களாக நினைக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆன்மீகம் மற்றும் கடவுளைப் பற்றிய மெய்யுணர்வு நிலை அடைதல் ஆகியவற்றில் பயிற்சியளிப்பதில் பொறுப்பாளிகளாக இருக்க வேண்டியவர்களின் நிலை இப்படி இருக்கிறது. ஆன்மீகம் இதனால் அதன் தடயமே இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது. எல்லாவிதமான வேலைகளும் கடவுளின் பெயரால் செய்யப்படுகின்றன. அவர்கள் அந்த வேலையையே விரைவாக முடித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி விடுவதற்கு விரும்புகிறார்கள். ஆன்மீகப் பயிற்சி அளிப்பதற்குப் பதிலாக தன்னை தன்னலத்தை நாடுகிறவர்களாக இருக்கிறார்கள்.''

### 9-3-1946

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

``M1 - இன் உள்நிலை இப்போது நன்றாக இருக்கிறது. எதையும் அனுபவிக்காத – அதாவது விரும்பி அனுபவிக்காத – நிலையின் திசையை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்.''

''இந்தத்தடவை எடுத்துக் கொண்டிருக்கும் புள்ளி மிக விசேஷமானது. (கன்னித்தன்மையுடைய உபயோகிக்கப்படாதது – தொடப்படாதது.) இந்தப் புள்ளைய தனது முதுமையில் (முதிய வயதில்) எடுத்துக் கொண்டிருப்பதால் அவர் இதில் நன்கு செயல்படுவார் என்பது என் கருத்து.''

10–3–1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘டஜ்கியா – இ – நஃப்ஸா (Tazkia – e – Nafsa) என்பதை புலன்களின் மோகத்தில் தோற்றுப் போவதை கையாள்வது (Zak) என்று விளக்கிச் சொல்ல வேண்டும்.’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘ரகசியத்தை வெளிப்படுத்துவதற்கு ஏன் தயங்குகிறீர்கள்? அதில் ஏன் இவ்வளவு தாமதம்? முழு விவரங்களோடு ரகசியத்தை வெளிப்படுத்துவதற்கு உங்களுக்கு மூன்று நாட்கள் நேரம் அளிக்கப்பட்டுள்ளது.’’

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘இப்போது முதல் இனிமேல் வேறு யார் மூலமாவது இணைப்பு பெற்றிருப்பவர்களின் இணைப்பை நீ துண்டித்துவிட வேண்டும் என்பதே எனது உத்தரவாக இருக்கும். நமது இந்த சங்கிலித் தொடரில் அவர்கள் சேர்க்கப்பட்டிருப்பதாக யார் வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளும்படி நான் விடமாட்டன். மக்கள் அந்த மாதிரி சொல்லிக்கொண்டும் அறிவித்துக் கொண்டும் இருக்கலாம்; ஆயினும் அதற்கெல்லாம் ஒரு அர்த்தமும் இல்லை.’’

**அன்புள்ள J1 - கூறியது:**

‘‘நானும் கூட என் சீடர்களுடன் இனியும் இணைந்து இருப்பதை விரும்பவில்லை. துரதிருஷ்டவசமான மனிதர்களால் தங்கள் கண்களைத் திறக்க முடியவில்லை. அவர்கள் அனைத்தையும் இழந்துவிட்டார்கள்; இன்னும் அங்கே இருப்பது எதுவாயினும் அதுவும் இழக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அன்புள்ள சகோதரா, ஒரு விஷயம் நான் நிச்சயமாக சொல்ல வேண்டியிருக்கிறது; அவர்களில் ஒருவரை, என்னால் தீட்சை அளிக்கப்பட்டவரை, எனது இடம் காலியாகப் போகாமல் இருப்பதற்காக தயார் செய்யுங்கள். நான் அதிகமாகக் கவனித்து அறிந்தேன்; அப்படி கவனிப்பதைத் தொடர்ந்து செய்தேன். வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களால் அறிவிக்கப்பட்ட இந்தப் பரிந்துரையைத் தவிர இதற்கு வேறு தீர்வே கிடையாது. என் சமாதியைப் பொறுத்தவரை வருகின்ற ஆண்டு விழாவில் (பண்டாராவில்) தன் சமாதியைப் பற்றி வணக்கத்திற்குரிய லாலாஜி என்ன உத்திரவு இட்டாலும் அதே நடைமுறையை என் சமாதிக்கும் செய்யவும். அவருடைய சமாதி பற்றி அவருடைய உத்தரவு எவ்வளவு காலம்

நடைமுறையில் இருக்கிறதோ, அதே காலத்துக்கு என் சமாதிக்கும் அது அப்படியே இருக்கும். அந்த வீட்டின் உள்நிலையைப் பாழாக்க வேண்டாம்; ஏனென்றால் அது வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப்பின் வீடாக இருந்திருக்கிறது.''

### வணக்கத்திற்குரிய மகரிஷி யாக்ஞ வல்கியர்:

''ஒரு முக்கியமான வேலையின் காரணமாக நான் இங்கு வந்து சேர்வதற்கு தாமதமாகிவிட்டது.''

### வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:

''இந்தியாவில் திடீரென்று பெரும் மாற்றங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இதனால் இதை சீர் செய்வதற்கு என் அனுமதியைப் பெற்ற பிறகு ஒரிஸ்ஸாவுக்குச் செல்லவும்.''

### சுவாமி விவேகானந்தா:

''பாராட்டுக்கள்''

### வணக்கத்திற்குரிய மகரிஷி யாக்ஞ வல்கியர்:

''பரம்பொருள் பற்றிய நினைவு சிறிதும் குறையாமல் (பாதிக்கப்படாமல்) உலகியல் விஷயங்களில் ஈடுபடும் பழக்கத்தை ஒருவர் வளர்த்துக் கொண்டால், ஏராளமான நன்மைகள் அதனால் உண்டாகும். இந்த இடைவிடாத எண்ணம் போதுமான அளவு மனச்சார்பு மற்றும் அன்பின் மூலமாக வளர்ச்சியடைகிறது.''

## 13-3-1946

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''பொதுவாக ஒரு ஆன்மீகப் பயிற்சிமுறையில் பரிந்துரைக்கப்படுவதற்காக இரண்டு அல்லது மூன்று தியானங்கள் மட்டுமே வைத்திருக்க வேண்டும். ஏதாவது விசேஷ சூழ்நிலையில் யாருக்காவது ஒரு விசேஷ தியானமுறை பரிந்துரை செய்யப்பட்டால், அது அனைவருக்கும் அல்ல. பிரியமான ராம் சந்த்தர் நேற்று குறிப்பிட்டு எழுதிவைத்த மூன்று பயிற்சிகள் மட்டும்தான் எல்லோருக்கும் சொல்லப்பட வேண்டும். மக்கள் பெரும்பாலும் அவர்களின் வேறு வேலைகளால் பயிற்சி செய்வதை விட்டுவிடுவது, சிறிது நேரத்திற்குப் பிறகு இதில் ஆர்வம் இழந்துவிடுவது, அல்லது நான்கு அல்லது ஐந்து நாட்கள் செய்து விட்டு, அதன்பிறகு பயிற்சியை விட்டுவிடுவது என்று உள்ளார்கள். என் காலத்திலும் இப்படி அடிக்கடி நிகழ்ந்திருக்கிறது.''

18–3–1946

**சுவாமி விவேகானந்தா:**

''இன்று ஹோலி பண்டிகை. நமது பிரபு வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் இங்கு வந்திருக்கிறார். அவர் முன்னிலையில் இந்தப் பண்டிகையின் தத்துவத்தை நான் தெரிவிக்கிறேன். பழங்காலத்தில் முனிவர்கள் பொதுவாக காடுகளில் தங்கள் ஆசிரமங்களில் ஒருசில சீடர்களுடன் வசித்து வந்தார்கள். அந்த சீடர்களுக்கு அவர்கள் ஆன்மீகம் கற்பித்தார்கள். பொதுவாக ஏழு ஆண்டுகாலம் அந்தப் பயிற்சி வகுப்புகள் நீடித்தன. முதல் இரண்டு வருடங்கள் புத்தகங்களைப் படிப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். அதன் பிறகு செயல்முறை ரீதியாக பயிற்சியளிக்கப்பட்டது. ஆன்மீகப் பயணத்தில் படிப்படியாக முன்னேறுவதற்கு ஆன்மாவின் மீது உள்ள உறைகளை நீக்குவதும் அதில் அடங்கியிருந்தது. வசந்தகாலம் ஆரம்பமாகும் நாளில் வெவ்வேறு விதமான மலர்களைப் போட்டு கொதிக்க வைத்த தண்ணீரில் குளிப்பது, அவர்களுடைய நோக்கத்தில் இருக்கும் லட்சியத்தை விரைவில் நெருங்குவதற்கு அவர்களுக்கு உதவி செய்யும் என்று கருதப்பட்டது. அந்த உறைகளை நீக்குவதற்கு இயற்கையே உதவி செய்யும்படி ஆக்குவதற்காக வெவ்வேறு விதமான குளியல்கள் வடிவமைக்கப்பட்டன. இன்னமும் கூட வெவ்வேறு இனமக்கள் பழங்குடியினராக இயற்கைக்கு மிக நெருங்கியவர்களாக தாங்கள் வாழ்கின்ற இடத்தின் தட்பவெப்பநிலை, விசேஷ சூழ்நிலைகள் இவற்றுக்குப் பொருந்தும்படியாக உலகில் பல பகுதிகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பாரம்பரியமான ஹிந்துமத அறிஞர்கள் இந்த நாளை பிரகலாதனின் நினைவுக்கு அர்ப்பணிக்கிறார்கள். இந்தப்பண்டிகை நினைவுக்கெட்டாத காலம் தொட்டு கொண்டாடப்பட்டு வருகிறது. பகவான் ஸ்ரீ ராமனின் குல முன்னவராகிய இஷ்வாகு மன்னர் இதைக் கொண்டாடியிருக்கிறார்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''வணக்கத்திற்குரிய சுவாமி இந்தப் பண்டிகை பற்றி மிக நன்றாக விளக்கிச் சொன்னார். இந்தப் பண்டிகையை கொண்டாடுவதில் ஆன்மீக நன்மைகளின் ரகசியங்கள் அடங்கியுள்ளன. (ஹோலி பண்டிகை என்பது ஹிந்துக்களின் நாட்ககட்டியின்படி சித்திரை மாதத்தில் பௌர்ணமிக்கு மறுநாள் இரவு சாயம் கலந்த தண்ணீரை ஒருவர் மீது ஒருவர் தெளித்து விளையாடும் பண்டிகையாகும்.)''

*(மேலே கூறப்பட்ட பிரகலாதன் என்பவரின் கதை ஹிந்து புராணக் கதைகளில் ஒன்று ஆகும். பிரகலாதன் என்ற பெயருடைய ராஜகுமாரன் தான் பிறந்த சமயத்திலிருந்தே கடவுளின் மீது மிகவும் பக்தி உடையவனாக இருந்தான். அவனுடைய தந்தை ஹிரண்யகசிபு என்பவன் கடவுளுக்கு எதிரானவனாக இருந்த ஒரு அசுரன் ஆவான். தானே கடவுள் என்று அறிவித்துக்கொண்ட அந்த அசுரன், தன் மகன் பிரகலாதனை கடவுள் மீதான பக்தியை விட்டு விடச் செய்வதற்காக பல முயற்சிகள் செய்தான். அதில் பலனில்லாால் போனதால் தன் மகனையே கொன்றுவிடுவதற்கும் பல முயற்சிகள் செய்தான். பிரகலாதன் அந்த ஆபத்துக்கள் அனைத்திலிருந்தும் தான் எந்த முயற்சியும் செய்யாமலே தப்பி உயிர் பிழைத்திருந்தான். ஹிரண்யகசிபுவின் ஒரு மனைவியாகிய ஹோலிகா என்ற பெயரடைய பெண்மணி, ஒரு விசேஷ உடையை அணிந்து கொண்டு எரியும் நெருப்பில் இறங்கினாலும் எரிந்து போகாமலிருக்கும் வரம் பெற்றிருந்தாள். அவள் இந்தக் குழந்தையாகிய பிரகலாதனை இந்த முறையில் கொல்வதற்கு முன் வந்தாள். அவள் அந்த விசேஷ உடையை அணிந்து கொண்டு பிரகலாதனை தன் கைகளில் ஏந்தியவளாய் பெரிதாக எரிந்து கொண்டிருந்த தீயில் இறங்கினாள். இது பால்குண எனப்படும் பங்குனி மாதத்தில் பௌர்ணமியன்று இரவில் நடந்தது. ஆயினும் அடுத்த நாள் காலையில் அந்த ஹோலிகா என்ற பெண்மணி எரிந்து சாம்பலாகி இருக்க, பிரகலாதன் எந்தத் தீங்கும் இல்லாமல் நலமாக இருந்தான். இந்தநிகழ்ச்சியைக் கொண்டாடுவதற்காகவே ஒவ்வொரு ஆண்டிலும் ஹோலி பண்டிகை கொண்டாடப்படுகிறது. முடிவில் ஹிரண்யகசிபு கழுத்துவரை மனித உடம்பும் சிங்கத்தின் தலையும் உடைய ஒரு நரசிம்மமாக உருவெடுத்து வந்த விஷ்ணுவால் (காக்கும் கடவுள்) கொல்லப்பட்டார். பிரகலாதனை ஒரு தூணில் கட்டிப்போட்ட ஹிரண்யகசிபு மிகவும் ஆத்திரத்துடன் 'உன் கடவுள் எங்கே இருக்கிறார்?' என்று கேட்க, பிரகலாதன் கடவுள் தன்னிடமும், தன் தந்தையிடமும், தந்தையின் வாளிலும், தன்னைக் கட்டியிருக்கும் தூணிலும் கூட இருப்பதாகச் சொல்ல, ஹிரண்யகசிபு 'இந்தத்தூணிலா இருக்கிறான் உன் கடவுள்?' என்று கேட்டவாறு வாளினால் அந்தத்தூணை வெட்ட அத்தூணைப் பிளந்து கொண்டு மகாவிஷ்ணு நரசிம்ம வடிவத்தில் வெளிவந்து அவனை வதம் செய்தார்.)*

19-3-1946

**சுவாமி விவேகானந்தா:**

''உன் கருத்துக்களை நான் பாராட்டுகிறேன். எல்லாம் வல்ல பரம்பொருளின் சித்தம் உன்னை ஆட்சி செய்துகொண்டிருக்கிறது. இந்தியாவிலும், உலகத்திலும் ஒரு முழுமையான மாற்றம் உருவாகிக் கொண்டிருக்கிறது. உன் கருத்துக்களை சாதாரண மனிதர்களின் கருத்துக்களைப்போல ஒரு போதும் நினைக்கவேண்டாம். இந்த வேலை உன் கட்டளையின் கீழ் இருக்கிறது. இந்த சூழ்நிலையை சுத்தம் செய்து, அதை சரியான நிலைக்கு கொண்டு வருவதில் இந்தியாவின் ஒவ்வொரு முனிவரையும் ஈடுபடச்செய். உன் கீழே பணிபுரியும், நமது பிரபுவின் சீடர்கள் இந்த வேலையில் தங்களைக் கட்டாயம் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அதைச் செய்து முடிப்பதற்கு ஒரு நேரத்தை நிர்ணயித்துக் கொடு. இந்த வேலை ஏன் நேரடியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பது உனக்குத் தெரியும். அதன் காரணம் நமது பிரபுவின் குறிப்புக்களில் கொடுக்கப்பட்டுள்ளது. நாங்களும் கூட அதே வேலையில் முனைப்பாக இருக்கிறோம்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''அன்புள்ள ராம் சந்த்தர், நீ மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டிய தேவையில்லை. இம்மாதிரி வேலை தானாகவே நடந்து கொண்டிருக்கும்.''

**சுவாமி விவேகானந்தா:**

''உன் எண்ணம் பரம்பொருளின் ஜீவத்தன்மையில் ஒரு அடையாளத்தை உண்டாக்குகிறது. நாங்கள் அதன்படியே நடக்கிறோம்.''

20-3-1946

**சுவாமி விவேகானந்தா (பிராணாயாமம் அல்லது பிராணன் எனப்படும் மிக முக்கியமான ஆற்றலை கட்டுப்படுத்தும் மூச்சுப்பயிற்சி பற்றி விவரிக்கிறார்):**

''நம் உடம்பின் ஒவ்வொரு அணுக்கூற்றிலும் பரவியிருக்கின்ற சக்தி பிராணன் அல்லது இன்றியமையாத ஆற்றல் என்று கூறப்படுகிறது. இந்தப் பிரபஞ்சத்தின் துவக்கத்திலிருந்தே அது இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவது இயற்கையையே கட்டுப்படுத்துவது என்று பொருளாகும். யோகமுறைப் பயிற்சியில், பொதுவாக அனைத்திற்கும் முன்னதாக பல்வேறு பயிற்சிகளினால் உங்கள் ஜீவனை பந்தங்களிலிருந்து விடுபடச்

செய்வதை நோக்கமாகக் கொள்கிறீர்கள். இந்த உள்ளார்ந்த பந்தங்களிலிருந்து மற்றும் உறைகளிலிருந்து நீங்கள் விடுபட்டிருக்கும் போது உங்களுக்குள்ளே மிக உயர்ந்ததான ஏதோ ஒன்றுவிளங்குகிறது என்பதை உணர ஆரம்பிக்கிறீர்கள். அதாவது இறுக்கமான ஒரு முடிச்சை நீங்கள் தளர்த்துகிறீர்கள் என்று பொருள். அந்த உயர்ந்த நிலையில் நீங்கள் குதிக்கிறீர்கள் என்று நீங்களே உணரும்படி சிலசமயங்களில் நிகழ்கிறது. போகப்போக ஓரளவுக்கு அந்தநிலையை, நமது பிரபு ‘ஹம் – அஹங்கி (Ham Ahangi / இறைவனுடன் பூரணமான ஒத்திசைவு அல்லது நல்லிணக்கம் அல்லது அவருடன் ஒன்றுபட்டநிலை) என்று கூறிய நிலையை உங்களுக்குள் ஏற்றுக்கொள்கிறீர்கள். இப்படி ஒன்றுபட்டிருக்கின்ற கருத்து மொத்தமாகக் கரைந்து போய் நீங்கள் அதற்குள் முழுமையாக மூழ்கியிருக்கும் போது ‘அந்தநிலையில்’ நீங்கள் புகுந்து விட்டதாகக் கருதுங்கள். அதில் மேலும் மேலும் நீந்தும் போது நீங்கள் முற்றிலும் ஒரு விரிவான வட்டத்தில் இருப்பதைக் காண்பீர்கள். அந்த உள்நிலை நீடித்திருக்கிறது என்றால் அந்த சமுத்திரத்தின் நடுவில் நீங்கள் நிரந்தரமாக இருப்பதாக எண்ணுங்கள். அந்த நிலையிலேயே வாழ்வதற்கு ஆரம்பியுங்கள். இயற்கையை ஆளுமை பெறுவதற்காக அதை உள்ளும் புறமும் பக்கங்களிலும் கவனித்து அறியுங்கள்.’’

25-3-1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து நான் ஒருபோதும் பிரிக்கப்பட்டதில்லை. ஆனால், உன்னைப் பற்றிய நினைவும் கூட எனக்கு இருக்கிறது.’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘உனக்கு அல்லது வேறு யாருக்காவது வருகின்ற அத்தகைய தீமையையும் நீக்குகின்ற அடிப்படையான வழிமுறை தியானம்தான்.’’

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘சுவாமி கூறியதன் பொருள் என்னவெனில் நீங்கள் எதை நீக்க வேண்டியிருந்தாலும், அது நீக்கப்படுகிறது என்ற உறுதியான எண்ணத்தோடு தியானம் செய்யவேண்டும் என்பதேயாகும். ஒவ்வொரு நோய்க்கும் (அது குறைபாடு அல்லது உடல் நோய் எதுவாயினும்) இதுவே மருந்தும் சிகிச்சையுமாகும்.’’

**வணக்கத்திற்குரிய ராதை அம்மையார்: (ராம் சந்த்தருக்கு மருத்துவக்குறிப்பு சொல்கிறார்):**

‘‘நிறைய துளசி இலைகளை சுத்தமான தண்ணீரில் போட்டுவைத்து இரண்டு மணிநேரத்துக்குப் பிறகு அதைக் குடிக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் காலையில் புதிய சுத்தமான நீர் எடுத்துஅதில் துளசி இலைகளைப் போடவேண்டும்.’’

30-3-1946

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

‘‘உன்னுடன் ஐக்கியம் அடையாமல் நான் தடுக்கப்பட்டிருக்கிறேன். உண்மையில் அதுவும் சரிதான்! நீ செய்யவேண்டிய வேலைகள் இருக்கிறது. நான் உன்னுடன் ஐக்கியம் அடைந்து விட்டால் உன்னுடைய ஆயுள் தொடர முடியாது. இயற்கை உனக்கென நியமித்துள்ள வேலை மிக அவசியமானது. இதனால் நான் உனக்கு மேலும் சந்தர்ப்பத்தை அனுமதிக்கிறேன். இந்த இடைப்பட்ட காலத்தில் மனிதர்களை நீ நன்கு உருவாக்கலாம். உன்னுடன் நான் ஐக்கியம் அடைவது பற்றி நான் பிறகு முடிவு செய்வேன். நீ எப்பொழுது விரும்பினாலும் என் உண்மையான உருவத்தின் காட்சியை நீ பெறலாம். அந்தோ, உன்னை (உன் மகத்தான தெய்வீகத்தன்மையை) அறிய வருவோர் யாருமில்லையே! உன்னுடைய மதிப்பு பிறகுதான் உணரப்படும். உன்னுடைய சூட்சுமமான மற்றும் லேசான (பளுவற்ற) நிலையை முனிவர்கள் மிகவும் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார்கள். எல்லோரும் அதே மாதிரி நிலைக்கு வரவேண்டும். நீ அடைந்திருப்பது போன்ற அதே லட்சியத்தை அடைவதற்கு முயற்சிகளை அவர்கள் செய்யவேண்டும்.’’

‘‘ஆன்மீகப் பயிற்சியில் சிறிதுகாலம் ஈடுபட்டிருந்த சில குறிப்பிட்ட மனிதர்கள் பூர்வகுடிகளிடம் (ஆதிவாசிகளிடம்) காணப்படுவது போன்ற போதையை உடையவர்களாக இருக்கிறார்கள். அந்த உள்ளுக்குள் கொதிக்கின்ற நிலையை ஆன்மீகத்தின் பலன் என்று தவறாக நினைக்கிறார்கள். எத்தனையோ பேர் அதை மட்டுமே எடுத்துக் கொண்டு அதுவே போதுமானது என்று கருதினார்கள். இன்னும் சிலர் இதையும் கடந்து முன்னே சென்றார்கள். இதற்கு உதாரணத்தை உனது ஆன்மீக முன்னோர்களிடமும் காணலாம். ஆனால் அவர்களில் மிகவும் சிலர்தான் அப்படி இருந்தார்கள். பிராணாஹூதியின் மூலமாக அந்த விஷயம் முதலில் தெரிவிக்கப்பட்டது. அது ஏதோ ஒரு மார்க்கத்தின் ஆன்மீகப் பயிற்சியின்

கட்டமைப்பை உருவாக்கியது. ஆனால் அந்த போதை தரும் உணர்வு ஒரு குறைபாடாகும் சகஜமார்க்கத்தில் இந்த போதை உணர்வு ஆரம்பத்திலேயே சுத்திகரிப்பில் நீக்கப்படுகிறது. வாழ்க்கை முழுவதையும் இந்த போதையிலேயே செலவிடப்பட்டால் அதில் என்ன பயன்? அப்படி இருந்தால் சத்தியத்தின் சிறு சாயல்கூட ஒருபோதும் கிடைக்காது. அந்தக் கொண்டாட்டத்திலும் உணர்ச்சியிலும் வாழ்க்கை முடிந்து விடும். மீண்டும் பிறக்கும் போதும் அந்த நிலை தயாராக வந்துவிடும். எனவே அதில் போதை உணர்வை முக்கியமாக நீக்கிவிடவேண்டும்.''

''நமது சகஜமார்க்கத்தில் எல்லோரும் அமைதியை, சாந்தநிலையைப் பாராட்டுகிறார்கள். அமைதி மற்றும் சாந்தநிலையில் இருக்கும்போது வாளை ஓங்குவது தடை செய்யப்பட்டுள்ளதா? என் உதாரணத்தை எடுத்துக்கொள்: சில விசேஷ சந்தர்ப்பங்களில் தவிர மற்ற சமயங்களில் கடுமை ஒருபோதும் இருந்ததில்லை. அதனால் என்னுடைய வேலைகள், என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பெரும் பணிகள் செய்து முடிக்கப்படாமல் போய்விட்டனவா? இந்த அமைதி மற்றும் சாந்தநிலையின் மூலமாக பயங்கரமான விலங்குகளைக் கூட கட்டுப்படுத்த முடியும். இது ஒரு நீர்த்துளி இந்தப்பக்கம் அல்லது அந்தப்பக்கம் சாயாமல், சுழலாமல் இருப்பது போன்றது. இதை அனைத்துக்கும் வேரானது அல்லது அடித்தளமானது என்று சொல்லலாம். கடவுளுக்கு இந்தத்தன்மை இல்லாமல் போனால் அவரால் ஒன்றும் செய்ய முடியாது!''

''உலகின் அழிவுக்கு வடிவம் உருவாகி வரும்போது இயற்கையிலும் கூட ஒரு கொதிநிலை உண்டாக்கப்படுகிறது. ஆக்கவேலை (நலவாழ்வு அளித்தல்) என்ற விதத்தில் அந்த வடிவம் இருந்தால் அது இப்போது குறிப்பிட்டதைப் போல இருக்கிறது. வேதமந்திரம் ஒவ்வொன்றிலும் அமைதிக்கான பிரார்த்தனை சேர்க்கப்பட்டுள்ளது; ஏனென்றால் அந்த அமைதி மட்டுமே உண்மையாகும். அமைதி என்ற பாடத்தைக் கற்றுக் கொள்ள யார் விரும்பினாலும் அவர்கள் நம் மார்க்கத்துக்கு வரவேற்கப்படுகிறார்கள். அதுதான் உண்மை. இந்த அமைதியின்நிலை என்னவாக இருக்கிறது என்பது பற்றி யாருமே சிந்திக்கவில்லை. (புரிந்து கொள்ளவில்லை அல்லது அக்கறை கொள்ளவில்லை. அவர்கள் அதை ஏதோ சாதாரணமாக நினைத்துவிட்டார்கள். இந்த அமைதிக்காகவே உண்மையில் முனிவர்கள் காடுகளில் தேடி அலைந்தார்கள். இதில் தங்கள் ஆளுமையைப் பெற தங்கள் ராஜ்ஜியத்தை, ராஜபோகத்தைத் துறந்தார்கள். இனி வர இருக்கும் காலத்தின் இயல்பை அறிந்தவராகிய அந்த மாஸ்டருக்கு

பாராட்டுக்கள்! இது எவ்வளவு சிறிய விஷயம். ஆயினும் வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜி சாகேப் அவர்களால் என்ன செய்ய முடிந்ததோ அதைச் செய்வதற்கு அனைவராலும் முடியவில்லை.! தற்புகழ்ச்சி பேசுவதுவேறு விஷயம்! இம்மாதிரி அரிய திறமை எல்லோருக்கும் கிடைக்காது. இது மிகவும் சிரமமான விஷயம். நமது மார்க்கத்தில் (அதாவது சகஜமார்க்கத்தில்) ஆரம்ப காலத்தில் இருந்து வந்த பயிற்சிமுறை புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. அது முன்பு எப்படி வழக்கமாக இருந்ததோ (அதாவது இதற்கு முந்தைய காலத்தில் எப்படி இருந்ததோ) அதற்கு மிகவும் எதிராக இருக்கிறது. இங்கே சகஜமார்க்கமாகிய ஆன்மீகப்பயிற்சியில் பரமாத்மா அல்லது பரம்பொருளின் ஜீவத்தன்மை பயிற்சியின் ஆரம்பத்திலேயே அறிமுகப்படுத்தப்படுகிறது. சாதகர்கள் பயிற்சியையும், பிராணாஹூதியையும் பெறுவதில் நீடித்திருந்தால் உண்மையான ஆன்மீகத்தின் சுவையை அடைவார்கள். பிறகு மிகவும் நுட்பமான இன்னும் அதிக நுட்பமான தனிமனிதப் பண்புகள் அவர்களிடமிருந்து வெளிப்படும். உப்பு இல்லாத உணவு சுவையில்லாமல் போகிறது. அதுபோல பக்தி என்ற உணர்வு யோகப்பயிற்சியில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது என் (பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின்) காலத்தில்தான் வளர்ச்சியடைந்தது. இப்போது தெய்வீகக் கட்டளை என்னவென்றால் மிகுந்த உற்சாகமும் உணர்ச்சிகளும் வெளிக்காட்டப்படாத அமைதியும் சாந்தமும் உடைய இந்தநிலைதான் எல்லாத் திசைகளிலும் பரவச்செய்யப்பட வேண்டும் என்பதேயாகும். இதுவரையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த அந்த சூட்சுமமான விஷயங்களை நான் வெளிப்படுத்துவேன்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (M1 - க்காகச் சொன்னது):**

''இயற்கையின் கோட்பாடு எவ்வளவு நன்றாக இருக்கிறது. இந்த உலகில் (மற்றும் பிரபஞ்சத்தில்) சுத்திகரிப்பு தேவைப்படும்போது, அதற்காக ஒரு மகாபுருஷரை அது உருவாக்குகிறது. அவருடைய விரிவாக்கம் எல்லா இடங்களிலும் பரவியதாக இருக்கிறது.''

31-3-1946

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகின்ற பாடம் தொடர்கிறது. (நேரம் மாலை 6 மணி) வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''நேற்று நான் ஒரு சுருக்கமான விதத்தில் சில விஷயங்கள் சொன்னேன். மக்கள் தங்களுடைய லேசான (பளுவற்ற) உள்நிலையை தங்களிடம் மீண்டும் கொண்டுவரவேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் தந்து

வலியுறுத்திச் சொன்னேன். உண்மையான உணர்வில் (தன்மையில்) அதை அடைந்தால் அது மாயை என்ற மண்டலத்தைக் கடந்திருப்பதாகும். (மாயை என்பது அளவிடக் கூடியதான நிகழ்வுகள் சார்ந்த சத்தியமே ஆகும்). கொதிக்கும் நிலை மற்றும் கடுமை ஆகியவையெல்லாம் மாயையின் மண்டலத்துக்குச் சொந்தமானவை. இந்தப் பிரபஞ்சத்தின் படைப்பிற்குப் பிறகு தொடர்ந்து காலம் முன்னேறியபோது, அதனோடு சேர்ந்து உலகியல் தன்மையும் படிப்படியாக வளர்ந்து கொண்டே போனது. மக்களும் அந்த வழியிலேயே நாட்டம் கொண்டிருந்தார்கள். வேறு விதத்தில் ஆன்மீகப்பாதையில் அவர்களைத் திருப்புவதற்கு யாருமே இல்லை. நான் (பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்) உலகைவிட்டுச் சென்ற பிறகு உலகியல் நாட்டங்கள் அதிகரிப்பது, உலகியல் சார்ந்த தீவிர ஆவல்கள், மன எழுச்சிகள் இவற்றுக்கு மட்டுமே பழக்கப்பட்டுவிட்ட அளவுக்கு ஆகிவிட்டது. இப்படி நிகழ்ந்தது ஏனென்றால் ஆன்மீக நன்மை என்று தவறாகக் கருதி உலகியல் ஆவல்களையும் உணர்வின் எழுச்சிகளையும் அதிகமாக்கிக் கொண்டதால்தான். அப்போது இருந்த பயிற்சி முறைகளின்கீழ் வளர்ச்சிக்காக பிராணாஹூதியைப் பயன்படுத்தியவர்கள் ஆன்மீகம் என்று தவறாகக் கருதப்பட்ட உலகியல் ஈடுபாடுகளில் அதிகரிப்பை ஏற்படுத்தினர். ஏனென்றால் சத்தியநிலை பற்றிய விழிப்புணர்வு உடையவர்கள் மிக அரிதாகவே இருந்தார்கள். இந்த அற்புதமான விஞ்ஞானத்தை அதாவது ஆன்மீகத்தைப் பற்றிய ஞானத்தை மிகவும் சில மனிதர்களே பெற முடிந்தது. இந்த ஒழுக்கமுறையின் ரகசியம் மிக மிக அரிதான மனிதர்களுக்குத்தான் வெளிப்படுத்தப்பட்டது. அவர்கள் மிகவும் கடுமையாக சிரமப்பட்டு, கடைசியில் உண்மையான தன்மையிலான சூட்சுமமான ஆன்மீகத் தூய்மையை அடைவதற்கு எத்தனையோ தவங்களைச் செய்தார்கள். உண்மையாகவே சொல்கிறேன், இந்த அற்புதமான ஒழுக்கமுறை மற்றும் விஞ்ஞானத்தில் பயிற்சியளிப்பது யார் வேண்டுமானாலும் அல்லது அனைவராலும் செய்யக்கூடியதல்ல. இதில் உதவி செய்வது என்பது வேறு விஷயம். சாதகன் இந்த முயற்சியில் மட்டுமே விடாப்பிடியாக நீடித்து இருக்க வேண்டியதும் இன்றியமையாதது ஆகும். ஒருவரை பூரணத்துவ (முழுநிறைவு பெற்ற) நிலைக்குக் கொண்டு சென்ற பிறகு உலகவாழ்வின் எல்லைகளுக்கு அப்பாலும் உதவிகிடைத்துக் கொண்டே இருப்பதற்காக இவ்விதமான உண்மையான ஆன்மீக முன்னேற்றத்துக்கு ஏற்படும் இடையூறுகளை நீக்குவதில் உன் வாழ்க்கையின் ஒரு பகுதி செலவிடப்படும்.’’

## 1-4-1946 (காலை 8.25 மணி)

**சுவாமி விவேகானந்தா:**

‘‘நமது பிரபு (வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜி சாகேப்) இன்று பெருந்துன்பத்திலிருந்தும் வேதனையிலிருந்தும் விடுவிக்கப்பட்டிருக்கிறார். இப்போது அவருக்கு ஒரு சில சீடர்கள்தான் எஞ்சியிருக்கிறார்கள். அவருடைய குருவும் கூட (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) இப்படி விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும். வணக்கத்திற்குரிய உன் மாஸ்டரின் முன்னாள் சீடர்களைப்பற்றி இப்போது பேச வேண்டாம். இனிமேலும் அவருக்கு அவர்களோடு எந்த சம்பந்தமும் இல்லை. அவர்கள் தங்கள் சொந்த விதியின்படி போகட்டும். உனக்கு அவர்கள் இப்போது மற்ற எந்த ஒரு சாதாரண மனிதனையும் போலத்தான் இருக்கிறார்கள். உன் சத்சங்கத்தில் இருந்தவர்களின் சோகமான கதை இது. நீ இழந்துவிட்ட நிறைய மனிதர்கள் தங்கள் சொந்தக் குறைபாடுகளின் விளைவாக வீழ்ச்சியடைந்தார்கள் என்பதில் உறுதி பெறுவாயாக!’’

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் (இரவு 7.55 மணி):**

‘‘நமது ஆன்மீக முயற்சி ஒரே ஒரு விஷயம் மட்டுமே நம் பார்வையில் தோன்றும்படியாக, ஒரு எளிமையான உள்நிலையை உண்டாக்குவதில் அல்லது வளர்த்துக் கொள்வதில் கட்டாயம் திசை திருப்பி விடப்படவேண்டும். தனது பார்வை குவியும் இடத்தில் அதாவது கவனம் ஒருமுகப்படும் இடத்தில் – அந்த ஒரு நோக்கத்தைத் தவிர வேறு எதுவும் வருவதற்கு அனுமதிக்கக்கூடாது. எளிமை என்பது இயற்கையுடன் இசைந்தவராக மாறுவதேயாகும். நாம் செய்யும் ஒவ்வொரு வேலையும் தானாகவே நடப்பதுபோல் தோன்ற வேண்டும். இயற்கையாகிய இயந்திரம் வேலை செய்துக் கொண்டிருக்கிறது. அதன் விசைத்திறன் அனுபவத்துக்கு வருவதில்லை. இந்த மர்மத்தை மக்கள் கிரகித்துக்கொள்வது அல்லது புரிந்துகொள்வது இல்லை. பகவத்கீதைக்கு எத்தனையோ விரிவுரைகள் வந்திருக்கின்றன. ஆயினும் எதுவுமே அதன் உள்ளார்ந்த சத்தியத்தை (கீதையின் உண்மைப்பொருளை) சொல்லமுடியவில்லை. அங்கே விவரிக்கப்பட்டிருப்பது மிகவும் அதிகபட்ச சூட்சுமமான ஒரு விஷயமாக இருக்கிறது. அதைத் தவறாகப் புரிந்துகொள்வதன் மூலமாக நூற்றுக்கணக்கான விளக்கங்களும் விரிவுரைகளும் வந்திருக்கின்றன. பேய்களை வழிபடுவது மதிப்புடையது என்று எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அரசமரங்களை மக்கள் வணங்க ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் சிங்கத்தின் வாய்க்குள் யாரும் போகவில்லை. அது

எதிரியாக மட்டுமே கருதப்பட்டது. இவையனைத்தும் நல்லறிவுக்கு (விவேகத்துக்கு) எதிரானவை அல்லவா? பூஜாரிகள் மக்கள் வழிபடும்போது தட்சிணையும் (தங்களுக்கு பணம் அளிப்பதையும்) தருவதை ஆரம்பிக்கச் செய்தார்கள். கடவுள் எல்லாவற்றிலும் இருக்கின்றார்; எனவே, அனைத்தையும் வணங்கவேண்டும் என்று போதிப்பதை ஆரம்பித்தார்கள். இவ்வாறு பல அபத்தங்கள் (பொருந்தாத மற்றும் சம்பந்தமற்ற விஷயங்கள்) பரவத் துவங்கலாயின. சாக்கடைகளைக் கூட வழிபாட்டுக்குரியவைகளாகக் கருதினார்கள். (அதாவது கழிவுநீர்கள் கலந்து ஓடும் சின்ன நீரோடைகள் நதியைப்போன்று மதித்து வணங்கப்பட்டன.) இதற்கு ஆதரவாக பகவத்கீதையில் பேய்களை வணங்குவதும் ஒருவிதத்தில் என்னை (அதாவது கடவுளை) வணங்குவது போலத்தான் என்று மேற்கோள் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இது புரிந்துகொள்வதற்கு சுலபமாக இருந்ததால் மக்கள் அதையே ஏற்றுக்கொள்ளத் துவங்கிவிட்டார்கள். இதற்குப் பிரசாரம் செய்த அந்த மிக மோசமான மூடர்களை மற்றும் அனைத்தும் சீர்கேடு அடையச் செய்தவர்களைப் பற்றி என்ன சொல்வது! வழிபாடு என்ற பெயரில் எத்தனையோ சிந்தனை வழிகள் உருவாகி அவற்றை இணைக்க முடியாதபடி ஆகிவிட்டன.''

## 2-4-1946

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் (M1 - இடம் கூறியது):

''நான் ஏற்கெனவே என் சுதந்திரத்தைப் பெற்றுவிட்டேன். ராம் சந்த்தர் வணக்கத்திற்குரிய எனது மாஸ்டருக்கும் ராம் சந்த்தர் இன்று சுதந்திரம் அளித்துவிட்டார்! மற்றுமுள்ள வணக்கத்திற்குரிய பெரியோர்கள் சம்பந்தமாகவும் இது தொடர்பான உத்தரவுகள் வந்திறங்கலாம் என்பதும் சாத்தியம். இப்போது உங்களுக்கெல்லாம் இருக்கின்ற வேலை என்ன? உங்களுடன் சேர்ந்து இன்னும் நீடிக்கின்ற நான்கு, ஆறு, எட்டு அல்லது ஒன்பது பேரோ அல்லது எவ்வளவு பேராயினும் அவர்கள் ஆன்மீகத்தின் உச்சத்தை எட்டுவதற்கு முயற்சி செய்யவேண்டும். உண்மையான பற்றுறுதியை அடையும்படி மனிதர்களை உற்சாகப்படுத்த வேண்டும். அவர்கள் தங்களை நன்றாக உருவாக்கிக் கொண்டு வளர்ச்சியடைய வேண்டும். பரம்பொருளைப் பற்றிய விஞ்ஞானத்தை (பிரம்ம வித்யாவை) எங்கெங்கும் பரவச்செய்வது மற்றும் பிரசாரம் செய்வதில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். மிக உயர்ந்த தகுதிச்சிறப்புடைய பெரியோர்களிடமிருந்து மிக மேலான குறிக்கோள்கள் பற்றிய குறிப்புகள் தொடர்ச்சியாக வந்துகொண்டே இருக்கின்றன. இந்த மிக உயர்ந்த

நிலைகளை (மேலான குறிக்கோள்களாக ஆன்மீக நிலைகளை) முதலில் தன்னிடத்தில் ஆரம்பித்து பிறகு எல்லோரிடமும் வளர்ச்சியடையச் செய்வதற்கு முயற்சி செய்யப்படவேண்டும். ஆயிரக்கணக்கான முன் பிறவிகள் கடந்து போய்விட்டன. இனிமேலும் அப்படி நம் வாய்ப்பு நழுவிவிட அனுமதிக்கக் கூடாது. முக்தியடைவது அவ்வளவு ஒன்றும் சிரமமான விஷயமல்ல. எண்ணத்தை சரியான விஷயத்தில் பற்றுக்கொள்ளச் செய்வதுதான் அதற்குத் தேவைப்படுகிறது. அவர் தன்னுடைய நோக்கத்தை எவ்வளவு சுலபமாக அடையப்பெற்றார் என்பதை ராம் சந்த்தரிடம் கேளுங்கள். அவர் அதற்காகப் பின்பற்றிய வழிமுறைகள் உண்மையில் மிக விசேஷமானவை. (வேறு யாரும் செய்யாதவை) அதில் அவர் படிப்படியாக அறிமுகப்படுத்திக் கொண்டிருந்த அனைத்தும் அவரது சொந்தக் கண்டுபிடிப்புக்களேயாகும். இந்த வழிறைகள் அனைத்தையும் குறிப்பு எழுதிவைத்துக்கொண்டு, அவர்கள் பயிற்சி செய்வதற்காக மற்றும் பின்பற்றுவதற்காக மக்களுக்குச் சொல்லப்படவேண்டும். இவையனைத்தும் மிகவும் சுலபமானவை. அவர் என் முன்னிலையில் இல்லாமல் வேறு இடத்தில் இருந்தாலும், என் நினைவில் இருந்து (என்னைப் பற்றிய நினைவிலிருந்து) ஒருபோதும் விலகி இருந்ததில்லை. இருவரும் சேர்ந்து இருந்தபோதும் அவர் அந்த நினைவு இன்றி இருந்ததில்லை. அவர் செய்யும் இந்தப் பயிற்சியையெல்லாம் யார் செய்து கொண்டிருக்கிறார் என்ற கருத்தைக் கூட அவர் இழந்திருந்தார். சிந்திப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் எட்டாத ஒருவிதத்தில் அவர் பேரானந்தத்தை உணர்ந்தார். இதில் அவருடைய முக்கியமான வழிமுறை என்னவாக இருந்தது? அனைத்து விஷயங்களும் இந்த ஒரு விஷயத்திற்குள் ஒன்றாக இழுத்துக் கொள்ளப்பட்டிருந்தன!''

‘‘அன்புள்ள M1 உண்மையான தரத்தை / தகுதிச்சிறப்பை உடைய ஒரு பெரியவரிடத்தில் பெரும்பாலும் இருக்கக்கூடிய ஒருமுகப்பட்ட மனச்சார்பு இது தான். ராம் சந்த்தர் பயன்படுத்திய சுலபமான வழிகள் இப்போதுதான் என் எண்ணத்தில் தோன்றின. நான் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தேன். இம்மாதிரி செயல்நுட்பங்களை வேறு எங்கும் காண்பது அரிது. அவருடைய ஞாபகத்தில் இதெல்லாம் இருந்தனவா? என்பது யாருக்குத் தெரியும். அது என்னவாக இருந்தாலும் சரி. மற்றவர்களுடைய நன்மைக்காக இவ்விஷயங்கள் எழுதி வைக்கப்படவேண்டும். அவர் எங்கிருந்து தன் வளர்ச்சியை, முன்னேற்றத்தை ஆரம்பித்தாரோ அந்த நிலைக்கே திரும்பிச்சென்று தான் எந்த வழிமுறைகளின் மூலமாக

முன்னேற்றமடைந்தாரோ அதே வழிகளில் மேலேறி வந்து அதில் இதுவரை அவர் கடந்து வந்ததை மற்றும் அதன்போக்கில் நிகழ்ந்தவைகளை குறிப்பெழுதி வைக்கவேண்டும் என்று நான் அவருக்கு உத்தரவு இடுவேன். இது கடவுளின் படைப்பாகிய மற்றவர்களின் நன்மைக்காக செய்யப்படும் மிகப்பெரிய தியாகமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இந்த இடைப்பட்ட காலத்தில் என்னுடைய வேலை நடைபெறாமல் நின்றுபோகும் சாத்தியமும் இருக்கிறது. பரம்பொருளிலிருந்து ஏதாவது விசேஷமான கட்டளை பெறப்படும் வரையில், அவரிடத்தில் விளங்கும் ஆன்மீகத் தூய்மையின் சூழ்நிலையின் விளைவில் எந்த சீர்கேடும் இருக்காது என்பது எனது நல்லாசியாகும். விசேஷ உத்தரவு பிறப்பிக்கப்படும் அந்த நிலை ராம் சந்த்தராவை மிக உயர்ந்த நிலை வரையில் எடுத்துச்செல்லும் கருத்து உடையதாக இருக்கலாம். அது நிகழும்பட்சத்தில் இப்போது இருக்கும் ஆன்மீகத் தூய்மை நிலையில் நிலைநிறுறுததப்பட்ட விளைவுகள் சிலநாட்களுக்கு அவருக்கு கிடைக்காமல் போகும் என்பது உண்மைதான்.

### வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது (இரவு 7.30 மணி):

‘‘பகவத் கீதை மொத்தக் கருத்தும் சாராம்சமும் இதுதான். போர்க்களத்தில் தனது உறவினர்களும் நெருக்கமானவர்கள் அணிவகுத்து எதிரெதிராக நிற்பதைக் கண்டு அர்ஜுனன் மனத்தளர்ச்சி அடைந்தான். அவர்களை எப்படிக் கொல்வது, ஏன் கொல்லவேண்டும் என்று மனம் குழம்பினான். தனது சொந்த குடும்பத்தாரையும், உறவினர்களையும் கொன்றொழித்துத்தான் இந்த ராஜ்ஜியம் கிடைக்குமென்றால் அதில் என்ன பயன்? என்ற இம்மாதிரி எண்ணங்கள் அவன் மனத்தை அலைக்கழித்து அவன் உள்ளத்தில் ஒருவித கோழைத்தனத்தை உண்டாக்கின. அவனுடைய உற்சாகம் மறைந்து க்ஷத்திரிய குலத்துக்குரிய கடமையைச் செய்வதிலிருந்து அவன் விலகிப்போய்க் கொண்டிருந்தான். அப்போதைய நிலைமையில் கட்டாயம் செய்ய வேண்டியிருந்த கடமையை அவன் புரிந்து கொள்வதற்காக வாய்மொழிகள் மூலமாக முயற்சி செய்தேன்; பல பாடங்களை அவனுக்குக் கற்பித்தேன். அதனுடன் கூடவே யோக சக்தியை பிராணாஹூதியாக அளிப்பதன் மூலமாக ஆன்மீகநிலைகளின் நுழைவாயில்களில் அவன் உள்ளே புகுமாறு செய்வதற்கு என் சங்கல்ப சக்தியைப் பயன்படுத்தினேன். எண்ணத்தின் சக்தி அதனுடன் இணைந்திராமல் எவ்வளவு விளக்கங்கள் சொன்னாலும் பயனிருக்காது. இவ்விதமாக மறைமுகமாக (சிலருக்கு மட்டுமே கூறத்தக்கதாக) இருந்த

புள்ளிகள் (ஆன்மீக நிலைகள்) அனைத்தும் அவனுடைய இதயத்திற்குள் கொண்டுவரப்பட்டன. ஒரு சமன்பட்ட நிலை அவனிடத்தில் உண்டாக்கப்பட்டது என்று குறிப்பிடவேண்டிய உள்நிலையாக அது இருந்தது. அந்த ஒரு சமத்துவ பாவனையில் துன்பமும் இன்பமும் ஒரேவிதமாக, ஜீவிதமும் மரணமும் ஒன்றே என்பதாகக் காணப்படும். அர்ஜுனனுக்குத் தெரியவைக்கப்பட்ட கீதை இதுதான். இல்லையா? ஆன்மீக பிராணாஹுதியைப் பயன்படுத்தாமல், வெறுமே உரையாடுவதால் உள்ளார்ந்த திரைகள் கிழிக்கப்படுமா? கீதையில் ஒரு கருத்து நிச்சயமாக வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது. அதாவது ஒருவன் தனக்கென்று குறிப்பிடப்பட்ட கடமையில் தவறாமல் ஈடுபடவேண்டும். (சமுதாய அமைப்பில் தன்னுடைய பதவிக்கு இசைந்தவாறு ஒரு விசேஷ கட்டாயக் கடமையாக இருப்பதை தவறாமல் செய்யவேண்டும். உண்மையில் இந்த ஒரு கருத்துத்தான் விரிவாக்கம் பெற்று ஒரு புத்தகவடிவில் அளிக்கப்பட்டது. நான் இப்போது என்ன சொன்னேனோ அப்படித்தான் அது இருக்கிறது.)''

### 3-4-1946

### வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் (காலை 9.20 மணி):

''ஒரு விசித்திரமான விஷயத்தை இப்போது சொல்கிறேன். அதாவது போர்க்களத்தில் கூட ராதை என்னுடன் இருந்தாள். அவள் அங்கு இருப்பதைக் கண்டறியத்தகுந்த பார்வைத்திறன் யாருக்கும் இருக்கவில்லை என்பது உறுதி. இப்போதும் கூட அதேமாதிரிதான் இருக்கிறது அல்லவா? இதுதான் ஒரு பரிபூரண மாஸ்டரின் அற்புதம்! இரண்டுபேர் அங்கு இருந்தாலும், ஒருவர் மட்டும் இருப்பதாகவே அவர்கள் தெரிவார்கள். ராதை என்னை ஒருபோதும் பிரிந்து தனியே இருக்கும்படி விட்டதில்லை; நானும் அவளுடைய எண்ணத்திலிருந்து ஒருபோதும் நீங்கவில்லை. இருவரும் அப்படியே ஒருவராகவே ஐக்கியமாகிவிட்டோம். இதன் பொருள், நான் எங்கெங்கும் (அனைத்து இடங்களிலும்) அவளுடன்தான் இருக்கிறேன், அதேபோல அவளும் நான் எங்கிருந்தாலும் என்னுடன்தான் இருக்கிறாள் என்பதேயாகும். இந்தநிலை அதைப் பார்ப்பதற்கு அகக்கண்களும், புரிந்து கொள்வதற்கு கூர்மைத்திறனுடைய மூளையும் தேவைப்படுகின்ற நிலையாகும். புத்தகவடிவங்களில் (புத்தகங்களில் உள்ள விஷயங்களில்) தன் மூளையை நிரப்பி வைத்துள்ள ஒருவன் ஒருபோதும் இந்தப் புதிரைப் புரிந்து கொள்ள முடியாது. இதுவும் அதுவும் வேறு வேறானவை; ஞானம் உடையவர்கள் கற்றறிந்தவர்கள் என்றும் பெரும் கல்வி பெற்றவர்கள் ஞானி என்றும் சொல்லப்படுகிறார்கள். இந்த இருவரில் யாருமே

முக்கியமான உண்மையுடன் அறிமுகம் பெற்றவர்கள் அல்ல. பகவத்கீதையில் நான் ஆறு ஸ்லோகங்கள் (செய்யுட்கள்) மட்டுமே சொன்னேன். ஏழாவதைச் சொல்வதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அது நடைமுறை வழியில் அர்ஜுனனின் அனுபவத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஒவ்வொரு ஸ்லோகமும் ஒரு விசேஷ ஆன்மீகநிலையைப் பிரதிபலிப்பதாக இருந்தது.''

## 6-4-1946

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் (காலை மணி 8-10):

''எனது பிரியமான ராம் சந்த்தர் அவ்யக்த கதி (குற்றம் குறையில்லாத சத்தியநிலையின் புள்ளி அல்லது தெய்வீக புனிதத்தன்மையின் புள்ளி) என்ற நிலையிலிருந்து இலங்கையின் முனிவருக்கு பிராணாஹுதி அளித்தபோது, அவர் (இலங்கையின் முனிவர்) வேறு ஒரு தெய்வீகப்பணியில் மிகவும் முனைப்போடு இருந்ததால் இந்த பிராணாஹுதியை அவரால் உணர முடியவில்லை. அவருக்கு இதைப் பற்றித் தெரிவித்தபோது, அவர் இதில் தன் கவனத்தைத் திருப்பி தியானம் செய்ய உட்கார்ந்தார். அவருடையநிலை எந்த அளவுக்கு அவருக்கு அன்பை உண்டாக்கியது என்றால், அந்தநிலைக்கு உரியதான புள்ளி மலர்ச்சியடைய, விழிப்படைய வேண்டும் என்று அவர் பிரார்த்தனை செய்யும்படி செய்தது. இயற்கையில் இருந்து அதற்கான உத்தரவு கிடைக்கவில்லை என்பதால், அவர் விரும்பியபடி செய்ய முடியவில்லை. அந்த இலங்கை முனிவரின் இதயம் இந்த நிலையில் மிகவும் விருப்பம் கொண்டதாக இருந்ததால் அவர் அந்தப்புள்ளி விழிப்படையும் வரையில் பட்டினி நோன்பு இருக்கத் துவங்கினார். அவர் அந்த உண்ணாநோன்பைத் தொடர்கிறார். இயற்கையின் உத்தரவுக்காகக் காத்திருக்கிறோம். இந்நிலையில் அந்த முனிவர் தன் குருவை நினைத்து வேண்டினார். அதன் பிறகு இயற்கையின் உத்தரவு கிடைத்தது. மேலும் இவ்வுலகில் அந்தப்புள்ளியை விழிப்படையச் செய்யக்கூடியவர் ஒரே ஒருவர்தான் இருக்கிறார்; அவரை (அதாவது ராம் சந்த்தரை) நாடி மனம் சார்ந்து இருந்தால் மட்டுமே அதற்குத் தேவையானதை அவர் செய்ய முடியும் என்று குறிப்பிட்டுச் சொல்லி அதற்கு அனுமதியும் கிடைத்தது.''

## இலங்கை முனிவரின் வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''ஸ்ரீலங்காவில் இருக்கும் என் சீடர் இச்சமயத்தில் தனது காலத்தின் ஒரு விஷேஷமான இணையில்லாத மூத்த முனிவராகத் திகழ்கிறார். அவருக்கு

மிகவும் வயதாகிவிட்டது. உங்களை (ராம் சந்த்தரை) அவர் குருநாதராகக் கருதினாலும் உங்களிடம் இம்மாதிரி விலைமதிப்பற்ற (மிகவும் அரியதான) ரத்தினங்கள் மறைந்துள்ளன என்பதை அவர் அறியாமலிருந்தார். உங்கள் தென்னிந்திய பயணத்தின்போது உங்களை அவர் நிறைய மதிப்பீடு செய்தார். ஆனால் என்ன முயன்றும் ஒரு சரியான மதிப்பீட்டை அவரால் செய்ய முடியவில்லை. ஒரு கண் இமைப்பிலேயே, மிகவும் நிரப்பும் திறன் உடையதாக இருக்கும் வகையில் வரம் பெறும்படி கடவுளால் நீங்கள் உருவாக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்கு உத்தரவு இடுவதற்கு எனக்கு உரிமை இல்லை. ஆனால் அதனை விரும்புகின்ற, அதற்கான தகுதி உடைய மனிதர்களுக்கு ஆன்மீக நன்மை அளிப்பதாகிய அந்தக் காரியங்களுக்காகவே நீங்கள் வந்திருப்பதால், நிச்சயமாக உங்களிடம் வேண்டுகோள்களை செய்வேன்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் (லாலாஜி சாகேப்):

''ஒரு மிகப்பெரிய மெய்ஞ்ஞானி இப்படிப் புகழ்ந்து பேசுவதால் எனக்குக் கூச்சம் உண்டாகிறது. ஸ்ரீலங்காவின் முனிவரை உச்சந்தலைக்கு (அங்கு இருக்கும் ஆன்மீகநிலைக்கு) மேலே இருக்கவேண்டுமென கட்டளை இடுகிறேன். ஆயினும், இதை திடீரென்று உடனே செய்ய வேண்டியதில்லை. அவரை உன் பயிற்சியின்கீழ் எடுத்துக்கொள். அவருடன் தொடர்பு கொண்டு உன் மாஸ்டரிடம் இருந்து உனக்கு உத்தரவுகள் வந்திருப்பதாகவும், அதனால் இனிமேல் உண்ணாவிரதம் இருக்கவேண்டாம் என்றும் சொல்லுங்கள். அவருக்கு நிச்சயமாக பொறுமை தேவை.''

*(என் மாஸ்டர் எனக்கு உத்திரவு அல்லது அனுமதி கொடுத்த விஷயம் இலங்கையின் முனிவருக்கு நேரடியாகத் தெரிவிக்கப்பட்டது. மாஸ்டரின் உத்தரவின் பேரில் அவர் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்.)*

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

''உலகின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வேலை செய்து கொண்டிருக்கின்ற ஒரு தகுதியுடையசீடனை அவர் உருவாக்கியிருக்கிறார் என்பதால் அதற்கு மதிப்பளித்து இலங்கையின் முனிவருடைய மாஸ்டரை நான் மன்னிக்கிறேன். இல்லையென்றால் அவருடைய ஆன்மீகநிலையைப் பறித்துக்கொண்டு அவரைக் கீழே இறக்கும்படி உனக்கு நான் உத்திரவிட்டிருப்பேன். இதன் காரணம் என்னவென்றால் எனது பிரியமான ராம் சந்த்தரை இனி யாரும் எந்த சோதனைக்கும் உட்படுத்தக்கூடாது என்று இயற்கையின் நிரந்தர உத்தரவு இருக்கிறது. அப்படியிருக்க அவர் ராம்

சந்த்தரை சோதனைக்கு ஆட்படுத்தியது ஏன்? அந்த சோதனையில் நீ வெற்றியடைந்தது என் உருவாக்கத்தினால்தான். இலங்கை முனிவரின் குரு ராம் சந்த்தரிடம் தனக்கு பிராணாஹூதி அளிக்கும்படி கூறினார். அதுதான் அவரது சோதனை! முக்திபெற்ற ஆன்மாக்களுக்கே உரியதான ஒரு மரியாதை மற்றும் பண்புடன் தனக்கு பிராணாஹூதி அளிக்கப்படுகிறதா என்று பார்க்கும் எண்ணத்துடன் அந்த சோதனை செய்யப்பட்டது. எனதருமை ராம் சந்த்தர் அந்த மரியாதைப் பண்பை மிகச் சரியாக அனுசரித்ததோடு, வணக்கத்திற்குரிய பெரியோர்கள் எப்போதும் செய்வது போலவே மிகச்சரியாக அவருக்கு பிராணாஹூதி அளித்தார். அந்தத் தூய்மையான வடிவில் சிறியது மற்றும் பெரியது என்ற சிந்தனையே இருப்பதில்லை. இந்த விதமாக பிராணாஹூதி அளிப்பது வேறு யாருக்கும் தெரியாதது. இப்படி இருக்கும்போது,ராம் சந்த்தரை எந்த சோதனைக்கும் ஆட்படுத்தக்கூடாது என்று இயற்கையின் நிரந்தர உத்தரவு தெரிந்து கொண்டே அவரை சோதித்தது ஏன்?

**சுவாமி விவேகானந்தா:**

''இலங்கையின் முனிவர் ஆன்மீகத்தில் மிகவும் நன்கு முன்னேற்றமடைந்திருக்கிறார். ஆனால் இன்னும் அவ்யக்த கதி எனப்படும் நிலைக்கு மிகவும் கீழேதான் இருக்கிறார்.''

7-4-1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''மக்கள் ஆன்மீகத்தை ஏதோ ஒரு நகைச்சுவையான விஷயமாகக் கருதுகிறார்கள். அவர்கள் அதை குருவின் அல்லது வழிகாட்டியின் கடமையில் ஒருபகுதி என்று நினைக்கிறார்கள். ஏனெனில் தங்களைப் பொறுத்தவரை அவர்கள் உலகியல் விஷயங்களில் இணைந்திருப்பதற்கே முதலிடம் தருகிறார்கள். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தியானம் என்ற பெயரில் கண்மூடி இருந்துவிட்டுப் போகிறார்கள். இப்படியே எத்தனையோ பிறவிகள் கடந்துபோய்விட்டன. எனினும் தாங்கள் முன்பே நிர்ணயித்துக்கொண்ட கொள்கைகளில் (முன்பே வகுத்துக்கொண்ட பாதைகளில்) உறுதியாக நிலைத்திருக்கிறார்கள். ஆன்மீகத்துக்கு முக்கியத்துவம் தரும் அக்கரை யாருக்கும் இல்லை. உலகியல் விஷயங்களையே முக்கியமாகக் கருதி தங்களுடைய எல்லா ஆற்றல்களையும் அதன் பக்கமாகத் திரட்டிக் கொள்கிறார்கள். பொதுவாக மக்களின் மனப்பான்மை இப்படித்தான் இருக்கிறது. அவர்கள் தங்கள்

இதயங்களை இந்தப் பக்கமாக, அதாவது ஆன்மீகத்தின் பக்கமாகத் திருப்பி இதன் மீது மட்டுமே பற்றுடையவர்களாக ஆகி, அதில் முன்னேறுவதற்கான சாதனங்கள், பல்வேறு ஆன்மீக முடிச்சுகளைக் கட்டவிழ்ப்பதுபற்றி விசாரித்தறிந்து, அதைத் தொடர்ந்து அதற்காக வேலை செய்யவேண்டும். பெரும்பாலான நேரத்தை அவற்றில் செலவிடுவதால் உலகியல் சார்ந்த விஷயங்கள் சுலபமாக இருப்பதாகத் தோன்றுகின்றன. அதேபோல ஆன்மீகத்துக்காகவும் போதுமான அளவு நேரமும் கொடுத்து அதில் ஈடுபாடும் கொண்டிருந்தால் அதுவும் கூட சுலபமாகவே தோன்றும். உண்மையான ஆன்மீகத்திலிருந்து ஆனந்தம் கிடைக்காமல் போவது ஏன்? அன்பு இல்லாமையினால்தான்! எதையும் அடைவதற்கு மற்றும் ஒவ்வொரு குறைபாட்டையும் நீக்குவதற்கு தியானம் செய்ய முடியும். ஆனால் நம்மை நம் குறிக்கோளை அல்லது லட்சியத்தை அடையும் வரை கொண்டு செல்வது அன்பு அல்லது லட்சியத்தின் மீது பற்று மட்டுமேயாகும். ஒரு விநாடி கூட கடவுள் அல்லது குருவைப் பற்றிய நினைவு மறந்துவிடாதபடி நிரந்தரமாக இருப்பதே சுலபமான தியானம். மிகச் சுலபமான பரிந்துரையும் அது மட்டுமேயாகும். ஆயினும், அதில் சில செயல்நுட்பங்களும் கூடவே அனுசரிக்கப்படவேண்டும். உண்மையான அன்பு இருந்தால் இந்த விஷயங்கள் தாமாகவே வரத்துவங்கும். எனவே, பெரும்பாலான நேரம் இந்த நினைவில் மட்டுமே ஈடுபட்டிருக்கவேண்டும். இது நன்கு பரிசோதிக்கப்பட்ட ஒரு வழிமுறையாகும். அது ஒருபோதும் தோல்வியடைய முடியாது. உலகியல் விஷயங்களில் அன்பு என்பது பெரும்பாலும் புலன்சார்ந்த இன்பங்களில்தான் இணைந்திருக்கிறது. இது சுலபமானதாகவும் தோன்றுகிறது. ஏனென்றால் மக்களின் மனங்கள் இந்தப் புலன் இன்பங்களில்தான் நாட்டம் கொண்டுள்ளன. இந்த மனநாட்டம் ஆன்மீகத்தின் பக்கம் திருப்பிவிடப்பட்டு உருவாக்கப்பட்டால் ஆன்மீகத்தில் அனைத்து விஷயங்களையும் அடையமுடியும். எல்லோருக்கும் கிடைக்க இயலாத அந்த முடிவில்லாத, தீர்ந்து போகாத ஆனந்தத்துடன் நமது அன்பு இணைக்கப்பட்டால் அதே பலன் இங்கேயும் கிடைக்கும். இதில் நாம் இணையும் விஷயம்தான் (அதன் பயன்பாடு அல்லது செயல்படுத்தும் விதம்) மாற்றியமைக்கப்படுகிறது. அங்கே உலகியல் விஷயங்களில் அந்த வெளிப்புற சக்திகளின் விளைவாக, புலன் உறுப்புக்களிலிருந்து இன்பம் முளைவிட்டு வந்து கொண்டிருக்கிறது. இங்கே ஆன்மீகத்தில் அந்த சக்திக்குள் துளைத்துக்கொண்டு செல்வது நிகழ்கிறது; அதன் மோசமான இணைப்பின் காரணமாக விசைத்திறன் உண்டாக்கப்படுகிறது. அந்த முழுமையான தன்மையில் ஒரே ஒரு விஷயத்தைத்தான் (ஆன்மீகம் அல்லது

உலகியல் இவ்விரண்டில் ஒன்றைத்தான்) பெற முயற்சி செய்ய வேண்டும். ஒன்றில் பைத்தியக்காரத்தனம் இருக்கிறது; இன்னொன்றில் மனிதப்பண்பு இருக்கிறது. ஒன்று கடமை என்ற தகுதியில் இருக்கிறது. மற்றது கடமைக்கு வெளியே மரியாதையின்மை (திமிர்) என்ற வட்டத்தில் இருக்கிறது. ஆன்மீகத்தை ஒரு மனிதனிடம் சரியாக நிலைபெறச் செய்து விட்டால், மற்ற விஷயங்களும் அவன் கட்டுப்பாட்டில் வந்துவிடும். முடிவாகச் சொன்னால் எல்லா இடங்களிலும், அனைத்து விஷயங்களிலும் அன்புதான் வெற்றியின் ரகசியமாக இருக்கிறது. அன்பு ஒரு சாதகனை மிகமேலான உச்சநிலைக்கே கொண்டு செல்கிறது. அதன்பிறகு அது மறைந்து விடுகிறது அல்லது தன் சொந்தப் பாதையை இழந்து காணாமல் போகிறது.''

''அன்பு என்பது என்ன? அது பரமாத்மாவின் (பரம்பொருளின் ஜீவத்தன்மையின்) நிழல். மனிதனின் உண்மையான சாராம்சம் அது. இது எவ்வளவு அருகில் இருக்கிறது. வெளிச்சத்துக்கு வந்தால் நிழல் மறைந்து போகிறது. அன்பைப் பற்றி சரியாகப் புரிந்து கொள்வதற்கு, மூன்று நிலைகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். **முதலாவது,** பொதுவாக எல்லோரிடமும் எங்கும் காணப்படுவது; அதற்கு உதாரணம், விளக்கம் எதுவும் தேவையில்லை. உலகியல் விஷயம் ஒவ்வொன்றிலும், தன்னைப் பற்றிய சொந்த அக்கரையோ, தனக்கு எந்த நன்மையோ இல்லாமல், தேவையில்லாமலே அதில் ஒருவர் ஈடுபட்டு இருக்கிறார். அந்த உலகியல் விஷயங்களில் அவர் மிகவும் அகப்பட்டுக்கொண்டு அந்த சாதாரண விஷயங்கள் அவருக்குத் துன்பத்தையும், மிக ஆழ்ந்து வேரூன்றிய வருத்தம் மற்றும் அதிர்ச்சியும் கூட தருகின்றன. அதில் கொஞ்சம் விடுபட்டு இருக்கும் போது, உடனே அதற்கு எதிரான மகிழ்ச்சியை நாடும் போக்கு உண்டாகிறது. **இரண்டாவதுநிலை** இதைவிட மேலானது. மிகவும் மேலானது என்றே கூறலாம் - இந்தநிலையில் உலகியல் விஷயங்களில் அக்கறை (அது பற்றிய கவலை மற்றும் பரபரப்பு) இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை; வேலைகளில் முனைப்பான பங்கேற்பதும் இருக்கிறது; அதனால் சிரமத்தையும், வேதனையையும் அவர் உணர்கிறார் என்பதும் உண்மை. ஆனால் முதலாவது நிலைக்கும் இதற்கும் வித்தியாசம் என்னவென்றால், இங்கே அதுபற்றிய சோகம் (வருந்தி அழுவது) அல்லது ஆழ்ந்து வேரூன்றிய துக்கம் மற்றும் அதிர்ச்சி இருக்காது. இன்னும் முன்னால் சென்று **மூன்றாவது நிலைக்கு** ஏறிச்சென்றால் வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கவேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அங்கே இருக்கிறது. கஷ்டப்பட்டு உழைத்தும்கூட விரும்பிய பலன்

கிடைக்கவில்லையென்றால் அது கடவுளால் விதிக்கப்பட்டது என்று சாதாரணமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இந்தநிலைக்கு வந்துவிட்டால் தெய்வீகமான எண்ணங்கள் வர ஆரம்பிக்கின்றன; அந்த தெய்வீகத்தின் மீது பற்று ஆரம்பமாகிறது; அதுவே அதனையடுத்து வரஇருக்கும் வேலைக்கு ஒரு கருவியாக உதவிசெய்கிறது. அதில் தொடர்ந்து செல்வது அதை நோக்கி ஒரு திருப்பத்தை ஏற்படுத்துகிறது. அதேசமயத்தில் உலகியல் சார்ந்த விஷயங்களிலிருந்து இந்தப் (ஆன்மீகத்தின்) பக்கமாக திசைதிரும்புவதும் நடைபெறுகிறது. முடிவான வழியில் இதையும் (உலகியல் சார்பையும்) நீக்கி தேவையான அளவுமட்டும் விட்டுவைத்திருப்பது அன்பின் தூயநிலைக்கு ஆரம்பப் புள்ளியாகிறது. இப்படி 'திருப்பத்தை உண்டாக்குகிறது' என்ற கருத்து மிகவும் பொருள் உடையது. ஹிந்திமொழியில் ஒரு பொன்மொழி இருக்கிறது. 'ஒரு குதிரைக்கு எவ்வளவு பயிற்சியளிக்கிறோமோ அந்த அளவுக்கு அது கம்பீரமான அழகும், உபயோகமும் உடையதாக ஆகிறது' என்பார்கள். நான் இந்த விஷயங்களை சுருக்கமாக சொல்லியிருக்கிறேன். அன்பு என்ற இந்த விஷயம்தான் மெதுவாகவும் படிப்படியாகவும் வளர்ச்சியடைந்து ஒருவனை கடைசி நிலைவரையில் கொண்டுசெல்கிறது.''

8-4-1946

**இலங்கையின் முனிவருடைய மதிப்புமிகுந்த குரு மறு உலகிலிருந்து இங்கு வந்து பணிவுடன் கூறியது:**

''உங்களை (ராம் சந்த்தரை) சோதனை செய்து நான் பெரும் தவறு செய்துவிட்டேன். இப்படி ஒரு மகாபுருஷர் உலகிற்கு ஒருபோதும் வந்ததில்லை – உங்கள் மாஸ்டரைத் தவிர – என்பதை நன்றாக அறிந்தும் அப்படிச் செய்ததற்காக மிகவும் வருந்துகிறேன். வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டர் மிகவும் உயர்ந்த மகான் என்பதும் உண்மை. அவரைப்பற்றி நான் என்ன சொல்வது? இதெல்லாம் அவருடைய அருள்தான். நான் உலக வாழ்வினை விட்டுச்சென்று எத்தனையோ காலம் ஆகியும் இன்னமும் எனக்குக் கிடைக்கப்பெறாத எத்தனையோ நிலைகளை நீங்கள் கடந்திருக்கிறீர்கள்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''அவ்வப்பொழுது மேலே இருக்கும் உலகின் மீது மனநாட்டத்துடன் இரு என்று மட்டுமே உனக்கு நான் சொல்வேன்.''

**அன்புள்ள J1:**

''என்னையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.''

**சுவாமி விவேகானந்தா:**

''நமது பிரபு கூறிய இந்தக் கருத்தைக் கேட்டு மக்கள் சிரிப்பார்கள். ஆனால் அது உண்மை; அப்பட்டமான உண்மை. அதைப் புரிந்து கொள்ளும் திறன் மனிதர்களுக்கு இல்லை. உனக்கு இப்போது அளிக்கப்பட்ட உத்தரவு, அவருடைய பகவான் ஸ்ரீ கிருஷ்ணரையும் ஆயுட்காலத்தில் கட்டுப்படுத்தி இருந்தது. இலங்கை முனிவரின் குரு உன்னிடம் அடிக்கடி பயிற்சிபெற வருவார். காலை நேரத்தில் அவர் வரலாம் என்று நான் நிர்ணயிக்கிறேன். ஆனால் உன் சௌகரியப்படி அதை நீ மாற்றிக்கொள்ளலாம்.''

**இலங்கையின் முனிவர்:**

''என் மாஸ்டரும் கூட எனக்கு அளிக்காமல் எதையும் நிறுத்தி வைத்துக் கொள்ளவில்லை. உங்கள் குருநாதர் உங்களுக்கு எப்படிக் கொடுத்தாரோ அப்படியே அவரும் தன்னிடம் உள்ள அனைத்தையும் எனக்குத் தந்தார். தற்சமயம் வணக்கத்திற்குரிய என் மாஸ்டர் உங்களோடு இருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அவருக்கு நீங்கள் அளிக்கும் பிராணாஹூதியின் பயன் என்னையும் வந்து அடைந்துள்ளது. நான் வியப்பினால் வாயடைத்துப் போயிருக்கிறேன். இதற்கு முன்பு பிராாாஹூதி கிடைக்குமா என்று விரும்பி ஏங்கியிருக்கிறேன். ஆனால் நான் எதுவுமே கற்றுக்கொள்ளவில்லை என்பதை இப்போது கண்டறிந்தேன். வணக்கத்திற்குரிய என் மாஸ்டருக்கு நீங்கள் இப்போது அளித்த பிராணாஹூதி என்னை வியப்பு நிலைக்குக் கொண்டு சென்றிருக்கிறது.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (இரவு மணி 7.45):**

''நான் மௌனமாக இருந்தேன். இப்போது முடிவெடுக்கப்பட்டு விட்டது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உன்னுடன் ஐக்கியடைவது நடந்தாக வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி ஏற்கெனவே அவர் குறிப்பாகச் சொல்லியிருக்கிறார். (30-1-1946) எனினும் அது மெதுவாக, கொஞ்சம் கொஞ்சமாக நான் உன்னோடு ஐக்கியம் அடைந்தது போலவே நிகழும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அப்படி உன்னுடன் ஐக்கியம் அடையும் செயல்முறை ஏற்கெனவே ஆரம்பமாகி விட்டது.''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''விசேஷமான தேவை ஏதாவது ஏற்படும் வரையில் ஒரிஸ்ஸாவுக்கு உனது பயணம் ஒத்திவைக்கப்படுகிறது.''

**9-4-1946**

**சுவாமி விவேகானந்தா:**

''பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உன்னை தனது நிலைக்கு சமமாகக் கொண்டுவர முடிவு செய்திருக்கிறார். உன்னுடைய குருவின் புதுமையான படைப்பைப்போல (உனது ஆன்மீகத் தன்மை போல) எதையும் இதற்கு முன்பு இவ்வுலகம் ஒருபோதும் கண்டதில்லை.'' (சிறிது இடைவெளி)

'' M1 - தொடர்ந்து இதேமாதிரி முன்னேறுவாரானால், அவர் இப்போது முக்திநிலையை நோக்கி போய்க்கொண்டிருப்பார்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''சுவாமி கூறிய குறிப்பின் பொருள் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உன்னை தன்னுடைய நிலைக்குக் கொண்டுவர விரும்புகிறார் என்பதேயாகும்.''

**சுவாமி விவேகானந்தா:**

''உன் கையில் இப்போது அநேக வேலைகள் உள்ளன. இதனால் K....... என்ற இடத்திலிருக்கும் பழைய சகா ஒருவர் பற்றிய ஏதோ ஒரு தகவல் சம்பந்தமாக 7.4.1946 அன்று எழுதப்பட்ட, N3 இன் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமில்லாத விஷயத்துக்காக உன்னை சிரமப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவையில்லை. M1 நாளை அதிகாலையில் விரைவில் எழுந்திருக்க வேண்டும். அவருடைய உடல்நிலை அனுமதித்தால் அவர் குளிக்கவேண்டும். எப்படியோ விடியற்காலை 5 மணிக்கு வேலைக்குத் தயாராக இருக்கவேண்டும். ஆன்மீகப் பணி செய்வதற்கான சக்தியை நமது பிரபு அவருக்கு அளித்திருக்கிறார். அவர் தன் வேலையில் நேரம் தவறாமல் இருக்கவேண்டும். A4 பதிலளித்த விதம் மிகவும் கடுமையாக இருந்தது. இன்று முதல் அவரை நான் சரிப்படுத்துகிறேன். தானாகவே ஏதாவது நிகழ்ந்தாலன்றி நீ எந்தவகையிலும் வெளியே காண்பிக்காமல் வேலை செய்யவேண்டியது உன் கடமை.''

''A4 - போன்ற மனிதர்கள் அந்த விதத்தில் அவர்களுக்கு விதிக்கப்பட்டு இருந்தாலன்றி வழிக்கு வரமாட்டார்கள். அவர்கள்

பாழாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு புதிய உலகை உருவாக்கு. பரம்பொருளையே கூட அசைக்கமுடியும்; ஆனால் அதை யார் உணர்ந்து கொள்ளப் போகிறார்கள்! ஆன்மீக நிலைகளை நீ ஒரு கணநேரத்தில் உட்புகுத்த முடியும். ஆனால் நீ சொல்வதுபோல எளிமையையும், சாதாரணத் தன்மையையும் யார் உணரப்போகிறார்கள்?

### 11-4-1946

### பகவான் புத்தர் கூறியது:

''யாருடைய இணைப்புக்கள் எல்லாம் துண்டிக்கப்பட வேண்டிய தேவை இருந்ததோ, அதெல்லாம் துண்டிக்கப்பட்டுவிட்டன. தங்கள் இணைப்பு துண்டிக்கப்படாமல் இருப்பவர்கள் மிகவும் சிலர்தான். அவர்கள் மிகவும் கவனத்துடன் மற்றும் எச்சரிக்கையாக, வருங்காலத்தில் தங்கள் மீதும் எந்த ஒரு பழியும் வந்துவிடாதபடி நடந்துகொள்ள வேண்டும். ஒரு சங்க அமைப்பு என்பது விசேஷமானது. அதை சரியானபடி பயன்படுத்திக் கொள்ளுங்கள். இப்போது இருக்கும் இந்த ஏற்பாடு உண்மையில் எல்லா மக்களும் ஒன்றுபட்டு இணைந்திருக்கச் செய்வதற்காகத்தான்! ஆனால் அது நடக்கவில்லை. இதன் காரணம் என்னவெனில் தேவைப்பட்ட ஆன்மீக உள்நிலை இல்லாமல் போனதுதான். அது ஏன் இல்லாமல் போனது? உண்மையான விதத்தில் அன்பு வளர்ச்சியடையவில்லை. யார்மீது அன்பு வளர்ச்சியடையவில்லை? தனது குருவின் (மாஸ்டரின்) மீது! மாஸ்டரின் மீது அன்பு இருந்திருந்தால் அந்த எளிமையான மற்றும் இயற்கையான நிலை சாதகரிடம் வளர்ந்து பரவாமல் போகும் சாத்தியமே இல்லை. இந்த இயற்கையான நிலை உருவாகியிருக்கும்போது உயர்வு - தாழ்வு, பெரியது - சிறியது என்பது போன்ற அனைத்து எண்ணங்களும் மறைந்து போகிறது. அனைத்தையும் சமமாக (எல்லாம் ஒன்றே என்று) காணும் பார்வைத்திறன் நிலைத்திருக்கும்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''வணக்கத்திற்குரிய பகவான் புத்தர் சொன்னதன் கருத்து என்னவென்றால் அனைவரும் ஒன்றே என்று உணரும்நிலையை தன்னிடம் வளர்த்துக் கொண்டிருக்கின்ற ஒருவருக்கு வேற்றுமை பற்றிய எண்ணமே இருப்பதில்லை என்பதே ஆகும்.''

### வணக்கத்திற்குரிய பகவான் புத்தர்:

''நான் ஒருபோதும் அவர் அருகில் கூட சென்றதில்லை என்னும் போது அவர் என்னுடன் இணைப்பை அடைந்திருப்பதாக ஒரு கனவான் (U1)

சொல்வது எவ்வளவு நகைப்புக்குரியது! எனது நிலை விசித்திரமான, தனித்துவமான கருணையும், பிரியமும் உடையதாக கருந்திருக்கிறது. தனிமனிதரையும், சமுதாயத்தையும் சீர்திருத்துவதையே என் கடமையாக எடுத்துக்கொண்டு, மனிதர்களுக்கு நன்மை செய்வதற்காக என் வாழ்க்கை முழுவதும் செலவழித்தேன். எனினும் அந்த மனிதர் தண்டிக்கப்பட வேண்டியவர் இல்லையா? தனது முந்தைய இணைப்பை விட்டுவிட விரும்பும் பட்சத்தில், அவர் தன்னுடையதான அனைத்தையும் கைவிட்டிருந்தால் அதனால் தீமை ஒன்றுமில்லை. ஆனால் அவர் என்ன நிலையில் இருக்கிறார் என்பதும் அவருக்குத் தெரியாது. அவருடைய மாஸ்டரின் நிலை என்ன என்பதும் தெரியாது, அதைக் காண்பதற்குப் போதுமான ஞானப்பார்வையும் அவருக்குமில்லை. எனக்குத் தெரியும் (வணக்கத்திற்குரிய உனது, அவருடைய மாஸ்டரின் நிலை). என் கருத்து என்னவென்றால், தனது குரு அல்லது வழிகாட்டி தன் லட்சியத்தை அடைவதற்கு உதவியாகத் தன்னை அதன் பல்வேறு ஆன்மீகநிலைகளை கடக்கச் செய்வதற்கு வேண்டிய திறமையற்றவராக இருக்கிறார் என்பது திட்டவட்டமாகத் தெரிந்தாலன்றி, ஒரு சாதகர் தனது குருவை விட்டு ஒருபோதும் விலகிச் செல்லக்கூடாது என்பதே ஆகும்.''

## 14-4-1946

### சுவாமி விவேகானந்தா:

''இப்போதைய உருவத்தை எடுத்துக்கொள்வதற்கு முன் (இந்தப் பிறவிக்கு முன்) பதஞ்சலி முனிவர் இந்த உலகில் பல மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிறார். அந்தப் பதஞ்சலி முனிவர் நீ தான். நீ அதே ஆன்மா தான்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''வணக்கத்திற்குரிய சுவாமி ரகசியத்தை வெளிப்படுத்திவிட்டார்.''

### சுவாமி விவேகானந்தா:

''இந்த உதாரணத்திலிருந்து மக்கள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். முக்தி அடைவது சுலபமான விஷயம் அல்ல! உலகம் முழுவதும் புகழ்பெற்ற ஒரு முனிவர் இப்போது முக்தியடைவதற்காக வந்திருக்கிறார். (பிறவி எடுத்திருக்கிறார்.) இந்தவிதமாக நூற்றுக்கணக்கான உதாரணங்கள் உள்ளன. சுவாமி ஸ்ரீ சங்கராச்சாரியார் இன்னும் முக்தியடைதலை நோக்கிய மனநாட்டத்தைப் பெறவில்லை. மறுபிறவி என்ற இந்தச் சுழற்சி எவ்வளவு பயங்கரமானது! மக்கள் அதை மிகவும் சுலபமான விஷயம் என்று

நினைக்கிறார்கள். இந்த உலகிற்கு மீண்டும் மீண்டும் வர முயற்சி செய்கிறவர்கள் அதில் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். அவர்களுக்கு முக்தியடைதல் பற்றி எதுவும் தெரியாது. அவர்கள் இப்போதைய நிலையிலிருந்து விடுபடுவதற்கு விரும்பவில்லை. எல்லா ஆசைகளிலிருந்தும் விடுபட்டிருப்பதே ஆன்மாவின் விடுதலைக்குத் தேவையான விஷயம். முக்தியடைவதற்கு அது ஒன்றே வழி. ஒரு மனிதன் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தவம் செய்யலாம்; ஆயினும் இந்தத் துன்ப உலகிற்கு திரும்பிவரும் எண்ணம் நிலைத்திருக்கும்! அதை நீ ஆளுமை பெற்றுள்ள வழியில் எப்போதும் நீடித்து நிலைத்திருக்கும். நிர்வாணா அல்லது முக்திநிலையின் தன்மைக்கு ஒரு கணநேரம் செல்; அதுவே முக்தியடைதலை உறுதிப்படுத்துவதற்குப் போதுமானது. உன் கருத்தையும் பயிற்சியளிக்கும் முறையையும் நான் விரும்புகிறேன்; மூடர்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லை. சாதாரணத்தன்மையும், இயற்கையின் எளிமையும் தானாகவே வந்தால், சாதகன் அதில் ஆளுமை (நிபுணத்துவம்) பெற்றால் நிச்சயமாக முக்தி கிடைக்கும். இந்தக் கருத்து மிக எளிமையானது. வணக்கத்திற்குரிய உன் மாஸ்டரைத் தவிர வேறு யாரும் அதன் கருத்தைப் பற்றிக்கொண்டு அதை ‘சாதாரணத் தன்மை மற்றும் எளிமை’ என்ற சொற்றொடரில் எளிமையான விதத்தில் தெரிவிக்க முடியாது. இந்த விஷயம் வரும்போது சாந்தமான நிலை நிலவுகிறது. அதை எய்தி இருக்கும் மனிதனை மிகவும் கொடுமைப்படுத்தினால் கூட அவனுக்கு தொந்தரவு ஏற்படுத்த இயலாது.’’

‘‘நான் தெரிவிக்கின்ற கருத்துக்கள் அனைத்தின் நோக்கமும் உன்னிடம் பயிற்சிக்கு வருகின்ற மனிதர்கள் அதைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்பதுதான். இந்த முறை முக்தியடையத் தவறிவிட்டால், வருங்காலத்தில் என்ன வாய்ப்பு கிடைக்கும் என்று யார் வாக்குறுதி அளிக்க முடியும்? அடுத்த நாள் என்ன நடக்கப்போகிறது என்பதே யாருக்கும் தெரியாது. இந்த முறை ஆன்மாக்களின் விடுதலைக்காக இயற்கையே பிறவியெடுத்து வந்திருக்கிறது. எனவே நீங்கள் அனைவரும் அதாவது கடவுளின் செயலிலும் அவரது நிர்வாகத்திலும் முழு நம்பிக்கை உடையவர்கள் யாவரும் இரண்டு மடங்கு நன்மையைப் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள்.’’

### சுவாமி விவேகானந்தா தொடர்ந்து கூறியது (மாலை 4.40 மணி):

‘‘முக்தி சம்பந்தமான விஷயம் ஒரு விசித்திரமான நன்மை உடையது. முக்தி என்பதன் பொருள் உலகியல் ஆசைகள் அனைத்தில் இருந்தும் உடல் சார்ந்த ஜீவிதத்தில் கூட விடுதலை அடைந்திருப்பதாகும். ஒரு

பௌதீக சரீரத்தை (மானிட உடலை) பெற்றிருந்தால் கூட இந்த தகுதிச்சிறப்பை அடைந்துள்ள ஒருவன்..... .....''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''அந்த வாக்கியத்தை நான் பூர்த்தி செய்கிறேன். உனக்கு தன் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தபோது சுவாமி ஒரு அவசர வேலையைக் கவனிக்க வேண்டியிருந்தது. சுவாமி குறிப்பிட்டது போல அந்த நிலையை அடைந்திருந்த மனிதர், பௌதீக உடலில் இருக்கும்போதே முக்தியடைவார். இது மிக முக்கியமானது. நான் பலமுறை பல சாதகர்களுக்கு முக்தி அளித்திருக்கிறேன் என்பதில் சந்தேகமில்லை; ஆனால் இது அடிக்கடி மற்றும் எல்லா இடங்களிலும் செய்யப்படுவதில்லை.''

## 22-4-1946 (காலை மணி 7.40)

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''ஃபடேகரில் நடைபெற்ற ஆண்டுவிழாவை நான் கவனித்துக் கொண்டே இருந்தேன். ஒரு கண்காட்சியில் ஒரு சந்தையில் நிகழ்வது போல மக்கள் கூட்டத்தைத் தவிர வேறு எதுவும் அங்கே இல்லை. தெய்வீக அருளின் சக்தி சிறிதளவும் இல்லை. தெய்வீக அருளை வரவழைக்கும் தகுதியும், திறனும், ஆன்மீக நன்மையை விநியோகிக்கும் திறமையும் அங்கே யாரிடமும் தக்கவைத்துக் கொள்ளப்படவில்லை. உன்னுடைய இடத்தில் (நீ இருக்கும் இடத்தில்) தெய்வீக அருளின் ஊற்று தொடர்ந்து பெருகிப் பாய்ந்து கொண்டிருக்கிறது.''

**வணக்கத்திற்குரிய ராதை அம்மையார்:**

''இந்த விழா நடைபெறுவதையே ஏன் நீ நிறுத்திவிடக் கூடாது?''

**இந்த விஷயம் பற்றி நான் பணிவோடு தெரிவித்த பின் வணக்கத்திற்குரிய ராதை அம்மையார் தொடர்ந்து சொன்னது:**

''ஏதாவது முக்கியமான வேலையை நீ என்னிடம் ஒப்படைக்கலாம். (சிறிது இடைவெளி) உண்மையான மதிப்பிடும் திறனை மக்கள் இழந்துவிடும்படியாக காலம் ஒரு செயலற்ற நிலைக்கு வந்திருக்கிறது. உனது எளிமையைப் பாராட்டி எத்தனையோ மகான்கள் கூறியது உண்டு. இந்த மாதிரி எளிமையை அடைவது மிகவும் சிரமம். இந்த எளிமைத் தன்மையை அடைவதற்குப் பயிற்சியளிக்க அல்லது கற்பிக்கக் கூடியவர் ஒரே ஒருவரைத் தவிர வேறு யாரும் இல்லை. அதைப் பற்றி சிந்திக்கவும் புரிந்து

கொள்ளவும் திறமை உடையவரும் எவரும் இல்லை. எளிமை என்ற இந்த விஷயம் மிக அரிதாக இருப்பதால் அதனுடைய மதிப்பு சரியானபடி அறியப்படவில்லை. இதற்காகவே குடும்ப வாழ்க்கையை கைவிட்டு காடுகளில் சென்று வசிப்பது விரும்பப்பட்டது. இந்தத் தூய்மையான நிலை உண்மையில் பரமாத்மாவுக்கே சொந்தமானது (பரம்பொருளின் ஜீவத்தன்மை உரியது) அல்லது இதை பரம்பொருளை அடைதலின் ஆரம்பநிலை என்று சொல்லலாம். இந்த எளிமையை சிந்திக்கவும் புரிந்து கொள்ளவும் திறமை உடையவர்களைக் காண்பது மிகவும் அரிது. அப்படி இருப்பவர்கள் மிகவும் சிலர்தான். ஆரம்பத்திலிருந்தே நீ செயல்படும் விதம் தூய்மையான நிலையைக் கருத்தில் கொண்டதாகவே இருந்திருக்கிறது. தென்னிந்தியப் பயணத்தின் போது இந்தத் தூய்மையான தன்மையை அங்கே நிரப்பினாய். நீ எங்கெல்லாம் போகும்படி சொல்லப்பட்டதோ அங்கெல்லாம் இந்தச் சூழ்நிலையை நீ உருவாக்கினாய். இதற்குத்தான் தேவையும் இருக்கிறது. நீ ஒரு உயரிய மகாபுருஷர் என்பதை அடையாளம் காட்டுவதாக இது இருக்கிறது."

**சுவாமி விவேகானந்தா:**

''என் பிரியமானவரே, பகவவன் ஸ்ரீ கிருஷ்ணரின் காலத்திலிருந்து அதன் பிறகு நமது பிரபு மற்றும் என் கட்டளைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் படி நீ காற்றை (ஆன்மீக சூழ்நிலையை) நிரப்புவது இதுதான் முதல்தடவை. இது எல்லா இடங்களிலும் தேவைப்படுகிறது மற்றும் இதுவரை இல்லாததாகவும் இருக்கிறது.''

30-4-1946

**சுவாமி விவேகானந்தா:**

''நேற்று இரவு உன் சத்சங்கத்தை நான் கவனித்தேன். அது வெறும் வெட்டவெளியாக இருந்ததால், யாரும் அதை விரும்ப முடியவில்லை. இம்மாதிரியான உயர்தரமான பயிற்சியை அளிப்பதற்கு மனிதர்களைக் கண்டறிய நீ சில குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்வதே மிக நல்லவழியாக இருக்கும். உன்னை மேலும் மேலும் உயரே உந்தித் தள்ளுவதில் ஒரு நிமிடம் கூட வீணாக்காமல், உன் குரு உன்னுடன் எப்போதும் மிகவும் முனைந்து இருக்கிறார். அன்பின் அடையாளமாக உனக்கு அவர் கொடுக்கக்கூடிய விஷயம் அதுவே.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (M1 - இடம் சொன்னது):**

‘‘அனைத்தையும் கொடுத்த பிறகும் ஒருவரை இன்னும் முன்னோக்கிக் கொண்டு செல்வது எப்படி என்கிற இதுவும் கூட என் கண்டுபிடிப்புத் தான்!’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘நீ மேலும் மேலும் உயரே முன்னேறிச் செல்வதைக் காண்பதற்கு அவர் எப்போதுமே விரும்பி அதனால் அமைதியற்றுத் தவிக்கிறார். உன் குருவைப் போன்ற இம்மாதிரி ஒரு மகாபுருஷர் ஒருபோதும் பிறந்ததில்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். உனக்காக நான் ஏற்கெனவே நிறையச் சொல்லிவிட்டேன். அப்படி ஒரு உயர்ந்த தரமுடைய மனிதரை பயிற்சிக்காகக் கண்டறிந்து கொள். நமது பிரபு இதில் வழிகாட்டும் சக்தியாக இருக்கிறார்.’’

4-5-1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (M1 - இடம் கூறியது):**

‘‘எனது பிரியமான ராம் சந்த்தர் சம்பந்தமாக இதுவரையில் அவரது பெருமைகளையும் அவர் கையாண்ட செயல்நுட்பங்களையும் பற்றி அநேகமாக நான் அனைத்தையும் சொல்லியிருக்கிறேன். அவருடைய தனிப்பட்ட சொந்தத் திறமை, அவரால் கண்டுபிடிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட வழிமுறைகள், மேலும் அவரால் பின்பற்றப்பட்ட பயிற்சிகள் ஆகிய அனைத்தும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இன்னும் ஒரு உறுதியான விஷயம் சொல்லப்பட வேண்டியிருக்கிறது. அவர் என்னிடம் முழுமையாகச் சார்ந்து இருந்தார்; வாழ்க்கையின் எதிர்பாராத பாதகமான சூழ்நிலைகள் மற்றும் தனிமனிதப் பண்பில் விரும்பத்தகாத குணங்கள் ஆகிய புதர்கள் மற்றும் முட்செடிகளோடு முழுமையாக என்னுடன் ஐக்கியம் அடைய முயற்சி செய்தார், அவற்றில் தீப்பற்ற வைத்தால் எப்படி எரிந்து சாம்பலாகுமோ அதுபோல தெய்வீக அருள் மற்றும் ஆன்மீக நாட்டம் என்ற பெரும் சக்தியினால் முன்னேற்றத்துக்கு இடையூறு செய்யும் தடைகளும் பிரச்னைகளும் நீங்கிப்போய்விட்டன. எந்த நிலையில் இவையனைத்தும் சத்தியத்தில் கலந்து ஒன்றாகிவிடுமோ அதற்கு இவையனைத்தையும் கொண்டு செல்ல அவர் முயற்சி செய்தார். இது அவருக்கு கடவுளின் பரிசாக இருந்தது. இந்த விஷயமாக அவருக்கு எந்த அறிவுரைகளும் தரப்படவில்லை. மக்கள் விரும்பினால் இதை தாங்களும் பின்பற்றலாம்.

இந்த விஷயம் ரகசியமாக இருந்தது. இதற்கு முன்பு இது தெரிவிக்கப்படவில்லை. நானே அந்த ரகசியத்தைக் காப்பாற்ற வேண்டியவனாக இருந்தேன். இப்போது அதை நான் வெளியே சொல்கிறேன். அவர் பிறந்தபோதே சுய முக்கியத்துவம், அதாவது அகங்காரத்தை வலியுறுத்துவது என்ற திரை ஏற்கெனவே கிழிந்த நிலையில் இருந்தது, அதையடுத்து மேலும் அவருக்கு உதவிகிடைக்கும் என்பதை அது நிரூபித்தது.''

## 19-5-1946 (காலை மணி 8.00)

### சுவாமி விவேகானந்தா:

''ஒருவரை மட்டும் இனிவரும் வேலைக்காக உருவாக்கி விட்டு அனைவரும் (மூத்த மகான்கள் யாவரும்) தங்கள் தனிப்பட்ட ஜீவிதத்தை (சுய அடையாளத்தை) இழந்துகொண்டிருக்கிறார்கள். இந்த விநாடியில் பகவான் புத்தர் தனது தனி அடையாளத்தைக் கைவிட்டு உன்னுடன் ஐக்கியம் அடைந்திருக்கிறார்.''

## 20-5-1946

### வணக்கத்திற்குரிய பகவான் புத்தர்:

''எனது ஆன்மீக உள்நிலை பற்றி எனக்கு மட்டுமே தெரியும். இங்கே விசேஷமாகக் குறிப்பிட வேண்டிய விஷயம் என்னவெனில் வணக்கத்திற்குரிய உன் மாஸ்டர் நான் மிகச் சிறந்தது என்று கருதிய, எனது ஆன்மீக உள்நிலையின் முடிவான பயன்களாக இருந்ததாகிய அந்தப் பகுதியை தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டார். இந்த உறவு முறைகள் (தொடர்புகள்) அனைத்தையும் வணக்கத்திற்குரிய உன் மாஸ்டரின் மூலமாக நீ அடைந்திருக்கிறாய். இப்போது இவை வளர்ச்சியடைந்துள்ளன. (சிறிது இடைவெளி) நேற்று உன் குருவுடன் உனது உறவுமுறையின் நிலை பற்றி குறைப்பட்டுக் கொண்டாய். அதாவது பகவான் புத்தர் திடீரென்று காட்டுக்குச் செல்வதற்காக மனைவி, குழந்தை மற்றும் ராஜ்ஜியத்தின் பொறுப்புக்களை கைவிடும் அளவுக்கு என்னவிதமான உள்ளமும், தூண்டுதலும் அவருக்கு இருந்தது என்று எண்ணினாய். இது என் பலவீனம் அல்ல, ஆனால் உன் பயிற்சிமுறையின் கோட்பாடுகளிலும் இருக்கிறது. நடுநிலையான வழியைப் பின்பற்றுவதும், தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதில் இயற்கையான முக்கியத்துவம் கொடுப்பதும் புத்தமதம் மற்றும் சகஜமார்க்கம் ஆகிய இரண்டிலும் அடிப்படையான ஆன்மீகப் பயிற்சியின் ஜீவனாக இருக்கின்றன. நீ புத்த

கயாவுக்குக் கட்டாயம் சென்று அங்கு புதிதாக ஒளியூட்ட வேண்டும். நான் சுற்றியலைந்த மற்றும் வசித்த காடுகளில் சில அறிவிப்புப் பலகைகள் இன்னமும் ஆன்மீக சக்தி உடையவையாக உள்ளன. நீ விரும்பினால் அவற்றைக் கண்டறியலாம். நான் சற்று முன் குறிப்பிட்ட மிக முக்கியமான வேலை கயாவில் இருக்கிறது. இலங்கையில் ஒரு இடம் இருக்கிறது. இங்கிருந்தபடியே அதைத் தூய்மை செய். நான் உன்னுடன் ஐக்கியம் அடைந்துவிட்டேன். நீ எதைப்பற்றி விசாரித்து அறிய விரும்பினாலும் அதை உன்னிடம் வந்து சொல்லிக்கொண்டிருப்பேன். சகஜமார்க்கம் என்ற இந்தச் சங்கிலித்தொடரில் என்னுடைய தொடர்பும் கிடைத்துக்கொண்டிருக்கும். இன்னும் ஒரு விஷயமும் நீ செய்யவேண்டியிருக்கிறது, அதற்கான சரியான நேரத்தில் அது உனக்குத் தெரிவிக்கப்படும்.

### சுவாமி விவேகானந்தா:

''வணக்கத்திற்குரிய பகவான் புத்தரின் பெயரால் யாருக்காவது நீ தீட்சை அளிக்க்வேண்டியிருக்கும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்தும், அதனோடு உன் குரு சேர்த்துள்ள கூடுதல் விஷயங்களும் ஆகிய கட்டளைகள் அப்படியே நீடிக்கும்.''

### 28-5-1946

### வணக்கத்திற்குரிரி மாஸ்டர்:

''B……. என்ற இடத்தில் இயற்கையின் தெய்வீக ஒழுங்கை பராமரிக்கும் பொறுப்பில் இருக்கின்ற கண்ணுக்குத் தெரியாத முனிவரின் ஆன்மீகப் பதவிநிலை பறிக்கப்பட்டுவிட்டது. ஏனென்றால், ஜாதிக் கலவரத்தின் போது இயற்கையின் உத்தரவுகளுக்கு எதிராக அவர் ஒரு ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு உதவிசெய்தார்.''

''B மற்றும் S என்ற இடங்கள் அவருடைய பொறுப்பின் கீழ் இருந்தன. இரண்டும் அவருடைய கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.''

### 29-5-1946

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''உனக்கு நல்ல சேவை செய்துள்ள M…….என்ற இடத்தின் பொறுப்பாளரின் கீழ் S …… மற்றும் B…. என்ற இடங்களைக் கொடு. அதிகரிக்கப்பட்ட வேலைப் பளுவைத் தாங்குவதாக அவர் வாக்குறுதி அளித்தால் மதராஸின் (சென்னையின்) துருவா பதவியில் இருப்பவரின்

சுற்றுவட்ட எல்லை விரிவாக்கப்படலாம். அப்படி அவர் ஒப்புக்கொண்டால் அவரது சுற்றுவட்டம் கடற்கரை ஓரமாக ஒரிஸ்ஸா வரையில் இருக்கும்.''

''பீஹாரில் துருவா பதவியில் இருப்பவரின் சுற்றுவட்டம் வங்காளம் மற்றும் அஸ்ஸாம் வரையில் விரிவுபடுத்தப்படும். தற்சமயம் பம்பாய் மற்றும் மலபாரில் (கேரளாவின் ஒருபகுதி) தகுதியான நபர் யாரும் கிடைக்கவில்லை.''

''குஜராத் மற்றும் ராஜஸ்தான் ஒரு மனிதரின் சுற்றுவட்டத்திற்குள் நீடிக்கும் பஞ்சாப், காஷ்மீர், சிந்து மாகாணம் (மாநிலம்) ஒரு பிரிவாக அமையும். K2 - இன் வேலை ஐக்கிய மாநிலங்களை உட்படுத்தியிருக்கும். இவையனைத்தும் R2 – இன் பொறுப்பில் இருக்கும். B என்ற இடத்தில் ஒரு பொறுப்பாளர் இருக்கிறாரே, அவருடைய பதவியையும் அதிகாரத்தையும் நீக்கிவிடு.''

## 24–6–1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''நைமிசாரண்யத்துக்கு ஒளியூட்டு. சில இறந்த உடல்கள் அங்கே கிடக்கின்றன. அதாவது வெறும் எலும்புக்கூடுகள்தான் மீதியிருக்கின்றன. இந்த எலும்புகள் நைமிசாரண்யத்துக்கு யாத்திரையாக வந்த மனிதர்களுடையதாகும். நான் அவற்றை உனக்கு சுட்டிக்காட்டுகிறேன். அவர்கள் நல்ல எண்ணங்களும் நல்ல நோக்கங்களும் உடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் உயர்நிலை அடையவில்லை. அவர்களுடைய ஆன்மாக்கள் தங்களைக் கொலை செய்தவர்களை இன்னமும் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இந்தக் கொலைகாரர்களை முற்றிலும் அழித்துவிட வேண்டும்; அவர்களின் குடும்பங்களில் ஒரு குழந்தையைக் கூட விட்டு வைக்கக்கூடாது என்று வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கருதுகிறார். இன்னும் ஒரு இடம் அங்கே இருக்கிறது. நான் அதை பிறகு சுட்டிக்காட்டுகிறேன். கொல்லப்பட்டவர்களின் ஆன்மா எந்த நிபந்தனையுமின்றி முழுமையாக முக்தி அடையச் செய்யப்படவேண்டும். மதத்திற்காக எதையும் செய்கிறவர்கள் என்று சொல்லப்படுகிற இவர்களினால் நன்னெறி ஒழுக்கம் தாழ்வுநிலை அடைந்துவிட்டது. பல்வேறு வர்ணனைகளுக்கு உட்பட்டிருக்கின்ற விருந்துபசாரம் செய்யும் பூஜாரிகளுடன் (தங்கள் வீட்டில் யாத்திரிகர்களை தங்கச் செய்து பூஜை முதலியவற்றை செய்ய உதவும் பூஜாரிகளுடன்) யாரும் ஒருபோதும் தங்கக்கூடாது. சிலர் நல்ல மனிதர்களாகவும் இருக்கிறார்கள் என்பதில்

சந்தேகமில்லை. ஆனால் அவர்களைக் கண்டறிவது மிகவும் சிரமமாக இருக்கிறது.''

## 27-6-1946(நைமிசாரண்யம் - காலை மணி 11-10)

### சுவாமி விவேகானந்தா:

''நீ தொடர்ந்து தியானம் செய்து கொண்டும் பிராணாஹூதி அளித்துக்கொண்டும் இருந்தாய். இந்த இடம் ஆன்மீக ஒளியை எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. இனிமேல் பிராணாஹூதி அளிக்க வேண்டிய தேவை இல்லை. இங்கிருக்கும் புனிதமான நீர்த்தேக்கம் (சக்ர தீர்த்தம் என்ற குளம்) போதுமான அளவுக்கு ஆன்மீக அருளால் நிரப்பப்பட்டுள்ளது. இங்கே இனி அதிக வேலை இல்லை. எனவே, நாளை இங்கிருந்து நீ புறப்படலாம். ஒரு வேலை பாக்கியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அது கொலை செய்யப்பட்ட யாத்திரிகர்களின் எலும்புகள் பற்றி நமது பிரபுவின் கட்டளைகளை நிறைவேற்றுவது சம்பந்தமானது. அந்த வேலை மிக முக்கியமானது. அந்தப் புனிதமான குளம் மற்றும் அதனருகே இருக்கும் வியாச முனிவரின் பீடம், ஆகிய இவை மிகவும் மதிப்புக்குரிய முக்கியமான இடங்களாகும்.''

## அதே தேதி (27-6-1946) (இரவு 7 மணி)

### சுவாமி விவேகானந்தா:

''முக்தியளிக்கப்படவேண்டிய ஆன்மாக்களின் கடந்தகாலப் பதிவுகளை (சம்ஸ்காரங்களை) எரித்துவிடவேண்டுமா? அல்லது வேறு யாருக்காவது மாற்றிவிட வேண்டுமா? என்று என்னிடம் ஆலோசனை கேட்டாய். சம்ஸ்காரங்களை எரித்துவிடுவது இயற்கையின் விதிக்கு எதிரானது என்பதே இதற்கு பதில். ஆயினும் நீ பெரும்பகுதி வேலையை ஏற்கெனவே செய்து முடித்துவிட்டாய். அதாவது அந்தப் பதிவுகளை பெருமளவுக்கு நீ ஏற்கெனவே எரித்துவிட்டாய். அது எப்படியானாலும், மாற்றிவிட வேண்டும். பாக்கியிருக்கும் வேலையை ஷாஜஹான்பூரில் உன் வீட்டில் இருந்தபடி செய்.

## 29-6-1946

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''நைமிசாரயத்தில் உன் வேலை மிக நல்லவிதமாக இருந்திருக்கிறது. வக்கீல் சாஹேப் (P4) உன்னை லக்கிம்பூருக்கு அழைத்துச் செல்வதற்கு மிகவும் ஆசைப்பட்டார். ஆனால் உன்னை அங்கே வருமாறு கேட்க அவரால்

முடியவில்லை. இதன் காரணமாகவே உன்னை அங்கு நான் அனுப்பினேன். இப்போது இங்கே நிறைய வேலை இருக்கிறது; எனவே லக்கிம்பூரில் மேலும் தங்குவதற்கு உனக்கு ஓய்வுநேரம் இல்லை. சூகாடை விடுமுறைக்குப் பிறகு நீதிமன்றங்கள் மீண்டும் திறக்கப்போகின்றன. அதனால் இதில் ஒன்றும் செய்யஇயலாது. (சிறிது இடைவெளி) கயாவில் இருக்கும் நிலைமையை சொல்லாமலிருப்பதே நல்லது. அங்கே போவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள். நீ அங்கே போகத்தான் வேண்டியிருக்கிறது. அதே பயணத்தில் அதேவிதமாக பூரி (ஜெகன்னாத்) என்ற யாத்திரைத் தலத்தையும் நீ கவனிக்கவேண்டும். முதலில் கயா, அதன்பிறகு பூரி மற்றும் நாடியா (இந்த இடமும் ஒரு யாத்திரைத் தலம். சைதன்ய மகாபிரபு இங்கே பிறந்து, இங்கே தன் பணியைச் செய்தார். தன் ஆயுட்காலத்தின் முடிவில் இங்கேதான் கடலில் இறங்கி மறைந்தார்.) ஒரிஸ்ஸாவுக்கு நீ சைதன்ய மகா பிரபுவினால் அனுப்பப்படுகிறாய்.''

**சுவாமி விவேகானந்தா:**

''நைமிசாரண்யத்தில் உன்னுடைய வேலையில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருக்கிறேன். ஆயினும் அந்த வேலை இன்னும் முடிவு பெறவில்லை. ஏனென்றால் நம் பிரபுவின் கட்டளைகள் இன்னும் முழுவதும் நிறைவேற்றப்படவில்லை. அழிவு வேலையைப் பொறுத்த வரை அது இன்னும் முழுமையாக நடக்கவில்லை. அதற்கு என்ன தேவையோ செய். கயாவில் அழிவு வேலையை செய்து முடித்தவுடன் அதற்குப் பரிசாக என் பதவியை நான் உனக்காகக் காலி செய்வேன் என்று உனக்குச் சொல்கிறேன்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''கயாவில் அழிவுவேலையைத் துவங்கு.''

**சுவாமி விவேகானந்தா (அழிவுவேலை சம்பந்தமாகக் கூறியது):**

''அழிவுவேலைக்கு முதல்படியாக சங்கல்பத்தின் ஆற்றலினால் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. S9 - க்கு அனுப்பிய கடிதத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் குறிப்புக்களின்படி சங்கல்பத்தை செயல்படுத்துவதற்கு சூழ்நிலைகள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் நினைவு வைத்துக்கொள். அழிவு நடந்தாக வேண்டியிருக்கிறது. தெய்வீகப் பணிக்காக விசேஷமாக அளிக்கப்பட்டுள்ள உனது சங்கல்ப சக்தியை உன்னால் அளவிட முடியாது. அந்த சங்கல்பத்தை ஒரு புள்ளியில் திரட்டினால் அது ஆயிரம் உலகங்களை அழிக்கமுடியும்.''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''நைமிசாரண்யத்தில் உன் வேலையைப்பற்றி நான் மிகவும் சந்தோஷமடைகிறேன். இப்போது கயாவின் வேலை உனக்கு முன்னால் இருக்கிறது. அது மிக மிக அவசியமானது! கயாவின் வேலைக்கு ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்.''

*குறிப்பு:*

*லக்கிம்பூரில் நான் I2 - ன் வீட்டில் தங்கியிருந்தேன். இரவு 8 மணிக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டருக்கும் மற்றும் பழங்காலப் பெரியோர்களுக்கும் அவர்களின் ஆசிகளை வேண்டி இனிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன (பிரசாதம் சமர்ப்பிக்கப்பட்டது). வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பிராணாஹூதி அளித்தார். அதன்பிறகு ராதை அம்மையார் எனக்கு பிராணாஹூதி அளித்தார். பிறகு I2 - ஐயும் கூட அந்த சிட்டிங்கில் சேர்ந்து கொள்ள வேண்டுமென்று சொன்னார். நாங்கள் இருவருமே எங்களுக்குள் பனிப்பாறைகளின் வழியே கடந்து வரும் காற்று எங்கள் மீது சில்லென்று வீசுவது போல மிகவும் குளிர்ச்சியை உணர்ந்தோம். வணக்கத்திற்குரிய ராதை அம்மையாரிடமிருந்து பிராணாஹூதி பெறும் முதல் சந்தர்ப்பம் இதுவேயாகும்.*

## 11-7-1946 (இரவு மணி 8.30)

**சுவாமி விவேகானந்தா:**

''பழமையான இந்தியாவின் மறந்துபோன நாட்கள் இப்போது நினைவுகூறப்படுகின்றன. ஆன்மீகத்துறையில் மூத்தவர்களாகிய நாங்கள், நீங்கள் அனைவரும் அதாவது மனிதகுலம் முழுவதும் ஆன்மீக உச்சநிலையில் இருக்கவேண்டுமென விரும்புகிறோம். ஏன் விரும்புகிறோம்? ஏனென்றால் காலத்தின் தேவை அது! மக்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் இந்த சங்கத்தை (ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷனை) வளர்ச்சியடையச் செய்தல் ஆகிய இந்த வேலைக்காக மட்டுமல்ல; இந்த உலக வாழ்க்கைக்குப் பிறகும் ராம் சந்த்தருக்கு அவர் முன்னிருக்கும் மாபெரும் பணியில் உதவி செய்வதற்காகவும் தான். அது மிக முக்கியமானது. ஆன்மீகம் சக்தியிலிருந்து (சக்திகளை அடைவதிலிருந்து) வேறுபட்ட ஒருவிஷயம். இதற்கு உதாரணம் ஆன்மீகத்தில் உனது குருவாகிய வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்கள்தான். அதை எப்படி அடைவது? அடிக்கடி நாங்கள் சொன்ன அதே விஷயம்தான். சக்திகளை அடைவது மிகவும் சுலபம். ஆனால் உண்மையாகவே தேவைப்படுகிற

விஷயத்தை அடைவது மிகவும் சிரமமானது. குழந்தைகள் பொம்மைகளை வைத்து விளையாடுகிறார்கள். அவர்கள் வளர்ந்த பிறகு பொம்மைகளோடு விளையாடியதால் பெற்ற மகிழ்ச்சி காணாமலே போய்விடுகிறது. வளர்ந்து வயதான பிறகும் தங்கள் தொட்டிலைப் பற்றியே அவர்கள் நினைத்தால், இன்னும் அவர்கள் குழந்தைப் பருவத்திலேயே இருப்பதாக மற்றவர்கள் கேலி பேசுவார்கள். அவர்கள் இப்படியே தொடர்ந்து நடந்து கொண்டால், அவர்கள் குழந்தைத்தனமான பழக்கங்களிலும், தங்கள் பொம்மைகளிலுமே இன்னும் நீடிப்பதாக நிலைமை ஆகிவிடும்!''

''அதேபோல ஒரு மனிதர் உண்மையான ஞானத்தை அடைந்திருக்கிறார். ஆனால் தன் பழைய பழக்கங்களுக்கே திரும்பச் செல்கிறார் என்றால், ஒரு மனிதரிடத்தில் ஆன்மீக வாழ்க்கையின் வளர்ச்சிக்கு விஷமாக இருக்கின்ற அடிமைத்தனமான பழக்கங்களை ஒதுக்கி விடுவதற்குத் தேவையான ஞானத்தை உண்மையில் அடையவில்லை என்றே சொல்லலாம். ஒருமனிதர் முன்னேறுகிறார் என்றால் அவர் சரியான பாதையில் செல்கிறார் என்று பொருள். இவையெல்லாம் துறவு மற்றும் தியாகத்தின் நிலைகளாகும். தன் மாஸ்டரின் மீது உறுதியான நம்பிக்கையோடு, இந்தப் பாதையில் அவர் தளராமல் செல்லவேண்டும். பிள்ளைகளே, இவை யாவும் உங்களுக்கான பாடங்கள். இன்றைய வேலை முடிந்தது!''

## 4-8-1946

### சுவாமி விவேகானந்தா:

''இதுவரையில் நடைமுறையில் இருந்த ஆன்மீகப் பயிற்சி முறை நமது பிரபுவின் குறிப்புக்களில் எங்கேயோ இடம் பெற்றுள்ளதுபோல மறைந்து போய்விட்டது. பழைமையான இந்திய சம்பிரதாயப்படி அதன் தொடர்ச்சியாக ஒரு புதியமதம் மற்றும் கலாசாரத்தில் ஆரம்பத்தை நீ உண்டாக்கியிருக்கிறாய். அதே முறையில்தான் நீ வளர்க்கப்பட்டிருக்கிறாய். இப்போது சொல்லப்பட்ட விஷயத்துக்கு உன்னுடைய பதவி இந்தப் புதிய முறை நடைமுறைக்கு வருவதற்கு மிகவும் முன்பாகவே எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டது (தீர்மானிக்கப்பட்டுவிட்டது). இதற்கு முன்பு நடைமுறையிலிருந்த பயிற்சிமுறை, தனது பழைமையான வேர்களுடன் (மூல அம்சங்களுடன்) தொடர்புடையதாக இப்போது நிலைநிறுத்தப்பட்ட உண்மையான முறையிலிருந்து வேறுபட்டதாக இருந்தது. எனக்குப் பிரியமானவனே, இப்போது இருக்கும் இந்தப் பயிற்சிமுறை அவர்களுக்கு ஒரு கனவாக, அவர்களால் சுலபமாகப் புரிந்துகொள்ள, பற்றிக்கொள்ள இயலாததாக இருந்தது. சிறிதுகாலத்திற்கு முன்பு இருந்த பயிற்சி

முறைகளைப் பின்பற்றியவர்களில் ஆன்மீக உயர்நிலையின் எல்லைகளை அடைந்தவர்கள் மிகவும் சிலர்தான். இதுவரை அவர்களால் மிகவும் போற்றிப் புகழப்பட்டது மாயைதானேயன்றி (சத்தியநிலையின் பொய்த் தோற்றமான நிகழ்வு) வேறில்லை. நேரடியாக பரமாத்மாவை (பரம்பொருளின் ஜீவத்தன்மையை) அடைந்திருப்பதாக நாம் மட்டுமே பெருமையாகச் சொல்லமுடியும். இந்த விஷயம் நமது பழைமையான வேர்களிலிருந்து (மூல அம்சங்களிலிருந்து) இரவலாகப் பெறப்பட்டதாக இருந்தாலும், அவர்களால் அப்போது இதற்கு முழு வடிவம் கொடுக்க முடியவில்லை.''

### கேள்வி:

''இது அவர்கள் தங்கள் வழிபாட்டில் வணக்கத்திற்குரிய இறைதூதர் முகம்மதுவை சேர்த்துக்கொண்டதன் காரணமாகவா? அல்லது வேறு ஏதாவது காரணம் உண்டா?''

### சுவாமி விவேகானந்தா:

''அவர்கள் வாழ்க்கை நடத்திய விதம்தான் இதன் காரணம்.

### வணக்கத்திற்குரிய இறைதூதர் முகம்மது நபி:

''இதன் காரணம் மிகத்தெளிவானது, வெளிப்படையானது. நான் உண்மையைச் சொல்லட்டுமா? எதற்கு முடிவே இல்லையோ அந்த விஷயத்தை என் ஆயுளின் இறுதிவரை நான் சம்பாதித்துக் கொண்டிருந்தேன். என் முயற்சியோடு இணைந்த இந்த விஷயம் தங்கள் பங்கிலும் கிடைக்கும்படி என் வழியை பின்பற்றுகிறவர்கள் இருக்கவில்லை. கொடிய மிருகங்களைப் போன்றவர்கள் அதை வைத்துக் கொண்டு என்ன செய்வார்கள்? ஒரு அழிக்க இயலாத நித்தியமான ஜீவனின் மீது அவர்கள் நம்பிக்கை கொள்வதற்கு அது ஒரு சாதாரண சாதனை அல்ல. (அதாவது எனதுநிலை அவர்களுடைய தாழ்ந்த தரத்துக்கு எட்டாததாக இருந்தது). எனக்குத் தெரிந்திருந்த அந்த மிக மேலான விஷயம் பற்றி அவர்களுக்கு எடுத்துரைக்கக்கூடிய மற்றும் அவர்களுடைய நாகரிகமில்லாத முரட்டுத்தனமான வாழ்க்கையைக் கைவிடும்படி அவர்களைத் தூண்டக்கூடியவர்கள் யாரும் எனக்குப் பின்னால் வரவில்லை. (அதாவது என்னை அடுத்து யாரும் வரவில்லை). இன்னும் சொல்லப்போனால், சகோதரரே, உண்மையானதுதான் உண்மையானதைத் தேடிப்போகும். (சிறிது இடைவெளி) இங்கே இருக்கும் புனிதமான மண், உங்கள் வார்த்தைகளிலேயே சொன்னால் எளிமையின்மணம் அதில்

திணிக்கப்பட்டதாக இருக்கின்றது. ஆன்மீகப் பெரியோர்கள் அனைவரும் உலகின் இப்பகுதியை நோக்கி திசை திரும்பியிருக்கிறார்கள். நானும் கூட இந்தப்பகுதிக்கு உரியவனாக இருந்தேன். சிறிதுகாலமாக அந்த இன்னொரு பகுதிக்கு ஒளி சென்றடையாமல் இருந்தது. இதனால் இந்தச் செய்தியை நான் அங்கு எடுத்துச்சென்று பிரசாரம் செய்ய வேண்டியிருந்தது. ஆனால் அந்தோ, இங்கேயும் கூட அந்நியர்களின் செல்வாக்கு பெருமளவு பரவியிருந்தது. அப்படியிருந்தும் அதைவிட அதிகமாக இங்கே உண்மையான ஆன்மீகம் நிலைபெற்று இருந்தது. உள்ளார்ந்த சுயம் பற்றிய விஞ்ஞானத்துக்கும் (கற்று அறிவதற்குப் பதிலாக கடவுளிடமிருந்தே வருகிற உள்ளுணர்வுடைய மெய்ஞ்ஞானத்துக்கும்) – அதை நீங்கள் ஸம்ஸ்கிருத மொழியில் ப்ரம்மவித்யா அல்லது அராபிய மொழியில் இல்மே லடுன்னி (Ilme Ladunni) என்று இப்படி எந்தப் பெயரில் குறிப்பிட்டாலும், அதற்கும் மதத்துக்கும் சம்பந்தமில்லை. (மதம் என்பது ஒரு பிரிவை அல்லது சமூகத்தைச் சார்ந்த நம்பிக்கைகள் மற்றும் வாழ்க்கை முறை பற்றிய விதிமுறைகளின் தொகுப்பாகும்.) மதம் பாதையைச் சுட்டிக்காட்டி அதில் ஒளியைக் கொடுக்கிறது மேலும் மனிதன் நாகரிகமற்ற முரட்டுத்தனமான வழிகளைக் கைவிடுவதற்குத் தூண்டுகிறது.''

10-8-1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இன்று காலை 8.35 மணிக்கு C.......என்ற இடத்தில் உள்ள ஒரு முனிவர் இயற்கையின் பணியைச் செய்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பதை உள்முழுமாக உணர்ந்தாய். அந்த உள்நிலை அவருக்கு ஆரம்பமான அதே நேரத்தில் அதுபற்றிய உள்அனுபவம் உனக்குக் கிடைத்தது.''

19-8-1946

**திங்கட்கிழமை – பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அவதார தினமாகிய ஜன்மாஷ்டமி. முதல் நாள் இரவு 8.30 மணி:**

**மீராபாய் (கி.பி. 16ஆம் நூற்றாண்டில் ராஜஸ்தானில் வாழ்ந்த புகழ் பெற்ற கிருஷ்ண பக்தையாகிய ராஜகுலப் பெண்மணி) கூறியது:**

''இந்த வீடு (ஸ்ரீ பாபுஜியின் இல்லமாகிய ராய்பகதூர் கட்டிடம்) எனக்கு மிகவும் அழகாகத் தோன்றுகிறது. என் பிரபு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

இருந்த இந்த அறை என் இதயத்தை மிகவும் கவர்ந்துவிட்டது. ஆயினும் இந்த அறையில் இருக்கக்கூடாத சில துகள்கள் இங்கு உள்ளன. மேலான மதிப்புடைய ஆன்மீக சம்மந்தமான எண்ணங்கள் மற்றும் அதன் முக்கியமான விஷயங்கள் மட்டுமே இந்த அறையில் நிலைத்து இருப்பதற்கு வேண்டிய முன்னெச்சரிக்கைகளை வருங்காலத்தில் பின்பற்ற வேண்டும். இந்த அறையை மூடியே வைத்திருக்க வேண்டும். ஆன்மீகப் பயிற்சி மற்றும் அது சம்பந்தமான உரையாடல்கள் நடைபெறும் போதுதான் இதன் உள்ளே போகவேண்டும் மற்றபடி இங்கு வந்து யாராவது அமைதியாக உட்கார்ந்திருக்க விரும்பினால் அதனால் தவறு இல்லை.''

1-9-1946

**சுவாமி விவேகானந்தா:**

''எல்லோரும் மாயையின் கைகளில் புரண்டு கொண்டிருக்கிறார்கள். அது உண்மையல்லாதது. அனைவரும் இருளினால் மூடப்பட்டிருக்கிறார்கள். அதே இருளின் கோளத்திற்குள்ளேயே இருளுக்குத் தீர்வையும் தேடுகிறார்கள். அப்போது தானே தூய்மையாக இல்லாத, அதே நிழலான விஷயத்திலிருந்து ஒருவர் பெறுவது என்ன? அப்படியானால் தூய்மை என்பது என்ன? எங்கே தூய்மை தங்கி நின்று மேலோங்கி ஆட்சி செய்கிறதோ அதுவே கடவுளின் மண்டலமாகும். மனச்சாட்சியின் அல்லது உள்ளார்ந்த உணர்வுநிலையின் சரியான பயன்பாட்டுக்காக சரியான விஷயங்களை அதிலிருந்து கடைந்து எடுப்பதற்கு மக்கள் அந்த மண்டலத்தில் சுற்றி வருவதில்லை. மனச்சாட்சியின் (உணர்வு நிலையின்) கட்டளைகள் முதல்படியிலேயே எப்போதும் கடவுள் சார்ந்த விஷயங்களுக்கு வழிவகுக்கின்றன என்பது தவறான கருத்தாகும். மனச்சாட்சியின் நேர்மையைப்பற்றி யாரும் சந்தேகப்படமுடியாது; ஆனால் அது அதற்கு சரியாகப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கும்போதுமட்டுமேயாகும். மனச்சாட்சிக்குப் பயிற்சியளிப்பது விளையாட்டான விஷயமல்ல. அது சுலபமானதாக இருந்திருந்தால் அனைவரும் அதைச் செய்திருப்பார்கள். என் வாழ்க்கை பற்றி ஓரளவாவது உனக்குத் தெரியும். நான் நன்றாகக் கல்வி கற்று, அறிவு சார்ந்த தேடல்களில் சிறப்பாக ஈடுபட்டிருந்தேன். எனக்கென மனச்சாட்சி (உணர்வுநிலை) இருந்தது. ஆனால் என் குருநாதரை சந்தித்து அவருக்கு என்னை அர்ப்பணிக்கும்வரை பரம்பொருளின் கணநேரக் காட்சியைக் கூட நான் பெற முடியவில்லை. அறிவில் என்னுடன் யாராவது தன்னை ஒப்பிட்டுக்கொள்ள முடிந்தால், அவர் சொந்தக் கால்களில் நின்று அதன் பலனைப் பார்த்து, கடைசியில்

பரம்பொருள் பற்றிய ஞானத்தைக் கற்றுக்கொள்ளவும். அதில் பயிற்சி பெறவும் குருவிடம்தான் போகவேண்டும் என்பதை அறியலாம். உன்னுடைய குருவுக்கு உடன்பிறந்த ஆன்மீகத்திறமையும் தகுதியும் இருந்தது. ஆயினும் தனது நிலையில் அபிவிருத்திக்காக (முன்னேற்றமடைவதற்காக) தனது வழிகாட்டியை நாடிச்சென்றார். இந்த உதாரணங்கள் மிக அரிதானவை. எந்த வழிகாட்டியின் உதவியும் தேவைப்படாமல் நேரடியாக முன்னேறும்படியாக செய்யப்பட்ட ஒருவரிடம் இது ஒருபோதும் காணப்படாதது. ஆன்மீகத்தையும் சத்தியநிலையையும் நாடுகின்றவர்கள் மற்றும் சாதகர்களாகிய நூற்றுக்கணக்கான மனிதர்கள் பின்பற்றி முன்னேறிய மற்றும் நன்மையடைந்த வழியையே நாம் ஏன் பின்பற்றக்கூடாது? எல்லாத் துயரங்கள் மற்றும் வேதனைகளுக்கான அதே தீர்வை நான் ஏன் தேடக்கூடாது? நிச்சயமான தீர்வு உண்டு என்பதை நாம் பார்க்கும் போது ஒருவர் காலில் நாம் ஏன் விழுந்து வணங்கக்கூடாது?''

## 10-9-1946

### சுவாமி விவேகானந்தா:

''ஷாஜஹான்பூர் ஸ்ரீ ராம்சந்த்ர மிஷன் என்ற ஆன்மீக சங்கத்தின் சின்னம் பற்றிய விபரங்களை இப்போது சொல்கிறேன், அவற்றிலிருந்து முக்கியமான விஷயங்களை வகைப்படுத்திக்கொள்ளலாம்:

''நினைவிற்கெட்டாத காலம் முதல் ஆயிரக்கணக்கான மனிதர்கள் ஆன்மீகத்தில் தங்கள் பணியை வெவ்வேறு விதங்களில் செய்து கொண்டு இருந்திருக்கிறார்கள். அந்த அனைவருடைய குறிக்கோளும் ஒன்றாகவே இருந்திருக்கிறது. வரலாற்றின் போக்கில் ஒரு கட்டத்தில் ஒரு இஸ்லாமிய முனிவர் இந்திய பாரம்பரிய முறையிலிருந்து ஆன்மீகத்தின் சில பகுதிகளை எடுத்துக்கொண்டு, அந்த அடிப்படையின் மீது அவர்களது கட்டமைப்பை உருவாக்கினார். அவர்கள் தங்கள் காலத்தில் அதை மிக நன்றாகச் செய்தார்கள். அதன் பயனாக ஹிந்துக்களாகிய நாம் பெரும்பாலும் அனைத்தையும் இழந்து விட்டோம். அவர்களுடைய போதனைகள் மற்றும் பயிற்சிகள் தங்கள் ரத்த சம்பந்தம் உடையவர்கள் மற்றும் தோழமை மதங்களைச் சார்ந்தவர்களுக்குள்ளேயே அடங்கியிருந்தன. அது எப்படியிருந்தாலும் அவர்கள் எல்லோருமே தங்கள் சமூக உரிமையை வலியுறுத்துகிறவர்களாக இருக்கவில்லை. தங்களுடைய உயர்ந்த நிலை பற்றிய முழு நம்பிக்கையூட்டப்பட்டவர்களாக இருந்தார்கள். அவ்வளவு தான். மிகச் சில ஹிந்துக்கள்தான் இந்தவிதமான பயிற்சியைப் பெற்றார்கள். பெரும்பாலோர் இஸ்லாமியர்களாக மாறினார்கள் அல்லது

வேறு நோக்கங்களின் கீழ் (வேறு மார்க்கங்களின் வழியில்) முழு உண்மையுடன் தங்கள் வழிமுறைகளைப் பின்பற்றினார்கள். அவர்கள் (இஸ்லாமுக்கு மாறியவர்கள்) மற்றவர்களுக்குப் பயிற்சியளிக்கும்போது, அது முற்றிலும் இஸ்லாமின் வழியிலேயே இருந்தது. நமது பிரபு வணக்கத்திற்குரிய உனது மாஸ்டர் மிகவும் சீர்திருத்தி உங்களுக்கெல்லாம் பயிற்சியளித்தார். அவருடைய ஆயுட்காலத்தில் பழைமையான இந்திய மரபின்படி பயிற்சியளிப்பதற்காக, இயற்கை அவருக்குப் பரிசாக அளித்திருந்ததை, சீர்திருத்தப்பட்ட ஒரு புதிய முறையில் தனது சகமனிதர்களுக்குக் கொடுப்பதற்கு அவர் செய்த சேவைகள் மற்றும் தியாகத்தினால்தான் இது சாத்தியமாகியது. இந்தப் பயிற்சி முறை தற்காலத்திய மனிதகுலம் முழுவதனுடைய தேவைகளுக்கும் பொருந்தும் படியாக, பழைமையான உயரிய பாரம்பரிய வழியின் தொடர்ச்சியாக மொத்தமும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்பது உனக்குத் தெரியும். சமீப கடந்த காலத்திய முனிவர்களுடன் ஆன்மீக சக்திகளின் இணைப்புக்கள் பரம்பொருளின் மேலான சங்கல்பத்தினால் உடைத்தெறியப்பட்டு விட்டன. இப்போதைய இந்தவடிவத்தில் ஷாஜஹான்பூர், ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷனின் ஆன்மீக சகாப்தத்தின் நினைவாக ஒரு சின்னம் தேவையாக இருக்கிறது.''

''உலகம் இப்போதைய வடிவத்திற்கு வருவதற்கு முன்பு எங்கும் இருள் இருந்தது. இருள் என்றால் ஒளி இல்லை என்று பொருள். அதேபோல ஒளி இல்லை என்றால் இருள் இருக்கிறது என்று பொருள். பிரம்மவித்யா எனப்படும் பரம்பொருள் பற்றிய விஞ்ஞானம் மற்றும் ஆன்மீகத்தின் லட்சியத்துக்கு அப்பால் ஒரு சாதகனின் கடைசிப்பகுதியில் மாறாமலிருக்கும் விஷயங்களின் வடிவத்தைக் குறிப்பிடுவதற்கு இதை நான் தெரிவித்தேன். இப்போது நாம் அந்த நிலையிலிருந்து இறங்கி சூரியன் மற்றும் சந்திரனின் வெவ்வேறு ஒளிகளைப் பார்க்கிறோம். இப்போது மேலேயிருந்து இறங்கி வரும்போது ஒளியின் மண்டலங்களை நாம் கடந்து வந்து லட்சியத்தை அடைவதற்கு எங்கிருந்து புறப்படவேண்டுமோ அந்த இடத்திற்கு வந்து சேருகிறோம். இந்த உலகில் திடமான பாறை போன்ற வடிவத்தில் இருக்கும் பலவிதமான தடைகள் ஆன்மீக சாதகர்களாகிய நம்மை நிறுத்தி வைக்கின்றன. இந்தப் பெரிய பாறை போன்ற திடத்தன்மையும், கடினத்தன்மையும் உடைய தடைகளை கடந்து சென்று லட்சியத்தை அடைவதற்கு வழியை இப்போது தயார் செய்திருக்கிறோம். இந்தப் புள்ளியிலிருந்து புறப்படுவதற்கு முன்பு மலைகள் என்று விவரிக்கப்பட்டுள்ள விஷயங்களின் (செயல்பாடுகளின்) திடத்தன்மையை

உடைத்து லட்சியத்தை நோக்கிய பாதையை நாம் தயார்செய்ய வேண்டியிருக்கிறது. சூரியன் மற்றும் பிற விஷயங்கள் பின்தங்கிப்போக விடப்படுகின்றன. (அவற்றைக் கடந்து மேலே செல்கிறோம்) ஆயினும் ஆன்மீக முன்னேற்றத்துக்காக ஏற்பட்டுள்ள வழியை நாம் ஏற்றுக்கொண்டு பின்பற்றி நடப்பதில் வெவ்வேறு நிறங்களின் வழியாக நாம் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது என்பது உண்மைதான். ஸ்வஸ்திகா என்பது முக்கியமாக ஹிந்துமதம் மற்றும் வேறு மதங்களிலும் கூட செய்யப்படுகிற சடங்குகளின் சின்னமாக இருக்கிறது. இந்தப் பயிற்சிமுறை மனிதகுலம் முழுவதற்கும் சொந்தமானதாக இருப்பதால் நாமும் இந்தச் சின்னத்தை ஏற்றுக் கொள்கிறோம். நாம் இப்போது இந்தப்புள்ளியில் இருந்து (ஸ்வஸ்திகாவில் இருந்து) துவங்கி கர்மயோக வழியில் பலவிதமான பயிற்சிகளுக்கு உள்ளாகிறோம். அதன்பிறகு நாம் சகஜ மார்க்கத்துக்குள் வருகிறோம். அங்கே திறமை மற்றும் தகுதிவாய்ந்த ஒரு குரு அவசியமாக இருக்கிறார். அவருடைய பாதுகாப்பும் வழிகாட்டும் குறிப்புக்களும் தேவைப்படுகின்றன. நமது பிரபுவின் வழியில் சில பயிற்சிகளுக்குப் பிறகு திடத்தன்மையை முழுமையாக விட்டுவிடுகிறோம். உதிக்கும் சூரியன் நமது பிரபுவினால் ஆரம்பிக்கப்பட்ட ஆன்மீக சகாப்தத்தைக் குறிக்கிறது. உதிக்கும் சூரியனுடைய ஒளி நமது மிஷன் சின்னத்தின் அடித்தளத்தில் விளங்க ஆரம்பிக்கிறது. அது நமது ஆரம்ப ஸ்தானத்தைக் காண்பிக்கிறது. மேலும் நாம் எங்கிருந்து பயணத்தை ஆரம்பிக்கிறோமோ அந்த அடித்தளத்தில் முழு ஆட்சியுடையதாக இருக்கிறது.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''நிர்வாக வசதிக்காக K…….. என்ற இடத்தில் சத்சங்கம் நடத்துவதற்கும், பயிற்சியளிப்பதற்கும் N3 - ஐ நியமிக்கிறேன். அவர் தனது ஆன்மீக முன்னேற்றத்துக்கும் உண்மையாக ஈடுபடவேண்டும்; மற்றவர்களுக்கும் நன்மையை கிடைக்கச் செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு பிராணாஹூதி அளிப்பதற்குத் தகுதியுடையவராக அவரை நான் உருவாக்கியிருக்கிறேன்.''

### சுவாமி விவேகானந்தா:

''அது இப்போது தீர்ந்து போக முடியாது.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''அவர் நமது சத்சங்கத்தில் புதியவர்களை அறிமுகப்படுத்தும்போது, அவர்களுடைய பயிற்சி பற்றி ஏதாவது தெரிந்து கொள்ள விரும்பினால், அவர் இங்கே விசாரித்து தேவையான உதவியைப் பெறலாம்.''

21-9-1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘இனிமேலும் ஜாதி வேறுபாட்டுக்கு இடமில்லாத ஒரு இயக்கத்தை இயற்கை இப்போது ஆரம்பித்திருக்கிறது. ஜாதி வேறுபாடு முறையை அழிப்பதற்கு கண்டிப்பு தேவையாக இருக்கும். ஜாதிமுறை அறிமுகப்படுத்துவதற்கு இயற்கையின் கட்டளை எதுவும் இருக்கவில்லை. (அதாவது இயற்கையின் கட்டளையின்படி ஜாதிமுறை அறிமுகப்படுத்தப்படவில்லை). அது சௌகரியம் கருதி உண்டாக்கப்பட்ட சமுதாய ஏற்பாடாக மட்டுமே இருந்தது. அது போகப்போக தனித்தனியாக ஜாதிகள் உருவாகி நிலைநிறுத்தப்படுவதில் போய் முடிந்தது. அதில் பிராமணர்கள் ஒரு பெரிய பகுதியை எடுத்துக்கொண்டார்கள். அச்சமயத்தில் அதற்கான தகுதியும் அவர்களுக்கு இருந்தது. பிறகு அதிலிருந்தும் தீமை முளைவிட்டு வளர ஆரம்பித்தது. வேறுபாடுகள் வேர் விட ஆரம்பித்தன. அதன்பிறகு ஜாதிகளில் உட்பிரிவுகள் உண்டாகத் துவங்கி, காலப்போக்கில் எத்தனை இனப்பிரிவுகள் உள்ளன என்று யாருக்கும் தெரியாத அளவு அதன் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. பிறகு ஒவ்வொன்றுக்கும் தனித்துவம் உருவாகி தன்னை மேலாகக் கருதுவதே முக்கிய எண்ணமாகிவிட்டது. ஜாதிகளில் உயர்ந்தது, தாழ்ந்தது என்ற எண்ணம் அதிகமாகி வளர்ந்துவிட்டது. ஜாதி வேறுபாட்டு முறையை ஆதரிப்பவர்களை மொத்தமாக அழிக்கவேண்டும் என்ற சங்கல்பம் முற்றிலும் உறுதியோடு எடுத்துக்கொள்ளப்படுவது கூடாது என்ற நிபந்தனையுடன்தான் இதுபற்றிய உன் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உனது உத்தரவு மிகவும் கண்டிப்பானதாக இருந்தது. அதை செயல்படுத்தியிருந்தால் நீயும் கூட அதன் வட்டத்திற்குள் வரவேண்டியிருக்கும். உன்னைப்போல் மிக மேன்மையான மற்றும் கருணையுடைய எண்ணத்தோடு எல்லோரும் இங்கு வரவில்லை. நடைமுறையிலுள்ள விஷயங்களைச் சரிப்படுத்தும் முயற்சியில் ரத்தம் சிந்துதல் அவசியமாகிறது. இப்படி ரத்தம் சிந்தாமல் மிகப்பெரிய சாதனைகள் ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. விரைவிலோ அல்லது தாமதமாகவோ இயற்கையின் கட்டளையை நிறைவேற்றுவது உன் கைகளில்தான் இருக்கிறது. முக்தியடைந்த ஆன்மாக்களாகிய நாங்கள் இதில் செய்வதற்கு எதுவும் இல்லை. ஜாதி வேறுபாட்டு முறை மறைந்து கொண்டிருக்கிறது என்று உறுதியான சங்கல்பம் செய்துகொள். எந்தவிதத்திலும் ஜாதிப் பிரிவினைக் கொள்கை மறையாமல், அதை ஆதரிப்பவர்கள் தடையாக இருந்தால், அவர்களை அழித்து விடுவதற்கான

பிராணாஹூதி கட்டாயம் பயன்படுத்தப்படவேண்டும்; இந்த விஷயத்தில் தயக்கம் இருக்கக்கூடாது. அது இயற்கையின் கட்டளை; இந்த நான்கு அல்லது அதற்கு மேலான ஜாதிகள் நிர்வாக ஏற்பாடு என்ற வழியில் இருந்தன. அதையே போருக்கு ஏற்பாடு என்று எடுத்துக்கொள். போர் முனையில் அறிமுகப்படுத்தப்பட்ட அந்த ஏற்பாடுகள் மற்றும் கொள்கைகள், போர் முடிந்த பிறகு (அமைதியான காலத்தில்) அமுலில் இருக்கமுடியாது. எல்லாவற்றுக்கும் முன்னதாக நீ போர்க்களத்திற்கு வா. ஜாதி முறை கொள்கைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வை. உனக்கு எது ஏற்றதாக இருக்கிறதோ அதை அறிமுகப்படுத்து. சிறிது காலமாகவே உன்னிடம் ஒப்படைக்கப்படுவதற்காக இது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. நான் உனக்கு ரகசியமாகச் சொல்கிறேன். தாக்குதலுக்கு ஆட்பட வேண்டியவர்களாகக் குறிக்கப்பட்டவர்களின் அழிவு ஏற்கெனவே ஆரம்பமாகிவிட்டது. எத்தனையோ வீடுகள் வம்ச விருத்தியாகிய ஒளி இல்லாமல் செய்யப்பட்டு விட்டன. ஆயினும் இது போதுமானதல்ல. இது மிகப்பெரிய வேலை. நீ கடுமையாக வேலை செய்யவேண்டும். அதனுடன் இணைந்து செய்யப்பட வேண்டிய ஆக்கபூர்வமான வேலை, அதனுடன் கூடவே நடைபெற வேண்டும். இரண்டுமே அவசியமானவை மற்றும் தவிர்க்க இயலாதவை.''

## 2-10-1946 (லக்கிம்பூர் - கேரியில்)

### சுவாமி விவேகானந்தா:

''தென்னிந்தியாவில் உன் வேலையை (அதன் விளைவை) நான் கவனித்துப் பார்த்தேன். அது நன்கு முன்னேறிக்கொண்டிருக்கிறது. அதற்காக பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் சில குறிப்பிட்ட சக்திகளை உனக்கு அளிப்பதற்காக நீ தியானத்தில் உட்காரவேண்டும் என்று விரும்புகிறார். இங்கே பார், இந்த சக்திகளை தெய்வீக காரியங்களுக்காக அன்றி வேறு எங்கும் பயன்படுத்தக்கூடாது. இந்த சக்திகள் இதுவரையில் வேறு யாருக்கும் ஒருபோதும் அளிக்கப்பட்டதில்லை. உன் கையில் உள்ள வேலைக்காக இயற்கை உனக்கு அளிக்கும் விசேஷப் பரிசு இது. சில குறிப்பிட்ட இடங்களில் முழுமையான அழிவு வேலையை நீ கையாள வேண்டியிருக்கும். இதுபற்றிய மிகச்சரியான உத்தரவுகள் பிறகு உனக்குக் கிடைக்கும். இவை கண்டிப்பாக ரகசியமாக வைக்கப்பட்டிருக்கும்.''

### வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:

''இயற்கையிலிருந்து வந்த உத்தரவுகளின்படி, நான் உனக்கு சக்திகளை என்னிடமிருந்து இடம் மாற்றிக் கொடுத்திருக்கிறேன்.''

### சுவாமி விவேகானந்தா:

‘‘இந்த உலகத்திற்காக மட்டுமல்ல, முக்கியமாக ஒளி உலகிற்காகவும் நீ தயார் செய்யப்படுவாய். இங்கே உனது வேலை போகிற போக்கில் மட்டுமேயாகும். நீ உனது உடலை விட்டுச் சென்ற பிறகு உனக்கு முன் இருக்கும் அடுத்த மிகப்பெரிய வேலைக்காகவே நீ உருவாக்கப்படுகிறாய். நாங்கள் அனைவரும் ஒளியுலகில் உனக்காக வேலையை விட்டு வைத்திருக்கிறோம். உன்னுடன் முழுமையாக ஐக்கியமடைந்துவிட்டதால், ஒளியுலகில் இருக்கின்ற எந்த ஒருவருடனும் தொடர்பு இல்லாமல் போனதால் அனைத்து பயிற்சிமுறைகளும் மறைந்துபோகும். இனி ஒருபோதும் திரும்பிவராத இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அனைவருக்கும் இதுதான் சமயம். எங்கள் அனைவரின் பார்வையும் உன்மீது மட்டுமே உள்ளது. (சிறிது இடைவெளி) இந்த விநாடியின் காட்சி உன் முன்னே தெரிகிறது. உன் மீது பொழிந்து கொண்டிருக்கின்ற சக்தியை நாங்கள் அனைவரும் கவனித்து ஒழுங்குபடுத்திக்கொண்டு இருக்கிறோம்.’’

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

‘‘நான் என்னிடம் எதையும் நிறுத்திவைத்துக் கொள்ளவில்லை. இன்னும் அதிகமாக உனக்கு அளிக்கும் சமயம் எப்போது என்று எப்போதுமே நான் காத்திருந்தேன். உன் உடம்பு பலவீனமானது; அதனால் அதில் எல்லையில்லாத சக்தி இருக்கிறது. குருபக்திக்கு மிக அரியதான, எங்கும் காணமுடியாத உதாரணம் இங்கே இருக்கிறது. இந்தப் பக்கமாக (குருபக்தியின் வழியில்) சிந்தனையைச் செலுத்தாதிருப்பவர்கள் பைத்தியக்காரர்கள். பரமாத்மாவின் (பரம்பொருளின் ஜீவத்தன்மையின்) ஆற்றல் முழுவதும் உடனடியாகப் பொங்கி வருவது வேறு எப்போதாவது நடந்திருக்கிறதா? அந்த ஆற்றல் உன் நெஞ்சுக்கும் திடீரெனப் பாய்ந்து, நீ உடனே நித்திய ஜீவிதத்தை நோக்கிச் சென்றுவிடாமல் (உடலை நீங்கிச் செல்லாமல்) தடுப்பதற்காக நாங்கள் அதைக் கட்டுப்படுத்துவதில் மிகவும் முனைப்போடு ஈடுபட்டிருக்கிறோம்.’’

## 3-10-1946

### சுவாமி விவேகானந்தா:

‘‘கவனமாக இரு: உலகின் நன்மைக்காக (வேறு உருவத்தில்) காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது! இந்தியாவில் கருத்து வேறுபாடுகள் அதிருப்திகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. அது ஏதோ நன்மைக்காக

இயற்கை செய்யும் வேலையாகும். இப்போதைக்கு அதை அப்படியே இருக்கும்படி விட்டு அதன் பலனைப் பார். வருங்காலத்தில் ஐரோப்பாவிலும் அதே விஷயம் நடக்கப்போகிறது. எல்லாமே கலைந்து போகும். நீ ஒருவன் மட்டுமே அதைச்செய்வாய். ஏசுகிறிஸ்து கூறிய வார்த்தைகள் உனக்கு நினைவு இருக்கிறதா? அவர் விரும்பியது என்ன? தன் மதத்திற்கு சொந்தமான அனைத்தும் கலைந்துபோய் விடவேண்டும் என்றுதான் அவர் விரும்பினார். ஒரே தேசத்தின் தலைவிதி எப்போதுமே ரத்தம் சிந்துதலுடன் பிணைந்து பின்னப்பட்டிருக்கிறது. குடும்பத்து உறுப்பினர்கள் அல்லது வெளியில் இருந்து யாராவது வந்து இந்தக் காரியத்தை நடத்தலாம். உன்னுடைய வேலைக்கு இது ஒரு குறிப்பு. மற்றவை பிறகு தொடரும். இந்த உலகம் ஒழுங்கின்மை மற்றும் சீர்குலைந்த நிலையில் இருக்கிறது. அதன் விதி (தலையெழுத்து) உன்னால் தீர்மானிக்கப்படும்.''

## 24-10-1946

### வணக்கத்திற்குரிய மாஸ்டரின் மகன் J1 - கூறியது:

''தனது சீடனுக்காக மேல்உலகில் தனக்குரிய இடத்தை ஒரு மாஸ்டர் கைவிட்டு உலகில் இருக்கும் உதாரணத்தை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. உண்மையில் உங்களுக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் எனக்குக் கிடைக்கவில்லை. உங்களை எப்போதுமே எனது மூத்த சகோதரனாகத் தான் நான் பார்க்கிறேன். நீங்களும் என்னை உங்கள் சகோதரனாகவே நினையுங்கள். இப்போது எனக்கு பௌதிக உடம்பு இல்லை. நீங்கள் இங்கே மேல் உலகிற்கு வருவதற்கு இன்னும் அதிக காலம் இருக்கிறது. நீங்கள் இங்கே வருவதற்கு எத்தனையோ முறை ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆயினும் வணக்கத்திற்குரிய நமது மாஸ்டர் லாலாஜி சாகேப் அது நடைபெற அனுமதிக்கவில்லை. இதை அவர் உங்கள் விருப்பத்திற்கே விட்டுவிட்டார். எனக்கு வழிகாட்டியாக இருந்த A1- க்கு நேர்ந்த மோசமான நிலை வேறு யாருக்கும் வரக்கூடாது. வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜியின் உதவி எனக்கு இல்லாமல் போயிருந்தால், முக்திபெற்ற ஆன்மாக்களின் வழியில் நான் போயிருக்கமாட்டேன். சித்தப்பா R1 பற்றி முதலில் இருந்தே எனக்கு உயர்ந்த அபிப்பிராயம் இல்லை. சிறிது காலத்திற்கு முன்பே அவரிடமிருந்து ஆன்மீகம் விடைபெற்றுச் செல்லத் துவங்கிவிட்டது. நான் உயிருடன் இருந்த போதே இது ஆரம்பித்தது. இப்போது அங்கே ஆன்மீகம் எதுவும் இல்லை. அது மட்டுமன்றி வம்சாவளியும் முடிந்துவிட்டது. மேலும் சகோதரரே, நமது மார்க்கத்திலும் நிலைமை கிட்டத்தட்ட அதே மாதிரி இருக்கிறது. நூற்றுக்

கணக்கானவர்களில் ஒரு சிலர் மட்டுமே சிறந்தவர்களாக இருப்பதால் என்ன பயன்? சரி, பரவாயில்லை, இப்போது நிலைமையை சரிசெய்து விடுங்கள்: இன்னும் நம்பிக்கை இருக்கிறது.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இலங்கையின் வேலை இன்னும் முடிவடையாமல் இருக்கிறது. அதில் மிகவும் தாமதமாகி விட்டது. (சிறிது இடைவெளி) கடவுளின் சித்தத்திற்கு சரணடைந்திருப்பது மற்றும் முழுமையாக அவரைச் சார்ந்து நிற்பதே கடைசிநிலை என்று சொல்லப்படுகிறது. அதில் சந்தேகமில்லை. ஆயினும் அதன் முடிவும் ஆரம்பமும் எங்கும் இல்லை. அதாவது அதற்கு ஒரு ஆரம்பம் மற்றும் முடிவு என்பது இல்லை. அது எங்கிருந்தும், எப்போது வேண்டுமானாலும் வரலாம். கடவுளின் சித்தத்திற்கு சரணடைந்திருப்பது என்ற இந்த நிலையிலிருந்தே பெரும்பாலோர் பெரியோர்கள் ஆரம்பித்தார்கள் என்பது கவனித்து அறியப்பட்டுள்ளது. ஆன்மீகப் பயிற்சியின் போக்கில் இதுவும் கூட நடந்தது பெரும்பாலும் ஒருவர் பரிணாம வளர்ச்சியில் சில ஆன்மீக நிலைகளைக் கடந்தபிறகே இது அவருக்குக் கிடைத்தது. இது ஒருவரின் தைரியத்துக்கும், அதைவிட மேலாக அந்த பக்தரின் மீது இந்தநிலையை அளிக்க விரும்பும் குருவின் சித்தத்திற்கும் உட்பட்டதாக இருக்கிறது. (சற்று இடைவெளி) முழுமையான வறுமை நிலையின் (முன்னமேயே தயார் செய்து கொள்ளாத நிலையின்) தரத்தின் அறிகுறியாக பணிவு, மென்மையான குணம், ஆன்மீக நாட்டம் ஆகியவை தான் உள்ளன.''

27-10-1946

**சுவாமி விவேகானந்தா:**

''இன்று உன் தத்துவஞான விரிவுரையைக் கேட்டு நான் வியப்படைந்தேன். இந்த விஷயங்களை நீ எழுதிவைக்கவேண்டும் என்று அறிவுரை தருகிறேன். இனி வரப்போகும் நீண்ட காலங்களில் இம்மாதிரி விஷயங்கள் கண்டறியப்படாது என்று நினைக்கிறேன். (சிறிது இடைவெளி) மின்னலின் இடி என்பது மிக அற்புதமான கொள்கை. (ஆன்மீக முடிச்சுக்கள் 6,7 இவற்றின் வர்ணனையில் ஏதோ ஒருவிதத்தில அடங்கியுள்ளதாக பிரம்மாண்ட மண்டலத்தில தனிமனித அனுபவத்தில் உண்டாகும் அனுபவம் மற்றும் இயற்கையின் நிலை பற்றிய குறிப்பு – அனந்தத்தை நோக்கி என்ற புத்தகத்தின் 1979ஆம் ஆண்டு பதிப்பில் இது காணப்படுகிறது) உன்னை நாடி வருகின்ற சகோதரர்களுக்கு, நீ சிந்திப்பதற்கு வேண்டிய

விஷயங்களைக் கொடுக்கும்படி நான் எப்போதுமே அறிவுரை சொல்கிறேன். ஆனால் யாரும் அப்படிச் செய்வதில்லை. இயற்கை வேறு வார்த்தைகளில் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது. முன்பு குறிப்பிட்ட ஆன்மீக முடிச்சுக்கள் 6,7 இவற்றின் வர்ணனையில் காணப்பட்ட விஷயத்தை இதுவரையில் யாரும் உணர இயலவில்லை. மற்ற முடிச்சுக்கள் (புள்ளிகள்) பற்றிய கொள்கைகள் முற்றிலும் சரியானவை.''

9-11-1946 (மாலை 6.30 மணி)

## M1 - னுடைய காலஞ்சென்ற மதிப்புமிகுந்த தந்தையார், பரம்பொருளின் ஜீவத்தன்மையுடன் இணைப்பு பெறுவது பற்றியும், ஆன்மீக முன்னேற்றமடைந்து உயிர்பிரிந்த பெரியோர்கள் பற்றியும் M1 - க்கு தெரிவித்தது:

''பெரியோர்களுடன் மற்றும் பரமாத்மாவுடன் இணைப்புபெறும் தகுதியும் திறனும் சிலருக்கு இயற்கையாகவே அளிக்கப்பட்டுள்ளது. அது உலகிற்கு ஏதோ ஒரு நோக்கத்திற்காக இயற்கையினால் அனுப்பப்படுகிறவர்களுக்கு தானாகவே வந்து அமைகிறது. ஆயினும் இதற்காக முயற்சி செய்கின்ற மற்றவர்கள் வெற்றியடைய மாட்டார்கள் என்று பொருளாகாது. இதில் வேறுபாடு என்னவெனில் ஏற்கெனவே தயார் செய்யப்பட்டு வந்திருப்பவர்கள் அவர்களுக்கென்று நியமிக்க வேலையை நேரடியாகப் பெறுகிறார்கள். தாங்களாக முயன்று அந்த நிலையை அடைந்திருப்பவர்களுக்கு இப்படி நேரடியாக நியமனம் பெறும் பணிகள் இருக்காது. ஆனால் அவர்களின் நோக்கம் கடைசியில் நிறைவேறும். இங்கே அவர்களின் வேலைகள் குருவின் மூலமாக அளிக்கப்படும். அவர்களுக்கு (அதாவது இயற்கையினால் அனுப்பப்படுகிறவர்களுக்கு) பரமாத்மாவிடமிருந்தே நேரடியாக வேலைகள் ஒப்படைக்கப்படும். குருவின் மூலமாக உயர்நிலை அடைகிறவர்களுக்கு சுயகட்டுப்பாடு மற்றும் அதிக முயற்சி தேவைப்படுகிறது. மேலேயிருந்து நேரடியாக வருகிறவர்களுக்கு சிறிதளவு சுத்திகரிப்பு மட்டுமே தேவைப்படுகிறது. ஆரம்பத்திலேயே இந்த வழிமுறை பற்றி ஒரு குறிப்பு எடுத்துக்கொள்.

அந்த வழிமுறை இதுவே: உன்னை மெய்யொளி பெற்றவனாக (பாரமில்லாமல் லேசானவனாக, அமைதியாக, சமநிலையில் அல்லது நடுநிலையில் இருப்பவனாக) உருவாக்கிக்கொண்டே இரு. ஒரு சாதகன் தன்னை எந்த அளவு மெய்ஞ்ஞான ஒளியுடையவனாக உருவாக்கிக் கொண்டிருக்கிறானோ அந்த அளவுக்கு பரமாத்மாவுடன் இணைப்பு

பெறுகிறான். இப்போது சகஜ மார்க்க பயிற்சிமுறையின்கீழ் அதே நிலை தான் அளிக்கப்படுகிறது. மக்களிடம் இந்த விஷயம் இனி வளர்ச்சியடையும். ஐக்கியமடைதல் என்றால் குருநாதர் அல்லது மூத்தவராகிய மகான் தனது சீடனுக்குள் தன்னைக் கலந்துவிடச் செய்வதுதான். இப்போது எதனுடன் குரு அல்லது மகான் ஐக்கியமடைந்திருக்கிறாரோ அதனுடைய உறை அல்லது திரை அதற்குத் தடையாக இருக்கிறது. இதன் காரணமாக முன்பு ஏற்பட்டுள்ள இணைப்பில் உண்டாக்கப்பட்ட ஒளி அந்த உறை அல்லது திரைக்கு மேல் வெளிவருவதில்லை. அதனால் அதைப்புரிந்துகொள்ள மட்டுமே முடியும். அந்த ஒலி நிச்சயமாக அங்கே இருக்கிறது. M1, இதற்கு முயற்சி நீதான் செய்யவேண்டும்; கடவுளிடமிருந்து உனக்கு உதவிகிடைக்கும். கடவுளுடன் நமது இணைப்பு நிலைநிறுத்தப்படுவதில் அந்தத் தொடர்புடைய நிலைக்காக முயற்சியை முதலீடு செய்யக்கூடாது. அது அந்த உரையைக் கிழித்தெறிவதற்கு திருப்பிவிடப்படவேண்டும். உன்னுடைய (M1) சங்கல்பம் அதை இயற்கையாகவே கிழித்தெறிய முடியும். தியானத்தின் மூலமாக எத்தனையோ உயர்நிலைகளை அடைய முடிகிறது என்னும்போது இது ஏன் கிடைக்காமல் போகும்? அந்த உறையை அல்லது திரையைக் கிழித்தெறிவதற்காக ஒரு எண்ணமும் திட சங்கல்பமும் இருந்தால், அந்த நோக்கத்தை அடைவதற்கு உதவியான வழிமுறைகளைப் பின்பற்றினால் இதையும் நிச்சயமாக சாதிக்கலாம். அதற்கு உதவியாக இருக்கும் வழிமுறைகள் என்ன என்று நீ கேட்கலாம். எளிமை, அமைதியுடன் இருக்கும் தன்மை என்று நீ சொன்ன அதே வார்த்தைகள் தான் இதற்கு என் பதில். இந்த விஷயங்களைப் பின்பற்றி நமது பழைமையான இந்திய நூல்களில், அமைதி நிலைக்காகப் பிரார்த்தனை தனக்காக மட்டுமன்றி உலகிலுள்ள அனைவருக்காகவும் செய்யப்பட்டது. இதன் ரகசியம் என்ன? இந்த அமைதிதான் முக்கியமானது, அதை அடைவது சிரமமானது. இதற்கு அப்பால் இருப்பது எதுவாயினும் அது உறை அல்லது திரைதான். அந்த உறையைக் கிழித்தெறிவதுதான் எல்லோரும் செய்யவேண்டிய பணியாகும். அதற்கான பயிற்சி குருவின் மூலமாகத்தான் செய்யப்படவேண்டும். அமைதி என்ற சமுத்திரத்தில் நீ மூழ்கியிருப்பதாக உறுதியான எண்ணத்தை மனதில்வைத்து, அந்தக் கடலின் அலைகள் அந்த உறையை நீக்குவதாக அல்லது கிழித்து எறிவதாக நினைத்து தியானம் செய். ஒருமணிநேரம் இந்த தியானம் செய்யலாம். டிக்,டிக் அல்லது கிட்,கிட் என்று ஒலியை நீ ஒருபோதும் கேட்டதில்லையா? அது நிச்சயமாக அங்கே இருந்தது. அதைப் பற்றி அதைக் கவனிக்கும்படி L1

இடம் நீயும் ஏதோ சொன்னாய். அது பயனற்றது. அதனால் ஏற்பட்ட மனவருத்தம் உன் இதயத்திலிருந்து நீங்கட்டும். (சிறிது காலத்துக்கு முன்பு M1 - இதைச்சொன்னார்.''

**ராம் சந்த்தரின் காலம் சென்ற வணக்கத்திற்குரிய தந்தையார் கூறியது (M1 - எழுதிய குறிப்பு):**

''நான் பார்ப்பதற்கோ, கேட்பதற்கோ எதுவும் இல்லை. உன்னைப் பற்றி (ராம் சந்த்தரைப் பற்றி) என் ஆயுட்காலத்திலேயே விசேஷமாகக் குறிப்பிட்டுச் சொன்ன M1 – க்கு நன்றி. எனக்கு நீ பெரிய கைம்மாறு செய்துவிட்டாய் என்பதில் சந்தேகமில்லை. என்னுடைய தீவிரமான முயற்சிகள் உனக்கு உலகியல் சௌகரியங்களை அளித்தன அல்லவா? என்னுடைய நல்வாழ்வுக்காக நீயும் நன்கு உழைத்தாய். ஆனால் உன்னுடைய உழைப்பின், முயற்சியின் பலனாகத்தான் எனது இப்போதைய நிலை வந்தது என்று நீ நேர்மையாகச் சொல்லமுடியுமா? முடியாது! நீ இப்போது எந்தநிலையில் இருக்கிறாயோ அப்படி உன்னை உருவாக்கிய வணக்கத்திற்குரிய லாலாஜிக்கு நான் எப்போதும் நன்றி சொல்வேன்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''உன் தந்தை (பாபு பத்ரி ப்ரசாத்) நிறையச் சொல்லியிருக்கிறார். ஆனால் இன்றைய நிலைமைகளின்கீழ் அவருடைய கருத்தைச் சொன்னதில் ஒரு சிறிய தவறு செய்திருக்கிறார். இப்போது உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ராம் சந்த்தர் எனப்படும் தனி சரீரம் அவரால் பிறக்காமல் போயிருந்தால் அவருக்கு மகனாக அவரால் பிறப்பிக்கப்படாமல் இருந்திருந்தால், நான் வேறு யாரிடம் ஐக்கியம் அடைந்திருக்க முடியும்? இம்மாதிரி ஒரு வாரிசு எல்லோருக்கும் பிறக்கும்படியாக கடவுள் அருள்வாராக. இன்னொருவரும் உன் வம்சத்தில் வரப்போகிறார். அது எப்போது? காலம்தான் அதைச்சொல்லும்.''

18-11-1946

**மகாபாரத காவியத்தில் பஞ்ச பாண்டவர்களில் ஒருவனாகிய, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் நேரடியாக பகவத்கீதையை உபதேசிக்கப் பெற்று மகாவீரனாகிய அர்ஜுனன் கூறியது:**

''மகாபாரத காலத்தில் இருந்த நிலை மீண்டும் வந்திருக்கிறது. தெய்வீகமில்லாதத் தன்மை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. மீண்டும் ஒருமுறை அதேமாதிரி சூழ்நிலைகள் நிலவுகின்றன. சூழ்நிலையைப் படித்து

அறியுங்கள். இந்த சுற்றுப்புறத்தில் நிலவும் தன்மையே அதன் கதையைச் சொல்கிறது. நீங்கள் வேறு ஏதோ ஒன்றில் கவனமாக இருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலைமைக்கு முடிவைக்கொண்டு வரப்போகிறவர் நீங்கள்தான். அந்த நோக்கத்திற்கு இந்த வாழ்க்கை சரியானதாக ஏற்றதாக இருக்கவேண்டும் என்று சொல்லும் விஷயமல்ல. இதற்கு மேலும் ரகசியத்தைத் தெரிவிப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. இந்தக்காரியம் நடைபெறும் என்பதற்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. யாரிடம் இந்தக் காரியம் ஒப்படைக்கப்பட்டதோ அவர் அதை உங்களிடம் கொடுத்திருக்கிறார். சுவாமி விவேகானந்தா மிகப்பெரிய ஒரு மகாபுருஷராவார். அவர் உங்களிடம் கொடுத்திருக்கும் இந்த சக்திகள் நிச்சயமாக வேலைசெய்யும். இந்தவிஷயங்கள் அனைத்தினுடைய வியப்பான தன்மைகளும் நீங்கள் பௌதீக உடலைவிட்டு நீங்கியபிறகு தெரிய வரும்.'' (இந்த விஷயம் பற்றிய காட்சி என்மனதில் வந்தது. ஆனால் அதை வார்த்தைகளில் சொல்ல இயலாது.)

''வில்வித்தை பற்றிய விஞ்ஞானம் அதன் உண்மையான வடிவத்துக்கு வரும். அதன் வழிமுறையும் அதேமாதிரியாகவே நீடிக்கும். சகோதரரே, அது ஒரு விஞ்ஞானம்! மந்திர ஜபத்தின் மூலமாக சக்தியை அந்த அம்புக்கு ஊட்டி, அந்த சக்தியை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது அந்த வில்லாளிக்கு சொல்லப்படுகிறது. அதைப்பற்றி நான் உங்களிடம் சொன்னால் நீங்கள் அதைக்கொண்டு எதுவும் செய்ய முடியாது. ஏனென்றால் அதற்கான அடிப்படைகள் உங்களிடம் சிறிதும் இல்லை. உங்களிடம் இருப்பது எதுவாயினும் அது இன்னும் முழுமையாகாமல் பாதியளவில்தான் இருக்கிறது. அதற்கு சமமான ஒருவர் உலகில் தோன்றும் போது ஆன்மீக ஞானம் பற்றிய விஷயங்கள் உங்களுக்கு இப்போது வந்திறங்குவது போல அவருக்கும் வந்திறங்கும். அவை ஆகாயத்தின் சக்தியை உள்ளடக்கியிருந்தன. அது மிகப்பெரியதாக தனிப்பரம்பொருளுடன் தொடர்புடையதாக இருந்தது. இப்போது இங்கே எல்லா சக்திகளும் விளங்குகின்றன. அந்த மின்னலைப் பாருங்கள்! அதன் பிரகாசமான ஒளியைப் பார்த்தீர்களா? இதுதான் அக்னியின் (நெருப்பின்) சக்தி. அம்புகள் இந்த சக்தியால் நிரப்பப்பட்டு இருந்தன. இதற்கு இயந்திரங்கள் எதுவும் எங்களிடம் அப்போது கிடையாது. சங்கல்ப சக்திதான் வேலை செய்தது. அந்த சங்கல்ப சக்தி ஒரு தனிமனிதனின் கட்டுப்பாட்டின் கீழ் (அற்புதங்களை நிகழ்த்தும் ஆற்றலாக) கொண்டுவரப்

பட்டது. அங்கே அனைத்தும் புனிதமாக மற்றும் ரகசியமாக பாதுகாப்பட்டிருந்தன.'

போர்க்களத்தில் அழிவு நடத்த வேண்டிய தேவை இருக்கும் போது, அம்பு இடது பக்கத்திலிருந்து வரும் (வெளியே சொல்லப்படாத, சிலர் மட்டுமே அறிந்த) இந்த ரகசியம் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கே சொந்தமானது. வலதுபக்கமிருந்து அம்பு எய்துவது எனக்கு மட்டுமே தெரிந்த விஷயம். வருங்காலத்தில் வரப்போகிற மனிதர்களுக்காக இதை நான் தெரிவிக்கிறேன். அது மிக அவசியமானது. நான் இரண்டு விஷயங்களை சொல்லியிருக்கிறேன். இரண்டு முக்கியமான ஆயுதங்கள் பற்றிய தகவல் என்னால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இடது பக்கத்தில் நீங்கள் பார்க்கும் அந்த அம்பில் என் கட்டுப்பாட்டில் உள்ள ஆகாயத்தின் சக்தி முழுவதையும் நான் கொண்டு வந்திருக்கிறேன். மந்திரஜெபத்தின் சக்தியினால் பெறப்பட்ட ஆற்றல் போதுமான அளவில் இல்லை. அதனால் என் எண்ணத்தின் சக்தியை மந்திரஜபத்தின் சக்தியோடு இணைத்து, அதில் நீந்துதலையும் அறிமுகப்படுத்தினேன். ஆகாயத்தின் மீது நான் முழுமையான ஆளுமை பெற்றிருந்தேன். போர்க்களத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் எனக்கு அளித்த பிராணாஹூதி சக்தி வெறும் ஆன்மீகமாகவா இருந்தது? அந்தப் பிராணாஹூதியில் எனக்கு இந்த விஷயங்கள் அனைத்தையும் தெளிவுபடுத்தினார். சரியான நேரத்தில், அதற்கு உரிய சமயத்தில், சரியான ஆயுதத்தை நான் கையில் எடுக்கும் விதமாக அவர் அந்த நுணுக்கங்களை எனக்குள் புகட்டினார். அம்மாதிரி ஒரு பயிற்சியுடன் சேராமல், ஆயுதங்களினால் பயன் இல்லை. மேலும் ஒரு விஷயம் சொல்கிறேன்; பிரளயத்தை, உலகின் அழிவைக் காட்சியில் உருவாக்குவது என் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. இதற்கான அம்பு இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த விஷயங்களுடன் எண்ணத்தின் சக்தி இணைந்திராவிட்டால் மந்திர ஜெபத்தின் சக்திகள் பயன்படாது. அது ஒரு மிகப்பெரிய சாஸ்திரம்.''

### ஒரு கேள்வி இதில் குறுக்கிட்டது:

''ஜெர்மனி எத்தனையோ ஆயுதங்களைக் கண்டுபிடித்திருக்கிறதே!''

### பதில் அர்ஜுனன் கூறியது:

''அதில் பொருட்செலவு அதிகம்; இங்கே அப்படி ஏதுமில்லை. இங்கு இருந்த ஒரு விஷயத்தில் செலவு அதிகம் என்பதில் சந்தேகம் இல்லை. அது இயந்திரங்களைக் கொண்டதாக இருந்தது. அந்த இயந்திரக் கருவி

விமானம் (காற்றில் பறக்கும் வாகனம்) என்று சொல்லப்பட்டது. அதை இயக்குவதற்கு சங்கல்ப சக்தி தேவையில்லை. சில உலோகங்கங்கள் அதில் பயன்படுத்தப்பட்டன. அதில் பயன்படுத்தப்பட்ட ஒரு உலோகம், புவிஈர்ப்பு சக்திக்கு எதிராக அந்த விமானத்தை மேல்நோக்கிய திசையில் செலுத்தக்கூடியதாக இருந்தது. இந்தக்குறிப்பை விஞ்ஞானிகளிடம் கொடுத்தால் அவர்கள் அதை நல்லவிதமாகப் பயன்படுத்தமுடியும். ஹிந்துக்களின் காலம் மேலோங்கியிருந்தபோது இந்த உலகின் சுற்றுப்புறச் சூழ்நிலை மாசுபடுத்தப்படவில்லை.''

### 27-11-1946

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''இன்று இரவு 8 மணிக்கு R2 - க்கு குண்டலினி சக்தி விழிப்படைந்திருக்கிறது. மூலாதார சக்கரத்தில் (ஆசனவாய் அருகே உள்ள புள்ளியில்) ஏதோ செயல் ஆற்றல் மிகுந்த இயக்கமும் நிகழ்ந்துள்ளது. அதைக் கவனமாகக் கையாண்டு, சிறுபிள்ளைத்தனமாக எதிலும் ஈடுபடாமல் இருக்க வேண்டியது அவருடைய கடமை. இந்தவிதமான பிராணாஹூதியை நிர்வகிப்பது பொதுவாக தடை செய்யப்பட்டுள்ளது.'

### 28-11-1946

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''இலங்கையின் முனிவருடைய குரு உனக்கு ஏதோ சொல்வதற்காக இங்கே வந்திருக்கிறார்.''

### வணக்கத்திற்குரிய இலங்கை முனிவரின் குரு:

''இன்று மாலை 6.45மணிக்கு என் சீடருக்கு வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டரின் எல்லையற்ற கருணையால் இறைநிலையில் பற்று என்ற புள்ளி விழிப்படையச் செய்யப்பட்டுள்ளது என்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உணவோ, தண்ணீரோ உட்கொள்ளாமல் இதற்காக அவர் பதினொரு நாட்களாக உண்ணாவிரதம் இருக்கிறார். அவருடைய உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி அவருக்குச் சொல்லுங்கள்.''

### இலங்கையின் முனிவர்:

''என் இதயத்தின் தீவிர ஆவல் இன்று நிறைவேறியிருக்கிறது. மிக மிக நன்றி. நீங்கள் என்னிடம் ஒப்படைக்க விரும்பும் எந்த வேலையையும் செய்வதற்கு நான் எப்போதும் தயாராக இருப்பேன். தென்னிந்தியாவில்

இந்தப் பயிற்சிமுறை பரவும்போது நீங்கள் அனுமதியளித்தால், என் சொந்த சீடர்களாகக் கருதி அவர்களுக்கு நான் பயிற்சியளிக்கத் தொடங்குவேன்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இங்கே பார். ஒன்று இரண்டுக்கு (ஒரு காரியம் இரண்டு காரியங்களுக்கு) வழிவகுத்துவிட்டது. (வேண்டுகோள்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன). இலங்கை முனிவரின் குரு, நான் உன்னைக் கடக்கச் செய்த அதே புள்ளிகளை (ஆன்மீகநிலைகளை) அவரும் கடக்கும்படி செய்ய வேண்டுமென்று என்னிடம் வேண்டிக் கேட்டுக் கொண்டார். பரமாத்மாவின் (பரம்பொருளின்) மண்டலத்தில் நீ நீந்திச் செல்லும்படி முன்னேறிய பாதையில் நீ கடந்து செல்லுமாறு செய்யப்பட்ட அந்த மையங்கள், ஆன்மீக உயர்நிலைகள் ஆகியவற்றை அவரும் கடந்து செல்ல உதவி செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார். என்னை, நான் அவருக்குள் ஐக்கியம் அடையச் செய்து என்னையே இல்லாமல் செய்துகொண்டுவிட்ட நிலையில், யாருக்கு நான் எல்லா விஷயங்களிலும் சுயஅதிகாரம் கொடுத்துவிட்டேனோ, அந்த எனது பிரியமான ராம் சந்த்தரின் கைகளில்தான் இப்போது இவையனைத்தும் உள்ளன என்று ஒரு சிறந்த பதிலை நான் அவருக்குச் சொன்னேன். என்னிடம் சிறிதளவு கட்டுப்பாடு மட்டுமே எஞ்சியிருக்கிறது. அதனால் இந்த வேலையை உன்னிடம் ஒப்படைக்கிறேன். உனக்கு எப்போது அதைச் செய்யலாம் என்று தோன்றுகிறதோ அப்போது அவரை நீ அழைக்கலாம்.''

**இலங்கையின் முனிவர்:**

''இந்த விலைமதிப்பு கூற இயலாத மிக உயர்ந்த விஷயத்தை உங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள மக்கள் தயங்குகிறார்களே! அந்தோ!''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''அவருக்குத் தடையை ஏற்படுத்திய நிலையை நீ ஒரு கண் இமைப்பில் உடைத்தெறிந்துவிட்டாய்; மேலும் அவரை (இலங்கை முனிவரின் குருவை) கரையில்லாத மகாசமுத்திரத்தில் கொண்டு சென்று விட்டுவிட்டாய். இம்மாதிரி அவசரத்தை நான் விரும்பவில்லை. பரவாயில்லை. வருங்காலத்தில் கவனமாக இரு! அவர் இதை என்றும் நினைவில் வைத்திருப்பார். அவர் என்னிடம் இதை விரும்பிக் கேட்டுக் கொண்டதால் அவருக்கு இதைக் கொடுக்க இதுவே சரியான நேரம் ஆகும்.''

**சுவாமி விவேகானந்தா:**

''இம்மாதிரி ஒரு உதாரணத்தை இனி ஒருபோதும் காண முடியாது என்று உனக்கு உறுதியாகச் சொல்வேன். இது சாதாரண விஷயமல்ல.

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்: (அங்கே இருப்பவர்களுக்காகக் கூறியது)**

''அன்புள்ள சகோதர சகோதரிகளே! இந்த நிலையிலிருந்து நீங்களெல்லாம் எப்போது நன்மை அடையப் போகிறீர்கள்? நேரம் கைநழுவிப் போய்க்கொண்டிருக்கிறது.''

**சுவாமி விவேகானந்தா:**

''ஒளியுலகிலிருந்து இதே நோக்கத்துக்காக ஆன்மாக்கள் உன்னை நாடி வந்து கொண்டிருக்கின்றன. ஆறுபேர் ஏற்கெனவே வந்திருக்கிறார்கள். இனிமேலும் ஆன்மாக்கள் வருவது இந்தமுறை தடை செய்யப்பட்டுள்ளது. ஏனென்றால் அவர்கள் அனைவருக்காகவும் ஒரே சமயத்தில் அல்லது அடுத்தடுத்து ஒவ்வொருவராக வேலைசெய்வதற்குத் தேவையான அளவு மனிதமூளை வேலைசெய்ய இயலாது.''

1-12-1946

**சுவாமி விவேகானந்தா:**

''உலகமக்களின் முக்திக்காகவே (விடுதலைக்காகவே) நீ இங்கே வந்திருக்கிறாய். ஒளியுலகில் எத்தனையோ ஆன்மாக்கள் காத்திருக்கின்றனர். அவர்கள் மீது நீ ஆளுமை அடைந்து கொண்டிருக்கிறாய்.''

5-12-1946

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''என்னுடைய ஆன்மீகப் பிரதிநிதியாகவும், என் தலைமைப் பதவிக்கு வாரிசாகவும் இருப்பதற்கு ஒரு தகுதி தேவை. இயற்கையின் ஒவ்வொரு பணியையும் அவருக்கு வெளிப்படுத்த முடிகிறவாறு ஒரு சக்தியை உடையதாகிய ஆன்மா ஏதாவது இருக்கிறதா? மக்கள் இதை ஒரு விளையாட்டாக அல்லது சிரிக்க வைக்கும் விஷயமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்! யாரொருவர் திடீரென்று விழித்தெழுந்தாரோ, திடுக்கிட்டுப் போனாரோ அவர் தன்னையே மிகச்சிறந்தவராக நினைத்து தான் மட்டுமே எனது பிரதிநிதி மற்றும் தலைமைப் பதவிக்கு வாரிசு என்று சொல்லிக்கொண்டார். குடும்பத்தின் கலாச்சாரம், குடும்பத்துக்குள்ளேயே

இருக்கவேண்டும். குடும்பத்தின் சொத்துக்கள் அனைத்திற்கும் பொறுப்பாளர்களாக இருப்பதால் எல்லா உரிமைகளும் தங்களுக்கே உண்டு என்றும் அவர்கள் கருதினார்கள். ஆனால் இது நெசவாளர்களுக்கும், தைப்பவர்களுக்கும் கிடைக்கக்கூடிய விஷயமல்ல. எனது பிரதிநிதியாக ஆவதற்கு நான் அதற்குள் முழுமையாக ஊடுருவிச் சென்று வசிப்பதற்கு ஏற்ற ஒரு இதயம் தேவைப்படுகிறது. அம்மாதிரி உதாரணம் எங்கேயாவது இருக்கிறதா? நிச்சயமாக இருக்கிறது; ஆனால் ஒரே ஒருவரிடம் மட்டுமே இருக்கிறது. வேறு யாரிடமாவது இம்மாதிரி அதிசயத்திறன் உடைய மனம் இருக்கிறதா? இம்மாதிரி ஒரு தியாகம் வேறு யாரிடமாவது இருக்கிறதா? அவர் இவ்வுலகில் தோன்றுவதற்கு முன்பே எத்தனையோ உறைகள் யாருக்கு நீக்கப்பட்டிருந்ததோ, அந்த மாதிரி ஒரு மனிதர் இதுவரை உலகில் தோன்றியது உண்டா? சத்தியநிலை ஒன்றே அதன் தூய்மையான வடிவில் முழுவதுமாக தனக்குள் நிறைந்து இருக்கும் தன்மையை தன்னோடு கொண்டு வந்தவர் யாராவது உண்டா? இம்மாதிரி விஷயங்களுக்காக தேடிப்பாருங்கள். அப்போதுதான் உண்மையாகவே யார் என்னுடைய ஆன்மீகப் பிரதிநிதியாக, என் வாரிசாக இருக்கமுடியும் என்பதை நீங்கள் கண்டறிய முடியும். உன்னிடத்தில் தவிர வேறு எங்கும் இதற்கு உதாரணம் காணமுடியாது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். மிக உயர்ந்த தரங்களில் இருக்கும் பெரியோர்கள் என் படைப்பை (நான் உருவாக்கிய உன்னை) தங்களுடையதாகவே ஏற்றுக்கொண்டதற்காக என்னைத்தவிர வேறு யாராவது கர்வம் கொள்ளமுடியுமா? இது என்னுடைய பெரும் அதிர்ஷ்டமாகவே அமைந்துவிட்டது. இப்போது எனது பிரியமான ராம் சந்த்தர் கண்டுபிடித்துள்ள விஷயம் அதன் உண்மையான வடிவத்தில் உன் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அதை அப்படியே உன்னால் சாட்சியாகப் பார்க்க முடிந்தால் இந்தமாதிரி உதாரணத்தை வேறு எங்கும் காணமுடியாது என்பதை உணர்வாய். இந்தக் கண்டுபிடிப்பு இதயமண்டலம் என்று குறிப்பிடப்படுகின்ற மிக விசாலமான (பரந்த) வட்டமாகும். இது பரம்பொருளே அதன் தூய்மையான வடிவில் விளங்குகிற நிலை வரையில் பரவியிருக்கிறது. அதற்கு அப்பால் பரம்பொருள் மட்டுமே இருக்கிறது. அங்கேதான் முக்தி பெற்ற ஆன்மாக்கள் தங்கள் உடம்பை விட்டுச் சென்றபின் நீந்திக் கொண்டிருக்கிறார்கள். என் ஆன்மீகப் பிரதிநிதியும் வாரிசும் ஆகிய ராம் சந்த்தர் எண்ணத்தில் இது தோன்றியது. முதலிலேயே முதல் பிராணாஹுதியிலேயே அதன் சுத்திகரிப்பை மேற்கொண்டு அதில் அடங்கியுள்ள சக்தியையும் அறிமுகப்படுத்துவது எப்படி என்பதைக் கண்டறிந்தார். இந்தக் கண்டுபிடிப்பை அவர்

செயல்படுத்தியிருக்கிறார். இதனுடைய பலன் சிறிது காலத்திற்குப் பிறகு தான் தெரியும்.''

### 7-12-1946 (லக்கிம்பூர்-கேரி போகும் வழியில் புகைவண்டியில்):

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''சபாஷ்! இம்மாதிரி புரிந்து கொள்ளும் திறனுக்காக என் பாராட்டுக்கள். இயற்கையின் ரகசியங்கள் உன் மூலமாக வெளிப்படுத்தப் படுவதாக! அதனால் கடவுளின் படைப்பு நன்மை பெறுவதாக! இதுவரையில் ஆன்மீகப் பயிற்சிகளை செய்து வந்தவர்கள் யாராயினும், அவர்கள் அதில் பெருமளவு முயற்சியும் உழைப்பும் கொடுத்து வெற்றியடைந்தார்கள். அவர்கள் தவ வாழ்க்கையை மேற்கொண்டு, மண்ணிலும் புழுதியிலும் (தூசுகளிலும்) சுற்றியலைந்து, வீட்டுக்குவீடு உணவுக்காக இரந்து (பிச்சை கேட்டு) இப்படி ஏராளமான சிரமங்களுக்குப் பிறகே ஒருவாறு மெய்ப்பொருளின் ஒரு கணநேரக் காட்சியைக் கண்டார்கள். மேலும் அவர்களில் பலர் இம்மாதிரி மிக மேலான மெல்லியத் தன்மையைப் பெறமுடியாமலே பின்தங்கிவிட்டார்கள். இது ஏனென்றால் சுலபமான ஒரு விஷயத்தை சிரமமான வழிமுறைகளின் மூலமாக அடைய விரும்பியதால்தான் ஆன்மீக வழிகளுக்கு மேலும் சிக்கல்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். மிக அருகிலேயே இருக்கின்ற எவ்வளவு சுலபமான விஷயம் சரியான புரிந்து கொள்ளும் திறன் மற்றும் சிந்திக்கும் திறன் இல்லாமல் போனதால் மக்களின் கவனத்திலிருந்து தப்பிவிட்டது. பயிற்சி செய்வதற்கு ஏராளமான முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் அதன் வெப்பம் (உணர்வுகளின் தன்மை) மட்டுமே அவர்களுக்குக் கிடைத்தது. மக்கள் அதையே மிகப்பெரிய விஷயம் என்று கருதினார்கள். விரைவுத் தன்மையையும், உணர்ச்சிகளின் எழுச்சியையும் ஆன்மீகம் என்று தவறாக நினைத்தார்கள். இதுவே ஆன்மீகத்துக்கும், அவர்களுக்கும் இடையே ஒரு திரையாக இருந்தது. எனவே அவர்கள் சத்தியநிலையின் மீது நாட்டம் கொள்ள முடியவில்லை. இதனால் தங்கள் தவறான சிந்தனைகளினால் குழப்பமடைந்து, எரிச்சலும் அடைந்தார்கள். சத்தியநிலை சம்பந்தமாக விழிப்பு உணர்வு அவர்களுக்கு இல்லை. இப்போது காலம் திசை மாறியிருக்கிறது. உன்னைப்போன்ற ஒரு மகாபுருஷர் தோன்றியிருப்பது என்னுடைய பெரும் பாக்கியம். எந்த ஒரு வசதியில் நீ இந்த ஆன்மீக விஷயம்பற்றி கற்றுக்கொண்டாயோ, அதை விட பன்மடங்கு சுலபமான வழிமுறை மற்றவர்களுக்காக உன்னால் உருவாக்கப்பட்டுள்ளது. என்ன ஒரு அதிசயமான, வியக்கத்தக்க சிந்தனை உன்மனதில் தோன்றியிருக்கிறது? ஒருவழியாக, கடைசியில் அதன் முடிச்சை

அவிழச் செய்திருக்கிறாய்! உலகியல் மற்றும் சாதாரண வேலைகளில் ஒருவர் மும்மரமாக ஈடுபட்டு இருப்பதிலிருந்து அவரை திடீரென்று எழுப்பிவிட (விழிப்படையச் செய்ய) அந்த அற்புதமான சிந்தனை வந்தது! அதாவது ஒருவர் தனது ஆன்மீகக் குறிக்கோளையே எண்ணி தொடர்ந்து அதிலேயே பற்றுக்கொண்டிருப்பதாக அவர் கற்பனை செய்து கொள்ள வேண்டும். மேலும் வாழ்க்கையின் ஆன்மீக நோக்கம் பற்றி அவர் கவனம் செலுத்தாமலிருப்பது பற்றி அவர் அறியும் போதெல்லாம், மீண்டும் அதே வழியில் எண்ணம் செலுத்த அவர் முக்கியத்துவம் தரவேண்டும். அப்போது இந்த எளிய பயிற்சியின் அதிசயத்தை அவர் கவனித்து அறியலாம். இதன் மூலமாக எல்லா நிலைகளும் நடைமுறையில் கடந்து செல்லப்படுகிறது. முடிவில் நாம் அனைவரும் எங்கே வந்து சேரவேண்டுமோ அங்கே மீதமுள்ளது எதுவோ அதுவாக நிலைத்திருப்போம். அதன்பிறகு மனித வாழ்க்கையின் இறுதியான, (உச்சநிலையாகிய) லட்சியத்துக்குள் ஓடிச்சென்று புகுந்து அதனுடைய அதிசயத்தைக் காண்போம். அடுத்து இது இன்னும் அதிகமாகிறது. இது அந்த நிலைக்கு வந்து சேர்ந்திருப்பவர், மேலும் என்ன கேள்வி கேட்கச் செய்வதற்காகவே சொல்லப்பட்டது. அம்மாதிரி அடைந்த ஒருவர் பரம்பொருளின், சத்தியநிலையின் நேரடிக் காட்சியைக் காணும் அதிர்ஷ்டம் பெறலாம். இதன் முழு தத்துவம் (கொள்கைரீதியான விளக்கம்) என்னவெனில், தேவைப்பட்டால் அதை விரும்பும் மக்களுக்கு நீயே அதை விவரிக்கவேண்டும் என்பதேயாகும்.''

### 22-12-1946

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''நீ ஊரில் இல்லாத சமயத்தில், உனது சகாக்களில் யாராவது இங்கே வந்து எனக்காக நீ உன் அறையில் அர்ப்பணித்து வைத்திருக்கும் படுக்கையின்முன் உட்கார்ந்து என் அருளை வேண்டினால் நான் உடனடியாக அங்கே இருப்பேன். அந்த சகோதரர் அல்லது சகோதரி தான்விரும்பும் வரையில் அங்கே உட்கார்ந்து இருக்கலாம். அளவுக்கு அதிகமான பிராணாஹூதி அல்லது அருள் பாய்ந்து கொண்டிருக்கிறது என்றால், நானே அங்கிருந்து சென்றுவிடுவேன்.''

### 30-12-1946

**சுவாமி விவேகானந்தா:**

''உனக்குச் சொந்தமான நிலங்கள் உடைய கிராமங்களுக்கு நீ சென்றிருந்தபோது சில விஷயங்களைக் கவனித்து நான் திகைப்படைந்து போனேன்.''

''நமது பிரபு உண்மையாகவே ஆற்றங்கரையைச் சுற்றி நடந்து கொண்டிருந்தார். அவர் எப்போதும் உனது பாதுகாப்பு பற்றியே அக்கறையுடன் இருந்தார். உன் வழியை எளிதாக்குவதற்காக, கிராமத்தின் அருகிலுள்ள பகுதிகளில் சமுதாயத்திலிருந்து விரும்பத்தகாத சில மனிதர்களை அவர் வெளியேற்றியிருந்தார். இளைஞர்களே! இதோ நீங்கள் பின்பற்றி நடப்பதற்கு தீவிரமான அன்பும் பக்தியும் உடைய ராம் சந்த்தர் இங்கே உதாரணமாக இருக்கிறார். இது மிக அரிய விஷயம் என்பது உண்மைதான். ஆனால் அதனால் ஒருவர் இந்த நிலையை ஒருவர் சென்றடைய முடியாது என்று அர்த்தமில்லை. நீங்கள் அனைவரும் பின்பற்றுவதற்காக நான் எத்தனையோ விஷயங்களைச் சொல்லியிருக்கிறேன். 'அன்பு அதன் பங்கைச் செய்கிறது'. அதுதான் இதன் சாரமும் மொத்தக் கருத்தும் ஆகும்.

### 2-1-1947

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இன்று இரவு 9 மணிக்கு H3 - க்கு உடல்சார்ந்த மண்டலத்தின் மீது (சுக்ரா) முழு கட்டுப்பாட்டுத்திறன் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர் இப்போது கடவுளுக்கு நெருங்கிய பகுதியில் (வலயதா / Valayata) இருக்கிறார். அவருக்கென கடமை நியமிக்கப்பட்டுள்ளது. R2 - அவரைக் கவனித்துக் கொண்டிருப்பார். இதுவரையில் கண்ணுக்குத் தெரியாத மகானாகிய மதுராவின் பொறுப்பாளரால் பார்த்துக்கொள்ளப்பட்ட ஷாஜஹான்பூர் சுற்றுவட்டம் H3 - க்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அவர் தனது நம்பிக்கை குலையாமல் தனது வேலையைப் பொறுப்போடு கவனிக்க வேண்டும். அதற்கு உரிய காலத்தில், அதற்குப் பிறகு அவர் செய்ய வேண்டிய முதல் கடமை அவருக்கு குறிப்பிட்டுச் சொல்லப்படும். மதுராவின் பொறுப்பாளராக இருக்கும் கண்ணுக்குத் தெரியாத மகானிடம், இப்போதிருந்து அவர் மதுராவை மட்டும் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று இப்போதே தெரிவிக்கவும்.'' *(இரவு மணி 9.20க்கு மதுராவின் பொறுப்பாளருக்கு ஷாஜஹான்பூர் அவரது பொறுப்பிலிருந்து*

*நீக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. இவையனைத்தும் R2 - இன் முன்னிலையில் செய்யப்பட்டன. அவருடைய கையெழுத்தில் இந்தக் குறிப்புக்கள் எழுதி வைக்கப்பட்டன.)*

3–1–1947

**வணக்கத்திற்குரிய பகவான் கிருஷ்ணர்:**

''கயாவின் வேலை மிக முக்கியமானது. பனாரஸ் மற்றும் கயாவின் வேலையை ஒரே சமயத்தில் ஒன்றாகவோ அடுத்தடுத்ததாகவோ எடுத்துக் கொள்ளவும். நீ விரும்பினால் பனாரஸ் (காசி நகரத்தின்) வேலையை முதலில் செய்து முடித்துவிட்டு, அதன் பிறகு கயாவுக்குச் செல்லவும். அது உன் விருப்பம். கயாவுக்கு அதிக நேரம் தேவைப்படும் காசி நகரத்தில் சரியான விகிதத்தில் (முறைப்படி) செய்யப்பட்டால் மூன்று நாட்கள் தொடர்ந்து வேலை செய்யவேண்டியிருக்கும். இல்லையானால் மேலும் ஒன்றிரண்டு நாட்கள் தேவைப்படும்.''

13–1–1947

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இன்று இரவு மணி 7.45க்கு சந்திர மண்டலத்துக்குச் சொந்தமான ஒருவர், நீண்டகாலமாக இதற்காகக் காத்திருந்தார். மேலேயிருந்து வந்த உத்தரவின்படி ராம் சந்த்தரால் என் பெயரால் தீட்சை அளிக்கப்பட்டார். அதற்கான தேவை வரும்போது, நானும் அதை சரி என்று கருதும்போது, அதற்குத் தகுதி உடையவர்களும் தீட்சை அளிக்கப்படுவார்கள். இந்த மனிதர் இங்கே இருந்து குழு தியானங்களில் கலந்து கொள்வார். அவருக்கு தீட்சை அளிக்கும்போது அவர் எடுத்துக்கொண்ட உறுதிமொழி என்னவோ, அதன்படி அவருக்கான பயிற்சிமுறை இருக்கும்.''

14–1–1947 (காலை மணி 9.40)

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''நடக்கப்போகிற நிகழ்ச்சிகள் சம்பந்தமாக ஏதாவது செய்தி வருவதற்கு முன்பு அவை வெளிப்படப்போகும் விளிம்பு நிலையில், அந்தச் செய்தி சம்பந்தமான மண்டலத்தில் சுற்றி வளைக்கும் இயக்கங்கள் (அதிர்வுகள்) கிளம்ப ஆரம்பிக்கின்றன. இந்த சுற்றி வளைத்த அதிர்வுகள் தான் மக்கள் தொல்லைகள் (பாதகமான சம்பவங்கள்) என்று நினைக்கும் விஷயங்களாகும். நான் இரவு முழுவதும் ஒளியுலகில் இருந்தேன்; இன்னும் அங்கேதான் இருக்கிறேன். இந்த உலகம் விசித்திரமான ஒரு இடைநிலைக்கு

வந்துக்கொண்டிருக்கிறது. சிக்கலான முடிச்சுகள் தோன்ற ஆரம்பித்துள்ளன. ஏதோ ஒரு ரகசியமான (சிலருக்கு மட்டுமே தெரிந்த) முடிச்சு தளர்ந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. மேற்கத்திய நாகரிகம் அதன் சொந்த இடத்திலிருந்து வெளியேறத் தயாராக இருப்பதுபோல் தோன்றுகிறது.''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''உலகம் தனது முகத்தைத் திருப்பிக்கொண்டிருக்கிறது. (முழு மாற்றம் அடைந்திருக்கிறது) அழிவுக்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. உன் சங்கல்பம் இப்போது பயனளிப்பதாக இருக்கிறது. (தனது விளைவை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளது). இப்போது நிலவரம் வேறு திசை நோக்கியதாக இருக்கிறது. இப்போது இயற்கை பல மனிதர்களை இவ்வுலகை விட்டு வெளியேற்ற விரும்புகிறது. அறுவை சிகிச்சைக்கான ஆழமான வெட்டுக்கள் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (அழிவுக்கான தீவிர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன) ஏராளமான அழிவு நிகழ்ந்த பிறகே நன்மைகள் தோன்றும். என்னுடைய சக்ராயுதம் என் ஆயுட்காலம் முழுவதும் செயல்திறனுடன் தயாராக இருந்தது. முடிவில் சூழ்நிலையையும் அந்த சக்ராயுதத்தையும் சுத்தமாக்கிய பிறகு நான் உலகைவிட்டுச் சென்றேன். இனி எனக்கு அந்த ஆயுதத்தினால் எந்த உபயோகமும் இல்லை. அதை நீ பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று முதல் அது உனது கட்டளையின் கீழ் வேலை செய்யும். இது உன்னுடனேயே இருக்கும்.

**வணக்கத்திற்குரிய ராதை அம்மையார் தனது அழிவுண்டாக்கும் காலரூபத்தை எனக்குக் காண்பித்து கூறியது:**

''சகோதரா, எனது இந்த ரூபத்தை நீங்கள் பார்த்தீர்கள். இப்போது அதற்கான உத்தரவு இதுதான்: எனக்கும் கூட இந்தக் கடமை அளிக்கப்பட்டுள்ளது.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இந்தச் சமயத்தில் நான் சொல்லும் குறிப்பு பல விஷயங்களைப் பற்றி உனக்கு முன்பே தெரியவைப்பதற்காகவே ஆகும். உண்மையைச் சொன்னால் உனக்கு ஓய்வு நேரமே இல்லை. வேலைகள் தொடர்ச்சியாக வந்து கொண்டே இருக்கும். உன் தீர்மானத்தின்படி மற்றவர்களுக்கு அவர்களுக்கு ஏற்றதான கடமைகளை நீ கொடுக்கலாம். இவை யாவும் உனக்குக் கொடுக்கப்படும் குறிப்புகளாகும்.''

**சுவாமி விவேகானந்தா:**

''இந்த முறை உனக்கு பயங்கரமான சக்தி அளிக்கப்பட்டிருக்கிறது. எப்போதும் அதை கடவுளின் பணிக்கே – தெய்வீக நோக்கத்திற்கே பயன்படுத்து. இந்த சக்தியை ஏதாவது சாதாரண வேலைக்கு அல்லது உலகியல் நோக்கத்திற்குப் பயன்படுத்தும்படி மேலேயிருந்து உறுதியான உத்தரவுகள் வந்தாலன்றி அப்படி செய்யக்கூடாது. உன்னை இந்த வேலைக்குத் தகுதியாக்குவதற்கு காலம் (போதுமான நேரம்) தேவைப்பட்டது. வணக்கத்திற்குரிய ராதை அம்மையார் அவர்களும் அடுத்து வரும் வேலைக்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்.''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''வணக்கத்திற்குரிய உன் மாஸ்டரின் உருவமாக மக்கள் உன்னைப் பார்த்திருக்கும் சாத்தியம் உண்டு. ஆனால் என் உருவத்தில் உன்னைப் பார்த்தவர் யாருமில்லை. யாராவது உன்னை அந்த மாதிரி என் ரூபமாக பார்க்க முடிந்தால் அவர் என்னிடமிருந்து வரும் அதே நன்மையைப் பெறுவார். ஆயினும் தனது தலையையும், கால்களையும், தனது ஓட்டுக்குள் இருந்துக் கொள்கிற ஆமையைப்போல நீ உன்னை மாற்றிக்கொண்டிருக்கிறாய்.''

**சுவாமி விவேகானந்தா:**

''சிறிது காலத்துக்கு முன்பு குறிப்பிட்டதை நான் மீண்டும் இப்போது சொல்கிறேன். மற்றவர்களுடைய எலும்புகளின் மற்றும் சாம்பலின் மீது ஆன்மீகமாகிய கோவிலை நீ கட்டுவாய். (சிறிது இடைவெளி) சில சமயங்களில் நீ சரியான காரணங்களுக்காக கடுங்கோபத்தில் இருக்கும் கடவுளின் சக்தி வேலை செய்ய ஆரம்பிக்கிறது. அப்போது உனது குரு உன்னை அமைதிப்படுத்துவதற்காக உன் நரம்புகளைத் தளர்த்த வேண்டியதாகிறது. உன் குடும்பத்தில் அல்லது வேறு எங்காவது ஏதாவது நீ விரும்பாத நிகழ்ச்சியை நீ காணும் போது கோபம் கொள்வதற்குப் பதிலாக அந்தச் சூழ்நிலையை சுத்திகரிக்க வேண்டும். (ராம் சந்த்தரின் ஏதோ ஒரு பணிவான கருத்தைக் கேட்ட பின்) உன் குடும்பத்தின் கட்டுப்படுத்தும் பொறுப்பை நான் என் கைகளில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. தேவைப்படுமானால் அதில் ஒரு பகுதியை நான் அழிப்பேன். பயப்படவேண்டாம். அதன் ஒவ்வொரு படியிலும் உன்னைக் கேட்டு உன்னோடு கலந்து ஆலோசனை செய்வேன். M1, R2 ஆகிய நீங்கள் மற்றும் சிலரும் அவரை அமைதியான நிலையில் வைத்திருக்க முயற்சி

செய்யவேண்டும். (ராம் சந்த்தர்) எந்தச் சமயத்திலும் சமநிலையை இழக்கக்கூடாது. இளைஞர்களே, இங்கே பாருங்கள். இயற்கை ஏதோ ஒரு வடிவத்தில் அவரிடம் நன்கு சமநிலை பெற்றிருக்கிறது. ஏனென்றால் நம் இதயங்கள் உட்பட அவர் எங்கும் எல்லாவற்றிலும் இருக்கிறார். அவருடைய ஆயுட்காலத்திலேயே லட்சியத்தை அடைவதற்கு நீங்கள் அனைவரும் முயற்சி செய்துகொண்டே இருங்கள். குறைந்தபட்சம் அடுத்து ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு இந்தமாதிரி மாஸ்டர்கள் வரமாட்டார்கள். தன்னுடைய வேலை செய்துமுடிக்கப்படுவதற்காக அவர் யாரையாவது தயார் செய்வார் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் அது வேறு விஷயம். அது கடவுள் தன்மையுடையது. பிரதிநிதித்துவம்பற்றி அதற்கு அக்கறையில்லை. அவர் வணக்கத்திற்குரிய தனது மாஸ்டருக்கு முன்னால் பிரதிநிதியாக இருக்கலாம். இவ்வளவு விரைவில் அதை அறிய முடியாது. தன்னுடைய விருப்பம் மற்றும் தேவைக்கேற்ப, இயற்கை இந்த வேலையைப் பிரித்துக் கொடுக்கலாம்.''

### அதேநாள் (14-1-1947) நேரம் இரவு 7.20 மணி

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''ராம் சந்த்தரின் இந்த அழிவுகரமான ஆயுதம் (சக்ராயுதம்) வேலை செய்து கொண்டிருக்கும்போது பூமியில் நில அதிர்ச்சி எதுவும் ஏற்படாமல் M1 மற்றும் R2 - ஆகிய இருவரும் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த வேலையை அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.''

### இலங்கையின் முனிவர்:

''இந்த நிலைமை முழுவதிலும் ஒரு கண் வைத்துக் கொள்ளும்படியும், கவனித்துக்கொள்ளுமாறும் எனக்கு உத்தரவுகள் வந்துள்ளன.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''அவ்வப்போது தேவைக்குத் தக்கவாறு வேலை சம்பந்தமான குறிப்பாணைகள் உனக்கு வந்து கொண்டிருக்கும். M1 மற்றும் R2 ஆகிய இருவரும் இன்று முதல் தங்கள் வேலையில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். அவர்களுடைய கடமை ஏற்கெனவே குறிப்பிட்டபடி தொடர்ந்து இதுவாகவே இருக்கும். இதுபற்றி மீண்டும் மீண்டும் விசாரித்து அறிய வேண்டியதில்லை. அன்புள்ள M1, இந்த வேலையில் உனக்கு கவனக்குறைவு வந்திருக்கிறது. இந்தவிதமான மனப்பான்மை இனிமேல் இருக்கக்கூடாது. நீ செய்யும் வேலைகளின் உடன் விளைவுகளுக்கு நீ

பொறுப்பாளியல்ல; எனவே, உனக்கு நியமித்தபடி நீ வேலைகளைச் செய்து கொண்டு இரு.''

16-1-1947

**சுவாமி விவேகானந்தா:**

''இளைஞர்களே! முடிந்த அளவுக்கு சூட்சுமமான நிலையில், லேசான உள்ளத்துடன் இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். எண்ணங்களின் கனம் உங்களுடையதாக இருக்கவேண்டியதில்லை. இதை காலப்போக்கில் நீங்கள் உணர்வீர்கள். அதற்கு முன்பு, நீங்களே செந்த செயல்களின் பலன்கள் உள்ளன. சூழ்நிலைகளும் தங்கள் சொந்த விளைவை பல்வேறு சுவைகளைத் தேடும் இதயத்தின் மீது ஏற்படுத்துகின்றன. காலம் போய்க் கொண்டிருக்கிறது. நான் இந்த வாக்கியத்தைத் தினந்தோறும் சொல்கிறேன். நீங்கள் குறிப்பிட்ட அளவுக்கு மேலே வருவதில்லை. நீங்கள் எல்லாம் என்ன பெற்றுக்கொண்டிருக்கிறீர்களோ, அது ராம் சந்த்தரின் கருணையின் பலன்தான். நீங்கள் ஆன்மீகத்தின் அந்த உயர்ந்தநிலைக்கு உங்களைத் தகுதியாக்கிக் கொள்ளாமலிருக்கிறீர்கள். இதையெல்லாம் நான் உங்கள் சொந்த நன்மைக்காகவே சொல்கிறேன். யாருக்குத் தெரியும்? இயற்கை அவரை எந்த நேரமும் அழைக்கலாம். அவருடைய உடலின் கட்டுப்பாடுகளின் காரணமாக ஒருவிதத்தில் அவருடைய வேலையில் அவர் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறார். உடலின் நலக்குறைவு மிகவும் பாதிக்கக்கூடியது. (சிறிது இடைவெளி) இதே நிலையை S……..என்ற இடத்திலும் பார்க்கிறேன். அவர் அவருடைய (மற்றும் உன்னுடைய) தகுதிக்கு ஏற்ற மாதிரி காரியங்களைச் செய்வதிலும் சுறுசுறுப்பாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.''

18-1-1947

**சுவாமி விவேகானந்தா:**

''ரஷ்யாவை இப்போதைய நிலையில் பார்ப்பதற்கு நான் விரும்பவில்லை. எல்லாத் துன்பங்களுக்கும் அதுதான் மூல காரணமாக இருக்கிறது.''

19-1-1947

**வணக்கத்திற்குரிய யாக்ஞ வல்கிய மகரிஷி:**

''நீ என்னை ஒருமுறை மட்டுமே அழைத்தாய். இன்று நானாகவே இங்கு வந்திருக்கிறேன். இந்த உலகத்தின் நிலை மிகவும் சீர்கெட்ட (ஒரு

விசித்திரமான இடைநிலைக்கு) வந்திருக்கிறது. அறிகுறிகள் மிக மோசமாக இருக்கின்றன. நான் இப்போது போகிறேன்.''

## 26-1-1947 (பிற்பகல் 2.05 மணி)

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''சகஜமார்க்க பயிற்சி முறையில் ஒரு ப்ரிஃபெக்டாக (ஆன்மீக போதகராக) இன்று இப்போது (பிற்பகல் மணி 2.05க்கு) R2 - ன் மனைவி நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதை R2 - இடம் சொல்லவும். பயிற்சியளிப்பதற்கான தற்காலிக அனுமதியை நான் அவளுக்குக் கொடுத்திருக்கிறேன். இன்றுமுதல் பெண்களுக்கிடையே அவர் தன் ஆன்மீகப் பணியைச் செய்வார். அவர் தன் வேலையைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும். நாளை (அதாவது ஜனவரி 27, 1947) அவர் இங்கு வரும்போது, அவர் எங்கே உட்கார்ந்திருந்தாலும் அங்கே இருந்தபடியே, அங்கு வந்திருக்கும் பெண்கள் அனைவருக்கும் எல்லா நேரமும் பிராணாஹூதி அளித்துக் கொண்டே இருக்கவேண்டும். இந்த வசந்த பஞ்சமி நாள் மிகவும் புனிதமான நாள். நமது மிஷன் அதற்கு மிகவும் முக்கியத்துவம் தருகின்றது. அதனால்தான் R2 - ன் மனைவிக்கும் இந்த நாளை மற்றவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்குத் துவங்கும் நாளாகவும் நிர்ணயித்தேன். முழுமையான தைரியம் மற்றும் தன்னம்பிக்கையுடன் அவர் வேலை செய்ய ஆரம்பிக்கவேண்டும். அவள் கொடுக்கும் பயிற்சி பலனின்றிப் போகுமாறு நிகழ முடியாது.''

## 27-1-1947 (வசந்த பஞ்சமி. திங்கட்கிழமை இரவு மணி.11.00)

### சுவாமி விவேகானந்தா:

''நமது பிரபுவின் பிறந்த நாள் விழாவை முதல்முறையாகக் கொண்டாடுவதற்காக நமது மிஷன் உறுப்பினர்களை நாங்கள் பாராட்டுகிறோம்.''

### வணக்கத்திற்குரிய சைதன்ய மகாப்பிரபு:

''ஒரிஸ்ஸாவுக்கு நீங்கள் செல்வதை ஏன் தாமதப்படுத்துகிறீர்கள்? நீங்கள் அங்கே மிகவும் முக்கியமாகத் தேவைப்படுகிறீர்கள். உங்களுக்கு அங்கே வேலை அதிகம் இருக்கிறது.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''இந்தப் பயணத்துடன் கூடவே மற்ற இடங்களுக்குச் செல்வதையும் நீ சேர்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். காசிக்கும் கயாவுக்கும் கூட

நீ போக வேண்டியிருக்கும். கயாவில் செய்ய வேண்டிய வேலை மிக முக்கியமானது. தேவை இருப்பதாக நான் உணர்ந்தால், பூரிக்கும் உன்னை அனுப்புவேன். முன்பே என் குறிப்புக்களில் எழுதிவைத்திருக்கும் ஒரு பெரிய வேலையை நீ இன்னும் செய்ய ஆரம்பிக்கவில்லை. பரவாயில்லை; அதை ஞாபகப்படுத்துவதற்காக நான் மீண்டும் சொல்கிறேன். அது பழைமையான சரித்திரங்களை திருத்தி சரியாக்கும் வேலை சம்பந்தப்பட்டதாகும். அதற்கு ஏராளமான நேரம் தேவைப்படும். உனக்குப் பிறகு இந்த வேலையை சரியானபடி செய்யத் தகுந்தவர் யாரும் வருவார் என்று தோன்றவில்லை. மனு ஸ்மிருதியை சரியாகத் திருத்தி எழுத ஆரம்பித்தாய். சில செய்யுட்களைத் திருத்திய பிறகு அதை நிறுத்திவிட்டாய். அதைச் செய்து முடித்துவிடு. அதற்குப்பிறகு அடுத்த புத்தகத்தை எடுத்துக்கொள். அதையடுத்து மூன்றாவது புத்தகத்தை எடுத்துக்கொள்.''

**சுவாமி விவேகானந்தா:**

''இங்கே பார். இதுமட்டுமல்ல. வேதங்களில் இருந்து உண்மையான அசலான 'ரிக்'குகளைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்கு நீ விரிவுரை எழுத வேண்டுமென்று விரும்புகிறேன். நீ அதற்கு விளக்கம் எழுதினால் அதற்கு ஈடு இணை இருக்காது. உனக்கு மிகப் பெரிய வேலை காத்திருக்கிறது. இதற்கெல்லாம் உனக்கு நேரம் கிடைப்பதில்லை. உன்னுடைய உத்தியோகம் மிகப்பெரிய தடையாக இருக்கிறது. இம்மாதிரி வேலையில் உனக்கு உதவி செய்கிறவர் யாராவது இருக்கிறார்களா? தினமும் குறைந்தபட்சம் ஒருமணி நேரம் இந்த வேலையைக் கவனி. உனக்காக பேனாவும் காகிதங்களும் தயாராக வைத்துக்கொண்டு ஒருவர் உன்னுடன் இருக்கவேண்டுமென விரும்புகிறேன்.''

31-1-1947

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''காரண சரீரம் உருவாக்கப்பட்ட பிறகு அதற்குத் தகுந்தவாறு உயிர் தோற்றம் பெறும் வடிவம் (உடம்பு) உண்டாக்கப்படுகிறது. இப்படி அது ஒரு உடம்பை ஏற்றுக் கொண்டிருக்கும்போது அங்கே என்ன செயல்கள் நடந்தாலும் அவை காரண சரீரத்தில் ஒரு பதிவை விட்டுச் செல்கின்றன. அதற்கான நேரம் வரும்போது காரணசரீரம் உடலைவிட்டு நீங்குகிறது. அந்த உடம்பினால் அதில் என்னென்ன பதிவுகள் உண்டாக்கப்பட்டனவோ, அது அடுத்த பிறவிக்கு காரண சரீரமாக மாறுகிறது. இப்போது இந்தப் புதிய உடம்பினால் என்னென்ன செய்யப்படவேண்டியிருக்கிறதோ, அவை அந்த

முந்தைய பதிவுகளின்படியே அமைகின்றன. இப்படி இந்தவிதமான காரண சரீரத்தில் பதிவுகள் ஏற்படுத்தப்படுவது எவ்வளவு காலம் தொடர்கிறதோ, அதன்படியே பிறவிகள் அமைகின்றன. இந்தச் சங்கிலித் தொடர் அறுபடாமல் தொடர்ந்து போய்க்கொண்டே இருக்கிறது. இப்படி நாம் எத்தனை எத்தனை காரண சரீரங்களை உருவாக்கியிருக்கிறோம் என்பதை யார் அறிவார்? எங்கேயிருந்து இந்த சங்கிலித்தொடர் ஆரம்பித்ததோ அந்த ஒரு அம்சமே இதற்குஅடிப்படைக் காரணம்.''

### கேள்வி:

''உடலை விட்டு நீங்கிய பின் காரண சரீரம் எந்த இடத்தில் இருக்கும்? உடம்பில்லாத நிலையில் அதுஎங்கே வசிக்கிறது?''

### சுவாமி விவேகானந்தா கூறிய பதில் :

''இது இயற்கையின் சட்ட இலாகா சம்பந்தப்பட்ட விஷயம். இஸ்லாமிய நம்பிக்கைகளின்படி இங்கு தண்டனை அல்லது பரிசு அளிக்கப்படுகிறது. அது இங்கும், மேலே விண்ணுலகிலும் தொடர்பு உடைய ஒரு இடமாகும்.''

### கேள்வி:

''இந்தக் காரண சரீரத்தை சுத்தம் செய்யும் வழி என்ன?''

### பதில்:

''போகம் தான் (முன்வினைப் பயன்களை அனுபவித்துத் தீர்த்தல்).''

### கேள்வி:

'''ராஜயோகா' என்ற புத்தகத்தில் வணக்கத்திற்குரிய சுவாமிஜி (சுவாமி விவேகானந்தா) குறிப்பிட்டிருப்பது போல பதிவுகளை (வினைப்பயன்களை) பல்வேறு சூட்சும சரீரங்களை உருவாக்குவதன் மூலமாக விரைவில் அனுபவித்துத் தீர்க்க முடியும் என்றால், அதற்கான வழிமுறை என்ன? இப்படி அந்தப் பதிவுகளை அனுபவித்துத் தீர்த்த பிறகு, அந்த சூட்சும சரீரங்களை விட்டுவிட வேண்டுமா? அல்லது தக்க வைத்துக் கொள்ள வேண்டுமா?''

### பதில்:

''இங்கே பாருங்கள். இந்த வழிமுறைகள் பூரணமான யோகிகளுக்காக மட்டுமே உரியவை. அவர்கள் தங்கள் வாழ்க்கையின் செயல்களை முடித்த பிறகு மொத்மாக தங்கள் உடம்புகள் அனைத்திலிருந்தும் விடுபடுவதற்கு விரும்புகிறார்கள். அந்த வழிமுறை எளிமையானது அல்ல. அதற்கு

மிகப்பெரிய அளவு சக்தி தேவையாகிறது. ஒரு பூரணமான யோகியின் சங்கல்பத்தால் மட்டுமே அதை அடைய முடியும். அந்த வழிமுறை முற்றிலும் சரியானதே. சமர்த்த சத்குரு ஃபடேகர் ராம் சந்த்ரா இதைச் செய்திருக்கிறார். அதைப் பற்றி தெளிவாகச் சொல்கிறேன். அவர் அதை தனக்காக அன்றி மற்றவர்களுக்காகச் செய்தார். இந்த வழிமுறையை நான் எப்படித் தெரிந்து கொண்டேன். எனது தியானத்தில் அதீத உணர்வுறு நிலையில் இயற்கையின் காரியங்களைப் படித்தறியும் தன்மை ஆரம்பித்தது. இந்தத் தீர்வை நான் கண்டறிந்தேன். அதை விவரித்து எழுதினேன். இதில் இதற்கு மேலான ஒரு விஷயம் இருக்கிறது. அதை நாம் அனுசரித்தால் அதற்குப் பிறகு இந்த வழிமுறை பற்றி கவனிக்க வேண்டிய தேவையில்லை. அதையும் நான் தெரிவித்திருக்கிறேன். இதற்கு மேலும் கூட இன்னொரு விஷயம் இருக்கிறது. அது உன் குருவுக்கு மட்டுமே தெரியும்.''

**கேள்வி:**

''ஒரு ராஜயோகி எந்த நிலையில் இந்த வழியைப் பயன்படுத்தலாம்?''

**பதில்:**

''உன் குரு எந்த நிலையில் இருக்கிறாரோ அந்த நிலையில் தான். மேலே குறிப்பிட்ட கடைசி நிலை பற்றிய குறிப்பு இது.''

1-2-1947

**சுவாமி விவேகானந்தா:**

''ஒரு விஷயம் நீ கட்டாயம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். சங்கல்பத்தை ஒருமுறை பயன்படுத்தினால், அது விரும்பிய விளைவை உண்டாக்க முடியும். ஆனால் இதற்கு முன்பு என்ன செய்யப்பட்டிருக்கிறதோ, அதை மாற்றுவது மிகவும் சிரமம். இயற்கைக்கு எதிராகப் போவது, ஒரு மனிதர் விசேஷ திறமை உடையவராக ஆக்கப்பட்டிருந்தாலன்றி, ஒரு பாவமாகும்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''ஏதோ ஒரு மகாபுருஷர் விசேஷமாக உருவாக்கப்படும் வரை, இந்த விஷயம் அவரிடம் வளர்ச்சி அடைவதில்லை. அதாவது தேவைக்கேற்றபடி தனது சொந்த சங்கல்பத்தினால், தான் விரும்புகிற எதை வேண்டுமானாலும் செய்து அதை பழைய அதேநிலைக்கும் கொண்டு செல்லும் திறமை அவருக்கு உண்டாவதில்லை.''.

2-2-1947

**சுவாமி விவேகானந்தா:**

''லய அவஸ்தாவை (ஐக்கிய நிலையை) வளர்த்துக்கொள்வதற்கு M12 - க்கு சில குறிப்புக்களை நான் கொடுத்திருக்கிறேன். R8 - அதே வழியில் சென்று கொண்டிருப்பதால், இந்தக் குறிப்புக்கள் அவருக்கும் பயன்படும். விரைவில் இதன் ஒரு பிரதியை அவருக்கு அனுப்புவதற்கு நீ (ராம் சந்த்தர்) ஏற்பாடு செய்யலாம். கடவுளை மறைமுகமாக அதாவது தன் மாஸ்டரின் மூலமாகச் சென்றடைய விரும்புகிறவர்களுக்கு இந்தக் குறிப்புக்கள் முற்றிலும் அவசியமாக உள்ளன.''

4-2-1947

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''பைஸில் (Physis) என்ற நோயினால் பாதிக்கப்பட்ட, தனது எலும்புகளும் கூட முற்றிலும் வலுவிழந்த ஒருவருக்குக் கூட, அவர் அதை உணராதபடி, சிரமம் எதுவும் தெரியாதபடி, ஆன்மீக நிலைகளை கடக்கும்படி செய்யமுடியும் என்பது அவருக்குச் சொல்லப்பட்டிருக்கும் போது R2 - ஏன் பயப்படுகிறார்? அதை ஒருவர் சோதித்துப் பார்க்க விரும்பினால் சிரமமும் மன அழுத்தமும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் அப்படி சோதனை செய்யும்போது, அந்த உள்நிலை வெளியே மேல் பரப்புக்குக் கொண்டு வரப்படவேண்டிய தேவை ஏற்படுகிறது. இந்த விஷயங்களெல்லாம் சுலபமாக அல்லது விரைவாக அளிக்கப்பட முடியுமா? முடியாது. அது R2 - இன் அதிர்ஷ்டத்தினால் கிடைத்தது. அதை அடைவது பெரும்பாலும் அவருடைய இனிய சங்கல்பத்தைப் பொறுத்தது. அவர் விரும்பினால் அதைப் பெறுவதற்கு அவர் தயாராகலாம். R2 - ஐப் பற்றி சரியாக விசாரிக்கும்படி M1 - இடம் சொல்லவும். அதற்கு ஒரு அவசியம் இருக்கிறது. அது அவருடைய சங்கல்பத்தைச் சார்ந்திருக்கிறது. ஒரு விஷயத்துக்கு வாக்குறுதி தந்துவிட்டு, பிறகு அதைக் கொடுக்கத் தயங்குவதற்கு நான் A1 - அல்ல.''

6-2-1947

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''ஒரு சக்கரத்தின் மீது தன் கட்டுப்பாட்டை அடையப்பெறாமல், அதை ஒருவர் கடந்து செல்கிறார் என்று யார் சொன்னார்கள்? இந்த விஞ்ஞானம் கடினத்தன்மையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். அது பிரபஞ்சம்

உருவாகுவதற்கு முன்பு நிலவியிருந்த அந்த நிலை சம்பந்தமானதாகும். இது பிரபஞ்ச சிருஷ்டிக்கான காரணங்களை உள்ளடக்கியதாக அமைந்திருந்த சத்தியமான எண்ணமாக இருந்தது. கடினத்தன்மையின் (உலகியல் தன்மை அல்லது பொருள் சார்ந்த தன்மை) தோற்றத்துக்கும் அதுவே காரணம். தனது விளைவை ஏற்படுத்தத் தவற முடியாத சக்தி அது. வெவ்வேறு விதமான உடல்களை (உடலுறுப்பு வகைகளை) உருவாக்கிய எல்லா மூலகங்களும் அதில் இடம் பெற்றிருந்தன. இந்த மூலகங்களை ஐந்து வகையாக (மண், காற்று, நீர், நெருப்பு, ஆகாயம்) என்று வகுத்தால், அந்த ஒவ்வொன்றும் பிரபஞ்சத்தின் படைப்புக்குக் காரணமாக இருந்த ஒரு சக்தியை எடுத்துக்கொண்டன. அந்த ஆரம்பநிலையில் என்ன இருந்தது. அந்த ஒவ்வொரு பிரிவும் (ஐந்து ஆதி அம்சங்களின் ஒவ்வொரு பகுதியும்) அதற்குரிய விசேஷ சக்தியைப் பெற்றிருந்தன. அவை தமக்குரிய சொந்த விசேஷத் தன்மையைப் பெற்றிருந்தபோதிலும், அந்த ஒவ்வொரு ஆதி அம்சமும், ஐந்து சக்திகளையும் (பஞ்ச பூதங்கள்) தனக்குள் மறைத்து வைத்திருப்பவையாகவே இருந்தன. இதனால் ஒவ்வொரு பகுதியிலும் ஐந்து சக்திகளும் (பஞ்ச பூதங்களும்) சேர்ந்தே வேலை செய்கின்றன. அதற்குரியதான விசேஷமான சக்திமட்டும், அதில் மேலோங்கியிருந்தது. இந்தவிதமான ஒவ்வொரு சக்தியும் ஐந்து துணைப் பகுதிகளை உடையதாக இருந்தது. இவையனைத்தையும் ஒன்று சேர்த்தால் மொத்தம் இருபத்தைந்து ஆகிறது. இப்படி ஒன்று சேர்ந்த கலவை உடல்சார்ந்த ஜீவிதத்தின் சாராம்சமாக அமைந்து, அது ஒரு தனிமனிதனின் யோகமுறை சரீரத்தின் பிண்டம் அல்லது சுக்ரா (Sugra) எனப்படும் மையப்பகுதியில் இடம் பெறுகிறது. பிண்டம் அல்லது சுக்ரா (Sugra) என்ற பகுதியின்நிலை இதுவேயாகும். அதன் சூட்சுமமான சாராம்சம் பிரம்மாண்ட மண்டலம் வரையில் செல்கிறது. அதற்கும் மேலே அதனுடைய மேலும் சூட்சுமமான சாராம்சமாக பிரம்மாண்ட மண்டலத்திற்குச் செல்கிறது. இப்படியே அது மேலும் மேலும் செல்கிறது. ஆகவே இப்படி மேலும் சூட்சுமமாக, அதைவிட இன்னும் சூட்சுமமாகச் செல்லும் இதர சாரமான தன்மை கடைசியில் பரிபூரண சூட்சும அல்லது நுண்ணிய நிலையை அடைந்து சத்தியத்தில் (பரம்பொருளில்) தன்னை இழந்துவிடுகிறது. இப்போது சக்திகளைப் பற்றிய கேள்வி வருகிறது. ஒரு சக்கரத்தில் விளங்கும் சக்தி இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது சக்கரங்களிலும் கூட காணப்படும். அப்படியானல் இதில் வேறுபாடு எங்கிருக்கிறது? ஒரு சக்கரத்தின் நுண்ணிய தன்மை மற்றும் சூட்சுமத்தன்மை, அதற்கு முந்தைய சக்கரத்தின் நுண்ணிய மற்றும் சூட்சுமத் தன்மையை விட அதிகமாக இருக்கிறது.

யோக முறையின் உயர்ந்த பகுதிக்கு, அதற்கு முந்தைய பகுதியை முழுமையாகக் கடந்தவர்கள் மட்டுமே வந்து சேர்கிறார்கள். அல்லது யோகமுறையின் அடுத்த மேலான பகுதிக்கு விரும்பி ஏங்கியிருப்பவர்கள் மட்டுமே வருகிறார்கள்.

தூய்மையை தூய்மையுடன் உரசினால் தூய்மை மட்டுமே உண்டாகும். அதாவது எந்தச் சக்கரத்துக்கு அந்தத் தூய்மை உரித்தானதோ, அது அதனையடுத்த சக்கரத்தில் புகுந்தால் அதனுடைய சாராம்சம் மேலும் அதிகமாகும். இதனால் அங்கே மறைந்திருக்கும் சக்திகளை செயலில் ஈடுபடுத்தினால், அதற்கான பலன் நிச்சயம் உண்டாகும். ஒருபோதும் அது பயனின்றிப் போகாது. இயற்கை அந்த சக்திகளை பயன்படுத்தினால், அது விரும்பிய விளைவு ஏற்படும். சூட்சுமமான ஒன்று மிகப் பெரிய அளவு விரிவடைய முடியும். அப்படி விரிவாக்கத்தின் மூலமாக ஒருபுள்ளி இடத்தில் (வெட்டவெளியில்) தன் வடிவத்தைப் பெருக்கிக்கொள்கிறது. இந்தவிதமாக அதை எண்ணிப்பாருங்கள்; நீங்கள் இந்தப்புள்ளிக்கு (ஆன்மீக உயர்நிலைக்கு) வருகிறீர்கள்; உங்கள் தனித்தன்மையிலிருந்து (தனி மனித நிலையிலிருந்து) அந்த முழுமை நிலையிலிருந்து பாய்ந்து வெளியே சென்ற விஷயங்களின் அதேவடிவங்கள் இங்கேயும் பாய்ந்து செல்கிறதா? இல்லையா? என்று கவனியுங்கள். உண்மையில் இந்தச் சக்தி ஓட்டங்களில் ஒருவர் தன்னை உட்படுத்திக் கொள்ளவேண்டும். இதை சக்தி என்று சொல்ல முடியாதா? இதனுடைய மொத்தக் கருத்தும், சாரமும், ஒரு பிறவியிலேயே மீண்டும் மீண்டும் பிறந்து இறக்கும் சுழற்சியில் இருந்து தன் விடுதலையை ஒருவன் பெற்றுவிட வேண்டும் என்பதுதான்!”

13-2-1947

## ஸ்ரீ ஹனுமான் (ஸ்ரீ ராமபிரானின் உண்மையான பக்தரும், மிகச்சிறந்த வீரரும், சுக்ரீவனின் அமைச்சருமாகிய வானர தெய்வம்:

‘‘இவ்வுலகிலிருந்து சென்ற பிறகு இவ்வாறு வருவது இதுவே முதல் முறையாகும். மகாபாரத யுத்தம் நடந்தபோது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் சக்திதான் என்னை அழைத்து, அவருடைய சங்கல்பத்தின்படி என்னிடம் வேலை வாங்கியது. இதுவரையில் என்னை இப்படி வரவழைத்த சக்தியுடையவர் வேறு யாரும் பிறந்ததில்லை. என்னுடைய வேலை போரில் பங்கு கொண்டு சண்டை செய்வதுதான். நான் எப்போதும் ஸ்ரீ ராமனுடன் துணையாகச் சென்றேன். அதற்குப் பரிசாக எனக்கு என்ன கிடைத்தது?

தீவிர உற்சாகம் கொண்ட பக்தர்களால் எனக்கு ஒரு வால் கிடைத்தது! உண்மையில் நான் க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்த ஒரு இளவரசன். எனது வீரச் செயல்கள் புகழ்பெற்றவை. இவையனைத்தும் என் தாயாகிய அஞ்சனையால் கிடைத்த பெருமைகளாகும். அவள் ப்ரம்மசாரிணியாக (திருமணம் செய்து கொள்ளாமல் தனித்து வாழும் பெண்ணாக) இருந்தாள். பிறகு எல்லாவகையிலும் மிகச் சிறந்தவளாக என்னை உருவாக்கினாள். ஜாம்பவந்தா, நளன் ஆகியோர் முக்தியடைந்தார்கள். துரதிருஷ்டவசமாக அவர்களை மனிதனுக்கும் கீழான விலங்குகளாக – கரடியாகவும் – குரங்காகவும் சித்திரித்து விட்டார்கள்.''

**பகவான் ஹனுமானின் பெயரால் செய்யப்படும் தாயத்தூக்கள், மந்திர ஜபங்கள் இவை பற்றிய கேள்விகளுக்கு விடையாக அவர் கூறியது:**

''சக்தி அனைத்தும் வணக்கத்திற்குரிய உன் மாஸ்டரிடம் இருக்கிறது. மக்களுக்குத்தான் அதைக் காண்பதற்கு சக்தி இல்லை. நான் சொல்கிறேன். ஸ்ரீ ராமபிரானுக்குப் பிறகு, உன் குருவைப்போல தன் பணியை அவ்வளவு நன்றாகச் செய்தவர் யாருமில்லை. அதற்கு வேறு உதாரணம் இல்லை. நான் ஒருவிஷயம் சொல்கிறேன். துணிவுமிக்க மனிதனுக்கு மூளை கிடையாது. அவனது மண்டை ஓடு காலியாக இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் துணிவான மனிதன் தன் கடமையிலேயே ஐக்கியமாகிவிடுகிறான்; அவன் கையில் உள்ள வேலையைத் தவிர வேறு எந்த எண்ணமும் அவன் மனதில் வைத்திருப்பதில்லை. இதனால் அவனுடைய ஒருமுனைப்பட்ட மனக் குவிப்பினால் அவனது முக்தி உறுதியாக்கப்படுகிறது. ஆயினும் சகோதரரே, இப்போது நீங்கள் எனக்கு அளித்ததைப் பற்றி நான் என்ன சொல்வேன்; இது வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டரின் உத்தரவு, நீங்கள் அதற்கு இசைந்து செயல்பட்டீர்கள்.''

**சுவாமி விவேகானந்தா:**

''இங்கே பார், இன்றைய தினத்திலிருந்து, உனக்கு பாதுகாப்பு அவசியம் தேவைப்படுகிற சமயங்களில் உன்னைப் பாதுகாக்கும் கடமையை அவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.''

**பகவான் ஸ்ரீ ஹனுமான்:**

''வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டரின் உத்தரவுப்படி எனக்கு நீங்கள் அளித்த இந்தவிதமான பிராணாஹூதியை நான் பெற்றுக்கொண்டே

இருக்க விரும்புகிறேன். பகவான் ஸ்ரீ ராமபிரான் இப்போது ஜீவிதத்தில் இல்லை.''

**சுவாமி விவேகானந்தா:**

''பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இப்போது ஆட்சியில் இருக்கிறார்.''

**பகவான் ஸ்ரீ ஹனுமான்:**

''பிராணாஹூதி அளிப்பதற்கு நேரம் நிர்ணயித்துக் கொடுங்கள். அச்சமயத்தில் நான் வருவேன்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''ஸ்ரீ ஹனுமான் கூர்மையான கர்வத்துடன் இங்கு வந்தார். தனது பிரபுவாகிய ஸ்ரீராமனுக்கு சரணடைந்திருப்பதில் முன்னுதாரணம் இல்லாத தீரத்துடன் அதேநிலையில் ஆயுள் முழுவதும் ஐக்கியமடைந்திருந்ததால் அது அவரிடம் உண்டாயிற்று. அவர் பௌதீக உடலை விட்டுச்சென்ற பிறகும் இது அவரோடு இருந்தது. அந்தத் தன்மையை இப்போதுதான் ஆவியாகிப்போக (நீங்கிச் செல்ல) வைத்தேன். அதனால், அவரிடம் இருந்த கூர்மையான கர்வத்தையும், வீரத்தின் துணிவையும் அவர் இழந்து விடுதலை பெற்றார். இப்போது அவர் இளகிய, மென்மையான நிலையோடு திரும்பிச் சென்றார். உணர்வுபூர்வமான மோகமும் அவரிடம் அதிகரித்திருந்தது. மக்கள் அவரிடமிருந்து நியாயமற்ற பலன்களைப் பெற்றுவந்தார்கள். கொலையைச் செய்யும்போது கூட அவருடைய உதவியை மக்கள் கேட்பது வழக்கமாகியிருந்தது.''

**ஸ்ரீ ஹனுமான் மேலும் கூறிய விவரங்கள்:**

''எனக்கு வால் இல்லை. அதனால் அதில் எதுவும் சுற்றப்படவும் இல்லை. என் சங்கல்ப சக்தி மிக வலிமையாக இருந்தது. ஒரே அடியில் மிகப்பெரிய கட்டிடங்களையும் உடைத்து நொறுக்க முடிந்தது. கடலில் இருந்து வாயுவை எடுத்து நான் இலங்கையை எரித்தேன். ராவணனிடம் அதற்கு எதிர் சக்தி இல்லை. இலங்கையைச் சுற்றிலும் கடலில் இந்த வாயு ஏராளமாக இருக்கிறது. என் சங்கல்ப சக்தியின் மூலமாக அதைப் பிரித்து எடுத்து இலங்கையின் மீது பிரயோகம் செய்தேன். அச்சமயத்தில் எனது பிரபு ஸ்ரீ ராமனைத் தவிர உடல் வலிமையில் வேறு யாரும் எனக்கு ஈடாக இல்லை. நான் விரும்பியிருந்தால் ஒரே முயற்சியில் இலங்கையைத் தலைகீழாகப் புரட்டியிருப்பேன். ஆனால் அது அன்னை சீதாவுக்கு துன்பத்தை உண்டாக்கியிருக்கும். மேலும் அவசியமாகச் செய்யப்பட

வேண்டிய பல காரியங்கள் செய்து முடிக்கப்படாமல் போயிருக்கும். அதனால் இலங்கையைத் தலைகீழாகப் புரட்டி நான் கடலில் தள்ளவில்லை. இலங்கை தங்கத்தாலேயே செய்யப்பட்டது என்று சொல்வது எவ்வளவு முட்டாள்தனம்! அது முற்றிலும் அபத்தமானது. அதன் உண்மையான அர்த்தம் அதைவிடச் சிறந்த கட்டிடங்களை வேறு எங்கும் காணமுடியாது என்பதுதான். இலங்கையின் அளவை கற்பனை செய்து பாருங்கள். உலகம் முழுவதிலும் கிடைக்கக்கூடிய தங்கத்தையெல்லாம் ஒன்று சேர்த்தாலும் இலங்கையில் உள்ள கட்டிடங்கள் அனைத்தையும் தங்கத்தால் கட்டமுடியாது. ஒரு சில மாடங்களை வேண்டுமானால் கட்டலாம். அங்கு அரசகுலத்து மாளிகைகளில் அலங்கரிப்பதற்கு தங்கமும் கூட பயன்படுத்தப்பட்டிருந்தது. அதில் சந்தேகமில்லை. இந்த வகையில் அந்த மாளிகைகளில் தங்கம் ஏராளமாக இருந்தது உண்மை.''

*(இங்கு குறிப்பிட்டிருப்பது ராமாய காவியத்தில் ஒரு சம்பவமாகும். ஸ்ரீராமனின் சகோதரன் லட்சுமணனால் ராவணனின் தங்கை சூர்ப்பனகைக்கு நேர்ந்த அவமானத்திற்குப் பழி வாங்குவதற்காக ராவணன் ஸ்ரீ ராமனின் மனைவி சீதையை சூழ்ச்சியால் தூக்கிச் சென்று அசோகவனம் என்ற இடத்தில் சிறைவைத்திருந்தான். அவனைத் தேடும் முயற்சியில் ஸ்ரீராமன் சுக்ரீவனின் நட்பைப்பெற்று அவனது அமைச்சனும், வானர வீரனுமாகிய ஹனுமானையும், வேறு சிலரையும் சீதையைத் தேடிக் கண்டுபிடிக்க அனுப்பினார். சீதையை ஹனுமான் இலங்கையில் கண்டுபிடித்து, ஸ்ரீராமன் பற்றிய செய்திகளைச் சொல்லி, அவள் அனுமதி பெற்று ராவணனின் படைவீரர்களுடன் சண்டையிட்டு, பிறகு இலங்கை நகருக்கு தீமூட்டி எரியச்செய்தார். பிறகு ஸ்ரீராமன் படைகளுடன் கடல் தாண்டி இலங்கை சென்று ராவணனுடன் போர் செய்து அவனைக் கொன்றபின் ஆன்மீகவாதியான அவனுடைய சகோதரன் விபீஷணனை இலங்கையின் மன்னராக்கி முடிசூட்டினார்.)*

## 14-2-1947

**சுவாமி விவேகானந்தா:**

''ஸ்ரீ ஹனுமான் இப்போது உன்னிடம் ஆன்மீகப் பயிற்சி பெறுவதற்கு வருகிறார்.''

**ஸ்ரீ ஹனுமான்:**

''நல்ல மக்கள் பிறக்கும் போதுதான் இந்தியாவின் முன்னேற்றம் உறுதியாகும். குழந்தைகளிடத்தில் தாயின் பாதிப்பு அதிகமாக இருக்கிறது;

அவளிடமிருந்து தன்னையறியாமலே அக்குழந்தை நிறைய விஷயங்களை கற்றுக்கொள்கிறது.''

## M1 - எழுதிய குறிப்பு:

''மதிப்புக்குரிய சகோதரர் ராம் சந்த்தர், R2, M1, M8, R9 மற்றும் நானும் சேர்ந்து உரையாடிக் கொண்டிருந்தபோது R9, சங்கரன், சிவன், மஹாதேவன், கைலாசபதி என்ற பெயர்களில் அழைக்கப்படும் கடவுளைப் பற்றியும், சிவனை லிங்க வடிவமாகவும், அதைத் தாங்கும் பீடமாக அவர் மனைவி பார்வதியையும் கூறுவதைப் பற்றியும் ராம் சந்த்தரிடம் கேட்டார். எனவே, ராம் சந்த்தர் தனது சமர்த்தகுரு வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களின் அனுமதியைப் பெற்ற பின் சிவபெருமானையே வந்து இது பற்றிய உண்மையை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். ஆகவே யோகிகளின் தலைவராகிய (யோகேஸ்வரனாகிய) சிவன் அதைப் பற்றிக் கூறினார்: 'சக்தி எங்கே இருக்கிறதோ அங்கே நான் இருக்கிறேன். ஐக்கியம் அடையச் செய்யும் சக்தி (க்ஷய சக்தி எனப்படும் அழிக்கும் சக்தி) என்று சொல்லப்படுவது ஒருபோதும் ஒரு உருவம் பெறமுடியாது; ஆயினும் அதனுடன் தொடர்பை உண்டாக்கிக் கொள்ளமுடியும். யோக சக்தியின் மூலமாக காயகல்பம் எனப்படும் உடம்பைப் புதுப்பித்துக் கொள்ளும் காரியத்தை நான் எத்தனையோ முறை செய்து காலம் காலமாக வாழ்ந்து வருகிறேன். என் யோக சக்தியினால் நான் விரும்பியபோதெல்லாம் என்னால் இளமையாக மாறமுடியும். கைலாசம் என்னுடைய இருப்பிடமும், நான் வேலைசெய்யும் இடமும் ஆகும். மிகப்பெரிய முனிவர்கள் என்னிடமிருந்து சக்தி பெற்று தங்கள் ஆன்மீக முடிச்சுக்களைத் தளர்த்திக் கொண்டார்கள். யோக சக்தியினால் நான் மிகப்பெரும் வல்லமைகள் பெற்றேன். நான் ராவணனுக்கு ஆசிரியராக, வழிகாட்டியாக இருந்தேன். சக்திகளை அடைந்ததன் மூலமாக யோகமுறை விஞ்ஞானத்திலிருந்து நியாயமற்ற நன்மைகளை அவன் அடைந்தான். அவனுடைய அறிவுத்திறன் முறைகெட்டு ஒழுக்கம் தவறிப்போய்விட்டது. பஞ்சாக்னி வித்யா என்று சொல்லப்படும், ஐந்துவித நெருப்புகள் பற்றிய ஞானத்தின் மூலமாக சில அதிசய சக்திகளைப் பெற்றிருந்தான். அதற்கு மேம்பட்ட நிலைகளில் அவன் வல்லமை பெறவில்லை. ஆனால் அவன் என்ன செய்தாலும் சரி, அதில் பூரணமாக நிபுணத்துவம் அடைந்தான். ஸ்ரீராம அவதாரத்திற்கு முன்பே காலம் காலமாக நான் வாழ்ந்திருந்தேன். பகவான் ஸ்ரீ கிருஷ்ணனின் காலத்திலும் சிறிதுகாலம் இருந்தேன். ஆயினும் என்னை வழிபடுவது தொடர்ந்து இருக்கிறது. பார்வதியை என் மனைவியாக கூறப்பட்டிருப்பது

தவறு. நான் சிறுவயது முதலே பிரம்மச்சாரியாக இருந்தேன். நான் ஒருபோதும் திருமணம் செய்து கொள்ளவில்லை. மக்களின் மனங்கள் சீர்கேடு அடைந்துவிட்டது. எனக்கு ஒரு விந்தையான வடிவம் கொடுத்து என்னை எப்படி வழிபடுகிறார்கள் பாருங்கள். என்னை இந்த விதமாக வழிபடுவது மூடர்களாலும், அயோக்கியர்களாலும் ஆரம்பிக்கப்பட்டது. நான் எல்லா உருவத்திலும் தோன்றமுடியும். அதற்கு முறையான பற்றும், தொடர்பும்தான் தேவை. வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் இதற்கு உதாரணமாக இருக்கிறார். ஹடயோகம் சம்பந்தமாக எந்தவிதமான பிரச்னையாக இருந்தாலும், இப்போதும் கூட என்னால் அதைத் தீர்க்கமுடியும்''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''ஒரு வருடகாலமாக நீ மதுராவுக்குச் செல்லவில்லை. வருடத்திற்கு ஒருமுறை கட்டாயம் நீ அங்கு சென்று வரவேண்டும் என்று உனக்கு உத்தரவிடுகிறேன். 1947 ஏப்ரல் மாத முடிவுக்குள் ஒருமுறை அவசியம் நீ அங்கு சென்றுவரவேண்டும்.''

16-2-1947

**பிப்ரவரி 14ம் தேதி சிவபெருமான் கூறிய கருத்துக்கள் பற்றி வணக்கத்திற்குரிய அன்னை பார்வதியின் கருத்து:**

''நான் ஒரு ராஜகுமாரியாக இருந்தேன். யோகேஸ்வரனாகிய சிவனுக்கும் (சங்கரன், சிவன்) எனக்கும் திருமணம் நடந்ததாகச் சொல்லப்படும் கதை பொய். நான் கற்புமிக்க பெண்ணாக இருந்தேன். எனக்கேற்ற கணவனைப் பெற விரும்பினேன். எனவே என் இதயத்தில் அவரைத் தேடி ஆராய்ந்தேன். அவருடைய உருவம் என் மனக்காட்சியில் வந்தது. அவர் தென்னிந்தியாவில் ஒரு சிற்றரசின் இளவரசனாக இருந்தார். அவருக்கு என்னைத் திருமணம் செய்து கொள்ளும் விருப்பம் இல்லை. அவருடைய குணங்களைப்பற்றி நான் கேள்விப்பட்டேன். அவர் ஒருபெரிய ராஜ்ஜியத்திகு கீழ்ப்பட்ட சிற்றரசை உடையவராக இருந்தார். என்னுடைய ஒருமுனைப்பட்ட அன்பின் தீச்சுடர் அவரை மட்டுமே நாடியது. அவரை என் கணவனாக அடைவதற்காக நான் விரதங்களை மேற்கொண்டேன். அச்சமயத்தில நான் இளவயதுடைய பெண்ணாக இருந்தேன். பல வருடங்களை அவருடைய நினைவிலேயே செலவழித்தேன். நான் கடவுளிடம் பிரார்த்தனை செய்து மந்திர ஜெபங்களும் செய்தேன். இவையனைத்தும் கடைசியில் அவருடைய இதயத்தில் ஒரு விளைவை உண்டாக்கி, அதன் பிறகு அவரை நான் திருமணம் செய்து கொண்டேன். நீண்டகாலம் நாங்கள் சேர்ந்து வாழ்ந்தபிறகு அவர்

வானுலகம் சென்றார். நான் அவருடன் உடன்கட்டை எறி உயிர்நீத்தேன். தக்ஷன் ஒரு பேரரசனாக இருந்தார். புராணங்களில் சொல்லப்பட்டிருப்பது போல தக்ஷன் செய்த யாகத்தில் அவர் மீது கோபம் கொண்டு அவருடைய மகளாகிய நான் யாகத்தின் நெருப்பில் விழுந்து உயிர் நீத்ததாக வரும் சம்பவம் உண்மையல்ல. தக்ஷனுடைய யாகம் அழிக்கப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது பெரிதும் பரவலாக சொல்லப்பட்டதுபோல இல்லை. தக்ஷன் தனது மகள் சதி என்றழைக்கப்படும் தாட்சாயணி மற்றும் அவள் கணவன் சிவனை தன் யாகத்துக்கு அழைக்காமல், அவமதித்ததாகக் கூறப்படுவது சரியல்ல.''

''அந்த யாகத்தில் பங்கேற்ற அந்தணர் ஒருவர், கால்தடுக்கி அந்த நெருப்பில் விழுந்து இறந்துபோனார். அது ஒரு பெரிய யாகம். தெய்வங்களும்கூட அதற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். நானும் அங்கே இருந்தேன். யாகத்தீயில் ஒரு பிராமணன் விழுந்து இறந்துபோனதால் தக்ஷன் பாவம் செய்தவனாகக் கருதப்பட்டான். இதுவே பிறகு வேறு விதமாகத் திரிக்கப்பட்டு இழிபெயராக ஆகிவிட்டது. என் மக்களே, என்னுடைய புனிதமான கற்பின்திறத்தைப் பாருங்கள்.''

### அன்னை பார்வதி எங்களுக்கு பிராணாஹூதி அளித்த பிறகு தொடர்ந்து கூறியது:

''ஹிந்துக்களாகிய உங்களிடமிருந்து இந்த விஷயம் (பிராணாஹூதி அளிக்கும் திறன்) மறைந்துவிட்டது. கற்புமிக்க ஒரு பெண்மணி, அவளுடைய பார்வை வேறு யாரை நோக்கியும் திரும்பாதபடி தன் கணவன் மீதே மனத்தை நிலைநிறுத்தியிருக்கிறாள். இது அவளது சக்தி மற்றும் கொள்கைகளுக்கு முற்றிலும் உட்பட்டதாக இருக்கிறது. பெண்கள் தங்கள் கணவனையே அனைத்துமாகக் கருதி நடப்பதற்கான விஷயமாகும். ஆண்களுக்கு தங்கள் குரு அல்லது கடவுளையே அனைத்துமாகக் கருதி நடப்பது முக்கியமானது. அவர்களுடைய கவனம் ஒருபோதும் வேறுபக்கம் திரும்பக்கூடாது மற்றொரு விஷயம் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆன்மீக ஞானம் உண்மையில் குருவிடமிருந்துதான் வருகிறது. கடவுளை அறியும் சக்தி யாருக்கும் கிடையாது. எனவே, குருவையே இறுதி நபராக (அனைத்துமாகக்) கருதுவதுதான் இதில் மிகவும் நன்மையளிக்கும் வழியாகும். அந்த வழியில் கடவுள் அல்லது பரம்பொருளுடன் ஒருவரது இணைப்பு உண்டாக்கப்படுகிறது. அதன்பிறகு அந்த மனிதரின் பார்வை பரமாத்மாவாகிய சுயத்தின் சுயம் என்பதன் மீதே நிலைபெற்றிருக்கும். இந்த

நிலை ஏற்படும்போது அதுவே பூரணமான மெய்யுணர்வு நிலையாக மாறுகிறது. கற்புமிக்க பெண்ணின் கணவன் ஒருபோதும் ஒழுக்கமற்றவனாக இருக்கமுடியாது. அக்காலத்தில் தக்ஷன் என்பது – ஒரு பட்டமாக (பெருமைக்குரிய பதவியின் பெயராக) இருந்தது.''

**பிறகு மண்டோதரி மற்றும் ராவணனைப் பற்றி (மண்டோதரி போல ஒரு கற்புமிக்க பெண்மணியின் கணவன் ராவணன் ஒழுக்கமற்றவனாக இருந்தது பற்றி) ஒரு கேள்வி வந்தது. அதற்கு சுவாமி விவேகானந்தா கூறிய பதில்:**

''எல்லாவற்றிலும் விதிவிலக்காக ஏதோ ஒன்று இருக்கும். இயற்கையிலும் கூட, எப்போதும் விதிவிலக்குகள் அனுமதிக்கப்படுவது உண்டு. ஆயினும் அது அரிதுதான்.''

19-2-1947

**சுவாமி விவேகானந்தா:**

''க்ஷய சக்தி எனப்படும் முடிவான அழிக்கும் சக்தியை உபயோகப்படுத்துவது இந்த உலகின் முடிவில் செய்யப்படும் உனது செயலின் கடைசி பகுதியாக இருக்கும். இங்கே பார், இந்த சக்திகள் பொதுவாக ஒருவருக்கு எப்போது அளிக்கப்படுவதில்லை. (அரிதாகவே அளிக்கப்படும்) உனது சொந்த உயர்நிலை பற்றி நீ அறியாமலிருக்கிறாய். அதுவே உனது துன்பம், வேதனை மற்றும் தொல்லைகளுக்கு ஒரே காரணமாகும். நீ அந்த மகத்தான சக்தியுடன் தொடர்புடையவனாக இருக்கிறாய். அதனுடைய மிச்சங்கள் (அம்சங்கள்) இன்னமும் உன் உடம்பில் இருக்கின்றன.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''சகோதரா, இந்த விஷயம் மிகத்தெளிவாக இருக்கிறது. நெருப்பின் அருகே நின்றுகொண்டு அதன் வெப்பத்தை ஒருவர் உணராமல் இருக்க முடியாது. பொதுவாகச் சொல்கிறேன், இந்த விஷயம் யாருடைய புரிந்து கொள்ளும் திறனுக்கும் அப்பாற்பட்டது. எனவே, இதைப் பற்றி மேலும் விளக்கம் சொல்வதில் பயனில்லை. மேலும், அதனுடன் யாருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.''

**சுவாமி விவேகானந்தா:**

''மீண்டும் உயிர்த்தெழுதல் உன்னால் கொண்டுவரப்படும். அதாவது அழிவின் கடைசிச்செயல் அல்லது உயிரின் முழு அழிவு உன்னால் கையாளப்படும்.''

10-3-1947

வணக்கத்திற்குரிய மதிப்புயர்ந்த கபீர் நான் எப்போது வாரணாசிக்கு செல்லப்போகிறேன் என்று என்னைக் கேட்டார். பெரியோர்களாகிய ‘நீங்கள் அனுமதித்தால் ஜுன் மாதம் அங்கு செல்ல உத்தேசித்திருக்கிறேன்’ என்று நான் பணிவுடன் கூறினேன். வணக்கத்திற்குரிய கபீர், வாரனாசியில் (காசியில்) அவர் வாழ்ந்து, வேலை செய்த இடமாகிய கபீர் சவுரா என்ற இடத்திற்குச் சென்று அதை அழித்தபின் திரும்பி வரவேண்டுமென்று உத்தரவிட்டார். அவர் மேலும் கூறியது: ‘‘என் சீடர்களுடன் எந்த ஒரு தொடர்பும் வைத்திருக்க நான் விரும்பவில்லை. அவர்களை என்னிடமிருந்து தொடர்பறுத்துவிடு. என் இணைப்பை உன்னுடன் நான் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறேன். கடைசியில் சுவாமி விவேகானந்தா என்ன செய்தாரேர அதையே நான் செய்ய வேண்டியிருக்கும். என்னுடைய போதனை வழி மிகச்சரியான உன்னுடையதைப் போலவே இருந்தது. எனது அந்தப் பயிற்சியின் வழி, அழிக்கமுடியாத ஒலியின் (சப்தம்) மூலமாக முன்னேறிச்செல்வதாகும். கடைசியில் அது நீ பயன்படுத்தும் அதே விஷயத்துக்கு வந்துசேரும். என்னுடைய வேலையை முற்றிலும் உங்களிடம் சமர்ப்பிக்கிறேன் அல்லது வேறு வார்த்தைகளில் சொன்னால் என் நிலையை உங்களுடன் ஐக்கியம் செய்கிறேன். வணக்கத்திற்குரிய உனது குரு இதற்கு அனுமதியளித்திருக்கிறார் மற்ற பெரியோர்களும் அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘என்னுடைய மார்க்கமும் உன் வழியில் போகும். என் குருநாதர் தனது இணைப்பைக் குறைத்துக் கொண்டுவிட்டார். இப்போது நீதான் அவற்றை உன் சொந்த வடிவில் மீண்டும் பிறப்பிக்கவேண்டும். சிறிது காலத்திற்கு முன்பே எனது பிரதிநிதியாக உன்னை நியமித்துவிட்டேன்.’’

**வணக்கத்திற்குரிய ஸ்ரீ சைதன்ய மஹாப்பிரபு:**

‘‘என்னுடைய மார்க்கத்துடன் எனது இணைப்பையும் துண்டித்து விடுங்கள். அதற்கு இனிமேல் தேவையில்லை. ஒரே ஒன்று மட்டுமே இருக்க வேண்டும்.’’

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் (R2 - க்குச் சொன்னது):**

‘‘இயற்கையின் சங்கல்பம் அதற்கென ஒரு வழியை நிச்சயம் பெற்றிருக்கிறது.’’

**என் கேள்விக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டரின் விளக்கம்:**

''ஒரு பயிற்சிமுறையின் இணைப்பு துண்டிக்கப்பட்டது அல்லது அழிக்கப்பட்டது என்றால், அது முடிந்துபோய்விட்டது என்று இங்கே பொருளாகாது. அதன் பிரதிநிதி என்ற தகுதியில் நீ அதற்கு ஒரு புதிய ஆரம்பம் கொடுப்பாய் என்று அதற்குப்பொருள். இதுவரையில் கபீர் அவர்களால் நிலைநிறுத்தப்பட்டது என்று நம்புகிற மக்களின் இணைப்பு இனி யாருடைய இடைநிலை மூலமாகவும் தொடர்ந்து இருக்காது. ஆனால் நீ அதன் அடிப்படையை புதிதாக ஏற்படுத்துவாய், அது உன் மூலமாகவே நடக்கும். உன் மூலமாக மட்டுமே அதில் ஆன்மீக இணைப்புக்கள் சாத்தியமாகும். உன் மூலமாக இந்தப் பயிற்சி முறையில் பயிற்சியளிப்பதற்கு R2 - ஐ அனுமதிப்பது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அவரை நாளை காலை வரச்சொல். என் பிரியமான ராம் சந்த்தரை கபீர் தனது பிரதிநிதியாக நியமித்திருக்கிறார். இப்போது மற்ற கிளைகளோடு சேர்ந்து இந்தக்கிளையும் உன் மூலமாகவே தொடர்ந்து இயங்கும். பிராணாஹுதியில், அதே விதிமுறைகள், நிபந்தனைகள் இருக்கும். அதற்கு உட்பட்டு அதற்கான ஆற்றல்கள் செயல்படும். என் மார்க்கத்தில் கபீர் அவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என விரும்புகிறேன். வருங்காலத்தில் என்ன தீக்ஷைகள் அளிக்கப்பட்டாலும், கபீர் அவர்களுக்கும் அந்த மனிதர்களிடம் இணைப்பு உறுதி செய்யப்படவேண்டும். இப்போது கவனி, புத்த பகவான், சைதன்ய மகாப்பிரபு, கபீர்சாகேப், சுவாமி விவேகானந்தா, நான் மற்றும் நமது J1 - ஆகிய அனைவரும் ஒன்றாக ஒரே இணைப்பில் இருக்கிறோம். நமது சீடர்கள் யாராயினும் அவர்கள் அனைவரையும் இந்த மார்க்கத்தில் இணைத்துவிடு. இவர்கள் அனைவருடைய வழிகளும் சேர்ந்து 'சகஜ மார்க்கா' என்று பெயரிடப்படும். இது பிரியமுள்ள ராம் சந்த்தரின் கடமையாகும். எல்லோரையும் ஒவ்வொருவராக சேர்த்துக்கொள். இப்போது இங்கே இல்லாத, வெளியே எங்கேயோ இருக்கும் அவர்களுடைய தொடர்பும் இந்தப் பக்கமாக திருப்பப்படுவது சிறப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன். அவர்கள் இங்கே திரும்பிவரும் போது அவர்கள் அனைவருக்கும் இதைத் தெளிவுபடுத்த வேண்டும். இதன் மூலமாக அவர்களும் இதுபற்றி அறிந்து கொள்வார்கள்.''

11-3-1947 அன்று R2 - ன் இணைப்புக்கள் கட்டளையின்படி சரி செய்யப்பட்டன.

19-3-1947 அன்று H3 - ன் இணைப்புக்கள் கட்டளையின்படி சரி செய்யப்பட்டன.

**19-3-1947**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''மேலே குறிப்பிட்டுள்ள விஷயத்துக்கு இசைந்து நடப்பது பற்றி ஆட்சேபங்கள் எழுப்பினால் மக்கள் மிகப்பெரிய தவறு செய்தவர்களாக ஆவார்கள்.''

**31-3-1947**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''கடந்த சில நாட்களாக உனது மனக்கண்களின் முன்னால் நீ மைய மண்டலம் என்றும் மையம் என்றும் பெயர் குறிப்பிட்டுள்ள அதற்கான பயிற்சியின் அடித்தளங்கள் அமைக்கும் திட்டம் மின்னலடித்துக் கொண்டிருக்கிறது. இந்தவிதமான பயிற்சியினை துவங்குவதில் இன்று தான் முதல் நாள். அதில் இருக்கும் விசேஷ அம்சம் என்ன? அந்த எல்லாவற்றையும் சரியான வடிவத்துக்குக் கொண்டு வருவது எவ்வளவு சிரமமானது என்பதையெல்லாம் அனுபவத்தின் மூலமாக நீ தெரிந்து கொள்வாய். முதலாவது வட்டம் சாதாரண மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவே ஆன்மீகப் பயிற்சியின் ஆரம்பமாக இருக்க வேண்டும். அதன்பிறகு மேலும் வழிகாட்டவும், முன்னேற்றமடையவும் தானாகவே ஒளி கிடைக்கும். முதல் வட்டத்தைக் கடந்த உடனேயே பற்பல ஆன்மீக நிலைகள் கடக்கப்படுகின்றன. இரண்டாவது வட்டம் வரை நெருங்குகிறவர்கள் மிகவும் அரிதானவர்கள். அதற்கு மேல் இருப்பதைப் பற்றி என்ன சொல்வது? இந்த சிக்கலான பிரச்னை இப்போது தீர்வுக்கு வருகிறது. இம்மாதிரி பயிற்சியை அளிக்கத் தகுந்த திறமை உடையவர்கள் இதுவரை ஒருபோதும் பிறந்ததில்லை. இந்த எண்ணம் இதுவரை யாருக்கும் தோன்றியதும் இல்லை. எத்தனையோ ஆண்டுகளாக எதற்காகத் தவம் செய்தார்களோ அந்தப் புலன்களின் கட்டுப்பாடு இந்த முதல்வட்டத்தில் கிடைத்து விடுகிறது. நம் உடலின் சரீர மண்டலம் (பிண்டம்) இந்த வட்டத்தில் ஒரு துளியளவாக இருக்கிறது.''

**சுவாமி விவேகானந்தா:**

''பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உன்னைக் காண வந்திருக்கிறார்.''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''முதல் வட்டம், மகாபாரதப் போருக்கு முன்பு, அர்ஜுனனுடைய தெய்வீகப் பார்வைக்கு என்னுடைய அண்டம் பரவிய வடிவத்தை (விராட் சொரூபத்தை) வெளிப்படுத்திய அந்த நிலையில் அடங்கியிருக்கிறது. முதல் வட்டத்தில் உள்ள ஒரு சிறிய ஆற்றல் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டது. இந்தக் கண்டுபிடிப்பைச் செய்தவருக்கு எதையாவது பரிசாக அளிக்க விரும்புகிறேன். நீ உடலைவிட்டுச் சென்றபிறகு இந்தப் பரிசு முழுமையாக உனக்குக் கிடைக்கும். சகோதரர்களே, நேரத்தை வீணாக்காதீர்கள். ராம் சந்த்தரா இந்த உலகையும், தன் உடலையும் எப்போது கைவிட்டுச் செல்வார் என்பதை நிச்சயமாகச் சொல்லமுடியாது.''

**2-4-1947**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இதற்கு முந்தைய கண்டுபிடிப்பில் B புள்ளியைப் பற்றிக் கூறிய வழிமுறையை சரியான கவனத்துடன் மக்கள் பயிற்சி செய்வதில்லை. அதைச் செய்திருந்தால் பெரும் நன்மையை அடைந்திருப்பார்கள். இந்தப் பயிற்சியைச் செய்தவர்கள் நன்மை பெற்றிருப்பார்கள்.''

**சுவாமி விவேகானந்தா:**

''இது மனம் அதன் மிக மோசமான நிலையில் இருக்கும் இடமாகும். அதை சுத்திகரிப்பு செய்தால் அவர் தன் மேம்பட்ட தன்மைக்கு அனைத்தையும் செய்தவராகிறார். சிலசமயம் சிறிது உதவி தேவைப்படுகிறது என்றாலும், இந்த விஷயத்தில் நீ உன் கடமையைச் செய்துகொண்டிருக்கிறாய். இந்த விதமான போதனை சுலபமான விஷயமல்ல. இதற்கு மனத்தின் வேலை மிகவும் தேவையாகிறது. இங்கே எல்லாத் துன்பங்களும் எண்ணங்களும் வழிவிடுகின்றன. இந்தப் புள்ளி அப்யாசிகளுக்கு எவ்வளவு நன்மையாக, உதவிகரமாக இருக்கிறது என்பதை அவர்கள் அறியவேண்டும். இதுவரையில் யாரும் அந்த நன்மையின் சிறப்பைக் கண்டறியவில்லை. அதை ஒரு கண்டுபிடிப்பு என்பதைவிட புதிய உருவாக்கம் என்றே நான் சொல்வேன். அலுவலகம் சென்று கொண்டிருந்தபோது வணக்கத்திற்குரிய உன் சகோதரர் M1 - உடன் பேசியபோது ஆன்மீக வாழ்க்கையில் வெற்றியின் திறவுகோல் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தாய். அது நீ முதல்படியிலேயே அறிமுகப்படுத்துகிற மிக உயரிய பயிற்சியாகும். 'உன்னை இழந்துவிடு' என்பதே அதன் அடிப்படையாகும். (ஜீவநாதமாகும்) அது நிச்சயமாகத் தோல்வியடையாத ஒரு பரிந்துரையாகும்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''அன்புள்ள ராம் சந்த்தர், இன்றைய தினம் வரை இம்மாதிரி விஷயங்கள் யாருடைய மனத்திலும் ஒருபோதும் தோன்றியதில்லை என்பதை நான் சொல்லமுடியும். இந்த உலகைவிட்டுப் போவதற்கு முன்பு அதிகபட்சம் சாத்தியமான அளவுக்கு எல்லாவற்றையும் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்திவிடு. ரகசியங்களை நெஞ்சுக்குள்ளேயே வைத்திருக்க வேண்டிய தேவை இல்லை. ஏனென்றால் நீ உன்னோடு எதை எடுத்துச் சென்றாலும் சரி, அது உலகிற்குக் கிடைக்காமல் போகும்.''

8-4-1947

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''குறிப்பிட்ட புள்ளிகள் அல்லது மண்டலங்களுக்கு அடிக்கடி பிராணாஹூதி அளிக்கப்படுகிறது. அது நன்மையை ஏற்படுத்தியிருக்கிறது. பிராணாஹூதி முறைப்படி நிரப்பப்படுகிறது; அதனுடைய நன்மையும் சரியான வழியில் கிடைக்கிறது. இதன் நோக்கங்கள் அடையப்படுகின்றன. என்ன செய்யவேண்டுமென்று விரும்பப்பட்டதோ அது செய்யப்பட்டிருக்கிறது. பெரியோர்கள் தொடர்ந்து வெற்றியை அடைந்து விரும்பிய லட்சியத்தைச் சென்றடைந்தார்கள். ஆன்மீகக் கல்வி சம்பந்தமாக தொடர்ச்சியான ஆராய்ச்சிகளும், கண்டுபிடிப்புகளும் நடந்து கொண்டிருந்தன. ஆயினும், மிக உயர்ந்த மேன்மையான ஒரு பயிற்சிமுறையைப் பற்றி நாம் அறியும்போது அந்த மேன்மையான வழியை நமது ஆன்மீகப் பயிற்சிக்குக் கருவியாக ஏற்றுக்கொண்டு எத்தனையோ ஆண்டுக்காலத்தை ஏன் மீதமாக்கக் கூடாது!''

''நாம் இதயமாகிய புள்ளியிலிருந்து (பயிற்சியை) ஆரம்பிக்கிறோம். இப்படி இதயத்திலிருந்து பயிற்சியளிக்கும முறை எனது பிரியமான ராம் சந்த்தருக்கு விசேஷமாக வெளிப்படுத்தப்பட்டது. இந்த விஷயம் பற்றிப் புரிந்து கொள்வதற்கு அவரிடமிருந்து மக்கள் விளக்கங்களைப் பெற வேண்டும். இது சம்பந்தமாக இன்னும் பல விஷயங்கள் இனி வெளிப்படுத்தப்படும். அதற்குரிய சரியான நேரத்தில் அது வெளிச்சத்துக்கு வரும். இந்த விஷயத்தை நான் இங்கே விட்டுவிட்டு, இதன் துணை அம்சமாக அடைப்புக் குறிகளுக்குள் உள்ள விஷயத்துக்கு வருகிறேன். அதை பிரியமுள்ள ராம் சந்த்தர் சற்று முன்புதான் கண்டறிந்தார். மக்கள் அதை அவர் குறிப்பிட்டுள்ளபடியே பயிற்சி செய்ய வேண்டியிருக்கும். அதை நான் சுருக்கமாகச் சொல்கிறேன். இயற்கையின் மனத்தினுடைய வேலையில் எந்த ஒரு இடமும் காலியாக இல்லை. யார் எங்கே

இருக்கிறாரோ, அங்கே அவர் அந்தப் பகுதியில் வேலை செய்யவேண்டும். அந்தப் பகுதி சீர்திருத்தப்பட்டால், அந்தக் களம் முழுவதும் சுத்தமாக்கப்படுகிறது. எனவே, நமது முடிவான நோக்கம் அல்லது குறிக்கோளை உள்ளடக்கிய அந்த சக்தியில் ஊடுருவிச் செல்லும் விதத்தில் அந்த மனத்தின் மீது கவனம் செலுத்துவது மேலாக இருக்கும். ஏற்கெனவே சீர்கெட்டுப் பாழாகியிருக்கும் அதன் களத்தைத் தூய்மை செய்வதோடு சேர்த்து மிகச் சிறந்த விதத்தில் மனத்தையும் முதலில் சுத்திகரிக்க வேண்டும். இந்த வழிமுறை மிகச் சரியானது, பொருத்தமானது என்று நான் கருதுகிறேன். ஒவ்வொரு சக்கரத்திலும் இதே நிலைதான் இருக்கும். அதை சுத்திகரிப்பதற்கு இந்த வழிமுறை எல்லா இடங்களிலும் பொருந்தும். ஒருவர் இதயத்துக்கு மட்டுமே தொடர்ந்து பிராணாஹூதி அளித்து, அதன் வழியாக அனைத்துப் புள்ளிகளும் ஒளியைப் பெற்றுக்கொண்டே இருக்கச் செய்யலாம் என்பது ஒரு வழி. எனினும் இந்த வழியில் மிக மெதுவான வளர்ச்சிதான் உண்டாகும் என்ற பிரச்னை சந்தேகமில்லாமல் இருக்கிறது. அல்லது இதயத்தை அதற்கேற்ற சரியான நிலைக்குக் கொண்டுவந்தபிறகு, உண்மையான சாராம்சத்தை உள்ளடக்கியிருக்கின்ற மற்ற புள்ளிகளை அடுத்தடுத்து ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளலாம்.''

## 20-4-1947

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''வேலை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வேலை செய்யக் கூடியவர்களைத் தயார் செய். H3 யின் காதுகளை கொஞ்சம் நிமிண்டு. எவ்வளவு பெரிய கடமையை இப்படி ஏனோதானோவென்று செய்கிறார். இதை உன் பலவீனம் என்றே நான் சொல்லுவேன். நேரடியாகப் பற்றிக் கொள்ளும் திறமையை மனிதர்கள் வளர்த்துக் கொள்ளவில்லை என்று குறை சொல்லுகிறாய். வேலையைத் தீவிரமாக எடுத்துக் கொண்டால் இது நிச்சயம் வளர்ச்சியடையும். இது ஒரு குறைபாடுதான். எனினும், மனிதர்கள் வேலை செய்யும்போது இதயத்தின் மீது கவனமாக இருந்தால், சிறிதுகாலப் பயிற்சிக்குப் பிறகு தானாகவே அவர்களுக்கான வழிகாட்டுதல்கள் வரத்துவங்கும்.''

## 21-4-1947

**சுவாமி விவேகானந்தா:**

''இப்போது நீ உருவாக்கியுள்ள கொள்கை சரியானது. மாயை (நிகழ்நிலை சத்தியம்) மற்றும் அதன் இணக்கமான வடிவம் ஆகிய இரண்டும் ஒன்றே.

அதன் மையத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் சக்தி மாயை அல்ல. அந்த சக்தி உலர்ந்துபோன எலும்புகளிலிருந்து வரவில்லை (அதாவது செயலற்ற, இயக்கமற்ற தன்மையிலிருந்து வரவில்லை). அதற்கான ஆற்றலின் விசையை உடைய அதன் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து வருகிறது.''

**கேள்வி:**

''மகா பிரளயத்தின் போது (பிரபஞ்சத்தின் முழு அழிவின்போது) பொருட்கள் அனைத்தும், அவற்றின் தனித்துவ அடையாளங்களுடன் முடிவுக்கு வந்துவிடும்போது, மீண்டும் பிரபஞ்ச திருஷ்டிக்கான பொருள் எங்கிருந்து பெறப்படுகிறது?''

**பதில்:**

''ஒன்று பலவாக மாறுகின்ற எண்ணத்தின் இயக்கமே பொருளை உண்டாக்குகிறது. கடவுளிடமிருந்து வந்த ஒன்றே பொருளை உண்டாக்குகிறது என்பது கருத்து.''

**24-4-1947**

**வணக்கத்திற்குரிய பகவான் புத்தர்:**

''இந்த விஞ்ஞானம் அல்லது மெய்ஞ்ஞானம் பயிற்சிமுறை உலகமெங்கும் பரவட்டும். இது ஒன்றே உலகில் மேலோங்கி இருக்கும். சகஜ மார்க்கம் உண்மையாகவே சுலபமான பாதைதான். இதைவிட சுலபமான பாதை ஒருபோதும் கண்டறியப்பட்டதில்லை. உங்களில் சிலர் பயணம் மேற்கொள்ளத் தயாராக இருங்கள். மக்கள் மீண்டும் மீண்டும் பல இடங்களுக்குச் சென்று மக்களிடம் பேசி தங்கள் சொந்த ஆன்மீக சக்தியினால் இந்த எண்ணங்களை புதுப்பிக்கவேண்டும். இந்த வழிமுறை தொடர்ந்து பின்பற்றப்படவேண்டும். இது நடக்குமா என்ற எதிர்மறையான எண்ணம் முற்றிலும் கைவிடப்படவேண்டும். ஏனென்றால் சகஜமார்க்கம் உலகம் முழுவதும் பரவச் செய்யப்பட வேண்டும் என்ற இந்த விளைவு உண்மையில் நடந்தே ஆகவேண்டும்.''

**27-4-1947**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''அன்புள்ள R2 - க்கு அதை விழிப்படையச் செய்வதற்காக மூலாதார சக்கரத்தில் பிராணாஹூதி அளிக்கப்பட்டது. நமது பயிற்சிமுறையில் மிகவும் தாமதமாக விழிப்படையச் செய்யப்படுகின்ற கடைசிபுள்ளி

இதுவேயாகும். அது விழிப்படைந்த நிலைக்கு வருவதற்கு மூன்று நாட்கள் ஆகும். ஒரு முன்னெச்சரிக்கையாக, மூன்று நாட்களுக்கு அவர் எளிய உணவு மட்டும் சாப்பிட வேண்டும். இந்த மூன்று நாட்களும் அவர் உன்னிடம் வரவேண்டும். அவருடைய குண்டலினி சக்தி விழிப்படைந்த நிலைக்கு வந்திருக்கிறது. இப்போது இந்த மூலாதார சக்கரம் விழிப்படைய வேண்டிய முறை.''

**சுவாமி விவேகானந்தா:**

''மிக முக்கியமான தன்மையுடைய கடமைகள் அவருக்கு (R2) வந்துகொண்டிருக்கின்றன.''

### 30-4-1947 (இரவு மணி 9.15)

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''மகிழ்ச்சியான ஒரு செய்தி! அன்புள்ள R2 - இன் மூலாதார சக்கரம் (கணபதி சக்கரம்) முழுமையாக விழிப்படைந்த நிலைக்கு வந்திருக்கிறது. ஸ்வாதிஷ்டான சக்கரத்தையும் நான் பிராணாஹூதி அளிக்க இன்று எடுத்துக் கொண்டிருக்கிறேன். நாளை இதுவும் கூட அதன் உண்மையான தன்மையில் விழிப்படையும்.''

### 1-5-1947 (இரவு மணி 9.00)

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''அன்புள்ள R2 - இன் ஸ்வாதிஷ்டான சக்கரமும் விழிப்படைந்த நிலைக்கு வந்திருக்கிறது என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். ஆன்மீக சக்தி விஷயத்தில் இனி எதுவும் குறையில்லை. மூலாதார சக்கரம் முழு மலர்ச்சி அடைந்திருக்கிறது. ஆனால் இன்னும் சில பிராணாஹூதிகள் அதற்கு அளிக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது. உண்மையில் அதற்கு வருகிற தெய்வீகக் கட்டளைகளுடன் இணைக்கப்பட்டதாக அதைச் சரிப்படுத்த வேண்டியிருக்கிறது. இப்போது R2 - தனது மிஷன் மற்றும் தனது சகோதர சகோதரிகளை மேம்படுத்துவதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இப்போது அவருடைய வேலை அது மட்டுமே; வருங்காலத்தில் இதன் மூலமாக மட்டுமே அவரது முன்னேற்றம் இருக்கும். இனிமேல் அவர் தியானம் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை. அவர் விரும்பினால் தியானம் செய்யலாம் அல்லது அவரது விருப்பம்போல ஏதாவது வேலை செய்யலாம். இப்போது உண்மையில் மேலேயிருந்து வரும் கட்டளைகளைப் பின்பற்றி நடப்பதே அவருக்குத் தியானமாகும். அதுவே அவருக்குப் பூஜை.

எனது ஆன்மீக வம்சத்தாரின் கூட்டத்தில், இந்த மாதிரி இன்னும் சிலர் ஒன்று சேர்ந்து வளர்ச்சியடைந்தால் நமது மிஷன் இவ்வளவு மெதுவாக நகர்ந்து கொண்டு இருக்குமா? என்று சொல்லுங்கள். முதுகெலும்பில் உள்ள தட்டெலும்புகளின் சக்தி தூக்கநிலையில் (உறைந்த நிலையில்) இருந்து ஓரளவுக்கு முழு மலர்ச்சி பெறவேண்டிய தேவை இருக்கும்போது, அது காலப்போக்கில் ராம் சந்த்தரால் மெதுவாக விழிப்பு நிலைக்குக் கொண்டுவரப்படும். இந்த சக்திகள் எல்லோருக்கும் அளிக்கப்படுவதில்லை. இந்த விதமாகப் பயிற்சியளிக்கும் வழி ராம் சந்த்தருக்கு மட்டுமே தெரியும். அவருடைய உச்சநிலையில் இந்த நிலைக்குரிய பயிற்சியின் மூலமாக அவரை நான் பரிபூரணமான பக்குவம் அடையச் செய்திருக்கிறேன். மற்றபடி சகோதரரே, ஆன்மீகத்துக்கு எல்லையே இல்லை. மேலும் முதுகெலும்பின் சக்திக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. எனினும், அதற்கு ஓரளவு பங்கு உண்டு என்பதில் சந்தேகமில்லை. அவருடைய மூளையில் அனைத்து புள்ளிகளும் மலர்ச்சியடைந்துள்ளன. இப்போது அதன் மிக அருகே அவ்யக்த கதி (உயர்ந்த புண்ணியநிலை அல்லது வேறுபாடற்ற நிலை) என்ற நிலை இருக்கிறது. ஆனால் அதைக் கடந்து எண்ணற்ற புள்ளிகள் உள்ளன. அவற்றுக்கு எல்லையோ, முடிவோ இல்லை. மையத்தை நெருங்கிச் செல்லும் போது இவை முடிகின்றன. ராம் சந்த்தரின் பயிற்சிமுறை உண்மையிலேயே மிகவிசேஷமானது. அது அனுபவத்தின் மூலமாக அவருடைய உணர்வு நிலைக்குள் வந்திறங்கியது. என் அன்புள்ள R2, அந்தக் கணக்கின்படி இரண்டாவது வட்டத்தின் நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறார். அதனையடுத்து பல்வேறு வட்டங்கள் உள்ளன. அவற்றைக் கடந்தபின், உண்மையான விதத்தில் மைய மண்டலத்திற்குள் நுழைவது சாத்தியமாகும். சிந்தனையின் மூலமாக அதை அறிவது வேறு விஷயம். இங்கே நான் ஒரு முழு நிறைவுடைய உண்மையான அணுகுமுறையைக் குறிப்பிடுகிறேன். உடல்ரீதியாக வலுவற்ற உன் சகோதரனின் தொடர்பு உனக்கு என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதைப் பார். செயல்பாடுகள் மற்றும் சக்திகள் அதற்கு வழிவிட்டிருக்கின்றன. வேலை செய்வதற்கான தீரம் இன்னமும் இருக்கிறது. அது தன் சொந்தவிளைவை அந்த சக்திகள் மற்றும் செயல்பாடுகளில் உண்டாக்குகிறது.''

### 4-5-1947 (இரவு மணி 8.50)

குறிப்பு: லக்கிம்பூரைச் சேர்ந்த I-2 தனது கடும் முயற்சி மற்றும் தீரத்தினால் பரப்பிரம்மாண்ட மண்டலத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறார்.

25-5-1947

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது:**

‘‘ஒரு விஷயம் நடைமுறை வடிவத்துக்கு வரும்போது சிறிதளவு அதைச் செதுக்குவதும், வடிவமைப்பதும் மிக அவசியமாகும். இந்தப் பாதையில் தொடர்ந்து நீடிப்பவர்கள், தங்கள் வாழ்வின் உண்மையான சந்தோஷத்தைக் காண்பார்கள்; வாழ்க்கையின் நோக்கத்தை உண்டாக்கியிருப்பது எது என்பதையும் தெரிந்துகொள்வார்கள். இந்த விஷயம் இதற்கு முன்பு ஒருபோதும் கண்டுபிடிக்கப்படவில்லை. இம்மாதிரி சுலபமான முறைகளின் மூலமாக ஒருபோதும் செம்மையாக்கப்பட்டதும், ஊக்குவிக்கப்பட்டதும் இல்லை. உங்கள் இருவரிடமும் (ராம் சந்த்ர் மற்றும் R2) மிகவும் கருணை இருக்கிறது. அதுவே பக்தியின் அடையாளமாகும். என் வாழ்க்கையில் நான் நிறைய செதுக்குவதையும், வடிவமைப்பதையும் செய்து வந்தேன். என் ஆயுள் முழுவதும் அப்படி சில சமயம் கடுமையாகவும் கூட செதுக்கி எறிந்திருக்கிறேன். நீ உனது எண்ணத்தின் சக்தி மூலமாக அப்படிச் செய்கிறாய். இதனால் வரப்போகும் வெற்றி என்ன என்பதைக் கவனி. அது ஒருபோதும் குணமாகாத, மருந்து எதுவும் இல்லாத காலம்தான் அது. எத்தனையோ விஷயங்கள் செய்யாமல் விட்டுப் போய்விட்டன என்ற கவலையை விட்டுவிடு. அது அப்படித்தான் இருக்க வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது. எனவே, அதற்காக மனம் வருந்த வேண்டாம். வருங்கால வழிகாட்டுதலுக்காக ஒருவிஷயம் நான் சொல்கிறேன். எந்த மனிதனுடைய சரீர அமைப்பில் நரம்புகள் நீட்சியடைந்து முடிச்சுகள் வளர்ச்சியடைந்திருக்கிறதோ, அப்படியிருந்தும் எந்த ஒருவன் அதை நீக்க விரும்பாமலிருக்கிறானோ, இப்படி அவன் இருந்தாலும் தனது கர்வத்தை அப்படியே தக்க வைத்துக் கொண்டு, தன்னைப்பற்றி மிகப் பெரியவனாக நினைத்திருக்கிறானோ அந்த மனிதன் இந்தப் பாதைக்கு வரத் தகுதியற்றவனாவான். அம்மாதிரி ஒரு மனிதனைச் சரிப்படுத்தும் திறமை யாருக்குமில்லை. அவர்களுக்கும் சற்று இதமளிக்கும் காரியத்தைச் செய்யலாம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் முழுமையாகச் சரி செய்வது மிகவும் சிரமம். அந்த மாதிரி மனிதரிடம் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், இனி ஒன்றும் பயன்படாது என்ற நம்பிக்கையற்றுப் போனநிலைதான் பயனாகக் கிடைக்கும். அப்படி ஏதாவது மனிதர் பற்றிய உதாரணத்தை நீ எண்ணிப் பார்த்தால் நான் சொன்ன இவ்விஷயங்களை நீ சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும். *(இங்கு M1 - பற்றிய நிலைமை குறிப்பிடப்பட்டுள்ளது. M1 - இன் உள்நிலை*

*27-3-1945ல் இருந்தே சீர்கெட்டுப் போக ஆரம்பித்தது. முடிவில் 31-10-1948 அன்று அவர் சகஜமார்க்கப் பயிற்சியை விட்டே விலகிப்போய் விட்டார்.)''*

## 26-5-1947


**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''புலன் உணர்வுகளின் மீது விரைவான கட்டுப்பாட்டை எதன் மூலமாக அடைய முடியுமோ, அப்படி ஒரு சாதனத்தைக் கண்டறிவது பற்றி நீ தீவிர ஆவலுடன் வேலை செய்து உன் அறிவை அதில் ஈடுபடுத்தினாய். இந்த எண்ணம் நேற்றிலிருந்து உன் உள்ளத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. எனவே கடவுள் அதில் இப்போது உதவி செய்தார். அதன்படி I2 - க்கு அது எதற்காக செயல்படுத்தப்பட்டதோ மிகச்சரியாக அதே நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு பிராணாஹூதி அளிக்கப்பட்டது. இந்தவிதமான பிராணாஹூதியை ஏராளமான சுத்திகரிப்பு செய்த பிறகே அளிக்க வேண்டும். முதலில் சம்பந்தப்பட்ட அம்மனிதருக்கு அவ்வப்போது சுத்திகரிப்பு செய்யப்பட வேண்டும். பல்வேறு முறைகளின் மூலமாக சுத்திகரிப்புப் போதுமான அளவுக்கு சிறப்பாக செய்யப்பட்ட பிறகு ஆன்மாவுக்கு அப்பாலும் உள்ள நிலை முழுவதும் முழுமையாகத் தூய்மையடைந்த பிறகு பிராணாஹூதி அளிக்க வேண்டும். இந்தத் தூய்மை நிலை ஆன்மாவைக் கடந்தும் போதுமான அளவு நிலைத்த தன்மை அடைவதற்கு பிராணாஹூதி அளிக்கவேண்டும். இந்தப் பயிற்சி அவ்வப்போது அளிக்கப்பட வேண்டும். ஏனெனில் மனிதனின் இயல்பு ஏதோ ஒன்றில் ஈடுபட்டிருக்கிறது. பிராணாஹூதியின் விளைவு முற்றிலும் கடவுளுடன் இணைப்பதாக இல்லாவிடில், மனித சுபாவத்தினால் ஏதாவது ஒரு குறைபாடு உண்டாக்கப்பட்டுக் கொண்டே இருப்பது தொடரும்.''

**சுவாமி விவேகானந்தா:**

''பற்பல விதங்களில் மற்றவர்களால் தொடப்படாத வெவ்வேறு இயல்பு ஊக்கங்கள் உனக்கு அளிக்கப்பட்டிருந்தன. போலி குருக்களைப் பற்றியும், மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை பற்றியும் ஒரு கருத்து உண்டு; பயிற்சி பெறுகிறவரின் தகுதி மற்றும் திறமை பற்றி சிறிதளவும் கவனம் எடுத்துக் கொள்ளாமல் ஆன்மீகப் பயிற்சியளிப்பதற்கு அவர்கள் முன்னிடம் கொடுத்தார்கள். சீடன் அல்லது சாதகன் முற்றிலும் இருள்மிக்க தன்மையால் மூடப்பட்டிருந்தாலும், அவனுக்குத் தெய்வீக ஒளியை அளிக்கத் துவங்கினார்கள். இது தவறான வழியாகும். ஏனெனில் ஆன்மீக வழிகாட்டியினால் அளிக்கப்பட்ட ஆற்றல் அந்த சாதகனிடம் வளர்ச்சியை

உண்டாக்குகிறது. அந்த சக்தி அல்லது ஆற்றல் எதன் மீது செலுத்தப்படுகிறதோ அதில் தங்கி செயல்படுகிறது.




ஒரு விஷயத்தின் மீது நீங்கள் ஆற்றலை அல்லது சக்தியைச் சேர்த்தால், அந்த விஷயத்தில் ஏற்கெனவே இருக்கும் உட்பொருள்கள், அதனால்

தானாகவே வளர்ச்சியடையும். இவ்விதமாக ஒரு சீடன் அல்லது சாதகரிடம் ஏற்கெனவே காணப்படும் வேண்டாத உட்பொருட்களை நிக்காமல் தெய்வீக ஒளியை அளித்தால் அந்தவேண்டாத விஷயங்கள் மேலும் வலிமையடையும். மேலும் மேலும் அந்த உட்பொருள்கள் மீதே சக்தியை அளித்தால் அது வீக்கம் போல வளர்ந்து திடத்தன்மை அடையும். அதன் பலனாக அதில் அடர்த்தி மிகவும் அதிகமாகும். இதற்கு மாறாக சரியான வழியில் வேலை செய்தால், அதாவது சீடன் அல்லது சாதகனிடம் இருக்கின்ற அவனுக்குக் கெடுதலான அம்சத்தை வெளியே எடுத்து அதை நீக்கிய பின் சக்தியளித்தால் அதன் விளைவு மிகச் சிறப்பாக இருக்கும். சரியான வழியில் பயிற்சியளிக்கும் முறையை நமது பிரபுவாகிய வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜி சாகேப் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளலாம்.''

*குறிப்பு: ஜுன் 7ஆம் தேதி பிற்பகல் மணி 1.05க்கு R1 - காலமானார்.*

## 23-6-1947 (மதுரா)

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''மதுராவில் இன்னமும் கண்டுபிடிக்கப்படாத எத்தனையோ இடங்கள் உள்ளன. வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் எந்த வழியில் சென்றாரோ அது அவர் பிறந்த இடத்திலிருந்தே ஆரம்பிக்கிறது. அந்தச் சிறைச்சாலையின் மேற்கு திசையை நோக்கி, ஒரு ரகசிய வழி இருக்கிறது. அதன் வழியாகத்தான் அவர் கோகுலத்திற்குக் கொண்டு வரப்பட்டார். அந்த இடத்தைக் கண்டுபிடிக்க முடியும். ஆனால் அது இப்போது ஏராளமான மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிற ஒரு பகுதியின் வழியே செல்கிறது. இதனால் பொதுமக்களின் பார்வைக்கு அதை இப்போது கொண்டு வரமுடியாது. அதைச் சுட்டிக் காட்டுவதற்கு மட்டுமே முடியும். அந்த நீள அகலங்கள் பற்றிய சுமாரான, உத்தேசமான ஒரு படத்தை வரையலாம். அரசாங்கத்தின் உதவி கிடைக்கும்போது அதை சரியாக அளவிடுவது சாத்தியமாகும். உனக்கு இந்த விஷயம் மிகவும் சிரமம். உங்கள் பழைமையான ஹிந்து சரித்திரமும் தவறாக எழுதப்பட்டுள்ளது. மதுராவில் புனிதமான இடங்கள் என்று சொல்லப்படும் குறிப்பின்படி யாரோ ஒருவர் ஏதோ ஒரு இடத்தை கனவில் கண்டறிந்தார்; வேறு யாரோ ஒருவர் அவருடைய ஊகத்தை தனது மனத்திருப்தியின் காரணமாக உண்மையானது என்று சான்றளித்திருக்கிறார். அந்த இடங்கள் நிறைய உள்ளன. இந்த நோக்கத்திற்கு அரசின் உதவி இருந்தால், ஸ்ரீ கிருஷ்ணர் வாழ்ந்த சம்பவங்கள் நடைபெற்ற ஒவ்வொரு மூலை முடுக்கையும் வெளிப்படுத்த முடியும். அவருடைய புனித பாதங்கள் பதிக்கப்பெற்று

ஆசீர்வதிக்கப்பட்ட அந்த இடங்களையும் கூட சுட்டிக்காட்ட முடியும். அப்போது இருந்த கோகுலத்தின் வரைபடத்தை, அக்காலத்தில் இருந்த எல்லைகள், மற்றும் நிள, அகல பரிமானங்களோடு முழுமையாகக் கொடுக்க முடியும். மதுரா நகரம் பற்றியும் மிகச்சரியான அளவீடுகளோடு முழுமையான வரைபடம் கொடுக்க முடியும். இந்த இடங்களெல்லாம் பற்றிய இந்த விவரங்களை அச்சிட்டு வெளியிடும் அளவுக்கு துணிவுள்ளவர் யாராவது இருக்கிறார்களா? இந்த இடங்கள் பற்றிய ஒவ்வொரு சரியான இடத்தையும், அவசியமான ஒவ்வொரு தகவலையும், கண்டுபிடித்து தெரிவிப்பதாக இருந்தால், ஒவ்வொரு நாளும் ஆறு மணிநேரம் என்று வேலை செய்தால், அதைச் செய்து முடிக்க ஒருவருடம் கூட ஆகாது. கோகுலத்தில் தவறாகக் கண்டறியப்பட்ட ஒரு இடத்தை நாளை உனக்குக் குறிப்பிட்டுக் காட்டுகிறேன்.''

24-6-1947

**மதுராவில் கோகுலத்தில் – மஹாவனம் என்ற இடத்தில் உள்ள மண்மேட்டில் காலை 10 மணிக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''இரண்டாவது முறையாக உன்னை இங்கே அழைத்து வரவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. **(முதன் முறையின் குறிப்பு: சுயசரிதம் பாகம் 2 / தொகுதி 2, தேதி 14-11-1944)**

இதுதான் அந்த இடம். இந்த இடத்தை ஒருமுறை பார். நீங்கள் எல்லோரும் இங்கே உட்காருங்கள். ஒரு சாதகர் குறைந்தபட்சம் பரப்பிரம்மாண்ட மண்டலத்தையாவது அடைந்திருந்தால் அவருக்கு தீட்சை அளிக்கப்பட வேண்டும் என்று நான் எங்கேயோ குறிப்பிட்டிருக்கிறேன். (இங்கு குறிப்பிடப்படும் தீட்சை என்பது பயிற்சியின் ஆரம்பமல்ல. இது உயர்ந்த ஆன்மீக நிலை அடைந்தவர்களுக்கு எந்நாளும் குருவின் பாதுகாப்பை உறுதி செய்கின்ற உயர்நிலை தீட்சையாகும்). இந்தப் பொறுப்பை என்னிடமே நான் தக்க வைத்துக் கொண்டிருக்கிறேன். யாரைத் தகுதியானவர் மற்றும் சரியானவர் என்று தீர்மானிக்கிறேனோ அவரை நான் பரப்பிரம்மாண்ட மண்டலத்துக்குக் கொண்டு வருகிறேன். இப்போது நேரமும் இடமும் நன்றாக உள்ளன. N3 - ஐ ஏற்கெனவே இந்த நிலைக்கு பிரதிபலிக்கும் வழியாகக் கொண்டு வந்திருக்கிறேன். நீ தீட்சையளிக்கும் வேலை இந்த இடத்திலிருந்து ஆரம்பிப்பது மிகப் பொருத்தமாக இருக்கும்.

இந்த இடத்தில் உன்னால் இந்த தீட்சை அளிக்கப்பட்டது என்பது நமது பதிவுகளில் இடம்பெறும்.”

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

‘‘மேலே குறிப்பிட்டுள்ள தகவல் இந்த மிஷன் வரலாற்றில் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.’’

**ஒரு கேள்விக்குப் பதிலாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மேலும் கூறியது:**

‘‘நான் இங்கு உட்கார்ந்திருந்த அந்தக் காலத்தில் சுற்றிலும் காடுகள் பரவியிருந்தன. யமுனா நதி மிக அருகில் இருந்தது. அதன் பலனாக இந்த மண் மேட்டின் சில பகுதிகள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டு விட்டது. அப்போது இங்கே இந்த இடம் காடாகத்தான் இருந்தது. மாறிவரும் காலங்கள் இதில் சில விளைவுகளை உண்டாக்கியிருக்கின்றன.’’

குறிப்பு: கோகுலத்தில் உள்ள மஹாவனம் என்ற இடத்தில் 1947, ஜூன் 24 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு, அந்த மண்மேட்டில் N3 – க்கு தீட்சை அளிக்கப்பட்டது.

25-6-1947

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘நான் பிறந்தபோது இருந்த என் ஆன்மீகநிலை, அது எதுவாக இருந்தாலும் விவரிக்கப்பட்டுள்ளது. என் ஆன்மீகநிலையின் பங்கை நான் என்னோடு கொண்டு வந்தேன் என்றே சொல்லலாம். தெய்வீகம் சம்பந்தமான ஒளி மிகவும் இயற்கையாகவே என்னிடத்தில் அமைந்திருந்தது. அதுவே என்னை சத்தியநிலை பற்றிய ஞானத்தை நாடியிருக்கச் செய்தது. உள்ளுக்குள் இருந்த அந்த ஒளியில் நான் மூழ்கியிருந்தேன். தியானப் பயிற்சிக்கான அடித்தளம் அதிலிருந்துதான் துவங்கியது. ஆன்மீக நிலைகள் கடந்து செல்லப்பட்டன. பழங்காலப் பெரியோர்களாகிய குருநாதர்களிடமிருந்து நான் ஒளியைப் பெற்றுக் கொண்டிருந்தேன். நான் என்ன காரியம் செய்தாலும் அதை என் சொந்தத் தகுதியிலேயே செய்தேன். கடவுளால் எனக்குக் கொடுக்கப்பட்ட பரிசாக என்னிடம் இருந்த அதே சுவையை மற்றவர்களுக்கு அளித்தேன். இந்தியாவின் பெருமை என் இதயத்தில் எப்போதும் பதிக்கப்பட்டிருந்தது. மிகப்பெரிய மகான்கள், மிகவும் முன்னேற்மடைந்த ஆன்மாக்கள் ஆகியோர் பிறந்த புண்ணிய பூமி இது என்று நினைத்து பெருமையடைந்தேன். இந்த மகான்களை என் சிந்தனையால் ஆராய்ந்து கொண்டும் இருந்தேன்.

அவர்களில் மிக மிக உயர்ந்தவராக என் கருத்தில் தோன்றியவர் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே ஆவார். அவரே இந்த ஆன்மீகத்தின் திசையில் அதிகமான ஒளியூட்டினார். இதில் நானும் பல விஷயங்களைக் கண்டறிந்தேன். இதனுடைய போக்கை மாற்றியமைத்தேன். ஆயினும், இந்தியாவின் மகத்துவம் மிக்க ஆன்மாக்கள் எதை நோக்கி முன்னேறினார்களோ அதை நான் கடந்து செல்லவில்லை. அதாவது பழங்கால இந்திய குருமார்களால் பின்பற்றப்பட்ட வழிகளின் மீது நான் மிகவும் மரியாதையுடன் இருந்தேன். தெய்வீக வெளிப்பாடுகள் என்மீது வந்து இறங்கின. இதற்கே முக்கியத்துவம் தரப்பட்டது. ஏனென்றால் அரேபியாவில் பிறந்த முகம்மது நபியைப் போன்ற அவ்வளவு திறமை உடையவர் யாரும் அப்போது இல்லை.''

### 30-6-1947

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''ஒவ்வொருவருக்கும் ஒரு வேலை கொடுக்கப்பட வேண்டும்; அதற்கு அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். அவரவர்க்கு உரிய வேலைக்கு அவர்களின் இதயமும் கூட அவர்களைப் பொறுப்பாளியாகும். அதாவது ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்பை இதயத்தில் உணரவேண்டும் என்று சொல்கிறேன். புதிய தலைமுறையினர் தான் உற்சாகத்துடன் வேலை செய்யமுடியும். முதியவர்களுக்கு முக்கியமான வேலை கொடுக்கவேண்டும். தெய்வீகக் கடமைகள் அதற்குத் தகுதியுடையவர்களுக்குக் கொடுக்கப்படும். விசேஷ முக்கியத்துவம் உடைய வேலை அளிக்கப்பட வேண்டிய அம்மாதிரி மனிதர்கள், வேறு முக்கியமான வேலையில் ஈடுபட்டிருப்பவர்களாகவும் இருக்கலாம். ஆனால், அந்தோ, நீங்கள் இவ்வளவு சிறிய எண்ணிக்கையில் இருக்கிறீர்கள், அப்படியிருந்தும் அக்கறையின்மையை உங்களால் வெல்ல முடியவில்லை. வருங்காலத் தலைமுறைகளில் இம்மாதிரி ஒருபோதும் நேராமல் கடவுள் காப்பாராக. என் சீடர்களின் வட்டம் (சிறு குழு) ஏற்கெனவே கெட்டுப்போய் விட்டது. நான் செய்த தவறுகள் யாவும் வெளிச்சத்துக்கு வந்துவிட்டன. என் சகாக்களுக்கும் சீடர்களுக்கும் நான் காட்டிய மரியாதைகள், செய்த நன்மைகளுக்கு தாராளமாக பிரதிபலன் கிடைத்துவிட்டது! (இகழ்ச்சியாகச் சொல்கிறார்) (அதாவது ஒரு பலனும் இல்லை) நீங்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டிருந்தால் நீங்கள் செய்ய முடியாத, நிறைவேற்ற இயலாத எந்தக் காரியமும் இல்லை என்பதை இப்போதும் உறுதியாகச் சொல்கிறேன். மேலும் தெய்வீக

உதவியும் உங்களுக்கு இருக்கிறது. அந்த இயக்கத்த்க்கு (இயங்கும் தன்மை – செயல்திறனுடைய அதிர்வு) செயல் வேகம் அதில் உண்டாக்கப்படுவதற்காக உறுதியான தீர்மானம்தான் தேவைப்படுகிறது; உடனே இந்த தெய்வீக உதவி செயல்பட ஆரம்பிக்கிறது. அதில் ஏராளமான உள்ளார்ந்த செம்மைப்படுத்தல் நடந்திருக்கிறது. இப்போது மீதம் இருப்பதிலும் இன்னும் அதிகமாக செம்மைப்படுத்தல் ஏற்படாமல் கடவுள் காப்பாராக. ஒரு மனிதர் ஒரு பொறுப்பின் சுமையில் சிரமப்படும் பட்சத்தில், அவருக்கு அந்தப் பொறுப்பை அளிக்கும் மனிதரும் கூட அதைக் கவனிக்க வேண்டும். அந்த முதல் மனிதர் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற முடிகிறவாறு ஏதாவது செய்யவேண்டும் என்பதே இதன் கோட்பாடாகும். ஒரு அதிகாரிக்கு அளிக்கப்பட்ட தனிச் சலுகைகளை ஒரு அரசன் நீக்கி விடுகிறான் என்றால் அது அந்த அதிகாரியின் சீர்கெட்ட நிலையைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது, மேலும் இந்த மொத்த அதிகார அமைப்பிலும் அந்த அரசனுக்கு இருக்கும் மேலதிகாரத்தையும் தெரிவிக்கிறது. எனவே, இது இப்படி இருப்பதால், இயற்கை யாருக்கு ஒரு பொறுப்பை அளித்திருக்கிறதோ அவருக்கு தனது உதவியைமிகச் சரியான விதத்தில் அளிக்கத் தவறுவது ஒருபோதும் நடக்காது. ஒவ்வொரு சூழ்நிலையிலும், சம்பந்தப்பட்ட அனைவருடைய ஒத்துழைப்புடனும் அந்த வேலையைச் செய்வது மேலானது; மற்றும் பரம்பொருளின் நிலையை அடைந்துள்ள ஒருவரிடமிருந்து உதவியும் வரவேண்டும் என்று நான் கருதுகிறேன். என் சீடர்கள் வழியில் வருங்காலத் தலைமுறைக்காக நான் ஒரு குறிப்பை விட்டுச் செல்கிறேன். அதைப் பெரிய எழுத்துக்களால் எழுதி, முக்கியமாகத் தெரியும்படி வைக்கவேண்டும்:

'எந்த ஒருவரையும், அளிக்கப்படும் நிலைக்குத் தகுதி உடையவராகச் செய்யாமல் அதற்கு முன்பே உயர்ந்த ஆன்மீக நிலைகளுக்குக் கொண்டு செல்லக்கூடாது. யாரையாவது அப்படி உயர்ந்த நிலைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று விரும்பினால் அந்தச் சீடன் மற்றும் வழிகாட்டி (குரு) ஆகிய இருவருமே அதற்காக முனைந்து உழைக்கவேண்டும் என்பது இன்றியமையாதது.'

''பயனுறுதி மிகுந்த வழிமுறைகள் இரண்டு மட்டுமே இருக்க முடியும். ஒன்று ஒரு உயிரற்ற சடலத்தை குளிப்பாட்டி அலங்கரிப்பவரின் கைகளில் கிடக்கும் உடல்போல ஆன்மீக குருவுக்கு தன்னை சரணாகதியாகக் கொடுத்து விடுவது. இன்னொன்று தன்னை சிரமப்படுத்திக்கொண்டு, கட்டளைகளுக்கு இசைந்து நடந்து குருநாதரின் பிராணாஹூதியிலிருந்து

நன்மை பெறுவதற்கு தன்னைத் தகுதியாக்கிக் கொள்வது. இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள் பலர் இருக்கலாம். முதலாவது வழியைக் கடைப்பிடிப்பவர்களும் இருக்கலாம். ஆனால் எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே இருப்பவர்கள் உண்மையைச் சொன்னால் முதலாவது வழியை சரியான முறையில் அனுசரிக்க முடிகிறவர்கள் வேறு எதையும் செய்ய வேண்டியதில்லை. எனினும் அவரும் கூட குருவின் கட்டளைகளுக்கு இசைந்து நடப்பதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டவர்கள் அல்ல. எல்லாச் சூழ்நிலைகளிலும் அது மிக முக்கியமானது; சர்வாதிகாரம் என்பது எப்போதுமே பயனளிப்பதாகும். அதிலும் ஆன்மீக விஷயங்களில் அது மிக விசேஷமானது. இதனால் நான் சொல்லவருவது என்னவெனில், தெய்வீகக் கட்டளைகள் யார்மீது வந்து இறங்குகிறதோ அந்த மனிதருக்கு அம்மாதிரி கட்டளைகளுக்கு இசைந்து நடப்பது பற்றிய விஷயத்தில் எதுவும் சொல்ல உரிமையில்லை.''

**4-7-1947**

**சுவாமி விவேகானந்தா:**

''சிறிது காலத்திற்கு முன் கயாவில் உனது வேலையை நீ செய்து முடிக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். அங்கு நடைபெறும் கலவரம் காரணமாக நீ போக முடியவில்லையென்பதால், இங்கிருந்தே கயாவில் செய்ய வேண்டிய வேலையைச் செய்து முடிப்பதற்கு ஏற்பாடு செய். அந்த வேலை முடிவடைய வேண்டும் என்பதை கவனத்தில் கொள்.

*(15-8-1947 அன்று சுதந்திரத்துக்கு முன் இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின் காரணமாக பீகார் மாநிலத்தின் பல பகுதிகளில் இனக் கலவரங்கள் நடைபெற்றன.)*

**27-7-1947**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது I2 மற்றும் பிறரின் நலத்துக்காகச் சொன்னது:**

''இந்த உலகின் கசப்பான அனுபவங்கள், இனி வருங்காலத்தில் இந்த மிஷனின் வாழ்க்கையைக் கட்டமைக்கப் போகிறவர்கள் எவரோ அந்த மனிதர்களை மற்றும் முக்கியமாக அதில் ஆர்வம் உடையவர்களை நாடச்செய்து, அவர்களிடம் மட்டுமே என் வேலையை செய்ய வைத்துள்ளன. ஒன்றிரண்டு பேரைத் தவிர என் ஆன்மீகக் குழந்தைகள் அனைவரும் தகுதியற்றவர்களாகிப் போனார்கள். குறிப்பிட்ட சூழ்நிலைகளின்கீழ் உன்னையும் (ராம் சந்த்தர்) அந்தக் கூட்டத்தில்

சேர்த்துவிட முடியும். நான் எல்லையற்ற நாகரிகப் பண்பு உடையவனாக இருந்ததால், நீ அதிலும் ஒருபடி முன்னே சென்றுவிட்டாய். இந்த உலகின் காலங்களையும், பண்புகளையும் கருத்தில் கொள்ளாமல் நீ பல விஷயங்களைச் செய்துவிட்டாய். அதன் விளைவுகளை இப்போது அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது. உன்னுடன் இருந்த ஒன்றிரண்டு பேரும் இப்போது விடைபெற்றுச் செல்ல ஆரம்பித்துவிட்டார்கள். இருவர் இல்லையென்றாலும் ஒருவர் இருக்கலாம். பல விஷயங்களை செயல்படுத்த விடாமல் என்னைத் தடுப்பது உன் கடமையா? நீ என்னைத் தடுக்காமல் விட்டிருந்தால் அந்த அடித்தளமே கவிழ்ந்து போயிருக்கும். நீ என்னைத் தடுத்தாலும் அவர்களின் அழிவை நேராமல் தடுக்க முடிந்ததா?''

''என்ன நடக்க வேண்டுமோ அது கட்டாயம் நடக்க வேண்டும். நீ நியாயமில்லாத அளவுக்கு கருணை காட்டினாய். அது உனக்கு கெட்ட பெயர் வாங்கிக் கொடுத்திருக்கிறது. முதலில் எனக்குக் கெட்ட பெயரைக் கொடுத்துவிட்டது. முடிவில் விதிக்கப்பட்டது என்னவோ அதைத்தான் நாம் செய்ய வேண்டியிருந்தது. ஒருவர் தன் முயற்சியால், (இரக்கத்தால்) அதை எவ்வளவுதான் தாமதித்தாலும் முடிவில், அதற்கென விதிக்கப்பட்டது எதுவோ அதுதான் நடக்கும். உண்மையைச் சொன்னால் இயற்கையின் காரியத்தில் நீ தலையிட்டுத் தடுத்தாய். அது எந்தவிதத்திலும் முறையான செயல் அல்ல. ஆயினும், ஒருவன் காலையில் வழிதவறிப்போய் எங்கேயோ சென்றுவிட்டாலும், மாலையில் ஒரு வழியாக வீடு திரும்பிவிட்டால், அவனை யாரும் காணாமற்போனவனாக எண்ணி கைவிட்டுவிடுவதில்லை. எனது ஒருதுளி ரத்தத்தில் நூற்றுக்கணக்கான முனிவர்களையும், ரிஷிகளையும் உருவாக்க முடியும் என்பதாக என் ரத்தம் அமைந்துள்ளது. இந்த ஒரு துளி எல்லையற்றது. தன்னைப் பற்றி அப்படிச் சொன்னால், தன்னால் பொறுத்துக் கொள்ள முடியாத வார்த்தைகளை, உன்னை நோக்கிச் சொல்லும் சக்தியும் தைரியமும் யாருக்காவது இருந்ததா? உண்மையாகவே, முதலில் இருந்தே உன் எளிமை என்னை மிகவும் சிரமப்படுத்தியது. உன் பாதுகாப்புக்கு நான் பொறுப்பேற்க வேண்டியதாக இருந்தது. உனது சகிப்புத்தன்மை, ஒருபோதும் வெளியே சொல்லப்படாத அந்த விஷயங்களில் என் மீது பதிவுகளை, அடையாளங்களை விட்டுச் சென்றிருக்கிறது. அதனால் என்ன ஆயிற்று. அவருடைய விதியை மூடி மறைத்துவிட்டாய்! உன் செயல்களின் விளைவைப் பார்த்தாயா? இந்தப் பொறுமையை நீ தொடர்ந்திருந்தால் யாருடைய வாழ்க்கையாவது மொத்தமும் அழிந்திருக்கும். அது ஏற்கெனவே நடந்து விட்டது. ஆனால் இன்னும் உனது உத்தேசம் (எண்ணம்) நீடிக்கிறது! இது அப்படி

இருக்கக்கூடாது. சங்கல்பம் கட்டாயம் பயன்படுத்தப் படவேண்டும். இந்த விதத்தில்தான் எப்போதும் வெற்றி கிடைக்கிறது. இது எப்படி சாத்தியமாகும்? இது அப்படி இருக்க முடியாது. எத்தனையோ பெரியோர்களாகிய மாஸ்டர்களின் ஐக்கியத்தைத் தன்னுள் கொண்டுள்ள யாரும் இதற்கு முன் வருவதாகத் தோன்றவில்லை! என் பிரியமான ராம் சந்த்தர் ஆகிய நீ இப்போதைய நிலைக்கு வருவதற்கு முன்பே எல்லாவற்றையும் செய்து முடித்திருக்கும்போது, நான் என்ன செய்ய இருக்கிறது? இந்த விஷயத்தை அடைவதற்கு உடலின் பலவீனம் மேலும் உதவியாக இருந்தது. இளைஞர்களுக்கு வெப்பமும் சூடும் இன்றியமையாதவை. இதை நான் சூரியனுடைய வெப்பம் என்றே குறிப்பிடுவேன். இதையும் கூட நீ குளுமையாக மாற்றியமைத்து விட்டாய். இம்மாதிரி சூழ்நிலையில் உடலின் ஆரோக்கியம் எப்படி முன்னேறும்? உடல்நலம் சிறப்பாக இருந்தால் இம்மாதிரி ஒரு அரிய சக்தியும், திறமையும் கொண்ட ஒருவர் பூமியையே தலை கீழாகத் திருப்பியிருப்பார்! பரவாயில்லை, நடந்ததை இப்போது மறந்துவிடுவோம். இனி வரவேண்டியதைப் பற்றி கவனிக்கலாம். இப்போது செய்யப்பட வேண்டியது என்னவென்றால், ஆன்மீகத்தில் விருப்பமுள்ளவர்கள் அனைவரும், மிஷன் சம்பந்தமான வேலையை குறைந்தபட்சம் உன்னுடைய ஆயுட்காலத்திலாவது, தங்கள் முக்கியமான கடமையாகக் கருதி அதில் உறுதியோடு இணைந்திருக்க வேண்டும். அதை உருவாக்குவதற்கு காலம் ஆகும். எப்படியிருந்தாலும் சக்கரம் சுழல ஆரம்பித்தால், தேர் தானாகவே நகரும். சக்கரங்களுக்கு அடிக்கடி மசகு எண்ணெய் இடவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. அதற்கு யாராவது ஒரு மகாபுருஷர் நிச்சயமாக வந்து சேருவார்.''

*(இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது M1 - இன் சீர்கெட்டுவரும் ஆன்மீக உள்நிலையைப் பற்றிய விஷயமாகும்.)*

6-8-1947

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் வெளிப்படுத்திக் கூறியது:**

''அன்புள்ள R2 இரண்டாவது வட்டத்தின் முழுநிறைவு நிலையைப் பெற்றுள்ளார் என்பது நன்றியுடன் தெரிவிக்கப்பட வேண்டிய விஷயம். இது பற்றி ஏற்கெனவே சிறுகுறிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் நன்றியுடன் சொல்லப்பட வேண்டியது R8 - இரவு மணி 7.05 க்கு இரண்டற கலந்த நிலையின் மண்டலத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறார்

என்பதாகும். கடவுள் அவருக்கு உறுதியான தன்மையையும் மேலும் படிப்படியாக முன்னேற்றத்தையும் அருள்வாராக! அப்படியே நடப்பதாக!''
*(15-8-1947 அன்று இந்திய ஆங்கிலேய ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடைந்தது)'*

### 18-8-1947

**சுவாமி விவேகானந்தா:**

''நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு இயற்கையிலிருந்து தகவல் வந்திறங்கியுள்ளது. உன் ஆன்மீக நிலை பெரும்பாலும் கிட்டத்தட்ட முழு அளவு சமநிலை பெற்றுள்ளது. தனி மனிதர்களோ, ஒரு குழுவோ, அல்லது எந்த ஒரு சமூகத்திலும் யாரைப் பற்றியும் எந்தக் கவலையும் உனக்கு இருக்கக்கூடாது. பஞ்சாபில் நடந்த அழிவுப்பணி சிலசமயம் உனக்கு துன்பத்தையும், மனவேதனையையும் தருகிறது. ஆயினும் உன் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக, எப்படி அது திட்டமிடப்பட்டிருக்கிறதோ மற்றும் விதிக்கப்பட்டுள்ளதோ, அப்படியே இயற்கையின் வேலையை நிறைவேற்றுவதில் யாரும் எதுவும் கருத்து சொல்லமுடியாது. இந்த விநாடி முதல் எப்படி உனக்கு கட்டளையிடப்பட்டுள்ளதோ அப்படி அதைச் செய்து முடிக்கும் இந்த அழிவுப்பணியை நீ எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் எந்த ஒரு குறிப்பிட்ட குழு அல்லது சமூகமாயினும், கிட்டத்தட்ட அனைவரும் அதே விதியின்படி துன்பப்பட வேண்டும். சில குறிப்பிட்ட அம்சங்கள் மொத்தமாக அழியும்படி செய்தாலன்றி இந்த உலகில் நீ மாற்றங்களை உண்டாக்க முடியாது. இந்த உலகம் முழுவதன் பிரச்னையும் உன் முன்னால் இருக்கிறது. இனி வரப்போகும் காலத்தில் இன்னும் எந்தவிதமான பேரழிவை நீ செய்யப்போகிறாய் என்பதை உன்னால் கற்பனை செய்யஇயலாது. இந்தியாவின் வேலைக்குப் பிறகு ஐரோப்பாவில் உனக்கு வேலை இருக்கிறது. விரைவிலோ அல்லது தாமதமாகவோ இவ்விரண்டுமே ஒரே விதியை ஏறத்தாழ சந்திக்க வேண்டியுள்ளன. உண்மையான விதத்தில் ஒரு புதிய ஒழுங்கின் அடித்தளம் எப்போதுமே எலும்புகள் மற்றும் சாம்பலின் மீதே அமைக்கப்படும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உனக்கு சக்ராயுதத்தின் வடிவில் கொடுத்திருக்கும் விசேஷ சக்தி, இந்தப் பேரழிவை நிறைவேற்றுவதில் கடைசி ஆயுதமாக இருக்கும். ஆனால், குறிப்பாக இதைப் பயன்படுத்தச் சொல்லி உத்திரவு கிடைத்தாலன்றி நீ அந்த ஆயுதத்தைப் பயன்படுத்தக்கூடாது. அது (சக்ராயுதம்) ஒரு முழுமையான அழிவை உண்டாக்குவதற்கே பயன்படுத்தப்பட வேண்டும். பஞ்சாப்பில் நீ வேலை செய்து கொண்டிருந்த

போது எந்த ஒரு கூட்டத்தார், தனி மனிதர்கள் அல்லது சமூகங்களின் மீதான உனது சொந்த விருப்பையோ அல்லது வெறுப்பையோ பற்றிய எந்த கட்டுப்பாட்டையும் நீ பிரயோகம் செய்ய வேண்டியதாக இருக்கவில்லை. கராச்சிக்கு உன் பயணம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. உன்னுடைய இயக்க சக்தி எல்லா இடங்களிலும் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. வர்த்தக சமூகத்தின் பாணியில் இந்திய அரசாங்கம் வேலை செய்வதை நான் விரும்பவில்லை. இயற்கையின் விருப்பத்துக்கு எதிராக காந்திஜி இதன் விவகாரங்களில் குளறுபடி செய்கிறார். ஆனால் என்ன இருந்தாலும், ஒரு அரசியல்வாதியாக சாதாரண மக்களை முன்னேற்றுவதற்கு அவர் சிறப்பாக வேலை செய்திருக்கிறார். அவருடைய அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் அவரை நீ தடுக்க வேண்டுமென்று உனக்கு உத்திரவிடுகிறேன். ஆனால் சிறிது காலம் பொறுத்திரு. தற்போதைக்கு இந்த நாட்டை சரியானபடி வழிநடத்த இந்தியாவில் ஒரே ஒருவரைக் கூட நான் பார்க்க முடியவில்லை.”

19-8-1947

**சுவாமி விவேகானந்தா:**

‘‘இந்தியாவில் அரசியல் மாற்றம் மீண்டும் தேவையாக இருக்கிறது. ஆங்கிலேய அரசாட்சியை நாம் முழுமையாக நீக்க வேண்டும்.’’

*(சுதந்திர இந்தியாவில் முதல் கவர்னர் ஜெனரலாக மவுண்ட் பாட்டன் பிரபுவை சில காலம் வைத்திருப்பதற்கு இந்திய அரசாங்கம் முடிவெடுத்ததைப் பற்றிய குறிப்பாக இது இருக்கலாம்.)*

‘‘நாம் பல இடையூறுகளை சந்திக்க வேண்டும்.’’

*(இந்தியாவைப் பிரித்து சுதந்திர பாகிஸ்தானை உருவாக்கியதை அடுத்து ஏற்பட்ட வகுப்புக் கலவரங்களைப் பற்றிய குறிப்பு இது.)*

‘‘அகஸ்திய முனிவர் ஏற்கெனவே அங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார். இது விஷயமாக அவருக்கு உத்தரவுகளை அனுப்ப நீ தாமதம் செய்ததால், நானே நேரடியாக அவருக்கு உத்தரவிட்டேன். வருங்காலத்தில் இவ்விஷயத்தில் நீ கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். உத்தரவுகள் அனுப்புவது தாமதமாகக்கூடாது. அவருடைய பணிகளின் விளைவை அவர் உனக்குத் தெரிவிப்பார். உன்னுடைய வேலையில் ஒரு பகுதி R2 - விடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவர் தென்னிந்தியாவில் வேலை செய்து அங்கே நிஜாமின் ஆட்சியைக் கவிழ்ப்பதில் சென்று முடியும் சில சூழ்நிலைகளை ஹைதராபாதில் உருவாக்குவார். அங்கே

மக்கள்தொகையின் ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பாதுகாப்பதில் கவனம் எடுத்துக்கொள்.''

குறிப்பு: 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23ஆம் தேதி பஞ்சாப்பில் வேலை நிறுத்தப்பட்டது.

## 23-9-1947

**சுவாமி விவேகானந்தா:**

''இந்த மிஷன் அமைப்பின் வருங்காலம் எதை நம்பிச் சார்ந்து இருக்கிறதோ, அந்த முக்கியமான கூட்டத்தின் பார்வையாளனாக நான் இங்கே இருக்கிறேன். இந்த மிஷனின் இயக்க அமைப்பு சுலபமாக, லகுவாக இயங்க வேண்டுமென விரும்புகிறேன். எந்த ஒரு கட்டத்திலும் பிறரைத் துன்புறுத்தும் அல்லது பிறர் மீது வஞ்சம்கொள்ளும் எண்ணம் வரக்கூடாது. பொதுவான நோக்கத்துக்காக நீங்கள் யாவரும் ஒன்றுபட்டு இணைந்திருக்க வேண்டும். ஒரு உறுதியான கயிற்றின் இழைகளைப்போல பின்னிப் பிணைந்தவர்களாக உங்களை உருவாக்கிக்கொள்ளுங்கள். இளைஞர்களே, வருங்காலம் உங்களை நம்பியிருக்கிறது. தனி ஒருவனாக முயற்சி செய்து என் மிஷனை (ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனை) நான் உருவாக்கினேன். அதன் பலனைப் பாருங்கள்! உலகமெங்கும் அது ஆதரவு பெற்றிருக்கிறது. என் வெற்றியின் அடிப்படையாக தன்னம்பிக்கை ஒன்று மட்டுமே இருந்தது. உங்கள் மிஷன் முன்னேற்றம் அடையுமா? என்று நீங்கள் கவலைப்படுவது தேவையில்லை. ராமேஸ்வரத்தில் நான் சொன்ன வார்த்தைகள் உண்மையாக நிகழும். உங்கள் அனைவருக்கும் என் மாஸ்டர் நல்லாசிகள் அளிக்கிறார். உங்கள் மிஷன் முன்னேற்றமடைந்தால் உண்மையில் அது என் வெற்றியே ஆகும். என் குருநாதர் ராமகிருஷ்ண பரமஹம்சரின் புனிதமான பெயரில் அர்ப்பணித்து நான் ஆரம்பித்த எனது மிஷன் இப்போது, ஆன்மீகத்தை விட்டுவிலகிய ஒரு அமைப்பாக இருக்கிறது. அதில் சிறிது முன்னேற்றம் ஏற்படலாம். இப்போது என் மிஷன் இதுதான். நீ பௌதீக உடலைவிட்டு மறைந்த பிறகு இதன் பெருமையை மக்கள் தெரிந்து கொள்வார்கள். இதற்காகத்தான் நான் வேலை செய்கிறேன். மேலும் பல முனிவர்களும் அப்படியே செய்கிறார்கள்.''

## 26-9-1947 (நள்ளிரவு 12.15 மணி)

**சுவாமி விவேகானந்தா:**

''இந்த மிஷனின் ஒவ்வொரு தனிமனிதரும், அவரவருக்கு ஒப்படைக்கப்பட்ட வேலைக்கு தங்களைப் பொறுப்பாளராக உணரவேண்டும். சர்ச்சைகள்

இருக்கக்கூடாது. கண்டிப்பான தன்மை அனுசரிக்கப்பட வேண்டும். நீங்கள் நான்கு அல்லது ஐந்து பேர்தான் இருக்கிறீர்கள் என்றாலும் பரவாயில்லை. ஒற்றுமையாக வேலை நடக்கும்.''

21-10-1947

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''நமது மிஷன் சம்பந்தப்பட்ட நிர்வாக விஷயங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை உனக்கு அளிக்கிறேன். நீ என்ன செய்ய விரும்புகிறாயோ, என்ன செய்ய உத்தேசிக்கிறாயோ, அந்த தண்டனைகள் மற்றும் பரிசளிப்புகள் எதுவாயினும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொருவருக்கும் ஆன்மீகநிலைகளை நான் அளித்திருக்கிறேன். உன் சிறு குறிப்புக்கு ஏற்ப நான் அவற்றை நீக்கவும் முடியும். இந்த மனிதர்கள் அனைவரின் விதியும் உன் கைகளில் உள்ளது. யாராவது உன்னைவிட்டு ஒதுங்கிச் சென்று, அதன் பிறகும் நன்மைகளை அடைய விரும்பினால் அது நடக்காது. என்னையே நான் உன் கைகளில் சரணடையச் செய்திருக்கிறேன்.''

24-10-1947

**சுவாமி விவேகானந்தா:**

''எரிமலை பொங்கியதால் நிலமாக உருவாகிய தட்சிண பீடபூமி. (இந்தியாவின் தென்பகுதியை உள்ளடக்கிய பரந்த முக்கோண வடிவமான நிலப்பரப்பு) இவ்வுலகில் முதன்முதலாக சமுத்திரத்தின் நீர்மட்டத்திற்கு மேலே தோன்றிய நிலப்பகுதி அது. எரிமலை பொங்கி வழிவது முதலில் அங்கு தான் துவங்கியது. அதே எரிமலைக்கு குழம்பிலிருந்து பலவிதமான மண்வகைகள் உருவாகி உலகின் பல்வேறு பகுதிகளிலும் சென்று படிந்தன. தத்துவ ஞானமும், தக்காணப் பீடபூமியில்தான் ஆரம்பித்தது. பிறகு உலகின் பல பகுதிகளில் ஒரேசமயத்தில் எரிமலைச் சீற்றங்கள் உண்டாகி நிலப்பகுதிகள் உருவாயின. போகப்போக இவை மிகப்பெரிய கண்டங்களாக மாறின. அதாவது தக்காணப் பீடபூமியில் முதன்முதலில் எரிமலை பொங்கி நிலப்பரப்பு உண்டாயிற்று. அடுத்து எகிப்து தோன்றியது. வருங்காலத்தில் ஐரோப்பாவில் மீண்டும் ஒரு எரிமலை பொங்கும் என்று எதிர்பார்க்கிறோம். அதன்பயனாக ஒரு பகுதி நிலப்பரப்பு கடலில் அமிழ்ந்து போகும் (எனினும் அதற்கு சில நூற்றாண்டுகள் ஆகும்).''

25-10-1947

**ராஜயோகத்தைக் கண்டறிந்த ரிஷி கூறியது:**

''இதை நான் கண்டறிந்து, ஆரம்பித்தேன் என்பதில் சந்தேகமில்லை. நீண்டகாலம் என்னிடமிருந்து மனிதர்கள் இதில் பயிற்சி பெற்று வந்தார்கள். இந்த நிலைவரை சென்றவர்கள் மிக அரிதானவர்களே. கடவுள் அதாவது புனிதமான ஒரு முனிவர் பிறக்கிறார். அவர்களுடைய வாழ்க்கை கஷ்டங்களும், குழப்பமும் உடையதாகவே அமைகிறது. அவர்களின் காலத்திற்குப் பிறகு அவர்கள் பாராட்டப்படுகிறார்கள். நான் இந்த ராஜயோக முறையைக் கண்டறிந்தேன். ஆனால் அதை எழுதிவைப்பதில் உறுதி கொள்ள என்னால் முடியவில்லை. முடிவில் இது ஒரு பயிற்சி முறையாக வந்தது. பொதுவாக மக்கள் உனக்கு (ராம் சந்த்தருக்கு) எதிராக இருக்கிறார்கள் அல்லது நீ சொல்வதை முழுமையாக ஏற்றுக் கொள்ளாமல் இருக்கிறார்கள். ஆயினும் இயற்கையின் செயல்பாட்டைத் தடுப்பதற்கு யாரும் இல்லை. இந்த விஷயங்கள் உன்னுடைய நிலைமைகளும், உனக்கு எதிரான நிகழ்வுகளும் கூட பழங்காலப் பெரியோர்கள் சந்தித்த நிலைபோலவே இருக்கிறது என்ற உண்மையைச் சுட்டிக் காட்டுகின்றன. இது வியப்பூட்டுவதாக இருக்கிறது. இது தேவைக்கு ஏற்றவாறு தன் சங்கல்பத்தினால் எதையும் உருவாக்கும் கடவுளின் தனி உரிமையின் வரம்புக்குள் இருக்கிறது. வழிகாட்டியாகிய குருவின் சிறப்பான திறமையும் இதில் ஒரு விசேஷத் தேவையாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அது இல்லாவிட்டால், ஒலி கூட அங்கே சென்றடையாது. அவருடைய அடிமைகள் – அதாவது அவருக்கே சொந்தமானவர்கள் எத்தனைபேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது யாருக்குத் தெரியும்!''

**நான் எழுதிய 'ராஜயோகத்தின் செயல்திறன்' என்ற புத்தகம் சம்பந்தமாக நான் (ராம் சந்த்தர்) கேட்ட கேள்வி ஒன்றுக்கு, அந்த ரிஷி கூறிய பதில்:**

''ஆங்கிலத்தில் நீ எழுதியிருக்கும் புத்தகத்தில் இனிமேலும் அதிகமாக எதையும் சேர்க்கவேண்டிய தேவை இல்லை. நீ என்ன எழுதியிருக்கிறாயோ அது சரிதான். இந்தப் புத்தகத்தில் நீ எழுதியிருக்கும் 'மையமண்டலம்' என்பதைப் புரிந்துகொள்ளும் திறன் உடையவர்கள் யார் இருக்கிறார்கள்? இந்த ரகசியம் இதுவரையில் ஒருபோதும் வெளிப்படுத்தப்பட்டதில்லை. மக்கள் அந்த நிலையை அடையும் காலத்தை கடவுள் விரைவில் கொண்டு வருவாராக! அப்போது ஒருவேளை மக்கள் இதைப்பற்றி அறியலாம். அங்கே சென்றடைவதும் சுலபம்தான். ஆனால் அந்த இடம் பற்றி விழிப்புணர்வை சிதையாமல் உண்டாக்குவது மிகவும் சிரமம். தனது ஜீவிதத்தின் ஒவ்வொரு அணுத்துகளும், கடவுளுடன் ஐக்கியம் அடைந்த ஒருவர் மட்டுமே அதைப்

பற்றிச் சொல்ல முடியும். ஃபடேகரைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய மாஸ்டர் மகாத்மா ராம் சந்த்தரா ஆகிய அந்த உயர்ந்த ஆன்மாவுக்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இந்த அளவு உயர்நிலை பெற்ற மதிப்புக்குரிய பெரியவரை, உதாரண மனிதரைக் காண்பது மிகவும் அபூர்வம். அவர் தன் உடலைப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார். தனது எண்ணத்தின் ஆற்றல் மூலமாக தன் ஜீவிதத்தின் அணுத்துகள்கள் அனைத்தையும் அவர் மாற்றம் அடையச் செய்திருக்கிறார்.''

**ராஜயோகத்தைக் கண்டுபிடித்த வணக்கத்திற்குரிய ரிஷி மேலும் கூறியது:**

''இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பகுதியும் மிகச் சரியானதாக இருக்கிறது. நீ வரைந்து குறிப்பிட்டுக் காட்டியுள்ள மண்டலங்கள் உண்மையானவை.''

''இந்த மண்டலங்களுக்குள் இருக்கும் மண்டலங்கள் அதாவது இந்த விரிவான மண்டலங்களுக்கு உட்பட்டுள்ள பகுதிகள் எண்ணற்ற விதமாக இருக்க முடியும். பதஞ்சலி முனிவருக்கு அவருடைய காலத்தில் இவை வெளிப்படுத்தப்படவில்லை. அவராலும் இதைப்பற்றி அறிய முடியவில்லை. அவருக்கு முக்தியடைய வேண்டும் என்ற ஏக்கம் மட்டுமே இருந்தது. ஆனால் தன் ஆயுட்காலத்தில் அவரால் அதை அடைய முடியவில்லை. உள்ளுணர்வு (அகத்தூண்டுதல்) சார்ந்த அனுபவத்திற்கான திறமை ஒருவருக்கு விழிப்படையும்வரை தனது எழுத்துக்களால் அவர் பிறருக்கு தவறாக வழிகாட்டக் கூடாது. இந்த உலகில் ஒருவர் யாராக இருந்தாலும் அவருடைய சிந்தனையில் வருவது என்னவாக இருந்தாலும் அதை எழுதி விடுவது வழக்கமாக ஆகியிருக்கிறது. எத்தனையோ விதமான சமாதிநிலைகள் (அதீத உணர்வுநிலைகள் - சாதாரண உணர்வுறு நிலைக்கு அப்பாற்பட்ட மிக உயர்ந்த உணர்வுறுநிலைகள்) எத்தனையோ மகான்களால் விவரிக்கப்பட்டுள்ளன. ஆனால் நீ குறிப்பிட்டுச் சொல்லியிருக்கும் இந்தவிதமான உணர்வுறு நிலைகள் வேறு எங்கும் விவரிக்கப்படவில்லை.''

27-10-1947

**சுயஅனுபவம் (சுவாமி விவேகானந்தா ஒப்பிட்டுப் பார்த்து ஏற்றுக்கொண்டது):**

‘‘ராஜயோகத்தின் செயல்திறன் புத்தகத்தில் மையமண்டலம் பற்றிப் படித்துக் கொண்டிருந்தபோது, அதில் குறிப்பிட்டிருப்பதற்கும் மேலாக, இலங்கையின் அருகே, மேற்குமலைத் தொடர்ச்சியின் ஒரு பகுதியில், கடற்கரையில் மிகவும் அழிவை உண்டாக்கக்கூடிய ஒன்றை என் மனக்காட்சியில் பார்த்தேன். மேற்குமலைத் தொடர்ச்சியின் தென்பகுதியின் மூன்றில் ஒரு பாகம் அளவு அது அதிகமாக இருப்பதைப் பார்த்தேன். இயற்கையின் மேலும் முக்கியமான விஷயங்களும் கூட, குறிப்பாக மற்ற இடங்களில் இருக்கலாம். ஆயினும் எனக்கு அதில் அக்கறை இல்லாததால், தானாகவே அது எனக்குத் தெரிவிக்கப்பட்டாலன்றி, நானாக அதைப் பற்றி அதிகம் ஆராயவில்லை.’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘இம்மாதிரி ஆராய்ச்சியை வேறு யாராவது முயற்சி செய்யும் தைரியம் கொள்ள முடியுமா? தேவைப்பட்டால் மற்றும் தேவைப்படும்போது இம்மாதிரி ஆராய்ச்சிப் பணிக்கு உன்னை நான் அனுப்பலாம். வெறும் எலும்புக்கூடு போல மெலிந்திருக்கும் உன்னிடமிருந்து இம்மாதிரி விஷயங்களைக் கற்றறிவதற்கு யார் வரப்போகிறார்கள்?’’

‘‘இந்தியாவில் ப்ளாட்டினம் கண்டறியப்பட்டுள்ளது. அஸ்ஸாமில் தங்கம் ஏராளமாக இருக்கிறது. ஆனால் இதுவரை யாரும் அதைக் கண்டறியவில்லை. இந்தியாவில் கனிமவளமாகிய மறைக்கப்பட்ட புதையல் இருக்கிறது. நிலக்கரி ஏராளமாக இருக்கிறது. இமயமலைப் பகுதியில் மற்றும் அதன் கீழே சிறிது தூரத்துக்கு மறைந்துகிடக்கும் புதையலை நீ காணலாம். அஸ்ஸாமின் சில்ஹெட் நகரில் கனிமவளம் மிக அதிகமாக இருக்கிறது. சில்ஹெட் நகரின் புறநகர்ப்பகுதிகள் மற்றும் அதையடுத்துள்ள பகுதிகளில் அது அதிகமாக உள்ளது. இந்தியாவில் இப்போது இல்லாமல் போய்விட்ட ஒரேவிஷயம் தைரியம்தான். பாகிஸ்தானில் உள்ள பகுதிகள் இன்னும் சிறிதுகாலம் வறட்சியாகவே இருப்பதை நீ காண்பாய். இந்தியாவின் மேன்மை வளர்ந்து அது ஒரு வல்லரசு நாடாகும். ஆனால் (இந்தியாவின் தந்தை என்று சொல்லப்படுகிற) காந்திஜி இருக்கும் வரை எதிர்பார்க்கிறபடி விஷயங்கள் நடைபெறாது. அவர் தவறான நடைமுறைகளை அனுசரிக்கிறார்.’’

‘‘இந்தியா விஞ்ஞானிகளின் விருப்பமான நட்சத்திரமாக இருக்கிறது. அணுவைப் பற்றிய கொள்கை முதன்முதலில் இந்தியாவில்தான் ஒரு பெரிய முனிவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்த ஒவ்வொருவரும் ஒரு ரிஷியாக இருந்தார். ஆன்மீகத்தின் மதிப்பை சாதாரண மக்கள் புரிந்துகொள்ளாமலிருக்கிறார்கள்.’’

**நான் கேட்ட ஒரு கேள்விக்கு சுவாமி விவேகானந்தா கூறிய பதில்:**

‘‘அழிவுப்பணி முழுமை அடையட்டும். அதே நோக்கத்திற்காகத்தான் நீ இங்கு வந்திருக்கிறாய். இதுதான் உனக்கு முக்கியமான வேலை. மற்றவர்கள் பிறகு வந்து பெரிதாக்குவார்கள். (சிறிது இடைவெளி) உலகில் மிக அரியதான மாணிக்கம் என்ற விலை உயர்ந்த கல், காஷ்மீரின் வடமேற்கு மூலையில் புதைந்திருக்கிறது. ஆனால் மற்ற தனிமங்கள் போல அதிக அளவில் இல்லை. வெள்ளி இந்தியாவில் எல்லா இடங்களிலும் இருக்கிறது. இன்னும் எத்தனையோ விஷயங்களை உனக்கு நான் சொல்லமுடியும். ஆயினும் தற்போது இதற்கு எந்த மதிப்பும் இல்லை. இறகுப் பேனாவினால் காகிதத்தில் கிறுக்குவதைத் தவிர வேறு ஒரு பயனும் இல்லை.’’

13-11-1947

**சுவாமி விவேகானந்தா:**

‘‘உலகில் உள்ள அனைத்தையும் இறுதியில் அழிப்பதாகிய கடவுளின் புனிதப் பணிக்காக நீ நியமிக்கப்பட்டிருக்கிறாய். நான் முன்பே உன்னிடம் சொல்லியிருப்பதுபோல, அம்மாதிரி வேலைக்கு நீயே வழிநடத்தும் சக்தியாக இருப்பாய். இந்த வேலையைத் தொடர்ந்து செய்து முடிப்பதற்கு, (அச்சமயத்தில் வருகிறவருக்கு) குறிப்புரைகளையும் கொடுப்பாய். இந்த வேலை உனக்கு விசேஷமாக ஒதுக்கப்பட்டுள்ளது. மற்றவர்கள் உன் கட்டளையின் கீழ் வேலை செய்வார்கள். பல முனிவர்கள் இருப்பார்கள். ஆனால், நீயே ஆன்மீக வரலாற்றின் அல்லது அழிவுப்பணியின் தனி அடையாளமாக இருக்கிறாய். இந்தக் கடைசிவிதமான வேலையைச் செய்யும் மனிதர் மையமண்டலத்தில் நீந்திக்கொண்டிருப்பார் என்பது உண்மைதான். அவர் உனக்கு அடுத்து வரும் மகாபுருஷராக இருப்பார்.’’

22-11-1947

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘பக்திமார்க்கம் எனப்படும் யோக வழிமுறையை ஆரம்பித்தவரும், மூவுலகும் சுற்றிவரும் சக்தி உடையவரும், இசையில் வல்லமை உடையவரும் ஆகிய நாரத முனிவர் பக்தியுடன் பாடல் இசைத்ததன் வாயிலாக அன்பின் வடிவமாக மாறிய ஒரு முனிவர் ஆவார். அவருடைய இசை அவருடைய உள்ளார்ந்த குரலுடன் இணைப்பு உடையதாகி, அதில் அவர் ஐக்கியமடைந்து, அங்கே தன் எல்லையை விரிவாக்கிக் கொண்டார். அவரிடமிருந்து ஆசைகள் நீங்கிவிட்டன. அதற்கு அவர் சிறிது காலம்

எடுத்துக்கொண்டார். இதயமண்டலத்தின் கீழான நிலையைவிட சற்று உயரிய ஒரு நிலைவரை அவருடைய விரிவாக்கம் இருந்தது. அவர் இந்த ஏணியின் கடைசிப் படிகளுக்கு மிகவும் கீழே இருந்தார் என்று நீ சொல்லியிருப்பது சரிதான். ஆனால் 'மிகவும்' என்ற வார்த்தையை எடுத்துவிட்டால் இந்த விளக்கம் இன்னும் சரியாக இருக்கும். அந்த ஏணியின் கடைசிப்படிக்கு சற்றுமேலே அல்லது முதல்படிக்கும் இரண்டாவது படிக்கும் இடையே அவருடைய உயர்நிலை இருந்தது என்று சொல்லலாம்.''

**சுவாமி விவேகானந்தா:**

''வட்டங்களை உடைய ஒரு ஏணியை நீ அமைத்தால் நாரத முனிவர் கீழே உள்ள இரண்டு வட்டங்களுக்கு இடையே, சுற்றிக் கொண்டிருக்கிறார் எனலாம். என் கருத்துப்படி பொதுவாகப் புரிந்து கொள்வதற்காக, அவர் அந்த ஏணியின் எட்டில் ஒரு பங்கு அளவு நிலையில் இருக்கிறார் என்பேன்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''ராஜயோகத்தின் செயல்திறன் என்ற உன் புத்தகத்தை பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் சரிபார்த்திருக்கிறார். அவர் திருத்த வேண்டிய தேவை எதுவுமில்லை. தேவைக்கேற்றபடி மொழியின் நடையை சரிப்படுத்தலாம்.''

**சுவாமி விவேகானந்தா:**

''நான் உன்னிடம் உண்மையைச் சொல்கிறேன். நீ எழுதிய புத்தகங்கள் ஈடு இணையற்றவை. இந்தப் புத்தகங்களைப் படிக்கும் மனிதருக்கு அதைப்புரிந்துகொள்ளும் சிறப்புத்திறன் (நல்லறிவு) தேவைப்படும். மையமண்டலம் இயற்கையின் ரகசியத்தை வெளிப்படுத்தியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. உனக்கு முன் இதைப் பற்றிய ஞானம் யாருக்கும் இருந்ததில்லை என்பதை உறுதியாகச் சொல்கிறேன். உனது முதல் புத்தகமாகிய 'சகஜமார்க்கத்தின் பத்து நியமங்களின் விரிவுரை' பற்றி பகவத்கீதைக்குப் பிறகு மிகச் சிறந்த முதல் புத்தகம் இதுதான்'' என்று நான் சொன்னதை நினைவுபடுத்திக்கொள்.''

## 8-12-1947 (உடல் நலமின்றி இருந்த சமயம்)

**சுவாமி விவேகானந்தா:**

''பொதுவாக மக்களை மிகவும் மயக்குகின்ற எத்தனையோ விஷயங்கள் இவ்வுலகில் உள்ளன. அவை ஒரு நதியில் அல்லது ஏரியில் செல்லும் விரைவுப் படகுகள் போல அவர்களை இழுத்துச் செல்கின்றன. மக்களுக்கு

அதுவே மிகவும் கவர்ச்சியாகத் தோன்றுகிறது. எனவே, தங்கள் கண்களின் முன்னே தெரியும் மற்ற விஷயங்களைப்போல சத்தியநிலை அவ்வளவு பிரகாசமாக, மனம் கவரும் வகையில் இல்லாததால், அதை நோக்கிச் செல்வதற்கு அவர்களுக்கு நேரம் இல்லை. அவர்களுடைய இதயங்களில் உண்டாக்கப்பட்ட ஆர்வத்தின் காரணமாக அவர்கள் செய்த எத்தனையோ செயல்கள் பல்வேறு துன்பங்களாக மாறிவிட்டன அல்லது ஒவ்வொரு படிவமாகப் படிந்து, அதன் மீது நடந்து போகமுடியும் என்னும் அளவுக்கு இறுகி, பெரும்பாறைப் போல ஆகிவிட்டன. ஒன்றின் மீது ஒன்றாக இப்படி கணக்கற்ற அளவு படிவங்கள் அடுக்குகளாக உருவாகி விட்டன. ஏனென்றால் உலகின் துவக்கத்திலிருந்து எண்ணற்ற பிறவிகளை அது அடைந்து அந்த அனுபவங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. இதிலிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு சற்று மேலான ஏதோ ஒரு உயர்ந்த சூழ்நிலைக்குச் செல்வதற்கு இன்னும் கூட விரும்பாமல் இருப்பதால் அவர்கள் அடையப்போகும் விதியை எண்ணிப்பாருங்கள். துன்பங்களை அனுபவிப்பதன் மூலமாக இந்தப் பழைய அடுக்குகள் அம்மனிதனின் மீது தங்கள் பிடியை மற்றும் திறனை இழக்கத் துவங்கும்போது அம்மனிதன் எப்படியோ ஏதோ ஒருவிதத்தில் பரம்பொருளைப் பற்றிய எண்ணத்துடன் தொடர்புகொள்கிறான். பிறகு இந்த அடுக்குகள் இன்னும் உயர்ந்த தரத்தில் நீக்கப்பட்டு, சுத்திகரிக்கப்படும்வரையில் போதுமான அளவுக்கு இது நடந்து கொண்டே இருக்கிறது. அதற்குப் பிறகு பரம்பொருளின் மீதான அவனுடைய ஆர்வம் செம்மையடையத் (சிறப்பாக உறுதிபெற) துவங்குகிறது. அவனுடைய பழைய கவர்ச்சிகள் அவனுடைய பாதையில் குறுக்கிடாமல் இருக்கும்பட்சத்தில், அவன் இப்போது தனது உண்மையான ஆன்மீக வாழ்க்கையை ஆரம்பிக்கிறான். நமது லாலாஜியைப் போல தகுதிச் சிறப்பு மிகுந்த ஒரு மாஸ்டர் அவனுக்குக் கிடைத்தால், இந்த விஷயங்கள் பெருமளவு சாத்தியமாகும். விரைவில் அதன் பலனும் தெரியும். இந்த நிலையில்தான் இப்போது வளர்ச்சி துவங்குகிறது. அந்தத் திடத்தன்மையுடைய இறுதிய அடுக்குப்படிவம் இப்போது இல்லை. முக்திநிலையை அடைவதற்கு முன்னால், இந்த சூட்சுமமான நிலை நீடிக்கிறது. ஆயினும் அந்தப் போராட்டத்தில் ஒரு மனிதனின் சிரமமும் அதிகமாகிறது. அவன் இப்போது மீதியிருக்கும் மற்ற அடுக்குகளையும் அனுபவித்துத் தீர்ப்பதற்காக கவர்ந்து இழுக்க ஆரம்பிக்கிறான். பௌதீக உடலை விட்டு நீங்குவதற்கு முன்பு முக்தியடைந்த ஒரு ஆன்மா சந்திக்கின்ற சிரமத்தைப்பற்றி உன்னுடைய உதாரணத்தை எடுத்துக் கொண்டு மேன்மையான உனது மாஸ்டர் எங்கேயோ சொல்லியிருக்கிறார்

என்று நினைக்கிறேன். இங்கே மாஸ்டருடைய ஒளிதான் ஒரு மனிதரை, மற்றவர்களின் (வினைப்பயன்களின்) அடுக்குகள் அவருக்குப் பாய்ந்து வருவதிலிருந்து பாதுகாக்கும் கருவியாக இருக்கிறது. முக்தியடைந்த பிறகும் கூட அம்மாதிரி ஒரு மனிதரிடமிருந்து இந்த விதமான வேலையை இயற்கை எதிர்பாக்கிறது. இப்போது விவாதிக்கப்பட்ட இந்த விஷயம் சுருக்கமானது. ஆனால் அதுவே போதுமானது. அந்த நிலையை அடைந்தாலன்றி யாரும் இதன் தன்மையை உணரமுடியாது. ஆகவே எனது பிரியமான ராம் சந்த்தருக்கும் எனக்கும் கூட மிகவும் பிடித்தவராகிய R2 - உண்மையாகவே இந்த நிலையில் வேலை செய்திருக்கிறார். அதற்குக் கீழே செல்வதற்காக அல்லது அந்த அடுக்குகளின் கீழே செல்வதற்காக, அந்தச் சூழ்நிலையின் மாசுபட்ட நிலையை சோதித்துக் கொண்டிருக்கிறோம். அந்தச் செயல்பாடு ஒருநாள் தாமதமாகி இருக்கிறது. இதுவரையில் எந்தத் தீங்கும் செய்யப்படவில்லை. அது பாராட்டுகளுக்குத் தகுதியானதாக இருக்கிறது.''

## 22-12-1947

### சுவாமி விவேகானந்தா:

''நீ ஒரு பெரிய பிரச்னையை சந்தித்திருக்கிறாய். (M1 - இன் தவறான மனப்பான்மைகளால் மிஷனில் வளர்ந்துள்ள கருத்து வேற்றுமைகளைக் குறிப்பிடுகிறார்.) வருங்காலத்தில் இவ்விஷயத்தில் எச்சரிக்கையாக இரு. நல்ல மனிதர்களுடன் சேர்ந்து இருப்பது நல்ல பலன்களைத் தருகிறது. நீ தென்னிந்தியாவுக்குச் சென்றபோது நான் எச்சரிக்கை செய்தேன். ஆனால் பயனற்ற காரியத்தில் நீ முழுமையாக ஈடுபட்டது பெருந்தவறாக மாறிவிட்டது. சமீபத்தில் தனது குறிப்புக்களில் உன்னுடைய மாஸ்டர், உன் இதய ஆழத்திலிருந்து நீ பின்பற்ற வேண்டிய விஷயங்களைக் கூறியிருக்கிறார். வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும் என்று உனக்கு நான் உறுதியளிக்கிறேன். உன்னுடைய மிஷனின் வெற்றியைத் தடுக்கும் சக்தி உலகில் எங்கும் கிடையாது. அதற்கு சிறிதுகாலம் தேவைப்படும் என்பது உண்மைதான். வருங்காலத்தில் உனது வெற்றிக்கு வழியமைப்பதற்காக, பாதையில் தடையாக இருக்கக்கூடிய புதர்களை நீக்கிக் கொண்டிருந்தாய். நமது மிஷனின் நலனுக்காக உன் நண்பர் R2 - உடன் சேர்ந்து இதைச் செய்து வருகிறாய். (சிறு இடைவெளி) உனக்கு வெற்றி கிடைக்க வாழ்த்துக்களுடன் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இங்கு வந்திருக்கிறார்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

‘‘இந்த எல்லா விஷயங்களையும் பற்றி முன்பே உனக்கு எச்சரிக்கை செய்திருக்கிறேன். பரவாயில்லை. போகட்டும்.’’

## 24-12-1947

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

‘‘நான் அளவுக்கு மீறி கனிவான உள்ளமுடையவன் என்று மக்கள் நினைக்கிறார்கள். இது சரிதான். ஆனால் நீதி வழங்கவேண்டிய சந்தர்ப்பத்தில் நான் சிறிதும் கருணை காட்டுவதில்லை. உனது உடல்நலக் குறைவின்போது நானே மருத்துவனாக இருக்க வேண்டியிருந்தது. அது நான் உனக்கு அளித்த தண்டனைதான். நீதி வழங்க வேண்டியிருந்த நிலையில் தண்டனை அளித்தேன். ஒரு மருத்துவனாக சிகிச்சையளித்தது எனது கனிவான மனத்தின் அறிகுறி. ஆயினும் உனக்கு தண்டனை அளித்ததால் என் சுபாவத்தில் இரக்கமும் கனிவும் இல்லாமல் போய்விட்டன என்று அர்த்தமில்லை. உன் சங்கல்பத்தின் மூலமாக நீ சேர்த்துக் கொண்டிருக்கும் அசுத்தத்தை நீக்க வேண்டியிருந்த அவசியத்தினால் தண்டனை அளிக்கப்பட்டது. எனக்கு மிக உயர்நிலையிலிருக்கும் ஒரு மனிதர் மட்டும் தேவை மற்ற அனைவரும் அவருடைய கட்டளைகளுக்கு அடிபணிந்து நடக்கிறவர்களாக இருக்கவேண்டும். அந்த மேலான பதவியில் இருக்கும் ஒருவர் (ராம் சந்த்தர்) தன்னை ஆட்சி செய்வதற்கு, தனக்கு அறிவுரை சொல்வதற்கு மற்றவர்களை (M1 - ஐ) எதிர்பார்த்துக் காத்திருந்தால், அப்போது என் நோக்கம் தோற்றுப்போகிறது. இந்தப் பழக்கம் உனக்கு நன்மை செய்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆன்மீகத்தில் அவர் உன்னைவிட பல படிகள் கீழே இருந்தாலும் கூட, எந்த ஒருவரையும் உனக்கு மேலானவராகவே நினைத்து நடந்து கொண்டாய். இது அந்தச் சமயத்தில், நீ முன்னேற்றம் அடைந்து கொண்டிருந்த காலத்தில் அவசியமானதாக இருந்தது. ஆனால், இப்போது அது தேவையில்லை. வணக்கத்திற்குரிய சுவாமி (சுவாமி விவேகானந்தா) உனக்குத் தொடர்ந்து எச்சரிக்கை செய்து கொண்டே இருந்தார். ஆனால் அந்த எச்சரிக்கைகளைக் கேட்டு நடக்க முடியாதபடி நீ எதுவும் செய்ய இயலாதவனாக இருந்தாய். நான் இதற்கு முன்பு கூறிய செய்திகளில் ஒரு இடத்தில் எனது ஆன்மீகப் பிள்ளைகள் அனைவரும் ஒன்றிரண்டு பேரைத் தவிர தகுதியற்றுப் போனார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். அந்த மக்களின் விசுவாசத்தைப் பார். யாரை நான் எனக்குச் சொந்தமானவனாக ஏற்றுக்கொண்டேனோ, அவரை ஆட்சி செய்ய அவர்கள் விரும்பினார்கள். இந்த விஷயமாக நான் சில

செயல்விளக்கங்கள் கொடுத்திருக்கிறேன். நான் ஒருவருக்கு நன்மை செய்ய விரும்புகிறேன்; நீ அதில் விருப்பமில்லாமல் இருக்கிறாய் என்பது சாத்தியமாகுமா? என் விருப்பமும் அதே விதத்தில்தான் இருக்கும் என்பதில் உறுதியாக இரு. அந்த மனிதர் நான் தர நினைத்த நன்மையைப் பெறமாட்டார். (அதாவது உன் விருப்பமே என் விருப்பமாகும்) இது இயற்கையின் ஒரு வழிமுறையும் கொள்கையும் ஆகும். ஒன்றும் செய்ய இயலாமல் இருக்கும்படியாக ஆகும் எல்லா நிலைகளிலும் இது செயல்படும். நான் உண்மையாகச் சொல்கிறேன். அந்தக் குறிப்பிட்ட மனிதருக்காக (M1) உன் இதயத்தில் அன்பும் பாசமும் இல்லாமல் போயிருந்தால், அவர் உனக்கு எதிராக உன்னைக் கண்டித்துப் பேசிய இந்த விஷயம், என்னால் சகித்துக் கொள்ள முடியாமல், மிகவும் விரும்பாத ஒன்றாக இருந்திருக்கும். இந்த விஷயமாக என்னிடமிருந்து வந்த ஒரு உத்தரவுக்குக் கூட நீ கட்டுப்பட்டு நடக்கவில்லை. உன்னுடைய செயல்பாடுகளில், நடத்தையில் இந்தத் தவறுகள் அனைத்தும் குறித்துவைக்கப்பட்டுள்ளன. ஒரு முனிவருக்கு அவருடைய பாசத்துக்கு என்ன மதிப்பு இருக்கமுடியும்? அவருக்கு என்ன உத்தரவிடப்படுகிறதோ, அதைச் செய்வது மட்டுமே ஒரு முனிவருக்குக் கடமை. அதுவே அவருக்குச் சரியானது. அதன்படி பார்த்தால் நீ பயங்கரமான பெருந்தவறுகளைச் செய்திருக்கிறாய். எந்த ஒரு காரியத்துக்காக இயற்கையிலிருந்து கட்டளைகள் இடப்பட்டதோ அதை நிறைவேற்றுவதில் நீ இருபத்துநான்கு மணிநேரம் தாமதம் செய்திருக்கிறாய்! இது சரியான செயலா? நிச்சயமாக இல்லை! யார்மீது இந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவர்( M1) எப்போதும் தனக்கே ஒரு மேலாதிக்கம் இருக்க வேண்டுமென முயற்சி செய்கிறார். அவருடைய மனப்பான்மையைக் கவனி! ராம் சந்த்தர் எனது பிரதிநிதி மற்றும் என்பதவிக்கு உரியவர் என்ற தகுதியைப் பெற்று விட்டதால், அவர் மூத்தவராகிய தனக்குக் கீழ்ப்படிந்தவராக ஆகிறார்; அவரைத்தான் ஆட்சி செய்யலாம் என்ற இந்த எண்ணத்தை அந்த மனிதர் (M1) தன் மனதில் வளர்த்துக்கொண்டார். ராம் சந்த்தரின் உதவியால்தான் மற்றும் அவர் மூலமாகத்தான், தான் (M1) இந்த நிலையை அடைந்தோம் என்பதை அவர் ஒருபோதும் குறிப்பிடவில்லை. இது அகங்காரம் இல்லையா? தன்னை மேலானவராகக் காட்டிக்கொள்வதில் அவர் எப்போதுமே நிபுணராக இருந்தார். இதற்குப் பொறுப்பாளியாக இருந்தவரைத்தான் குறை சொல்ல வேண்டும். இயற்கைக்கு எந்த ஒரு மனிதரிடமும் பற்று, பாசம் எதுவும் கிடையாது. எந்த ஒருமனிதரையும்

அது தன் கருவியாகச் செய்துகொள்கிறது. இந்தக் கொள்கை அதில் தொடர்ந்து எப்போதும் இருக்கிறது. இந்தவிஷயங்களுக்கெல்லாம் உனக்குத் தண்டனை அளிப்பது எனக்கு அவசியமாக இருந்தது. உன்னுடைய தவறு சுலபமாக மன்னிக்கப்பட முடியாது என்பதை நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். இதைக் கேள்விப்பட்டு அதன் பிறகாவது, தனது நல்லபுத்தியோடு உன்னைச் சரணடைந்திருந்தால், தன்னுடைய உள்நிலையை அவர் கவனித்திருக்க முடியும். அவருடைய விஷயத்தில் நீ மேற்கொண்ட அவசரத்தைப் பற்றி அவர் சிந்திக்கவே இல்லை. அதில் அவருக்கு அக்கறை இல்லை. இதுதான் பண்புள்ளவருக்கு அழகா? இதன் காரணமாக அவருக்கும் தண்டனை கிடைத்திருக்கிறது. அவர் முக்திநிலையை இழந்துவிட்டார். இனி ஒருபோதும் அவருக்கு அது கிடைக்காது. இங்கே இதில் எத்தனையோ விஷயங்கள் உள்ளன. இவற்றில் சில சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. உன்னிடம் பற்றும் அன்பும் கொண்ட ஒருவர் இருந்தால் அவர் என்மீதும் அதே அளவு பற்றும் அன்பும் உடையவராக இருக்கிறார் என்று பொருள். நீ என்றால் நான் என்றே பொருள். (சிறிது இடைவெளி) R6 - இன் முன்னிலையில் நேற்று நீயும், R2 - உம் பேசிக்கொண்டிருந்த அதே விஷயம் பற்றி நாளை நான் சொல்வேன். இதை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இப்போது மீண்டும் சொல்கிறேன். அதாவது சரி, தவறு என்பது பற்றிய சிந்தனை எனக்கு இல்லை. உனக்கு ஒரு உடம்பும், சொந்த அனுபவமும் இருப்பதால், நீ என்ன விரும்புகிறாயோ அதையே நான் செய்வேன். இதனால் எனக்கு என்ன கஷ்டம் வந்தாலும் சரி, என் வாக்குறுதியிலிருந்து நான் தவறமாட்டேன். நீயும் நானும் சேர்ந்து அங்கு வசிக்கும் காலம் வரும்வரை ஒளியுலகின் மீது எனக்கு அவ்வளவு விருப்பம் இல்லை. சகஜமார்க்கப் பயிற்சிமுறை மற்றும் ஷாஜஹான்பூர் ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன் என்ற பூந்தோட்டம் புத்துணர்ச்சியோடு மலர்ச்சியடைவதைப் பார்க்க நான் விரும்புகிறேன். உனக்கு உடல்நலமில்லாது இருந்தபோது, R2 - தன் மனைவி பற்றி ஏதோ உன்னிடம் சொன்னார். அச்சமயத்தில் உன் சகோதரராகிய R2 - க்கு அவர் அதைக் கொடுக்கலாம் என்று நினைக்கிற எந்த ஒருவருக்கும் முக்தியளிக்கும் சக்தியைக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் உன் மனதில் வந்தது. நான் அதை அவருக்கு அவ்விதமே அளித்தேன். இப்போது இந்த சக்தி அவரிடத்தில் விளங்குகிறது. ஆயினும் எல்லாச் சமயங்களிலும் இதைப் பயன்படுத்த வேண்டாம் என்று

அறிவுரையும் கூறப்பட்டுள்ளது. அது அவருடைய (R2) சங்கல்பத்தைப் பொறுத்தது. அதற்கான வழிமுறையை அவருக்கு நான் சொல்வேன்.''

25-12-1947

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இயற்கையிடம் முழுமையாக சரணாகதியடைந்துவிட்ட ஒரு மனிதரை இயற்கையே கவனித்துக் கொள்ளத் துவங்குகிறது. அந்த மகத்தான சக்தியின் பார்வை அந்த மனிதரின் மீது நிலைபெறுகிறது. மின் விசையைத் தடுக்கும் மற்றும் செல்லவிடும் விசைக் குமிழின் உதாரணம் இங்கு வருகிறது. இயற்கையின் மாபெரும் சங்கிலித்தொடரில் எங்காவது ஒரு இடத்தில் ஒருவரால் ஒரு சிறு அதிர்ச்சி ஏற்பட்டாலும் உடனே மேலேயிருந்து தெய்வீகக்குரல் வந்து இறங்குகிறது. இந்தநிலையில் இருக்கும் அன்பை உடைய மனிதர்கள் மிக அரிது. அது மிகவும் சிரமமானதும் ஆகும். ஆகவே நமது மாஸ்டரின் ஆதரவை நாம் நாடுகிறோம். பின்னோக்கி நமது பயணத்தில் திரும்பிப்போகும் போது இதே நிலை (மாஸ்டரை நாடுவது) கடைசியில் வருகிறது. சிலமனிதர்கள் மாஸ்டரைச் சார்ந்து இருப்பதை விடுவதில்லை. அவர்கள் நிச்சயமாக இந்தக் குறைபாட்டை (இயற்கையிடம் சரணடையாதிருக்கும் தன்மையை மாஸ்டரை மட்டும் நம்பி இருக்கும் மனப்பான்மையை) தக்க வைத்துக்கொள்கிறார்கள். முடிவில் இந்த உடலை விட்டுச்செல்லும்போது இந்த இருவருமே (இயற்கையிடம் முழுமையாகச் சரணடைந்தவர்கள், மற்றும் கடைசிவரையில் மாஸ்டரை நம்பி இருப்பதை விடாதவர்கள்) ஒரே நிலையைத்தான் சென்றடைகிறார்கள். மாஸ்டரை நம்பி இருப்பதையே நான் கடைசி வரையில் பின்பற்றினேன். உனக்கும் அதே அறிவுரையைக் கூறினேன். சங்கல்பத்தின் ஆற்றல் கனவுகளற்ற ஆழ்ந்த உறக்கத்தின் இருப்பிடத்தை நிரப்பும்போது (சுஷூப்தி நிலையில்) இயற்கையின் சக்தி பெருகிவர ஆரம்பிக்கிறது.)

## R2 - இன் கேள்வி:

''சில சமயங்களில் சங்கல்ப சக்தியைப் பயன்படுத்துவது பலன் தருவதில்லை. சிலசமயங்களில் வெறும் தலையசைப்பே பயனுறுதி உடையதாக (நல்ல விளைவைத் தருவதாக) இருக்கிறது. இந்தப் பயனளிக்கும் தன்மை என்பதுஎன்ன? அது எங்கே இருக்கிறது?''

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

‘‘அந்தப் புள்ளி கண்டறியப்பட்டுள்ளது. அது A மற்றும் B புள்ளிகளுக்கு இடையில் இருக்கிறது. அதற்கு மிக அருகில்தான் கனவுகளற்ற ஆழ்ந்த உறக்கத்தின் (சுஷுப்திநிலையின்) இருப்பிடம் உள்ளது. அங்கிருந்து ஒருகோடு இதயத்தின் மேல் பாதிக்குப் போகிறது. இது இதயத்தின் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு இரண்டு பகுதிகளாக உள்ளது.’’

‘‘இந்தப் பெரும் சுழலில் ஆயிரம் படகுகள் அகப்பட்டு, ஒரு சிறு மரத்துண்டு கூட கரையில் ஒதுங்காமல் உடைந்து சிதறி முழுகிப் போயிருக்கின்றன. (பாரசீக மொழியில் உள்ள ஈரடிச் செய்யுள். ஹிந்துமத முனிவர்கள் இதை ‘பன்வார் குப்ஹா’ (Bhanwar Gupha / சுழல் குகை) என்று பெயர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனையின் வேகம் மூளையின் ஒரு பகுதிக்குச் சென்று, அதுவே சுழல் குகை என்று கருதியது. உண்மையில் இது அதனுடைய பிரதிபலிப்புதான். அன்புள்ள R2 , இந்த விஷயத்துக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை என்பதை நான் அறிந்திருக்கிறேன். ஒரு புள்ளியை A என்று கூறி, இன்னொரு புள்ளியை **B** என்று கருதினால், இந்த விரிவாக்கத்தில் ஆரம்பமும் முடிவும் இல்லை என்பதால் இதற்கு எல்லையே இல்லை என்றால், அப்போது எதை மற்றொன்றின் பிரதிபலிப்பு என்று குறிப்பிடுவது என்று சொல்.’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘இதயத்தைச் சுற்றியுள்ள ஏழு வட்டங்கள் பற்றிய கருத்து உனக்கு நினைவு இருக்கும் என்று நம்புகிறேன். இவை மைய மண்டலத்தில் உள்ள குறிப்பிட்ட சுருள்களின் பிரிவுகளாகும். முதல் வளையத்திலிருந்து ஆரம்பித்து கடைசி வளையத்துக்கு வந்தால், அந்தக் கடைசி நிலையை எட்டியிருப்பதாக அர்த்தம் ஆகும். ரிஷிகள் மற்றும் முக்திபெற்ற ஆன்மாக்கள் அங்கு வந்திறங்கும் இடத்துக்கு நீங்கள் வந்திருப்பதாகப் பொருள். அது என்ன இடம்? நீங்கள் இதயத்தில் ஆரம்பித்து இதயத்திலேயே முடிவடைகிறீர்கள். ஆனால் ரிஷிகள் வந்திறங்கும் இடத்தை அடைந்திருக்கிறீர்கள். இந்த வழியில் நீங்கள் எல்லா மண்டலங்களையும் கடந்துவிடவில்லையா?’’

**29-12-1947**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘மக்கள் ஏன் தங்களுக்குள் எரிந்து உருகுகின்ற நிலையை வளர்த்துக் கொள்ளாதிருக்கிறார்கள் என்ற பிரச்னையைப் பற்றி நேற்றிரவு நீ

சிந்தித்துக் கொண்டிருந்தாய். இது உன்னுடைய குறைபாட்டினால்தான். உண்மையில், உண்மையான தகுதி உடைய மனிதர்கள் இக்காலத்தில் மிகவும் அரிதாகவே இருக்கிறார்கள். அதனால் அவர்களை விரும்பிய நிலைக்குக் கொண்டு வருவதற்குத் தயார் செய்யவேண்டிய தேவை இருக்கிறது. சாதகனுடைய திறமையும் தகுதியும் ஓரளவுக்குத்தான். குருவின் சொந்த சங்கல்ப சக்திதான் சாதகரை விரும்பிய நிலைக்குக் கொண்டுவர பயன்படுகிறது. உண்மையில் உன்னுடைய சிறப்புத் தகுதியும் திறமையும் உனக்குள் கட்டுப்பட்டிருக்கின்றன. நீ செய்ய முடிவது போல அதே அளவுக்கு ஆன்மீகப் பயிற்சியை கிரகித்துக் கொள்ளும் சக்தியுடைய யாரையாவது உன் ஆயுட்காலத்தில் கண்டறிய முடியும் என்று எதிர்பார்க்கிறாயா? உன்னுடைய பிரதிநிதியாக / உன் பதவிக்கு வாரிசாக வருகிற மனிதருக்கும் கூட ஆன்மீக சக்தியை கட்டாயமாகத் திணிக்கவேண்டிய தேவை இருக்கும் என்று நான் நினைக்கிறேன். உனது ஆன்மீக நிலை, அது எதுவாயினும் இயற்கை தன் காரியத்தை நிறைவேற்றுவதற்காக உன்னிடம் வளரச் செய்ததே ஆகும். உன் மீது இருக்கும் பணிச்சுமை, உண்மையில் உன்னை சிறிதுநேரம் பேசுவதற்குக் கூட ஓய்வு அளிக்கவில்லை. உனக்குள் திணிக்கப்பட்டிருப்பது எதுவாயினும் அது உன் ஆயுட்காலத்திற்குப் பிறகு பயன்தருவதாக இருக்கும். உனது பிராணாஹூதி அதிகபட்ச அளவு செம்மையாக்கப்பட்டுள்ளது. ஆனால் அதைப் பெற்றுக்கொள்ள யார் இருக்கிறார்கள்? உள்முகமாக எரிந்து உருகுகின்ற நிலை (தீவிரமான ஏக்கம் மற்றும் அமைதியற்ற தவிப்பு) ஆன்மீக முன்னேற்றத்தின் அறிகுறிகளாகக் கருதப்படுகின்றன. உன்னுடைய பிராணாஹூதி உன்னுடைய நிலையிலிருந்து அதாவது பரம்பொருளின் ஜீவத்தன்மையின் நிலையிலிருந்து வருகிறது. அப்படி ஒரு ஆழ்ந்த உறவுநிலையை பரம்பொருளுடன் நீ வளர்த்துக்கொண்டு, அதிலிருந்து ஒரு விநாடி நேரம் கூட விலகியிருக்க விரும்பாமலிருக்கிறாய். இது பழக்கத்தின், அதிலேயே நிலைத்திருப்பதின் பலனாகும். நான் கண்டிப்பான கட்டுப்பாட்டை உன்மீது செலுத்தாமல் விட்டிருந்தால் நீ ஆன்மீகப்பயிற்சி அளிப்பதற்குத் திறமையற்றவனாக ஆகியிருப்பாய். ஏனெனில் ஆன்மீக முன்னேற்றத்தின் மிக உயர்ந்த உச்சியில் இருக்கிறவர்களைத் தவிர வேறு யாரும் இந்த தூய்மைநிலையை உணர்ந்து அனுபவிக்க முடியாது. இந்தப் பிராணாஹூதியிலிருந்து கிடைப்பதை விட மேலான பலன் ஒருபோதும் வேறு எதிலும் கிடைக்காது என்பதில் சந்தேகமில்லை. உண்மையில், இதுதான் நமது முடிவான நோக்கத்தை நிறைவேற்ற முடியும். ஆனால், அன்புள்ள சகோதரா, யாருக்கு உன்மேல் அவ்வளவு நம்பிக்கை இருக்கும்?

அதைப் புரிந்துகொள்ளும் திறன் யாருக்கு இருக்கும்? உனது இந்த உச்சநிலையை விட்டுக் கீழிறங்கி, கீழ்நிலையில் உள்ள புள்ளிகளிலிருந்து பிராணாஹூதி அளிக்கும்படி உன்னை நான் கட்டாயப்படுத்தினால், அப்போது உனக்கு ஏற்படும் கஷ்டத்தை என்னால் சகித்துக் கொள்ள இயலாது, மேலும் இன்னொரு பிரச்னையும் இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னது போல பரமாத்மாவின் தன்மை (பரம்பொருளின் ஜீவத் தன்மையின்) முழுவதையும் உனது அனைத்துப் புள்ளிகளிலும், உன் உடம்பின் ஒவ்வொரு அணுத்துகளிலும் நிரப்பியிருக்கிறேன். அது என் கடமையாக இருந்தது. நான் பௌதீக உடலில் இருந்தபோது எனக்குக் கட்டுப்பாடுகள் இருந்தன. இந்த பூமிக்கும், வானத்துக்கும் இடையே இருப்பதுபோல், என் ஆயுட்காலத்தில் இருந்த நிலைக்கும், இப்போது இருக்கும் நிலைக்கும் இடையே ஏராளமான வித்தியாசம் இருக்கிறது. இப்போதைய நிலையில் இருந்து எனது பிரியமான ராம் சந்த்தருக்கு இரவும் பகலுமாக எந்நேரமும் நிறைய பிராணாஹூதி அளித்தேன். எனது நிலை பௌதிக வாழ்க்கையின் எல்லைகளைக் கடந்ததாக இருந்தது. அதே நிலை இன்னும் நீடிக்கிறது. எனவே, அதே சக்தி முக்கியமாக அங்கே இருக்கிறது. நான் உன்னிடத்தில் இருக்கிறேன். நீ என்னிடத்தில் இருக்கிறாய். நான் உனக்குள் இருக்கிறேன். நீ எனக்குள் இருக்கிறாய். இருவருக்கிடையே எந்த வேறுபாடும் இல்லை. அப்படியிருக்க அம்மாதிரி ஒரு பிராணாஹூதி ஏன் உன்னிடமிருந்து வராமல் போகும்? தீவிர ஏக்கமும், அமைதியற்ற தவிப்பும் ஆன்மீக வளர்ச்சிக்கான மிக மேலான வழிகள். உன்னை நான் எந்தவிதத்திலாவது குற்றம் கூறினால், அது எப்படி சாத்தியமாகும்? போகட்டும். சாத்தியமானால், பொதுவாக இதயத்திலிருந்து பிராணாஹூதி கொடு. உண்மையாகவே சொல்கிறேன். இந்தப்புள்ளியில் உன் பிராணாஹூதியில் மக்களினால் அனுபவிக்கப்படுகிற நிலைகள் எதுவாயினும், அவை உண்மையானவை மற்றும் பயனளிப்பவையாகும். ஆனால் என்ன செய்வது? உனது பிராணாஹூதியின் மேன்மையையும் மதிப்பையும் புரிந்துகொள்ளத்தான் யாரும் இல்லை. முழு நம்பிக்கையோடு உன்னிடமிருந்து ஒரே ஒரு பிராணாஹூதியை யாராவது ஏற்றுக்கொண்டால் மிகப்பெரிய முனிவர்கள் அடைய விரும்பி ஏங்கிய அந்த நிலைகளை அவர் பெறுவார். மேலும், என் பிரியமான ராம் சந்த்தர் அளிக்கின்ற பிராணாஹூதியைப் பெறுவதற்கான தகுதியும் எல்லோருக்கும் கிடைத்து விடாது. உனது ஆன்மீக நிலைதான் அவர்கள் அதைத் தாங்கும்படியாகச் செய்கிறது. நீ அந்த அளவுக்கு அமைதியானவனாக மாறியிருக்கின்றாய்.''

31-12-1947

**I2 - இன் கேள்விக்குப் பதிலாக சுவாமி விவேகானந்தா கூறியது:**

''என் இளைஞர்களே இப்போதைய காலத்தை நீங்கள் பாராட்டவில்லையா? வருங்காலத்தில் ராம் சந்த்தரைப் போல ஒருவரை நீங்கள் பெறமுடியும் என்று நம்புகிறீர்களா? நீங்கள் முற்றிலும் சாந்தமாக இருந்து, மிஷனின் நலத்துக்காக வேலை செய்யவேண்டும் என்று விரும்புகிறேன். அன்புதான் அதற்கு ஒரேவழி.''

2-1-1948

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''உன்னால் உருவாக்கப்பட்ட நன்னெறிகளை, மனப்பூர்வமாகப் பின்பற்றி நடந்தால், அவை அனைத்துப் பிரச்னைகளையும் தீர்க்க முடியும். உன்னுடனும், உனது ஆன்மீக சமுதாயத்துக்குச் சொந்தமான சகோதர சகோதரிகளுடனும் சம்பந்தப்பட்டதாக இருப்பதால் நீயாகவே அதுபற்றிச் சொல்லமுடியாத பல விஷயங்களைக் கொண்ட, சாதாரண விஷயங்கள் இன்னும் சொல்லப்படாமல் இருக்கலாம். எப்படியிருந்தாலும் எல்லா இடங்களிலும் நாகரிகப் பண்பு தேவைப்படுகிறது. அதற்காக நீயே சில விஷயங்களை நிர்ணயித்து, அதை மக்களுக்கு அவ்வப்போது சொல்வதற்கு யாரிடமாவது அந்தப் பணியைக் கொடுக்கலாம். இந்த விஷயங்கள் மாஸ்டருக்கு முறைப்படி செலுத்தவேண்டிய மரியாதையை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும். கூட்டு தியானத்தின் போது தனது மாஸ்டருக்கு முன்னால் அல்லது (சிட்டிங் கொடுக்கும்) வணக்கத்திற்குரிய ஒரு பெரியவரின் முன்னால், ஒரேநிலையில் உட்காரவேண்டும். அதை மாற்றக்கூடாது. அவர் என்ன உத்திரவு இடுவார் என்று கவனமாக எதிர்பார்த்து எல்லோரும் காத்திருக்கவேண்டும். மற்றொரு முக்கியமான விஷயம் தனது சக சீடர்களை சகோதர சகோதரிகளாகவே கருதி நடந்து கொள்ளவேண்டும் என்பதாகும். அந்த சகோதர சகோதரிகளின் துன்பங்களில் பங்கேற்பதற்கு உண்மையான முயற்சி செய்யவேண்டும். சகோதர சகோதரிகளுக்குச் செய்கின்ற சேவை, மாஸ்டருக்குச் செய்யும் சேவையாகவே கருதப்படவேண்டும். இயன்ற அளவுக்கு ஒருவர் சோகமாக மனம் சோர்ந்து இருப்பதைத் தவிர்க்க வேண்டும். வருந்துவதற்கான ஒரு சந்தர்ப்பம் இன்னும் இருக்கிறது என்றால் கடவுளின் சித்தம் அப்படி இருக்கிறது என்று எடுத்துக்கொண்டு, அதைப் பொறுமையாகவும் நன்றியுடனும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அது அங்கே மனச்சாந்தியளிக்கும். ஆபாசமான பேச்சுக்களைக் கேட்பது பெருந்தவறு. ஏதோ ஒரு கூட்டத்தில்

அம்மாதிரி பேச்சுக்கள் பேசப்பட்டால், அக்கூட்டத்திலிருந்து ஒதுங்கி வந்துவிட வேண்டும். வணக்கத்திற்குரிய ஒரு ஆன்மீக குரு தன் சீடர்கள் அனைவரிடமும் ஒரு சமமான பார்வையுடையவராக இருக்கவேண்டும். ஒருவருக்கொருவர் வேறுபாடு கருதாமல் அவர் அனைவருக்கும் தன் கருணையை, தன்னால் முடிந்த நன்மையை அளிக்கவேண்டும். எல்லோருக்கும் ஆன்மீகம் மற்றும் உடலாலும் துன்பங்களைத் தன்மீது ஏற்றுக்கொண்டு, சேவை செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் ஆன்மீக சமுதாயத்தின் சகோதர சகோதரிகளுக்கு இடையே இருக்கும் கடமை எதுவாயினும் அது குருவுக்கும் பொருந்தும். அதாவது, ஒரு குரு தன்னை இந்த ஆன்மீக சமுதாயத்தில் எந்தவிதத்திலும் மேலானவராக கருதக்கூடாது. குருவாகிய வழிகாட்டி உண்மையில் ஒரு விசேஷ நிலையில் இருக்கிறார். சகோதர சகோதரிகளில் யாராவது ஒருவர் ஏதோ ஒரு சிறப்பான கொள்கையை அல்லது நன்மையை அறிந்தால் அதை குருவுக்கு அறிவிக்க வேண்டும். அன்பு மட்டுமே அனைத்தையும் முழுநிறைவுபெறச் செய்யும். அது வரும்போது தானாகவே தன்னை ஒழுங்குபடுத்திக்கொள்கிற விஷயமாக இருக்கிறது. இந்த அன்பு ஒன்றினால் மட்டுமே அனைத்தையும் கட்ட முடியும்.''

### சிறிது இடைவெளிக்குப் பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

''18-9-1944 என்ற தேதியில் நான் குறிப்பிட்டுச் சொன்னதும், 1945ம் ஆண்டு ஃபபடேகரில் பண்டாராவில் (லாலாஜியின் பிறந்தநாள் விழாவில்) கூறப்பட்டதும் ஆகிய அந்த தியானத்தை கீழ்க்கண்ட திருத்தத்துடன் தினசரி பயிற்சியில் கட்டாயம் செய்யவேண்டும் என்று அறிமுகப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன். இந்த ஆன்மீக மிஷனின் சகோதர சகோதரிகள் அனைவருடைய மற்றும் என்னுடைய இதயத்தில், மாஸ்டர் என்ற இடைமனிதர் மூலமாக தெய்வீக அன்பு வளர்ச்சியடைகிறது மற்றும் நம்பிக்கை அதிகரிக்கிறது' என்ற எண்ணத்துடன் தியானம் செய்யவேண்டும். அது உண்மையில் நடந்துவிட்டது என்ற உறுதியான எண்ணத்துடன் தியானத்தை முடிக்க வேண்டும். இரவு சரியாக 9 மணிக்கு அந்த சாதகர் அச்சமயத்தில் எங்கு இருந்தாலும் இந்த தியானத்தை செய்யவேண்டும்.''

**குறிப்பு:** இத்திருத்தம் I2 - இன் கோரிக்கையின்படி அறிமுகம் செய்யப்பட்டது. ''உண்மையில் வணக்கத்திற்குரிய மாஸ்டரின் கருத்தும் இதுவாகவே இருந்தது. அதாவது இந்தச் செயல்பாடு முழுவதும் லாலாஜியின்

பிரதிநிதியை மையமாகக் கொண்டே செய்யப்பட வேண்டும் என்பது அவரது எண்ணம்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் மேலும் கூறியது:

''இதை நான் மிக முக்கியமானதாகக் கருதுகிறேன். இதை எல்லோருக்கும் தெரிவிக்கும்படி I2 - இடம் சொல்லவும். R10 - க்கும் கூட கடிதம் எழுதவேண்டும். இது ஒரு தண்ணீர்க்குழாய்க்கு தடுப்புக்கருவி போலாகும். இதனால் ஆன்மீகத்திலும், நன்னெறிகளிலும் ஏராளமான நன்மை உண்டாகும். மக்கள் இதைப் பயிற்சி செய்ய எடுத்துக்கொள்ள வேண்டும். மக்களிடம் ஒரு குறைபாடு இருக்கிறது. பெரும்பாலும் எல்லோருமே சோம்பேறித்தனத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அன்பு இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த சோம்பல் அவர்களை எதுவும் செய்ய விடுவதில்லை. இது எவ்வளவு பெரிய நோயாக இருக்கிறது என்பதைப் பாருங்கள்.''

## 13-1-1948 (லக்கிம்பூர் - கேரி)

### சுவாமி விவேகானந்தா:

''காந்திஜி உண்ணாவிரதம் இருக்கிறார். எதற்காக? இந்தியாவின் நிலையை சமாதானத்துக்குக் கொண்டு வருவதற்காக. அவர் அவருடைய வேலையைச் செய்கிறார். நீ உன் வேலையைச் செய்யவேண்டும். யார் வெற்றியடைகிறார் என்று பார்ப்போம். அவர் துப்பாக்கியால் சுடப்பட்டு உயிரிழப்பார்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''என் சகோதரா, காந்திஜியைப்பற்றி என்ன சொல்வது? மதமில்லாதவர்! மதத்திற்கு எதிரானவர் என்று சொல்வதே சரியாக இருக்கலாம். வியாபாரிகள் எப்போதாவது நல்ல ஆட்சியாளர்களாக இருந்திருக்கிறார்களா? காந்திஜி கூறும் இதே கொள்கை இயற்கை ஏற்றுக்கொள்ளும்படி இருந்திருந்தால் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஏன் அவதாரம் எடுக்கவேண்டும்? இயற்கையின் சித்தம் பற்றி காந்திஜி அறியாமலிருக்கிறார். தெய்வீக நோக்கத்தைத் தடுக்கும் சக்தியும் அவருக்கு இல்லை. இவ்வளவு கொடுமையைக் கண்ட பிறகும் இன்னும் அவரது கண்கள் திறக்கவில்லை. அது இயற்கையின் விருப்பமாகவே இருந்தாலும், இம்மாதிரி கொடுமைகளையும், வன்முறைகளையும் பார்த்து, ஒவ்வொரு மனிதனின் இதயமும் மனம் கசிந்து வருந்த வேண்டும். இதை எந்த விசேஷ காரணத்தினாலும் நான் சொல்லவில்லை. சமுதாயக் கொள்கைகளை, ஒருவருக்கொருவர் நடந்துகொள்ள வேண்டிய மரியாதைப் பண்புகளை

நினைத்து அதில் கவனம் செலுத்துங்கள். காந்திஜி செய்வது எவ்வளவு தூரம் சரியானது என்பதை அது உங்களுக்குத் தெரியவைக்கும். பகை உணர்வு இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. பகை உணர்வு யாருக்குமே இருக்கக்கூடாது. ஆனால் இந்த அதிகபட்சமான கொடுமையை தள்ளிப் போடவேண்டியது அவருடைய கடமையாக இருந்தது. எதிர்த்தரப்பினரை அமைதிப்படுத்துவதற்கு அவர் தனது வலிமையைக் காண்பித்திருக்க வேண்டும். அது இயற்கையின் சித்தத்திற்கு பலம் சேர்த்திருக்கும். சரி. அவர் என்ன விரும்புகிறாரோ அதைச் செய்யட்டும். உனக்கு என்ன உத்தரவுகள் கிடைக்கிறதோ அதை அப்படியே ஏற்று அதன்படி வேலை செய். ஹிந்து சமுதாயத்தை கட்டுப்படுத்தும் சக்தி காந்திஜிக்கு இல்லை. அவருடைய வழிமுறைகளும் அதை நோக்கியதாக இல்லை. இந்த விஷயத்தில் எல்லாம் வல்லதாகிய இயற்கைதான் பயனளிக்கும். ஒருவர் எவ்வளவுதான் சிரமப்பட்டாலும், இயற்கையின் சித்தம் இன்றி எதுவும் நடைபெறாது.''

*(குறிப்பு: இங்கு அச்சமயத்தில் இந்தியாவில் இருந்த அரசியல் நிலைமை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை நிகழ்ந்தது. ஆங்கிலேயே அரசாங்கத்திலிருந்து இந்தியர்களின் கைக்கு ஆட்சி உரிமை மாற்றப்பட்டபோது, ஏற்கெனவே பிரிவினையால் பெரும் குழப்பமும், பெருமளவில் இனக் கலவரங்களும், வன்முறைகளும் ஆரம்பித்திருந்தன. இந்நிலையில் இந்தியா பாகிஸ்தானுக்கு 55 கோடி ரூபாய் கொடுக்க வேண்டும். டெல்லயில் உள்ள கலவரத்தினால் இடிக்கப்பட்ட முஸ்லிம் வழிபாட்டிடங்களை மீண்டும் கட்டிக்கொடுக்க வேண்டும். பாகிஸ்தானை விட்டு திரும்பிவரும் முஸ்லீம்களுக்கு மறுவாழ்வு அளித்து அவர்களுக்கு வசதிகள் செய்துதர வேண்டும் என்று கோரிக்கைகளை வைத்து உண்ணாவிரதம் இருந்தார்.)*

14-1-1948

**சுவாமி விவேகானந்தா:**

''ராஜயோகத்தின் செயல்திறன் என்ற புத்தகத்தில் நீ குறிப்பிட்டுள்ள அதே நிலையில் நீ இருந்து அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறாய். உன் குருநாதர் உன்னை தனது இடத்தில் நிலைநிறுத்தியிருக்கிறார். அதனால் நீ இந்த உலகிற்கு மீண்டும் மீண்டும் வருவாய் என்று அர்த்தமில்லை.

இப்போது நடந்து கொண்டிருக்கும் விஷயங்கள் இதன் தலைவராகிய லாலாஜி ஒளியுலகில் இருந்தபடி தனது பிரதிநிதியின் மூலமாக நடத்துகின்றவையாகும்.''

15-1-1948

**சுவாமி விவேகானந்தா:**

''பக்திப்பாடல் பாடும்போது கடவுளை நினைக்கின்ற இந்த நிலையில் நீ இருக்கிறாய். கடவுளை வாழ்க்கையின் ஆழமில்லாத இடங்களில் அளவிடுவதற்கு அவசியம் இல்லை. ஒரு மனிதன் கடவுளைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் அவரை மிக உயர்ந்தவராகக் கருதுகிறான் என்பது இயற்கைதான். உனக்கு அது அவசியம் இல்லை. இது குழந்தைகளுக்கானது, உன்னுடைய தரத்தில் இருப்பவர்களுக்கானது அல்ல. உன்னுடைய உயர்நிலை எனக்கும் வணக்கத்திற்குரிய உனது மாஸ்டருக்கும் தெரியும். நீ அதைப் பற்றி அறியாமலிருக்கிறாய். நீ எப்போதும் கடவுளுக்குள் இருப்பதாக உன்னைப் பற்றி நினைக்கவேண்டும். நீ உன் உயர்வுக்காகத் தேட வேண்டிய தேவை இல்லை. மீண்டும் பக்திப்பாடல் பாடு. நீ மையத்தைத் தேடிக்கொண்டிருக்கும் போது, வெளியே எங்கும் செல்ல வேண்டியதில்லை.''

17-1-1948

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''பகவத்கீதையில் இருப்பதுபோல பிரபஞ்சமளாவிய தெய்வீகத்தின் அழிவுத்தன்மையுடைய அம்சத்தின் காட்சியைப்பற்றி நீ என்னிடம் கேட்கவில்லையா? வணக்கத்திற்குரிய உன் மாஸ்டரும் கூட இதை உனக்கு விளக்கமாகச் சொல்லியிருக்க முடியும். அது நீ அந்தப் புத்தகத்தில் காணப்படுவதுபோல உண்மையில் இல்லை. அந்த விஷயம் சரிதான். ஆனால் அதைத் தெரிவித்த விதம் வேறாக இருக்கிறது. பொதுவாக ஒரு கவிஞர் எதையாவது விவரிக்கும்போது அவருடைய மனத்தின் கடினத்தன்மை அங்கு வேலை செய்கிறது; அவர் அதே வடிவத்தில் கருத்துக்களை எடுத்துரைக்கிறார் என்பது கவனித்து அறியப்பட்டுள்ளது. இது மனிதர்களின் குணமாகும். அர்ஜுனனை நான் ஒரு ஆன்மீக நிலையின் வசத்தில் கொண்டு வந்திருந்தேன். சிறிது காலத்திற்கு முன்பு உனக்கு நான் செயல்விளக்கம் கொடுத்த அதே நிலையாகவே இது கிட்டத்தட்ட இருந்தது. அர்ஜுனனைப் போல நீ அப்போது பயப்படவில்லை.

ஏனென்றால் ஏற்கெனவே நீ அதைவிட பலமடங்கு முன்னேறியிருந்தாய். நான் அர்ஜுனனை அந்த நிலைக்குக் கொண்டுச் சென்று, நிகழ்ச்சிகள் திடமாக செயல்வடிவத்தைப் பெறுவதற்கு முன்பு சூட்சுமமான விதத்தில் எங்கே உருவாகின்றனவோ, அங்கு இருக்கும் அதிசயங்களை செயல் விளக்கத்துடன் காட்ட வேண்டியிருந்தது. அந்தக் காட்சி நிச்சயமாக பயமுறுத்துவதாகவே இருந்தது. அவனுக்கு அக்காட்சி பயங்கரமாகவே காண்பிக்கப்பட்டது. அது ஒரு நிலை. அந்தக் காட்சியை அவனால் தாங்க முடியவில்லை. ஏனென்றால் அவனுடைய மனநிலை ஒரு திகைப்படைந்த நிலையாக இருந்தது. என் சங்கல்ப சக்தியால் நான் அதைப் பெற்று அவனிடத்தில் போதுமான அளவுக்கு பரவச்செய்தேன். என்னுடைய அந்த விஸ்வரூபத்தில் எண்ணற்ற கைகால்கள் இருந்தன; என் வாய்களிலிருந்து தீ ஜ்வாலை (நெருப்பின் சுடர்கள்) வெளிவந்தன; அந்த நெருப்பில் படைவீரர்கள் விழுந்து எரிந்துபோனார்கள்; என்று சொல்லப்பட்டிருப்பது தவறு. பரமாத்மாவின் (பரம்பொருளின் ஜீவத்தன்மையின்) போதையில் நீ ஈடுபட்டிருந்தால் இந்த முறையில் நீ ஒருபோதும் கவனம் செலுத்தவில்லை. வாயிலிருந்து நெருப்பு வரவழைப்பதை பள்ளிக்கூடப் பிள்ளைகள் கூடச் செய்யமுடியும். ஒரே வித்தியாசம் என்னவெனில் அவர்களால் அந்த அணுக்களையும் அணுக்கூறுகளையும் உண்டாக்க முடியாது. ‘பள்ளிக்கூடப் பிள்ளைகள்’ என்ற வார்த்தை உனக்கு ஆச்சரியம் அளித்திருக்கலாம். ஆன்மீகத்துறையில் நிபுணரான ஒரு யாத்ரிகரின் பாதுகாப்பான நிழலில் இருக்கும் மக்களைத்தான் நான் அப்படிச் சொன்னேன். வணக்கத்திற்குரிய உன் குருவைப்போல ஒரு பூரணமான மாஸ்டரின் கண் இமைப்பில் இந்த சக்தியை ஒரு சாதகருக்கு அவர் கொடுக்க முடியும்: விரைவிலா அல்லது தாமதமாகவா என்ற கேள்வியே இல்லை; உடனடியாக! இந்த சக்தி விரைவில் ஒருவருக்குக் கிடைத்துவிட்டால், அவரை பள்ளிக்கூடப் பிள்ளை என்று குறிப்பிட வேண்டியிருக்கும். இது சரியானதும் ஆகும். ஏனெனில் அனைவரும் வெறும் ஆரம்ப நிலையில் இருப்பவர்களாகவே உள்ளனர். ஹிந்து மத நூல்களில் இம்மாதிரி மிகைப்படுத்துதல் நிறைய உள்ளன. அவை எவ்வளவு என்று யாருக்குத் தெரியும்? இதை நீங்கள் பிரம்மாண்ட மண்டலம் என்று சொல்கிறீர்கள். இது மிகப்பரந்த ஒரு களம் ஆகும். ஆயினும் உன் ‘ராஜயோகத்தின் செயல்திறன்’ என்ற புத்தகத்தில் நீ கூறும் மனோமண்டலம் இதைவிட மிக மேலானதாகும். அதற்கப்பால் இருப்பது பரம்பொருள்தான். முதலில் கட்டளைகள் வந்து இறங்குவது நேராக மனோமண்டலத்தில்தான். அங்கே ஒரு இயந்திரம் பொருத்தப்பட்டிருப்பது போல நினைத்துக்கொள். உதாரணமாக ஒரு அரைவை

இயந்திரத்திலிருந்து மாவு வெளிவந்து, அதன் பிறகு பரவுவது போல மனோமண்டலத்தில் தெய்வீகக் கட்டளைகள் வந்திறங்கி, பிறகு அவை பிறருக்குத் தெரிவிக்கப்படுகின்றன. அரைவை இயந்திரத்திலிருந்து மாவு விழும் இடத்தில் அதுகொஞ்சம் இடம் எடுத்துக் கொள்கிறது. அது மேலும் கீழே விழும்போது இன்னும் அதிக இடத்தை எடுத்துக் கொள்கிறது. விழுந்த வேகத்தில் மாவு பரவும் போது அது மேலும் அதிக இடத்தை எடுத்துக் கொள்கிறது. உதாரணமாக மலையிலிருந்த தண்ணீர் கீழே பாயும் போது அதன் அகலம் அதிகரிக்கிறது. அங்கே இந்த விஷயம் முன்பே நடந்திருக்கும். எனவே நீ விவரித்திருப்பது 'மனோமண்டலம்' சம்பந்தப்பட்டது அல்ல. நீ செய்யும் வேலை எதுவாயினும், அதனுடைய இயக்கம் அங்கேதான் துவங்குகிறது. ஏனென்றால் மையத்துக்கு சற்றுகீழே எது இடம் மாற்றிக் கொடுக்கப்படுகிறதோ அந்த சக்தியை நீ பயன்படுத்துகிறாய். அதாவது என்ன நடக்க வேண்டியிருக்கிறதோ அதன் விதியை நீ உருவாக்க ஆரம்பிக்கிறாய் எனலாம். அதில் நீ எந்த அளவுக்கு சக்தியை அதிகரிக்கிறாயோ, அதே அளவுக்கு இந்த நிகழ்வு நடைபெறப் போகிறது. அதனால்தான் நீ கடும் உழைப்பை அதில் கொடுக்க வேண்டுமென்று உத்தரவுகள் தரப்படுகின்றன.''

### 30-1-1948

*குறிப்பு: இரவு 7.15 மணி அளவில் காந்திஜியின் ஆன்மாவுக்காக பிரார்த்தனை செய்யும் கூட்டு தியானம் நடத்த வேண்டுமென்று ஒரு உத்தரவு வந்தது. N3,H3 மற்றும் மேலும் இரண்டுபேர் கூட்டு தியானத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அச்சமயத்தில் காந்திஜியின் ஆன்மா அங்கு வந்து இருந்தது என்று N3 - க்கு ஒரு உணர்வு ஏற்பட்டது. அது சரியானது.*

*(நவீன இந்தியாவின் தந்தை, ஆங்கிலேய ஆட்சியில் இருந்து இந்தியாவுக்கு சுதந்திரம்கிடைக்கச் செய்த மகாத்மா காந்தி, டெல்லியில் ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் மாலை மணி 5.30 அளவில் N.R.கோட்சே என்ற ஹிந்து தீவிரவாதியின் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தார். காந்திஜிக்கு அப்போது வயது 78.)*

### 31-1-1948

இந்தியாவை முழுமையாக மனதில் கொண்டு வேலைசெய்யுமாறு எனக்கு (ராம் சந்த்தருக்கு) ஒரு கடமை நியமிக்கப்பட்டது. அதில் மிக வேகமாக, தீவிரமாக வேலை செய்யவேண்டும் என்று அந்த உத்திரவு கூறுகிறது.

**சுவாமி விவேகானந்தா கூறியது (இரவு மணி 9.40):**

‘‘கடவுளின் சித்தத்திற்கு அடிபணிந்து நடக்க வேண்டும்: அதை மீறி யாரும் போகமுடியாது. இந்த உலகில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது பற்றி நீ கவலைப்படவும், அக்கறை கொள்ளவும் வேண்டியதில்லை. உனக்கு அளிக்கப்பட்டுள்ள கடமையைச் செய். எந்த ஒரு நிகழ்ச்சி நடந்தாலும் அதற்காகக் கவலைப்படாமல் உன் வேலையிலேயே கவனமாக இரு. உண்மையாகவே சொல்கிறேன். அரசியல் களத்தில் இயற்கையின் உண்மையான பங்கை நீ செய்து கொண்டிருக்கிறாய். இந்த நோக்கத்திற்காக வந்து இதில் இணைந்துள்ள ஒரு உயர்ந்த ஆன்மா தோன்றினாலன்றி, இதில் எந்த மாற்றமும் செய்ய முடியாது. இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதற்கும் இந்த விதிமுறை செல்லுபடியாகும்.’’

’’இளைஞர்களே, காந்திஜியின் மரணத்தினால் நீங்கள் அதிர்ச்சியடைந்துவிட்டீர்களா? அது இயற்கைதான். நீங்கள் அதிர்ச்சியடையத்தான் வேண்டும். அவர் ஒரு சிறந்த மனிதர். அவருடைய எல்லாப் பணிகளுக்காகவும் இந்த உலகம் அவரை எந்நாளும் நினைவு வைத்திருக்கப்போகும் ஒரு மேலான ஆன்மா. ஒரு நேர்மையான அரசியல்வாதி. ஆயினும் நீ உனது துயரத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். என்ன நடக்க வேண்டியிருக்கிறதோ அதை யாராலும் தடுக்க முடியாது. அது இயற்கை விதி. அரசியல் துறையில் அம்மாதிரி ஒரு உயர்ந்த மனிதர், வருங்காலத்தில் இந்தியாவில் யாரும் இருக்கமாட்டார்கள். அவர் நல்ல இதயமும், உயர்ந்த நன்னெறிப் பண்புகளும் கொண்டவராக இருந்தார். அவர் தன்னுடைய பங்கை மிக நன்றாகச் செய்தார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவர் இனி தேவைப்படமாட்டார் என்னும் போது, அவர் திரும்ப அழைக்கப்பட்டார் அல்லது உங்கள் நடுவிலிருந்து அகற்றப்பட்டார். அவர் எங்கள் விஷயங்களில் தலையிட்டுக் கொண்டிருந்தார். அவருடைய எண்ணங்களும் நோக்கமும் தூய்மையாக இருந்தன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவர் யாராவது ஒரு பெரிய மகானின் வழிகாட்டுதலைப் பெறாமல், கலந்தாலோசிக்க தகுந்த மகான் யாருமில்லாமல் இருந்தார். உன்னுடைய கடிதம் அவருக்குக் கிடைத்தது. ஆனால், அதை அவர் முக்கியமாகக் கருதவில்லை. இந்த விஷயத்தில் உன்னிடம் ஆலோசனைக் கேட்பது அவருடைய கடமை இல்லையா? ஒரு ஆன்மீக சங்கத்தின் தலைவரால் எழுதப்பட்ட கடிதம் அது. அவர் அதை மதிப்பதற்கு அதுவே போதுமான காரணமாக இருந்திருக்க வேண்டும். அதனால் பல விஷயங்கள் அவருக்குத் தெளிவாகி இருக்கும். வருங்காலத்திற்கான அவருடைய திட்டம் வரையப்பட்டிருக்கும்.

வெளிப்படையாக அவரை எதிர்ப்பதற்கு எந்தவிதத்திலும் நான் விரும்பியிருக்கமாட்டேன். ஆனால், அவரால் கையாளக்கூடிய விதத்தில் போதுமான அளவு வேலை இருந்தது. அவருடைய உண்மையான மரண காலத்திற்கு சிறிதுகாலம் முன்னதாகவே அவர் திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டார் என்பதை உனக்குச் சொல்கிறேன். அதனால்தான் அவருடைய ஆன்மா அமைதி பெறுவதற்காக உன்னிடம் வந்தது. அவருடைய இப்போதைய உயிர் வாழ்க்கையின் மீதியுள்ள காலத்தை செலவழிக்கும்வரையில், அவருக்குத் தேவைப்படுகிற அவருக்கான சரியான இடத்தில் அவர் நிலைபெறுமாறு செய்யப்படமாட்டார். இப்படி திடீரென்று முடித்து வைக்கப்பட்ட ஆயுட்காலம் தீரும் வரையில் அவர் இப்படியே இருப்பார். அதனால்தான் அவருடைய ஆன்மாவுக்குத் தேவையான அமைதியளிப்பதற்கு மேலாக எதுவும் செய்வதற்கு உனக்கு உத்தரவு அளிக்கப்படவில்லை. இந்த உலகில் காந்திஜி பெருமளவுக்கு ஆட்சி செலுத்தினார். ஆனால், நீ இருக்கும் இடத்தில் அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை.''

''இந்தக் குறிப்புகளில் கூறப்பட்டுள்ள பல விஷயங்கள் நீ உயிருடன் இருக்கும் காலம் வரையில், பொதுச் சொத்தாக ஆகிவிடக்கூடாது. அதற்குப் பிறகு இவையனைத்தும் அச்சிடப்படும். இந்தக் குறிப்புக்களை பத்திரமாக வைத்திருக்கவும். உன் அன்புச் சகோதரரை சந்தோஷப்படுத்துவதற்கு (வணக்கத்திற்குரிய M1) உன்னால் பெறப்பட்ட குறிப்புக்களை விட்டுவிடலாம். அவை நம் பிரபுவிடம் நீ கேட்டுக்கொண்டதால் கூறப்பட்டவை. வணக்கத்திற்குரிய உனது மாஸ்டர் உன்னிடம் சொல்லாதவற்றை அல்லது அவருடைய உண்மையான விருப்பத்துக்கு மாறாக இருந்ததை உன் குறிப்புக்களில் எழுதிக்கொண்டாய் என்பது எனக்குத் தெரியும். சில குறிப்புகளை (M1) அவர் தன்னிடம் வைத்திருக்கிறார். அவை உனக்கு உரிமையானவை மற்றும் உனது ஆன்மீகப் பிரதிநிதிக்கு உரிமையானவை. இந்தக் குறிப்புக்களை பிரதியெடுத்து, அதிலிருந்து தங்கள் சொந்தக் குறிப்புக்களை எடுத்துக் கொள்ள யாருக்கும் அனுமதியில்லை. உன்னுடைய பிரதிநிதியை நான் தயார்படுத்த விரும்புகிறேன். ஆனால் அவர் யார்? எப்போது உன்னிடம் அவர் வருவார்? என்பது கவனமாகப் பாதுகாக்கப்படும் ரகசியம் ஆகும். உன்னுடைய உடல்நலத்தின் நிச்சயமற்றதன்மை இதற்காக ஒருவரைத் தயார்படுத்த வேண்டிய கட்டாயத்துக்கு என்னை உள்ளாக்கியிருக்கிறது. இதற்கு மிகவும் தகுதியான ஒருவர் உன்னிடத்தில் தன்னை மிகவும் ஈடுபடுத்திக் கொண்டவராக இருப்பார். நமது பிரபுவாகிய

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் மீது ஆரம்பத்திலிருந்தே நீ உன்னை மிகவும் ஈடுபடுத்திக் கொண்டவனாக இருந்தாய் என்பது உண்மை தானே? உனக்கு அதைத் தவிர வேறு கவனம் இருந்ததில்லை. ஆன்மீகத்தில் உன்னைப்போல் இவ்வளவு துணிவுடன் வந்தவர் வேறு யாராவது உண்டா? உன்னிடத்தில் ஒரு குறைபாடு இருந்தது. அந்த விஷயத்தில் எங்களால் எதுவும் செய்ய இயலாமல் இருந்தது. உன் தந்தையிடமிருந்து வாரிசுரிமையாகப் பெற்ற ஒரு விஷயத்தை இன்னமும் நீ இழக்கவில்லை. அதை நான் உன்னிடமிருந்து நீக்கிவிட்டால், நிச்சயமாக, நம் பிரபுவால் உனக்கென்று நியமிக்கப்பட்ட அந்த இடத்திற்கு நீ திரும்பிச் சென்றுவிடுவாய். அதனால் சில மனிதர்கள் ஏமாற்றமடைந்துவிடும் சாத்தியம் இருக்கிறது. ஆனால் அதற்காக நாங்கள் வருந்துகிறோம். ஒரு மிக மெல்லிய திரையை உன் மாஸ்டர் உன்னிடம் விட்டுவைத்திருக்கிறார். அதை மற்றவர்களை ஏமாறச் செய்வதற்கான திரை எனலாம். அது உடைக்கப்பட்டால், அதற்குப் பிறகு நீ உயிர் வாழமாட்டாய். உன்னையும் என்னையும்போல மேலான ஆன்மாக்களுக்கு இது தேவை. (அதாவது மனித உடல் தேவை) என் குருநாதர் (ராமகிருஷ்ண பரமஹம்சர்) என்னிடம் ஒரளவுக்கு இதை விட்டு வைத்திருந்தார். நான் இவ்வுலகை விட்டுச் செல்வதற்கு சற்று முன்பு அது உடைக்கப்பட்டது. இந்த விஷயத்தில் என் நிலை உன்னைப்போலவே இருந்தது.''

குறிப்பு: இந்தத் திரையைப் பற்றிய ஒரு மதிப்பீட்டை மதிப்புக்குரிய சுவாமிஜி என் அனுபவத்திற்குக் கொண்டு வந்தார். ஆனால் அதை எழுத வார்த்தைகள் இல்லை.

### சுவாமி விவேகானந்தா தொடர்ந்து கூறியது:

''வணக்கத்திற்குரிய உனது மாஸ்டருக்கும் இதே மாதிரி ஒரு திரை இருந்தது. ஆனால், அதைக் கிழித்தெறியும் சக்தி அவரிடம் இருந்தது. ஆயினும், உன்னைப் பொறுத்த வரையில் இதற்கான திறவுகோலை அவர் தன்னிடத்தில் வைத்திருக்கிறார். இங்கே பார். இதைத் தேடிக் கண்டுபிடி. அதாவது உன் குடும்பத்தில் கடவுளுடன் தொடர்பு (இணைப்பு) ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்த ஒரே ஆன்மா நீதான் என்று தோன்றுகிறது. நினைவில் வைத்துக்கொள். ஒரு இருட்டான பகுதியில் இருந்துதான் எப்போதுமே இந்த மாதிரி ஒரு மகாபுருஷர் வருகிறார். மக்கள் ஒரு அவதாரம் வருவார் என்று எதிர்பார்க்கிறார்கள். அப்படி ஒன்று இருக்கிறதா? அப்படி ஒருவர் வந்தால் அதை அவர்கள் எப்படி தெரிந்து கொள்வார்கள்? காற்றில் அதே ஆற்றல் நிரம்பியிருப்பதைக் கண்டால்,

அந்தக் கருத்தை அவர்கள் தியானம் செய்தால், அந்தக் காற்றில் கிருமிகள் போதுமான அளவுக்கு வளர்ச்சி அடைந்திருப்பதைக் காண்பார்கள். நீதான் ஆன்மீக மாஸ்டராக, ஆன்மீகத்தின் அவதாரமாக இருக்கிறாய். ஆயிரம் ஆண்டுகள், மக்கள் சேர்ந்து உட்கார்ந்து செய்ய முடியாத ஒரு காரியத்தை, நீ ஒரு வினாடியில் செய்ய முடியும். வணக்கத்திற்குரிய உன் மாஸ்டரைத் தவிர, இவ்வுலகில் பிறந்த வேறு யாருக்கும் இந்தவிதமான சக்தி இல்லை. நினைவில் வைத்துக்கொள்ளத் தகுந்த ஒரு விஷயம் என்னவெனில், ஒரு இடைநிலை உயிரின் மீது இந்த சக்தியை நீ பிரயோகித்தால் அது உயிரற்றதாகி விடும். இந்தவிதமான அவதாரங்களிடம் காணப்படும் விசேஷம் அது தான் ஒரு மனிதரை உன்னால் உடனடியாக முக்திபெறச் செய்ய முடியும்.''

''உண்மையை நான் வெளிப்படுத்திச் சொன்னால், இந்த விஷயத்தில் நானே உன்னை சீடனாக ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் உன்னிடம் ஐக்கியமடைந்திருக்கிறேன். அது எதற்காக? நான் உன்னோடு ஓடிக்கொண்டிருக்கிறேன். உன்னிடம் ஐக்கியம் அடைந்துள்ள உயர்ந்த ஆன்மாக்கள் அனைவரும், உண்மையாகவே சொல்கிறேன் இதே கருத்தை மனதில் கொண்டுள்ளனர். சரியான காரணமின்றி, முக்தி அடைந்த எந்த ஒரு ஆன்மாவும் இதைச் செய்யமாட்டார்கள். வணக்கத்திற்குரிய உனது மாஸ்டரின் பதவிநிலை வேறுவிதமானது. நீ உனக்குள்ளே சென்றாய். அவரும் உனக்குள்ளே வந்தார். ஒரு உயர்ந்த மாஸ்டர், தன் சீடனுடன் அடைந்திருக்க வேண்டிய உறவுமுறை அதுதான். அதாவது தனக்காக வேலை செய்வதற்காக அவரை உருவாக்குவது, உன் ஆழத்தில் நீ தேடினால் எத்தனையோ ரிஷிகள், முனிவர்கள், அவர்கள் அதை அறிவித்திருந்தாலும் இல்லையென்றாலும், அவர்கள் இருப்பதைக் காண்பாய். அம்மாதிரி ஒரு சக்தியை நீ பயன்படுத்துகிறாய். அதன் விளைவைப் பார். யாரிடமாவது இந்த சக்தியை நீ செலுத்தினால், அவருடைய உள்நிலை உன்னுடையதைப் போலவே ஆகும். எப்படியிருந்தாலும், வருங்காலத்தில் இம்மாதிரி ஒரு மாபெரும் மகாபுருஷரின் தேவை இயற்கைக்கு ஏற்படும் என்று தோன்றவில்லை. ஆகவே அம்மாதிரி ஒரு சக்தியை வேறு யாருக்கும் மாற்றிக் கொடுப்பதை உன் மாஸ்டர் தடை செய்திருக்கிறார்.''

''ஒளியுலகில் தனக்குக் கிடைக்கின்ற மேன்மைநிலைகள் அனைத்தையும் தனது தேர்ந்தெடுக்கப்பட்ட சீடருக்கு மாற்றிக் கொடுத்துவிடும் ஒரு மாஸ்டரை யாராவது பார்த்திருக்கிறீர்களா? இம்மாதிரி விஷயங்களைக் காணும் காட்சித்திறன் யாருக்கு இருக்கிறது? அவர்கள் கிணற்றுத்

தவளைகளைப்போல இருக்கிறார்கள். இதைப் புரிந்து கொள்ளும் திறன் யாருக்கும் இல்லை. அவர்கள் நாய்களைப்போல குரைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையாகவே சொல்கிறேன். அவர்களிடத்தில் சாராம்சமாக எதுவும் இல்லை. கடல் கடந்துள்ள இடத்தை அவர்கள் இன்னும் அளக்கவில்லை. அவர்கள் நோயாளிகளாக, எப்போதும் ஒரு போதை தேவைப்படுகிறவர்களாக இருக்கிறார்கள். பனிக்கட்டி போன்ற பொருட்கள் அவர்கள் முன்னால் இருக்கின்றன. அவர்கள் கண்ணாடி போன்ற வழவழப்பான பகுதியில் சென்று கொண்டிருக்கிறார்கள். ‘அவர்கள்’ என்று நான் குறிப்பிடுவது லாலாஜி சாகேப் அவர்களால் அவர் பெயரால் அமைக்கப்பட்டுள்ள சமுதாயத்தில் தேவைப்படாத மனிதர்களைத் தான். இவ்வுலகின் பெரிய முனிவர்கள், ரிஷிகளைப் பற்றியும் இதே மாதிரி நான் சொல்லமுடியும். நீ மிகவும் அடிக்கடி சிந்திக்கின்ற இந்தவிதமான பயிற்சியைப் பெறுவதற்குத் தயாராக இருக்கின்ற எந்த ஒருவரும் இன்னும் பிறக்கவில்லை. உன் குருவிடத்தில் வேறு யாரிடமும் காணமுடியாத ஒரு விசேஷத் தன்மை இருக்கிறது. எல்லாம் கடந்த மையத்தின் பூரண நிலையில் நீந்திக்கொண்டு இருக்கும்போதும், உனக்காக ஒதுக்கி வைத்திருந்த அனைத்தையும் உனக்குக் கொடுத்த பிறகும், இன்னமும் அதிகமான உனது ஆன்மீக முன்னேற்றத்துக்காக அவர் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார். உனக்கு மேலும் மேலும் அதிகமாகக் கொடுக்க அவர் எந்நேரமும் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார். இவ்வுலகில் இம்மாதிரி வேறு உதாரணம் இருக்கிறதா? உச்சநிலையாகிய மையத்தில் நீந்திக் கொண்டிருக்கும்போது, உண்மையாகவே சொல்கிறேன், அங்கே பிரார்த்தனை கிடையாது. ஒரு பொருத்தமான வழியில் செய்யப்படுகிறது என்றாலும் உத்தரவு தான் உண்டு. அங்கு சக்தியும் ஆற்றலும் பயனற்று விடுகின்றன.’’

## 2-2-1948

### சுவாமி விவேகானந்தா:

‘‘உன்னால் பயன்படுத்தப்படுகின்ற ஆயுதம் இல்லாமல் இந்தியா ஒளிவீச முடியாது. இந்தியாவுக்கு சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்ததில் வெற்றியடைந்தவர் யார்? உண்மையில் மகாத்மா காந்திதான் என்பது வெளிப்படையானது. காந்திஜிக்கு சங்கல்ப பலம் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. நீ உன்வேலையை ஆரம்பிப்பதற்கு முன்பு, பலன் தருவதற்காக, விளைவை உண்டாக்குவதற்காக அவர் தனது இந்த சங்கல்ப சக்தியை செயல்படுத்தினார். அப்படியானால், அவரது முயற்சியே அந்த

விளைவை உண்டாக்குவதற்குப் போதுமானதாக இருந்ததா? அவர் சுமார் முப்பது வருடங்களாக இந்தக் காரியத்தில் முனைப்பாக இருக்கிறார். அந்தக் காலகட்டத்தில் அவர் ஏன் வெற்றியடையவில்லை? இதன் பதில் எளிமையானது, தெளிவானது. அவர் முக்கியமாக மனித சக்தியுடன் வேலை செய்துகொண்டிருந்தார். இதற்குப் பாராட்டுதல்களைப் பெறத் தகுதியுடைய ஒரே ஒரு மனிதர்தான் இருக்கிறார் என்று நான் சொன்னால் மக்கள் சிரிப்பார்கள். வருங்காலத்தில் நடைபெற இருப்பவை அனைத்தும் ராம் சந்த்தர் என்ற ஒரு மகாபுருஷரை மட்டுமே நம்பிச் சார்ந்துள்ளன. இங்கே இந்தியாவில் காந்திஜியினால் கொண்டுவர முடியாததை உலகம் முழுவதற்கும் ஒரு மாமனிதர் செய்வார்! உன்னைத்தவிர வேறு யாரும் மாற்றத்தை உண்டாக்க முடியாது. நானும் கூட இதில் சக்தியற்றவன். ஒளியுலகில் இருக்கும் யாருக்கும் கூட இந்தவிஷயத்தைத் தொடும் சக்தி கிடையாது. உனக்கு ஏன் இந்த வேலை ஒப்படைக்கப்பட்டது என்பது உனக்குத் தெரியும். இந்த வழியில்தான் இது நடைபெற வேண்டுமென்று இயற்கை கருதுகிறது. முதலில் இந்தியாவில் இருக்கும் வேலையைச் செய்து முடித்துவிடு. அதன்பிறகு ஐரோப்பிய நாடுகள் எந்த சக்தியின் மீத எப்படி நிற்கின்றன என்று பார்ப்போம். யாருடைய அமைதியான செயல்பாடு உலகம் முழுவதையும் முடித்துவிட முடியுமோ அப்படி ஒரு மனிதரை இந்தியாவில் அவர்கள் பார்த்ததில்லை. இவ்வளவு சக்தியுடைய ஒரு மனிதர் இதுவரை ஒருபோதும் இருந்ததில்லை என்று நாம் நம்புகிறேன். பழங்காலத்தில் இதுபோன்ற பதிவுகள் இல்லை. எனவே மக்கள் அதுபற்றி அறியாமல் இருக்கிறார்கள். இங்கு அவர்கள் பார்ப்பதற்காக பதிவேடுகள் தயாரிக்கப்படுகின்றன. உம், சீக்கிரம், சீக்கிரம், எலும்புகளின் மீது கட்டிடம் கட்டு.''

''இந்த உலகமே துயரத்தில் இருக்கிறது. ஆனால் சர்ச்சில் (இங்கிலாந்து நாட்டில் கன்சர்வேடிவ் கட்சியைச் சார்ந்த பிரதம மந்திரியாக இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது இருந்தவர்) காந்திஜியின் வருந்தத்தக்க மரணத்தால் மகிழ்ச்சியுடன் இருக்கிறார். அவரைப்போல இவ்வளவு இருண்ட இதயம் உள்ளவரை (இரக்கமற்றவரை) நான் பார்த்ததில்லை."

### அகஸ்திய முனிவர் (ராம் சந்த்தரின் வேலையைக் கவனித்து):

''இந்த நிலை அதிகமான மேன்மை உடையதாக இருக்கிறது. (சிறிது இடைவெளி) இங்கே ஒன்றும் செய்ய இயலாத நிலைமை இருக்கிறது. இதுதான் இயற்கையின் கட்டளை.''

*குறிப்பு: 31-1-1948 என்ற தேதியில் எனக்கு நியமிக்கப்பட்ட கடமை, இன்று 3-2-1948 காலை 10 மணிக்கு செய்து முடிக்கப்பட்டது.*

## 5-2-1948

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''காந்திஜியின் ஆன்மா அங்குமிங்கும் அலைந்து கொண்டு இருக்கிறது. அது மேலே போக விரும்புகிறது. ஆனால் அதனால் அதைச் செய்ய முடியவில்லை. அது முக்தியை அடைந்துவிட்டதா? இல்லை, அவருக்குப் பற்று இருந்தது. குடும்ப உறுப்பினர்கள் மீது அல்லது பொதுவாக மக்களின் மீது, ஆக எதுவாக இருந்தாலும் சரி. இந்தவிஷயத்தில் இரண்டும் ஒன்றுதான். எத்தனையோ சீர்திருத்தவாதிகள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் முக்தி அடைந்தார்களா? இல்லை. சீர்திருத்தவாதியாக இருப்பது மிகவும் சுலபம். புத்தகங்களை போதுமான அளவுக்கு நன்கு படித்து, கருத்துக்களை கிரகித்துக் கொள்ளவேண்டும். பிறகு ஒரு குறிப்பிட்ட வழியில் வேலை செய்ய ஆரம்பிக்க வேண்டியதுதான். நல்ல பேச்சுத் திறமையும் இருந்தால் போதும், மக்கள் உங்களை நம்ப ஆரம்பித்து விடுவார்கள். தீமையை எதிர்த்து கொஞ்சம் சொந்த அனுபவம் இருந்தால், அதிலும் விசுவாசமான தொண்டர்கள் உங்களுக்குக் கிடைப்பார்கள். காந்திஜி விஷயத்தில் என்ன நடந்தது? சுதந்திரம் பற்றிய ஆவலை இந்தியா முழுவதும் அவர் பரவச் செய்தார் என்பதில் சந்தேகமில்லை. எனவே மக்கள் அவர் வழியில் பின் தொடர்ந்தார்கள். காலத்தின் ஆற்றல் மற்றும் தெய்வீகக் கட்டளையினால் அதற்குப் பலன் கிடைத்தது. எப்படியோ அதற்கான பெருமை அவருக்குக் கிடைத்தது. மூன்று வருடங்களுக்கு முன்பு டெல்லியில் நீ செய்ததைச் செய்யும் சக்தி அவருக்கு இருந்ததா? சரி, சுதந்திரம் வந்தாயிற்று. ஆனால் இனி என்ன நடக்கவேண்டும் என்பது யாருக்குத் தெரியும்? இன்னும் என்ன மீதியிருக்கிறது என்பது பற்றி யாருக்கும் எந்த யூகமும் இல்லை. அது மேலும் சுதந்திரத்தை அளிக்கப்போகின்ற ஒன்றாக இருக்கும். நீரோடைகள் ஓடும். மனிதர்கள் கொல்லப்படுவார்கள் என்று நான் சொல்லவில்லை. சில அம்சங்கள் மறைந்து போகும். அரசாங்கம் தனது போக்கை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும். உங்களுக்கெல்லாம் சில கடமைகள் அளிக்கப்படும். பாகிஸ்தான் தன் தலையைத் தூக்கும். என்ன நடக்கப்போகிறது என்று பாருங்கள். இந்த பூமிக்கு ரத்த தாகம் இன்னும் இருக்கிறது. பாகிஸ்தானில் இரவும் பகலுமாக, அதன் வலிமையை அதிகரிப்பதற்கு, தயாரிப்புகள் நடைபெற்று வருகின்றன. அரசாங்கத்தின்

பிடியை முற்றிலும் தங்கள் கைகளில் எடுத்துக்கொள்வதற்கு வேலை நடக்கிறது. அரேபியா, பெர்ஷியா மற்றும் இதுபோன்ற நாடுகள் சக்தி நிறைந்தவையாக இருந்திருந்தால், அது நடந்திருக்கும்.''

### மகாத்மா காந்தி:

''நீங்கள் என்னை என்ன கேட்கிறீர்கள்? மரணத்திற்குப் பிறகும் கூட எனக்கு மனநிறைவு இல்லை. உண்மை என்ற கொள்கைக்கு நான் மனம் ஈடுபட்டவனாக வாழ்ந்தேன். ஆனால், எனது மெய்யான வீட்டுக்கு நான் செல்ல முடியவில்லை. எனக்கு பற்று இருந்தது. அதிலேயே நான் நீடித்திருந்தேன். உண்மைதான். ஆனால், இப்போது முக்தியடைவதற்காக ஏங்குகிறேன். என் மனதில் பாகிஸ்தான் பற்றிய எண்ணம் ஒரு பக்கம், இந்தியா பற்றிய எண்ணம் ஒரு பக்கம் இருந்தது. இன்னொரு பக்கம் நேருவைப் பற்றிய கவலையும் இருந்தது. இந்தவிஷயங்களையெல்லாம் நான் என்னோடு கொண்டு வந்தேன். அவற்றிலிருந்து விடுபடுவதற்கு இப்போது மிகவும் பிரார்த்திக்கிறேன். உங்கள் கடிதத்தை ஏதோ சாதாரண விஷயமாகக் கருதி நான் கவனிக்காமல் விடும் அளவுக்கு அந்த விஷயங்களில் ஈடுபட்டிருந்தேன். என்னுடைய சங்கடமான நிலையிலிருந்து நேருவால் என்னை விடுவிக்க முடியவில்லை. எல்லோரையும் ஒன்று சேர்த்து ஒற்றுமைப்படுத்த நான் முயற்சி செய்தேன். அது இயற்கையின் விதிக்கு எதிராக இருந்தது. எனவே, இந்த ஒரு இடைக்கால நிலைக்கு வந்துவிட்டேன். உண்மையில் இந்தமாதிரி விவகாரங்களுக்கான அதிகாரம் ஆன்மீக மெய்ஞ்ஞானம் பெற்றவரின் கைகளில் இருக்க வேண்டும் அல்லது ஆயுத பலத்தால் இதைச் சீராக்கும் திறமை உடைய ஒருவரின் கைகளில் இருக்கவேண்டும். உங்களுடைய கருணைக் கண்கள் என் பக்கம் திரும்பாமல் இருப்பது ஏன்? உங்களுடைய ஆன்மீகநிலை பற்றி ஒரு துளியளவு எனக்குத் தெரிந்திருந்தால், இந்த வேலையிலிருந்து உண்மையாகவே நான் விலகியிருப்பேன். நீங்கள் அதைத் தக்க வைத்திராவிட்டால், இந்த நாடு நீடித்திருக்காது.''

## 6-2-1948 (இரவு மணி 7.30)

### சுவாமி விவேகானந்தா:

''இந்த உலகம் ஒரு துன்ப நிலையில் இருக்கிறது. எல்லா வகையிலும் கீழே போய்க்கொண்டிருக்கிறது. ரஷியா ஒவ்வொரு நாளும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா பணத்தால் வீங்கிக் கொண்டு இருக்கிறது. இங்கிலாந்து மெதுவாக ஏழையாகிக் கொண்டிருக்கிறது. இந்த எல்லா

விஷயங்களுடனும், அழிவு எங்கே துவங்குகிறது என்பதை நாம் பார்ப்போம்.''
(அவர் கூறிய தகவல் சம்பந்தமான திட்ட வரைபடம் மனக்காட்சியில் வந்தது.)

**சுவாமி விவேகானந்தா கூறியது:**

''இந்தக் குறிப்புக்கள் வருங்காலத்தில் உனது வழிகாட்டுதலுக்காகக் கூறப்பட்டவை. அந்த வேலைக்காகக் காத்திரு. முதலில் இந்தியாவின் தலைவிதியைப் பார்ப்போம். நேரு பெருமையாகச் சொல்லிக்கொள்ளும் கொள்கை, விஷத்தை (அபாயத்தை) உண்டாக்குகிறது. அது ஆன்மீகமாகவும் இல்லை. சமூக விதியின்படியும் இல்லை. இம்மாதிரி விஷயங்களை வைத்துக்கொண்டு அரசாங்கத்தை நடத்தமுடியாது. அவரைத் திருத்துவதற்கு உன்னை நியமிக்கிறேன். உன் கைகளில் கடிவாளத்தை (ஆட்சி செய்யும் சக்தியை) வைத்துக்கொண்டால் இன்னும் நல்லது. அதற்கான உத்தரவுகள் அளிக்கப்படுகின்றன. தேவைக்கேற்ப வேலை செய்வதற்கு யாராவது முனிவரை நீ நியமிக்க வேண்டும். ஒவ்வொரு நகரமாக நீ அதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால், ஒரு பக்கம் கத்தி இருக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொள். நேருவின் உயிர் காக்கப்படவேண்டும். ஹிந்து என்பது எந்த ஒருவருக்கும் விழுங்கப்பட வேண்டிய ஒரு கடினமான கவளமாக இருக்கிறது.''

8-2-1948

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''வணக்கத்திற்குரிய சுவாமி விவேகானந்தா உன்னைப்பற்றிய பல ரகசியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார். என்னுடைய குறிப்பு உன்னைப் புகழ்வதற்காக அல்ல. நிகழ்ச்சிகள் பற்றி, எதையும் புரிந்து கொள்வதற்கு, எந்த ஒருவருக்கும் உரிமை இருக்கிறது. ஒரு அவதார புருஷரின் அருகில் உட்கார்ந்து, அவரிடமிருந்து பிராணாஹூதியைப் பெறுவதால் தங்கள் பாவங்களிலிருந்து விடுபடமுடியும் மற்றும் இதனால் முக்தியை அடைய முடியும் என்று தங்கள் மனதில் அவதாரங்களைப் பற்றி ஒரு எண்ணத்தை மக்கள் நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். பகவான் ஸ்ரீராமன், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஆகிய அவதாரங்களில் இது நிச்சயமாக நடந்தது. அவர்களை நெருங்கிச் சென்றவர்கள் யாராயினும் துன்பங்களாகிய பெருங்கடலை அவர்கள் கடந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. அது அப்படியே இப்போதும் தொடர்கிறது. இது ஒவ்வொரு அவதாரத்துக்கும்

சம்பந்தப்பட்டதாக நீடிக்கிறது. ஆயினும் முக்தியளித்தல் என்பது விளையாட்டான விஷயம் இல்ல. அது முற்றிலும் வேறு விஷயம். இந்த விஷயம்! அதாவது துன்பங்களைக் கடக்கச் செய்வது. தன் கைகளில் இருக்கிறது என்று யாராவது கர்வம்கொள்ள முடியுமா? உண்மையைச் சொன்னால், ஒருவரை அவரது துன்பக் கடலைக் கடக்கச் செய்வது – வேறு பொருத்தமான வார்த்தை கிடைக்காததால் சொல்கிறேன் - அது பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளை செய்யும் வேலையாகும். உண்மையான மனிதன் என்பவன், உண்மையான விதத்தில் ஒருவரை முக்தி அடையச் செய்பவனே ஆவான். ஒருவரை கழற்றிவிட்டு அனுப்பிய பிறகு, அவர் தலைகீழாகச் சுழலும் செயல்முறை முடிவதற்காக திரும்பிவர வேண்டியிருக்கிறது என்றால் அதில் என்ன பயன்? (துன்பங்களின் காரணத்தை நீக்காமல் துன்பங்களை மட்டும் நீக்கினால், அப்பலன்களை அனுபவிக்க அவர் மீண்டும் பிறக்கவேண்டிய நிலை வரும் என்றால் அதில் பயன் என்ன?) உண்மையான விஷயம் என்றால் அது முக்திநிலைதான். இந்தக் காரியத்தைச் செய்யக்கூடியவராக யாராவது இருக்கிறாரா? ஆம், இதை அவருடைய கைகளில் ஒரு கருவியாக இயற்கை கொடுத்துள்ள ஒருவர் இருக்கிறார்; அந்த ஒருவர் மட்டுமே அப்படிச் செய்ய முடியும்! எப்படியும் நான் இன்னொரு விஷயமும் சொல்ல வேண்டியிருக்கும். ஒரு மனிதரை அவருடைய சம்ஸ்காரங்களை அனுபவித்துத் தீர்க்கும்படி செய்யாமல் முக்தியடையச் செய்வது இயற்கையின் விதிக்கு எதிரானது. முக்தியடையச் செய்யும் திறமை பெற்றிருந்த மனிதர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் சம்ஸ்காரங்களை அழிக்கும் விஷயத்தில் தேர்ச்சித்திறன் அவர்களிடம் இல்லை. இதனால் அவர்கள் அமைதியாக இருந்துவிட்டார்கள். இயற்கை உண்மையாகவே இந்த விஷயத்தில் உன்னை விளிம்புவரை நிரப்பியிருக்கிறது. இரண்டு வகையான (சம்ஸ்காரங்களை அழித்தல், முக்தியடையச் செய்தல்) தேர்ச்சித் திறனையும் அது உனக்குக் கொடுத்துள்ளது. ஆயினும் இந்தக் கருவியை மிக அரிதாகவே நீ பயன்படுத்த வேண்டும் என்பது எனது அறிவுரையாகும். யார் இதைத் தெரிந்து கொண்டு புரிந்து கொள்வார்கள்? அதற்கான திறமை யாருக்கு இருக்கிறது? என்ன ஒரு பரிதாபம்? இந்த நிலையைப் பற்றி உணர்ந்து கொள்ள யாருமே இல்லையே! நீ இந்த அதிசயக் கருவியை நெஞ்சில் சுமந்து கொண்டு போய்விடுவாயா? யாராவது குறைந்தபட்சம் ஒரே ஒருவராவது, தன்னால் முடிந்த அளவுக்கு இந்த ரகசியத்தை உன்னிடமிருந்து எடுத்துக்கொள்ள முன்வருவாரா? நான் உன்னை வடிவமைத்தேன் என்பது உண்மைதான். ஆனால் ஒரே ஒருவரைத் தான்

என்னால் உருவாக்க முடிந்தது. என் வாழ்க்கையின் முழு நோக்கமும் இதுவாகவே இருந்தது. இப்படி ஒரு ‘எதுவுமற்ற’ மனிதரை என்னால் உருவாக்க முடியும் என்று கடவுள் அதைச் செயல்படுத்திக் காட்டினார். சகோதரரே, அம்மாதிரி ஒரு மனிதருக்கு ‘எதுவுமற்ற’ அதாவது ‘தன்னை சிறிதும் முக்கியத்துவம் உடையவராக ஒருபோதும் நினைக்காத – தன்னைப் பற்றிய எந்த எண்ணமும் அற்ற’ என்ற இந்த வார்த்தை தான் மிகப்பொருத்தமானது. இதைவிடப் பொருத்தமாக வேறு எந்த வார்த்தையும் இருப்பதாகத் தோன்றவில்லை. அனைவரும் அவரைப்போல இருக்க முயற்சி செய்ய வேண்டும். என் ஆன்மீக வம்சாவளி அந்த விதமாகவே உருவாகட்டும். அப்படியே ஆகுக!’’

‘‘மிக உயர்ந்த ஆன்மா’ என்று பொருள்படும் ஒரு மகாத்மாவைக் குறிப்பிடுவதற்கு ‘எதுவுமற்றவர்’ என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது மக்களுக்கு பெரிதும் வியப்பாகவும், புரியாமலும் இருக்கலாம். என்னுடைய சொல்லகராதியில் மகாத்மா என்பதற்கு இதைவிடச் சிறந்த வார்த்தை கிடைக்கவில்லை. அவருடைய குணவிசேஷம், சிறப்புத் தகுதியே இதுதான். இந்தக் குறிப்புக்கள் மிகவும் அந்தரங்கமானவை ஆகிக் கொண்டிருக்கின்றன. இவை ரகசியமாக இருக்கவேண்டும். ஏனெனில் யாராவது இந்த விஷயத்தைப் பற்றி கேலியாகப் பேசலாம். இகழ்ச்சியாகக் கூட சொல்லலாம். ராம் சந்த்தர் தன்னைப் புகழ்வதற்காகவே இதை எழுதியிருப்பதாகவும் நினைக்கலாம். எனவே, இந்த விஷயங்கள் ஒரு குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே தெரிந்ததாக, அதிலிருநது அவர்கள் கற்றுக்கொள்வதற்காக பாதுகாத்து வைக்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.’’

### மதிப்புக்குரிய சைதன்ய மகாப்பிரபு:

‘‘என்னுடைய ஆன்மீக உயர்நிலை பற்றி மக்கள் மிகவும் பெருமைப்படுகிறார்கள். மக்கள் என்மீது நம்பிக்கை கொள்ளும்படியாக அப்படி ஒரு விஷயத்தை நான் எடுத்துக் கொண்டேன். இன்னும் நான் சொல்லட்டுமா? கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்! நீங்கள் இப்படி எந்த முறையையும் பின்பற்றவில்லை. அப்போது யார் பெரியவர்? பௌதீக உடலில் இருக்கும் போதே பரமாத்மாவில் (பரம்பொருளின் ஜீவத்தன்மையில்) நீந்தும் செயலை நீங்கள் ஒருவர்தான் செய்ய முடியும். தனது ஆயுட்காலத்தில் வேறு யாராலும் இதைச் செய்ய முடிந்ததில்லை. எத்தனையோ ரிஷிகளும் முனிவர்களும் பரமாத்மாவின் நிலையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதாவது எத்தனையோ அந்த நெருப்பின் சூட்டில்

குளிர் காய்ந்திருக்கிறார்கள். எப்படி இருந்தாலும் அவர்கள் அந்த நெருப்பிலிருந்து தூரத்தில் விலகி இருந்தார்கள். அந்த வெப்பத்தின் சுகத்தை மட்டுமே பெற்றுக் கொண்டு இருந்திருக்கிறார்கள். வணக்கத்திற்குரிய குரு செய்துள்ள அதிசயம் மிகவும் பாராட்டுக்குரியது. ஆயுட்காலத்தில் இந்தநிலையை தன் சீடருக்குள் கொண்டு வரும் சக்தியுடைய ஒரு குருநாதர் ஒருபோதும் இதற்கு முன்பு உருவாக்கப்பட்டதில்லை அல்லது பிறந்ததில்லை. இந்த விஷயத்தில் ராம் சந்த்தரும் மற்றும் வணக்கத்திற்குரிய லாலாஜி மகராஜும் மிகச்சிறந்த உதாரணமாக இருக்கிறார்கள்.''

''இந்தக் கேள்வி சரிதான். கபீர் பரமாத்மாவில் (பரம்பொருளின் ஜீவத்தன்மையில்) நீந்தும் நிலையை அடைந்தாரா? என்ற கேள்விதான் அது! இல்லை. அவருடைய பௌதீக உடலைவிட்டு நீங்கிய பிறகுதான் இந்த நிலையை அடையும் அதிர்ஷ்டம் அவருக்குக் கிடைத்தது. இதை அவருடைய பிரசங்கங்களில், பல உயர்ந்த நிலைகள் சம்பந்தமாக அவர் விவரித்துள்ள விஷயங்களிலிருந்து கண்டறியலாம். இம்மாதிரி பல உயரிய ஆன்மாக்கள் முன்பே சென்றுள்ளன. அவர்களுடைய இணைப்பு முடிவான அடித்தளம்வரை நெருங்கியிருக்கிறது. தங்கள் பௌதிக உடலை இங்கேவிட்டுவிட்டு, தங்களுக்கான உத்தரவுகளைப் பெறுவதற்காக பரமாத்மாவை நெருங்கிச் சென்று, அதன்பிறகு மீண்டும் பௌதிக உடலுக்குத் திரும்பி வந்தவர்களும் இருந்திருக்கிறார்கள். ஆயினும் சகோதரரே, பௌதிக உடலில் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே, பரமாத்ம நிலையில் நீந்துகின்ற இந்த உயர்நிலை ஒருபோதும் தானாக நிகழ்ந்ததில்லை. உங்களுடைய இந்தத் திரை, கிழித்தெறியப்பட்டால் இந்தத் தேர்ச்சித்திறன் உன்னிடத்தில் காணப்படலாம். ஆனால் அங்கிருந்து மீண்டும் திரும்பி வருவீர்கள் என்று எதிர்பார்க்கலாம் என்று நான் சொல்லட்டுமா!''

''எத்தனையோ விஷயங்கள் அங்கே கட்டாயத்தினால் தடை செய்யப்பட்டு இருக்கலாம். ஏனெனில் உங்கள் உயிரை நிலைத்திருக்கச் செய்யும் விருப்பம் இயற்கையில் இருக்கிறது.''

### சுவாமி விவேகானந்தா:

''இம்மாதிரி ஒருவர் மீண்டும் வருவார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?''

### சைதன்ய மகாப்பிரபு தொடர்ந்து கூறியது:

''ஆயினும் சகோதரரே, நீங்கள் செயல்படும்விதம், உங்களை முற்றிலுமாக மறைத்திருக்கிறது என்ற குறைபாடு இருப்பதை நான் சொல்லத்தான் வேண்டும்.''

### நான் செயல்படும் விதம் பற்றிய கருத்துக்கு பதிலளித்து சுவாமி விவேகானந்தா கூறியது:

''நீ யார், எந்தநிலையில் இருக்கிறாய் என்பதை அறியாமல் சிறுபிள்ளைத்தனமான பழக்கங்களுடன் இருக்கிறாய். இதனால்தான் இப்படிச் சொல்ல வேண்டி வருகிறது.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''அன்புள்ள சகோதரரே! ஒரே ஒரு விஷயத்தைத் தவிர வேறு எதிலும் ஆசையில்லாத, தனது ஒவ்வொரு முயற்சியும் அந்த ஒரு விஷயத்திலேயே திசைதிருப்பப்பட்டிருக்கின்ற ஒருவரிடம் இந்த விஷயங்கள் இருப்பது சகஜம் தான். (சிறிது இடைவெளி). அவர் செயல்படும்விதம் பற்றிய கேள்விக்கு பதில் இந்தமாதிரிதான்: நீ அந்தவிதத்தில் – அதாவது யாருடைய பதிவுகளை அழிக்கும் விதத்தில் – வேலை செய்தாலும் கூட, எதற்காகவும் உன்னைக் குற்றம் சொல்லமுடியாது. பதிவுகளை அழிப்பது உன் திறமைக்குள் அடங்கிய விஷயம்தான். அதாவது உன்னிடம் அந்த சக்தி இருந்தாலும் அதைப் பயன்படுத்தாமல் இருப்பதுதான். உனக்கு அதுபற்றி உத்திரவு வந்தால், ஒருபோதும் அதைச் செய்யத் தவறாதே. ஆன்மீகத்துறையில் குறைந்தபட்சம் ஒரே ஒரு மனிதனாவது, சாத்தியமான அனைத்து விதத்திலும் உன்னிடமிருந்து இதை எடுத்துக் கொள்ளக்கூடியவனாக உன்னை நாடி வருவானாக.''

### சுவாமி விவேகானந்தா:

''நமது பிரபு வணக்கத்திற்குரிய லாலாஜிசாகேப், ஒரு மனிதன் சந்திரனைச் சென்றடைய விரும்பினால், சூரியனையே சென்றடைய முயற்சிக்க வேண்டும் என்ற கருத்துடன் சொல்கிறார். உங்கள் முக்கியமில்லாத, பயனற்ற பழக்கங்களை விட்டுவிடுங்கள். இந்தவிதத்தில் வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டரைப் பின்பற்றுங்கள். உனக்கு இருக்கும் வயிற்றுவலி (பாபுஜியின் வயிற்றில் அமிலத்தன்மை அதிகரிப்பால் வரும் வலி) ஒரு தடங்கல்தான். ஆனால் நீங்கள் இருக்கும் நிலைக்கு அது அவ்வளவு காரணம் அல்ல. வேறு யாராவது அதைப் பின்பற்றி அப்படியே செய்வார்களோ என்று அஞ்சுகிறேன். மனிதனின் பொதுவான மனப்பாங்கு

என்னவெனில், தேவையில்லாத விஷயங்களில் அவன் நுழைகிறான். அதில் காட்டும் ஈடுபாட்டை, அந்த மனப்பாங்கினை ஏதோ ஒரு மாஸ்டருக்கு அல்லது அவருடைய இடத்தில் இருக்கும் ஒருவருக்கு அர்ப்பணித்து விடுங்கள். மற்றவர்கள் பின்பற்றுவதற்கு ஒரு நல்ல (உதாரணத்தை ஏற்படுத்துங்கள்) உதாரணமாக இருங்கள். இந்த வகையில் உங்களை விட மேலான பல மனிதர்கள் உலகில் இருக்கிறார்கள். (சிறிது இடைவெளி) (ராம் சந்த்தரிடம்) உன்னுடைய 'ராஜயோகத்தின் செயல்திறன்' என்ற புத்தகத்தில் நீ குறிப்பிட்டுள்ளவராகிய, அவருடைய காலத்தின் முதல் ரிஷி இவர். அவர் பரமாத்ம நிலையில் நீந்திக்கொண்டிருக்கிறார். அவராகவே உன்னைப் பார்க்க வந்தார். அவர் மிகப்பெரிய ரிஷி என்பதில் சந்தேகமில்லை. நாங்கள் அனைவரும் அவரை மிகவும் மதிக்கிறோம்.''

## 10-2-1948 (இரவு மணி7.45)

**சுவாமி விவேகானந்தா:**

''காந்திஜியின் உயிரைப் பறித்தத் திட்டம் என்னவென்று யாருக்கும் தெரியாது என்று உறுதியாகச் சொல்கிறேன். இரண்டாவது உலக மகாயுத்தத்தில் அவர் செய்ததுபோல இதற்காக சர்ச்சில் இரவும் பகலுமாக முயற்சி செய்துகொண்டிருந்தார். அவர் ஒரு தேசபக்தர். அவருடைய நாட்டில் இருக்கும் பிரச்னைகளை அவர் அறிவார். அவர் மிகப்பெரிய அரசியல்வாதிகளில் ஒருவர். இந்தியா தனது நாட்டின் பிடியிலிருந்து போய்விட்டால் இங்கிலாந்து மக்கள் தொகையில் ஒரு பகுதியினர் பட்டினி கிடக்க வேண்டிவரும் என்பது அவருக்குத் தெரியும். அம்மாதிரி தேசபக்தர்கள் இந்த நாட்டில் இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன். பல நூற்றாண்டுகளாக அடிமைகளாகவே இருந்துவிட்டதால் இந்தியர்களுக்கு ஆட்சி செய்வது எப்படி என்று உண்மையாகவே தெரியவில்லை. அடிமைத்தனமான மனப்பான்மையை வளர்த்துக் கொண்டுவிட்டார்கள். அதைச் சரிப்படுத்துவதற்கு யாரும் முயற்சி செய்யவில்லை. நேரு திறமை மிக்கவர் மற்றும் நாசூக்கான பண்புடையவர் என்பது உண்மைதான். ஆட்சியில் இருப்பவர்கள் இப்போது ஆணவத்துடன் நடக்கும் குறைபாட்டை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். நேரு இதில் விதிவிலக்காக இருக்கிறார். இந்தியாவில் உள்ள ஐந்தாம் படையினர் ஹிந்துக்களின் ஒற்றுமையைக் குலைக்க வேலை செய்கிறார்கள். இது சர்ச்சிலின் திட்டம். 'ராஷ்ட்ரிய ஸ்வயம் ஸேவக் சங்கம்' என்ற அமைப்பும் இந்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. அந்த சங்கத்தின் உறுப்பினர்களுக்கு இது தெரியாது.

அவர்கள் வெறும் உறுப்பினர்களாக தங்கள் தினசரி உடற்பயிற்சியைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.''

''காந்திஜியைக் கொலை செய்தவனுக்கும் கூட சர்ச்சிலின் இந்தத் திட்டம் தெரியாது. சர்ச்சிலின் மூளை மட்டுமே இதில் வேலை செய்கிறது. இந்தவிஷயத்தில் அவருக்கு நண்பர்கள் யாரும் இல்லை. இந்தத்திட்டம் முழுவதும் அவரது மூளையில் இருக்கிறது. இதுதான் உண்மையான அரசியல். இதை அவர்கள் என்னிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். என் ஆயுட்காலத்தில் நான் மிகப்பெரிய அரசியல்வாதிகளில் ஒருவனாக இருந்தேன். ஆனால் எனது லட்சியம் வேறு ஒன்றாக இருந்ததால் நான் அதைத் தொடவில்லை. என்னிடம் அரசியல் கற்றுக்கொள்ள யாராவது தயாராக இருக்கிறீர்களா? சுபாஷ் சந்திரபோஸ் இப்போது இல்லை. அசல் தேச பக்தர்களாகிய அரசியல்வாதிகளின் உண்மையான தலைவர் அவர் தான். அவருடைய குணாதிசயம் கறைபடியாதது. இந்தியாவின் சுதந்திரம் என்று நீங்கள் சொல்லும் இந்த நிலைக்கு வழிவகுத்த நிலையை உருவாக்கியவர் அவர்தான். அவருடைய பெயரை அறிவதற்கு யாருக்கும் அக்கறை இல்லை. இந்தவிஷயங்கள் அனைத்தையும் வடிவமைத்தவர் என்று காந்திஜியை நினைத்துப் புகழ்கிறார்கள். ஆனால் உங்கள் முன்னால் உட்கார்ந்திருக்கும் இந்த சாதாரண மனிதர்தான் (ராம் சந்த்தர்) இதன் ஒவ்வொரு செயலுக்கும் காரணமாக இருந்தார். அவர் யாராலும் அறியப்படாமல், அலட்சியப்படுத்தப்பட்டவராக இருக்கிறார். இங்கே பார் ராம் சந்த்தர், நீ ஒரு முனிவர் மட்டுமல்ல. நீ அரசியலிலும் நுழைய வேண்டியிருக்கும். உன்னுடைய சங்கல்ப சக்தியினால் அமைதியாக வேலை செய்ய வேண்டும். நீ இந்தியாவையும், உலகையும் ஆட்சி செய்வாய். ஒளியுலகில் உன் ஆட்சி பற்றி உன் குரு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். நண்பர்களே, இந்த மாதிரி ஒரு மகாபுருஷர், மீண்டும் வரமாட்டார், இதை மறுபடியும் சொல்கிறேன். இந்தியா இதுவரையில் இம்மாதிரி ஒரு மனிதரைப் பார்த்ததில்லை. அவருடைய பழக்கங்கள் எதையும் செய்யத் தயங்குகின்ற, எதிலும் விரைந்து முடிவெடுக்காத விதத்தில் இருப்பது உண்மைதான். அது அவருடைய உடலின் பலமின்மையால் இருக்கலாம். அவரை யாரும் கூண்டுக்குள் அடைக்க முடியாது. சிறையில் கூட வேலை செய்து கொண்டே அவர் சுதந்திரமாக இருப்பார். எந்த ஒரு விநாடியிலும், எந்த ஒரு அரசாங்கத்தையும் அவர் கவிழ்க்க முடியும். அவருடைய சக்தி எவ்வளவு என்பது யாருக்கும் தெரியாது. கட்டிலில் எளிமையாக உட்கார்ந்திருக்கும் சாதாரண மனிதர் என்பதே பொதுவான அவரது பிம்பம்.

அவர் ஒரு நிமிடத்தில் செய்யக்கூடியதை மற்றவர்கள் செய்வதற்கு ஆயிரம் வருடங்கள் தேவைப்படலாம். இந்த உலகை மிக விரைவில் அவரால் மாற்ற முடியும். அதன் விளைவை போதுமான அளவு காலத்திற்குப் பிறகே நீங்கள் காண முடியும் என்பது உண்மைதான். தேவைப்படுகிற மாற்றத்தை உண்டாக்குவதற்கான ஒரே மகாபுருஷர் அவர்தான்.''

''இந்திய அரசாங்கத்தின் இப்போதைய கொள்கை சரியானதல்ல. அவர்கள் விஷத்தை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். தங்கள் கால்களை கோடரியால் தாங்களே வெட்டிக்கொள்ளும் மூடர்களைப் போல இருக்கிறார்கள். நீ இந்தக் கொள்கையை மாற்றுவாய். அப்போது நேரு இப்போது இருப்பதுபோல அதே மாதிரி இருக்கமாட்டார். இப்போது காந்திஜியின் கொலையினால் ஏற்பட்ட வருத்தத்தின் காரணமாக சில காரியங்களைச் செய்கிறார். அது நல்ல நிர்வாகக் கொள்கைகளுக்கு எதிரானது. பாகிஸ்தானை உருவாக்கிய முகம்மது அலி ஜின்னா ஆட்சித்திறன் உடையவர். ஆனால் அவர் தன் நண்பராகிய சர்ச்சிலின் புத்திசாலித்தனமற்ற வழிகாட்டுதலின்கீழ் இருக்கிறார். மீண்டும் சுபாஷ் சந்திரபோஸின் ஞாபகம்தான் எனக்கு வருகிறது. குற்றம் குறையில்லாத குணம் உடைய ஒரு மனிதர்தான் இந்தியாவுக்குத் தேவைப்படுகிறார். அவருடைய முக்திக்காக வேலை செய்யும்படி உனக்கு உத்திரவிடுகிறேன். அரசியல் சம்பந்தப்பட்ட விஷயங்களில் அவருடன் நீ தொடர்பு கொள்ள வேண்டும். இன்றைய அரசியல் சம்பந்தப்பட்டவரையில் போஸுடன் ஒப்பிடும் போது காந்திஜி ஒரு சிறு குழந்தையைப் போன்றவர். காந்திஜியை ஒரு ஆன்மீகவாதி என்று நான் சொல்லமுடியாது. அவரைப் பின்பற்றுகிறவர்கள் தங்கள் நாட்டை இருட்டில் தள்ளிவிடுவார்கள். அவருடைய கொள்கைகள் எங்களுக்கு விருப்பமானவையாக இருந்திருந்தால் உடனே இயற்கையினால் உனக்கு அளிக்கப்பட்டுள்ள விசேஷ சக்திகளைப் பயன்படுத்தி அவருக்கு முக்தியளிக்கும்படி நான் உத்திரவு அளித்திருப்பேன். என் கருத்தின்படி, அந்நிய ஆட்சியிலிருந்து இந்தியாவை விடுவிப்பதற்கு உண்மையாக, நேர்மையாக முயற்சி செய்த தேச பக்தராக அவர் இல்லாமல் போயிருந்தால், அவர் இருண்ட நரகத்திற்கு அனுப்பப்பட்டிருப்பார். அவர் தன்னுடைய நாட்டை வீரமற்ற கோழையாக மாற்றிவிட்டார்; அதே கோழைத்தனம்தான் நீடிக்கப்போகிறது. அந்தவிதமான பயிற்சி மற்றும் போதனைகள் பெற விரும்பி வரும் மாணவர்களின் மனதைக் கெடுப்பதன் மூலமாக அந்தக் கோழைத்தனத்தை நீ போக்க வேண்டும். அவர் இயற்கையினால் திரும்பி அழைக்கப்படாமல்

போயிருந்தால் காந்திஜியை அழித்துவிடும்படி நான் உனக்கு உத்தரவு அளித்திருப்பேன். இந்த விஷயங்களை வெளிப்படையான போட்டியில் நீ எதிர்த்து சவால் விடுத்தால், அரசாங்கம் உன்னை ஒன்றும் செய்ய முடியாது. உன்னைக் கைது செய்ய யாராவது வந்தால் இந்த அரசாங்கத்தையே நான் கவிழ்த்து விடுவேன். இந்த மாதிரி விஷயங்களில் உனக்கு எந்த பயமும் வேண்டாம். உனக்கு என்ன சொல்லப்பட்டதோ அதைச்செய். இம்மாதிரி ஒரு மகாபுருஷரைக் கூண்டில் அடைப்பது சுலபமான காரியமல்ல. காந்திஜிக்கு பொதுமக்களின் சக்தி ஆதரவாக இருந்தது. உனக்கு தெய்வீக சக்தி உன் ஆளுகையில் இருக்கிறது. அந்த சக்தியை உலகில் நீ பிரயோகித்தால், உலகமே வீழ்ச்சியடையும் என்றால், ஒரு சிறிய அரசாங்கத்தைப் பற்றி என்ன சொல்வது? அரசாங்கத்தால் உத்தேசிக்கப்பட்டவாறு தேசங்கள் உருவாகுவதில்லை. அஹிம்சை என்ற கொள்கையின் காரணமாக ஹிந்து சமுதாயம் வீழ்ச்சியடைந்தது. அவர்களுக்கு அஹிம்சை என்பது உண்மையில் என்ன என்பதே தெரியவில்லை. பண்டிதர்களே இதற்குக் காரணம். அவர்கள் நரகத்திற்குத் தான் தகுதியானவர்கள். இந்திய கலாசாரம் மற்றும் வரலாற்றின் இருண்ட காலத்தில் இந்தக் கருத்து தவறாகப் பொருள் கூறப்பட்டுவிட்டது. ஹிந்து சமுதாயத்தின் வீழ்ச்சிக்கு இரண்டு வகையான காரணங்கள் உண்டு. முதலாவது காரணம், ஏற்கெனவே சொன்னதுபோல அஹிம்சை என்ற இந்தக் கொள்கையை அனுசரித்ததால் உண்டாகிய கோழைத்தனம். இரண்டாவது காரணம் சமையலை அடிப்படையாகக் கொண்ட மதம், அதாவது உணவு சம்பந்தமான தீண்டாமை (இதை காந்திஜியும் எதிர்த்தார்). உனது உணவை யாராவது தொட்டுவிட்டால், நீங்கள் உங்கள் சமூகத்திலிருந்து எந்நாளும் விலக்கி வைக்கப்படுவீர்கள் மற்றும் முஸ்லீம்களும், ஹிந்துக்கள் அல்லாதவர்களும் எண்ணிக்கையில் அதிகரித்ததுதான் இதன் பலன். இந்த இரண்டு விஷயங்களும் முற்றிலும் அழிக்கப்பட்டாலன்றி ஹிந்து சமுதாயம் வலிமைபெற முடியாது. ஒரு அநாதையை அவர்கள் கொள்ளையடித்து, அவனுடைய சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துவார்கள்; ஆனால் ஒரு கொசுவையோ, பாம்பையோ கொல்லத் தயங்குவார்கள்; எறும்புகளுக்கு கோதுமை மாவை உணவாகப் போடுவதற்காகத் தேடுவார்கள். இம்மாதிரி மனிதர்கள் தங்கள் நாட்டை இருண்ட பெரும் பள்ளத்தில் தள்ளிவிட்டார்கள். அவர்கள் உண்மையாகவே தங்கள் முன்னேற்றத்தின் பாதையில் ஒரு பெரும் தடையை உண்டாக்கிக் கொண்டார்கள்.’’

‘‘மகாபாரத யுத்தத்தில் எத்தனையோ வீரர்கள் கொல்லப்பட்டார்கள். அதற்கு அர்ஜுனனா பொறுப்பாளியாக இருந்தான்? பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இப்போது ஹிந்துக்களிடையே இருப்பது போன்ற மதத்தை எப்போதாவது பிரசாரம் செய்தாரா? அர்ஜுனன் நரகத்திற்கு அனுப்பப்பட்டானா? இல்லை, அவன் முக்திபெற்ற ஆன்மாக்களில் ஒருவன். ஹிந்து மதத்தின் இப்போதைய போதனை பகவத்கீதைக்கு எதிரானது; காந்திஜியும் மதவாதியல்ல. மக்கள் அவரை மிகப்பெரிய மகான் என்று சொல்லி வணங்குகிறார்கள். இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்க பெரு முயற்சி செய்தவர் என்ற ஒருவிதத்தில் மட்டும் அவர் மகான் என்பதில் சந்தேகமில்லை. மதம் சார்ந்த ஒரு மாமனிதர் அல்லது ஒரு நல்ல அரசியல்வாதி என்று கருதப்படுவதில்தான் காந்திஜியை நான் குறை கூறி விமர்சனம் செய்கிறேன். இளைஞர்களே, நீங்கள் ஒருபோதும் அவரைப் பின்பற்றக்கூடாது. உங்களுக்குப் பிறகு வருகிறவர்களுக்கும் இதே விஷயத்தைக் கற்றுக்கொடுங்கள். இது முக்தியடைந்த ஆன்மாக்களின் நிரந்தரமான உத்தரவு என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள். இந்தக் குறிப்பை வருங்காலத் தலைமுறைக்காக நான் விட்டுச்செல்கிறேன். அவர்கள் காந்திஜியை ஒருமதத் தலைவர் என்று அல்லது மதம் சார்ந்தவர் என்று கூடக் கருதி புகழக்கூடாது. ஒரு அரசியல்வாதி என்ற விதத்தில் அவரைப் பற்றி மக்கள் தங்கள் சொந்தக்கருத்தை உருவாக்கிக் கொள்ளலாம். அது வேறு விஷயம்! H3, N3, P4 மற்றும் பிறருக்கும் நான் சொல்கிறேன்; காந்திஜியைப் பின்பற்றாதீர்கள். நமது மாஸ்டரை மட்டுமே உறுதியாகப் பின்பற்றுங்கள். இந்த உலர்ந்த எலும்புகளை, அதற்காக விரும்பி சண்டையிடுகின்ற நாய்களுக்குப் போடுங்கள் (இந்த வறண்ட கொள்கைகளை, அதை விரும்பி அதற்கு உரிமை கோருபவர்களுக்கு விட்டு விடுங்கள்.) இவற்றை நீங்கள் யாரும் மற்றும் மொத்த ஹிந்து சமுதாயமும் பின்பற்றக்கூடாது. பழங்காலத்தில் வைசியர்கள், (வர்த்தகம் செய்யும் சமூகத்தினர்) பணம் சம்பாதிப்பது மற்றும் தங்களுடையதும், நாட்டினுடையதும் ஆகிய செல்வவளத்தை அதிகரிக்கச் செய்வது என்பதிலேயே கவனமாக இருந்தார்கள். போர்கள் நடக்கும்போது தாங்கள் சேர்த்த செல்வத்தை நியாயமான காரணத்துக்குக் கொடுப்பது அவர்களின் கடமையாக இருந்தது. வியாபாரிகள் எப்போதுமே உறுதியான விஷயத்தை நோக்கித்தான் செல்வார்கள். எனினும், காந்திஜியை அந்த விசேஷமான விதத்தில் சேர்க்காதீர்கள். சமுதாயத்தின் விதிமுறைகள் அவரால் நசுக்கப்பட்டன. சுத்திகரிப்புப் பணியாளர்களின் சமுதாயத்தின் குடியிருப்புப் பகுதியே அவருடைய பார்வையில் இருந்தது. அது சமத்துவப்

பார்வையாகுமா? சமத்துவம் என்றால் நாட்டின் வளர்ச்சியில் பங்களிப்பதற்கும், கலந்து கொள்வதற்கும் அனைவருக்கும் சமமான வாய்ப்பு இருக்கவேண்டும் மற்றும் தனக்குரிய பங்கைப் பெறுவதற்கு உரிமை இருக்கவேண்டும் என்று பொருள். அதுவே ஹிந்து சமுதாயத்தின் விதிமுறையாகும். ஆரம்பத்திலேயே வடிவமைக்கப்பட்ட நடைமுறையின் அடிப்படைக் கொள்கையும் அதுவே. காந்திஜியும் மற்றும் அனைவரும், தாழ்ந்த நிலையில் உள்ள மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட வேண்டும் மற்றும் அவர்களை நேசிக்கவேண்டும். ஆனால் காலம் காலமாக விளங்கும் விவேகத்தினால் அமைக்கப்பட்ட மற்றும் பகவத்கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் எடுத்துரைத்த கொள்கைகளை ஒருபோதும் மறக்கக்கூடாது. அவர் சொன்னது என்னவென்று உனக்குத் தெரியுமா? பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே உனக்கு அதைச் சொல்வார் அல்லது நீ விரும்பினால் அவர் சொல்வது என்ன என்பதை நான் உனக்குத் தெரிவிக்கிறேன்.''

### வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:

''சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு மனிதரையும் என்னுடையவராகவே கருதி நடத்துவது மற்றும் நடந்து கொள்வதோடு, அனைவருக்கும் அவரவருடைய நியாயமான பொருளைக் கொடுக்கவேண்டும் என்பதே என் கொள்கை.''

### சுவாமி விவேகானந்தா:

''கடவுள் சமாவர்த்தின் (சமத்துவத் தன்மையுடன் செயல்படுகிறவர்) ஆகவும், சமதர்ஷின் (அனைவரையும் சமமாகக் காண்பவர்) ஆகவும் இருக்கிறார். இந்த விஷயத்தை யாராவது புரிந்து கொண்டிருக்கிறார்களா? அல்லது இது உனக்குத் தெரியுமா? வணக்கத்திற்குரிய உனது மாஸ்டர் இந்த விஷயங்களை தன் குறிப்புக்களில் எழுதியிருக்கிறார். நான் அதையே மீண்டும் சொல்கிறேன். நீ இங்கே இதை எழுதி வைத்துக்கொள். கடவுள் தன் படைப்பை சமமாகவே பார்க்கிறார். இதில் தனக்கென முன்கணிப்பு ஏதுமில்லாமல் அவர்களுடைய சொந்தச் செயல்களுக்கு ஏற்றவாறு அவர்களை நடத்துகிறார். இந்தவிஷயமே சமதர்ஷின் மற்றும் சமாவர்த்தின் என்று விளக்கப்படுகிற அவருடைய குணங்களை விவரிக்கிறது. ஹிந்து சமுதாயம் பின்பற்ற வேண்டிய விதிமுறை அதுதான்.''

*(இங்கே குறிப்பிடப்படுவது அந்தச் சமயத்தில் இந்தியாவிலும் உலகிலும் இருந்த அரசியல் நிலைமைகள் பற்றியதாகும். மகாத்மா காந்திஜியின் கொலை சம்பவம், இந்தியாவின் பிரிவினையால் அதற்குப் பிறகு நடந்த வகுப்புக் கலவரங்களின் விளைவாக நடந்த பயங்கரமான சம்பவமாகும்.*

*இது இரண்டாவது உலகமகாயுத்தம் முடிந்த பிறகு அதையடுத்து அரசியல் ரீதியாக மிகவும் பலம் பொருந்திய நாடுகளில் முதல் இடத்தில் இருந்த இங்கிலாந்து மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்ட நிலையில் நடைபெற்றது. 13-1-1948 ஆம் தேதியன்று நடைபெறப்போவது பற்றிய முன்னறிவிப்பாக லக்கிம்பூர் கேரியில் சுவாமி விவேகானந்தர் கூறிய கருத்து சில சீடர்களால் தூண்டப்பட்டது. அவர்களில் சிலர் காந்திஜியைக் கொன்றவர் உறுப்பினராக இருந்த ஹிந்து சங்கத்துடன் தொடர்பு உடையவர்கள். எனவே P4 முதலிய விவரம் அறியாத சீடர்களையும், வணக்கத்திற்குரிய பாபுஜியையும் கூட ஏதோ ஒருவிதத்தில் அதில் சம்பந்தப்படுத்தி போலீஸ் நடவடிக்கை எடுக்கலாம், துன்புறுத்தலாம் என்ற ஒரு அச்சம் இருந்தது. குறிப்பாக P4 - மிகவும் பயந்துபோனவராக பாபுஜியின் வீட்டில் அடைக்கலம் புகுந்தார். 10-2-1948 அன்று விவேகானந்தர் பாபுஜியுடன் உள்முகத் தொடர்பு கொண்டு இதைக் கூறியபோது அவரும் அங்கு இருந்தார் - தொகுப்பாசிரியர்)*

## 20-3-1948 (இரவு மணி 9.40)

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''இந்த உலகத்தின் நிலைகள், சூழ்நிலைகள் சீர்கேடு அடைந்து கொண்டிருக்கின்றன. இதற்கு முன்பு ஒருபோதும் இல்லாத அளவுக்கு வேலைகள் இப்போது காத்திருக்கின்றன. இப்போது சந்திக்கப்படுகிற பிரச்சனை இதற்கு முன்பு ஒருபோதும் வராதது. நிதானமாகவே நடைபெறுகின்றன என்றாலும் அழிவுக்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்துள்ளன. அதிகார சக்தியைப் பெறுவது சம்பந்தமான திறமைகளையும் முன்னேற்பாடுகளையும் ரஷ்யா போதுமான அளவுக்கு கூர்மையாக்கி தயாராக வைத்திருக்கிறது. அமெரிக்கா தனது செல்வ வளம் பற்றிய பெருமையில் போதை அடைந்திருக்கிறது. சிறிய நாடுகளில் சோர்ந்து அடங்கிபோன நிலை இருக்கிறது. அதற்கான திட்டமும் உருவாகிறது. எங்கும் ஒருவித தொல்லையான நிலை இருக்கிறது. இங்கிலாந்து தனது இழப்புகளுக்காக வருந்துகிறது.''

### சுவாமி விவேகானந்தா:

''அரசியல் சம்பந்தமான கருத்துக்கள், ஆலோசனைகள் உனக்குச் சொல்லப்படுகின்றன. அது உனது வாழ்க்கைத் திட்டத்தின் பயனும் பண்பும் ஆகும். அரசியலில் நீ தொடர்பு உடையவனாக இருக்கிறாய். ரஷ்யா தன்னை முந்திச் செல்வதை அமெரிக்கா பார்க்க வேண்டி வரும்.''

31-3-1948

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘I2 - ஒரு நல்ல ஆன்மீக நிலையில் இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் டெல்லி (போய்ச் சேரவேண்டிய குறிக்கோள்) இன்னும் தூரத்தில் இருக்கிறது. சிறிது தடை, அதாவது பின்தங்கிய நிலை அவரிடம் இருக்கிறது. அதை ராம் சந்த்தர் தன் சங்கல்பத்தினால் நீக்கிவிடுவார். என் ஆயுட்காலம் முழுவதிலும் என்னைப் பற்றிய ரகசியத்தை அவரைத் தவிர (ராம் சந்த்தரைத் தவிர) வேறு யாராலும் கண்டறிய முடியவில்லை. அவர் ஒரு நல்ல பண்புடையவராக இருந்தார். சாதகர்களுக்கு என்மீது அன்பு இருந்தது என்றாலும், என்னுடைய ஆன்மீக உயர்நிலைப்பற்றிய ஒரு சரியான கருத்தை அவர்களால் அறிய முடியவில்லை. உன் விஷயத்திலும் இதே மாதிரி நிலை இருப்பதைப் பார்க்கிறேன். இவ்வுலகம் சாராம்சத்தைப் பார்ப்பதில்லை. அதைக் காணும் திறன் பெற்ற கண்கள் அதற்கு இல்லை என்று சொல்லப்படுவது உண்மை தான்! என்னுடைய நல்லாசிகள் எப்போதுமே உனக்கு உண்டு. இந்த சங்கம் நல்ல வளர்ச்சியடையும். உன் ஆயுட்காலத்திலேயே இது நிறைவேறுவதை நீ பார்த்தால் சிறப்பாக இருக்கும். மக்களிடம் விசித்திரமான விதங்களில் பின்தங்கும் நிலை, மந்தநிலை வளர்ந்து கொண்டிருக்கிறது. இங்கிருந்து வெளியே சென்றால், அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமையை அவர்கள் மறந்து விடுகிறார்கள். எழுதி வைத்துக்கொள்ளவும், அவர்கள் அதன்படி நடப்பதற்கும் நான் சொல்லவேண்டியது எவ்வளவு இருக்கிறது என்பது யாருக்குத் தெரியும்? இவ்விஷயத்தில் எனக்கு உற்சாகமூட்டும்படியாக அவர்களிடம் எதையும் நான் காணவில்லை. நீ சொல்லி எழுதச் செய்யும் கடிதங்கள் சாதாரணமானவையா? நீ பயங்கரமான சுமையின்கீழ் இருக்கிறாய். என்னால் உண்டாகும் சுமை மற்றும் உன் சொந்தக் குடும்பத்தினரால் வரும் சுமை ஆக இரண்டுவித சுமைகள் உனக்கு உள்ளன. புத்தகங்கள் அச்சிடுவது மற்றும் அதுசம்பந்தமான ஏற்பாடுகள் செய்வது ஆகிய இந்த நோக்கத்திற்காக I2 - ஐ நிறுத்தி வைத்துக்கொள்ள முடியாதா? இதில் H3 - உம் கூட உதவி செய்ய வேண்டும். விடுமுறை நாட்கள் நெருங்குகின்றன. ‘ராஜயோகத்தின் செயல்திறன்’ என்ற ஆங்கில புத்தகம் பற்றி எனக்கு அக்கறை இருக்கிறது. இவர்கள் செயலற்று இருக்கும்போது, புத்தகங்களை அச்சிட்டால் என்ன ஆகும்? இம்மாதிரி சோம்பேறித்தனத்தை நான் எங்கேயும் பார்த்ததில்லை.’’

## 2-4-1948 (இரவு 8 மணி)

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘பக்தி மற்றும் மெய்ஞ்ஞானம் பற்றி என்ன ஒரு சிறந்த கேள்வி! முத்துக்களைக் கண்டெடுப்பதற்காக ஒருவர் கடலில் மூழ்குகிறார்; அவர் தேடி எடுக்க விரும்புகின்ற ஒவ்வொரு முத்துச் சிப்பியும், வெறும் சங்காக மாறிவிடுகிறது; ஆனால் அந்த சங்கே முத்துக்களைக் கொடுக்கிறது என்ற நிலைமையைச் சந்திக்கிறார் என்றால் அந்த மனிதரின் நிலை எப்படியிருக்கும்? அவர் எவ்வளவு ஏமாற்றமடைவார்? முத்துக்களை சேகரிப்பது இவ்வாறு பிரச்சனையாகிவிட்டதால், முத்துக்குளிப்பதற்கு கடலில் மூழ்கும் முயற்சியை அவர் விட்டுவிடுவார். மெய்ஞ்ஞானமே தூய்மையாகும். நிறைவுபெற்ற ஒன்று நிறைவுபெற்றதையே விரும்புகிறது. தூய்மை, தூய்மையைத்தான் நாடும். ஒரு வெற்றிடம் இருக்கும்போது காற்று பரவுவதற்கு இடம் கிடைக்கிறது. வெற்றிடமாக மட்டுமே இருக்கும் ஒருநிலைக்கு ஒருவர் கொண்டு செல்லப்பட்டால், எதிலிருந்து முத்து உருவாக்கப்படுகிறதோ (அதாவது எங்கிருந்து சிருஷ்டி தொடங்குகிறதோ) அந்த ஏதோ ஒன்று அங்கிருக்கிறது என்றாலும், அந்த இடத்தின் மீது அந்த மனிதருக்கு எந்த அளவு விருப்பம் அல்லது ஆர்வம் இருக்கும்? எதனுடைய விரிவாக்கம் மற்றும் சுருக்கத்தால் முத்து உருவாக்கப்படுகிறதோ அதுவாகவே மெய்ஞ்ஞானம் இருக்கிறது அல்லது முத்தை அதன் உண்மையான தூய்மை நிலைக்குக் கொண்டு வருவதால் உருவாக்கப்படுவது எதுவோ அது அந்த முத்தின் சத்தியநிலையாகும். எந்த முயற்சியும் செய்யாமல் தானாக வரும் அன்பு, அதன் உண்மையான நிலைக்குக் கொண்டுவரப்படும்போது மெய்ஞ்ஞானமாகிறது. சகோதரா, இதுபற்றி மேலும் சொல்லட்டுமா? மெய்ஞ்ஞானத்தை அதன் உண்மையான நிலைக்குக் கொண்டு வந்தால், எது தேடப்படுகிறதோ, அது அங்கே எஞ்சியிருக்கிறது. நான் சொல்வதன் பொருள் என்னவென்றால் உண்மையான கவனித்தறிதல் மற்றும் ஒப்பிடுவதனால், மெய்ஞ்ஞானமும் பக்தியும், அதன் உண்மையான இலக்காக இருக்க முடியாது. அந்தக் குறிக்கோள் இவற்றுக்கும் அப்பாற்பட்டதாக இருக்கிறது. ஆனால் பக்தி அல்லது அன்பினால் நாம் முன்னேறும்போது நாம் மெய்ஞ்ஞானம் அடைகிறோம். அந்த மெய்ஞ்ஞானம் அதன் உண்மையான நிலையை அடைந்தால் எது சத்தியமோ அதை நாம் காண்கிறோம். ஆனால் முதலில் நாம் மெய்ஞ்ஞானத்தை நாடினால், பக்தி மற்றும் அன்பை விட்டு விலகிப் போகிறோம். நாம் அன்பு மற்றும் பக்தியை ஏற்றுக்கொள்ளும்போது

மெய்ஞ்ஞானத்தை விட்டு விலகுவதில்லை. சத்தியநிலையை நாடுகின்ற ஒருவனுக்கு இரண்டுமே முக்கியமாகும். ஆனால் அது கீழ்க்கண்ட வழியில் இருக்கவேண்டும். கடவுளை வழிபடுகிறவன் அன்பையும் பக்தியையும் ஏற்றுக்கொண்டு பின்பற்றுகிறான். அவனுக்கு முடிவில் மெய்ஞ்ஞானம் அளிக்கப்படுகிறது. அதாவது அன்பு மற்றும் பக்தியை ஏற்றுக் கொள்வதே கடவுள் அல்லது பரம்பொருளைத் தேடும் முயற்சியாகிய வழிபாட்டின் அறிகுறியாக அமைகிறது. கடவுளைத் தேடுதல் அல்லது பக்தி (அன்பு) ஆகிய இரண்டில் ஒன்றை நாம் ஏற்றுக்கொண்டால் மற்றொன்று தானாகவே அளிக்கப்படுகிறது. நாம் மெய்ஞ்ஞானம் என்ற இந்த விஷயத்தில் புகும்போது, சாராம்சமாக இருப்பது எதுவோ அதை நெருங்கிச் செல்கிறோம். அதையடுத்து மேலும் சென்றால் சத்தியம் மட்டுமே இருக்கிறது. அன்பு மற்றும் பக்தியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது என் கருத்து. மெய்ஞ்ஞானத்தை ஏற்றுக்கொள்வதிலும் தவறில்லை. ஆனால் சகோதரா, அந்தப் பாதை சரிவானதாக, வழுக்குவதாக இருக்கிறது.''

3-4-1948

**குறிப்பு:** இன்று இரவு மணி 7.30க்குப் பிறகு தானாகவே நேருவின் உயிரின் பாதுகாப்பு பற்றி எண்ணம் திரும்பியிருந்தது.

4-4-1948

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''அனைவருக்கும் மிகச்சிறந்த விதமான ஆன்மீகப் பயிற்சியைக் கொடுப்பதற்கு நான் விரும்புகிறேன். ஆனால் மக்கள் உலகியல் சிக்கல்களிலிருந்து விடுபடாமல் இருக்கிறார்கள். நான் அந்தச் சிக்கல்களிலிருந்து அவர்களை விடுவிப்பேன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த சாதகர் முதலில் கடவுளை நோக்கித் திரும்பவேண்டும். உலகியல் ஆசைகளையும், சிக்கல்களையும் அவர்களால் முழுவதும் விடமுடியாமல் போனாலும், குறைந்தபட்சம் தங்கள் மனதை அதிலிருந்து திசைதிருப்பும் விருப்பமாவது இருக்க வேண்டும். அதில் கொஞ்சமாவது முயற்சி செய்ய வேண்டும். இது எவ்வளவு சுலபமானது என்பதைப் பாருங்கள். உலகியல் பிரச்னைகளிலிருந்து தனது பார்வையைத் திருப்பி, தன் இதயமாகிய கயிற்றை கடவுளுடன் இணைக்க வேண்டும். இதைவிட சுலபமான பயிற்சி முறையை எங்கும் காணமுடியாது. இங்கே குருவாகிய வழிகாட்டிக்கே முழுப்பொறுப்பு இருக்கிறது. சீடன் நிம்மதியாக

இருக்கிறான். சீடன் நம்பிக்கையில்லாதவனாக இருக்கக் கூடாது மற்றும் கடவுள் மீது பற்றுடையவனாக இருக்க வேண்டும் என்பது தான் முக்கியம். கடவுள் ஒவ்வொரு விஷயத்திலும் சேர்ந்து இருப்பதாகக் கருதவேண்டும். தன்னை கடவுளுக்குக் கீழ்ப்படிபவனாக எண்ணி நடக்க வேண்டும். ஒருவனுக்குப் பணம் தேவைப்பட்டால் அவன் ஒரு பணக்காரனை நண்பனாக்கிக்கொள்ள விரும்புகிறான். அந்தப் பணக்காரனை மகிழ்விப்பதற்கு எல்லா முயற்சிகளும் செய்கிறான். தனது முக்கியமான தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றிக்கொள்வதற்காக அந்தப் பணக்காரனுக்கு அதிகபட்ச அளவு சேவை செய்யத் தயாராக இருக்கிறான். அந்த முயற்சிகளில் அவன் எவ்வளவு அக்கறையாக இருக்கிறான் என்பதைக் கவனியுங்கள். இதே மாதிரி கடவுளிடம் நம்பிக்கை கொண்டு ஒருவன் நடந்து, அவரை மகிழ்விக்க முடிந்தால், எந்த ஒருபணக்காரனுக்கும் கிடைக்காத ஒரு மெய்யருள் அவனுக்குக் கிடைக்கும் அல்லவா?''

### 7-41948 இரவு மணி 8.15

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''இந்தப் பயிற்சி முறையை தென்னிந்தியாவில் அறிமுகப்படுத்தி விரிவுபடுத்தக் கூடியவர் யாராவது இருந்தால், அவருக்கு நான் முக்தியளிப்பேன் என்று வாக்குறுதி அளிக்கிறேன். எகிப்து நாட்டையும் எடுத்துக்கொள்ள வேண்டும். அது மிகவும் தொன்மை வாய்ந்த இடம். அது உயர்வடைய வேண்டும். உனது பலவீனமான உடம்புதான் இந்த விஷயத்தில் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் நம்மை வைத்திருக்கிறது.''

### 13-4-1948 (லக்கிம்பூர் - கேரி)

### பெண்களுக்கான ஆன்மீகப் பயிற்சி:

''ஒவ்வொரு பெண் சாதகரும், அவர் திருமணமானவராக இருந்தாலும், கன்னியாக இருந்தாலும், கணவனை இழந்தவளாக இருந்தாலும், எங்கும், எல்லாவற்றிலும் பரவியிருக்கின்ற ஒன்றை அவள் தியானம் செய்வதாக இதயம் என்ற ஸ்தானத்தில் உறுதியான எண்ணத்துடன் தியானப் பயிற்சி செய்யவேண்டும்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''இதைவிடச் சிறந்ததான எந்த ஒன்றையும் நான் ஒருநாளும் கண்டதில்லை. உண்மையாகவே இது பெண்களுக்கு மிகவும் பயனளிக்கும்.''

**சுவாமி விவேகானந்தா:**

‘‘இங்கே பார், நீ எல்லா இடங்களிலும் மாற்றத்தை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறாய். உன்னுடைய தகுதிச் சிறப்பை நீ உணர்ந்திருக்கிறாயா? குரு பீடத்தின் தத்துவம் மாற்றப்பட்டுள்ளது. பயிற்சிதரும் / செய்யும் வழிமுறையும் மாறியிருக்கிறது. நீ உண்மையாக இந்த அமைப்பை முற்றிலும் தூய்மையாக்கியிருக்கிறாய். இந்தப் பயிற்சிமுறை எல்லாப் பெண்களுக்கும் அவர்கள் மணமானவராக இருந்தாலும், மணமாகாதவராக இருந்தாலும் பொதுவானதாக இருக்கிறது. இதனால் பெண்கள் பதிவிரதா தர்மம் எனப்படும் கணவன் மீதான அன்புமிகுந்த கடமைப் பொறுப்பை வளர்த்துக்கொள்வார்கள்.’’

18-4-1948 இரவு மணி 9.30:

**வணக்கத்திற்குரிய பக்த மீரா (ராஜஸ்தானத்தில் ஒரு ராஜ்ஜியத்தின் ராணியாக, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் மீது பக்தி கொண்ட புகழ்பெற்ற கவிதாயினியாக வாழ்ந்தவர் கூறியது:**

‘‘நான் அங்கு இருந்திருந்தால், எனக்கே அனைத்தையும் கொடுத்துவிட நீங்கள் தயாராக இருந்திருப்பீர்கள் என்ற உங்கள் எண்ணம் என்னைக் கலக்கிவிட்டது. நான் என் வாழ்க்கையின் நோக்கத்தை அடைந்தேன். பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடன் முழுமையாக மனம் ஈடுபட்டிருந்தேன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதற்குமேல் என்னால் செல்ல முடியவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்பது புரியாமல் மக்கள் வியப்படைவார்கள். என்னுடைய குறிக்கோள் அவர்மீது பக்தியாக மட்டுமே இருந்தது. அதைத் தொடர்ந்து என்ன வரவேண்டுமோ அது எனக்குப் பலனாகக் கிடைத்தது. என்னை நானே மறக்குமாறு செய்து கொண்டேன். இதன் பயனாக சத்திய ஜீவநிலை என்ற நிலைவரை என்னால் செல்ல முடிந்தது. நீங்கள் இந்த இரண்டையுமே மறக்கச் செய்துகொண்டீர்கள். இதனால் நீங்கள் அடைந்துள்ள நிலையை சற்று எண்ணிப்பாருங்கள். இங்கே ஒளியுலகில் இருப்பவர்கள் அந்தநிலையைக் காண்பதற்கு ஏங்குகிறார்கள். உங்களைப்போல இப்படி ஒரு மகாபுருஷரை உருவாக்கிய வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டரைப் பற்றி என்ன சொல்வது! அவருடைய உயர்நிலை கற்பனைக்கும், சிந்தனைக்கும், புரிந்து கொள்ளும் திறனுக்கும் அப்பாற்பட்டது. என்னைப் போல பக்தி உங்களுக்கு ஒருபோதும் வரமுடியாது என்று நீங்கள் நினைத்த எண்ணத்தினால், என் இதயத்தைத் தொட்ட அந்தக் கலக்கத்தினால் (தூண்டுதலினால்) நான்

ஏராளமான நன்மை பெற்றேன். இது தன்னையே தாழ்த்திக் கொண்டு, மற்றவரை தன்னைவிட மேலானவராகக் கருதும் பண்பு எனப்படும். இம்மாதிரி முனிவர்களிடம் காணப்படும் இதயத்தின் பிரம்மாண்ட நிலை என்றும் அதைச் சொல்லலாம். உங்களைப் பார்க்கும்போது, உங்கள் ஆயுட்காலத்திற்குப் பிறகும் மக்கள் உங்களை நினைவில் வைத்திருப்பார்கள் என்று தோன்றகிறது. நான் ஒரு விஷயம் சொல்கிறேன். தயவுசெய்து கேளுங்கள். உங்களுடைய இப்போதைய திரையை விலக்கிவிட்டு, இந்த எளிமைக்குப் பின்னால் மறைந்திருக்கும் நிலையை வெளிப்படுத்தினால், அதனால் மக்கள் இன்னும் அதிகமான நன்மையைப் பெறுவார்கள். எளிமை, சாதாரணத்தன்மை, குடும்பத்தன்மை ஆகிய இந்தத் திரைக்குப் பின்னால் மறைந்திருக்கும் சத்தியமே, இந்தத் திரையை உருவாக்கியுள்ளது. வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டர், இந்த மேலுரையை உண்டாக்கியிருக்கிறார். (சிறிது இடைவெளி) நீங்கள் இப்போது யாருக்கு எனது இந்தக் கருத்தைச் சொல்லி எழுதச் செய்கிறீர்களோ, அந்த C2 - இதுவரையில் தனக்கென எந்த நிரந்தர புகலிடமும் ஏற்படுத்திக்கொள்ளாதிருக்கும் சஞ்சல புத்தி உடையவர்.''

**சுவாமி விவேகானந்தா:**

''உன் சீடர்களில் அவர் ஒரு விசித்திரமான மனிதர். அவரிடம் பற்றுறுதி கிடையாது.''

**வணக்கத்திற்குரிய மீராபாய் தொடர்ந்து கூறியது:**

''இம்மாதிரி கட்டுரைகளைப் புரிந்துகொள்ளும் மூளை அவருக்கு இல்லை. சுலபமாகக் கற்றுக் கொள்வதற்கு இது தும்ரி மற்றும் தப்பா (சுருதி மீட்டும் கருவி மற்றும் தாளம் போடும் சிறு மேளம்) இல்லை. நீங்கள் சொல்லும் இந்தவிஷயங்களைப் புரிந்துகொள்வதற்கு புத்திக்கூர்மை தேவைப்படுகிறது. அவர்கள் எழுதுவதற்குக் கடமைப்பட்டுள்ள இந்தக் கருத்துக்கள் மேலோட்டமாக இருந்தாலும் ஆழ்ந்ததாக இருந்தாலும் சாதாரணப் பார்வையில் (சாதாரண அறிவினால்) புரிந்து கொள்ளக்கூடியவை அல்ல. இது பற்றிய சரியான மதிப்பீட்டை நான் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். தன் உடைமையாக இருந்த இந்த ஞானத்தை ஆன்மீகத்துடன் சேர்த்து வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டர் உங்களுக்கு அளித்திருக்கிறார். இவையனைத்தும் அவருடைய சிந்தனைகள். ஆன்மீக ஞானம் மற்றும் உலகின் அறிவுசார்ந்த விஷயங்கள் ஆகியவற்றில் தனக்கு இருந்த ஏராளமான அனுபவத்தின் மூலமாக அவர் இவற்றை உருவாக்கினார். இந்த மாதிரி விஷயங்கள் எப்போதுமே ஒரு சத்குரு (மிக

உயரிய தகுதி மற்றும் திறமை பெற்ற குருநாதர்) விடம்தான் கிடைக்கும். வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்கள் இக்காலத்தின் மாபெரும் சத்குருவாக இருக்கிறார். அவர் யாரை விரும்பித் தேர்ந்தெடுக்கிறாரோ அவரைத் தன்னைப்போலவே உருவாக்கி, தான் விரும்புகிற உயர்நிலை எதுவாயினும் அதை அவருக்குக் கொடுக்கும் திறன் அவருக்கு மட்டுமே இருக்கிறது. இம்மாதிரி ஒரு அரிய குருவை வேறு எங்கேயும் காணமுடியாது. நான் அவரைப்பணிந்து போற்றுகிறேன். அவர் உங்களை உருவாக்கியதுபோல, நீங்கள் ஒரு மகாபுருஷரையாவது உருவாக்க முடிந்தால் வணக்கத்திறகுரிய உங்கள் மாஸ்டருக்கு நீங்கள் பட்டிருக்கும் கடனிலிருந்து விடுபடுவீர்கள். ஒருக்கால் இந்தப் பயிற்சிமுறையை உலகெங்கும் பரவச்செய்வதில் நீங்கள் வெற்றியடைந்தால் முன்னோர்களாகிய மாமுனிவர்களின் கடனிலிருந்தும் விடுபடுவீர்கள். பழங்கால ரிஷிகள் மற்றும் முனிவர்கள் கண்கள் அனைத்தும் உங்கள் மீது நிலைபெற்றுள்ளன. எல்லாம் வல்லதாகிய இயற்கை உங்கள் மூலமாக வேலை செய்துகொண்டிருக்கிறது. மூத்தோராகிய முனிவர்களும், ரிஷிகளும், மாஸ்டர்களும் உங்களிடத்தில் ஐக்கியமடைந்திருக்கிறார்கள். இந்த விஷயங்கள் அனைத்தும் உங்களுக்கு மட்டுமே கிடைத்திருப்பது இக்காலத்தின் விசேஷம் ஆகும். சக்தியையும் பொறுப்பையும் இடம் மாற்றும் காரியத்தைச் செய்வதற்கு ஒரு விசேஷ ஆன்மா இருக்கவேண்டும் என்ற தேவை இருந்தது. எனவே, உங்கள் பொறுப்பில் அளிக்கப்பட்ட மிகப்பெரிய காரியம் பேரழிவை நிகழ்த்துவதாகும். ஆனால் அதனுடன் உருவாக்கும் வேலையும் இணைந்திருந்தது. இந்தப்பக்கம் அழிக்கும் பணி, அந்தப்பக்கம் உருவாக்கும் பணி. இவற்றைப்பற்றி இதுவரையில் ஒரு மதிப்பீட்டைச் செய்ய உங்களால் முடியாமலிருக்கிறது. உங்களுக்கு நியமிக்கப்பட்ட இந்தப் பணிகளை தேவையான அளவுக்குமேல் செய்யாமலிருப்பதற்காக ஒரு பந்தமும், (கட்டுப்பட்ட நிலையும்) உங்களிடம் உண்டாக்கப்பட்டது. அதற்கான தேவை வரும்போது இந்த பந்தம் நீக்கப்படும். உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள எத்தனையோ சக்திகள் இதுவரையில் உங்களால் பயன்படுத்தப்பட முடியாமல் இருக்கின்றன. இவை உங்களிடம் குவியலாகச் சேர்ந்திருக்கின்றன. இவை முழு அழிவின்போது (மகாப்பிரளய சமயத்தில்) உங்களுக்குப் பயனளிக்கும். மக்கள் இம்மாதிரி வரங்கள் பெறுவதற்காக எத்தனையோ ஆண்டுகள் தவம் செய்கிறார்கள். நீங்கள் இவற்றை பரிசாகப் பெற்றிருக்கிறீர்கள்.''

**சுவாமி விவேகானந்தா:**

‘‘அது ரத்தத்தோடு கலந்து வந்தது. நீ இரண்டு அரிய குணங்களும் வரமாக அளிக்கப்பட்டிருக்கிறாய். அதாவது அன்பு (பக்தி) ஒரு பக்கம், தியாகம் இன்னொரு பக்கம் அமைந்தவனாக இருக்கிறாய். இரண்டும் ஒன்றுக்கொன்று அருகில் துணைநின்று இந்த ஒரு பலனை அடையச் செய்திருக்கின்றன. மீராபாய் தனது அன்பை விலையாகக் கொடுத்து உயர்நிலை அடைந்தாள் என்பதில் சந்தேகமில்லை. நீ உன் உயிர் வாழ்க்கையையே விலையாகக் கொடுத்து இதனைப் பெற்றாய். அன்பு அல்லது பக்தி என்ற ஒரு விஷயத்தால் மட்டும் இந்த நிலையை அடைய முடியாது. இளைஞர்களே, உங்களுக்குச் சொல்கிறேன். மீராபாய் தனக்கு முக்தி கிடைக்கச் செய்துகொண்டாள். ஆனால் மற்றவர்களை முக்தி அடையச் செய்ய அவளால் இயலாது. மிகவும் பாவியான ஒருவனையும் ஒரு பார்வையில் முக்தியடையச் செய்ய உன்னால் முடியும் என்பது உன்னிடம் இருக்கும் விசேஷஅம்சமாகும். இதைக் கேட்டால் மக்கள் வியப்படைவார்கள். பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு மட்டுமே இந்த சக்தி இருந்தது. உனக்கு இந்த சக்தி விசேஷமாக அளிக்கப்பட்டுள்ளது. (சிறிது இடைவெளி) ரத்தத்தைக் கொடுத்து வாங்கிய ஒருவிஷயம் ஒருபோதும் இழக்கப்படாது. மையத்தின் சக்தியின்மீது ஆளுமைத்திறன் பெற்றவர் யாரையும் நான் கண்டது இல்லை. நீ அதை அடிக்கடி செயல்விளக்கத்துடன் காண்பித்திருக்கிறாய்!’’

## 29-5-1948

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘எந்த ஒரு மனிதனும் துன்பங்களால் பாதிக்கப்படாதவன் அல்ல. அது அனைவருக்கும் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கிறது. இது மனிதனின் இயல்பானநிலை. கடவுளை வணங்குகிறவர்களும் அதிலிருந்து விடுபட்டவர்கள் அல்ல. எனினும், தேர்ந்தெடுக்கப்பட்ட சில முனிவர்களின் இதயம் (துன்பங்களிலும்) அமைதியாக இருக்கிறது. பொதுவாக சாதாரண மனிதர்களுக்கும், விசேஷ அருள் பெற்றவர்களுக்கும் இடையே வேறுபடுத்தும் அம்சமாக இருப்பது இதுவேயாகும். துன்பங்களைத் தாங்கிக்கொள். ஒரு குறைபாடு நிச்சயமாக இருக்கிறது. கடவுளை நாடும் ஒரு துறவியின் இதயத்தில் உண்டாகும் துன்பம் ஒருபோதும் பயனளிக்காமல் போகாது. உலகத் துன்பங்களிலிருந்து விடுதலையைத் தேடி காடுகளுக்குச் செல்லும் துறவுப்பாதையை மக்களில் பலர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நமது மார்க்கத்தில் உலகின் துன்பங்களுக்கு உள்ளாவதே தவமாகக் கருதப்படுகிறது. குடும்ப வாழ்க்கையில் இருந்து அதில் உண்டாகும் துன்பங்களையும் தொல்லைகளையும் தாங்கிக்கொள்ள

வேண்டும். உண்மையில் உன் குடும்பத்தில் யாரும் உன் இதயத்துக்கு வாடிக்கையாளராக (விரும்பி வருகிறவராக) இல்லை. உன்னைப் பார்ப்பவர்கள் உன்னை அந்நியராகவே கருதி நடக்கிறார்கள். உன் குடும்பத்தின் நிலை அப்படித்தான் இருக்கிறது. எல்லோரும் கடிவாளம் இல்லாதவர்களாக (கட்டுப்பாடின்றி) வளர்கிறார்கள். வருந்தத்தக்க விஷயம் என்னவெனில், உன்னைப் பெற்று வளர்த்த தாயும் கூட இன்னும் உன் அரிய மதிப்பைப் புரிந்து கொள்ளவில்லை. இம்மாதிரி ஒரு குடும்பம் அமைந்திருப்பது பெரும் அதிர்ஷ்டமான விஷயம். இந்த மாதிரி ஏதாவது வருந்தத்தக்க நிலைமை எல்லோருக்கும் இருந்திருக்கிறது. எந்த ஒரு மூத்த முனிவரும் (மாஸ்டரும்) இம்மாதிரி துன்பங்களுக்கு விதிவிலக்கானவர் அல்ல.''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''என்னுடைய சக்திகளும், திறமையும், துணிவும் இணையற்றவையாக, மிகவும் அரிதானவையாக இருந்தன. நான் இந்த உலகின் அரசனாகவும் என் இதயத்தின் மீது கட்டுப்பாடு உடையவனாகவும் இருந்தேன். என் கையில் போர்வாளும், சக்ராயுதமும் இருந்தன. உன்கையில் போர்வாள் இல்லையென்றாலும் சக்ராயுதம் நிச்சயமாக இருக்கிறது. இது விசேஷ சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்காக உனக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த உலகில் பற்பல சிக்கலான நிலைமைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் சரிப்படுத்த வேண்டியது நீதான். எனவே, உன்னிடம் அமைதியான தன்மை, இதயத்தின் உறுதி ஆகியவை இருக்கவேண்டும்.''

**8-6-1948**

**சுவாமி விவேகானந்தா:**

'' M2 - ன் மரணத்தினால், நீ அதை ஏற்றுக்கொள்ள முடியாமல் கிட்டத்தட்ட கதறிவிட்டாய். இந்த மரணத்தால் நாங்கள் எல்லோரும் வருந்துகிறோம். (சிறிது இடைவெளி) சில சமயங்களில் நீ சாதாரண மனிதர்களைப்போல, கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவித்து விடுகிறாய். உன் குழந்தைப் பருவத்தில் இருந்ததுபோல அமைதியாக, சலனமில்லாமல் இருப்பதில்லை. நீ எதையாவது சொல்லவேண்டும் என்று நாங்கள் சொன்னாலன்றி அதிகமாக எதையும் சொல்ல வேண்டாம். உனக்கு எதிராக இருக்கும் கூட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ள உனது மதிப்புக்குரிய சகோதரர் M1, இப்போது உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது வருந்தத்தக்கது.''

M1- க்கு பிரதிநிதியாக, M2 - இருப்பது பற்றி வணக்கத்திற்குரிய உனது மாஸ்டர் சொன்னது எனக்கு மிக நன்றாக ஞாபகம் இருக்கிறது. அவர் சொன்னதில் ஒரு வாக்கியம் இது ...... ‘‘உயிர் நிலைத்திருந்தால்’’..... இது அவர் கூறியதை அப்படியே எழுதும்போது அலட்சியமாக கருதப்பட்டது. உன் தவறுக்கு அது சமாதானம் ஆகாது என்பது உண்மை. நீதான் அதற்குப் பொறுப்பாளி. நீ என்ன சொல்கிறாயோ மற்றும் நீ என்ன நினைக்கிறாயோ அதையும் வணக்கத்திற்குரிய உன் மாஸ்டர் செய்கிறார் என்பது உனக்குத் தெரியும். உண்மையில் அதனால்தான் அந்தக் கடிதம் எழுதப்பட்டது. M2 - க்கு திறமை இருந்தது என்பதில் சந்தேகமில்லை. அச்சமயத்தில் M1 - உன் எளிமையைப் பயன்படுத்திக்கொண்டு பல இடங்களுக்குச் சென்று கொண்டிருந்தார். நீயும் அவருடைய திருப்திக்காக பலவிஷயங்களைச் செய்துகொண்டு இருந்தாய். இந்தப் பெருந்தவறுக்குக் காரணமான விளக்கம் அதுதான். எனினும் உண்மையாகவே அது மனித இயல்புதான்.’’

9–6–1948

**வணக்கத்திற்குரிய பகவான் புத்தர் கூறியது (கடவுள், ஆன்மா, இயற்கை, பந்தத்தின் காரணம், அதிலிருந்து விடுபடும் வழிகள் ஆகிய பலவிஷயங்களைப் பற்றி மூத்த சகாக்கள் உரையாடிக் கொண்டிருந்தபோது, அவராக முன் வந்து தெரிவித்தவை):**

‘‘முடிவான சத்திய நிலையிலிருந்து நான் ஒருபோதும் திசை திரும்பியதில்லை என்பதை நான் சொல்ல வேண்டியிருக்கிறது. தவறாக வழிகாட்டுகின்ற குழப்பத்தில் மக்கள் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஏற்கனவே அவர்களிடம் இருந்த அந்த பந்தங்களிலிருந்தும் கூட அவர்களை விடுவித்து வைத்திருக்க நான் விரும்பினேன். இது மிக உயர்தரமான தத்துவஞானம் ஆகும். என் காலத்தில் பந்தத்தைப் பற்றிய குறிப்பு பெரும்பாலும் எதிலும் காணப்படவில்லை. தெய்வீகத்தின் மீது பந்தம் இருந்தால் கூட, பிறப்பு, இறப்பு என்ற சுழற்சியிலிருந்து ஒருவர் விடுதலை பெற முடியாது. கடைசியாக நாம் எங்கே வந்து சேர வேண்டுமோ, அது (என் வழிமுறையில்) ஆரம்பத்திலிருந்தே எடுத்துக்கொள்ளப்பட்டது. எந்தப்பாதையில் சென்றால் நிர்வாணா (பந்தத்திலிருது முழுமையான விடுதலை) என்ன நிலையை ஒருவர் அடைவாரோ, அம்மாதிரி ஒரு விஞ்ஞானப் பாதையை நான் உருவாக்கி நிலைநிறுத்தினேன். அனைத்தையும் கடந்த சத்திய நிலையை நாம் சென்றடைய

வேண்டுமென்றால், எந்த சத்தியநிலையின் காரணமாக உயிர்வாழும் ஜீவராசிகள் அனைத்தும் இங்கே வாழ்ந்திருக்கின்றனவோ, அதை நாம் ஜபம் செய்ய வேண்டிய தேவை என்ன? **அதன்** பெயரை திரும்பத் திரும்பச் சொல்வதால் நாம் அடையப்போவது என்ன? **அதையும்** கடந்துசென்றால் என்ன ஆகிறது? இப்போது அதிலிருந்து நம் கவனத்தைத் திருப்பி, நிர்வாணா என்று குறிப்பிடப்படுகின்ற அந்த நிலைக்குச் சென்றடைய, யாருடைய இடைநிலை மூலமாக அதை அடைய முடியுமோ, அவர் மீது கவனம் செலுத்துகிறோம். அப்படிச் செய்தால் இது மிகவும் சிறப்பாக இருக்கிறது. இவ்விதமாக எல்லையற்றதான குறிக்கோளை அடைவதற்கு எல்லையில்லாத வழிகளை நாம் பயன்படுத்தினோம். முடிவில் நமக்குத் தடையாக இருக்கும் அந்த பந்தத்திலிருந்தும் நம்மைப் பாதுகாத்துக்கொண்டோம் மற்றும் நிர்வாணா என்ற நிலை எத்தனை சுலபமாக அடையப்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். நான் சத்தியநிலையை மட்டுமே ஏற்றுக்கொண்டிருந்தேன். நாம் நம்மை அதற்கேற்ப உருவாக்கிக்கொள்வதற்கு எளிமையான மற்றும் சுலபமான வழிகளை உருவாக்கி நிலைநிறுத்தினேன். நாம் கடவுளின் பெயரை ஓதாமலே தெய்வீகநிலை என்று குறிப்பிடப்படுகின்ற அந்தநிலையை அடைந்தால், அதனால் என்ன தீங்கு நேர்ந்துவிடும் சொல்லுங்கள்! மக்கள் என் மார்க்கத்தை ஒருமதம் என்று தவறாகக் கூறிவிட்டார்கள். அது முற்றிலும் சுத்தமான மற்றும் எளிமையான ஒரு விஞ்ஞானம்! நமது உருவாக்கம் இந்தத் தெய்வீகத்தால் வந்தது; நமது அந்த ஆதியான நிலையைக் கண்டறிவதற்காக நம்மை – நம்மிடம் உருவாகியிருப்பதை கரைந்து போகச் செய்வதும் அதன் மூலமாகவே ஆகும்.''

## J5 - கேட்ட கேள்விக்குப் பதிலாக பகவான் புத்தர் தொடர்ந்து கூறியது:

''அதற்கான வழிமுறை இதுதான். உண்மையான நீந்துதல் நிலைக்கு நாம் வந்தால், இந்த நிகழ்காலத்தில் இருக்கும் விஷயங்களில் கொண்ட பற்றை முழுவதும் கைவிட்டால், அப்போது ஆரம்பத்திலிருந்தே நாம் ஒருவிதத்தில் சுதந்திரம் உடையவர்களாக மாறுகிறோம் என்பது மிகவும் அற்புதமான ஒரு விஷயம். இந்த விஷயத்தில் நாத்திகர்களுக்கு எந்த உள்ளுணர்வும் இல்லை. வெறும் வார்த்தை ஜாலங்களின் அடிப்படையில் கடவுளை இல்லையென்று நிரூபிக்க முயற்சி செய்கிறார்கள். தண்ணீர் இருக்கிறது என்ற அடிப்படையான விஷயத்துடன் நாம் தொடர்பில் இருக்கிறோம்

என்று பொருளாகிறது. அதேபோல ஆன்மா இருக்கிறது என்பதை நாம் அறியாமல், ஆனால் ஆன்மாவின் எல்லைக்குள் நாம் நீந்துவதைத் தொடர்கிறோம் என்றால் அதில் என்ன வித்தியாசம் இருக்கிறது? நிரந்தரமான ஆன்மா என்பதாக ஒன்றும் இல்லை என்ற இந்தக் கொள்கையிலிருந்து நாம் பெறுகின்ற நன்மை என்னவெனில், எதன் காரணமாக ஆன்மா முதலியவை அங்கே இருக்கின்றனவோ அந்த எல்லையற்ற தனித்துவத்துடன் நாம் இணைந்திருக்கிறோம் என்பதாகும். இறைதூதர் முகம்மதுநபியைப் பற்றிய உதாரணம், அதாவது பொதுமக்களை பயமுறுத்துவதற்காக நரகத்தீயில் வெந்துபோவார்கள் என்று சொன்னதை இங்கு மீண்டும் சொல்லவேண்டாம் என்று எண்ணுகிறேன். அந்த மக்கள் ஏற்கெனவே பாலைவனத்தின் வெப்பத்தினால் கடுமையாக சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மிகவும் சிரமப்படுகின்ற அந்த வெப்பத்தைவிட அதிகமான மிகக் கடுமையான வெப்பம் என்று சொல்வது, அவர்கள் எதைச் செய்யக்கூடாதோ அதைச் செய்யாமல் தடுப்பதற்காகச் சொல்லப்பட்டது. இறைதூதர் முகம்மது மக்களை பயமுறுத்துவதற்காக ஒரு கொள்கையை உருவாக்கினார். இன்னும் ஒரு பெரிய தடையைத் தாண்ட வேண்டியிருக்கிறது என்று சொல்வதன் மூலம், தெய்வீகத்தில் நீந்தும் செயல்முறையில் ஒரு தடை ஏற்படவேண்டாம் என்று அந்தக் கருத்தை நான் விட்டுவிட்டேன். நாம் நடந்து செல்வதற்கு ஒரு பாதையை ஏற்றுக்கொண்டு பின்பற்றினால், அதாவது அந்தப் பாதையில் நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்று பொருள்; அப்போது எங்கிருந்து நம்மை விடுவித்துக்கொள்ள முடியும்? சரி, நீங்கள் அங்கே இல்லை என்று வைத்துக் கொண்டால், அங்கே இருந்தது எதுவாயினும் அதற்கு ஒரு பெயர் இருக்கலாம்; அந்தப் பெயர் என்ன என்று யாரால் சொல்லமுடியும்? இதைப் பற்றி இன்னும் அதிகமாக சிந்தித்தால் எல்லையற்றதான ஒன்றுக்கு ஒருபெயர் இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவதனால் அதை எல்லையுடையதாகச் செய்கிறோம் என்னும் இதே பொருளுக்கு வந்து சேருகிறோம் இல்லையா? நாம் எல்லையற்றதை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம். நீங்கள் விரும்பினால் அதைக் கடவுள் என்று சொல்லலாம். ஆனால் அது நிச்சயமாக, சந்தேகமில்லாமல், சிந்தனையில் ஒரு தடையை உண்டாக்குகிறது. நாம் ஒருபெரிய நதியை அல்லது சமுத்திரத்தைக் கடந்துகொண்டிருக்கிறோம்; அதன் மறுகரை கண்ணுக்குத் தெரிகிறது; அதைக்கொண்டு நாம் இன்னும் எவ்வளவு தூரம் நீந்தவேண்டும் என்பதை அறிகிறோம்; இம்மாதிரி சூழ்நிலையில் நிச்சயயாக

நம் மனதில் ஒருவிதமான வரம்பு உண்டாகிறது. இப்போது அந்த மறுகரையை கடவுள் என்று பெயர் குறிப்பிட்டால், நம் பார்வையின் எல்லை அந்த அளவு தூரம்தான் செல்லும். எனவே, நீங்கள் நீந்திக் கொண்டே இருக்கவேண்டிய கரையில்லாத கடலாக அது இருக்கிறது. யாராவது ஒருவர் மறுகரையின் மீது தன்பார்வையை நிலை நிறுத்தியிருந்தால், அவருக்கு முன்னால் நீங்கள் நீந்த ஆரம்பித்து விடுவீர்கள்! இதில் யார் சிறந்தவர் என்று சொல்லுங்கள். பந்தத்திலிருந்து யார்விடுதலை பெறுவார் என்று சொல்லுங்கள்!''

### சுவாமி விவேகானந்தா:

''நாம் பரம்பொருளில் நீந்திக்கொண்டிருக்கிறோம். நீங்கள் ஒவ்வொருவரும் அதே பரம்பொருளில் நீந்துவதற்குக் கட்டாயமாக முயற்சி செய்ய வேண்டும். மகாத்மா புத்தரின் தத்துவம் மிகவும் தெளிவாக இருக்கிறது. உண்மையாகவே சொல்கிறேன். நாம் 'என்ன காரணத்துக்காக' என்று தெரியாமலே கடவுள் என்று சொல்கிறோம். ஏனெனில், அவருடைய காட்சிப்பொருட்களை நாம் பார்க்கிறோம். இந்த உலகியல் மற்றும் பிரபஞ்ச நிகழ்வுகள் அனைத்துக்கும் மூலகாரணம் அவரே. வருங்காலத்திலும் இது அப்படியேதான் இருக்கும். நமது வழிமுறை நமக்குக் கற்பிப்பதுபோல, (அல்லது நமது மரியாதைப்பண்பு நம்மை அனுமதிப்பதற்கு ஏற்ப அல்லது காலம் நம்மை அனுமதிப்பதற்கு ஏற்ப) நாம் சுலபமான வழியை ஏற்கிறோம். முடிவில் அதுவும் முடிந்து போகிறது. இவ்விதமாக மகாத்மா புத்தரின் உயரிய தத்துவத்துக்கு கடைசியில் வருகிறீக்ள். பகவான் புத்தரின் சிந்தனைக்கும், ஹிந்து மத வேதத்தின் அடிப்படையான சிந்தனைக்கும் வேறுபாடு இல்லை. மகாத்மா புத்தர் தூய்மையான தெய்வீக மனிதராக இருந்தார். நீ குரு என்ற வழிகாட்டியை இடைமனிதராக எடுத்துக்கொண்டாய். மகாத்மா புத்தர் அதை மறுக்கவில்லை. இது சிக்கலான பிரச்னைகள் அனைத்தையும் தீர்த்து விடுகிறது.''

### வணக்கத்திற்குரிய பகவான் புத்தர்:

''இந்த விஷயங்கள் அனைத்தையும் தியானத்தின் மூலமாக நான் கண்டறிந்தேன். இந்தத் துறவு நெறி வழிமுறைகள் மற்றும் தவங்கள் அனைத்தையும் துன்பத்திலிருந்து விடுதலை அடைவதற்காக நான் அனுசரித்தேன்.''

*(இந்திய தத்துவஞானம் மற்றும் கலாசாரத்தின் வரலாற்றில் பகவான் புத்தர், வேதநெறி சார்ந்த கலாசாரம் மற்றும் தத்துவஞானத்தை எல்லாவகையிலும்*

*எதிர்த்த புகழ்பெற்ற புரட்சிவீரராக இருந்தார். வேதத்தின் சடங்குகளின் வழிமுறை மற்றும் சாதி அமைப்பு ஆகியவற்றை எதிர்த்து துறவுநெறி சார்ந்த வாழ்க்கை முறையினை ஆதரித்தார். தத்துவஞானத்தில், ஆன்மாவின் நிரந்தரத்தன்மை மற்றும் ஈஸ்வரன், பிரம்மன் எனப்படும் அனைத்திலும் உள்ளடங்கியிருக்கும் மற்றும் அனைத்தையும் கடந்திருக்கும் தன்மை என்ற உபநிஷதங்களின் கொள்கையையும் அவர் எதிர்த்தார். புத்தரின் நிரீஸ்வர வாதம் (athristic nihilinm / Nirishwar Shunyavada /நிரீஸ்வர சூன்யவாதம்). கடவுள் என்று எதுவும் இல்லை, அதுவெறும் சூன்யம்தான் – ஒன்றுமில்லாமைதான் – என்ற கொள்கைகள் புகழ்பெற்றவை. ஆன்மா என்று ஏதும் இல்லை, கடவுள் என்று ஏதும் இல்லை. தற்செயலான காரணமான சிருஷ்டி தான் உண்டு. (ப்ராதித்ய ஸமுத்பதா / Pratitya Samutpada) என்பது அவர் கருத்து. இதற்கு இணையான கருத்துக்களை கிரேக்க தத்துவ ஞானத்தில் பார்மெனிட்ஸ் மற்றும் ஹெராக்ளிடஸ் இவர்களிடையே எழுந்த தத்துவ ஞான முரண்பாடுகளில் காணலாம். மேலும் ஹ்யூம், கான்ட் அல்லது ப்ராட்லீயின் முழுமையான லட்சிய வாதம் ஆகியவற்றில் காணலாம். நவீன ஐரோப்பிய மற்றும் மேற்கத்திய தத்துவஞானத்தின் அறிவுசார்ந்த கொள்கைக்கு எதிரான பல வடிவங்களில், ஹெகிலியனுக்குப் பிறகு தோன்றிய விஞ்ஞான சகாப்தத்தின் கொள்கைகளில் காணமுடியும். இந்த விஷயங்கள் பற்றிய விரிவான சிந்தனையை அறிந்துகொள்ள போதிய திறமையும், தகுதியும் உடைய மாணவர்களும், கல்வியாளர்களும், ''யோகமார்க்க விஞ்ஞானம் மற்றும் ஒழுக்கத்தின் வளர்ச்சி'' என்ற தலைப்புடைய, S.P. ஸ்ரீ வஸ்தவா எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையைப் படிக்கலாம். அப்படி ஒரு தேவையை உணர்ந்தால், இந்திய தத்துவஞானத்தின் பொருத்தமான வரலாற்றினைக் கண்டறியலாம் – தொகுப்பாசிரியர்.)*

15–6–1948

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''என் இதயம் விமர்சனங்களின் காரணமாக வெந்து போயிருக்கிறது. எந்த ஒரு பயிற்சியும் செய்யாத படித்த மனிதர் ஒருவர் மரியாதையை சம்பாதித்துக் கொள்கிறார். நான் இப்போது M1 - கூறும் விமர்சனங்களுக்கு பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அவர் தன்னுடைய ஆன்மீகநிலையின் மிகத் தாழ்ந்த மட்டத்திற்கு வரலாம். தனக்கு தன்னைப் பற்றி கர்வம் சிறிதும் இல்லை என்று தனது விமர்சனத்தில் அவர் குறிப்பிட்டிருக்கும் விஷயம்

உண்மையில் இந்தப் புள்ளியில்தான் இருக்கிறது. இதை விளக்கிச் சொல்வது சிரமம். சக்தியற்ற பணிவான தன்மையின் அதிகபட்சமான சக்தியாகிய இது எல்லோருக்கும் கிடைத்துவிடாது. இந்தவிஷயத்தில் விசேஷ மகாபுருஷர் ஒருவர்தான் பூரணத்தன்மை (முழுநிறைவு எய்தியவர்) அடைந்தவராக உள்ளார். இந்த நிலை தனக்குள் முழுமையாக நிரப்பப்பட்டவராக வேறு எந்த ஒரு மனிதரையும் நான் காண இயலவில்லை. ஒவ்வொருவரின் விஷயத்திலும் ஏதோ ஒரு குறைபாடு காணப்படுகிறது. சுயகர்வம் என்பது முழுமையாக இல்லாமற் போகின்ற இந்தநிலையை அடைந்துவிட்டால் அதன்பிறகு செய்ய வேண்டியது எதுவுமில்லை. அம்மாதிரி ஒருவர் முக்தியடைவதற்கு அவசியமான சாதனங்களை உள்ளடக்கிய அத்தகைய சக்திகளுக்கு தகுந்த பாத்திரமாக மாறுகிறார். இவையெல்லாம் எங்கோ இருக்கின்ற விஷயங்கள். இந்த வார்த்தை அவர் தேர்ந்தெடுக்கும் மனிதருக்குக் கொடுப்பது கடவுளின் பொறுப்பில்தான் இருக்கிறது. நமது நடத்தை அந்த நிலையை அடைவதற்கு முயற்சி செய்வதாக இருக்க வேண்டும். எந்த அளவுக்கு அதில் நாம் வெற்றியடைகிறோமோ, அந்த அளவுக்கு நல்லது. இதற்காக எத்தனையோ பரிந்துரைகள் உள்ளன. அதில் மிகவும் பயனளிப்பதும், தோல்வியளிக்காததும் ஆகிய வழி M1- க்குக் குறிப்பிட்டு நீ சொன்னதாகிய ஒருவருக்கொருவர் பணிந்திருப்பது மற்றும் இணங்கியிருப்பதும் ஆகிய மனப்பான்மைதான். இதற்காக மக்கள் ஒரு பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தங்கள் குடும்பத்தாரிடமிருந்தே இதை ஆரம்பிக்க வேண்டும். பக்தியுடன் தீவிர ஏக்கமும் இதயத்தில் இருக்க வேண்டும். ஒவ்வொரு கடமையையும் சரியாகக் கவனிக்க வேண்டும். அப்போது அன்பு எப்படி வராமல் போய்விடும் என்பதைப் பாருங்கள். ஒவ்வொருவரும் இந்த நம்பிக்கையில் ஊறியிருக்க வேண்டும். இதுபற்றி என் பிரியமான ராம் சந்த்தரின் இதயத்தில் இருக்கும் உணர்வு மிகச் சரியானது. அதாவது, இயற்கை தனது சர்வ வல்லமையுள்ள ஆளுமைத்திறன் நிறைந்திருந்தாலும், கடவுளுக்கு அல்லது பரம்பொருளுக்கு முழுவதும் பணிந்து நடக்கிறது. இயற்கையே அப்படி நடந்து கொள்கிறது என்றால், நாம் எவ்வளவு பணிவுடன் நடக்கவேண்டும்!''

''இயற்கைக்கு அதைத் தடுக்கும் சக்தி இருந்தால், தங்கள் குறிக்கோளை அடைவதற்கு அதைக் கடந்து செல்லும் சக்தி மனிதர்களுக்கு இருக்காது.''

(M2 - இன் மரணத்திற்குப் பிறகு M1, 8.6.1948 அன்று கூறிய விமர்சனங்களைப் பற்றிய குறிப்பு இது.)

## 21-6-1948 (புராண்பூர் ஜில்லாவில் உள்ள பிலிபித் என்ற ஊரில் காலை 8 மணி.)

**சுவாமி விவேகானந்தா:**

‘‘ஹைதராபாத்தில் நடக்கும் விஷயங்கள் பற்றி நீ கவனம் வைத்துக் கொள்ள வேண்டும். அந்த நிலைமையையும், நடவடிக்கைகளையும் மட்டும் கவனித்துக் கொண்டு இரு.’’

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்: (இயற்கை அல்லது நிகழ்வுநிலை சத்தியம் அதாவது மாயையிடம் வேலையை எடுத்துக் கொள்வது, அல்லது வேலையைப் பெறுவது எப்படி என்று I2 - கேட்ட கேள்விக்கு பதிலாகக் கூறியது):**

‘‘முதலில் மாயை என்பது என்ன என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். பரம்பொருளைப் பார்த்திருக்கின்ற அந்தக் கண்களால்தான் மாயையைக் கவனித்து அறிய முடியும். பரமாத்மாவை (பரம்பொருளின் ஜீவத் தன்மையை) நாம் உணர்ந்துகொண்டால், மாயையைப் புரிந்து கொள்வதில் கஷ்டம் இல்லை. வேறு வார்த்தைகளில் சொன்னால், பரம்பொருளுடன் நம்மை இணைத்துக்கொண்டால், அப்போது மாயை பரம்பொருளிலிருந்தும், பரம்பொருளுடன் இணைந்திருக்கும் நம்மிடமிருந்தும் மாயை வேறுபட்ட ஒன்றாகத் தோன்றுகிறது. பரம்பொருளிலிருந்து சற்று கீழே இருப்பது தான் உண்மையில் மாயை ஆகும். இந்த வலையில்தான் நாம் வளர்க்கப்பட்டோம். நெடுக்கும் குறுக்குமாக ஒன்றுடன் ஒன்று பின்னியிருக்கின்ற இந்தப் பின்னலின் வழியாத்தான் நாம் கடந்து வரவேண்டியிருக்கிறது. சத்தியநிலையில் நாம் முற்றிலுமாக ஒடுங்கிய நிலையை அடைந்தால், அந்த சத்தியநிலை, நிலைநிறுத்தப்படுகிறது. இதனால் மாயை அனுபவத்திலிருந்து உதிர்ந்து விடுகிறது. இப்போது மாயை நாம் கவனித்தறியும் (உணர்ந்தறியும்) எல்லைக்குள் இல்லை. ஏனெனில் நமது பார்வை சத்தியத்தின் மீதே நிலை பெற்றிருக்கிறது. ஒருவருடைய அனுபவநிலையின் எல்லையைத் தாண்டி ஒரு விஷயம் இருக்கிறது என்றால், அம்மனிதர் அதற்கு அப்பால், மேலே இருக்கிறார் எனலாம். இப்போது நாம் எதில் கவனத்தை நிலைக்கச் செய்திருக்கிறோமோ அதைத் தவிர வேறு எதுவும் நம் பார்வையில் தெரிவதில்லை. இப்போது நாம் அந்த நிலையில் ஆளுமை பெற்றிருக்கிறோம் என்று சொல்லலாம். அந்த இடத்தில் போதுமான அளவு நாம் தங்கியிருப்பதன் காரணமாக அதைக் கட்டுப்படுத்தும் சக்தி

போதுமான அளவுக்கு நம்மிடம் அமைந்திருக்கிறது. பரம்பொருளின் அதிர்வினால் உருவாகிய பலவகையான அற்புதமான நிகழ்வுகளின் பயனாகவே மாயை தோன்றியது. அதைக் கட்டுப்படுத்துகிறவராக இருந்தது யார்? எதன் காரணமாக இது தோன்றியதோ அந்தப் பரம்பொருள்தான். அப்படி கட்டுப்படுத்துகிற பரம்பொருளுடன்தான் நீ இப்போது நெருங்கிய நிலை எய்தியிருக்கிறாய். அந்த உச்சமான நிலையிலிருந்து அதிர்வுகளைப் பெற்று, மாயை என்ற இந்த விஷயம் நம்மிடமிருந்துதான் கிளம்புகிறது என்கிற ஒரு மதிப்பீட்டை உருவாக்கிக்கொண்டு இருக்கிறாய். இப்போது நீ அதைக் கட்டுப்படுத்துகிறவனாக இருக்கிறாய். எங்கும் பரவியிருக்கின்ற அந்தப் பின்னல் வலையின் ஒவ்வொரு நூலிலும் உனது சொந்த எழுச்சியும், பின் வாங்குதலும், வேலைசெய்து கொண்டிருக்கிறது. அதாவது மாயையின் வளையங்களுக்கு உன்னிடம் உண்டாகும் அதிர்வலைகளுக்கு ஏற்றவாறு ஆற்றலை அளிக்கின்றாய். வேறு வார்த்தைளில் சொன்னால் மாயையிடம் நீ வேலை வாங்குகிறாய்.''

### 22-6-1948 பிற்பகல் மணி 4.00

### யாரோ என்னிடம் பேசிக்கொண்டிருப்பதாக நான் (ராம் சந்த்தர்) உணர்ந்தேன். அவர் சொன்னார்:

''நீங்கள் இங்கே வரும்போது உங்களை சரியாக வரவேற்று உபசரிக்க என்னால் இயலும்படியாக, இங்கே புராண்பூரக்கு நீங்கள் வரப்போவதை எனக்குத் தெரிவிக்காமல் இருந்துவிட்டீர்கள். 'அது ஒன்றும் அவசியமில்லை. அதைத் தெரிவிக்க வேண்டிய கடமைப் பொறுப்பு எதுவும் எனக்கு இல்லை' என்று நான் சொன்னேன். நான் அங்கு தங்கியிருப்பதை இப்போது அவர் தெரிந்து கொண்டிருப்பதால், உடனே அவருடைய விருந்தோம்பலை அவர் ஆரம்பிக்கலாம் என்று நான் மேலும் கூறினேன். எனவே, அவர் வணக்கத்திற்குரிய தன்னுடைய குருநாதருடன் கலந்து ஆலோசனை செய்தார். அவருடைய குரு, இம்மாதிரி ஒரு மகாபுருஷர் இதற்கு முன் ஒருபோதும் புராண்பூருக்கு வந்ததில்லை என்று கூறினார். (இந்த மனிதர் இப்போதைய பதவிநிலைக்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்புதான் வந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ஏனெனில் சில மாதங்களுக்கு முன்பு இங்கு நான் ஒருமுறை வந்திருக்கிறேன்.)''

### இங்கு குறிப்பிடப்பட்ட முனிவர்:

''இந்தப் பகுதி சரியான பாதைக்கு வர, முன்னேற்றம் அடைய இன்னும் சிறிதுகாலம் ஆகும். இங்கு ஒரு குறிப்பிட்ட பகுதி மிகவும் மோசமாக

இருக்கிறது. அந்த இடத்தை அழித்துவிடுவது நல்லது. பிலிபித் கொஞ்சம் பரவாயில்லை; சகித்துக் கொள்ளக்கூடிய நிலையில் அது இருக்கிறது. என்னுடைய பணி எல்லை லக்கிம்பூர் – கேரி வரையில் இருக்கிறது.''

### அந்த முனிவரின் குரு:

''நீங்கள் இவ்வுலகில் அரிதான ஒரு உதாரணம் என்பதைக் கண்டு நான் வியப்படைந்து போற்றுகிறேன். வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டரின் ஈடு இணையற்ற நிலையை யாருமே உணர்ந்து கொள்ளவில்லையே! அவருடைய பெருமைக்கு உதாரணம் இதோ இங்கே இருக்கிறது. மிக உயர்ந்த ஒரு மகாபுருஷர் யார் என்பதைப் பற்றிய தங்கள் சிந்தனைகளை மக்கள் இங்கே தெளிவுபடுத்திக் கொள்ளலாம். நீங்கள் ஒருவரே அனைத்து வேலைகளையும் செய்வதற்குத் தகுந்தவர் என்பது என் கருத்து. நீங்கள் இங்கே இருக்கும் காலம் முழுவதும் என் சீடர் உங்களை கவனித்துக் கொள்வார்.''

### 28–6–1948 (லக்கிம்பூர் – கேரி)

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''நீ வரையறுத்துள்ள ஒரு முனிவருக்கான குணவிசேஷங்கள் பற்றிய சிந்தனை சரியானது. ஆனால், இவற்றைப் புரிந்துகொள்ளும் திறன் யாருக்கும் இல்லை. உனது இந்தச் சிந்தனையை நான் மிகவும் விரும்பினேன். உண்மையான விதத்தில் இந்தக் குணங்கள் செயல்படுத்தப்பட்டால் 'மோசஸ்' எதிர்பார்த்த நிலை உருவாகும். சூட்சும சரீரத்தைக் கண் பார்வையில் வைத்துக்கொண்டு, அம்மனிதரின் ஆன்மீகநிலை மதிப்பிடுதல் என்று இந்தச் சிந்தனையை நான் விவரித்திருக்கிறேன். இந்தக் குண மதிப்பீட்டை அனைவரும் பயன்படுத்த முடியும்.''

''மேலே கூறிய கருத்தை, உன் நிலையை மட்டுமே கருத்தில் கொண்டு நான் கூறினேன். K7 (C2 - இன் மகன்) உடைய சூட்சும சரீரத்தை அவ்வப்போது கவனித்து ஆராயும்படி C2 - இடம் சொல்லவும். அந்த ஆற்றல் அவருடைய மனத்தில் நன்கு ஊடுருவிச்செல்லும் சாத்தியம் இதில் இருக்கிறது. ஆயினும் சகோதரா அவர் (C2) ஒன்றும் செய்யாமல் இருக்கிறார். ஒருவருடைய சூட்சும சரீரத்தை மனதில் நாடி நிலைநிறுத்தி, தன் மூலம் எந்தநிலையிலிருந்து பிராணாஹூதி கொடுத்தாலும், அது அந்த மனிதருக்கு உண்டாகும். அதாவது அவரும் அந்த நிலையை அடைவார். மற்ற விஷயங்கள் பற்றி நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். மேலும்

சொல்ல வேண்டிய தேவை இல்லை என்று தோன்றுகிறது. உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லயென்றால், நீ என்னிடம் எதையும் கேட்கலாம். இல்லையென்றால், ஏற்கெனவே உன்னால் பயன்படுத்தப்படுகின்ற செயல்நுட்பங்கள் சம்பந்தமாக விளக்கமும் கேட்கலாம். அந்த வாய்ப்பை உன்னிடமே விட்டுவிடுகிறேன்."

**ஹிந்திமொழியில் ராமாயணத்தை இயற்றிய துளசிதாஸ் என்ற மகானுடைய ஆன்மாவுடன் உள்முகத் தொடர்புகொள்ள வேண்டும் என்ற விருப்பம் அல்லது கற்பனையினால் அதை நிறைவேற்றிக்கொள்ள தன் மனம் தீவிரமாக ஏங்குகின்ற இந்தப் பிரச்சனையில் இருந்து விடுபடுவது எப்படி என்று C2 - கேட்ட கேள்விக்கு விடையாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''இந்த வருந்தத்தக்க நிலை தானே விரும்பி ஏற்றுக்கொண்டதாகும். இது மனத்தின் இயல்பைக் கெடுத்ததனால், அதாவது அதே விருப்பத்தை தீவிரமாக நாடும்படி பழக்கப்படுத்தியதால் வந்த பயனாகும். இந்த வருந்தத்தக்க நிலையை நீக்குவதற்கு வழி, நீ ஏற்கெனவே அவருக்குக் குறிப்பிட்டதுதான். இந்த வழிமுறைகளை, செயல்நுட்பங்களை ராம் சந்த்தர் தன் மனத்திலிருந்து உருவாக்குகிறார் என்று நீ நினைக்க வேண்டாம். இந்த வழிமுறைகள் என்னுடையவை. மனத்தின் மீது அன்பு ஒரு நல்லவிளைவை உண்டாக்கும். எனவே அன்பையும் ஒரு வழிமுறையாகப் பயன்படுத்த முடியும். இன்னொரு வழிமுறை தனது சொந்த தனித்துவமே ராம் சந்த்தருடையதுதான் என்று கருதி அதையே மனதில் முக்கியமானதாகக் கருதுவதாகும். மேலும் ஒரு வழிமுறை தன்னுடைய மனமே ராம் சந்த்தருடைய மனம்தான் என்று நினைப்பதாகும். இவை யாவும் சுலபமான, குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ள கோட்பாடுகள். இவற்றை தற்காலத்தில் பயிற்சி செய்யலாம். இது மட்டுமன்றி இந்தப் பிரச்னையை நீக்குவதற்கு எத்தனையோ தியானங்களும், வழிகளும் உள்ளன. ஆனால் அவை சிரமமான பயிற்சிகள்.''

14-7-1948 காலை மணி 8.45

**மகாப்பிரளயம் (பிரபஞ்சத்தின் மொத்த அழிவுநிலை) மனக்காட்சியில் வந்தது. சுவாமி விவேகானந்தா அது பற்றிக் கூறிய விளக்கம்:**

‘‘உன் மனக்காட்சியில் நீ பார்த்த மையம்தான் சத்தியம். அதைச் சுற்றிலும் மின்னுகின்ற ஒளி இருந்தது. அந்த ஒளிவட்டத்தைச் சுற்றிலும் அணுத்துகள்கள் இடையூறு செய்யப்பட்டவிதத்தில் இருந்தன. உலகம் இருந்தபோது இவையனைத்தும் காணாமற்போயின. உன்னால் கவனித்து அறியப்பட்ட இவை அனைத்தும், வித்தியாசம் கண்டறிய முடியாத நிலையில் ஒளிவளையத்திலும் இருக்கின்றன. அது இரண்டாவது வளையம் என்று கூறப்படுகிறது. அதற்குப் பின்னால் மிகவும் உள்ளார்ந்து இருக்கின்ற வளையம் (மையம்) ஒரு புள்ளியாக மட்டுமே தோன்றுகிறது. மின்னுகின்ற ஒளிதான் அந்த முதல் உந்துதல். இவ்வாறு மூன்று வளையங்கள் அங்கு இருக்கின்றன. கடைசியில் அவை ஒன்றாக ஆகின்றன. மிகச் சிறிதளவு அல்லது ஒரு கையளவு சக்தி எவ்வளவு பெரிய பிரபஞ்சத்தைப் படைத்துள்ளது என்பது எவ்வளவு வினோதமானது. (சிறிது இடைவெளி) ஒரு கையளவு என்பது ஒரு உதாரணம்தான்! (சிறிது இடைவெளி) அனைத்துக்கும் முடிவில் அந்த அணுத்துகள்கள் கூட எஞ்சியிருப்பதில்லை!”

## 16-9-1948

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘பிரம்ம ரந்திரம் (தலையின் உச்சிப்பகுதியில் உள்ள புள்ளி இங்கேயிருந்துதான் முக்தியடைந்த ஆன்மாக்களுடன் மற்றும் பழங்காலத்திய பெரிய மகாமுனிவர்களுடன் உள்முகத் தொடர்பு உண்டாக்கி நிலைநிறுத்தப்படுகிறது) என்பது ஒரு ஆன்மீகப்புள்ளி. இறைதூதர்கள், தீர்க்கதரிசிகள் (நபி) ஆகியோருக்கு இது விழிப்பு நிலைக்குக் கொண்டு வரப்படுகிறது. அதற்கு முன் அது திறக்கப்படுகிறது. (அதன் தடை நீக்கப்படுகிறது). உயர்ந்த மேல் உலகங்களுக்குள் செல்ல வேண்டிய தேவை வரும்போது இந்தப் புள்ளியின் வழியாகவே அது செய்யப்படுகிறது. இது சாதாரண மனிதர் யாராலும் உள்ளே புகமுடியாத நிலை. அதனால் இதுவே எல்லாம் என்று பொருளாகாது. இதற்கு அப்பால் இன்னும் எவ்வளவோ நிலைகள் உள்ளன. இந்த உலகில் ஒரு சமயத்தில் ஒரே ஒரு மகாபுருஷருக்குத்தான், மற்ற உயரிய உலகங்களுக்குள் நுழையும் திறமை இருக்கிறது. இந்தப் புள்ளியை ‘பிரம்மரந்திரம்’ என்று பெயர் குறிப்பிட்டிருக்கிறேன். ஏனென்றால் ஒரு கணவான் இந்தப் பெயரில்தான் இந்தப் புள்ளியை எனக்கு சுட்டிக்காட்டினார்.’’

‘‘கபால க்ரியா என்பதில் உள்ள தத்துவம் பற்றி இதுவரையில் யாரும் கவனம் செலுத்தவில்லை. (கபாலக்ரியா என்பது இறந்த உடலை எரித்த பின்னர் அவ்வுடம்பின் தலைப்பகுதியை ஒரு தடியால் அடித்து

உடைத்துவிடும் சடங்கு. இது ஹிந்து மதத்தில் ஒரு பழக்கம்). அது சிந்தனையின் எல்லை. அந்த மூளையில் இன்னும் மிஞ்சியிருப்பது எதுவாயினும் அதை பௌதீக உடம்பிலிருந்து நீக்கிவிடுவது நல்லது என்ற கருத்து அதில் உள்ளது. சூட்சுமமான சாராம்சத்தின் கவர்ந்திழுக்கும் ஆற்றல் அங்கு இருக்கிறது. எனவே தலையில் எஞ்சியிருக்கும் சூட்சுமநிலை எதுவாயினும் அது மேலே கூறிய சூட்சுமமான சாராம்சத்துடன் ஒட்டிக் கொள்வதற்கு உதவியாக கபாலம் எனப்படும் மண்டை ஓடு உடைக்கப்படுகிறது. இதனால் அந்த ஜீவன் அனைத்தையும் தன்னோடு கொண்டு செல்கிறது எனலாம். சூட்சுமமாக எஞ்சியிருப்பது எதுவாயினும் அதுவும் பௌதிக உடம்பிலிருந்து பிரிக்கப்பட்டு அதனுடன் செல்கிறது.''

### 2-11-1948 இரவு மணி 11

**சுவாமி விவேகானந்தா:**

''அன்று வணக்கத்திற்குரிய உனது மாஸ்டர் கூறியதை நீ எழுதி வைத்துக் கொள்ளவில்லை. உடனே அதை எழுதி வைத்துக்கொள்.''

### 31-1-1948 அன்று வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

''வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - ஐ தன்னுடைய சீடரல்ல என்று நிராகரித்திருக்கிறார் மற்றும் தந்தை வழியாக வரும் உரிமைகள் அனைத்தையும் இழந்த கீழ்ப்படியாத மகன் என்று அறிவித்திருக்கிறார். (சிறிது இடைவெளி) இந்த விஷயம் காரணமாக நீ மனவருத்தம் அடைய வேண்டாம். அவர் (M1) இரண்டு தீமைகள் செய்துவிட்டார். முதலில் உனக்கும், இரண்டாவதாக தனது பேரனுக்கும் (K4) பெருந்தீங்கு செய்திருக்கிறார். உனக்கு இதயத்தின் பலவீனத்தை சிறிதளவு அதிகரித்ததைத் தவிர வேறு எந்தத் தீங்கும் அவரால் செய்ய முடியவில்லை. எங்கே கண்டறிய முடிகிறதோ அங்கே அந்த நன்மையை அவர் தேடிப்பார்க்கட்டும். தெய்வீகத்துடன் தனது இணைப்பையே அவர் தேட வேண்டியிருக்கும். என் வம்சம் இன்னும் தொடர்கிறது. இப்போது உன் மூலமாக அது வளர்கிறது. அது சரிதான். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் குடும்பத்தில் அவருடைய பேரன் (பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் மனைவி ருக்மணியின் மகன் பிரத்யுனனின் மகன்) அனிருத்தன் ஒருவன் மட்டுமே காப்பாற்றப்பட்டான். அவனது வம்சம் இன்னும் இருக்கிறது. ராம் சந்த்தராவின் சீடர்களாகிய நீங்கள்தான் இனி என் வம்சம். இந்த ஆன்மீக சங்கம், மக்கள் அதைக் கவனித்துப் பாராட்டும் விதத்தில் ஒரு மகத்துவம்

பெற்று பிரகாசிக்கும். எந்த அழிவுகரமான காலமும் அதை அசைக்க முடியாது. (இந்தத் திட்டம் மனக்காட்சியில் வந்தது)

(M1, ராம் சந்த்தரின் பிரதிநிதித்துவம் பற்றிய சந்தேகங்களை S........என்ற இடத்தில் தெரிவித்தார். S1 - என்பவரிடம் அவர் வஞ்சனை மற்றும் மோசடி செய்யப்பட்டதாகக் கூறினார். இதுபற்றி 31-10-1948 ம் தேதி லாலாஜி கூறிய கருத்து I2 - என்பவரால் எழுதப்பட்டு ரகசியமான குறிப்புகளில் வைக்கப்பட்டது.)

*தொகுப்பாசிரியர் குறிப்பு:*

*ராம் சந்த்தரின் சுயசரிதம் இரண்டாவது பாகத்தின் ஆரம்பத்திலிருந்தே வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியால் மிகவும் நம்பப்பட்ட முக்கியமான மனிதராக M1 இருந்தார். ஆயினும் பிறகு பல காரணங்களால் M1 - நம்பத் தகாதவராக மற்றும் விசுவாசமில்லாதவராக மாறிப்போனார். அவரைத் திருத்துவதற்காக வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜி சாகேப் அவரைக் கண்டித்தும், கோபித்தும் பலமுறை கூறியிருக்கிறார். இவையனைத்தும் ஸ்ரீ ராம் சந்த்தரின் சுயசரிதம் இரண்டாம் பாகத்தில் பல்வேறு தேதிகளில் குறிப்புக்களில் உள்ளன. மேலும் M1 - தனது ஆன்மீக நிலையிலிருந்து படிப்படியாக வீழ்ச்சியடைந்து கொண்டிருப்பது சம்பந்தமாக பல கருத்தக்களை லாலாஜி கூறியுள்ளார். இவை தனியாக ரகசியக் குறிப்புக்களில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. அந்த ரகசியக் குறிப்புக்கள் இந்தப் புத்தகத்தில் ஸ்ரீ ராம் சந்த்தரின் சுயசரிதம் பாகம் 2ல்) சேர்க்கப்படவில்லை. ஏனெனில் யோகமுறை விஞ்ஞனமாகிய சகஜ மார்க்கப் பயிற்சிமுறையின் வளர்ச்சியில் அதற்கு நேரடியான சம்பந்தம் ஒன்றும் இல்லை. மேலும் அவை ஒரு தனி மனிதரைப் பற்றிய குறிப்புக்கள். M1- என்ற அந்த மனிதர் ஷாஜஹான்பூர் ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன் என்ற பெயருடைய ஆன்மீக சங்கத்தின் ஆரம்பகால வரலாற்றில், அதைத் தோற்றுவித்தல், நிலைநிறுத்தி வளர்ச்சி பெறச் செய்தல் ஆகியவற்றில் சிறப்பாக வேலை செய்திருக்கிறார். அந்த ரகசியக் குறிப்புப் புத்தகத்தில் முதலில் இடம் பெற்றிருப்பது 27-3-1945 அன்று வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியை, வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீ லாலாஜி சாகேப் அவர்களின் பிரதிநிதியாக அறிவிக்கும் அறிக்கையை M1- க்குப் பதிலாக R2 - வாசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதன் விளைவாக லாலாஜி கூறிய கருத்தே ஆகும். அதன் பிறகு, 17-6-1945, 25-6-1945, 13-8-1945, 3-9-1945, 20-9-1945, 23-9-1945, 6-10-1945, 11-10-1945, 12-10-1945, 27-11-1945, 27-4-1947, 6-8-1947, 24-8-1947, 2-1-1948,*

*15-2-1948, 26-7-1948, 20-10-1948 மற்றும் 31-10-1948 ஆகிய தேதிகளில் M1 - உடைய ஆன்மீகநிலை (2.11.1948 தேதியில் குறிப்பிட்டபடி) படிப்படியாக கீழிறங்கிக் கொண்டே இருந்தது பற்றிய விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. இப்படி அவர் பின்னோக்கிச் சென்றுவிட்டதன் முக்கியமான காரணம் வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களின் ஆன்மீகப் பணி மற்றும் பங்களிப்பின் தொடர்ச்சியாக ஷாஜஹான்பூரில் அமைக்கப்பட்ட மிஷனில் தனதுசொந்த முக்கியத்துவத்தை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டுமென்று அவரது மனம் அவரை வற்புறுத்தியதுதான். வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜி, அவர் (M1) ஒரு மூத்தவர் என்ற காரணத்தால் அவருக்கு எப்போதுமே பெரும் மரியாதையும் முக்கியத்துவமும் அளித்து வந்தார். இது அளவுக்கு மீறிப் போனதாக சுவாமி விவேகானந்தாவும், வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களும் உள்முகத் தொடர்பு கொண்டு அவரிடம் கூறிய பல கருத்துக்களில் வெளிப்பட்ட பரம்பொருளின் சங்கல்பத்தையே மறுக்கும் அளவுக்குச் சென்றது. முடிவாக S1 மற்றும் C1 ஆகியோர் அளித்த ஊக்கத்தினால் அல்லது அவர்களின் கூட்டுறவால் M1 - தன்னுடைய பேரனாகிய K4 என்பவரை பாபுஜிக்கு எதிராக வளர்த்து உருவாக்கி, மூத்த மகான்கள், முற்காலத்து தெய்வீக புருஷர்கள், ஆகியோர் K4 - உடன் உள்முகத் தொடர்பு கொள்வதாகவும், அவரை வந்து சந்திப்பதாகவும் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு உருவாகியது. இந்த வருந்தத்தக்க திருப்பம் M1- இன் மீது வணக்கத்திற்குரிய பாபுஜியே அதிருப்தி அடையச் செய்து மிகவும் வருத்தத்தை உண்டாக்கியது. எனவே ஷாஜஹான்பூர் ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷனில் இருந்து M1 - நீக்கப்பட்டார். இது பற்றி 31-10-1948 அன்று எழுதப்பட்ட கடிதத்தை M1 - அலட்சியம் செய்தார். எனவே 2-11-1948 அன்று அவர் முடிவாக நீக்கப்பட்டார். ஆரம்ப காலத்தில் அவர் உருவாக்கிய மிஷன், அவர் நீக்கப்பட்ட பிறகு, நன்கு வளர்ச்சியடைந்ததைக் காணும் அளவு பல வருடங்கள் உயிர் வாழ்ந்து, 1960ம் ஆண்டு மரணமடைந்தார். ஆன்மீகப் பாதையில் முன்னோக்கி நடக்க விரும்பும் சாதகர்கள் அனைவருக்கும், அவருடைய மற்றும் அவரைப் போல மற்றவர்களுடைய வாழ்க்கைச் சம்பவங்கள் ஒரு பாடமாக உள்ளன.''*

**சுவாமி விவேகானந்தா:**

''S.......என்ற இடத்தில் நடக்கும் விஷயங்களை நான் முழுவதும் கவனித்துக் கொண்டிருந்தேன். E ......... மற்றும் S.........என்ற இடத்தின்

முக்கியஸ்தர்களாகிய C1 மற்றும் S1 மங்கலான உருவங்களாக இருந்தனர். அங்கே என்ன நடக்கிறது என்பதை நானே நேரில் பார்ப்பதற்காக நான் அங்கே இருந்தேன்; அவர்களுக்கு ஆன்மீக முன்னேற்றம் கொடுப்பதற்காக அல்ல. வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் எப்போதும் உன்னோடு இருக்கிறார். அவர் வந்தாலும் வராவிட்டாலும் அது முக்கியமல்ல. நான் எனக்குரிய சொந்த இடத்தில் இருந்தபடி உனக்கு இதைச் சொல்கிறேன். உன் தேவைக்கு அல்லது அழைப்புக்குத் தக்கபடி நான் அங்கு வருவேன். எங்கள் குறிப்புக்களை நீ பின்பற்றி நடந்து கொள். கயாவுக்குப் போ. லக்கிம்பூரில் நான் உன்னிடம் குறிப்பிட்ட காரியத்தை அங்கே நான் செய்து கொண்டிருப்பதை நீ காண்பாய். உன் குருவினுடைய பணியை நீ எடுத்துக்கொண்டது போல, என் பணியையும் நீ எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். அவர் எப்போதும் வேலையில் முனைப்பாக இருப்பதை நீ பார்க்கிறாய். ஆனால் உண்மையில் அப்படி இல்லை. அவருடைய இடத்தில் இருந்து நீ எல்லாவற்றையும் செய்வதை அவர் பார்த்துக்கொண்டிருக்கிறார். உன்னையறியாமல் (உனது உணர்வு நிலையின் ஈடுபாடு இன்றி) நீ செய்துகொண்டிருக்கும் வேலை என்ன என்பது கூட உனக்குத் தெரியாது. அதனால்தான் நீ களைப்பை உணர்கிறாய்!

I2, இங்கே பாருங்கள்! நான் குறிப்பிட்ட இந்த அதிசயம்பற்றி நீங்கள் சிந்தித்தது உண்டா? தன் கட்டிலில் உட்கார்ந்திருக்கும் ஒரு மனிதர் தானாகவே எல்லா வேலைகளும் செய்துகொண்டிருக்கிறார். இருபத்து நான்கு மணி நேரங்களில் ஒரு நிமிடம் கூட அவர் ஓய்வாக இருப்பதில்லை. ஆயினும் அதை உணராமலே இருக்கிறார். இந்தவிதமான பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு யாராவது இருக்கிறார்களா? ராம் சந்த்தர், நீ ஏன் வேலை செய்து கொண்டிருப்பதை உணரவில்லை? வேலை செய்வது மற்றும் அதை உணர்வது ஆகிய இரண்டும் சேர்ந்த இரண்டுமடங்கு ஆற்றலின் சிரமத்திலிருந்து மனத்தை விடுவிப்பதற்காகவே ஆகும். கடவுள் தன்மை உடைய இம்மாதிரி வேலையில் எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கின்ற ஒரு மாமனிதர் வேறு யாராவது இருக்கிறார்களா? யாராவது எப்போதாவது போதுமான அளவு அதை செய்து முடிக்க முடியுமா? என்று நான் நினைக்கிறேன். கைப்பிடியில் அடங்கிவிடும் அளவு எலும்புகள் (மெலிந்த உடலுடைய ஒரு மனிதர்) அம்மாதிரி அற்புதமான வேலையைச் செய்யும் திறன் பெற்றிருக்கிறார். மூளையில்லாத (அதாவது அறிவு பூர்வமான சிந்தனைகளின் குறுக்கீடு இல்லாத) மனிதர்கள் இதைச் செய்ய முடியும். சுஷுப்தி (கனவுகள் அற்ற ஆழ்ந்த உறக்கநிலை) நிலைக்குள்

நீங்கள் சென்றால், அது தூய்மையாக மற்றும் எளிமையாக இருக்கும் ஆன்மாவின் நிலைக்குள் மூழ்குவதை உள்ளடக்கியதாக இருக்கிறது. அங்கு எதைப் பற்றியும் எந்த ஞானமும் இல்லை. சில சமயங்களில், அங்கே உங்கள் எதிரில் அனைவரும் அமைதியாக, செயலற்றவர்களாக இருந்தாலும் உங்கள் கைகளில் ஒரு மண்வெட்டியுடன் இருக்கும் நிலை அது.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இதைப்புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். அவர்கள் இதை அறிந்தவர்களாகி நம்பிக்கையுடன் இருந்தால், மக்கள் மிகவும் வியப்படைந்து திகைத்து நின்று விடுவார்கள்.''

## 6-11-1948 இரவு மணி 10.

**இயற்கையின் விதிமுறைகள் எப்படி உருவாக்கப்பட்டன என்ற கேள்விக்கு விடையாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''என்ன ஒரு நுட்பமான கருத்து மனதில் தோன்றியிருக்கிறது! இது மிகவும் சுலபமான ஒருவிஷயம். ஆனால் மக்களின் பார்வை ஒருபோதும் அந்தப் பக்கம் திரும்பவில்லை. இந்த உலகிற்கு ஒரு ஆரம்பம் தோற்றம் இருந்தது என்பது உலகிலுள்ள மக்கள் அனைவருக்கும் தெரியும். இவ்வாறாக அனைவரும் ஒரு ஆரம்ப ஸ்தானத்தை (ஆரம்பித்த இடத்தை) கண்டார்கள். அந்த ஆரம்ப செயல்முறை முழுமை பெற்றுவிட்டது என்று வைத்துக்கொண்டால், அப்போது நடந்தது என்ன? அதிர்வுதான். அதுதான் அதனுடைய கணம். ஆனால் அதை விதிமுறை என்று சொல்லமுடியாது. எனவே, அதிர்வு துவங்கியது என்பது சரிதான். இந்த உலகங்கள் இருப்பதற்காக வேண்டி உருவாக்கப்பட்டன. அவை யாருக்காக? அங்கே வசிப்பவர்களுக்காக! நீங்களும் மற்றவர்களும் அங்கே (உலகிற்கு) வந்துவிட்டீர்கள். நீங்கள்தான் முதலில் அங்கே வந்தீர்கள் மற்ற அனைவரும் உங்களைப் பின்தொடர்ந்து வந்தார்கள் என்று வைத்துக் கொள்வோம். புதிதாக வந்தவர் (முதலில் வந்தவர்) நிச்சயமாக (உலகைப் பார்த்து) மிகவும் வியப்படைவார் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். ஆதிவாசி ஒருவன் ஒருவிமானத்தைப் பார்த்தால் வியப்பினால் திகைத்து நிற்பான். இந்த வியப்பை ஒரு அதிர்வாக அல்லது இயக்கத்தின் அமைதி நிலையாக நாம் குறிப்பிட முடியும் அல்லவா? அல்லது வேறு விதத்தில் சொன்னால், இந்த ஆச்சரியமே அதிர்வின் பிறப்பிடமாக அமைந்தது. எனவே முதலில் வந்தவர், அவர் எங்கே வந்து சேர்ந்திருக்கிறார் என்பதைக் கண்டு

ஆச்சரியமடைந்தார். இதை வேறு வார்த்தைகளில் சொன்னால் அவர் அந்தவியப்பில் மகிழ்ச்சியை உணர்ந்தார், பிறகு சிந்திக்க ஆரம்பித்தார். வியப்பு உணர்வு அதன் முடிவான நிலையை அடையாமலிருக்கும்வரை, அந்தவியப்புடன் எண்ணமும் சேர்ந்து இருக்கிறது. அந்தவியப்பு உணர்வின் முடிவான நிலையில் வழிபடுதல் நிறைந்த சேவை எவ்வளவு அனுமதிக்கிறதோ அந்த அளவு உண்மை வெளிப்படுவது ஆரம்பமாகிறது. இப்போது இது நிகழ்ந்தாக வேண்டும். ஆச்சரியம் மிகுந்தநிலையில் இருக்கும் இம்மனிதன் தனது வாழும் முறை மற்றும் தேவைகளுக்காக மிகவும் ஆர்வம் கொள்கிறான். அந்த எல்லைக்கு அவனுடைய உள்ளம் தொடர்பு பெறுகிறது. அவனுடைய நிலைமைப் பற்றிய செய்தி, கடைசி முனையைச் சென்றடைய ஆரம்பிக்கிறது. நீங்கள் ஏற்கெனவே உங்களுடன் ஆற்றலைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இன்னும் உங்களுக்கு எதிலும் பற்று ஏற்படவில்லை. உங்களிடம் கலப்பில்லாத தூய்மை இருக்கிறது. இதன் காரணமாக, சகோதரா, இந்தக் காரியத்தில் அதிக நேரம் பயன்படுத்தப்படவில்லை. இதனால் அந்த எல்லையில் உங்களுடைய எண்ணங்கள் எவையெல்லாம் சென்றடைந்தனவோ, அவற்றை முளைக்கச் செய்து வளர்ப்பதற்கு உங்களிடத்தில் உள்ள சக்தியே வாய்ப்பளித்தது. இவ்விதமாகவே அந்தப்புனிதமான வடிவங்களும் உருவங்களும் ஜீவிதத்துக்கு வந்தன. அவை அந்தக் காரியத்துக்கு (அதாவது வாழ்க்கைக்கு மற்றும் உலக வாழ்வின் தேவைகளுக்கு) அவசியமாக இருந்தன. இப்போது இதற்கு மிகவும் முன்னதாகவே, இந்த வடிவங்களும் உருவங்களும் இருந்தன என்று உறுதியாகச் சொல்லப்பட்டால், அது தவறாகவே இருக்கும். ஏனனில் சத்தியமான விஷயத்தின் வடிவங்கள் தூய்மையான சத்திய நிலையிலிருந்து தான் தோன்றி, அதனால் தங்கள் செயல்பாடுகளை ஆரம்பித்தன. அதன் விளைவு வெளிப்பட்டது. இப்போது தூய்மைக்குப் பிறகு எது வரும் என்று சொல்லப்பட்டதோ அது நீங்கள் உருவாக்குவதாகவே இருக்கும். ஏனென்றால் சத்திய நிலையின் தூய்மைக்குப் பிறகு உங்கள் தனித்துவம் (ஜீவிதம் அல்லது உருத்தோற்றம்) மட்டுமே இருந்தது. இந்த வடிவங்களும், உருவங்களும் கூட தூய்மை நிலையினால் அதன் மூலமாகவே கொண்டு வரப்பட்டன என்று யாராவது உறுதிபட கூறினால், அப்போது அந்தத் தூய்மை நிலையில் அதைத் தவிர இரண்டாவதாக ஒன்று சேர்ந்திருக்கவில்லை என்னும்போது அதிலிருந்து இந்த மூன்றாவது விஷயம் எப்படி வந்திருக்க முடியும் என்று கேட்டால் தவறாகாது. தூய்மையில் இருந்து தூய்மைதான், தூய்மை மட்டும்தான் வரும். அந்த தூய்மையான சத்தியத்திற்குப் பிறகு அதையடுத்து வந்தது

எதுவாயினும், அது அதே நிலையிலிருந்துதான் வரும். சரி, அவசியமான விஷயங்களுக்கான நோக்கம் இப்போது தெளிவாகத் தெரிந்து விட்டது. இந்த விஷயங்களை ஆச்சரியம் (வியப்பு) என்ற உணர்வில் உருவாக்கியிருக்கிறீர்கள். இதன் மூலமாக வந்த ஞானம், அதே தளத்தில் செயல்பட வேண்டியிருக்கும். வேறு வார்த்தைகளில் சொன்னால் இப்போது முதல், இயற்கையின் ஆற்றல்கள் எந்த அடித்தளத்தின் மீது செயல்படுமோ, அந்த அடித்தளத்தை நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள். உங்கள் தேவைகளுக்காக அந்த அடித்தளத்தின் மீதிருந்த சக்தியினால் இயற்கையில் ஒரு விதிமுறையை ஏற்படுத்தினீர்கள். அதாவது, நீங்கள் அனுடைய பிரசன்னம் (அங்கு இருக்கும் தன்மை) தவிர்க்க முடியாததாக இருப்பதற்காக, ஒரு சக்தியை நீங்கள் தொடர்ந்து இயங்கச் செய்தீர்கள். விரிவான விதத்தில் இதுவே உலகம் முழுவதும் பரவியதாக மாறியது. இதன் மூலமாகவே, இயற்கையின் சக்திகளும், செயலாற்றல்களும், அவ்வப்போது இந்த விஷயங்களை விநியோகிக்கின்ற பல்வேறு இயக்கங்களாக வரத் தொடங்கின. இந்தவிதமாக சக்திகள் செயல்படுவதற்கான களம் உருவாக்கப்பட்டு நிலைபெற்றது. அதன் மூலமாக அனைத்தும் மங்கலான ஒளிவீசத் தொடங்கின. செயல்கள் நிகழ ஆரம்பித்தன. அப்போது அங்கே என்ன இருந்தது? ஒரு ஆன்மாவுடன் கூடிய அனைத்து ஜீவன்களுக்காகவும், நீங்கள் ஒரு ஏற்பாட்டைச் செய்தீர்கள். இதன் வழியாக எல்லா ஜீவன்களிலும் உள்ள ஆற்றல் அதிகரித்துக் கொண்டே போகமுடியும். ஒருவிதத்தில் நீங்கள் இந்த இயற்கையின் ஆற்றல்கள் உங்களை மீறிப் போகாதபடி ஒரு எல்லையை உருவாக்கியிருக்கிறீர்கள். இந்த எல்லைக்குள் இருப்பவை அந்த ஆற்றல்கள் செயல்படுவதற்கான மையமாக மாறின. இன்னொருவிதத்தில் (வேறு ஒரு அர்த்தத்தில்) இந்த இயற்கையின் ஆற்றல்களில், அவற்றை அவ்வப்போது வேலை செய்வதற்குத் தயாராக வைத்திருப்பதற்காக, இந்தக் கட்டுப்பாடு வேரூன்றியிருந்தது. இன்னும் சரியாகச் சொன்னால், அந்தச் செயலை செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில், இயற்கையின் ஆற்றல்கள் இருந்தன; அல்லது அந்தக் காரியங்களைச் செய்வதில் ஈடுபட்டு, அதைச் செய்யாமல் போகமுடியாது என்ற நிலையில் இருந்தன என்று சொல்லலாம். அந்த ஆற்றல்களுக்கு, நீங்களே பிரித்துக்கொடுத்த வேலைகளை நீங்களாகவே திரும்பப் பெறும்வரையில் அந்த வேலையில் ஈடுபட்டு இருப்பதே இப்போது ஒரு கொள்கையாக ஆகியிருக்கிறது. இப்போது இந்த ஒரு வசதி உங்களுக்காகவே அளிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு தோழமை உண்டாக்கப்பட்டுள்ளது. கேளிக்கைகள் மற்றும் விளையாட்டுக்களில்

விரும்பி ஈடுபடுவது ஆரம்பித்திருக்கிறது. இப்போது உங்கள் செயல்பாடுகள் பலவிதமாக வடிவம் பெற்றுள்ளன. ஒவ்வொரு முகமூடியையும் பயன்படுத்தி, உங்களிடத்தில் ஒவ்வொரு குணத்தையும் ஏற்றுக்கொண்டு, எல்லாப் பாத்திரங்களையும் ஏற்று நடிக்க ஆரம்பித்திருக்கிறீர்கள். இப்போது வெவ்வேறு வகையான ஒவ்வொரு விஷயமும் உங்களிடம் வேருன்றியிருக்கின்றன. ஒவ்வொரு நிறமும் (தனி குணமும்) உங்களிடம் பலவிதமாகச் செயல்படுகின்றன. ஒவ்வொரு செயலும் அதன் தனியான ஒரு போக்கை அமைத்துக் கொள்கின்றன. எனவே, ஒவ்வொரு பாதையும் தானே உருவாகின்றன. இந்தப் பாதையில் செடிகள் முளைக்க ஆரம்பிக்கின்றன, புல்லும், பூண்டும் கூட வளர ஆரம்பிக்கின்றன. வசந்த காலமும் இலையுதிர் காலமும் தோன்றுகின்றன. எத்தனையோ விதவிதமான பல்வகை உயிர்கள் தோன்றுகின்றன. ஆனால், இந்த வளர்ச்சிகள் அனைத்துக்கும் காரணமாக இருக்கும் சக்தி, அந்த ஒரே ஆற்றலின் (முழுமையான தூய்மையின்) கீழே அடுத்த நிலையில் இருந்ததும், ஆரம்பத்தில் உங்களால் அமைக்கப்பட்ட அந்த துவக்க விசை தான். நம்மிடையே இருந்து ஏதோ ஒரு சக்தி இன்றியமையாத தேவையை அளிப்பதற்காக ஏற்பாடு செய்திருக்கிறது என்ற வெளிப்படையான உண்மையை நீங்கள் அறிந்திருக்கும் போதுதான், இந்தக் காரியங்கள் யாவும் நிகழத் தொடங்கின. இப்போது பல்வேறு தலைப்புக்களின்கீழ் நிகழும் காரியங்கள் அனைத்தையும், ஏதாவது ஒரு கருவியின் பிடியில் வைத்திருக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது. இப்போது அதை இறுக்கிப் பிடித்து வைக்கும் கருவியைத் தேடும் கவலை வருகிறது. அந்தக் கவலை யாருக்கு வருகிறது? உங்களுக்கு இடையே அவர் (அது) இருந்தாலும், அச்சமயத்தில் பலவித வடிவங்களாக இருக்கிறார். (இருக்கிறது)! இந்தவிஷயங்கள் தொடர்ந்து நடந்தால், இந்தக் கேளிக்கை மற்றும் விளையாட்டுக்களின் இன்னொரு வடிவம் அழுகையாக இருக்க முடியும் என்ற எண்ணம் இப்போது வந்தது. ஆகவே, சகோதரா, இந்த விஷயம் நிகழ்ந்தபோது முரண்பாடான வடிவங்கள் (வகைகள்) தோன்ற ஆரம்பித்தன: கேளிக்கையுடன் சேர்ந்து அழுகை வந்தது. ஆக இவ்விரண்டும் நிகழத் துவங்கின! ஒவ்வொன்றிலும் இப்படி இரண்டு நிறங்கள் (தன்மைகள்) கலந்ததன் பயனாக மூன்றாவதாக ஒரு நிறம் உற்பத்தி செய்யப்படுவது தொடங்கியது. இவையனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு சிறிய மண்மேடு வடிவம் பெற்றது; இம்மாதிரி எத்தனை மண்மேடுகள் உருவாக்கப்பட்டன என்று கடவுளுக்கு மட்டுமே தெரியும். (இந்த உலகில் இம்மாதிரி எத்தனை சிறு குன்றுகள் உருவாக்கப்பட்டனவோ, கடவுளுக்குத்

தான் தெரியும்.) இம்மாதிரி சிறு குன்றுகள் இன்னும் எத்தனை வரும் என்று யாருக்குத் தெரியும் என இதைக் கவனிப்பவர் வியப்படைகிறார்! ஒருக்கால் உலகம் முழுவதுமே இவற்றால் நிரப்பப்படலாம்! படிப்படியாக புல் செடிகள் போதுமான அளவு நீளமாக வளர்ந்தபிறகு அவற்றில் சில புல்லாகவும் வேறு சில இன்னொருவிதத்திலும் வளர்ந்தன. அவற்றில் சில கூரான முனைகளுடன், யாருடைய ஆடையாவது அதில் சிக்கினால் அது கிழிந்துவிடும் அளவுக்கு கூர்மையுடன் இருந்தன. யாருக்காவது அதனால் விரல் நீளத்துக்கு காயமும் ஏற்படும் விதத்தில் இருந்தன. இதனால் அந்த தோட்டக்காரன் கவலைப்பட்டான். இதேமாதிரி நிலை இருந்தால், அந்தக் கூர்மையான புல்செடிகளை வெட்டி எறியாவிட்டால், அங்கே வரும் ஒவ்வொருவருக்கும் அசௌகரியமாக இருக்கும் என்பதை அறிந்தான். இதனால் கோடரி, கத்தரி ஆகியவற்றைப் பயன்படுத்த ஆரம்பித்தான். இவ்வாறாக தொல்லைக்குக் காரணமாக இருந்த அந்தத் தோட்டத்தில் வளர்ந்துவிட்ட முள் புதர்கள் வெட்டி எறியப்பட்டன. ஆயினும் அவை மீண்டும் வளர்ந்தன. ஆகவே இப்போது அவற்றை வேருடன் தோண்டி எடுத்துவிட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. எனவே தோட்டக்காரன் அந்த வேண்டாத புல்செடிகளை நன்றாக வேருடன் தோண்டி எடுத்தான். அவற்றை நீக்கி அந்த இடத்தை சுத்தம் செய்தான். ஆயினும் மழை பெய்தவுடன், அந்த மண்ணில், அந்தப் புதர்களின் வேர்களின் சிறு பகுதிகள் தங்கியிருந்ததால், மீண்டும் முன்பு இருந்தது போலவே அவை பெருகி வளர்ந்துவிட்டன. ஏதோ ஒருவிதத்தில் அதன் விதைகள், அங்கே மறைந்து இருந்தன என்பதைப் புரிந்துகொள்ளலாம். எனவே, பரிதாபமான அந்த தோட்டக்காரன், எல்லாவற்றையும் சிரமப்பட்டு சுத்தம் செய்து, தேவையற்ற புதர்களை வெட்டியெறிந்து, நிலத்தை சமமாக்கி வைத்தாலும், மீண்டும் புதிதாக செடிகள் முளைத்தபோது முள்செடிகளும் கூடவே வளர்ந்தன. இந்தவிதமாகவே உங்களால் உருவாக்கப்பட்ட பல குணங்கள் மற்றும் பொருட்களால், கேளிக்கை மற்றும் விளையாட்டுக்களால், உருவாகிய சிறு குன்றுகள் விதைவடிவில் உங்களுக்குள் ஆழமாகப் பதிந்துள்ளன. எனவே, அவை வளர்வது தடுக்கமுடியாத விஷயம். உங்களைப் படைத்த மிக மேலானவர் உங்களுக்கு அளித்த ஆகாய அளவு ஆச்சரியத்தின் (வியப்பின், அதிசயத்தின்) வெற்றிடத்திற்குள் உங்களால் அவற்றின் வேர்கள் ஊடுருவிவிட்டன. அவற்றின் ஊடுருவலில் உங்களுடைய ஊடுருவலை நாடியிருக்கத் துவங்கினீர்கள். அங்கேயும் கூட உங்கள் தானியக் கலவைகளை நீங்களே அமைத்தீர்கள். தூய்மையான பொருளுக்குள் கூட்டுச் சேர்ந்த அணுக்களை

(மூலகங்களை) நீங்கள் அறிமுகப்படுத்தினீர்கள். அவை அந்தத் தூய்மையான ஒன்றினை நெருங்கிச் செல்ல ஆரம்பித்தன. இப்போது சொல்லுங்கள். இதை உருவாக்கியவர் அவற்றை வெட்டி எறியாமல் இருந்தால், இந்த வளர்ச்சி (புதர்களின் காடுபோன்ற வளர்ச்சி) அங்கு செல்லும் அனைவரின் உடலிலும் ரத்தம் கசியும் காயங்களை ஏற்படுத்தி விடும் அல்லவா? இதை கவனித்து அறிகிறவரின் பார்வை, இந்த விதமாக இந்த எல்லைவரையில் சென்றிருக்கிறது. எனவே, அதை உருவாக்கியவர் – அனைத்தையும் படைத்தவர் – தூய்மை, தூய்மையைத்தான் கொடுக்கும்; ஒரு ஓநாய், ஓநாய்க் குட்டியைத்தான் பிறப்பிக்க முடியும், சிங்கக்குட்டியை பிறப்பிக்க முடியாது என்ற அதே கோட்பாட்டுக்கு ஏற்றபடி, இந்தப் புதர்களை வெட்டியெறிய ஆரம்பித்தார். அவர் தன் எஜமானரின் ஒரு வேலைக்காரனாக இந்த வேலையைச் செய்யத் துவங்கினார். இப்போது அந்த எஜமானரின் கோடரி வேலை செய்கிறது. அதன் பயனாக வேண்டாத புல், புதர்களின் வேர்கள் தங்களை அசைத்துவிடும் அதிர்ச்சிகளைப் பெறுகின்றன. அதாவது கோடரி உங்களுக்குள் வேரூன்றியிருக்கும் அந்த சிறு குன்றுகளை வெட்டுகிறது. எஜமானரின் கோடரி மூலமாக அவருடைய சக்தி வேலை செய்யும்போது – அதாவது அவருடைய எண்ணத்தின் மூலமாக, இவற்றை நீக்கும் சக்தி வேலை செய்யும்போது, அந்தக் கோடரியின் இயக்கம் அந்த மரத்தை மண்ணிலிருந்து வெட்டியெடுக்கிறது. அதாவது, எண்ணத்தின் அதிர்வு உங்களிடம் உங்கள் உடம்பில் தனது பாதிப்பை உண்டாக்கியிருக்கும் நோய்கள் என்ற வடிவத்தில் இருக்கும் விளைவுகளில் ஒரு இடையூற்றினை உண்டாக்குகிறது. இவ்விதமாக இப்போது கேளிக்கைகளை, தேவையற்ற விளையாட்டுக்களை உருவாக்குகிறவர்கள், அதில் எல்லைமீறிப் போய்விட்டால் தண்டனையும் அடைவார்கள் என்ற விதியின்படி, தேவையற்றதை வெட்டிக் களைந்து எறியும் வழியை உடைய பாதையை உருவாக்கியிருக்கிறீர்கள். இப்போது படைத்தவரின் சக்திதான் வேலை செய்கிறது. உங்களுக்கு வேண்டியதை அது கொடுத்துள்ளது. இந்தச் செயலில் இருந்து தப்பியோட முடியாத ஒரு தீர்மானமான முடிவு அதில் உள்ளது. விரும்பத்தகாத ஒவ்வொரு வேலைக்கும், அதை வெட்டிக் களைந்து எறிவதற்கு கூரான முனையுடன் கோடாரி தயாராக இருக்கிறது. இந்த நிலையில் அனைத்தும் அழிவுக்கு உட்பட்டவையாகவே இருக்கின்றன என்னும் அளவுக்கு அவை அவ்வளவு கூர்மையாகவும் வெட்டும் அளவுக்கும் வளர்ச்சியடையவில்லை. அதாவது நிலைமை அவ்வளவு கைமீறிப் போய் விடவில்லை – என்ற கருத்தையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். முள் போன்ற கூரிமுனைகளுடைய புல்,

புதர்களின் தேவையற்ற வளர்ச்சியை வெட்டி எறிவதற்காக மேலேயிருந்து கோடரி விழுகிறது என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம்; இதனால் பயம் உண்டாகிறது! இப்படி அச்சம் தோன்றிவிட்டதால், அதற்கான ஏற்பாடுகளை செய்துகொண்டு, மக்கள் அதைத் தடுக்க முயற்சி செய்கிறார்கள். யாரோ ஒருவர், தவறு செய்வதில் வெட்கமில்லாமையை ஏற்றுக்கொண்ட, சாதாரண கேளிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்கு மறுக்கிறார். அம்மாதிரி மனிதர்கள் இந்த ஆசைகளை நெஞ்சில் சுமக்கிறார்கள். ஆயினும், சகோதரா, அந்தக் கோடரி வந்து வெட்டுவதும், களை எடுப்பதும், உன்னுடைய வேலை தொடர்வதும் ஒருபோதும் முடியவில்லை. அவர்கள் தங்கள் சுகபோகங்களை நிறுத்தவில்லை. கோடரியின் கூரான முனை தங்கள் மீது விழுவதை தடுத்துக் கொள்ளவும் இல்லை. இவ்விதமாக தீமைகளை நெஞ்சில் சுமந்தபடி அவர்கள் போய்விட்டார்கள். மறுபடியும் வந்தபோது தங்களிடம் அந்தப் பழைய நெருப்பை இன்னும் அதிகமாக அவர்கள் உருவாக்கிக் கொண்டார்கள். இப்படி எத்தனை எத்தனை பேர்கள். ஆயிரக்கணக்கில் அல்ல, லட்சக்கணக்கான விதங்களில் தங்கள் சொந்த தினுசுகளில் வடிவங்களை உருவாக்கியிருக்கிறார்களோ, யாருக்குத் தெரியும்?

### சுவாமி விவேகானந்தா:

''ராம் சந்த்தர், இங்கே பார்! இந்த விஷயங்கள் விளக்கங்களுக்கு அப்பாற்பட்டவை. ஒருவர் அந்த இடத்துக்குச் சென்றாலன்றி இதைப் புரிந்து கொள்ள முடியாது. அம்மாதிரி ஒரு மனிதரைக் காண்பது மிகவும் அரிது. அதிர்வுகளைப் படித்து அறியக்கூடிய திறமை ஒருவருக்கு இருந்தால் மட்டுமே, அவர் இதைப் புரிந்துகொள்ள முடியும். யாராவது அதைப் படிக்க முடிந்தாலும், அது அவருடைய நினைவிலிருந்து நழுவி மறைந்துவிடும். அவர்கள் ஒரு மௌனத்தையும் படிப்பார்கள் மற்றவர்கள் அதை மறந்துவிடுவார்கள். அதன் உணர்வை, அர்த்தத்தை அவர்கள் கிரகித்துக் கொள்ள முடியாது. அவர்கள் அதை மறுக்கவும் முடியாது. ஏனெனில் அது மிஷனின் தலைவரிடமிருந்து வருகிறது. இம்மாதிரி விஷயங்களை விரிவாக்க முடியாது. இவை எப்போதும் சுருக்கப்பட்ட வடிவிலேயே இருக்கும். வணக்கத்திற்குரிய உன் மாஸ்டர் விளக்கிச் சொன்னதுபோல வேறு யாரும் சொல்ல முடியாது என்று நான் துணிவோடு சொல்வேன். அதை மேலும் விரிவாக்க யாராவது முயற்சி செய்தால், அது சந்தேகத்துக்கு உரியதாகவும், புரிந்து கொள்ள முடியாததாகவும் மாறிவிடும். அங்கே அறிவு தோல்வியடைகிறது! அதிர்வுகளை எப்போதுமே வார்த்தைகளால் பொருள்

கூறிவிட முடியாது. அதனால்தான் எத்தனையோ விஷயங்கள் காணாமற்போய் விட்டன. எப்போதும் வேலைக்காக சக்தியுடன் இணைப்பைப் பெறுவது நீதான்; இயற்கை எதுவும் செய்வதில்லை! உனக்கான விதிமுறைகளை நீயே உருவாக்குகிறாய். ஆனால் நீ கடவுளின் வேலைக்காரனாக இருப்பதால் அனைத்தையும் அவருக்கு அர்ப்பணித்து விடுகிறாய். சாத்தியமான எந்தவிதத்திலும் மாஸ்டரை நினைத்திருப்பது நம்முடைய கடமையும் ஆகும். ஆயினும் தத்துவஞானம் சார்ந்த மனத்துக்கு அதுவே ஒரு தடையாக இருக்கிறது. இந்த விஷயங்கள் அனைத்திலிருந்தும் தன்னை விடுவித்துக்கொண்ட ஒருவர்தான் இம்மாதிரி விஷயத்தை எழுத முடியும். உன்னை எப்போது விடுவித்துக்கொள்ள முடியும்? ஒரு மனிதன் சென்றடையக் கூடிய பரிபூரணத்துவநிலையில், எங்கே கடவுளையும் உங்களையும் வேறுபடுத்திச் சொல்ல முடியாதோ, அந்தநிலையில்தான் அது முடியும். அம்மாதிரி விஷயம் நடப்பது மிக அபூர்வம்!''

### 21-11-1948 இரவு மணி 7.15

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் H3 - க்குக் கூறியது:

''ராம் சந்த்தரின் கடிதங்களை நீ பார்த்திருப்பாய். அவற்றின் பொருள் சுலபமானது என்று நினைக்கிறாயா? அதன் ஒவ்வொரு வாக்கியமும் விரிவான விளக்கவுரை கூறப்படவேண்டிய தேவை உடையவை. பரவாயில்லை. அதன் சுலபமான அர்த்தத்தையே எடுத்துக்கொள். அதன் பிறகு அதில் கவனம் செலுத்து. சுலபமான விஷயத்தைத்தான் நானும் விளக்கமாக எடுத்துக்கொள்கிறேன். சமீபத்தில் நவம்பர் 18 ஆம் தேதி C2 - க்கு அவர் (ராம் சந்த்தர்) எழுதிய கடிதத்தில், 'உங்கள் முன்னே காணப்படும் எனது நிலை எதுவாயினும் அது என்னை நேசித்தவராகிய வணக்கத்திற்குரிய அந்த பெரியவரின் நிலையினால் உண்டாக்கப்பட்ட அதிசயமே ஆகும்,' என்று எழுதினார். இது நேசமிகுந்த தன்மையின் நறுமணத்தை வெளிப்படுத்தவில்லையா? மற்றவரை தன்னை, நேசிப்பவராக நினைப்பதன் பின்னே எவ்வளவு தாய்மையான குணாதிசயம் மறைந்திருக்கிறது! மேலும், இந்த உணர்வின் வெளிப்பாடு பற்றி வர்ணிப்பதற்கு பக்கம் பக்கமாக நிறைய எழுத வேண்டியிருக்கும்; எல்லாம் வல்லதாகிய இயற்கை தனது பணியாளனிடத்தில் எந்தவிதத்தில் அலை அலையாக எழுகிறது என்பதை மிக நுட்பமாகக் குறிப்பிடும் விதத்தில் இந்த வாக்கியம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஜாலவித்தை நிபுணர் ஒரு அற்புதத்தை ஒரு விந்தையான வித்தையைச் செய்து காட்டும்போது அவர் மட்டுமே அதில் வேலை செய்கிறார். அவரால்

உருவாக்கப்பட்ட தந்திரவித்தை அவருடைய புத்திசாலித்தனத்தின் விரிவை உள்ளடக்கியிருக்கிறது. அது அவருடைய அறிவின், அவருடைய எண்ணங்களின் சக்தியின் விளைவாகும். அது முழுவதும் அவரே சிந்தித்து திட்டமிட்டது. அவருடைய அறிவின் விளக்கத்துக்கு சான்று அளிக்காத எந்த விஷயம் அதில் இருக்கிறது, சொல்லுங்கள். இப்போது அற்புதம் என்பது ஏதாவது ஒரு ஜாலவித்தையின் வடிவில் இருக்கமுடியும். ஆனால் இங்கே அவரது நிலையின் அற்புதம் என்று வேறு ஒன்றை அவர் குறிப்பிட்டிருக்கிறார். அந்த நிலை போதுமான அளவுக்கு நான் வளர்ச்சி அடைந்ததற்குப் பிறகு வந்ததாகத்தான் இருக்க முடியும். அந்த நிலையின் அற்புதம் என்பது அதே விஷயம் மிகத் தூய்மையான, புனிதமான நிலையில் பரவுகிற தன்மையாகத்தான் இருக்க முடியும். இந்த ஒரு தன்மை ஏற்பட்டால் அப்போது பணியாளன், பக்தன் என்ற நிலையும், அதற்கு உரியதான பரிசும் கூட அடையப்படுகிறது. யாருடைய பிரதிபலிப்பு அவர்மீது விழுகிறதோ அந்த அளவுக்கு அந்த பக்தரிடம் சத்தியநிலை தகுந்தபடி வளர்ச்சி அடைந்திருக்கிறது. அது உண்மை. ஆயினும் அம்மனிதர் (பக்தர்) கடைசி உச்சநிலையை எட்டிவிட்டாலும் கூட, தன் எஜமானரிடமிருந்து விடை பெற்றுப் பிரிந்து போய்விடக்கூடாது என்கிற இந்தப் பண்பை நினைவில் வைத்திருக்கவேண்டும். இந்தப் பண்புதான், பணியாளன் வழிபடுகிற பக்தன் என்ற தன்மையை உருவாக்குகிறது. இன்னும் எத்தனை தூரம் முன்னேறினாலும் இந்தப் பண்பு அப்படியே நீடிக்கிறது. இந்தக் கடிதம் முழுவதும் தூய்மையான குணாதிசயம் நிறைந்திருக்கிறது. 'கடவுளிடம் மஜ்னுவுக்கு (அரேபிய நாட்டின் பிரபலமான காதல் கதையாகிய லைலா மஜ்னுவில், லைலாவின் காதலன்) என்ன வேலை?' என்ற வாக்கியம் ராம் சந்த்தரின் துணிவான பார்வைக்கு ஒரு சான்றாக இருக்கிறது!''

### 13-1-1949

**மீராபாய்** *(பக்தமீரா என்று புகழ்பெற்று விளங்கிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் பக்தையாக, பல நூறு பாடல்களால் கண்ணனைப் பாடிப் போற்றிய, ராஜஸ்தானத்தின் மேவார் ராஜகுமாரி. ராதைக்கு அடுத்தபடியாகக் கருதி வணங்கப்படுகிறவர்.):*

''அன்புள்ள சகோதரா, போதுமான அளவு உங்களால் குருவை நேசிக்க முடியவில்லை என்று அடிக்கடி மனக்குறை அடைகிறீர்கள்! எந்த ஒரு சிறு வேற்றுமையும் இல்லாமல் உங்கள் குருவுடன் பூரணமாக ஒன்றியிருக்கும் நிலையை எய்தியிருக்கும் இதையன்றி அன்பு அல்லது பக்தி என்பது வேறு என்ன?''

16-1-1949

## 16-1-1949 தேதியிட்டு K7 - க்கு ராம்சந்த்தர் எழுதிய கடிதம்:

''அன்புமகள் K7 - க்கு மங்கலம் நிறைந்த நல்லாசிகள். ஆன்மீக முன்னேற்றத்தைக் குறிப்பிடுகின்ற நீ எழுதியுள்ளது போன்ற சிறப்பான கடிதங்களைப் பெறும்போது நான் மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக கடவுளுக்கு நன்றி! என்னைப்பற்றி தகவல் அறிவதற்கோ அல்லது அது பற்றி விசாரிப்பதற்கோ யாருமில்லை! என்ன இருந்தாலும் எந்தச் செல்வ வளமும் உடையவனாகத் தோன்றாதவனாக நான் இருக்கும்போது யார் தான் என்னைப் பற்றி விசாரிக்கப்போகிறார்கள்? மக்கள் என்னிடம் வந்து ஆன்மீகப் பயிற்சியைக் கற்றுக்கொள்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் வெகுசிலரே! ஒன்றிரண்டு பேர் ஏழையாகிய என்னை கடிதங்கள் மூலமாகவும் தொடர்பு கொள்கிறார்கள்! என்னை நோக்கி மக்களைக் கவர்ந்து இழுப்பதற்கு வறுமையைத் தவிர வேறு எதுவும் என்னிடம் இல்லை. யாத்திரை செல்லுவதற்கான வாய்ப்பை என்னிடம் நான் வைத்துக்கொள்ளவே இல்லை. ஏனென்றால் இப்போது நான் எந்தப் பயணமும் மேற்கொள்ள வேண்டியவனாக இல்லை. இப்போது நான் யாரிடமாவது தன் சொந்த வீட்டுக்கு புனிதயாத்திரை புறப்படுமாறு சொன்னால், போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தவுடன், அதுவரையில் இருந்த சலுகையை அவர் அல்லது அவள் இழந்து விடுவாள் என்பதால், பயணம் செய்யாதிருப்பதையே விரும்புவதாகக் கூறும் உரிமை அவனுக்கு அல்லது அவளுக்கு இருக்கிறது அல்லவா? எப்படி இருந்தாலும், எல்லா சலுகைகளையும் இழந்திருக்கும்போது, இப்போது என்னிடம் மீதி என்ன இருக்கிறது? புனித யாத்திரையின் பலன் இதுதானா? என்னுடன் உரையாடுதல் மற்றும் என் தொடர்பினால், இதை மக்கள் தெரிந்து கொள்ளும்போது அவர்கள் பெரும்பாலும் ஆர்வம் இழந்து விடுகிறார்கள். அப்படி ஒருவர் இங்கே ஷாஜஹான்பூரிலேயே இருக்கிறார் (V1) ! எனவே, அன்பு மகளே, உங்கள் அனைவருக்கும் கொடுக்கமுடிகிறவாறு இப்போது என்னிடம் என்ன இருக்கிறது? எதை நான் இழந்து விட்டேனோ அதை நான் திரும்பிப்பெற முயற்சி செய்தால், அதுவும் கூட சாத்தியமில்லை. ஏனென்றால் இந்தப் பயணத்திற்கு அதைத்தான் விலையாகக் கொடுத்தேன். இப்போது என்னிடம் மீதியிருக்குமாறு விடப்பட்டிருப்பது என்ன? ஒன்றுமில்லை; வெறும் ஒருவர் அல்லது இருவர் தவிர கஷ்டமில்லாமல் இதைப் பங்கிட்டுக் கொள்வதற்குத் தயாராக இருப்பவர் மிகவும் அபூர்வமே. எனவே, இது உனக்கு சம்மதமாக இருக்கிறதா? அன்பு, பாசம் அல்லது

பக்தி என்று நீ அடைய விரும்புவதை நான் உனக்குக் கொடுக்கலாம் என்றால், அதுவும் கூட என்னைவிட்டுப் போய்விட்டது. இதை அருள் செய்யும்படி இரண்டு கைகளையும் நீட்டி, நீயும் நானும் சேர்ந்து கடவுளிடம் பிரார்த்தனை செய்வது சாத்தியம்தான். அதில் சந்தேகமில்லை! என்றும், தனக்கு சொந்தமான அனைத்தையும் அவருக்கு (கடவுள் அல்லது மாஸ்டருக்கு) சரணாகதி அளித்துவிட்ட இந்த ஏழை, அவருக்கு அந்த அன்பை அளித்தால், அதைக்கூட தக்கவைத்துக் கொள்வாரா? என்று நம்ப முடியாது என்று கடவுள் சொல்லிவிடக்கூடிய சாத்தியம் இருக்கிறது. கடவுள் தன் அன்பை உனக்குக் கொடுக்கலாம். ஆனால், எனக்கு அவர் அதைக் கொடுப்பாரா? இல்லையா? என்று நான் சந்தேகமடைகிறேன். ஏனெனில் நான் அவர் முன்னே முழுமையாக என்னை வெளிப்படுத்தியவனாக இருக்கிறேன். உன் கடிதத்தில் நீ எழுதியிருக்கும் நிலை எதுவாயினும், அது நீயும் கூட என்னைப்போல தற்செயலாக இந்தப் புனித யாத்திரையின் விலையைக் கொடுக்கவில்லை மற்றும் அனைத்து சாதனங்களையும், உடைகளையும் இழந்து விட்ட ஏழையாக இருக்க வந்திருக்கிறாய் என்ற சிந்தனை தோன்றுகிறது. உன் நலம் விரும்பும் – ராம் சந்த்தர்."

### சுவாமி விவேகானந்தா:

''இந்தச் சமயத்தில் நான் உயிர் வாழ்ந்துகொண்டிருந்தால் ஆன்மீகத்தில் உனக்கு முனைவர்பட்டம் அளித்திருப்பேன். பக்தி என்ற கருத்தை எவ்வளவு அழகாக நீ தெரிவித்திருக்கிறாய்! யாரால் இதை மதிப்பிட முடியும்? அதற்கான நேரம் இனிமேல் தான் வரவேண்டும். நான் இவ்வுலகில் நீண்டகாலம் வாழ்ந்திருந்தேன். ஆனால் உன்னைப்போல ஒரு மனிதரை நான் கண்டதில்லை. அதனால்தான் எனக்கு ஒரு பிரதிநிதி இல்லலமற்போனது. நீண்ட காலத்திற்குப் பிறகு உன்னிடத்தில் நான் அதைக் கண்டேன். என்னைப்போல நீ கல்வி கற்றவனாக இருந்திருந்தால், என்னைப்போலவே இவ்வுலகை உன் கைகளில் எடுத்துக் கொண்டிருப்பாய். பரவாயில்லை. இப்போது உனக்கு ஆன்மீகத்தில் முனைவர் பட்டத்தை நான் அளிக்கிறேன்! நண்பர்களே, எவ்வளவு ஒரு சிரமமான விஷயத்தை எவ்வளவு விளையாட்டாக அவர் எழுதுகிறார் என்று பாருங்கள். அதன் ஒவ்வொரு கருத்துக்கும் விரிவுரை தேவைப்படுகிறது. ராம் சந்த்தரை உணர்ந்து கொள்வதற்கு உங்கள் அனைவருக்கும் இதுவே சரியான நேரம் அல்லவா? இவ்வளவு அழகாக அமைக்கப்பட்டுள்ள இந்த வாக்கியங்களைப் பார்த்து இவ்வுலகம் சிரிக்கலாம். இகழ்ச்சியாகக் கூட பேசலாம். ஏனெனில் இதைப் புரிந்து

கொள்ளும் அளவுக்கு அவர்களுக்கு மூளை இல்லை! C2, பக்தர்களின் குடும்பத்தில் இம்மாதிரி ஒருவரை நீ பார்த்திருக்கிறாயா? இம்மாதிரி ஒரு தனிப்பட்ட விசேஷமுடைய குணாதிசயம் வேறு எங்கும் காணமுடியாது என்று நான் துணிவோடு சொல்கிறேன். வணக்கத்திற்குரிய உன்னுடைய மாஸ்டர் அவரை சீடனாகப் பெற்றதற்காக மிகவும் மகிழ்ச்சி அடைந்திருந்தார். நாங்கள் இம்மாதிரி ஒருவரைக் கண்டு மிதமிஞ்சிய ஆனந்தம் பெறுகிறோம். விரைவிலோ அல்லது தாமதமாகவோ அவர் இந்த உலகம் மற்றும் மனிதகுலத்தின் வடிவத்தையே மாற்றியமைப்பார். அதற்கான நேரம் வருவதாக. தனது கட்டிலில் உட்கார்ந்திருக்கும் ஒரு எலும்புக்கூடு போன்ற மனிதர், எப்போதும் எதுவும் செய்யாமலே சுறுசுறுப்பாக இருக்கிறார். அது என்ன? உங்களுக்கு C2 - ஐத் தெரியும். இதுபற்றி அவரைக்கேட்டு, அவர் என்ன பதில் சொல்கிறார் என்று பாருங்கள். அது நீங்கள் அனைவரும் விடை காணவேண்டிய மர்மம். எல்லோரும் இதற்கு விடை சொல்ல முயற்சி செய்யட்டும். அவரை ஒரு சோம்பல் மிகுந்த ஆசாமி என்று சொல்லாதீர்கள். வேறு ஏதாவது வேலை சம்பந்தமாக அவர் சோம்பேறியாக இருக்கலாம். ஆனால் வேறு விதத்தில் அவர் வாழ்க்கையின் மிக மிக சுறுசுறுப்பான பகுதியைக் கடந்து கொண்டிருக்கிறார். இந்த ஒரு காலம் ஆயிரம் வருடங்களுக்கு மீண்டும் வராது என்று மீண்டும் மீண்டும் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இப்படி ஒரு மகா புருஷரை இனி ஒருபோதும் நீங்கள் காணமுடியாது. இப்படி ஒரு சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால், அது உங்கள் மிகப்பெரிய மூடத்தனமாக இருக்கும். எதற்காக ஒரு மகாபுருஷர் உருவாக்கப்படுகிறார் என்பதைச் சிறிதளவு புரிந்து கொண்டால் மக்கள் வியந்து மலைத்து நிற்பார்கள்! ஒருபக்கம் அழிவுப்பணி, இன்னொரு பக்கம் ஆக்கப் பணி ஆக இவ்விரண்டுக்காகவும் அவர் உருவாக்கப்படுகிறார். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இந்த உடலைவிட்டு நீங்கிச் செல்லும்போது உன் சிறப்பு பற்றி அறிந்திருந்தார். ஒரு முக்கியமான நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நீ வந்திருக்கிறாய்; உன் முன்னே இருக்கும் ஒரே வேலை அதுதான்! பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் காலத்தில் நீ மனித உருவில் இருந்தாயா? அதற்கு வெகுகாலத்திற்கு முன்பு நீ மனித உருவில் வாழ்ந்திருந்தாய்; ஆனால் கிருஷ்ணர் வாழ்ந்த காலத்தில் நீ இல்லை. பதஞ்சலி முனிவர் மரணமடைந்தார் ஆனால் அவரால் ஒளியுலகில் தனக்கு இடம் பிடிக்க முடியவில்லை. இப்போதுதான் அவருடைய முக்திக்கான காலம் வந்திருக்கிறது மற்ற விஷயங்கள் ஏற்கெனவே என் குறிப்புக்களில் இடம் பெற்றுள்ளன. உன் கடந்த காலம் முழுவதிலும் நீ கடவுளைத் தேடுகிறவனாகவே இருந்தாய். இம்மாதிரி ஒரு

குறிப்பை குப்பைக்கூடையில் எறிந்துவிடக்கூடாது. எல்லோரும் இதில் ஒரு பிரதியை – அதாவது அவருக்கு உன்மீது நம்பிக்கை இருக்குமானால் – தன்னிடம் வைத்திருக்கவேண்டும். காலம் போய்க்கொண்டே இருக்கிறது என்ற இதே வார்த்தைகளை நான் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஆனால், நண்பர்களே, நீங்கள் எதுவும் செய்யாமல் இருக்கிறீர்கள். நீங்கள் எத்தனையோ ஆண்டுகள் தவம் செய்தாலும் அவர் எதைக் கீழே ஒழுக விடுகிறாரோ, அதைப்பெற முடியாது. உங்களுக்கு ஆன்மீக நிலைகளைக் கொடுப்பதற்கு அவர் எப்போதுமே அவசரப்படுகிறார். இம்மாதிரி உயர் தகுதி பெற்ற மகாபுருஷர் பொதுவாகச்செய்யும் வேலை அது!''

''பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்குப் பிறகு நீதான் ஒரு மகாபுருஷராக இருக்கிறாய் என்பதை யாருமே கற்பனை செய்ய முடியாது. இந்த ரகசியத்தை ஏற்கெனவே சில முனிவர்கள் மட்டும் அறிவார்கள். இந்தியாவின் சுயராஜ்யத்தை (சுதந்திரத்தை) பெறுவது காந்திஜியால் சாத்தியமாகி இருக்குமா? ஹிட்லர் (இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குக் காரணமான நாசி ஜெர்மனியின் சர்வதிகாரி) உலகைவிட்டுப் போனதின் ரகசியம் உங்களுக்கெல்லாம் தெரியுமா? அது தெரிந்தால் ஐரோப்பாவில் பேரழிவு உண்டாகும். அந்த விளைவைப் பார்க்கத் தயாராக இருங்கள்! இயற்கையின் நிறைய வேலைகளைச் செய்வதற்கு உன் மூளை பயன்படுத்திக் கொள்ளப்படுவதற்காக சலுகைகள் உனக்கு அளிக்கப்படுகின்றன. ஆனால் சில வேலைகளை உணர்வறிந்து நீயாகச் செய்ய வேண்டியிருக்கும். ஒருவிஷயம் நான் கேட்க வேண்டியிருக்கிறது. அதை பொதுவாக மக்களுக்குத் தெரிவிக்கக்கூடாது. இந்த வேலைக்குத் தேவைப்படுகிற சரியான சக்தி இல்லாமையால், இயற்கையின் ஆற்றல்கள் இந்த வேலையின் மந்தநிலை அடைந்துவிட்டன. அவற்றை மீண்டும் உண்மையான செயல்படும் நிலைக்குக்கொண்டு வருவதற்கு இவ்வுலகிலும், இதற்கு அப்பாலும் யாருக்குமே சக்தி இல்லை. அவற்றை சரியான பயன்பாட்டுக்குக் கொண்டு வந்து, இனிமேல் செய்யவேண்டிய வேலைக்குத் தயார் செய்வது உன் கடமை. இப்போது வேலை செய்து கொண்டிருக்கும் இயற்கையின் சக்திகள் பற்றி C2 - உனக்குச் சொல்ல முடியலாம்; அல்லது உன்னுடைய குறிப்புக்களில் அல்லது என் வழிகாட்டுதல்களின் மூலமாக, எங்காவது எழுதி வைக்கப்பட்டிருப்பதை நீயே கண்டறிய முடியும். சூரியன் பிரகாசிக்கிறது. ஆனால் அது தன் திறனை நாளுக்குநாள் இழந்து கொண்டிருக்கிறது என்பது சிலருக்குத் தான் தெரியும். சந்திரனுக்கும்

தன்மீது இதே விளைவுதான் இருக்கிறது! நீ எவ்வாறு வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டியிருக்கிறது என்பது ஒரு பெரிய விந்தை. உனக்கு அதில் சம்பந்தமில்லை. ஆனால், இயற்கைக்கு நீ எந்தவகையில் தேவைப்படுகிறாய் என்பதைப் பார்! நீ இயற்கையின் ஒரு கருவியாக இருக்கிறாய். வேறு எந்த ஒருவரின் கருவியாகவும் இல்லை. வேலையைச் செய், அதற்கான உத்தரவுகள் பின்தொடரும். லண்டன் உன் வேலைக்காகக் காத்திருக்கிறது. அதேபோல மற்ற நாடுகளும் இருக்கின்றன. இவையனைத்தும் என் குறிப்புக்களில் எழுதப்படும். உன்மீது நம்பிக்கை உடையவர்களுக்கு, இதன் தட்டச்சுப் பிரதிகளை கொடுக்கலாம். ஆனால் கடைசியில் உள்ள சில வரிகளை (வாக்கியங்களை) தெரிவிக்கக்கூடாது. இன்றைய தினத்துக்குப் போதுமான அளவு நான் சொல்லிவிட்டேன். தன்னுடைய சொந்த விளக்கை அணைத்துவிடுமாறு என் குரு இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆன்மீகத்திலிருந்து விலகிச் சென்றுவிட்ட, இப்போதைக்கு மீண்டும் ஆன்மீகத்துக்குத் திரும்ப முடியாத ஒரு சங்கத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதில் என்ன பயன்? இதே விதியை சந்தித்தாக வேண்டிய மற்ற ஸ்தாபனங்களும் உள்ளன. வணக்கத்திற்குரிய உன் மாஸ்டரே தன் ஆயுட்காலத்தில் தானே உருவாக்கிய சங்கத்தைக் கலைத்து விட்டார். சத்தியமான ஒன்று தொடர்ந்து நடைபெற வழிவிடுவதற்காக, உருவாக்கப்பட்ட வேறு அமைப்புக்கள் விலகிப்போகவேண்டும். இதுதான் இயற்கையின் நிர்வாகச் சட்டம். மாற்றம், மேலும் மாற்றம், முழுமையான சுத்திகரிப்பு மற்றும் முழுமையான பழுதுபார்த்தல், அழித்தல் மற்றும் தேவையற்ற அனைத்தையும் அழித்தல், உருவாக்குதல் மற்றும் அனைத்தையும் புதிதாக உருவாக்குதல் ஆகிய இதுதான் உன்வேலை. எலும்புகள், ரத்தம் மற்றும் சாம்பல் ஆகியவை கலக்கப்பட்டு நீ கட்டப்போகும் கட்டிடத்துக்கு சுண்ணாம்புக் கலவையாக இருக்க, அதைக்கொண்டு உன் கோயிலைக் கட்டு. தங்கள் குருமார்களால் இப்போது குறிப்பிட்ட வடிவமைப்பில் உருவாக்கப்படுகின்ற சன்னியாசிகள் எனக்குத் தேவையில்லை. அவர்களுடைய குருமார்களும் எனக்கு வேண்டாம். அவர்களை இந்தப் பூமியிலிருந்தே நீக்கிவிடவேண்டும். இயற்கை உனக்கு அளித்திருக்கும் விசேஷமான சங்கல்பத்தைப் பயன்படுத்தி வேலையை முடித்துவிடு. உன்னுடைய சகாக்களில் உனக்கு உதவிசெய்யக்கூடிய விதத்தில் யாருமே பிரகாசமாக இல்லை. மக்கள் இன்னும் தூங்கிக்கொண்டு இருக்கிறார்கள். உன்னுடைய மதிப்பை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை.’’

## 1-2-1949 இரவு மணி 7.30

**சுவாமி விவேகானந்தா:**

''நண்பர்களே, இங்கே பாருங்கள்! வணக்கத்திற்குரிய நம் மாஸ்டர் சமர்த்த சத்குரு லாலாஜி சாகேப் அவர்களின் புனிதமான பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவதற்காக நாம் இங்கே ஒன்றுசேர்ந்து வந்திருக்கிறோம். நமது மிஷனில் இது மிகவும் முக்கியமான ஒரு விழா ஆகும். இந்த உலகம் உள்ளவரையில் எல்லாக் காலத்திலும் இது கொண்டாடப்படும். இது வருங்காலத் தலைமுறைகளுக்கான குறிப்பு.''

## 2-2-1949 இரவு மணி 8.30

**சுவாமி விவேகானந்தா:**

''தங்கள் தனிப்பட்ட மனங்களுக்குள் விளையாடிக்கொண்டும், துள்ளிக் குதித்துக்கொண்டும் இருக்கின்ற நவீன கால மகான்களையும், ஞானிகளையும், முழுமையாக நீ அழித்துவிடவேண்டும். தங்கள் தனிப்பட்ட மனங்களுடன் மட்டுமே, அதன் கொள்கைகளுடன் ஆழ்ந்த இணைப்பு உடையவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அந்த வேலை இன்றைய தினம் ஆரம்பிக்கப்படவேண்டும்! இப்போது உதயமாகிக்கொண்டிருக்கும் ஆன்மீக சகாப்தத்துக்கு அவர்கள் பெருந்தீமை செய்துகொண்டிருக்கிறார்கள். உன்னுடைய விவகாரங்களில் அவர்கள் குறுக்கிட்டுக் குழப்புகிறார்கள்! தேவைப்பட்டால், அவர்களை அழிவுநிலையில் வைத்துவிடு. மக்களுக்கு ஆன்மீக ஆர்வத்தை, அதில் அணுகும் தன்மையை வளர்ப்பதற்குப் பதிலாக, அதைக் கெடுக்கிறார்கள். தங்கள் பெயர்களுக்கு புகழைத் தேடி அவர்கள் அலைகிறார்கள். இப்போது சொந்தப்புகழ் தேடுபவர்கள், தங்களை விளம்பரப்படுத்துகிறவர்கள் தேவையில்லை! நீ ஒரு விரிவான களத்தை உன் பணிக்காகத் தயாரிக்க வேண்டும். இந்த உலகம் விடிவெள்ளி போலப் பிரகாசிக்கின்ற காலம் விரைவாக வந்துகொண்டிருக்கிறது. இந்த உலகிற்கு புதிதாக ஒரு அடித்தளத்தை நீ அமைப்பாய். அவர் உயர்ந்தவரோ, தாழ்ந்தவரோ எந்த ஒரு மனிதராயினும் அவரை அழிவுநிலையில் வைப்பதற்கு நீ விரும்பினால் அதற்கு என்னைக் கேட்கவேண்டியதில்லை. உன் வழிகள், செயல்கள் என்ன என்பது உனக்குத் தெரியும். அதற்குத் தகுந்தவாறு நீ செய். இந்த விஷயத்தில் எப்போதாவது, ஏதாவது தவறு செய்து விடுவாயோ என்ற அச்சத்தை உன் மனத்திலிருந்து நிரந்தரமாக நீக்கிவிடு. அவைகளை நாய்களுக்கு விட்டுவிடு. உன்னைப்போன்ற மகாபுருஷர் தவறுகள் செய்ய முடியாது. ஏனென்றால் அந்த நோக்கத்திற்காகவே (இயற்கையின் பணியைச் செய்வதற்காகவே நீ

வந்திருக்கிறாய்; அதற்குத் தகுந்தவிதமாகவே நீ உருவாக்கப்பட்டிருக்கிறாய். நீ யாரைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறாயோ அந்த மனிதர் உன் சங்கத்தில் இருப்பதற்குத் தகுதியற்றவர். அந்த மாதிரி மனிதர் இங்கு இருப்பதை நான் விரும்பவில்லை. உன்னை என் மகனாகவும் K7 - ஐ என் மகளாகவும் பாதுகாக்க நான் விரும்புகிறேன். (K7 - ஐ தன் மகள்தான் என்று சொல்லி, C2 - சுவாமி விவேகானந்தாவிடம் அவளை, அவர் பொறுப்பில் ஒப்படைத்தார்.) அவளை மிஷன் பணிக்காக எடுத்துக்கொள். இன்றே வேலையை ஆரம்பித்துவிடும்படி அவளிடம் சொல். சீக்கிரம். சீக்கிரம்! அவளால் நன்றாக எழுதமுடியும் என்று நினைக்கிறேன். எனவே, முதலில் காகிதங்களில் அவள் எழுத்துக்கள் தோன்றட்டும்.''

## 5-2-1949 காலை மணி 9.00

### சுவாமி விவேகானந்தா:

''தென்னிந்தியாவில் M12 - செய்த வேலைக்குப் பரிசாக முன், பின் யோசிக்காமல் M12 - க்கு அவருளையை முக்திநிலைக்காக நேற்று இரவு வாக்குறுதி தந்துவிட்டாய். இம்மாதிரி வாக்குறுதி அறிவிப்புக்கள் இனிவருங்காலத்தில் செய்யப்படுவது கூடாது. நீ அதற்காக (அவருடைய முக்திக்காக) புனிதமான சத்திய உறுதிமொழி கொடுத்துவிட்டாய். அது மிக மிக அதிகம். நீ என்னவாக இருக்கிறாய் என்பதை நீ உணராமலிருக்கிறாய். இந்தப் பரிசு அவருக்காக (M12) ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இது விளையாட்டான விஷயமல்ல. உன்னுடைய பொறுப்பு உனக்குத் தெரியும். நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாயோ, அது நிறுத்தப்பட்ட நிலைக்கு வரும் என்பது உறுதி. தெய்வீக சங்கல்பம் அது! காலம் வரட்டும். உனது வெற்றியை நீ காண்பாய். இந்த மிஷனுக்கு உன்னுடைய சேவையும், இதற்காக நீ செய்த தியாகமும் தங்க எழுத்துக்களால் எழுதப்படும். வருங்காலத்தின் இந்த மிஷனின் தலைவிதியை அது வடிவமைத்து உருவாக்கும். எலும்புக்கூடு போன்ற உருவமுடைய ராம் சந்த்தருக்கு, குறையில்லாத துணிவு இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. எங்கள் உடைமைகள் அனைத்தையும் அவருக்கே நாங்கள் கொடுத்துவிட்டோம். எங்கெங்கும் அவர் ஆட்சி செய்கிறார். ஆனால் தன்னை ஒரு எளிய வேலைக்காரனாகவே அவர் நினைக்கிறார். இப்படி ஒரு புனிதமான இதயம் உடைய மனிதர் எல்லா இடங்களிலும், மிக உயர்வாக மதிக்கப்படவேண்டும். ஆனால், அவரை மக்கள் அலட்சியம் செய்கிறார்கள். அவருடைய சகோதர சகாக்கள் கூட

(அவருடைய குருவின் சீடர்களாக இவருடன் ஆன்மீக சகோதரர்களாக இருந்தவர்களும் கூட) அவரை கைவிட்டுவிட்டார்கள். கடவுளின் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு அவர் தன்னந்தனியாக இருப்பதாகத் தோன்றுகிறது. நிச்சயமாக வெற்றி உண்டாகும். இது உறுதி! தோழர்களாகிய நீங்கள், அவர் எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருப்பதில், அவருடைய விசேஷத் தன்மையைப் பார்க்கிறீர்கள். ஆனால் அதை அவர் செய்து கொண்டிருக்கிறார் என்னும் எண்ணம் அவர் மனதில் சிறிதளவும் இல்லை! இது சாதாரண விஷயமா? அவர் முழுமையாக தன்னை இல்லாமல் செய்து கொண்டுவிட்டார்! இந்த மாதிரி ஒரு குணாதிசயத்தை இப்போதும் கூட நீங்கள் எங்கேயும் காண முடியாது என்பதை மீண்டும் சொல்கிறேன். இவை என்னுடைய உண்மையான வார்த்தைகள். உங்களிடத்தில் நம்பிக்கையை உண்டாக்குவதற்கு இவையெல்லாம் போதாதா? அவர் எப்படிப்பட்டவர். எவ்வளவு உயர்வானவர் என்பது பற்றி உங்களிடம் எடுத்துச் சொல்ல கத்திக் கொண்டிருக்கிறோம்! சாதாரணமாக உங்களால் அடைய முடியாதபடி போய்விட்ட பிறகுதான் நீங்கள் தூக்கத்திலிருந்து எழுந்திருப்பீர்களா? ராம் சந்த்தரைப் போல் இப்படி ஒரு மகாபுருஷரை உருவாக்கியதாகப் பெருமைப்படுவதற்கு வணக்கத்திற்குரிய நமது மாஸ்டார் லாலாஜி சாகேப் தவிர கடந்த காலத்திலோ அல்லது நிகழ்காலத்திலோ வேறு யாராவது உண்டா? அதைச் செய்தது அவர் ஒரே ஒருவர்தான். இதைத் தைரியமாக தங்க எழுத்துக்களில் எழுதி வைக்கலாம். பொதுவாக மனிதர்கள் ஒரு தடுமாற்ற நிலையில் இருப்பதை நான் பார்க்கிறேன். அவர்கள் இன்னும் அதே தூக்கநிலையில்தான் இருக்கிறார்கள். காலத்தின் கோடரி அவர்களுக்குப் பாடம் கற்பிக்கும்! அதன் கூரிய முனை அவர்களை சரியாக்கும்! அவர்கள் அதை அறியாமலிருந்தாலும், அது அவர்களின் தலைக்கு மேல் இருக்கிறது! தங்கள் கூட்டத்தினராலேயே அவர்கள் விழுங்கப்படுகிறார்கள்! இயற்கையின் சங்கல்பம் கட்டாயம் செயல்படும். ஈட்டியின் முனையில் அவர்களின் விதி ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்!''

## 15-3-1949 (மணி இரவு 8.30)

**சுவாமி விவேகானந்தா:**

''உன்னுடைய வேலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்துக்குப் போவதிலிருந்து நீ தப்பிச்செல்ல முடியாது. இனிமேலும் தாமதிக்காமல் நீ வேலையை ஆரம்பித்துவிட வேண்டும் என்று எல்லோரும் நினைக்கிறார்கள். வேலை மிகவும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

கயாவுக்கும், வாரணாசிக்கும் (காசி அல்லது பனாரஸ்) மற்றும் நாடியாவுக்கும் உடனே போ. நாடியாவுக்கு உன்னால் போகமுடியாமல் போனால், பயணம் செய்யும் போது நீ எங்கு உட்கார்ந்திருக்கிறாயோ அங்கிருந்தே அதற்கான வேலையைச் செய்ய முடியும். நீ டெல்லியை அலட்சியம் செய்துவிட்டாய். ஆனால் நீ அங்கே நிச்சயம் போக வேண்டும். இச்சமயத்தில் பூரி - ஜகன்னாத் போகாமல் விட்டுவிடு. இந்தமுறை இரண்டு இடங்கள் மட்டும்தான் உனக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. சூரியனின் வெப்பம் இழக்கப்படுவது என்ற - இதுபோன்ற இயற்கையான நிகழ்வு பற்றி நீ பேசிக்கொண்டிருந்தாய். அது அதிகம் யோசிக்கவேண்டிய வேலையும் அல்ல; நீ கருதுவது போல அது அவ்வளவு சிரமமான வேலையும் அல்ல. முதலில் விஞ்ஞானிகள் அதில் முயற்சி செய்யட்டும். உன்னுடைய முறை கடைசியில் வரும்! இந்த உலகின் வருங்கால விதியை நீ வடிவமைக்க வேண்டும்! இவையனைத்தும் அழிவுப்பணியின் உனக்கு உதவுகின்றன. உன் வேலையை செய்து முடித்த பிறகு, இந்த விஷயங்களை சரி செய்துவிடு. ஆனால் அதற்கான நேரம் (இவையனைத்தும் அழிந்து போன) மயானத்திற்கு வரட்டும். அது தேவைப்படும்போது உன்னைக் கொண்டு நான் முயற்சி செய்வேன். இதுவரையில் நீ செய்து கொண்டிருந்ததுபோல அதற்கான களத்தைத் தயார் செய். அதன் பிறகு உன் கட்டளையின்படி செயல்படுவதற்காக இயற்கையின் பல்வேறு ஆற்றல்களின் கவனத்தை மொத்தமாக இழுத்துக்கொள். எனவே சூரியன் அல்லது சந்திரன் பற்றிய விஷயத்தில் அவசரம் ஒன்றுமில்லை. உலகியல் பொருட்கள் சார்ந்த விஞ்ஞானம், அதை முயற்சி செய்யட்டும்; அதன் பிறகு ஆன்மீகத்தை உணர்ந்துகொள்ளுதல் மற்றும் கடவுளின் பணிநடைபெறும். உன் காலத்துக்குப் பிறகு இவை அனைத்தும் அச்சிடப்பட வேண்டும். நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் சொல்கிறேன். இதற்காக உறுதிமொழி எடுத்துக்கொள்ளுங்கள். இந்த விஷயங்களை வேறு எங்கும் காணமுடியாது. இந்த மாதிரி ஒரு வேலை இதற்கு முன்பு ஒருபோதும் யாருக்கும் அளிக்கப்பட்டதில்லை. இதன் விசேஷ அம்சம் அதுவே. சூரியனையும், சந்திரனையும் சரியாக்குவது ஒரு நிமிட வேலை. நீ விரும்பினால் சூரியனைப் பற்றி நீ ஆராய்ச்சி செய்யலாம். அது உன் வேலையில் உனக்கு உதவியாக இருக்கும். உன்னையும் உனது பணியையும் பற்றி பகவான் புத்தரின் கருத்தை உனக்குச் சொல்கிறேன். புத்த கயாவுக்குப் போகத் தவறாதே. அங்கு சென்று முழுமையாக சக்தியூட்டு. கயாவில் நிறைய நேரம் செலவிட வேண்டியிருக்கும். தேவைப்படும்

பொழுது உனக்கு மற்ற விஷயங்களைச் சொல்வேன். போகும் வழியில் உனக்கான வேலை தெரிவிக்கப்படும்.''

3-4-1949

**சுவாமி விவேகானந்தா:**

''கயாவில் செய்யவேண்டிய வேலைபற்றி நீ சிந்தித்துக் கொண்டிருக்கிறாய். அங்கே உனக்கு ஏராளமாக வேலை இருக்கிறது. அது எந்த அளவுக்கு இருக்கிறது என்றால் அதிலிருந்து ஏழு நாட்களுக்கு நீ தலை நிமிர முடியாது. இந்த வேலைக்கு என் பரிசாக, நான் முன்பு குறிப்பிட்டபடி என்னுடைய பதவியை உனக்காக விட்டுக்கொடுக்கிறேன். அங்கே முழுமையாக பழுதுபார்த்து சுத்தம் செய்வது தேவைப்படுகிறது. அதை ஒட்டுமொத்தமாக உருமாற்றி விடு. இந்தச் சந்தர்ப்பத்தில் நீ பிறந்து வந்தது மிக மகிழ்ச்சியான விஷயம். உலகம் மாற்றத்தை விரும்பிக் கேட்டுக்கொண்டு இருக்கிறது; அதைச் செய்வதற்கான ஒரே அதிகாரி நீ தான்! எனவே, தவறாமல் நாளை புறப்பட்டு விடு. வேறு யாருடைய வேலையுடனாவது இதை நீ ஒப்பிடமுடியுமா? வேறு யாராவது அதற்குத் தகுதியுடையவராக இருக்கிறார்களா? இது ஒரு அற்புதம் இல்லையா? பாம்பை மயக்கிப் பிடிப்பது, ஒரு தந்திர வித்தைக்காரனின் வேலை. வெறும் வெளிக்காட்சிக்காக ஏதோ ஒரு சக்தியைப் பெற்று, அதன் சரியான அர்த்தத்தில் ஆன்மீக நாட்டம் கொள்ளாதவர்களாய், அந்த சக்தியை வேறு நோக்கத்திற்குப் பயன்படுத்துகிறவர்களைத்தான் பாம்பை மயக்கும் வித்தைக்காரர்கள் என்று நான் சொல்கிறேன்.''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் (இரவு மணி 9.00):**

''உன் பிறந்தநாளை கொண்டாடுவது இந்த மிஷனில் (ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷனில்) எந்தவிதத்திலும் குறைந்த முக்கியத்துவம் உடையது அல்ல (மிக அதிக முக்கியத்துவம் உடையது) இப்படி ஒரு மனிதரின் பிறந்தநாளைக் கொண்டாடவில்லையென்றால், வேறு யார் அதற்குத் தகுதி உடையவர்? இந்த எண்ணம் C2 - ன் மனதில் மிகவும் புனிதமாக உதயமாகி இருக்கிறது. அவர்தான் இந்த விஷயத்தை ஆரம்பித்தார். அவருடைய வீட்டின் மீது நன்மையளிக்கும் பிராணாஹுதியின் அருள்மழை 24 மணிநேரம் பொழியும். C2 - ன் மனைவியும், K7 - ன் தாயும் ஆகிய பெண்மணியை நீயும் தாயாகவே எண்ணுகிறாய்! அவரும் அதே உணர்வில் உன்மீது அன்பு செலுத்துகிறார். இந்த இரண்டு பேரில் யார் அதிகமான சலுகை பெற்றவர்? அது C2 - இன் மனைவிதான், என்பதை நான் அறிந்திருக்கிறேன். எனவே

அவரையும் நான் இதிலிருந்து தவிர்க்கமுடியாது. ஆகவே, என் மகிழ்ச்சியின் நன்மையை இருவரும் பெறுகிறார்கள் மற்றும் பிறவிக்கடலின் கரையை அடையும் வரத்தையும் வாக்குறுதியளிக்கிறேன். இப்போது நீ பயணம் சென்றுகொண்டிருக்கிறாய். எனவே நிம்மதியாக இரு. அதற்கான நேரத்தில் உனக்கு வேலை இருக்கும். I2 - இங்கே பாருங்கள். உங்களுக்கும், P4 - க்கும் அவர் எழுதிய இந்தக் கடிதத்தை கவனமாகப் படிக்கவேண்டும். அது முழுவதும் அவருடைய பாராட்டுக்கள் தான். இதுவரை இம்மாதிரி ஒரு மகாபுருஷர் மண்ணுலகிற்கு வந்ததில்லை. இம்மாதிரி விஷயங்கள் எந்த ஒருவரின் சிந்தனையிலோ, கனவிலோ கூட நடக்கமுடியாது. உண்மையான விஷயத்தைச் சொன்னால், மக்கள் அதை கேலிசெய்வார்கள். இந்தக் கடிதத்தை விசேஷமான புத்தகத்தில் எழுதிவைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இம்மாதிரி ஒரு மகாபுருஷரை உருவாக்கும் வழிகாட்டியை, குருவைப்பற்றி என்ன சொல்வது? I2, அதுபோல மாறுவதற்கு முயற்சி செய்யுங்கள். மந்திர வித்தைகள், மாந்திரீகம், தாந்திரீகம் ஆகிய இம்மாதிரி விஷயங்களை நீங்கள் எல்லா இடங்களிலும் பார்க்கலாம். ஏதாவது ஒரு சக்தியை வசப்படுத்திக் கொண்டு பலவிதமான அதிசயமான செயல்களைச் செய்ய ஆரம்பிக்கிறார்கள். ராம் சந்த்தருக்கு சபாஷ்! அவர் இப்படி எழுதியிருப்பதற்குப் போதுமான அளவுக்குப் பாராட்டு இருக்குமா? இப்படி ஒருவிஷயம் வேறு யார் மனதிலாவது தோன்றுமா? அந்த மகோன்னத நிலையைத் தாங்கிக் கொள்ளும் சக்தி யாருக்காவது இருக்கிறதா? இம்மாதிரி ஒரு மனிதர் நிலைபெற்றுள்ள, அந்த ஒரு உயர்நிலையில், அந்த ஒரு சக்தியைத் தாங்கிக்கொள்ளும் வலிமை அவருடைய உடம்புக்கு இல்லை என்பதால், அந்த சக்தியைத் தன் உடம்பின் வழியாகப் பாயும்படி செய்வதற்கு அவரால் இயலாது என்ற தன்மையை உடைய அந்த மகோன்னத நிலையை யாராவது சிந்திக்க முடியுமா? அப்படியானால் அவர் அங்கே நிலைபெற்றிருக்கிறார் என்பதைப் பற்றி என்ன சொல்வது? இதைப் பயிற்சியினால் மட்டுமே உண்மையில் அளிக்க முடியும். அந்த நிலையை அடைந்த ஒருவர் அந்த இடத்தின் தன்மையைப் பற்றிச் சொல்லும் பொழுது, அந்த நிலையை அடையாத ஒருவர் அவர் சொல்வதை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? வருங்காலத்தில் இந்தவிதமான நிலையைப் பற்றிய எதிர்பார்ப்பே சிறிதும் இருக்க முடியாது. நான் புரிந்து கொண்டவரையில் இந்த விஷயங்கள் ராம் சந்த்தருக்கே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. எல்லோருமே இந்த ஒருநிலைக்கு வளர்ச்சியடைய வேண்டும் என்று அவர்

விரும்புகிறார் என்பதில் சந்தேகமில்லை. அவருடைய இந்த ஆசை அல்லது சங்கல்பத்தின் மூலமாக யாரெல்லாம் எந்த நன்மைகளையெல்லாம் பெற முடியுமோ, அதைப் பெறுவார்களாக. அவருடைய சுயநேர்மை மற்றும் அவருடைய தாராள மனம் எவ்வளவு உயர்வாக இருக்கிறது! யாராவது அவரது பேரன்பை புரிந்து கொள்ளவும், மதிப்பிடவும் முடியுமா? மனிதர்களே, உங்களுக்கு நான் சொல்கிறேன். மனித குலமே அதற்காக ஏங்கி நிற்கும். தேவையின் காரணமாக அவர் இந்த உலகில் வாழும்படி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார். வணக்கத்திற்குரிய அவருடைய மாஸ்டரின் சக்திதான் அவரை இங்கே தக்க வைத்துக்கொண்டிருக்கிறது. உடலின் பந்தத்திலிருந்து (உடலின் கட்டுப்பாட்டிலிருந்து) அவருடைய ஆன்மா பறந்து சென்றுவிடாமல் தடுத்து, எந்நேரமும் விழிப்புடன் காத்துக் கொண்டிருப்பது, சகோதரா, அந்த உயர்வான மாஸ்டரின் ஆற்றல்தான். நல்லது, நான் இதை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, அது உங்கள் உரிமை. ராமேஸ்வரத்திலேயே அவரை என்னோடு சேர்த்துக்கொண்டுவிடுவதற்கு (என்னுடன் அழைத்துச் செல்வதற்கு) நான் விரும்பினேன். ஆனால் தடுக்கப்பட்டேன். அங்கே எனது செயலற்றதன்மை ஏன் வந்தது? இந்த விஷயத்தில் அவருடைய குருவின் ஆதிக்கநிலையினால், இம்மாதிரி மனிதர்கள் இவ்வுலகில் நீண்டகாலம் தங்கியிருப்பதில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இம்மாதிரி ஒரு குருநாதர் இருந்தால், அதுவும் கூட, இம்மாதிரி விசேஷ மனிதர்களுக்கு மட்டுமே ஆயுள் நீடிக்கப்படும்.''

*('சத்தியத்தின் குரல்' என்ற புத்தகத்தில் 'பிச்சைப் பாத்திரம்' என்ற தலைப்பின் கீழ் 'ஒரு ஆண்டியார் சொத்து' என்ற கட்டுரையில் இடம் பெற்றுள்ள கடிதத்தில் இந்த விஷயம் குறிப்பிடப்பட்டுள்ளது.)*

**4-4-1949**

ஷாஜஹான்பூரிலிருந்து I2 - உடன் காலை 11 மணிக்கு கயாவுக்குப் புறப்பட்டேன். இரவு சுமார் 2 மணிக்கு (5-4-1949) அங்கு போய்ச் சேர்ந்தேன். ரயில்நிலையத்தில் காத்திருக்கும் அறையில், மீதி இருந்த இரவு நேரத்துக்கு ஓய்வெடுத்த பிறகு காலை 9.30 மணிக்கு 'சுராஜ்மல் மார்வாரி சத்திரத்தில்' சென்று தங்கினோம். அது கயா நகரில் யாத்திரிகர்கள் செல்லும் புனித திருக்குளத்தின் அருகில் அமைந்துள்ளது. அந்த தர்மசாலாவில் (சத்திரத்தில்) 8ஆம் எண் அறையில் தங்கினோம்.

**5-4-1949 காலை 8.30 மணி**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''கயாவில் ஏராளமான வேலை இருக்கிறது. இன்று நீ ஓய்வெடுத்துக் கொள். நாளை காலை வேலை ஆரம்பிக்கும். உனக்கு போதுமான நேரம் இருக்கிறது.''

**சுவாமி விவேகானந்தா:**

''இங்கே பார் ராம் சந்தர், கயாவில் இருக்கும் வேலைக்காக நீ விசேஷமாக நியமிக்கப்பட்டிருக்கிறாய். ஒவ்வொரு கட்டத்திலும் நீ பாராட்டப் பட்டிருக்கிறாய். அதற்கு நீ தகுதியுடையவனாக இருக்கிறாய். அதே சமயத்தில், இதன் அடித்தளத்தில் உள்ள நோக்கம் உனக்குத் தெரியவில்லை. உனக்கு உன் சக்தியும் திறமையும் எப்பேர்பட்ட மகத்துவம் பொருந்தியவை என்பதும் கூட தெரியவில்லை. ஏனென்றால் வேறு எந்த ஒருவரும் அடையப் பெற்றிராத ஒரு செயல் மறந்த, தன்னுணர்வு மறைந்த பூரணத்துவ நிலையில் நீ இருக்கிறாய். உனது வேலைக்கான ஊட்டச்சத்து அதுதான். மக்கள் எதுவேண்டுமானாலும் சொல்லலாம். அதை மனதில் மதிக்காதே. அஹங்காரம் அல்லது தன்னைப்பற்றி உணர்வுறுநிலை உன்னிடமிருந்து முற்றிலும் மறைந்துவிட்டது. எந்த ஒரு வடிவத்திலும் எப்போதும், எச்சமயத்திலும் நீ அந்த உணர்வை உனக்குள் கொண்டு வர முடியாது. எனவே, எதைப் பற்றியும் கவலைப்படாமல் நிம்மதியாக இரு. உன்வேலை இந்த உலகிற்குள் மட்டும் அடங்கியிருப்பது அல்ல. உன்னையறியாமலே வேறு உலகங்களில் சில சமயங்களில் வேலை செய்து கொண்டிருக்கிறாய் என்பது ஏற்கெனவே உனக்குத் தெரியும். அதனால் தான் உன் மூளையில் அடிக்கடி அழுத்தத்தையும், அல்லது தலைவலியையும் நீ உணர்கிறாய்.''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் (பிற்பகல் மணி 1.15):**

''இந்தப் புனிதமான தலத்தை நான் நடந்து சென்று அருள் செய்திருக்கிறேன். பாணாசுரனுடன் நான் யுத்தம் செய்த சம்பவம் உண்மைதான். அனிருத்தன் சம்பந்தமான தகவல் எனக்கு இங்கிருந்து தான் கிடைத்தது. எனவே அவனைக் கண்டுபிடிக்கும் வழியையும் தெரிந்து கொண்டேன்.''

*(இங்கு குறிப்பிடப்படும் சம்பவம் ஸ்ரீமத் பாகவதத்தில் இருக்கிறது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடைய பேரனாகிய அனிருத்தனுக்கும், சோணிதபுரம் என்ற ராஜ்யத்தை ஆட்சி செய்து வந்த பாணாசுரனின் மகள் உஷாவுக்கும்*

*நடைபெற்ற திருமணம் பற்றி இது கூறுகிறது. உஷா தன்னுடைய கனவில் அழகான இளவரசன் ஒருவனுடன் தனக்கு திருமணம் நடப்பதாக கனவு கண்டாள். அந்த ராஜ்யத்தின் முதலமைச்சரின் மகளும் உஷாவின் சிநேகிதியும் ஆன சித்ரலேகா என்ற பெண் ஓவியம் வரையும் கலையில் மிகவும் தேர்ச்சி உடையவள். அவள் உஷா சொல்லும் வர்ணனையைக் கேட்டு பல இளவரசர்களின் படங்களை வரைந்தாள். அதில் ஒன்று, உஷா கனவில் கண்ட இளவரசன் போலவே இருந்தது. அந்த இளவரசன் அனிருத்தன்தான். எனவே, சித்ரலேகா ரகசியமாக அனிருத்தனை அழைத்து வர ஏற்பாடு செய்தாள். அதன்படி அனிருத்தனை தந்திரமான முறையில் உஷாவின் மாளிகைக்குக் கொண்டு வந்தார்கள். அங்கு உஷா அனிருத்தனை காந்தர்வ மணம் செய்து கொண்டாள். இதையறிந்த பாணாசுரன் அனிருத்தனை சிறையில் அடைத்தான். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும், அனிருத்தனின் தந்தை ப்ரத்யும்னரும், அனிருத்தனைக் காணவில்லை என்றறிந்து, சுமார் நான்கு மாதங்கள் தேடினார்கள். பிறகு ஒற்றர்கள் மூலம் தகவல்களை அறிந்து, படைதிரட்டிச் சென்று, பாணாசுரனை போரில் வென்று, உஷாவையும், அனிருத்தனையும் துவாரகைக்கு அழைத்து வந்து அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள்.)*

**6-4-1949**

**சுவாமி விவேகானந்தா:**

''கயாவின் ஒவ்வொரு பகுதியையும் நீ முழுமையாக அழிக்க வேண்டியிருக்கும். (அதாவது முன்னோர்களுக்கு, பிண்டம் கொடுத்து முக்தி அடையச் செய்வதற்காக சடங்குரீதியான காரியங்கள் இங்கு பல நூற்றாண்டுகளாக, தொழில்முறை புரோகிதர்களால் செய்யப்பட்டு வருகின்றன) இந்தவிதமான கயா இனிமேலும் நீடிப்பதை நான் விரும்பவில்லை. இது அடிப்படையில்லாத ஒரு காரியம். இதற்கு இடையூறு செய்கிறவர்களை நீக்கிவிட வேண்டும்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இது சாதாரணமான காரியம் இல்லை. இதற்கு கடுமையான உழைப்பு தேவைப்படும். ஹிந்துக்களிடையே பெரும்பாலும் காணப்படுகின்ற இந்தவிதமான சடங்கு முறைகள். இந்து மதம் சீர்கெட்டுப் போனதற்குக் காரணமானவை. இவை அனைத்தையும் நீ அழிக்க வேண்டும். நீ

விரும்பினால், இந்தப் பயனற்ற, பொருளற்ற வேண்டாத விஷயங்கள் முடிந்து போவதற்கு அல்லது அழிவதற்கு வேண்டிய சூழ்நிலைகளை உருவாக்கலாம். இந்த வேலையை கடவுளே உன் கைகளில் கொடுத்திருக்கும்போது, அந்த வேலையை செய்து முடித்து விட்டுத்தான் இந்த நகரத்தை விட்டுப் புறப்படவேண்டும். கயாவை சுத்திகரிப்பு செய்ய வேண்டிய தேவை இல்லை. இங்கு பரவியிருக்கிற நிலைமை, முழுமையாகத் துடைத்தொழிக்கப்பட ண்டும்.''

*(சொந்த உள்அனுபவம் பற்றிய குறிப்பு: 5-4-1949 அன்று நான் கயாவுக்குள் புகுந்தபோது, இங்கு இருந்த சூழ்நிலை என் இதயத்தில் அழுத்தம் ஏற்படுத்துவதாக இருந்தது. இந்த இடத்தின் சீர்கெட்ட நிலைமை எங்கள் இதயங்களில் சுற்றிக்கொண்டிருந்தது. அது எங்கள் இதயங்களில் மோதிவிடாமல் நிறுத்தப்பட வேண்டும். இங்கு இருக்கும் சூழ்நிலையில் எந்த அளவுக்கு ஜடத்தன்மை ஊடுருவியிருக்கிறது, எவ்வளவு முரட்டுத்தன்மையும், கடினத்தன்மையும் பரவியிருக்கிறது என்பதற்கு இது அடையாளமாக இருக்கிறது. இறந்துபோன முன்னோர்களின் முக்தியை முக்கியமாக நினைத்து ஏராளமான பணம் செலவழித்து விட்டில்பூச்சிகள்போல மக்கள் வருகின்ற புனிதமான யாத்திரைத்தலத்தின் நிலைமை இப்படித்தான் இருக்கிறது.)*

**சுவாமி விவேகானந்தா:**

''புரோகிதத் தொழிலையே முழுமையாக அழிக்க வேண்டும். இந்த நிலை எல்லா இடங்களிலும் பொதுவாகக் காணப்படுகிறது. இதைப் பற்றி இனியும் நீ கேட்க வேண்டியதில்லை. இந்த நாடகத்தில் உனது முக்கியமான பாத்திரம் இதுதான். இரவு நேரத்தில் இந்த வேலையில் கவனம் செலுத்து. பெண்கள் எந்த இடத்தில் ஒழுக்கம் கெட்ட வேலைகளைச் செய்கிறார்கள் என்பதை உனக்குச் சொல்கிறேன். (தென்மேற்கு மூலையை சுட்டிக்காட்டி) அதோஅந்த மூலையில்தான். இந்த ஊரிலும் கூட இம்மாதிரி பெண்கள் இருக்கிறார்கள். உன்னிடம் பிச்சைகேட்டு வந்த மனிதன் நல்லவன் அல்ல. அவனுடைய குடும்பம் ஒழுக்கம் இல்லாதது. வெள்ளிக்காசுகளுக்காக தங்கள் மதிப்பை மனிதர்கள் எப்படியெல்லாம் விற்கிறார்கள் என்பதைப் பார். இது எல்லா இடங்களிலும் பொதுவான நிலைமையாக இருக்கிறது. இது சமுதாயத்திற்கே அவமானம். போதுமான அளவு அழிவுப்பணிக்குப் பிறகு, உன் வேலைத்திட்டத்தின் கடைசி நிகழ்ச்சியாக அவர்களுடைய குணத்தை சீர்திருத்துவது இருக்கும். இந்தப் பணியை நீ இங்கு உன் ஆயுட்காலத்திலும், அதற்குப் பிறகும் செய்யலாம். ஒழுங்கின்மையும்,

பொய்யும் நிறைந்த காரியங்கள் எங்கெங்கே நடக்கின்றன என்பதை நான் உனக்குக் காட்டுகிறேன். அங்கெல்லாம் அழிவு ஏற்படுத்தும் விளைவுகளை நீ ஆரம்பித்து வைக்கவேண்டும்.''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''நேற்று நான் சொல்லிக் கொண்டிருந்தது பாதிக் கதைதான். பாணாசுரனுடன் போருக்குப் போகும்போது நான் இங்கேதான் தங்கியிருந்தேன். பால்கு நதியின் அருகில்தான் நாங்கள் தங்கியிருந்தோம். அந்த இடம் சற்றுத் தொலைவில் இருக்கிறது. நீ விரும்பினால் அந்த இடத்தைச் சொல்கிறேன். அங்கிருந்து சிறிது தூரத்தில்தான் ஜராசந்தனின் தலைநகரம் இருந்தது. (ஜராசந்தன் கம்சனுடைய இரண்டு மனைவிகளுடைய தந்தை. கம்சன், பகவான் கிருஷ்ணரின் தாய்மாமன்.) ஜராசந்தன் மிகவும் சக்தி வாய்ந்தவன். (பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கம்சனைக் கொன்றதால் கோபம் கொண்ட ஜராசந்தன் மதுராவின் மீது போர்தொடுத்தான். மதுராவை ஆட்சிசெய்த கிருஷ்ணர் அவனை பதினேழு முறை போரில் தோல்வியடையச் செய்தார். ஆனால் பதினெட்டாவது முறையாக அவன் போருக்கு வந்தபோது பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தன் படையினருடன் போர்க்களத்திலிருந்து தந்திரமாக ஓடிச்சென்று, புதிதாகக் கட்டப்பட்ட துவாரகாவிற்குச் சென்று அங்கு வசிக்க ஆரம்பித்தார். துவாரகை என்பது இந்தியாவில் இன்றைய குஜராத் மாநிலத்தில் மேற்குக் கடற்கரையோரம் இருந்த நகரம்.)''

''சித்ரலேகாவுக்கும் உஷாவுக்கும் மிக அபூர்வமான புத்திக்கூர்மையும், கூருணர்வுத் திறனும் இருந்தன. இவை மிகவும் ஞானமுடையவர்களிடம் மட்டுமே காணப்படுகிற விஷயமாகும். உஷா கடவுள் மீது நம்பிக்கையற்ற பாணாசுரனின் மகளாகப் பிறந்தாலும், தெய்வபக்தி உடையவளாக இருந்தாள். அவனுடைய கோட்டையினுள் இருந்த கட்டிடங்களின் ஒரு சில இடிபாடுகள் இன்னும் அங்கே உள்ளன.''

**சைதன்ய மகாப்பிரபு கூறியது (காலை மணி 11.30):**

''ஷாஜஹான்பூருக்குத் திரும்பிச் செல்வதற்கு முன்பு நாடியாவில் (நவத்வீபம்) இருக்கும் வேலையையும் நீங்கள் செய்து முடித்து விடுங்கள். நான் பிறந்த ஊர் முழுவதிலும் ஆன்மீக சக்தியூட்டுங்கள். நான் நீளத்திலும் அகலத்திலும் நெடுந்தூரம் சுற்றித் திரிந்தேன். ஆனால் வணக்கத்திற்குரிய

உங்கள் குரு உங்களை உருவாக்கியிருப்பதுபோல என்னால் யாரையும் உருவாக்க முடியவில்லை. இது ஒருவருடைய அதிர்ஷ்டம் மற்றும் தியாகம் சம்பந்தப்பட்டது. அதற்கும் மேலாக இது கடவுளின் வரம். நீங்கள் செய்திருக்கும், செய்துவரும் பணியை மற்றும் வாழ்க்கை நிகழ்வுகளை உலகமக்கள் அறிந்தால் மிகவும் வியப்படைவார்கள். ஒரு மகாபுருஷர் இவ்வுலகில் இருந்தார் என்பதை பல நிகழ்ச்சிகள் தாமாகவே மக்களை உணரச்செய்யும். காந்திஜி சிறைதண்டனைகளை அனுபவித்து, என்னென்னவோ முயற்சி செய்து பார்த்தும், நீங்கள் வந்து ஆங்கில ஆட்சிக்கு நெருக்கடி அளிக்கும் வரையில் அவர் விரும்பிய பலனைப் பெற முடியவில்லை. சுதந்திரம் வாங்கித்தந்த பெருமை காந்திஜிக்குக் கிடைத்தது என்றாலும், பாவம், எளிமையாக இருந்துகொண்டு அனைத்தையும் செய்த உங்களை யாராலும் கவனித்தறிய முடியவில்லை. ஒவ்வொரு நாளும் ஐந்து நிமிடங்களாக, சராசரியாக இரண்டரை வருடங்கள் நீங்கள் செய்த வேலை பிரிட்டிஷ் அரசாட்சியின் அஸ்திவாரங்களைக் கவிழ்த்துவிட்டது. நாட்டின் பிரிவினை (பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிந்து தனிநாடாக ஆக்கப்பட்டது) அரசியல் ரீதியான தவறு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பிரிவினை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், எப்படியும் ஆங்கில ஆட்சி கவிழ்ந்திருக்கும். உங்கள் சங்கல்பம் வீணாய்ப் போகாது. விரைவில் அல்லது தாமதமாக அது பலன் தரும் என்பது உறுதி. இயற்கையின் வேலை நிதானமான வேகத்தில் தொடரும். அது தயாரான நிலையில் முதிர்ச்சி பெறும்போது, பெரும்பாலும் திடீரென்று ஒரு விளைவு உண்டாகும். சில சமயங்களில் மெதுவாகப் புகைந்து எரிவது கூட விளைச்சலை அழித்துவிடும். நீங்கள் அதுபற்றி எண்ணாமல் மகிழ்ச்சியோடு இருங்கள். (சிறிது இடைவெளி) இப்போது இன்னொரு விஷயம் ஆரம்பமாகிறது. அதாவது இப்போது என் வேலையை யார் செய்வது என்பதுதான்! மற்றவர்கள் செய்ததைப் போலவே நானும் உங்களுடன் ஐக்கியமாகி விட்டேன். ஆயினும், நீங்கள் வணக்கத்திற்குரிய சுவாமி விவேகானந்தா மற்றும் லாலாஜி இவர்களிடமிருந்து விலகியிருக்க முடியவில்லை; அவர்களுடன் எப்போதும் தொடர்பு கொண்டிருப்பவராக இருப்பதால் நான் உங்களுடன் ஐக்கியம் அடைந்திருப்பதை நீங்கள் உணராமல் இருக்கிறீர்கள். மற்றவர்களைப் போல நானும் அதே மாதிரிதான் உங்களுடன் ஐக்கியமாகி இருக்கிறேன். வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டர் லாலாஜி சாகேப் உங்களிடம் ஐக்கியமாகி இருப்பது முற்றிலும் விசேஷமானது என்பதில் சந்தேகமில்லை. இன்றுவரை அந்த மாதிரியாக வேறு யாரும் ஐக்கியமடைய முடியவில்லை. குருநாதர் தன் சீடனுக்காக

ஏங்கித் தேடிச்சென்றது இந்த உலகில் இது முதல் உதாரணம் வேறு எங்கும் காணமுடியாது. இதனால் தான் மாஸ்டர் தன் சீடனுடன் ஐக்கியம் அடைவதில் வேறு எங்கும் உதாரணம் காணமுடியாத விதத்தில் ஐக்கியமடைவது கட்டாயமாக ஆனது. உங்களுடைய இந்த பக்திக்கு அவருடைய இசைந்த பிரதிபலன் அது. உங்களுக்கு உங்கள் அளவு தகுதிவாய்ந்த சீடர்கள் கிடைக்கவில்லை; ஆனால் அவர்களும் மெதுவாகக் கனன்று கொண்டிருக்கிறார்கள். (உள்ளூர நல்ல வகையில் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்). நீங்கள் சக்தியூட்டியிருக்கும் இடங்கள், உங்கள் பிராணாஹூதி என்ன விளைவை உண்டாக்குமோ, கிட்டத்தட்ட அதே மாதிரி அருள் ஒளியை வெளிப்படுத்துகின்றன. இப்போது நீங்கள் கயாவில் இருக்கும் வேலையில் கவனமாக இருக்கிறீர்கள். வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டர் உங்களுடன் தொடர்பில் இருப்பதுபோல சுவாமி விவேகானந்தா அவர்களும் பெரும்பாலும் உங்களுடன் இருப்பதற்கு வேலை செய்திருக்கிறார்; அதற்காக அவரைப் பாராட்டுகிறேன். இம்மாதிரி ஒருவரைக் கண்டறிந்தது சுவாமியின் அதிர்ஷ்டம். என் விஷயத்திலும் கூட அது நல்ல அதிர்ஷ்டம் தான். அதாவது அவரிடமிருந்து நான் விரும்பும் எந்த வேலையையும் எடுத்துக்கொள்ளக்கூடிய அப்படி ஒருவரை நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன். இல்லையென்றால் பற்பல ஆண்டுகளாக செய்வதற்கு ஒன்றுமில்லாமல் இருந்ததுபோல, வேறு வழிஇல்லாமல் இருந்திருப்பேன்.''

### வணக்கத்திற்குரிய பகவான் புத்தர்:

''சுவாமி ஏற்கெனவே உங்களிடம் புத்தகயாவுக்குப் போகும்படி சொல்லியிருக்கிறார். அது என்னிடமிருந்து வந்த ஒரு அறிவுரைக் குறிப்பு தான். நான் தவம் செய்த ஆலமரம் என்றும் மதிக்கப்படுகிற அந்த மரம் இருக்கும் இடத்தை இதற்கு முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு சக்தியூட்டி, அங்குள்ள நிலப்பகுதி எந்நேரமும் அருள் சக்தியை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும்படியாகச் செய்யவேண்டும். யாத்திரையாக அங்கே செல்பவர்களின் மண்டையோடுகள் (அதாவது மூளைகள்) எப்போதும் அங்கேயே கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும். அதில் எதையும் குறையாக விட்டுவிடவேண்டாம்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''பகவான் புத்தர் உன்னிடம் என்ன சொன்னாரோ அதை அப்படியே செய். ஆனால், 'எதையும் குறையாக விட்டுவிட வேண்டாம்' என்பதை நான்

அனுமதிக்கவில்லை. அவர் சொன்ன இந்தச் சின்ன அறிவுரையை அப்படியே செய்து விட்டால், அங்கே போகும் மக்களின் மூளையில் உள்ள நரம்பு மையங்கள் வெடித்துவிடத் துவங்கிவிடும்.''

**சுவாமி விவேகானந்தா:**

''எனக்கு அதிகபட்சமான திருப்தியளிக்கும் விதத்தில் நீ வேலை செய்து கொண்டிருக்கிறாய். உன் வேலையை தொடர்ந்து செய். வெற்றி உன்னிடம் வந்து சேரும்.''

''உனக்கு இந்த வேலை குழந்தைகளின் விளையாட்டு போலாகும்; இதை நீ ஒரு நிமிடத்தில் செய்ய முடியும். உனக்கு அளிக்கப்பட்டுள்ள இந்தத் திறமை நமது பிரபுவினுடையது என்பது நமக்குத் தெரியும். (சிறிது இடைவெளி) பிஹாரின் கண்ணுக்குத் தெரியாத முனிவரின் காதுகளைத் திருகி முடுக்கிவிடு; சரி, அவருக்கு நானே கட்டளையிடுகிறேன். (கீழ்க்கண்ட உத்தரவு கேட்கப்பட்டது) நமது மாஸ்டரால் நியமிக்கப்பட்ட கடமையை விட்டு விலகினால் உடனடியாக நீங்கள் உங்கள் நிலையிலிருந்து கீழே தள்ளப்படுவீர்கள். உன் மாஸ்டர் இங்கே வந்திருக்கும்போது, நீ உன் சொந்த வேலையில் கவனமாக இருப்பதற்குக் காரணமே இல்லை. (பிஹாரின் பொறுப்பாளராகிய கண்ணுக்குத் தெரியாத மகான் தன் தவறுக்கு மன்னிப்பு கேட்டு, தன் பணியை மீண்டும் துவங்கினார்) மிக மோசமான அளவுக்கு தரம் குறைந்துவிட்ட ஹிந்து சமுதாயத்தை நீதான் சீர்படுத்த வேண்டும். சில குறிப்பிட்ட விஷயங்களை மொத்தமாக அழித்துவிட வேண்டும்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''உன் வேலை மிகச் சிறப்பாக இருந்தது. நாடியாவின் வேலையையும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக்கொண்டு செய்.''

## 7-4-1949 (நேரம் காலை மணி 7.10)

**சுவாமி விவேகானந்தா:**

''நேற்று உன்னுடைய வேலை இணையில்லாத அளவுக்கு சிறப்பாக இருந்தது. நீ நிச்சயமாக இதில் தவறாமல் வெற்றியடைவாய். இது உனக்கு ஒரு குழந்தை விளையாட்டு போன்றது.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''அன்புள்ள ராம் சந்த்தர், பெரிய முனிவர்கள் தங்கள் சொந்தப் பதவிகளை உனக்காகக் காலியாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.''

### சுவாமி விவேகானந்தா:

''இந்த விநாடியில் என் பதவியை (நேரம் காலை 7.15 மணிக்கு) நான் காலியாகச் செய்து என் வேலையில் உன்னை அமர்த்துகிறேன். உனது பொறுப்பு இப்போது அதிகமாகிறது! உன் குருவைப்போல நானும் உன்னுடன் இருப்பேன்! ஒரு உயர்ந்த மகாபுருஷர் உலகில் இருக்கும்போது, அவருக்குக் கீழ்ப்பட்டவர்கள் உதயகால நட்சத்திரங்கள்போல மங்கிய ஒளி வீசுகிறவர்களாக ஆகிவிடுகிறார்கள். எங்கள் வேலை முடிந்துவிட்டது. உன்னுடைய ஆட்சி தொடர்கிறது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடன் இணைந்து உன் வேலையைச் செய். அவரிடம் உன்னை நாங்கள் ஒப்படைத்து விட்டோம். அவரைப் பின்பற்றி நடந்துகொள். மக்களின் கண்களுக்கு இது ஒரு மர்மமான விஷயம் அல்லவா? அவர்கள் இதை உண்மை என்று எடுத்துக் கொள்வார்களா? இதுதான் பிரச்னை. இது நூறு வருடங்களுக்குப் பிறகு தீரும். வணக்கத்திற்குரிய என்னுடைய குரு (ராம் கிருஷ்ண பரமஹம்சர்) உன்மீது தன் நல்லாசிகளைப் பொழிந்து கொண்டிருக்கிறார். அவர் என்னை உருவாக்கினார். லாலாஜி உன்னை உருவாக்கினார். இப்போது இருவரும் ஒன்று சேர்ந்திருக்கிறோம். இப்போது எங்களுடைய அதே இயக்கத்துக்கு, இயந்திரம் போன்ற செயல்முறைக்கு நீயும் சொந்தமாகியிருக்கிறாய். நீ ஒருவன்தான் இருக்கிறாய். எங்கள் வேலை முடிந்துவிட்டது. சூரியன் பிரகாசிக்கிறது. நட்சத்திரங்கள் மறைந்து போகின்றன. எங்களுடைய சங்கத்தின் மிக உயர்ந்த பொறுப்பில் இருக்கும் தலைவரைப் பார் (சுவாமி விவேகானந்தர் ஆரம்பித்த ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் தலைவர்). நீ அவரை பரிசோதித்துப் பார்த்தாயா? அவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறார். என் சங்கம் காணாமற் போய்விட்டது. தன்னால் முடிந்த அளவு மிகச்சிறப்பான விதத்தில் அவர் பொதுப்பணி (பொதுச்சேவை) செய்கிறார். ஆனால் அது இக்காலத்திற்குத் தேவையான ஆன்மீகப் பணியல்ல. உண்மையாகவே சொல்கிறேன், வணக்கத்திற்குரிய உனது மாஸ்டரும்கூடதான் துவங்கிய சங்கத்தை இழந்துவிட்டார் என்றே சொல்லலாம். புதிய ஒரு மார்க்கம் உதயமாகி விட்டது. இதற்கும் அவர்தான் தலைமையாக இருக்கிறார் என்பது உண்மை. அவர் இதன் தலையாக இருக்கிறார் என்றால் நீ அதன் உடம்பாக, நரம்புகளாக, ஆன்மாவாக இருக்கிறாய். நரம்புகள் தங்கள் வேலையை சுறுசுறுப்பாகச் செய்யாவிட்டால்

மனம் வேலை செய்ய முடியாது. எனவே, உன் சங்கத்தின் நிர்வாகத் தலைவராக நீ இருக்கிறாய். மையத்திலிருந்தே வெளிப்பட்டவனாக இருக்கிறாய். இவையனைத்தும் அந்த அடித்தளத்திலிருந்து வரும் உத்தரவுகள். நாங்கள் இதில் தலையிடும் சக்தியற்றவர்களாக இருக்கிறோம்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இன்னொரு விஷயத்தையும் எழுதிக்கொள். சைதன்ய மகாப்பிரபுவின் இந்த அருளாசி, இதுவரையில் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் எந்த ஒருவருக்கும் ஒருபோதும் அளிக்கப்படாத ஒன்றாகும். உயிர்பிரியும் சமயத்தில் கடவுளை நினைப்பது மிகவும் நன்மை தரும் என்று சாத்திரங்களில் கூறப்பட்டுள்ளது. அதே மாதிரி நன்மையைப் பெறுவதற்கு உயிர் பிரியும் சமயத்தில் உன்னை நினைப்பது முடியாதா? மனிதர்கள் அப்படி உன்னை நினைப்பார்களா? இல்லையா? என்பது வேறு விஷயம். மிகப்பெரும் நன்மை நிச்சயமாகக் கிடைக்கும் என்று நான் உறுதியாகச் சொல்கிறேன்.''

## 8-4-1949 (காலை மணி 7.00)

**சுவாமி விவேகானந்தா:**

''கயாவில் உன்னுடைய பணி உயர்தரமானதாக இருந்தது. மத எதிர்ப்பு உணர்வை அந்தக் காற்றில் நீ நிரப்பிவிட்டாய். நீ அதற்குப் பின்பற்றிய வழிமுறைகள் சரியானவை. மனச்சோர்வும் வருத்தமும் நிறைந்த காட்சி எங்கும் காணப்படுகிறது. பகுதியளவு அழிவுப் பணி இன்னும் செய்து முடிக்கப்படாமல் இருக்கிறது. நீ இங்கே இன்னும் மூன்று நாட்கள் தங்கவேண்டியிருக்கும். மத உணர்வுகள் வீழ்ந்துவிட்டன. நான் மேலே விவரித்தபடி இங்கு செய்யப்பட்டுள்ள வேலை அதுதான்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''சகோதரா, நீ எகிப்து செல்ல வேண்டியது அவசியம். இந்த வேலையைச் செய்து முடிக்கக்கூடிய விதத்தில், உனக்குப் பிறகு மகாபுருஷர் யாரும் வரப்போவதில்லை.''

**சுவாமி விவேகானந்தா:**

''நீதான் இந்தியாவுக்கு விடுதலைத் தருகிறவனாக, மனித குலத்தைக் காப்பவனாக இருக்கிறாய். அப்படியிருக்கும்போது இந்த உலகில் பல்வேறு நாடுகளில் இருக்கும் நிலைமையை கவனித்து அறிய வேண்டியது அவசியமாகிறது இல்லையா? எனவே எங்கே பேரழிவு உண்டாக்கப்பட்டிருக்கிறதோ அந்த இடங்களுக்கு நீ செல்வது உன் கடமை இல்லையா? உண்மையில் அங்கு போவதற்கு முன்பே இந்த நாடுகளில் பிரச்னைகளை உன்னால் மிகச் சிறப்பாகத் தீர்க்க முடியும். எப்படியோ அதை சமாளிப்பது உன் பொறுப்பு! உன்னை ஜெர்மணிக்கும் மற்றும் ரஷ்யாவுக்கும் விசேஷமாக அனுப்ப நான் விரும்புகிறேன். போகும் வழியில் மற்ற நாடுகளைப் பார்த்துக்கொள்ளலாம். ஆனால், இந்த இரண்டு நாடுகளுக்கு உன் உதவி தேவைப்படுகிறது. இங்கிலாந்தையும் அலட்சியமாக விட்டுவிட முடியாது. பிரான்ஸ் நாட்டை கட்டாயம் பார்க்க வேண்டும். இது மிகவும் ஒழுங்கீனமான இடம். அங்கே நீ போயாக வேண்டும். ஆஸ்திரேலியாவில் ஹிந்து நாகரிகத்தை நான் அமைக்க விரும்புகிறேன். அமெரிக்காவில் இவ்வளவு செல்வ வளம் இருப்பதை நான் விரும்பவில்லை. இப்போது ஆப்கானிஸ்தானத்தைக் கவனி. அதைத் துடைத்தொழிக்க வேண்டும். காட்டுத்தனமான பழக்கங்கள் உடைய மனோபாவம் நீக்கப்பட வேண்டும். இந்தவிதமான நாகரிகம் அங்கே நீடிப்பதை நான் விரும்பவில்லை. நீ எகிப்துக்குச் சென்றால் பெர்ஷியாவுக்கும் போகத் தவறவேண்டாம்.''

### 9-4-1949 நேரம் காலை 7.15மணி:

### சுவாமி விவேகானந்தா:

''கயாவில் அளவுக்கு மீறி வேலை செய்யப்பட்டுவிட்டது. இப்போது நீ புத்தகயாவுக்குப் போகிறாய். (கயா நகரிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும், பகவான் புத்தர் மெய்ஞ்ஞானம் அடைந்த போதிமரம் (அரசமரம் இருக்கும் இடம்) அடித்தளமாக இருக்கும் மையத்திலிருந்து சக்தி அங்கே அதே ஆழம் வரை செல்வதை நான் விரும்பவில்லை. ஏனென்றால் சிறு குழந்தைகளும் கூட அங்கே போகிறார்கள். காலத்தின் கூர்வாளினால் குறிப்பிட்ட அளவுக்கு அது கெடுக்கப்பட்டிருந்தாலும் கூட, பகவான் புத்தர் தவம் செய்ததால் ஏற்கெனவே அந்த இடம் சக்தியூட்டப்பட்டுள்ளது. எப்போது, யார் அங்கே சென்றாலும், அந்த மனிதருக்கு அந்த சக்தி உணர்வில் வரும். ஆயினும், அங்கு இருக்கின்ற சக்தி நாளுக்கு நாள் அழிந்து கொண்டு இருக்கிறது. அங்கே அதே சக்தியை எந்நாளும் வெளிப்படுத்துகின்றவாறு அதன்

சாராம்சத்தை அதில் நீ உருவாக்கவேண்டும். இந்த முறை நீ அங்கே போகும்போது பகவான் புத்தரின் காலத்தில் எப்படி இருந்ததோ அதே மாதிரி அங்கு சக்தியூட்ட வேண்டும். உன் வேலையின் எல்லை அவ்வளவு தான். இங்கு அதற்குமேல் சக்தியளிக்க நான் விரும்பவில்லை.''

## புத்த கயாவில் விவேகானந்தா மீண்டும் கூறியது (நேரம் காலை மணி 10):

''இப்போது புத்த கயாவில் இருக்கிறாய். புத்தர் ஞானம் பெற்ற போதிமரம் நீ இப்போது உட்கார்ந்திருக்கும் இதே இடத்தில்தான் இருந்தது. பகவான் புத்தரின் காலத்தில் இருந்த அந்த போதி (அரசமரம்) மரம் இருந்தபோது இந்த இடம் புதர்களும் முட்செடிகளும் சூழ்ந்ததாக இருந்தது. காட்டு மிருகங்கள் வசிக்கும் குகைகளும் இருந்தன. இங்கே அப்போது வேட்டையாடுதல் இருக்கவில்லை. பகவான் புத்தர் இந்த இடத்தில் இருந்து தான் போதிக்க ஆரம்பித்தார். இங்குதான் அவர் ஒளி பெற்றார். சகஜமார்க்கப் பயிற்சியில் இந்த ஒளி மிகவும் சாதாரணமாக எல்லோருக்கும் கிடைக்கிறது என்பது உனக்குத் தெரியும். புத்தருக்கு மெய்ஞ்ஞானம் கொடுத்தது உண்மையான ஒளிதான் என்பதில் சந்தேகமில்லை. ஒளியைப் பற்றிய உனது கருத்து வேறுவகையானது. இந்த விநாடியில் நீ சிந்தித்துக் கொண்டிருக்கும் அந்த ஒளி மிகவும் உயர்ந்த ஒன்றாகும். இது பூஜாரிகள் குலத்தினரால் சீர்கெடுக்கப்பட்டிருக்கிறது. பகவான் புத்தரின் போதனை எளிமையாக, உயர்ந்த லட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு இருந்தது. மக்கள் அவரை கடவுளை நம்பாதவர் என்று சொல்கிறார்கள். அவர்கள் கருத்தின்படி கடவுள் சம்பந்தமான கொள்கைகள் எதுவும் புத்த மதத்தில் இல்லை. ஆனால், உண்மையில் பகவான் புத்தரின் போதனைகள் உயர்ந்த தத்துவ ஞானத்தையும் மற்றும் தார்மீக நெறிகளையும் உள்ளடக்கியவையாக இருந்தன. பகவான் புத்தர் ஐக்கியம் அடைந்த ஒரே மகாபுருஷர் நீதான் என்பதைக் கவனி. அவருடைய போதனைகளை சாதாரண மக்களின் மனங்களுக்குக் கொண்டு செல்லும் சுதந்திரம் உனக்கு இருக்கிறது. உன்னுடைய தத்துவஞானத்தை பகவான் புத்தருடைய கருத்துக்களுடன் ஒப்பிட்டுப்பார். அவருடைய போதனைகளில் மிக உயர்ந்த சிகரங்கள் (உச்சநிலை தத்துவங்கள்) இருப்பதைக் காண்பாய். ஆனால், நீ கண்டறிந்து வெளிப்படுத்தியிருக்கும் அளவுக்கு இதுவரையில் ஒருபோதும் யாரும் சென்றது இல்லை. நீ கண்டறிந்திருக்கும் எல்லையில் தத்துவஞானம் முடிந்து போகிறது. அந்த உச்சநிலையில் என்ன துவங்குகிறது என்பதை சொல்வது மிகவும் சிரமம். உன் ஆயுட்காலத்திற்குப்

பிறகு இது அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்யப்பட்டால், மக்கள் இந்தக் குறிப்புக்களைக் கண்டு, தாங்கள் இதை இழந்துவிட்டதற்காக வருந்துவார்கள். இப்போது மிக உயர்தரமான ஆன்மீகக் கல்விபெற உன்னிடம் யாரும் வருவதில்லை. நீ ஒரு புதிய விஷயத்தைக் கண்டறிந்து அதன் பயிற்சியை ஆரம்பித்திருக்கிறாய். இதற்கு இணையான ஒன்றை வேறு எங்கும் காணமுடியாது. உனது பயிற்சிமுறையில் அப்யாசிகள் (சாதகர்கள்) ஆரம்பநாளில் இருந்தே தங்கள் இதயங்களில் மிக உயர்ந்த உச்சநிலை வேரூன்றுவதைக் காண்கிறார்கள். இந்த விஷயங்களை மக்கள் புரிந்து கொள்வதே சிரமம். மனிதகுலத்தின் ஆன்மீக வரலாற்றில் இது ஒரு புதிய சகாப்தம்.''

**யாத்திரையாக வந்த ஒரு குழுவினர் தங்கள் முன்னோர்கள் ஆன்மீக விடுதலை (முக்தி) பெறுவதற்காக ஒரு புரோகிதரின் வழிகாட்டுதலின்கீழ் சடங்குகள் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து வணக்கத்திற்குரிய சுவாமி கூறிய கருத்து:**

''இங்கே பார், மாட்டு மந்தைகளை சொர்க்கத்துக்கு ஓட்டிச் செல்கிறார்கள்! (சிறிது இடைவெளி) பகவான் புத்தர் எங்கே உட்கார்ந்து தவம் செய்து மெய்ஞ்ஞானம் அடைந்தார் என்று அந்த இடத்தை மிகச் சரியாகக் கண்டறியும் திறமை உன்னைத் தவிர வேறு யாருக்கும் இல்லை.''

*(பகவான் புத்தர் தனது ஆன்மீக உச்சநிலையை ஒரு அரசமரத்தின் கீழ் அமர்ந்து எய்தினார் என்று கூறப்படுகிறது. அது ஆறாம் நூற்றாண்டின் (கி.மு) நடுப்பகுதியில் ஒரு ஏப்ரல் மாதத்தில் பௌர்ணமி நாளன்று கயாவில் இருந்த காட்டில் நிகழ்ந்தது. இப்போது இருக்கும் கோயிலுக்குப் பின்புறம் உள்ள அரசமரம், புத்தர்காலத்தில் இருந்த அந்த மரத்தின் இடத்தில் புதிதாக வளர்க்கப்பட்டது என்று நம்பப்படுகிறது. அரசமரம் பலவருடங்கள் நிலைத்து இருக்கும் இயல்பு உடையது. அந்த அசல் போதிமரம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டிலேயே மௌரிய அரசர் அசோகர் புத்த மதத்தில் இணைந்தபோதே அங்கு இருந்ததாக சொல்லப்படுகிறது. அவர் அந்த மரத்தின் ஒரு கிளையை தனது மகன் மகேந்திரன் மற்றும் மகள் சங்கமித்ரா ஆகிய இருவரிடமும் கொடுத்து அதை இலங்கையில் கி.மு.288ஆம் ஆண்டு நட்டு வளர்க்கச் செய்தார். அந்த மரம் இன்னும் இருப்பதாக நம்பப்படுகிறது. அசோக மன்னர் அந்த மரம் இருந்த இடத்தைச் சுற்றிலும் கல்லால் கட்டிடம் கட்டி அதைப் பாதுகாத்தார். அதன் இடிபாடுகள் இன்னும் அங்கே இருக்கின்றன. தொல்பொருள் ஆய்வாளர்கள் 'அசோகர் கல்வட்டம்' என்று அதைக் குறிப்பிடுகிறார்கள். அங்கே இருக்கும் கோயில்*

*சுவற்றில், ஒரு புகழ் பெற்ற சம்பவம் குறிக்கப்பட்டுள்ளது. இது வேறு சில புத்த மடாலயங்களிலும் இருக்கிறது. அதாவது, அந்தப் போதிமரத்தின்மீது மன்னர் அசோகருக்கு மிகவும் பக்தி இருந்ததால், அவர் அடிக்கடி வந்து அங்கே வந்து தங்குவார். இதனால் அவருடைய மனைவிகளில் ஒருத்தி அந்த மரத்தின் மீது வெறுப்புக்கொண்டாள். அவளுடைய உத்திரவின்படி அடிமைப் பெண்களில் ஒருத்தி அந்த மரத்தின் மீது பக்தி கொண்டவள் போல நடித்து மரத்தை பட்டுப்போகச் செய்யும் விஷம் கலந்த வென்னீரை அதன் வேர்களில் தினமும் ஊற்றினாள். இதனால் அந்த மரம் விரைவில் பட்டுப்போய்விட்டது. இதன் காரணம் கண்டறியப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்கள். இப்போது அங்கு இருக்கும் கோயில் குஷான் வம்சத்து மன்னர் ஹவிஷ்கா என்பவரால், கிறிஸ்து பிறந்ததையொட்டிய நாட்காட்டியின்படி அதன் ஆரம்ப வருடங்களில் கட்டப்பட்டது. புத்த மதத்தினர் மீது ஹிந்து மதத்தினர் செய்த கொடுமைகள் அநேகம். புத்தகோஷ் என்ற பெயருடைய புகழ்பெற்ற புத்தமத ஞானி கி.பி. நான்காம் நூற்றாண்டில் இலங்கையிலிருந்து அந்த மரத்தின் ஒரு கிளையைக் கொண்டு வந்தார். சிங்கள மொழியிலிருந்து பாலி மொழியில், புத்தமதத்தின் வழி வழிவந்த மூல நூல்கள் அனைத்தையும் மொழிபெயர்த்து அதையும் அவர் தன்னுடன் கொண்டு வந்தார். அதன் விளக்கக் கதைகளுடன் சேர்ந்த தொகுதியாக இப்போது அவை கிடைக்கின்றன. புத்தகோஷ் இலங்கையிலிருந்து கொண்டு வந்து வளர்த்த மரமும், சிறிது காலத்திற்குப் பிறகு பல்கு ஆற்றின் வெள்ளத்ததல் சாய்ந்துவிட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஆங்கிலேய அரசாங்கத்தில் தொல்பொருள் பாதுகாப்புத்துறை இந்த இடத்தில் அகழ்வு ஆராய்ச்சி செய்தபோது அந்தக் கோயிலின் முதல்தளம் முழுவதும் மண்ணில் புதையுண்டு இருந்ததைக் கண்டறிந்தார்கள். பல நூற்றாண்டுகளாக கவனிக்கப்படாமல் போய்விட்ட அந்த முதல்தளம் மண்ணில் மறைந்து கிடந்தது. அதன் மேலிருந்த இரண்டாவது தளம், இப்போது சாலையின் மட்டத்துக்கு சமமாக இருந்தது. அதில் இருந்த புத்தரின் தாய் மாயாதேவியின் கருங்கல் சிலையை புத்தர் என்று நினைத்து யாத்திரிகர்கள் வழிபட்டு வணங்கி வந்தார்கள். இப்போது மண்ணிலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற, அந்தப் புதையுண்டு கிடந்த முதல் தளத்தின் பின்னால் இருக்கும் மரம், அந்த முதல் போதிமரம் இருந்த இடத்தை அடையாளம் காட்டுவதாக இருக்கலாம். ஏனெனில், அதற்கு முன்புறம் பகவான் புத்தரின் சிலை, தரையில் அமர்ந்த கோலத்தில் (பூமிஸ்பர்ச முத்ரா) கோயிலுக்குள் இருக்கிறது. அந்தக்கோயில் புத்தரின் காலத்திற்குப் பிறகு பல நூற்றாண்டுகள் சென்ற பிறகு கட்டப்ட்டது.*

*வணக்கத்திற்குரிய சுவாமிவி வேகானந்தா சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்த இடத்திற்குச் சென்று வழிபட்டு வணங்கினார். இந்த இடத்துக்கு மூன்று நாட்கள் யாத்திரையாக வந்த சுவாமி, அசோகர் கல்வட்டத்தின் அருகில் ஒரு இடத்தில் அமர்ந்து தியானம் செய்தார் - தொகுப்பாசிரியர்)*

யாத்திரிகள் தர்மசத்திரத்துக்கு பகல் 1.15 மணிக்கு திரும்பி வந்தேன். பகவான் புத்தர் தவம் செய்த இடம், ஞானம் பெற்ற இடம் ஆகியவற்றை, பகவான் புத்தரின் காலத்தில் எப்படி இருந்ததோ அதே அளவுக்கு சக்தியூட்டினேன்.

**சைதன்ய மகாப்பிரபு கூறியது:**

''சகோதரா, நீங்கள் நாடியாவில் எனக்கு மிகவும் மகிழ்வளிக்கும் விதத்தில் பணியைச் செய்திருக்கிறீர்கள். எனக்கு எத்தனையோ சீடர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த வேலையை நான் அவர்களுக்குக் கொடுக்கும் அளவுக்கு அவர்களில் யாரும் அவ்வளவு திறமை பெற்றவர்களாக இல்லை. இப்போதைக்கு, இதற்குமேல் நாடியாவில் நீங்கள் கவனம் கொடுக்க வேண்டியதில்லை என்று வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டர் கருதுகிறார்.''

**சுவாமி விவேகானந்தா:**

''மீதி இருக்கும் வேலையை நீ ஷாஜஹான்பூரில் உன் இருப்பிடத்திலிருந்தே செய்யலாம். இம்மாதிரி வேலைக்கு நீ நேரில் அங்கு இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. இது உனக்கு வழக்கமான வேலைதான். ஆயினும் உன்னை இங்கே மேலும் இரண்டு நாட்கள் நிறுத்தி வைத்துக்கொள்ள விரும்புகிறேன்.''

''I2 - இந்தப் பயணம் முழுவதும் உன்னுடனேயே இருந்தார். இந்தப் பயணத்தின் சிரமத்தை குறைப்பதற்கு அதிகபட்சமாக அவர் முயற்சி செய்தார். ஒரு நல்ல சீடனின் வேலை இதுதான். அவர் உனக்குச் செய்த சேவைகளுக்கு நல்ல பரிசு அளிக்கப்படும். இது என் வாக்குறுதி. நீ செய்துள்ள பணியில் பகவான் புத்தரும், சைதன்ய மகாப்பிரபுவும் மிகவும் திருப்தியடைந்திருக்கிறார்கள். இந்தமாதிரி வேலையை ஏதோ ஒரு சாதாரண ஆசாமியிடம், ஆன்மீகத்துறையில் குறைபட்ட வளர்ச்சியடைந்திருக்கும் மனிதரிடம் ஒப்படைக்க முடியுமா? இந்த வேலைக்கு உன்னைவிடப் பொருத்தமானவர் வேறு யாரும் இல்லை. உன்னை மாஸ்கோவுக்கு அனுப்ப நான் விரும்புகிறேன். அங்கே உனக்கு நிச்சயமான வேலை இருக்கிறது. ஆனால், அங்கே நீ எப்படிப்

போகமுடியும்? நீ மாஸ்கோ செல்வதற்கு யாராவது ஏற்பாடு செய்யத் தயாராக இருக்கிறார்களா? அப்படி யாராவது இதற்கு முயற்சி செய்தால், அந்த மனிதர் எவ்வளவுதான் கொடியவராக இருந்தாலும், நிச்சயம் அவருக்கு முக்தி அளிக்கப்படும். (அவருக்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும்)''

## 10-4-1949 (நேரம் காலை மணி 7.45)

### சுவாமி விவேகானந்தா:

''கயாவில் உன் வேலை செய்து முடிக்கப்பட்டுவிட்டது. ஆயினும் மேலும் இரண்டு நாட்கள் உன்னை இங்கே நிறுத்தி வைத்துக்கொண்டேன். (சிறிது இடைவெளி) பீஹாரின் கண்ணுக்குத் தெரியாத முனிவரை நான் பதவியிலிருந்து நீக்கிவிட்டேன். இனிமேலும் அவர் குதுப் (Qutub / துருவா) என்ற பதவியில் நீடிக்க முடியாது. அவர் இந்த வேலைக்குத் தகுதியற்றவர். அவர் M1 - ஐப் போல மாறியிருக்கிறார். எந்த விதத்திலும் அவரை நான் மன்னிக்கப் போவதில்லை.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''பிரியமான ராம் சந்த்தருக்கு எத்தனையோ மிகப்பெரிய பணிகள் நியமிக்கப்பட்டுள்ளன. தனது சக்திக்கு அப்பாற்பட்ட வேலையையும் செய்து முடிக்கக்கூடிய அவரைப்போல வேறு யாரும் இருந்ததில்லை. இப்போது மாஸ்கோவில் உனக்கு வேலை இருக்கிறது. நீ வேலை செய்யாமல் இந்தப் பணியை செய்து முடிக்க முடியாது. கடவுள் மிக மிக மேலான நிலையில் இருப்பவர். அவரால் அனைத்தும் செய்ய முடியும். கடவுளே செய்யவேண்டிய மிகவும் சிரமமான காரியங்கள் உனக்கு கொடுக்கப்பட்டன; இவையனைத்தையும் நீ செய்து முடித்திருக்கிறாய்.''

## 11-4-1949

### சுவாமி விவேகானந்தா:

''ராம் சந்த்தரின் காயஸ்தா ஜாதிக்கே உரிய மூளையைப் பாருங்கள். நன்றி தெரிவிக்கும் விழாவை நடத்துகிறார். எவ்வளவு அழகாக அவர் தன்னை வெளிப்படுத்துகிறார்! (தன் கருத்தை தெரிவிக்கிறார்) அது அவரே

சொந்தமாகச் செய்த வேலை; ஆனால் அதற்காக வெற்றியை நமக்கு உரியதாகச் சொல்கிறார்.''

**வணக்கத்திற்குரிய மகான் கபீர்:**

''நீங்கள் இப்போது பனாரஸ் (வாரணாசி) போகிறீர்கள். அங்கிருந்து எந்த அருள் சக்தியும் வெளிப்படாதபடி கபீர் சௌராவை அழித்துவிடுங்கள்! இப்போது எங்களுக்கான தேவை உலகில் இல்லை. இது உங்களுடைய ஆட்சிக் காலம். எனவே கபீர் சௌராவில் ஏதாவது அருள் சக்தி மீதியிருந்தால் அதை நீங்கள் எடுத்துவிட வேண்டும் என்பது என் கருத்து. நான் என்னைப் பொறுத்தவரை இதைச் சொல்கிறேன். மற்றவர்களைப் பொறுத்தவரை அது அந்த முனிவரின் விருப்பம்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''ஒரு மனிதன் தான் செய்கிற செயல் அனைத்தையும், கடவுளுடன் சம்பந்தப்படுத்திவிட்டால் அதனால் எவ்வளவு பெரிய நன்மை உண்டாகும்! எந்த ஒரு ஆன்மீகச் செல்வத்தையும் நான் என்னிடம் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. என் ஆயுள் முழுவதிலும் நான் சம்பாதித்த அத்தனை ஆன்மீக நிலைகளையும், சக்திகளையும் நான் ஏற்கெனவே மாற்றிக் கொடுத்துவிட்டேன். இப்போது நான் சம்பாதிக்கின்றவைகளையும் உனக்கு மாற்றி அனுப்பிவிடுகிறேன். சில மாதங்களுக்கு முன்புதான், நான் புதிதாக சம்பாதித்த அருள்நிதியை உனக்கு அனுப்பினேன். இப்போது மீண்டும் அப்படியே செய்கிறேன். உண்மையாகவே தகுதி உடையவராகிய, ஏற்புத்தன்மை உடைய பாத்திரமாகிய ஒருவருக்கு என் செல்வத்தை நான் ஏன் மாற்றிக் கொடுக்கக்கூடாது? இந்த அற்புதம் அனைத்தும், சகோதரா, வலுவான இணைப்பை உடைய உறவினால்தான். – இல்லை, முழுமையான ஐக்கியத்தினால்தான் - இல்லை, அதுவும் கூட இல்லை. பூரணமாக தன்னையே தன் குருவாக இனம் கண்டு லயித்திருப்பதால்தான் சாத்தியம். இந்த ஆன்மீகச் செல்வம் தானாக குருவிடமிருந்து சீடனுக்கு மாற்றப்படுவதை தடுத்துவிட முடியாது. இம்மாதிரி ஒரு சிறப்புத் தகுதியை உருவாக்குவதற்கு காலம் நிறைய ஆகும் என்பதில் சந்தேகமில்லை. வெறும் ஒரு இடைப்பட்ட காலத்திற்கு மட்டுமே, புதிதாக அடையப்பட்ட ஆன்மீகச் செல்வத்தை நான் என்னிடம் வைத்திருக்கிறேன்.''

**13-4-1949 பனாரஸ் (வாரணாசி) நேரம் காலை மணி 11.45:**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘நேற்று (12-4-1949) நீ கயாவிலிருந்து பனாரஸ் போகும் வழியில், உனக்கு இந்த வேலையைக் கொடுத்தேன். அந்த வேலையில் இப்போது முனைந்து ஈடுபட்டிருக்கிறாய். இந்த இடத்தின் ஒவ்வொரு மூலைக்கும் ஒளியூட்டு. கங்கை நதிக்கரையோரமும், அதில் உள்ளடங்கும். இப்படி ஒளியூட்டுவதால் இங்குவரும் மக்களுக்கு மிகப்பெரிய நன்மை கிடைக்கும். கோயில்களை தனியாக சிறப்பான விதத்தில் ஒளிகொடுக்க வேண்டியதில்லை. இந்த வேலையை அவசரமாகச் செய்ய வேண்டிய தேவையும் இல்லை. பனாரஸ் எவ்வளவு சீர்கெடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார். ஒழுக்கக்கேட்டின் துர்நாற்றம் வீசும் அந்தப் பகுதிகளை நீ இன்னும் பார்க்கவில்லை.’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘பழங்காலத்தில் இது மிகச் சிறந்த வித்யாபீடமாக (கல்வியறிவில் மேன்மைபெற்ற நகராக) இருந்தது. வித்யா – வேதங்களின் ஞானம் இன்னும் இங்கே இருக்கிறது. அதை வைத்து புரோகிதர்கள் பிழைக்கிறார்கள். வேத ஞானம் என்பது ஒரு ‘வாள்’ போன்றது. அது அவர்கள் மீது விழுந்தால் அவர்கள் கழுத்தையே அறுத்துவிடும். இந்த மாதிரி விஷயங்களை இந்த இடத்திலிருந்து தடை செய்யவேண்டிய காலம் இப்போது வந்திருக்கிறது. அழிவுப் பணிக்கு கூர்மையான வாள் எப்போதும் தேவை. அதைப் பயன்படுத்தும் சுதந்திரம் உனக்கு இருக்கிறது. இதுவும் உன் வேலைக்கு உட்பட்டதுதான். ‘தகுதியற்ற விஷயங்களை யெல்லாம் ஒழித்துவிட வேண்டும். உன்னிடம் ஏற்கெனவே இருக்கின்ற அழிவு ஆயுதம் இயற்கையே உனக்கு அளித்தது. அது மேலைநாடுகளின் நவீன ஆயுதங்கள்போல செயலற்றுப் போகாது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் சக்ராயுதம் நீ பயன்படுத்தக்கூடிய கடைசி ஆயுதம். ஆனால் அதற்கு உனக்கு வழிகாட்டுதல் அளிக்கப்பட்டாலன்றி அதைப் பயன்படுத்தக் கூடாது. இங்கு இருக்கும் பண்டாக்களின் (பூஜாரிகளின்) ஒளியை அணைத்துவிடு. இந்த வேலையை நீ இங்கிருந்தும், ஷாஜஹான்பூருக்குத் திரும்பிச்சென்ற பிறகும் தொடர்ந்து செய். உன் வேலையில் ஒரு பகுதியை I2 - இடம் கொடுத்து செய்யச் சொல். ஆனால், எளிதான வேலைகள்தான் கொடுக்க வேண்டும். அதை முடிக்கும் சமயத்தில் நீ ஒரு உந்துதல் தரவேண்டும். I2 - ஏற்கெனவே கயாவில் இப்படி ஒரு சக்தி அளிக்கப்பட்டுள்ளார். வேலையைத் தொடர்ந்து செய்.’’

**வணக்கத்திற்குரிய பக்த மீரா:** *(மத்திய கால இந்தியாவின் கவி அரசி, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் மீது தலைசிறந்த பக்தி பாடல்களை இயற்றி புகழ் பெற்றவர்):*

‘‘நீங்கள் மிக மிக உயர்ந்தபட்ச ஆன்மீக முன்னேற்றம் அடைந்திருக்கிறீர்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்போது உங்கள் பிராணாஹூதி எனக்கு ஏராளமான அனுபவம் தந்திருக்கிறது. அதற்குமேல் கொடுப்பதற்கு உங்களுக்கு உத்தரவுகள் இல்லாததால், அதை மேலும் தொடரவில்லை. என் ஆயுட்காலம் முழுவதும் நான் செய்த முயற்சிகள், பட்ட கஷ்டங்கள் மற்றும் என் அன்பு ஆகியவற்றால் என்னை இந்த உயர்நிலைக்குக் கொண்டு வரமுடியவில்லை. வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் கூட என்ன ஆயிற்று? ஏன் அவர் என்னை இந்த உயர்நிலைக்குக் கொண்டு வரவில்லை என்பது எனக்குப் புரியவில்லை. மனிதன் அடையக்கூடிய உயர்நிலைதான் மிக உச்சமானது என்பது முற்றிலும் சரியானது. (சிறிது இடைவெளி) நீங்கள் என்னிடம் குறிப்பிட்டுச் சொன்ன பிரச்னை வினோதமானது. அதாவது உங்கள் சங்கம் (ராம் சந்த்ரா மிஷன்) வளர்ச்சி அடையாமலிருக்கிறது. மக்கள் அதன் மூலமாக நன்மையைப் பெற நாடி வரவில்லை என்று சொன்னீர்கள். ஒரு பெரும் சாம்ராஜ்யத்தையே கவிழச் செய்யும் அளவு சக்தியை கடவுளால் அளிக்கப் பெற்றுள்ள ஒரு மாமனிதர், இந்த உலகையே தூள் தூளாக உடைத்தெறியக் கூடிய சக்தி உடைய ஒருவர் இம்மாதிரி சாதாரண விஷயங்கள் பற்றி என்னிடம் பேசுவதா! இதன் உண்மை என்னவென்றால் உங்கள் மனப்பான்மை அதில் போதுமான அளவுக்கு இன்னும் ஈடுபடவில்லை என்பதுதான். இல்லையென்றால் மக்கள் விட்டிற்பூச்சிகள் போல இங்கே தேடி வருவார்கள். இது என்ன உங்களுக்கு அவ்வளவு சிரமமான விஷயமா? சாத்தியமில்லாததையே நீங்கள் சாத்தியமாக்கியிருக்கிறீர்கள்! இந்தியாவின் சுயாட்சி முதலிலும், அதன் பிறகு பெரிய கலவரங்களில் ரத்தம் வெள்ளமாக ஓடுவதும் வந்ததே. அதன் விஷயம் என்ன? இவை யாவும் உங்கள் அற்புதங்கள். இந்தியா ஒட்டுமொத்தமாக உயர் வாழ்க்கைக்கு எதிராகப் புரட்சி செய்யும் தன்மையின் சாராம்சத்தை தன்னுள் கொண்டிருப்பதாக இந்த உலகின் அரசியல் மற்றும் இதர தொழில்களில் ஈடுபட்டுள்ள சக்திகள் சிந்திக்கவேயில்லை. இந்தியா அந்தப் புரட்சிசெய்யும் தன்மை இல்லாமல் இருக்காது. இந்த மாதிரி ஒரு தனித்துவம் பெற்ற மகான் மீண்டும் உலகில் தோன்றமாட்டார் என்பதே இதன் காரணமாக இருக்கலாம். எப்படியோ அந்த ஒளி இன்னும் உலகில் இருக்கிறது! இந்தமாதிரி ஒரு மகாபுருஷரை உருவாக்கியிருக்கின்ற வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டருக்கு என்

நன்றிகள். இந்த உலகத்து மக்களே, நீங்கள் அவரைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறீர்கள். இப்போது நான் சொல்கிறேன். அவர் உங்களைத் தெரிந்து கொள்ளாமல் விட்டுவிடப் போகிறார்! உனக்கு எந்த ஒன்றையும் கவிழ்ப்பது குழந்தை விளையாட்டு போன்ற சாதாரண விஷயம்! இந்த ஒரு இணையற்ற சக்தி இப்போது யாருக்குமே கிடையாது என்று உறுதியாகச் சொல்கிறேன். இம்மாதிரி கஷ்டமான வேலைகள் உனக்கு சுலபமானவையாக உள்ளன. உன்னுடைய ஒவ்வொரு பணியையும் பற்றிய எல்லாத் தகவல்களும் என்னிடம் உள்ளன. இம்மாதிரி ஒரு அற்புதக் குழந்தையை என் கைகளில் எடுத்துச் சீராட்ட வேண்டும் போல உணர்கிறேன்.''

**சுவாமி விவேகானந்தா:**

''இது இயற்கையின் கட்டளை. நாங்கள் அனைவரும் அதற்குக் கட்டுப்பட்ட நடக்க வேண்டும். இயற்கையின் ஆட்சி மண்டலத்தில் ஒருவர் இருக்கும் காலம் வரையில் ஆட்சி செய்பவரும் ஆளப்படுகிறவரும் ஒருவரே அல்லது இன்னும் சரியாகச் சொன்னால், இந்த உடல் எவ்வளவு தூரம் அனுமதிக்கிறதோ அந்த அளவு தனது சுய அடையாளத்தை இழந்தவராகி இயற்கையின் நடுவில் இருக்கின்ற ஒருவர் அதனுடன் ஒன்றியவராக இருக்கிறார். (சிறிது இடைவெளி) காடுகளிலும், பனியிலும் ஒருவர் காணாமற்போனால் அவர் திரும்பி வருவதில்லை. மனிதன் நெருங்கிச் செல்லக்கூகூய அதிகபட்ச உயர்நிலை அதுதான்.''

**சிறிது நேரத்திற்குப் பிறகு சுவாமி விவேகானந்தா கூறியது:**

''முதல் முறையாக உன் பிறந்தநாள் விழா லக்கிம்பூர் – கேரியில் நடைபெற இருக்கிறது. அந்த இடத்திற்கு முழுமையாக சக்தியூட்டப்பட வேண்டும். அங்கு காற்றின் ஒவ்வொரு அணுத்துகளும், அந்த நிலமும் (மண்ணும்) மிக உயர்தரமான ஆன்மீக ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். குழந்தைகளை, அங்கு வெளிப்படும் ஆன்மீக சக்தியினால் மூச்சுத் திணறாதபடி பாதுகாக்க வேண்டும். அந்தத் தேதியில் (30-4-1949) நீ எங்கே இருந்தாலும், இதைத்தவிர வேறு எந்த வேலையும் செய்யக்கூடாது. இந்தவகையான வேலையை, திடீரென்று அல்லது எல்லாவற்றையும் உடனே செய்வதை நான் விரும்பவில்லை. இதைச் செய்வதால் சில சமயங்களில் உடம்பு நடுக்கம் உண்டாகும். அது உடம்பின் ரத்த அழுத்தத்தில் சீர்கேட்டை உண்டாக்கும். இதனால் உடம்பின் சமநிலை பாதிக்கப்படும். மிக மிக உயர்நிலையில் உள்ள வேலையைச் செய்யும் திறமை உனக்கு

அளிக்கப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. நீ இந்த நோக்கத்திற்காகவே இருக்கிறாய் என்னும் போது, இந்தவிஷயங்களில் நேரத்தை சேமிக்கக்கூடாது (உடனே செய்யவேண்டும்). (சிறிது இடைவெளி) மாஸ்கோவில் உன் சக்தியை நான் பார்க்கவேண்டும். சாத்தியமானால், இந்த பௌதீக உடம்புடன், நீ அங்கே சுதந்திரமாக வேலை செய்யலாம். அது உன்னுடைய சங்கல்பத்தின் குறிக்கோளாக இருக்கும். எலும்பு துருத்தியிருக்கும் கன்னங்களும், எலும்புக்கூடு போன்ற உடலும் உடைய இந்திய யோகி ஒருவரின் சங்கல்ப சக்திக்கு எதிராக ரஷ்யாவுக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்று பார்ப்போம். உனக்கு எதிராக அது (ரஷ்யா) நிற்க முடியாது. ஸ்டாலின் ஒரு பெரிய தலைவர்தான். சந்தேகமில்லை. ஆயினும் நீ உருவாக்குகிற உலகில் அவர் இருக்க முடியாது. உன்னுடைய தாக்குதலில், பல தலைவர்கள் மறைந்து போவார்கள். ''

*(வணக்கத்திற்குரிய பாபுஜி ரஷ்யாவுக்கு நேரில் போக முடியவில்லை. 1953ம் ஆண்டு துவக்கத்தில் ஸ்டாலின் இறந்தார். அதன்பிறகு அந்நாட்டில் பல்வேறு மாற்றங்கள் நடந்தன. அவை இப்போதும் தொடர்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் - தொகுப்பாசிரியர்)*

### 14-4-1949

**சுவாமி விவேகானந்தா:**

''நீ வேலை செய்யும் முறைகள் விசித்திரமானவை. கடவுளின் விவேகம் உன்னிடம் திகழ்கிறது. உன்னிடம் நாங்கள் ஒப்படைக்கும் எந்த வேலையானாலும், அதை சரியான ஆர்வத்துடன், வெற்றிகரமாக அதை நிறைவேற்றுகிறாய்! பனாரஸ்ஸில் (வாரணாசி) இப்போது நீ செய்து கொண்டிருக்கும் வேலை மிகச்சிறியது. அதற்குப் பிறகு நீ அலகாபாத் போகவேண்டும். அங்கே உனக்கு சிறிது வேலையை நான் கொடுப்பேன். உன் ஆயுதத்தின் கடைசி அடி அந்த வேலையைச் செய்து முடிக்கும். அதைக் கடைசியில்தான் பயன்படுத்த வேண்டும். அப்போது அதை மிகவும் கவனமாக, முழு ஆற்றலையும் செலுத்தாமல் கையாளவேண்டும். சக்திவாய்ந்த முயற்சி தோல்வி அடைய முடியாது. உனக்கு அது விசேஷமாக வரமளிக்கப்பட்டுள்ளது!''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''சகோதரா, நீ என் பெயரை விளங்கச் செய்திருக்கிறாய்.''

**சுவாமி விவேகானந்தா:**

‘‘வேலைகள் இன்னும் இருக்கின்றன. நான் ரஷ்யாவை வீழ்த்தி விடப்போகிறேன். நீதான் என் சார்பில் வேலை செய்யப் போகிறாய்! இந்த இடத்தின் சூழ்நிலை போதுமான அளவு சக்தியூட்டப்பட்டுள்ளது.’’

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘இந்த பனாரஸ் (காசி நகரம்) மிக உயர்ந்த அற்புதமான மகான்கள் தங்கள் பிரசன்னத்தால் அருள் செய்த நகரம். இப்போது இங்கே குப்பையும், அசுத்தமும் தவிர வேறு எதுவுமில்லாமல் போயிருக்கிறது. காலம் எப்படி மாறியிருக்கிறது! எப்படியோ இப்போது உன்னுடைய புனிதமான பாதங்கள் இந்த மண்ணில் பட்டிருப்பதால் இனிமேல் அந்த மோசமான நிலைமை நீடிக்காது. (சிறிது இடைவெளி) எல்லாவற்றையும் இழந்தபிறகு, உன்னை மட்டுமே நான் கண்டறிந்தேன்; மேலும், உன் மூலமாக இரண்டு அல்லது மூன்றுபேர் எனக்குக் கிடைத்தார்கள். அவர்களை அவர்களுடைய குறிக்கோளுக்குக் கடவுள் கொண்டு செல்வாராக! ஆயினும் உனது மூத்த சகோதரர் (M1) திருத்த முடியாத அளவுக்கு கெட்டுப்போய்விட்டார்.’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘அவர் (M1) முக்தியடைந்த ஆன்மாவை ஒரு கூண்டில் அடைக்க முயற்சிக்கிறார். அது அவரால் முடியாது.’’

**15-4-1949**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘பனாரஸ்ஸுக்கு இனிமேல் பிராணாஹுதி கொடுக்கத் தேவையில்லை. இதற்குமேல் அதிகமானால் மக்கள் அசௌகரியமாக, அமைதியில்லாமல் ஆகிவிடுவார்கள். இந்த விளைவை இங்கிருந்து நீக்கிவிட முடியாது.

இன்று காலை மணி 8.20க்கு வணக்கத்திற்குரிய மகான் கபீர் சாகேப் உத்திரவின்படி ‘கபீர் சௌரா’ அதன் அருள் சக்தியை இழக்கச் செய்யப்பட்டது. இங்கிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்த அருள் சக்தி ஏற்கெனவே மிகவும் மங்கிப்போயிருந்தது. இப்போது அதுவும் அங்கே இல்லாமல் போயிற்று.

*(வணக்கத்திற்குரிய மகான் கபீர் வாரணாசி (பனாரஸ், காசி) யில் உள்ள கபீர்சௌரா என்ற இடத்தில் 15 / 16ஆவது நூற்றாண்டில் வாழ்ந்து வந்தார். வாரணாசியின் மிகவும் செல்வந்தரான வியாபாரியும், தனது குருநாதர், கபீருக்காக அனைத்தையும் துறந்தவரும் ஆகிய தர்மதாஸ் என்பவரை தனது பிரதிநிதியாக கபீர் உருவாக்கி அறிவித்தார். கபீர்*

*உயிர்நீத்த பிறகு அந்த தர்மதாஸ் என்பவர் என்ன ஆனார் என்பது பற்றி எதுவும் தெரியவில்லை. கபீர் சௌரா என்ற இடத்தில் இப்போது இருக்கும் கபீரின் குரு பரம்பரை சுரத்டி கோபால் என்பவரிடமிருந்து துவங்குகிறது. இந்த சுரத்டி கோபால் நல்ல கல்வியறிவு பெற்ற ஒரு சீடராக கபீருக்கு இருந்தார். அவர் பிராமண குலத்தைச் சார்ந்தவர். ஒரு எருதின் மீது பெரும் புத்தகக் கட்டை வைத்து எடுத்துக்கொண்டு ஊர் ஊராகச் சென்று மதம் மற்றும் ஆன்மீக விஷயங்களைப்பற்றி உரையாற்றுவது. விவாதிப்பது அவருடைய வழக்கம். கபீரை அவர் முதன்முதலில் சந்தித்ததுபற்றி கீழ்க்கண்டவாறு ஒரு நிகழ்ச்சி சொல்லப்படுகிறது. 'கபீர் என்ற புகழ்பெற்ற மகானின் இருப்பிடம் எது' என்று கிணற்றடியில் நீர் இறைத்துக்கொண்டிருந்த சில பெண்களிடம் அவர் கேட்டார். அப்போது அங்கு இருந்த கபீரின் மகள் என்று கூறப்படுகிற கமலி நகைச்சுவையாக ஹிந்திமொழியில் இரண்டு வரிக் கவிதை ஒன்றைச் சொன்னாள். ''கபீரின் வீடு ஒரு செங்குத்தான மலையின் உச்சியில், ஒரு எறும்புகூட கால் ஊன்றி நிற்கமுடியாத குறுகிய இடத்தில் இருக்கிறது. இங்கே ஒரு பிராமணர் எருதின் முதுகில் பெரிய மூட்டையை வைத்துக்கொண்டு அந்த இடத்துக்கு வழி கேட்கிறார்'' என்று சொன்னார். எனினும், சுரத்டி கோபால் கபீர் சாகேப்பின் மீது மிகவும் பக்தி கொண்ட சீடராக ஆனார். கபீர் உத்திரப்பிரதேசத்தில் உள்ள பஸ்தி ஜில்லாவில், மஹாகர் என்ற இடத்தில் உயிர்நீத்த பின், கபீரின் மகன் என்று சொல்லப்படுகிற கமால் என்பவரை கபீர் சௌராவில் இருக்கும் தலைமை இடத்தையும், மஹாகர் முதலிய இடங்களில் இருந்த சொத்துக்களையும் கவனித்துக்கொள்ளும்படி நியமித்தார். குஜராத்தை தலைமை இடமாகக் கொண்டு கபீர் மார்க்கத்தைப் பின்பற்றும் தரம் தாசி பிரிவு ஒன்று உண்டு. ஆனால் அதற்கும் கபீரின் உண்மையான பிரதிநிதியாக அவராலேயே அறிவிக்கப்பட்ட தர்மதாஸ் என்பவருக்கும் சம்பந்தமில்லை. சுரத்டி கோபாலின் வழிவந்த 8 - வது குருவுக்கு மத்தியப்பிரதேசத்தில் ஒரு பணக்கார வியாபாரி சீடராக இருந்தார். அவருக்கு இந்த 8 - வது குரு தர்மதாசன் என்ற புனைபெயர் கொடுத்தார். இப்போது 1989 கபீர் சௌராவில் இருப்பவர் 23 - வது குரு ஆவார். பாபுஜி சென்ற அந்தச் சமயத்தில் அங்கு இருந்தவர் 21 - வது குரு. அவர் தீவிரமான தேச பக்தராக இருந்தார். சுமார் 50 ஆண்டுகள் – 1972 ஆம் ஆண்டுவரை அவர் அதன் தலைவராக இருந்தார். அவர் காலத்தில் கபீர்சௌரா தேசபக்தர்களின் ஒரு பலமான கோட்டையைப் போல ஆங்கிலேயே ஆட்சிக்கு எதிராகப் போராடுகிறவர்களுக்கு 1947-1948 ஆம் வருடத்திற்கு முன்பு வரை ஒரு புகலிடமாக இருந்தது. சுதந்திர*

*இந்தியாவின் தலைவர்கள் அந்த 21 - வது குருவின் ஆயுட்காலத்தில் கபீர் சௌராவுக்குள் வருவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அந்த இடம் இன்னமும் மகான் கபீருடைய ஒரு நல்ல நினைவிடமாகத் தொடர்கிறது. கபீர் வசித்து வந்த குடிசை வீடு அங்கே இருக்கிறது. கபீரின் வளர்ப்புத்தாய் மற்றும் தந்தையின் சமாதிகள் அங்கு உள்ளன. அடுத்தடுத்து வந்த நான்கு குருமார்களின் சமாதிகளும் அங்கு இருக்கின்றன. மகான் கபீரின் சமாதி என்று சொல்லப்படுகிற ஒன்றும் அங்கே நடுவில் உள்ளது. ஆனால், அந்த சமாதியில் கபீர் உயிர்நீத்த பிறகு மஹாகர் என்ற இடத்திலிருந்து காசி (வாரணாசி) மன்னர் கொண்டு வந்த சில மலர்கள் மட்டுமே அடக்கம் செய்யப்பட்டுள்ளன. மகான் கபீர் உயிர் நீத்தவுடன் அவருடைய உடலை, ஹிந்துக்களும், முஸ்லீம்களும் தங்கள் மதச் சடங்குகளின் படிதான் அவருக்கு இறுதிச் சடங்கு செய்யவேண்டும் என்று தீவிரமாக வாதம் செய்தார்கள். அப்போது கபீரின் உடல் திடீரென்று மறைந்து போய்விட்டது. அவர் உடல் இருந்த இடத்தில் சில மலர்கள் மட்டுமே இருந்தன. அந்த மலர்களைத்தான் இருதரப்பினரும் பங்கிட்டுக் கொண்டார்கள். அந்த மலர்களுக்கு அவரவருடைய மதத்தின்படி இறுதிச்சடங்கு செய்தார்கள். – தொகுப்பாசிரியர்)*

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''வணக்கத்திற்குரிய கபீர் சாகேப் தன் சங்கத்துக்கு ஒரு முடிவு ஏற்படுத்திவிட்டார். ஒரு சூரியனுக்கு முன்னால் நட்சத்திரங்களின் மங்கிய ஒளி தேவை இல்லை என்பதால், அவர் இப்படி இதற்கு உத்திரவு கொடுத்தார்.''

பனாரஸ்ஸிலிருந்து புறப்பட்டு 16-4-1949 அன்று அலகாபாத் சென்றேன். கொடுக்கப்பட்ட உத்திரவுகளின்படி கங்கை நதிப் படுகைக்கு சக்தியூட்டப்பட்டது. ஏப்ரல் 17,18 ஆகிய தேதிகளில் அலகாபாதில் தங்கியிருந்தேன். 19-4-1949 அன்று காலை அலகாபாதிலிருந்து புறப்பட்டு அதேநாள் மாலை கோண்டா சென்றடைந்து R8 - ன் வீட்டில் தங்கினேன்.''

## 27-4-1949 (லக்கிம்பூர் - கேரி)

### சுவாமி விவேகானந்தா:

''C2, ராம்சந்த்தரின் சக்தியைப் பார். (C2 - இன் மூத்த மகளின் மீது) ஒரு நிமிடம் அவர் கொடுத்த பிராணாஹூதி அவளுடைய சரீர அமைப்பு முழுவதற்கும் ஒளியூட்டிவிட்டது. இந்தமாதிரி விஷயங்களை குரைக்கும்

நாய்களிடம் இருந்து நீ எதிர்பார்க்க முடியுமா? ஆயிரம் வருடங்கள் தவம் செய்தாலும் இந்த நிலையை எய்துவது மிகவும் அரிது. இதனால் ஏராளமான நேரம் சேமிக்கப்படுகிறது. எந்தவிதமான சுயமுயற்சியினாலும் இந்த அளவுக்கு உயர்நிலையை எய்துவது மிகவும் சிரமமாகும். இம்மாதிரி வேலையைப் பார்ப்பதற்கு யாருக்கும் காட்சித்திறன் இல்லை, மக்கள் இன்னும் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள்.’’

*(வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் 50 – வது பிறந்தநாள் விழா 30–4–1949 அன்று லக்கிம்பூர் – கேரியில் C2 - இன் வீட்டில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. C2 – இன் மூன்றாவது மகள் K7 - மிகவும் விரைவில் முன்னேற்றம் அடைந்து வருகின்ற ஆன்மீக சாதகராக இருந்தார். அங்கே முக்கியமாக நான்கு அல்லது ஐந்து குடும்பத்தினரும், வேறு சில அப்யாசிகளுமாக மொத்தம் சுமார் 25பேர் அதில் கலந்து கொண்டார்கள். வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீ பாபுஜியின் முன்னிலையில் அந்த விழா நடைபெற்றது. அந்த விழாவைப் பற்றி பாபுஜியின் நாட்குறிப்பில் எதுவும் எழுதப்படவில்லை. அதே இடத்தில் சுமார் 10 ஆண்டுகள், ஒவ்வொரு ஆண்டும் இந்த விழா அங்கு கொண்டாடப்பட்டது. முதலில் வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் கவனத்தை அது கவர்ந்தாலும், பிறகு அவர் அதை ஏற்றுக்கொள்ளாமல், முடிவில் தடை செய்துவிட்டார். C2 - ஏதோ ஒரு சூழ்நிலையில் அந்த வீட்டை குறைந்தவிலைக்கு விற்றுவிட்டார். ஸ்ரீ பாபுஜியின் பிறந்தநாள்விழா அவருடைய ஆயுட்காலத்தில் பெரிய அளவில் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் கொண்டாடப்பட்டபோது, லக்கிம்பூர் – கேரியில் ஒரேஒரு தடவையாவது அவரது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட வேண்டும். ஏனென்றால் அவருடைய பிறந்தநாள் விழா கொண்டாடப்படுவது அங்கேதான் முதலில் ஆரம்பிக்கப்பட்டது என்று பாபுஜியிடம் நான் கேட்டுக்கொண்டேன். மாஸ்டர் தன் வழக்கமான பாணியில், அந்த விழாகொண்டாடப்படுவது முடிந்துபோவதும் அங்கே நடக்காமல் இருக்கட்டும் என்று கூறினார். இதனால் நான் திகைப்படைந்து, இனிமேல் அங்கே அந்த விழா நடைபெற வேண்டுமென்று நான் ஒருபோதும் கேட்கவே மாட்டேன் என்று சொன்னேன். உடனே அவர் இதை நான் ‘ஆரம்பம், முடிவு’ என்ற வார்த்தைகளைக் கொண்டு ஒரு நகைச்சுவையாகத்தான் அப்படிச்சொன்னேன் என்றார். அவருடைய புனிதமான பிறந்தநாள் விழா அவரது பிரியமான சாதகர்களால் (அப்யாசியினால்) உலகமெங்கும் எந்நாளும் கொண்டாடப்படுவதாக. – தொகுப்பாசிரியர்).*

## 2-9-1949 (நேரம் இரவு மணி.10.30)

குறிப்பு: இப்போதைய இந்திய அரசாங்கம் பற்றி இயற்கையின் கட்டளைகள் வந்திறங்கின.

## 11-9-1949

**சுவாமி விவேகானந்தா:**

''மகாவிஷ்ணு (காக்கும் கடவுள் அல்லது படைக்கப்பட்ட பிரபஞ்சத்தைப் பராமரிக்கின்ற கடவுள்) பற்றி உன்னுடைய ராஜயோகத்தின் செயல்திறன் என்ற புத்தகத்தில் சரியாக விவரிக்கப்பட்டுள்ளது. (இந்தப் புத்தகம் வணக்கத்திற்குரிய பாபுஜியின் முதலில் அச்சிடப்பட்ட ஆங்கிலப் புத்தகம் ஆகும்). மூவுலகும் செல்லும் சக்தியுடைய தெய்வீக இசை முனிவரும், பகவான் விஷ்ணுவின் மீது பக்தி உடையவரும், பக்தி மார்க்கத்தைத் தோற்றுவித்தவர். யோகமுறை விஞ்ஞானம், பாஞ்சராத்ர ஆகமம், நாரத பக்தி சூத்ரம் இவற்றின் ஆசிரியருமாகிய, நாரதமுனிவர் பற்றி அதில் கூறப்பட்டிருப்பது முற்றிலும் சரியானது. ஹிந்து மதத்தின் குறுகிய நோக்கமுடைய கொள்கைகள் மறையவேண்டும். பகவான் விஷ்ணுவை வணங்குகிறவர்களுக்கு இது ஒரு எச்சரிக்கை. உன் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள சரியான விஷயத்தை அவர்கள் பார்க்க வேண்டும். அவர்கள் நீ சொல்வதை ஒப்புக்கொண்டாலும் இல்லையென்றாலும், அவர்கள் உன்மீது கடுங்கோபம் கொண்டாலும் பரவாயில்லை. எல்லா விஷயங்களும் அதில் உள்ளது உள்ளபடி சொல்லப்பட வேண்டும். எது தேவைப்படுகிறதோ, அதை நீ செய்யவேண்டும். நீ காலத்தையே மாற்றிக்கொண்டிருக்கிறாய். உன் கருத்துக்களும், உன் குறிக்கோள்களும் பலனளிக்கவேண்டும். மற்ற விஷயங்களைப் போலவே அகஸ்திய முனிவர் பற்றி நீ எழுதியிருப்பதும் சரியானதே. அத்ரி முனிவரை நீ அலட்சியம் செய்துவிட்டாய். அவர் அகஸ்திய முனிவரின் நிலைலயவிட சற்றுகீழே இருக்கிறார். உனக்கு எதிராக பெரும் பிரச்னைகள் செய்கின்ற மனிதர்களை கத்தி முனையில் வைக்கவேண்டிய காலம் வந்து கொண்டிருக்கிறது. உனக்கு எதிரான கடும் கோபமே அவர்களை வேரறுக்கின்ற ஆயுதமாக மாறிவிடும். இந்த விஷயமாக ரத்தம் சிந்துவதை நான் விரும்பவில்லை. ஒரேவிதமான வழிபாட்டை எல்லோரும் பின்பற்றவேண்டும் என்று நான்விரும்புகிறேன். அவர்களுக்கும், இந்தப் புத்தகத்துக்கும் ('ராஜயோகத்தின்' செயல்திறன்) எந்தத் தொடர்பும் இல்லையென்றாலும், ஆதிசங்கரர் பற்றியும், ஹிந்து மதத்தின் பெருந்தலைவர்கள் பற்றியும், தேவையில்லாத பிரச்னைகள் வருமோ என்ற

பயத்தினால் நீ எதுவும் எழுதவில்லை. அவர்களை தனித்தனியாக கையாள வேண்டும். ஹிந்துத்துவம் என்பது ஒரு மதம் அல்ல. அது இப்போது பல்வேறு தனிக்கோட்பாடுகள் அடங்கிய ஒரு கூட்டமைப்பாக இருக்கிறது. வேதமதம் தூய்மையானது. ஆனால் அது மறக்கப்பட்டு விட்டது. ஏதோ ஒரு வகையில் சுயநலம் உடைய மனிதர்களால் தயார் செய்யப்பட்டுள்ள அடிப்படையின் மீதுதான் விரிந்து மதம் நிலைத்திருக்கிறது. நண்பர்களே, பயப்படாதீர்கள். ராம் சந்த்தரை அவருடைய கடமையைச் செய்ய விடுங்கள்.''

## 29-9-1949

*ஆசிரியர் குறிப்பு: (வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் மனைவி 27-9-1949 அன்று ஓரிரு நாட்கள் உடல்நலமின்றி இருந்து மரணமடைந்தார். வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் மீது அவருக்கு பூரண நம்பிக்கை இருந்தது. வணக்கத்திற்குரிய பாபுஜி R2 மற்றும் I2 ஆகிய இருவருடனும் சேர்ந்து அப்பெண்மணியின் ஆன்மீக முன்னேற்றத்துக்கான பாதையை தடையின்றிச் செய்வதற்காக சிரமப்பட்டு வேலைசெய்தார்.)*

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''உனக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள அதிகபட்ச உயர்நிலையை, உன் சக்தியின் மூலமாக உன் மனைவிக்குக் கிடைக்கும்படி நீ செய்வதை நான் விரும்பவில்லை. தனது சொந்த சக்தியால் அவளாகவே எந்த முன்னேற்றநிலையை அடைகிறாளோ அதை அடைந்து அவள் தானாகவே அதில் நீந்திச் செல்லும்படி விடு. அவள் அந்தக் குறிப்பிட்ட மூலையை சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் நீந்திச் செல்லும் சக்தியை நீ அவளுக்குக் கொடுத்தால், அவள் அந்த இடத்தை நிச்சயம் அடைவாள். உன்னுடைய மனத்தின் தூண்டுதல் அதைச் செய்யுமாறு உன்னைக் கட்டாயப்படுத்துகிறது. ஆனால் நான் அதைத் தடைசெய்கிறேன். இந்தப் பெண்மணி வந்திருக்கிற முக்திநிலைக்கு, அதற்கு என்று ஒரு தகுதி வேண்டும். சகோதரா, உனக்கு அவள் எப்போதும் தொல்லைகள்தான் தந்திருக்கிறாள். எப்படியோ, அவளின் காரணமாக நீ பல நிலைகளைக் கடந்திருக்கிறாய். இம்மாதிரி விஷயங்களின் காரணமாக அவளுடைய அன்பு அதிகம் வளரவில்லை. எனினும் உன்னுடைய கடமை உணர்வுக்குப் பாராட்டுக்கள். உனது இந்த உதாரணத்தை அனைவரும் பின்பற்ற வேண்டும். சகோதரா, உண்மையில் இந்தப் பாராட்டுக்கள் எனக்குத்தான். ஒருவரை இத்தனை குறுகிய காலத்தில் இப்படி ஒரு உயர்நிலைக்குக்

கொண்டு வரக்கூடிய வீரர் யாராவது களத்தில் இருக்கிறார்களா? என் சக்தி தான் உனக்குள் செயல்படுகிறது. உண்மையில், அது என்னுடைய சக்தியும் இல்லை. உன் சக்தியும் இல்லை. அது ஒன்றேயாகிய சக்தி. ஒருவர் தன் விருப்பப்படி அதை எனது என்றும், உனது என்றும் சொல்லலாம். R2 - உம் பெருமளவு வேலை செய்திருக்கிறார். ஆனால் அவரை இந்தமாதிரி சந்தர்ப்பங்களுக்காக நீ தயார் செய்து பயிற்சியளிக்க வேண்டியிருக்கும். I2 - ஐப் பார். அது உண்மையிலேயே அற்புதமானது.''

**சுவாமி விவேகானந்தா:**

''யோகப் பயிற்சியின் வரலாற்றிலேயே, ஒருவருக்கு இவ்வளவு குறுகிய காலத்தில் மிக உயர்ந்த நிலையை ஒருவர் கொடுக்க முடியும் என்பதற்கு இதுவே முதல் உதாரணமாகும் என்று நான் சொல்கிறேன் ராம் சந்த்தர். அம்மனிதருடைய சம்ஸ்காரங்கள் வேறு எங்கேயோ இன்னும் இருப்பில் உள்ளன. இவை உன்னைப் பாதிக்காமல் இருப்பதற்காக, அவற்றை அழித்துவிடு. என் குருநாதர் வணக்கத்திற்குரிய ராமகிருஷ்ண பரமஹம்சர், யாருக்கு முக்தியளிக்க விரும்பினாரோ அம்மனிதரின் சம்ஸ்காரங்களைத் தன்னுள் எடுத்துக்கொண்டார். மனிதகுலத்தில் அப்படி ஒரு மகத்துவம் மிகுந்த மகானைக் காண்பது மிகவும் அரிதான ஒன்று. ஆனால் (சம்ஸ்காரங்களை எரித்துவிடுதல் என்ற) இந்தவழி இயற்கையின் விதிக்கு எதிரானது. மனிதர்களுக்கு இது கிடைப்பது மிகவும் அரிது. ஆயினும், இந்த விசேஷ சக்தி உனக்கு வரமாக அளிக்கப்பட்டுள்ளது. ஒரு அவதார புருஷருக்குத்தான் இந்த சக்தி அளிக்கப்படும். ஆயினும், அனைத்து அவதாரங்களுக்கும் இந்த சக்தி அளிக்கப்படும் என்பது அவசியமில்லை. இந்த சக்தியை மிகச் சரியாகப் பயன்படுத்திய ஒரே அவதாரபுருஷர் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்தான். நீ ஒரு அதிசயத்தை, அற்புதமான விஷயத்தை நிகழ்த்தியிருக்கிறாய்! வேறு யாருடைய மனைவியாகவாவது அவள் இருந்திருந்தால், அவளுக்கு முக்தி கிடைப்பது சாத்தியமாகியிருக்குமா? வணக்கத்திற்குரிய உனது மாஸ்டர் அவள்மீது கருணையுடன் இருந்தார். அவளுடைய முக்திக்கு அதுவும் ஒரு காரணம். மரியாதையின் காரணமாக, இம்மாதிரி ஒரு உடம்பை தகனம் செய்யாமல் இருந்திருக்கலாம். உன் காலம் வரும் வரையில் அவளுடைய சாம்பலை எங்காவது பாதுகாத்து வைத்திருக்க முடியாதா? இந்த சாம்பல் சக்தியூட்டப்பட்டு, ஒளி பெற்றுள்ளது. ஒரு மகத்தான மகாபுருஷரின் மனைவியின், மற்றவர்கள் விரும்புகின்ற அதே உயர்நிலையை அடைந்த பெண்மணியின் நினைவை சாம்பலின் வடிவத்திலாவது பாதுகாக்க வேண்டும்! அவளை கடவுளின்

பணியை செய்யத் தகுந்தவளாக உருவாக்கி அனுப்பியிருப்பது அற்புதமான விஷயம். நான் அவளிடமிருந்து வேலையை நடத்திக்கொள்ள விரும்புகிறேன்.''

''அவள் சிறிது காலம் ஓய்வெடுக்கட்டும். அவள் உன் பக்கத்தில் இருந்து வேலை செய்வாள். அடுத்து செய்ய வேண்டியிருக்கும் வேலைக்காக ஒரு மனிதனை உன்னால் உருவாக்க முடியவில்லை. ஆனால் அவளுடைய மரணத்தருவாயில் தேவைப்பட்ட விதத்தில் உன் மனைவியை நீ நன்கு உருவாக்கிவிட்டாய். இங்கே உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு மனிதன் உன்னிடமிருந்து இப்படி ஒரு நன்மையைப் பெற முடியாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. நான் சொல்வதை இந்த இளைஞர்கள் கவனிக்காமலிருப்பது மிகவும் புதுமையாக இருக்கிறது. இப்படி ஒரு உயர்நிலையை அடைந்த பெண்மணிகள் ஒளியுலகில் மிகச் சிலர்தான் இருக்கிறார்கள். இளைஞர்களே! இது உங்களுக்கு ஒரு பாடம் இல்லையா? எல்லா பந்தங்களிலிருந்தும் விடுதலைப் பெற்று, எல்லா எல்லைகளிலிருந்தும் விடுபட்டு, அனைத்து ஆசைகளிலிருந்தும் விடுபட்டு, வாழ்க்கையின் அனைத்துச் செயல்களிலிருந்தும் விடுதலைப் பெற்று, உலகியல் பற்றுக்களிலிருந்து விடுபட்டு, அனைத்து விஷயங்களில் இருந்தும் விடுதலைப் பெற்று, பிரகாசமாக ஒளிவீசிக்கொண்டு அவள் ஒளியுலகிற்குச் சென்றாள். தன் ஆயுட்காலத்தில் பயிற்சி என்று சொல்லப்படும் வகையில் எதையுமே செய்யாமல், ஆன்மீகத் தூய்மையின் இப்படி ஒரு உயர்நிலையை ஒருபெண்மணியால் அடைய முடியும் என்பது எங்கும் காணஇயலாத ஒரு உதாரணம் ஆகும். அவளுடைய ஆன்மீகநிலையைப் பார்த்து நாம் பொறாமை அடைகிறோம். அதாவது நாங்கள் இங்கே ஒளியுலகில் இந்த இடத்தை எதுவுமே செய்யாமல் பெற்றுவிடவில்லை என்று சொல்கிறேன். என் ஆயுட்காலத்தில் நான் எப்போதுமே மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தேன். நீ உட்பட கிட்டத்தட்ட எல்லோருமே இந்த ஆனந்தம் மற்றும் அமைதிநிலைக்கு – எப்போதும் நிலைத்திருக்கின்ற, இடையறாத தெய்வீகப் பேரின்ப நிலைக்கு – வருவதற்கு முன்பு அதேமாதிரி மிகவும் பெருமுயற்சி செய்திருக்கிறோம். அவள் என்னுடைய மகள் ஆகையால் அவளிடம் நான் போகிறேன். நீ சூரியனாக இருக்கிறாய். அவள் இப்போது சந்திரனாக ஆகியிருக்கிறாள். அவளுடைய சாம்பலை (அஸ்தியை) கங்கைநதியின் நீரில் கரைக்க வேண்டிய அவசியமில்லை. இந்த அஸ்தியை பாதுகாக்கவேண்டும். அவளும்

இப்போது உலகின் மிக உயர்ந்த தெய்வீகப் பெண்மணியாகி இருக்கிறாள்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இந்தக் கருத்தை நான் முழுமையாக ஒப்புக்கொள்கிறேன்.''

**சுவாமி விவேகானந்தா:**

''அவளுடைய அஸ்தியை கங்கையில் கரைக்கக்கூடாது என்று நான் உத்திரவிடுகிறேன். அதைப் பாதுகாக்க வேண்டும். இம்மாதிரி தெய்வீகப் பெண்மணியின் எஞ்சியுள்ள சாம்பல் கங்கை நதியின் வெள்ளத்தில் கலந்துவிடக் கூடாது. இதை அவள் நினைவாக ஒரு சமாதி கட்டி அதில் வைக்கலாமே!

*(வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜி அவர்களின் குடும்பத்தாரின் மயானம் ஷாஜஹான்பூரின் எல்லைக்கு வெளியே ஒரு இடத்தில் உள்ளது. அங்கே பாபுஜியின் தந்தை, தாயார், மனைவி, மகன் தினேஷ் சந்திரா, பண்டிட் ராமேஸ்வர் பிரசாத் மிஸ்ரா (R2) மற்றும் ஈஸ்வர் சகாய் (I2) ஆகியோரின் சமாதிகள் உள்ளன. பாபுஜி உயிர்நீத்தபின் அவரது அஸ்தியில் ஒருபகுதி அந்த இடத்தில் அவரது மனைவி மற்றும் பிறருடைய சமாதிகளுடன் சேர்ந்து புதைக்கப்பட்டது. அந்த அஸ்தியில் பெரும்பகுதி ஷாஜஹான்பூர் ஆசிரமக் கட்டிட வளாகத்தினுள் வைக்கப்பட்டு, சமாதியாகக் கட்டப்பட்டது.)*

30-3-1949

**சுவாமி விவேகானந்தா:**

''ஏராளமான சக்தி இங்கே உன்னிடம் இருக்கிறது; ஆனால் இந்த மிஷன் உறுப்பினர்களிடம் ஏராளமான மந்தநிலை இருக்கிறது. நான் ஒரு ரகசியத்தை உனக்குச் சொல்கிறேன்; இதுவரையில் உனக்கு இணையான ஒரு மகாபுருஷர் பிறந்ததில்லை. ஒரு மனிதன் சிந்திக்கக்கூடிய நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணம் கடந்த ஒரு நிலை இது. இந்த உலகில் ஒரு சாதாரண மனிதனாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறாய். ஆனால் ஒளியுலகமாகிய இன்னொரு உலகை நீ ஆட்சி செய்து கொண்டிருக்கிறாய். இது இந்த உலகம் இதுவரை ஒருபோதும் பார்த்திராத, மகத்தான ஒரு குருவாகிய உனது மாஸ்டரின் நல்லாசியாகும். உன் மாஸ்டர் உனக்காகச் செய்தது போன்ற தியாகத்தை வேறு யாரும் செய்யமுடியாது. நான் அவருடைய உதாரணத்தை – அதாவது அவரையே உதாரணமாகப் பின்பற்றுகிறேன். ஆனால், அவர் கையாண்ட வழிமுறை சிந்தனைக்கு

அப்பாற்பட்டது. வேறு யாரும் செய்ய முடியாதது. நீ மற்றும் உன் குரு ஆக இரண்டு மகாபுருஷர்கள் மட்டுமே உள்ளனர்! இங்கு உனது வேலையைச் செய்து முடிப்பதற்காக நீ இவ்வுலகில் தங்க வைக்கப்படவேண்டும்: அதுவே என் பிரார்த்தனை! இந்த மிஷன் இன்னும் உன் மடியில் ஒரு குழந்தை போல இருக்கிறது. நீதான் இதற்காகப் பள்ளம் தோண்டி அஸ்திவாரக்கல்லை நாட்டினாய்! இந்த மிஷன் உறுப்பினர்களைத்தான் சொல்கிறேன் அவர்கள் தூங்கிக்கொண்டே இருப்பார்கள்! காலத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளாமல் இருக்கிறார்கள். உன்னைப்போன்ற மகாபுருஷர் நீண்டகாலத்துக்கு வரப்போவதில்லை என்பதை அறிந்து அவர்கள் எந்நேரமும் தங்களை இந்தப் புனிதமான மனிதரிடம் பக்தியோடு இணைத்துக்கொள்ள வேண்டும். அவர்களின் ஆன்ம விடுதலைக்கு இது ஒன்றேவழி. யாரொருவர் இதைப் பின்பற்றினாலும் அவர் வெற்றியடைவார். உனக்குப்பிறகு இதனால் அவர்களுக்கு அதிகம் பயன் இரக்காது. உன் ஆயுட்காலத்திலே யார் இதைச் செய்கிறார்களோ அவர்களுக்குத்தான் இந்த நன்மை கிடைக்கும். இந்தச் சமயத்தில் இந்தச் சூழ்நிலையில் ஆன்மீக ஆற்றல் நிரம்பியிருக்கிறது. இவ்வுலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் அவர்கள் ஆன்மீக சக்தியை இழுத்துக் கொள்ள முடியும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் வாழ்ந்த காலம் திரும்ப வந்திருக்கிறது. உன் ஆயுட்காலம் வரை அது முழு வீச்சில் இருக்கும். அதன்பிறகு C2 - மிகச் சரியாகச் சொன்னதுபோல, 'அவருடைய பெயரை ஜபம் செய்வதால் மட்டுமே பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உனக்கு ஆன்மவிடுதலை அளித்துவிட முடியாது'. ''

''யமன் (மரணதேவன்) உண்மையில் உன் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறார். அவர் உன் சொல்லுக்குக் கீழ்ப்படியாமல் போனால் அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட யுதிஷ்டிரனை நியமிக்கலாம்.''

*(யுதிஷ்டிரன் பஞ்ச பாண்டவர்களில் மூத்தவர். அவரை தர்மபுத்திரன் என்றும் சொல்வதுண்டு. அவர் தர்மராஜா என்ற பெயரிலும் கூறப்படுகிற எமதர்மனின் அருளால் குந்தி என்ற அரசகுலப் பெண்ணுக்கு மகனாகப் பிறந்தவர், ஹிந்து புராணங்களின்படி யமதர்மராஜன் ஒரு பிறவி முடிந்து மறுபிறவி அடைவதற்கு முன்பு அனைத்து ஆன்மாக்களுடைய பாவ, புண்ணியக் கணக்குகளைப் பராமரித்துவரும் பொறுப்பில் இருப்பவர்; மற்றும் அவரவருடைய பாவ புண்ணியங்களுக்குத் தகுந்தபடி அவர்களை நரகம் அல்லது சொர்க்கத்துக்கு அனுப்புகிறவர் ஆவார்.)*

‘‘நீ யமனை நீக்கிவிட்டு யுதிஷ்டிரனை நியமித்தால் இயற்கை உன்னைத் தடுக்கமுடியாது. ஆனால், இந்த மாதிரி விஷயங்களில் மிகவும் கவனமாக, மிகவும் அரிதாகவே செயல்படவேண்டும். ஏதோ ஒரு சிறிய காரணத்திற்காக ஏற்கெனவே செய்யப்பட்ட வேலையை சீர்குலைக்க முயற்சி செய்ய வேண்டாம். C2 - க்காக, அவருடைய சகோதரி (உன் மனைவி) உன்னிடம் சிபாரிசு செய்தாள் என்பதை கவனிக்கவேண்டும். இது அவர் மீது அவளின் பரிவினால் அவள் செய்த காரியம். அவள் ஒரு நல்ல பெண்மணி. மனம் சுத்தமான பெண். ஆனால், உலகில் அதிகப் பற்று உடையவள், அவ்வளவுதான். அவளுடைய எலும்புகள் அனைத்தும் சக்தியூட்டப் பெற்றுள்ளன.’’

3-10-1949

**சுவாமி விவேகானந்தா:**

‘‘உனக்கு வேறு என்ன வேண்டும்? உன் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வது முக்கியமான பிரச்னையாக இருக்கிறது. உன் வாழ்க்கை மிகவும் விலைமதிப்புடையது மற்றும் எங்களுக்கு மிகவும் பிரியமானது. உனது சக்திகளில் அல்லது உனது பணிகளில் எந்த ஒரு பகுதியையும் வேறு யாருக்காவது மாற்றிக் கொடுப்பது சரியாக இருக்காது. உன் மனைவி இவ்வுலகின் மீதுசிறிதும் பற்றில்லாமல் உயிர் நீத்திருக்கிறாள்!”

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘சகோதரா, உன் உயிர் எவ்வளவு விலைமதிக்க முடியாத உயர்தரத்தில் இருக்கிறது என்பது உனக்குத் தெரியாது. உன் மீது எனக்கு அதிருப்தி ஏதும் இல்லை. என் மீதே எனக்கு அதிருப்தி ஏற்படுவது எப்படி முடியும்? அது தற்கொலை செய்து கொள்வது போலாகும். அப்படி ஒரு விஷயம் எப்படி நிகழ முடியும்?’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘உன் மனைவி எங்கேயும் போய்விடவில்லை. அவள் தன் உருவத்தை மாற்றிக்கொண்டு, இந்த உடம்பை உதறித் தள்ளிய பிறகு எங்கே நிலைபெற வேண்டுமோ அங்கே நிலைபெற்றிருக்கிறாள். நீ வீட்டில் இல்லாத சமயத்தில் உன் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்காக ஒரு முனிவருக்கு உத்திரவிட்டிருக்கிறேன். நீ வெளியூர் செல்லும் சமயத்தில் உன் மாஸ்டரே இங்கு இருந்து பார்த்துக்கொள்வார். அது அவர் கடமையாக இருக்கும். உனது உடல்நலக் குறைபாடுகள் பற்றிய விஷயத்தில், உன்

மனைவி உனக்கு அதிகம் உதவி செய்ததில்லை. (சிறிது இடைவெளி) மகாவிஷ்ணுவின் (உலகைப் பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகிய) சக்திகளின் ஆளுமை பெற்றவனாக நீ இருக்கிறாய் என்பது உனக்குத் தெரியும். நீ தெய்வீகப் பணிக்காக, உன் வீட்டை விட்டு வெளியூர் போக வேண்டியிருக்கும் போது, எந்தச் சமயத்திலும் உன் குழந்தைகளை இந்த சக்தியின் பொறுப்பில் விட்டுச்செல்லலாம். பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு இந்த சக்தி இருக்கிறது. அவர் இதை ஏற்கெனவே உனக்குக் கொடுத்து விட்டார். ஆயினும், அந்த சக்தி உள்ளுறைந்து, தூக்கநிலையில் இருக்கிறது; ஏனெனில் உன் உடம்பு அந்த சக்தியை முழுவேகத்தில் தக்க வைத்துக் கொள்வதற்கு ஏற்றதாக இல்லை. தேவைப்படும்போது அந்த சக்தியை நீ பயன்படுத்தலாம். C2, இது எவ்வளவு ஆச்சரியமானது! (கடந்த காலத்தில் இம்மாதிரி சக்திகள் ஒன்று அல்லது இரண்டு ஒரு மனிதருக்கு அளிக்கப்பட்டதற்கு உதாரணங்கள் உண்டு. எனினும் நமது பிரியமான ராம் சந்த்தரிடம் இந்த சக்திகள் முழுவதும் உள்ளன. இங்கேயும் இதற்குப் பிறகும் நான் அவரிடமிருந்து வேலை வாங்கிக் கொள்வேன். இதில் கஷ்டம் என்னவென்றால் அவர் தன்னை மறந்தநிலையில் பூரணமாக இருக்கிறார். அவருடைய குரு தான் அவருடைய கடவுள். அதற்குமேல் அவருக்கு எந்த நாட்டமும் இல்லை. அவர் இன்னும் அதே நிலையில்தான் இருக்கிறார். கடவுள் என்பது என்ன என்று அவருக்கு ஞாபகம் இல்லை. ஒரு மரியாதைப் பண்புக்காக மட்டுமே, சிலசமயம் அவர் இந்த நிலைக்கு மேல் செல்கிறார்.)''

29-1-1950

**சுவாமி விவேகானந்தா:**

''வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பெயரால் நீ ஒரு மிஷன் ஆரம்பித்திருக்கிறாய். அது இன்னும் உன் கைகளில் சிறு குழந்தையாகவே இருக்கிறது. அது வளர்ச்சியடைய வேண்டும். காலப்போக்கில் உலகம் முழுவதும் இது மேலோங்கிய நிலையை அடையும். ஒரு உந்து சக்தியாக இது ஒன்றுமட்டுமே விளங்கும். இந்த மார்க்கத்தில் உயர்ந்த மகாபுருஷர்கள் வருவார்கள். எல்லாப் பயிற்சிமுறைகளின் கடிவாளங்களும் ஒரே ஒன்றுக்குள் ஈர்த்துக்கொள்ளப்படும். இந்தியா நீ இன்று பார்ப்பதைப்போல இங்கேயே தங்கிவிடும் என்று நினைக்கிறாயா? அது தன்னுடைய கரங்களை கடவுளின் மண்டலம் முழுவதும், அதாவது உலகம் முழுவதும் நீட்டிக்கொள்ளும். நீ முன்பு கேள்விப்பட்டதுபோல அதே மாதிரி ஒரு

தலைமை இடத்தைப் பெறும். ஆனால் நீதான் அந்த நாளையும், நேரத்தையும் உருவாக்கப்போகிறாய்.''

## 1-2-1950 (நேரம் இரவு மணி 9.00)

**சுவாமி விவேகானந்தா:**

''நேருவுக்குப் பாதுகாப்பு கொடு. இன்று மட்டுமாவது சிறிதுநேரம் அதற்கு ஒதுக்கு. K7 - தொலைதூரத்தில் இருக்கிறாள். எனவே, உடனே தொடர்பு கொள்ள முடியவில்லை. இந்த காங்கிரஸ்காரர்கள் தங்கள் தொப்பையை நிரப்புவதில்தான் ஆர்வமாக இருக்கிறார்கள். இம்மாதிரி பிராணிகள் இந்தியாவில் இருப்பதை நான் விரும்பவில்லை. நீ உனது சொந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அதிலிருந்து மக்கள் தீரம் மிகுந்த வீரர்களாக வெளிவரவேண்டும். இக்காலத்திய சமுதாயம் ஒவ்வொரு வகையிலும் ஆபத்தானதாக இருக்கிறது. நமது சகஜமார்க்கப் பயிற்சி முறை தான் எந்நாளும் நிலைத்திருக்கும். உன்னுடைய நிகழ்ச்சி நிரலைத் திட்டமிட்டு வைத்துக்கொள். ஒரு தூய்மையான மத அமைப்பு மற்றும் முற்றிலும் அரசியல் சார்ந்து மிகச்சிறந்த குணநலன்கள் உடைய மனிதர்களைக் கொண்ட ஒரு அமைப்பு இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் K7 - உனக்கு உதவி செய்ய முடியும். அவளுக்கு ஏதாவது வேலையைக் கொடு. அந்த வேலைக்கு நீதான் பொறுப்பு; எனவே, அந்த வேலை சரியாகச் செய்யப்படுகிறதா? என்று நீ கவனிக்கவேண்டும். I2 - ஒருவருக்குத்தான் இந்த எல்லா விஷயங்களும் தெரிய முடியும். இது தெய்வீகப் பணி. எனவே, இதை மிகவும் விழிப்புடன், சரியாகச் செய்ய வேண்டும். இந்த விஷயங்களுக்கு எதிராக பயிற்சி அவசியமில்லை. காலப்போக்கில் இதற்கு அழிவு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. யாராலும் அதைத் தவிர்க்க முடியாது. மிக முக்கியமான தன்மை கொண்ட வேலை இப்போது வந்து கொண்டிருக்கிறது. லக்கிம்பூருக்கு நீயே நேரில் செல்வது நல்லது. நீ அங்கே வரும்போது உன்னை வரவேற்க ரயில்நிலையத்துக்கு வரும்படி அங்கிருப்பவர்களுக்குத் தெரிவித்துவிடு. அங்கு வேலை செய்யும் வழிமுறையை K7 - க்கு விளக்கிச்சொல். அவள் ஒரு சாதாரணப் பெண் அல்ல. உன்னைப்போலவே அன்பில் எரிந்து கொண்டிருப்பவள் மற்றும் உயர்நிலைகளை எய்திக்கொண்டிருப்பவள்.''

## 15-2-1950

**குறிப்பு:** 6-2-1950 அன்று K7, தன்னடக்கம் (இப்த் / idb) என்ற புள்ளிக்கு பரப்பிரம்மாண்ட மண்டலத்தில் முழுமையாகச் சுற்றி அனுபவம் பெற்ற

பிறகு கொண்டுவரப்பட்டாள். 14-2-50 அன்று அவளுடைய தங்கை பிரம்மாண்ட மண்டலத்துக்குக் கொண்டு வரப்பட்டாள். இதற்காக அவள் மிகவும் ஆர்வமுடன் ஏங்கிக்கொண்டிருந்தாள். ஆனால் சுயமுயற்சியால் அவளால் முன்னேற முடியவில்லை.

10-3-1950

ஷாஜஹான்பூரில் நடந்து கொண்டிருக்கும் ஜாதிப் பிரச்னைகளை அமைதிப்படுத்துவதற்கு உத்தரவுகள் பெறப்பட்டன. அதன்படியே செய்யப்பட்டது.

**சுவாமி விவேகானந்தா:**

''இளைஞர்களே, ராம் சந்த்தரின் நல்ல ஆரோக்கியத்திற்கும், நீண்ட ஆயுளுக்கும் நீங்கள் பிரார்த்தனை செய்ய வேண்டாமா? இயற்கை அவரை இவ்வுலகில் வைத்திருக்க விரும்பவில்லை. அவர் இங்கிருந்து பறந்து சென்றுவிடாமல் நாங்கள்தான் தடுத்துக்கொண்டிருக்கிறோம். நான் கூறியது போல நீங்கள் அனைவரும் இதயபூர்வமாக அவருக்காகப் பிரார்த்தனை செய்வதற்கு ஒன்று சேருங்கள்! அவருடைய மரணத்திற்குப் பிறகு அவர் இன்னும் அதிகமான சக்தியுடன் இருப்பார். ஆனால் இங்கே அவரது வேலை பாதிதான் நடந்திருக்கும். உங்கள் ஆன்மீக குரு உடல் நலம் மிகவும் குறைந்தவராக இருக்கிறார்; அதை நீங்கள் அனைவரும் பார்க்கிறீர்கள்; அப்படியிருந்தும் அவர் நலம் பெறுவதற்காக பிரார்த்தனை கூடச் செய்யாமலிருப்பது என்ன மாதிரி ஒரு மனோபாவம்? உங்களுக்கு இந்த எண்ணம் தானாகவே வந்திருக்க வேண்டும். அவர் வணக்கத்திற்குரிய தன் மாஸ்டருக்காகப் பிரார்த்தனை செய்தார் என்ற இந்த உதாரணத்தைக் கூட நீங்கள் பின்பற்றவில்லை. பிரார்த்தனை செய்வதால், அவருடைய உடல்நிலை தேறுவதற்கான மருந்தாக மாறுகின்ற ஒருவிதமான மின்சக்தியை நீங்கள் உற்பத்தி செய்கிறீர்கள். மக்கள் அவரிடமிருந்து நன்மைபெற விரும்புகிறார்கள். ஆனால், அவருக்குத் தேவையான ஊட்டச் சத்தை அவர்கள் கொடுப்பதில்லை. அவருக்குப் பழங்களையும், பாலும் கொடுக்கும்படி நான் கேட்கவில்லை. ஆனால், அவருக்கு உண்மையான ஊட்டத்தை அளிக்கக்கூடிய எண்ணத்தின் ஆற்றலைக் கொடுங்கள். இது அவரிடம் நம்பிக்கையுடைய அனைத்து சீடர்களுக்குமான ஒரு ஆலோசனையே அன்றி பொது அறிவிப்பு அல்ல. இப்படிப் பிரார்த்தனை செய்வது தியானம் செய்வது போல தினமும் செய்யவேண்டிய ஒன்றாகும். இப்படிப் பிரார்த்தனை செய்கிறவர்கள் தாங்களும் நன்மை அடைவார்கள்.

அது மிக முக்கியமான பாடம்; அந்த எண்ணத்துடன் அவர் வேலை செய்தால், ஒருநிமிடத்தில் மனிதர்களை தன்மை மாற்றம் அடையச்செய்யக் கூடிய இப்படி ஒரு மகாபுருஷரை நீங்கள் இழந்துவிடக்கூடாது. நிறையப்பேர் இம்மாதிரி பிரார்த்தனை செய்தால் அவர் கட்டாயம் உடல்நிலை தேறுவார். அவருடைய நோய்களும் குணமாகும். ஒருவிதத்தில் இது எனக்கு உதவி செய்வதாக ஆகும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், அவர் தனது வேலையை செய்து முடிப்பதற்கு முன்பு, இந்த உலகை விட்டுச் செல்ல விடமாட்டேன்; ஆனால் அவருடைய உடல்நிலை தேறுவதற்காக பிரார்த்தனை செய்யப்பட வேண்டும் என்று சொல்கிறார். நீங்கள் அனைவரும் அவருடைய ஆயுட்காலத்திலேயே விழித்தெழுந்து வேலை செய்ய வேண்டும். அதற்குப் பிறகு போதுமான அளவு நம்பிக்கையும் பக்தியும் மட்டுமே அவரைக் கவர்ந்து இழுக்க முடியும். இது அவர் தன் குருவிடம் செய்ததைப் போன்றது. எல்லாத் தீமைகளுக்கும் அது நிச்சயமான மருந்து. அவரைப்போன்ற ஒரு குரு இருக்கும் பட்சத்தில், மனிதன் சென்றடையக் கூடிய மிக மேலான உயர்நிலைக்கு அது (நம்பிக்கை) கொண்டு செல்லும். வீண் வம்பு பேசுவதில் சிலர் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ராம் சந்த்தரின் மறைவுக்குப் பிறகு அவர்கள் வருந்தி அழுவார்கள். நமது சத்சங்கத்தில் (ஆன்மீக சகோதரர்களிடம்) ஒரு விசித்திரமான குணம் காணப்படுகிறது. அது அரிதாகவே இருக்கிறது என்றாலும் நிச்சயம் இருக்கிறது. அதாவது, உண்மையில் ஒருவர் சுறுசுறுப்பாக இல்லாவிட்டாலும் கூட, சுறுசுறுப்பாக இருப்பதாக நினைத்துக்கொள்கிறார். இந்தப் பிரார்த்தனையை எத்தனைபேர் விரும்பிச் செய்கிறார்கள் என்று பார்க்கலாம். பலர் இதைச் செய்யாமல் விட்டுவிடுவார்கள். தன் குரு உடல்நலமின்றி இருப்பதைக் கண்டு ஒருவர் வேதனைப் படுகிறார் என்றால் அதுதான் உண்மையில் பக்தி.''

18-6-1950

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''கடவுளின் எல்லையற்ற அருளினால் இன்றைய தினம் நமது அன்புள்ள R2 - அவ்யக்த கதி எனப்படும் புனிதத்தன்மை நிலையில் தனது இருப்பிடத்தை அமைத்துக்கொண்டு, அதில் அனுபவம் பெறுவதற்காக நடக்க ஆரம்பித்திருப்பதை நான் பார்த்தேன்.''

25-6-1950

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘நமது அன்புள்ள R2 - இதய மண்டலம் அல்லது மாயையின் ஐந்து வட்டங்களைக் கடந்து, மனோமண்டலம் அல்லது அகங்காரத்தின் பதினோரு வட்டங்களில் மூன்றைக் கடந்து நான்காவது வட்டத்தில் அடியெடுத்து வைத்துள்ளார்.’’

26-6-1950

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘இன்று காலை 9.30 மணிக்கு C2 - க்கு நிபந்தனையுடன் கூடிய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அவர் மற்றவர்களுக்கு இந்த மார்க்கத்தின் பயிற்சி முறை பற்றி விளக்கிச் சொல்லலாம். பிராணாஹுதி அளிக்கலாம்; ஆனால், அவர் புதிதாகச் சேருகிறவர்களுக்கு தீட்சை அளிக்க முடியாது. இந்த அனுமதியைப் பெறுவதற்கு அவர் மிகவும் விரும்பி ஆசைப்பட்டார். அவருக்கு இந்த அனுமதி அளிப்பதற்கு முன்பு ஒரு குருவாக, வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்ற அவரது தீவிர ஆவல், உண்மையான எண்ணத்தின் வேகம் பெருமளவுக்கு அழிக்கப்பட்டது. ஆயினும், மீண்டும் அந்த ஆசை அவர் மனதில் வருவதற்கு அவர் அனுமதிக்காமல், கவனமாக இருக்க வேண்டும். பிறருக்குப் பயிற்சியளிக்கும் இந்த வேலையை அவர் கடவுளால் கொடுக்கப்பட்ட வேலையாக நினைக்க வேண்டும். இது சம்பந்தமான அனைத்தும் கடவுளிடமிருந்தே வருகின்றன என்று கருதி நடந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் கடவுள் ஒருவர்தான் அனைத்திலும் மிக உயர்ந்த உச்சநிலையின் சக்தியாகவும், அனைவருக்கும் குருவாகவும் இருக்கிறார். அவருக்குத் தரப்பட்டிருக்கும் இந்த அனுமதி சகஜமார்க்கப் பயிற்சி முறைக்கு மட்டுமே ஆகும். அவர் இந்தப் பயிற்சியைப்பற்றி புதியவர்களுக்குச் சொல்லலாம். மற்ற சாதகர்களுக்கு பிராணாஹுதி அளிக்கலாம். ஆனால் புதிதாகச் சேருகிறவர்களுக்கு தீட்சை அளிக்க முடியாது. இதற்கான அனுமதிகள் அனைத்தும் இந்த மிஷனின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டவை ஆகும். அந்தப் பிரதிநிதியாக இருப்பவரே கடவுளின் சிருஷ்டியில் இருக்கும் அனைவருக்கும் ஆன்மீக நன்மையளிப்பதற்காக முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். இது I2 - இனால் எழுதப்பட்டு, வணக்கத்திற்குரிய மாஸ்டரின் கையெழுத்துடன் கூடிய சான்றிதழ். இதை எழுதியவர் I2.’’

29-6-1950

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘ I2 இப்போது அவ்யக்த கதி எனப்படும் புனிதத் தன்மையின் உலகில் அனுபவம் பெற சுற்றி வந்து கொண்டிருக்கிறார்.’’

**சுவாமி விவேகானந்தா:**

‘‘அவர் இந்த மிஷன் சேவையில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். இதுவே அவரது ஆயுட்கால விருப்பமான செயலாக இருக்க வேண்டும். இதனால் அவர் தன் குழந்தைகளை கவனிக்கக்கூடாது, அவர்களுக்கு வேண்டியதைச் செய்யக்கூடாது என்று அர்த்தமில்லை. இந்த மிஷன் சேவையில் அவர் முழுமனதுடன் ஈடுபடவேண்டும் என்றுதான் சொல்கிறேன். இப்போதைய நிலையில் அதன் பொருள் என்னவென்று தெரியுமா? தன்னுடைய மாஸ்டருக்கு சேவை செய்வது மற்றும் கடிதங்களின் மூலமாகவும் சங்கல்பத்தின் மூலமாகவும், வெளிநாடுகளிலும் மிஷன் சேவை செய்தல் ஆகியவைதான்.”

1-7-1950

**சுவாமி விவேகானந்தா:**

‘‘வணக்கத்திற்குரிய ராதை அம்மையார் அவர்களின் வார்த்தைகளை உனக்குத் தெரிவிக்கிறேன். அவர் வேலை செய்வதற்காக களத்தைத் தயார் செய்யும்படி உன்னிடம் சொல்கிறார். போதுமான அளவு அழிவுக்குப் பிறகு மோசமான காலம் கடந்து போகட்டும். நீ இன்னும் தாமதம் செய்துகொண்டிருக்கிறாய்; ஆனால் இயற்கை மாற்றத்தை விரும்பிக் கேட்கிறது. வணக்கத்திற்குரிய ராதை அம்மையார் காளியைப் போல் தலையை விரித்துப்போட்டுக் கொண்டு இக்களத்தில் வேலை செய்வார். அவர் உன்னுடைய சகோதரி. தேவை ஏற்படும் போது நீங்கள் இருவரும் அருகருகே நின்று இயற்கையின் பணியைச் செய்யவேண்டும். காலச் சக்கரம் ரஷ்யாவிலிருந்து திரும்பி வரவேண்டும். இப்போது இந்தியா அதற்கு இலக்காக இருக்கும். ஆனால் அதற்கான உத்தரவுகள் வரும் வரையில் காத்திரு.’’

8-11-1950

**சுவாமி விவேகானந்தா:**

‘‘மாற்றமும் மாற்றமும் - இந்தப் புத்தகம் இப்போது அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.’’

**அன்புள்ள R2 - கூறியது:** *(இவர் 3-11-1950 அன்று ஷாஜஹான்பூரில் மரணமடைந்தார்.)*

''சகோதரா, மதிப்புக்குரிய சகோதரியை (பாபுஜியின் மனைவி) மிக உயர்ந்த நிலைக்கு அனுப்பியிருக்கிறீர்கள். இதை இங்கு வந்தபிறகு நான் அறிந்து கொண்டேன். நானும் கூட, கீழ்நிலையில் தங்கிவிடவில்லை. நான் உயிர்நீத்த பிறகு நான் எல்லா நிலைகளையும் கடக்கும்படி நீங்கள் செய்தீர்கள். இப்போது அந்த உயர் நிலையில்தான் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறேன். என் ஓய்வுநேரம் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. நான் இந்த மிஷன் பணியைக் கைவிடமாட்டேன். என் உலகவாழ்வின் கடைசி நிமிடத்தில் என் மனைவியிடம் நான் என்ன சொல்ல நினைத்தேன் என்பது உங்களுக்குத் தெரியும். என் குடும்பம் சம்பந்தமான விஷயங்களில் எனக்கு கவலை ஒன்றுமில்லை. அதைப் பார்த்துக்கொள்ள நீங்கள் இருக்கிறீர்கள். நமது மிஷன் பற்றித்தான் எனக்கு அதிகமான அக்கறை இருக்கிறது. ஆரம்பத்திலிருந்து நான் என்ன செய்துகொண்டிருந்தேனோ அதே வேலையில் தொடர்ந்து நீடித்திருப்பேன். அதுபற்றி ஆலோசனை கேட்பதற்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் இங்கே இருக்கிறார். என் குடும்பம், என் மனைவியின் தங்கை இருக்கும் ஊருக்குப் போவதை நான் ஆதரிக்கவில்லை. என் உள்ளத்தின் விருப்பம் நான் சொல்லாமலே உங்களுக்குத் தெரிந்திருக்கும். உலகில் சில மனிதர்கள் இயற்கை எல்லாவற்றையும் அவர்களுக்கு அளித்துவிட்டதுபோல மிகவும் கர்வமுடன் இருக்கிறார்கள். ஆனால், அவர்களிடம் ஆன்மீக சாராம்சம் துளியும் இல்லை. ஆன்மீக உணர்வு சிறிதளவும் இல்லை. இந்தியாவில் இப்போது காலச்சக்கரம் செயல்படவேண்டும். ஒருயுத்தம் வரப்போகிறது.''

**சுவாமி விவேகானந்தா (5.12.1950 அன்று இறந்துவிட்ட புகழ்பெற்ற ஆன்மீகத் தலைவர் பற்றிக் கூறியது):**

''அவர் தன் சக்தியைப் பற்றி இருமடங்கு உறுதியோடு ஆணவத்தை வைத்துக் கொண்டிருந்தார். அவருடைய இப்போதைய வாழ்க்கை நிலையில் இப்படி ஒரு மோசமான உள்நிலைக்கு அவர் சென்றிருக்கக்கூடாது. அவரைச் சரிசெய்யும்படி உன்னிடம் நான் சொன்னால் நீ அதைச் செய்வாய் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நான் எதற்காக அப்படிச் சொல்ல வேண்டும்? தன் சங்கல்ப சக்தியினால் ரஷ்யாவின் சக்தியை, திபெத்தின் மீது கொண்டு வந்தார். இயற்கையின் உத்தரவை அவர் சரியாக கிரகித்துக் கொள்ளவில்லை. இயற்கை அதைத்தான் விரும்பியது என்பதில் சந்தேகமில்லை, ஆனால், இவ்வளவு விரைவில் அது நடப்பதை விரும்பவில்லை. அவரது சொந்த சுயத்தினால் உண்டாக்கப்பட்ட ஏராளமான ஆற்றலை அவர் பெற்றிருந்தார் என்பதில் சந்தேகமில்லை. அது

அவர் பங்கில் ஒரு பெரும் தவறாக இருந்தது. அவர் தன்னை ஆளும் திறன் பெற்றிருந்தார். அவருக்கு வழிகாட்ட யாருமில்லை. (சிறிது இடைவெளி) ராதா அம்மையார் இந்த வேலைக்காக மீண்டும் காத்திருக்கிறார். (சிறிது இடைவெளி) அவர் வருங்காலத்தில் இப்படிச் செய்தால் அவரைப் பதவி இறக்கிவிடு."

18–11–1950

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''என் பெயரை போதுமான அளவுக்கு நீ முன்னோக்கிக் கொண்டு வந்திருக்கிறாய். இதனால் அதற்கான தேவை வரும்போது ஒவ்வொரு மூத்த முனிவரும், அந்தக் குறிப்பிட்ட தேவையை நீ நிறைவேற்ற வேண்டுமென்று உனக்கு நான் உத்திரவிடவேண்டும் என்று கேட்டு என்னிடம் வருகிறார்கள். எனவே, சகோதரா, இப்போது நேபாளத்தை அழித்துவிடு.''

**சுவாமி விவேகானந்தா:**

''அங்கு இருக்கும் பூஜாரிகள் குலத்தின் மேலாதிக்கத்தை நான் விரும்பவில்லை.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இப்போதைய இந்திய அரசாங்கத்தைப் பற்றி நான் சில விஷயங்கள் சொன்னேன். அது எல்லா எல்லைகளையும் கடந்த தகுதியற்ற ஒன்றாக ஆகியிருக்கிறது. யாரோ குறிப்பிட்டதுபோல, இப்படி ஒரு சுதேச அரசாங்கத்தை விட ஆங்கிலேய அரசாங்கமே பல படிகள் மேலானதாக இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மற்றவர்களின் உரிமைகள் பற்றிய அக்கறையுடன் இருந்தார்கள். இந்த ஆட்சியை நீக்கவேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக அந்நிய ஆட்சி வந்துவிடக்கூடாது.''

**சுவாமி விவேகானந்தா:**

''இந்த ஆட்சியின் வேரை அல்லது அரசின் தலைமையை நீக்கிவிடு. காலப்போக்கில் தண்டிக்கப்படவேண்டிய சிலர் இருக்கிறார்கள். இந்தமாதிரி விஷயங்களில் பொதுவாக நீ கவனம் செலுத்துவதில்லை என்பதைப் பார்க்கிறேன். நீ எதை சரியென்று நினைக்கிறாயோ அதைச் செய்ய உனக்கு சுதந்திரம் இருக்கிறது. அவர்கள் மக்களுக்கு சுயநலமற்ற சேவைசெய்வதில் ஈடுபடவில்லை. தங்கள் அதிகாரதில், பதவியில் அவர்கள் ஆணவம் கொண்டவர்களாக மாறிவிட்டனர். அதைப்பற்றி நான் பிறகு சொல்வேன். மாஸ்கோ சக்திவாய்ந்ததாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அது

உலகில் விஷத்தைப் பரப்பி வருகிறது. இந்தியா அதைப் பார்த்து அப்படியே செய்ய விரும்புகிறது. ஸ்டாலின் சிந்திக்கின்ற அந்த வழி வளர்ச்சிக்கு அல்லது முன்னேற்த்துக்கு உரிய பாதை அல்ல. உலகின் பிரச்னையை இந்தியா மட்டுமே தீர்க்க முடியும். இந்தியா சிறப்பாக பிரகாசிக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த மூடர்கள் வெளியேறிய பிறகு, போதுமான அளவு அழிவுக்குப் பிறகுதான் அது நடைபெறும். புதிய உலகின் கட்டமைப்பு சாம்பல் மற்றும் எலும்புகளின் மீதுதான் அமையும் என்று நான் பலமுறை உன்னிடம் சொல்லியிருக்கிறேன். நான் இப்போது குறிப்பிட்டதைத் தவிர அதற்கு வேறு தீர்வு இல்லை. அரசாங்கம் பற்றிய இந்தவேலையை K7 - மிக நன்றாகச் செய்ய முடியும். அவள் உனக்குப் பெருமளவு உதவி செய்ய முடியும். இப்போது அவள் முழுமையாக இந்த வேலையையும் மற்றும் இதற்கு அடுத்துவரும் வேலையையும் செய்யும்படிவிட வேண்டும். நீயேகூடப் புரிந்து கொள்ளாத ஒன்றை அவளுக்கு நீ பரிசளித்திருக்கிறாய். ஆயினும் உன்னுடைய பொறுப்பில் இது எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்ல. இந்தப் பிரபஞ்சம் முழுவதற்கும் நீதான் மாஸ்டரே அன்றி, அவள் அல்ல. உன் ஆஸ்த்மாவுக்கு சிகிச்சை பெறுவதற்கு யாராவது ஒரு நல்ல மருத்துவரிடம் செல். முதுமைக் காலத்தில் இது மிகவும் தொல்லையாக இருக்கும். உன் உடல்நலக் குறைவால் வேலை பாதிக்கப்படுகிறது. நான் உன் குருவிடம் பேசுகிறேன்; உனக்கு இந்த நோய் நீடிக்கக்கூடாது. உடல்நலம் பெற்று உன் வேலையில் ஈடுபட்டிரு. உனக்கு பல சீடர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் உன்னை நேசிக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நான் அதைப் பற்றிச் சொன்னபிறகும் கூட, உன் உடல்நலம் பெறுவதற்காக தங்கள் சங்கல்பத்தை அவர்கள் பயன்படுத்தாமலிருக்கிறார்கள் என்பதால் வருந்துகிறேன். வேறு எந்தக் கடமைக்கும் மேலாக இது அவர்களுடைய புனிதமான கடமையாகும். I2 மற்றும் K7 ஆகிய இரண்டுபேர் மட்டுமே தங்கள் சங்கல்பத்தை முழுமையாகப் பயன்படுத்தினால் போதும். இந்த வியாதி நீடிக்க முடியாது. உன் வயிற்றுவலியைப் பொறுத்தவரை அது உன் மாஸ்டரின் மீதான உன் அன்பின் விளைவாகும். அதற்கு வேறு காரணங்களும் உள்ளன. அதுபற்றி உன் மாஸ்டர் உனக்கு சொல்லியிருப்பார்.”

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

‘‘K7 இன்னமும் ஏன் பூஜையில் (வழிபாடு, தியானம் ஆகியவை) ஈடுபடுகிறாள் என்று எனக்குப் புரியவில்லை. ஒருக்கால் பூஜை சம்பந்தமாக சில நிர்ணயிக்கப்பட்ட கருத்துக்கள் அவளுக்கு இருக்கலாம். ஆயினும் மாஸ்டரின் உத்திரவுகளின்படி நடப்பது எல்லாவிதமான பூஜைகளையும் விட மேலானது. பூஜை செய்ய வேண்டிய காலம் முடிந்து விட்டது என்று அவளிடம் சொல். இந்த மாதிரி சரியான எண்ணத்துடன் அவள் தொடர்ந்து நீடித்தால், அவள் முன்னேற்றம் அடைந்து கொண்டே இருப்பாள். இப்போதைக்கு எனக்கு வேலை நடக்க வேண்டும். எவ்வளவு விரைவில் அது செய்து முடிக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு சிறப்பானது.”

**சுவாமி விவேகானந்தா:**

‘‘K7 தன்னை வேலையில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். சில சமயங்களில் வேலைக்கான குறிப்புக்களை அவள் பெறுகிறாள். உள்முகத்தொடர்பு வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால், அது உன்னோடு மட்டும்தான் இருக்கிறது. அதுவும் தேவையான அளவுக்கு இல்லை. இப்போது அவளுடைய முக்கியமான லட்சியம் மாஸ்டருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதுதான் என்பதை அவளுக்குத் தெரிவிக்கவும். அவர் அவளை இருண்ட குகைக்குள் தள்ளிவிட மாட்டார். அவள் அவருக்கு உதவி செய்ய வேண்டும்.’’

6-12-1950

**சுவாமி விவேகானந்தா:**

‘‘பிரபஞ்சமளாவிய மாற்றத்திற்கான விஷயம் இப்போது வருகிறது. அந்த தேதி டிசம்பர் 4, 1950. இரவு 8.30 மணிக்குப் பிறகு. இந்த மாற்றத்தை எப்படிக் கொண்டு வரமுடியும் என்பது உனக்குத் தெரியும். அதாவது உன்னால் முடிந்த அதிகபட்ச அளவுக்கு மையத்தை நெருங்கியிருப்பதன் மூலம் செய்யலாம். கடந்த காலத்து முனிவர்கள் என்று கூறப்படுகிறவர்களால் எப்போதும் அடைய விரும்பப்பட்ட மிக உயர்ந்த இடத்திலிருந்து இந்த உலகிற்கு நீ செய்வது போன்ற ஒரு விஷயம் சாதாரணமான ஒன்று அல்ல. நீ வேலையை ஆரம்பிக்க வேண்டும். நட்சத்திரங்கள் தங்கள் அழகை இழந்து கொண்டிருக்கின்றன. உன்னுடைய வேலை முடியும் வரையில் சூரியனின் அதிக வெப்பம் இப்போது இருக்கிறபடியே இருக்கும். எல்லா இடங்களிலும் சுத்தப்படுத்துவது அவசியமாக இருக்கிறது. இந்த உலகைச் சுற்றிலும் சூட்சுமமான உருவத்தில் சில வட்டங்கள் இருப்பதை நீ காண்பாய். அவற்றை நீ உடைத்துவிட

வேண்டும். நீ வாழும் இவ்வுலகம் மட்டுமன்றி எல்லா இடங்களிலும் இதுதான் நிலைமை. இந்த வேலையை நீயாகவே செய்யும்போது மற்ற விஷயங்கள் பின்தொடரும். இந்தப் பணியை நீ செய்து முடிப்பாய் என்று உறுதியோடு இரு. இந்தப் பணிக்காக பெருமளவு நேரத்தை நீ ஒதுக்கவேண்டும் என்று விரும்புகிறேன்.''

25–5–1951

**சுவாமி விவேகானந்தா:**

''மையம் என்று நீ கூறுகின்ற, சிருஷ்டியின் காரணம் அதுவே என்ற கருத்து சரிதான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், விவரித்துக் கூற சாத்தியமில்லாத அதைப் பற்றி தத்துவ ஞானிகள் எடுத்துச் சொல்வதற்கு வரட்டும். அவர்கள் காரணத்தைக் கொண்டுதான் இதைவிளக்க முடியும்; ஆனால், காரணம் என்பது எப்போதும் சரியானதாக இருப்பதில்லை. ஒரு மனிதனின் சரியான அணுகுமுறை உன்னைப்போல பாலைவனத்தில் (ஏதுமற்ற வெறுமையில்) நீந்திக் கொண்டிருக்கின்றவர்களுடையதாகவே இருக்க முடியும். நான் சரியாகச் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். உன்னைத் தவிர வேறு யாரும் இன்னும் அங்கே நீந்த ஆரம்பிக்கவில்லைல அது உன் மாஸ்டரால் உனக்கு விசேஷமாக அளிக்கப்பட்ட நன்மை. நித்தியமான ஞானத்தை உன்னால் சரியாகப் பற்றிக்கொள்ள முடியும். ஆனால், மூடர்கள் அதை உணர்ந்துகொள்ள மாட்டார்கள். உன் கருத்து சரியானது என்று அறியப்படுவதற்கு நீண்டகாலம் இருக்கிறது. கடவுளின் ஜீவிதம் பற்றிய வேரைக் கண்டறிய இன்னும் யாரும் முயற்சிக்கவில்லை. இந்த வகையில் அதைச் செய்த முதல் ஆன்மா அல்லது மனிதர் நீ மட்டும்தான். உன் கருத்து முழுவதும் சரியானதே.''

''பிரபஞ்சத்தின் படைப்புக்கு முன்பும், பிறகும் ஆகாசம் எனப்படும் வெட்ட வெளிதான் எங்கும் இருந்தது. ஒருக்கால் 'ஒரு' சமயத்தில் ஆகாசம் இருந்தது என்று வைத்துக்கொண்டால், கடவுளின் உருவாக்கம் ஆரம்பித்து, அது ஜீவிதத்திற்கு வருவதற்கு சிறிது காலம் எடுத்துக்கொண்டது எனலாம். ஆனால் ஆகாசம் முடிவற்ற ஒரு விஷயமாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே அதுபோல கடவுளும் நித்தியமானவர் என்று சொல்கிறோம். ஏனென்றால், காலத்தை முன்பே (முன்கூட்டியே) காணமுடியாது. காலம் பிறகுதான் வந்தது. கடவுள் அதற்கு முன்பே இருந்தார். அப்படியானால் ஆகாயம் தான் கடவுளின் படைப்புக்குத் தாய் என்று ஆகிறது. கடவுள் எப்படிப் படைக்கப்பட்டார்? காலம் அதற்கே சொந்தமான எதிர்மறை நிலையாக இருக்கிறது. எல்லாமே – அது எதுவாக இருந்தாலும் சரி,

முடிவற்ற வடிவத்தில் தான் தன் முடிவைப் பெற்றாக வேண்டும். அனைத்திற்கும் அதை நிர்வகிக்கும் (ஆட்சி செய்யும்) ஒரு அதிகார நிலை இருக்கவேண்டும், மேலும் ஜீவிதத்தில் இருக்கும் ஒரு விஷயம், எவ்வளவு தான் அது மங்கலாக இருப்பினும் அதற்கு ஒரு இயக்கம் இருக்கவேண்டும். அது கண்களுக்குப் புலப்படாமலிருந்தாலும் கூட அங்கே அந்தச் செயல்படும் இயக்கம் நிச்சயமாக இருக்கிறது. ஒரு பந்தை நீ உருட்டிவிட்டால் அது அசையாமல் நிற்கும் இறுதி நிலை நிச்சயமாக அதற்கு இருக்கும். அதேபோலத்தான் ஆகாசத்தின் அசைவற்ற நிலைதான் கடவுள். அப்படியானால் கடவுளைப் படைத்தது யார்? ஆகாசம் தான்! ஆகாசத்தைப் படைத்தது யார் என்று மக்கள் கேட்கக்கூடும். கடவுளைப் படைப்பதற்கான தேவையும், பிரபஞ்சத்தைப் படைப்பதற்கான தேவையும்தான். அதுவே இருக்கிறது; அது எப்போதும் நித்தியமாக இருக்கும். (இதைச் சொன்னால்) மக்கள் ஆகாசத்தை வழிபடத் துவங்குவார்கள். ரிக்வேதத்தில் இந்த ஆகாசத்தை ஏதோ ஒருவடிவத்தில் அவர்கள் வழிபட்டார்கள் என்பதைக் குறிப்பிடும் துதிப்பாடல் இருக்கிறது. அதனால், இந்த ரகசியம் அச்சமயத்தில் அவர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. நீ உன்னை ஆகாசத்தைப்போல ஆக்கிக்கொண்டால் தானாகவே அதன் மிக உயர்ந்த நிலையை நீ சென்றடைவாய். நீ செய்ய முயற்சிக்க வேண்டிய சரியான இன்மைநிலை அதுதான். தாய் சந்தோஷமாக இருந்தால், குழந்தையும் நிச்சயமாக அப்படியே இருக்கும். உன் மாஸ்டருக்கு யாராவது சேவைசெய்தால், அதனால் நீ நிச்சயமாக கவர்ந்து இழுக்கப்படுவாய். வார்த்தைகளினால் சொல்லக்கூடிய மிகச்சிறந்த தீர்வு அதுதான். இந்த விஷயம்பற்றி உன் குரு பேசட்டும்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''சகோதரா, இதற்கான தீர்வு உண்மையில் அதற்குப் பதில் இல்லை என்பது போலத்தான் இருக்கிறது. சந்தேகமில்லாமல் அதுவும் சரிதான். ஆனால் இந்த விஷயத்தை உலக மக்களுக்கு எப்படி விளக்கிச் சொல்ல முடியும்? உன்னைத் தவிர வேறு யாருக்கும் இப்படி ஒரு எண்ணம் இதயத்தில் வளர்ச்சி அடையவில்லையே; எனினும் ஆகாசத்தில் செயற்கைத் தன்மை எதுவும் இல்லை என்பதை மக்கள் நிச்சயமாக ஒப்புக் கொள்வார்கள். அதில் அயனிகள் எனப்படும் துகள்களுக்கும் இடமில்லை, அதில் எந்த வசீகரமும், பிரகாசமும் கூட இல்லை. அது முற்றிலும் தூய்மையாக இருக்கின்ற ஒன்றாகும். இதுபற்றி சுவாமிஜி சொன்னதைவிட மேலான கருத்து இருக்க முடியாது. உனக்கு வந்து கொண்டிருக்கும் ஒலி மிக

மங்கியதாக, அந்த முக்கியமான விஷயத்தின் அதிர்வைத் தவிர வேறு எதையும் உன்னால் பற்றிக்கொள்ள இயலாதபடி இருக்கிறது. அதனால் சுவாமிஜி அந்த நிலையிலேயே இருந்து உன்னிடம் பேசிக்கொண்டிருந்தார். அது எப்படியிருந்தாலும் இந்தக் கருத்தில் யாருக்கு நம்பிக்கை இருக்கப்போகிறது? அந்த அளவுக்குச் சென்றிருப்பவர் யார் இருக்கிறார்கள்? இதை மேற்கத்திய மக்களின் சாய்வு நாற்காலி தத்துவமாக (பொழுதுபோகாமல் பேசும் பேச்சாக) யாரும் எடுத்துக்கொள்ளாமல் இருப்பார்களாக!''

**சுவாமி விவேகானந்தா:**

''அது ரிக்வேதத்தின் தொடர்ச்சியாக (அதன் பங்களிப்பு மற்றும் பிற்சேர்க்கையாக) இருக்கிறது. அது ஒரு துதிப்பாடல் செய்யுள். (ஸ்லோகம்) வேதகாலமாக இருந்திருந்தால், இந்தக் கருத்தும் ஒரு மந்திரம் என்ற நிலையைப் பெற்றிருக்கும். தெய்வத்தால் கூறப்பட்ட புனித வார்த்தைகளாக ஆகியிருக்கும்.''

**வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்:**

''எனக்கு ஏராளமான பக்தர்கள் இருந்தார்கள். அவர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் இருந்து, தங்கள் நோக்கங்களுக்காக பணி செய்தார்கள். அவர்கள் அன்பின் மீது மட்டுமே கவனமாக இருந்தார்கள். அவர்கள் அதிலேயே தங்களை உள்ளடக்கிக் கொண்டு, தங்கள் அறிவுத்திறனுக்கு இதுவரை அணுகும் ஒரு விருப்பத்தை வளரவிடாமல் மறுக்கும் அளவுக்கு இருந்தார்கள். உணர்ச்சி பூர்வமான பற்று (அன்பு) மிகையாக இருந்தால் அது ஆராய்ந்து அறியும் திறனைத் தடை செய்கிறது; மழுங்கச் செய்கிறது. ஆனால், அன்பின் மிக உச்சநிலையில் மிக மேலானது என்று சொல்லக்கூடிய இந்தத் தகுதி அங்கு தோன்றுகிறது. இங்கேதான் அல்லது இன்னும் சற்று முன்னேறிய நிலையில்தான். தெய்வீகமான உத்தரவுகள், கருத்துக்கள், அறிவுரைகள் ஆகியவை உண்மையான விதத்தில் வந்திறங்குகின்றன. வேதகால மகரிஷிகளின் உயர்வுநிலை இதற்கு மேலும் முன்னேறியதாக இருந்ததா? நிச்சயமாக இல்லை! அவர்களுடைய பிரம்மச்சரியம் மிகச் சிறப்பானது என்பதில் சந்தேகமில்லை. அதுவே அவர்களுக்கு உதவியாக இருந்தது. இந்தக் கண்டுபிடிப்பு (ஆகாசம் பற்றிய விளக்கம்) ரிக்வேதத்தில் சேர்த்துக்கொள்ளத் தகுதி உடையது இல்லையா? நீ எழுதியிருப்பதை உலகிலுள்ள எந்த தத்துவஞானியும் மறுக்கமுடியாது. அது கடினமாகவும் அதேசமயம் சுலபமாகவும் இருக்கிறது. நீ மையம் என்று

எதற்குப் பெயர் குறித்திருக்கிறாயோ அதுதான் முக்கியம். கடவுளின் உருவாக்க செயல்முறை என்பது அந்த கண்ணுக்குத் தெரியாத அசைவுதான். பிரபஞ்சத்தின் படைப்பு அங்கிருந்துதான் தொடங்கியது. இந்த மையம் என்பது நித்தியமானது. கடவுள் இப்படித்தான் தோன்றினார் என்று மக்களுக்குச் சொல். அதில் எந்தத் தவறும் இல்லை. இது முற்றிலும் சரியானது. இதை சத்தியோதயத்தில் எழுது. (இந்தத் தலைப்பு முக்கியமாக சகஜமார்க்க தத்துவத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.)''

**சுவாமி விவேகானந்தா:**

''ரிக்வேதம் இந்த விஷயமாக எதுவும் சொல்லவில்லை. ஆனால் அதில் ஒரு குறிப்பு மட்டும் இருக்கிறது. ஆகாசமும் காலம் இரண்டு வெவ்வேறு விஷயங்கள்; ஆகாசம்தான் காலத்தை உருவாக்கியது. காலம் ஆகாசத்தை உருவாக்கவில்லை.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''ஆகாசம் (வானம் அல்லது வெட்டவெளி) என்பது ஒன்று. அவகாசம் (காலம் - இடைவெளி – இடைவேளை = நிகழும் நேர அளவு) என்பது இன்னொன்று. அவகாசம் என்பது ஆகாசத்தின் திடத்தன்மை பெற்ற நிலை. இந்தப்பிரபஞ்சம் முழுவதும் அவகாசத்தின் விரிவாக்கம் கடவுள் மட்டுமே ஆகாசத்தின் விரிவாக்கமாக இருக்கிறார்.''

**சுவாமி விவேகானந்தா:**

''மிகவும் கடைசியான உள்வட்டம்தான் கடவுளின் படைப்புக்குக் காரணம். அதன் வெளிப்புற உறை பிரபஞ்சத்தின் படைப்பாக உருவாகியது. இடையில் உள்ள பகுதிதான் அந்தக் கால இடைவெளி. வெளிப்புற உறைகளும், நடுப்பகுதியும் நீக்கப்பட்டுவிட்டால் ஆகாசம் அல்லது வெட்டவெளி மட்டும் மீதியிருக்கிறது. இதுதான் மகாப்பிரளயத்தின் (பிரஞ்சத்தின் முழுமையான அழிவு) நிகழ்கிறது. இதுதான் ஆகாசமாக மாறுகின்ற சுய அடையாளமாக இருக்கிறது என்று சொல்லலாம் அல்லது சுய அடையாளம்தான் ஆகாசமாக இருக்கிறது.''

8-6-1951

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இது (கடவுள் என்ற விஷயம்) ஒரு ஊகத்திற்குரியதாக இருக்கிறது என்றாலும் கடவுளை வழிபடுவது அவசியமாக இருக்கிறது. அந்த நிலைக்கு வந்து சேரும்போது கடவுளைப் பற்றிய ஒரு புரிதல் அல்லது வெறும் கருத்து

மட்டுமே எஞ்சியிருக்கிறது. அதாவது சுய அடையாளம் ஒருபோதும் கடவுளுடன் ஐக்கியம் அடைய வருவதில்லை. என்னை ஒரு கருத்து என்ற உருவத்தில் எடுத்துக்கொண்டால், என் சுய அடையாளம் எஞ்சியிருக்கிறது. நானும் மிகப்பெரிய அளவுக்கு என் சுய அடையாளத்துக்கு கட்டுப்பட்டிருக்கிறேன். கடவுளின் துணையை, கடவுளைச் சார்ந்து இருப்பதை அவருக்குப் பணிந்திருப்பதை ஒருபோதும் கைவிடவில்லை. ‘கடவுளாகிய உங்கள் மீது எனக்கு மிகவும் மதிப்பும் மரியாதையும் இருந்தாலும், என் குருநாதரின் மீதான அன்பு உங்கள் மீது நான் வைத்துள்ள அன்பை விடக் குறைந்தது அல்ல.’ என்ற இந்த சூட்சுமமான கருத்தை நான் நிச்சயமாகப் புரிந்துகொண்டேன். மேலும், மாஸ்டரும் கூட, ஒரு நிலைக்கு அப்பால் நேரடியான உறவுமுறையை என்னுடன் ஏற்படுத்திக் கொள்கிறார். இப்போது நீ உன் நோக்கத்தை அவர் மூலமாக நிறைவேற்றிக்கொண்டு, அவருடைய கட்டுப்பாட்டின் எல்லைகளுக்குள் நீடிக்கிறாய் என்பது இதன் பொருளாகும்.’’

‘‘வெட்ட வெளி அல்லது ஆகாசத்தைப் பற்றி யாராவது உறுதியாகச் சொல்லியிருப்பது எதுவாக இருந்தாலும், சுருங்குதல் மற்றும் விரிதல் (குறைதல் மற்றும் அதிகரித்தல்) என்ற வடிவம் நிச்சயமாக அதனுள் இருக்கிறது. அது சிந்திப்பதற்கும், புரிந்துகொள்வதற்கும், நமது கூருணர்வுத் திறனுக்கும் அப்பாற்பட்டதாக, மிகவும் மங்கலாக இருந்தாலும் கூட அதனுள் இந்த சுருங்குதலும், விரிதலும் இருக்கிறது. அதற்கு ஒரு நிரந்தரத்தன்மை இருக்கிறது. அது எப்போதும், எக்காலத்திலும் அப்படியே இருக்கும். இப்போது இதிலிருந்து வளர்ச்சியடைவது எதுவாக இருந்தாலும், அது இன்னொரு விதத்தில் அதன் வடிவமாகவே மாறுகின்றது.’’

### சுவாமி விவேகானந்தா:

‘‘இந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டால் அது தத்துவஞானிகளுக்குப் புதிராகவே இருக்கும். சந்தேகமில்லாமல் இது மிகச் சரியானது. ஆனால் அதை எப்படி வெளிப்படுத்திச் சொல்வது! அதுதான் மிகவும் சிரமமானது!’’

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

‘‘எங்கே ‘இருக்கிறது’ (ஜீவன்) இருக்கிறதோ, அங்கே ‘இல்லை’ (இல்லாத தன்மை, ஜீவன் இன்மை) என்பதும் இருக்கிறது. இதன்பொருள் என்னவெனில் (இருக்கிறது, இல்லை என்ற) இந்த இரண்டுக்கும் இடையில் ஏதோ ஒரு செயல் நிச்சயமாக இருக்கிறது என்பதே.

இல்லையென்றால் இல்லாதிருத்தல் என்பது பற்றிய சிந்தனையே, கருத்தே இருக்காது. இப்போது இது யாருடைய செயலாக இருக்கும்? இருக்கிறது மற்றும் இல்லை ஆகிய இவற்றின் இடையே இருக்கும் அதன் செயல்தான். 'வெற்றிடம் (வெட்டவெளி, ஆகாசம்) இருக்கிறது' என்று சொன்னால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அது இல்லாதிருந்தது என்றும் பொருள்படும். இவ்வாறாக இது வெறும் உத்தேசக் கருத்தாக, மாறக்கூடிய கருத்தாக மட்டுமே இருக்கிறது! அது ஒரு குறிப்பிட்ட காலத்தில் இல்லாமல் போயிருந்தது, (இருக்கவில்லை) என்று வைத்துக்கொண்டால், அது இருக்கிறது என்ற நிலைக்கு வந்தபோது, 'இல்லை' என்பதில் இருந்து 'இருக்கிறது' என்பதற்கு வந்ததாகப் பொருளாகும். வெற்றிடம் என்பது இல்லை என்று உறுதியாகச் சொன்னால், அது சிலசமயங்களில் இருந்தது, இப்போது அழிக்கப்பட்டு விட்டது என்ற கருத்துக்கே மீண்டும் வருகிறது. அதாவது அது எப்போது இருந்தது? எப்போது இல்லாமல் போனது? இதற்கான ஒரே பதில் அது இருந்தபோது இருந்தது. இல்லாதிருந்த போது நேர்ந்தது (நிகழ்ந்தது) என்பதாகவே இருக்கமுடியும். இருப்பது எதுவாயினும் அது இல்லாமல் போகும்; இல்லாமற் போனது இருக்கும் ஒன்றாக மாறுவதும் சாத்தியமாகும் என்பதை இது நிரூபிக்கிறது. எதிர்மறை நிலையிலிருந்து நேர்மறை நிலைக்கு வருவது என்பதில், இரண்டுக்கும் இடையில் நிச்சயமாக ஏதோ ஒரு செயல் மறைந்திருந்தது என்ற அர்த்தம் இருக்கிறது. அனைத்துக்கும் நேர்மறை, எதிர்மறை என்ற இரண்டு நிலைகள் அவசியமாக இருக்கின்றன. ஒன்று மற்றதையும் உள்ளடக்கியதாகவே இருக்கிறது. (சிறிது இடைவெளி) இன்னும் ஒரு விஷயத்தையும் சொல்கிறேன். வெற்றிடத்தின் எதிர்மறை நிலையை சிந்தித்தால், அது கடவுளாக மட்டுமே நிலைத்திருப்பதாக ஆகிறது.''

## 27-12-1953

### சுவாமி விவேகானந்தா:

''சந்தேகமில்லாமல் உன் மிஷன் பிரகாசிக்கும். அதற்கான காலம் வரட்டும். ஆன்மீகத்துக்கான விதையை நீ எங்கெங்கும் விதைத்திருக்கிறாய். அந்த விதை முளைத்து வருவதற்குக் காலம் தேவைப்படும். உன் ஆயுட் காலத்திலேயே இது நிகழவேண்டும் என்று விரும்புகிறேன். உனக்கு சிலர் மட்டும்தான் கிடைத்திருக்கிறார்கள். பொருளாதார பற்றாக்குறையும் இருக்கிறது. ஆனால் வணக்கத்திற்குரிய உனது மாஸ்டரின் சூழ்நிலையை நினைத்துப் பார். தனது சிரமமான சூழ்நிலையிலும் அவர் எவ்வளவு அதிகமான ஆன்மீகப் பணியைச் செய்திருக்கிறார்! என் வாழ்க்கையிலும்

கூட சிலசமயங்களில் கல்லைப்போல இறுகிப்போன ரொட்டி தான் எனக்கு சாப்பிடுவதற்குக் கிடைத்தது. இப்படியெல்லாம் சொல்லி உன்னை மனத்தளர்ச்சி அடையச் செய்ய நான் விரும்பவில்லை. வேலையை அது செய்யப்பட வேண்டும் என்பதற்காகவே செய். உன் கடமையைச் செய். அதன் பலன் எல்லாம்வல்ல பரம்பொருளிடம்தான் என விட்டுவிடு. K8 - க்கு அளித்த தீட்சையைப் பற்றி, அது தவறு என்பதை இப்போது உணர்ந்து நீ கவலைப்படுகிறாய் என்றால், அந்த தீட்சையை உடனடியாக நீக்கிவிடலாம். உன்னால் அதைச் செய்ய முடியவில்லையென்றால், அதை நீக்கிவிட வேண்டும் என்று நீ தீர்மானிக்கும் பட்சத்தில், நான் அதை உனக்காகச் செய்கிறேன். எந்தக் காரணத்துக்காகவும் நீ கவலைப்படுவதை நான் விரும்பவில்லை. உண்மையான ஆன்மீகத்தின் சுவையை இந்தியாவுக்கும், ஓரளவு வெளிநாடுகளில் இருக்கும் மக்களுக்கும் நீ கொடுத்திருக்கிறாய். நீ உன் வேலையை சரியாகச் செய்யவில்லையோ என்ற எண்ணத்தை மனதில் வளரவிடாதே. சகஜமார்க்கம் என்ற முறையில் பயிற்சி பெறுவதற்கு மக்கள் போதுமான அளவுக்கு உன்னை நாடி வரவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கதுதான்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''எந்தப்படியிலும் ஒருவன் நம்பிக்கையை இழக்கக்கூடாது.''

### சுவாமி விவேகானந்தா:

''நிர்வகிக்கும் ஆளுமையாக இருப்பது வேறு ஒன்று என்பதை நான் தெளிவுபடுத்தியாக வேண்டும். வணக்கத்திற்குரிய உனது மாஸ்டரின் கைகளில் ஒரு பொம்மையைப் போல அவர் விரும்புவதைச் செய்து கொண்டிருக்கிறாய். (சிறிது இடைவெளி) இங்கிலாந்து மக்கள் கூட இப்போது இந்த அலையை உணர்கிறார்கள். லண்டன் நகருக்குக் கீழே இருக்கும் எரிமலை எந்த நேரத்திலும் வெடிக்கலாம் என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வளைகுடாவில் கடல்நீரோட்டம் தனது பாதையை மாற்றிக்கொண்டிருக்கிறது என்பது ஏற்கெனவே அவர்களுக்குத் தெரியும். அமெரிக்கா சிறிதுகாலத்திற்கு (ஓரிரு வருடங்களுக்கு) முன்பு இருந்தது போல இப்போது அவ்வளவு செல்வவளத்துடன் இல்லை. இந்தியாவின் தட்சிணப்பீடபூமி ஒரு தீவாக மாறுவதற்கு இன்னும் எவ்வளவோ காலம் இருக்கிறது. பற்பல பூகம்பங்களுக்குப் பிறகு பீகார் மாநிலத்தின் ஒரு பகுதி அழிந்து போகும். (சிறிது இடைவெளி) சூரியன் வெப்பத்தை இழந்து கொண்டிருப்பதுபற்றி நான் ஏற்கெனவே உன்னிடம் சொல்லியிருக்கிறேன்.

நீ விரும்பினால், எந்த நேரத்திலும் அதைச் சரி செய்துவிடலாம். ஆனால் அதுவும் கூட அவசியமில்லை. அடுத்துவரும் பேரழிவுக்கு அது ஒரு அறிகுறி. சத்தியோதயம் புத்தகத்தில் நீ சேர்த்திருக்கின்ற, ‘‘நான் கண்ட தோற்றம்’’ என்ற தீர்க்க தரிசனங்கள் மிகச் சரியானவை; காலப்போக்கில் அவை நிகழும். ஜப்பான் நாடு பற்றி அதில் நீ எதுவும் எழுதவில்லை. அதன் வருங்காலமும், (நீண்ட காலத்திற்குப் பிறகு) அவ்வளவு சிறப்பாக இருக்காது. (இந்தியாவைப் பற்றி குறிப்பிட்டு) அது இப்போது பிரகாசிக்கிறது. பழங்காலத்தில் இருந்ததுபோல அது இனியும் பிரகாசிக்கும். (அமெரிக்கா – பாகிஸ்தான் இடையே ராணுவ ஒப்பந்தங்கள் பற்றி) இவை நாசகரமான ஒப்பந்தங்கள். பாகிஸ்தான் நாளுக்கு நாள் நலிவடைந்து கொண்டிருக்கிறது. வறுமை அங்கு அதிகமாகி வருகிறது. அது வறுமையால் வாடும் நாடாக ஆகும். (சத்யோதயம் புத்தகத்தில் கடைசி அத்தியாயமாகிய ‘நான் கண்ட தோற்றம்’ என்பது பற்றிய குறிப்பு)”

## 19–6–1955 (நேரம் காலை 9 மணி)

**சுவாமி விவேகானந்தா:**

‘‘அமைதியான நீர்ப்பரப்பின்மீது பாசியும், குப்பையும் சேரவிட வேண்டாம். நோய்வாய்ப்பட்டு, பயன்படாமல் போன பகுதியை வெட்டியெறிந்துவிடு. நீங்கள் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதுபற்றி கவலைப்பட வேண்டாம். சந்தேகமில்லாமல், இந்த எண்ணிக்கை அதிகரிக்கும். அதுவும் உன் ஆயுட்காலத்திலேயே நடைபெறும். நல்ல திறமையுடைய, தகுதி உடைய மனிதர்களை மட்டுமே துணையாக வைத்துக் கொள். இந்த உலகில் அம்மாதிரி நல்ல தகுதியும், திறமையும் உடையவர்கள் இல்லாததுபோலத் தோன்றினாலும் அவர்கள் இல்லாமற் போய்விடவில்லை. நீ அவர்களைக் கண்டறிவாய். வணக்கத்திற்குரிய உனது மாஸ்டரைப் போலவே நானும் எனது தீர்ப்பைச் சொல்லுவேன். C2, I3 - க்கு சில வரிகள் மட்டும் கடிதம் எழுதி, அதன் பலன் என்னவென்று பார்க்கட்டும். உனக்கு முன்னே போதுமான களம் இருக்கிறதுது உன்னுடைய மிஷனில் கல்வியறிவு உடைய மக்களை சேர்த்துக்கொள். நல்ல அறிவாளிகள் இதில் இருக்க வேண்டுமேயன்றி முட்களையும், புதர்களைப் போன்ற மூடர்களை இந்த மிஷனில் சேர்க்க நான் விரும்பவில்லை. ஆயினும் உண்மையான ஆன்மீக நாட்டம் உடையவராக இருந்தால் கல்வியறிவு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. அவர்களை சேர்க்கலாம். அம்மாதிரி மனிதர்களை நீயே கண்டறிய முடியும். குறைந்தபட்சம் மெட்ரிகுலேஷன் (உயர்நிலைப் பள்ளிக்கல்வி) அளவுக்கு இதில் சேருகிறவர்கள் படித்திருக்க வேண்டும்.

பிரம்மவித்யா எனப்படும் ஆன்மீக விஞ்ஞானத்துக்கு இன்றியமையாத விஷயங்களைப் புரிந்து கொள்ளவும் கிரகித்துக் கொள்ளவும் தேவைப்படுகிற ஞானத்தை வைத்துப் பார்க்கும்போது இந்தப் படிப்பு உண்மையில் ஒன்றுமே இல்லைதான். ஆயினும், இந்த அளவுக்காவது கல்வியறிவு வேண்டும். அதாவது பண்பாடு உடைய மூளை (இதயம் மற்றும் மனம்) கொண்ட மனிதர்கள் நமக்கு வேண்டும். ஒழுங்குமுறை கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களாக உனது சகாக்களை உருவாக்கு. அவர்களுக்கு ஆன்மீக நாட்டம் நிச்சயமாக இருக்க வேண்டும். கிராம மக்களில் சிலரையும் எடுத்துக்கொள்ளலாம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அவர்களுடைய ஆன்மீக நாட்டத்தையும், பயிற்சி செய்யும் திறனையும் சோதித்து அறிந்த பிறகுதான் அவர்களை சேர்க்க வேண்டும். இந்த மிஷனில் சேர விரும்புகின்ற அனைவருக்குமே இது பொருந்தும். இங்கு ஜாதிப் பிரிவினை உள்ளே நுழைய அனுமதிக்கக் கூடாது. நாமனைவரும் சகோதரர்கள். அதாவது ஒருவர் தன்னுடைய குறிப்பிட்ட விசேஷமான வழிகளையும், பழக்கங்களையும் பின்பற்றும் சுதந்திரம் இருக்கிறது என்றாலும், ஆனாலும் இங்கே ஸ்ரீ ராம்சந்த்ர மிஷன், ஷாஜஹான்பூர் என்ற சங்கத்தின் உறுப்பினர்களாக, நாம் சகோதர, சகோதரிகளாகவே இருக்க வேண்டும். இஙகு ஜாதி, இனப்பிரிவு என்ற பேதம் இருக்கக்கூடாது. அவையனைத்தும் முக்கியமல்லாத துணை அம்சங்களாக இருக்கலாமேயன்றி, சாராம்சமாக கருதப்படக்கூடாது. இதைக் கண்டிப்பாகப் பின்பற்றி இந்த மிஷனை ஸ்தாபிக்க வேண்டும். (சிறிது இடைவெளி) உன்னை நீ தனியாக ஒதுக்கி வைத்துக்கொள்ள வேண்டும் மற்றும் அவர்களை தண்டிக்கப் பட்டவர்களாக நினைத்துக்கொள்; மீதி வேலையை நான் கவனித்துக் கொள்கிறேன்.''

*(இங்கு ஷாஜஹான்பூர் ஜில்லாவில் இருக்கும் L ………… என்ற கிராமத்தில் I3 - என்பவரின் தலைமையில் இருந்த ஒரு அப்யாசி குழுவினர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் R2 - இடம் மிகவும் நெருக்கமான பற்று உடையவர்கள். அவர் உயிர் நீத்த பிறகு அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக திசைமாறி ஹிந்துமத சம்பிரதாய முறைகளைப் பின்பற்றி வழக்கமான பூஜாரிகளின் மேலாதிக்கமாக மாறிவிட்டனர்.)*

## 20-6-1955 (மணி இரவு 10.55)

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''I3 - இன் ஆன்மீக நிலையையும், திறமையையும் நான் முழுமையான துண்டித்துவிட்டேன். அவரின் கீழ் பயிற்சி பெறுகின்ற மற்றவர்களின் நிலையை நீ துண்டித்துவிடு. (அந்த உத்தரவின்படி செய்யப்பட்டது). எந்த ஒரு சங்கத்தின் மூலமாக அவர்களுக்கு நன்மை கிடைத்ததோ, அதற்கு எதிராக இம்மாதிரி கீழ்த்தரமான, தகாத வார்த்தைகளைச் சொல்கின்ற அயோக்கியர்களை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. இம்மாதிரி ஆட்கள் நமக்குத் தேவையில்லை. அவர்களிடமிருந்து உன் தொடர்பை துண்டித்துக்கொள்!''

*(குறிப்பு: ஷாஜஹான்பூர், ஸ்ரீ ராம்சந்த்ரா மிஷன் தலைவரால் I3 - க்கு அளிக்கப்பட்ட, பிறருக்குப் பயிற்சியளிப்பதற்கான தற்காலிக அனுமதி நேற்று 19-6-1955 – தானாகவே விலக்கிக் கொள்ளப்பட்டது.)*

## 30-6-1955 (காலை மணி 11.00)

**வணக்கத்திற்குரிய மாஸ்டர்:**

''இந்த மிஷன் அமைப்பில் இரண்டு பகுதிகள் இருக்கவேண்டும் என்பது சரிதான். ஒரு பகுதியில் கல்வியறிவு பெற்றவர்கள் இருக்க வேண்டும், மற்ற பகுதியில் கல்வியறிவு இல்லாதவர்கள் சேர்க்கப்பட வேண்டும். இரண்டாவது பகுதியில் இருப்பவர்கள் கூட்டு தியானங்களில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். அவர்களுக்கு பயிற்சி செய்யும் வழிமுறை மட்டும் அளிக்கப்படும். அதன் பிறகு பயிற்சியளிப்பவர் அவர்களைத் தொடர்ந்து கவனித்து பிரம்மவித்யை (பரம்பொருளைப் பற்றிய விஞ்ஞானம்) மீது அவர்களுக்கு நாட்டம் அதிகரிக்கிறதா என்று அறிந்து கொண்டு, அவர்களின் கடினத்தன்மை எந்த அளவுக்கு இன்னும் பாக்கி இருக்கிறது என்பதைக் கண்டறிய வேண்டும். போதுமான அளவுக்கு ஆன்மீக தாகம் அதிகரித்தால், சம்பந்தப்பட்ட அந்த மனிதருக்கு பிரம்மவித்யா அல்லது சத்தியநிலையின் சாராம்சம் அறிமுகப்படுத்தப்படலாம். ஆயினும் ஆன்மீக தாகம் இல்லையென்றால் பிராணாஹூதியின் மூலமாக ஆன்மீகப் பயிற்சியளிப்பது கூடாது. கல்வியறிவு பெற்றவர்களின் கூட்டத்தாரைப்போல, உன் வீட்டில் இவர்கள் சிறிது காலம் இருந்து அவர்களுக்கு சொல்லப்பட்ட பயிற்சியைச் செய்யலாம். இதனால் தவறு இல்லை. ஆயினும், அவர்கள் கூட்டு தியானத்தில் பங்குபெற அனுமதிக்க வேண்டியது இல்லை. இந்த

இரண்டாவது பகுதி ஏன் அமைக்கப்படுகிறது என்றால் அவர்களுக்கு இந்த நன்மை கிடைக்காமல் போய்விடக்கூடாது என்பதால்தான். வேலை செய்கிறவர்கள் அனைவரும் படித்தவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால் கல்வியறிவு இல்லாமலே கூட அனைத்தையும் பெறுவதற்கு அவர்கள் வருகிறார்கள் என்பதை அனுபவிக்கின்ற கூருணர்வுத்திறன் உடையவர்கள் மிகவும் சிலர்தான் இருப்பார்கள். அந்தமாதிரி மனிதர் யாராவது கிடைத்தால், அவரிடமும் வேலை கொடுக்கலாம். ஆயினும், இம்மாதிரி மனிதர்கள் அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்களோ, அதிலேயே பிடிவாதமாக நிலைத்திருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. அவர்களுடைய உழைப்பு ஈடுபாடு உடையதாக இருக்கும்பட்சத்தில், அந்த மனிதர்களையும் சரிப்படுத்த முடியும். ஆனால் அதற்குத் தேவை என்ன இருக்கிறது? இங்கே ஒவ்வொரு குப்பனும், சுப்பனும் தேவையில்லை, நாம் இங்கே பயிற்சியளிக்கும் விஷயம் ஏராளமான அனுபவத்திற்குப் பிறகே புரிந்து கொள்ளக் கூடியதான ஒரு அற்புதமான விஷயம். கல்வியறிவு தேவைப்படாதவர்களாக, கல்வி இல்லாதிருந்தும் இந்த விஷயம் முழுவதையும் கற்றுக்கொள்ளும் தன்மை உடைய மனிதர்கள் நிச்சயமாக இருக்கிறார்கள். அம்மாதிரி தகுதியுடைய பாத்திரங்கள் மிகவும் அரிதாகவே இருக்கிறார்கள். கஸ்தூரி என்ற வாசனைத் திரவியம் அரிசி அளவு எடையில்தான் கிடைக்கும். நிறையக் கிடைக்காது. இதை நீ நினைவில் வைத்திருக்க வேண்டும். ‘கல்வியறிவு உடைய’ என்ற வார்த்தையை ‘நன்னெறிப் பண்புகளில் நிறைந்த முறை (அறிவு)’ என்ற பொருளில்தான் சொல்கிறேன். அவரது மனமும், இதயமும் பண்பாடுகள் கொண்டதாக இருக்க வேண்டும். இல்லையென்றால் கல்வி கற்றவர்களிடையேயும், கல்வியறிவற்றவர்களைக் காணமுடியும்.’’

*(முடிவான மூன்றாம் தொகுதி: ஸ்ரீ ராம் சந்த்தரின் சுயசரிதம் பாகம் 2 இத்துடன் நிறைவடைகிறது. எனினும் இதற்குப் பிறகு ஸ்ரீ பாபுஜி இவ்வுலகில் இருபத்து எட்டு ஆண்டுகள் (19-4-1983) வரை உயிர் வாழ்ந்திருந்தார். ஒரு மாஸ்டராக வணக்கத்திற்குரிய மாஸ்டரின் நாட்குறிப்பில் இப்பகுதியில் கடைசியாகக் குறிப்பிட்டுள்ள 30-6-1955க்குப் பிறகு சில மாதங்களில் நான் ஸ்ரீ பாபுஜியிடம் வந்து சேர்ந்தேன். காலப்போக்கில் வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீ பாபுஜியின் சுயசரிதம் மூன்றாம் பாகத்தை அல்லது அவருடைய சரித்திரத்தை நாம் அறியும் வாய்ப்பு ஏற்படலாம் என்று நம்புகிறேன். – தொகுப்பாசிரியர்).*

## தொகுப்பாசிரியரின் பின்னுரை

''வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீ பாபுஜியின் நாட்குறிப்பின் நிறைவுக்கு நாம் வந்திருக்கிறோம். அது 10-5-1944 ஆம் ஆண்டு தொடங்கி 30-6-1955 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. அப்படியானால் இது அவருடைய கதையின் முடிவா, அது எப்போது தொடங்கியது? என்பதை ஒருக்கால் யாராவது சொல்ல முடியலாம். எனக்கு அவருடைய வாழ்க்கை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அல்லது ஐந்துகோடி ஆண்டுகளுக்கு முன்பே கூட ஆரம்பித்திருக்கலாமோ, ஒருக்கால் ஒருபோதும் முடிவே இல்லாததோ என்று தோன்றுகிறது; அதை யார் சொல்ல முடியும்? அவருடைய சுயசரிதமாகிய இத்தொகுப்புக்களை, அதற்குரிய சரியான வழியில் படிப்பதற்குப் போதுமான பொறுமையும், ஒய்வு நேரமும் கிடைக்கக்கூடிய அனைவருக்கும் இதே உணர்வு ஏற்பட வேண்டுமென விரும்புகிறேன். என்னுடைய சிறிய தோட்டத்தில் ஒரு குறிப்பிட்ட தேதியில் மலர்ந்த ரோஜா மலரின் நறுமணத்தின் கதை. இதற்கு சிறிது காலம் முன்பாகவே நான் ஒரு ரோஜாத் தோட்டத்திலிருந்து வாங்கி வந்த ரோஜாச் செடியின் வேரிலிருந்து ஆரம்பித்திருக்கிறது. அந்தத் தோட்டத்தில் இந்தச் செடியின் இடம் எங்கு இருந்தது என்று யார் சொல்ல முடியும்? அந்த ரோஜாவின் இதழ்கள் வாடி உதிர்ந்தவுடன் இந்த மெல்லிய நறுமணம் முடிந்துவிட்டதாகத் தோன்றினாலும், அது எங்கேயாவது எப்போதும் இருக்கும். அது அடர்ந்த புதர்களில் மறைந்து வீணாகிப் போவதும், அதற்கேற்ற ஒரு சரியான வழியில் வருங்காலத்திற்காகப் பாதுகாத்து வைக்கப்படுவதும், அதனிடம் நெருக்கமாக, அதனிடம் ஈடுபாடு உடையவர்களாக இருப்பவர்களின் தகுதி, மனநாட்டம் மற்றும் போதுமான திறமையைச் சார்ந்திருக்கிறது அல்லது அதன் மதிப்பையும், உயர்ந்த தகுதியையும் தாங்களும் உணர்ந்து அடுத்துவரும் தங்கள் தலைமுறைகளுக்கும், எல்லையற்ற காலம் வரை கொண்டு செல்கிறவர்களைச் சார்ந்திருக்கிறது. மதிப்புயர்ந்ததாக அல்லது வீணாக இருக்கும் அனைத்தின் கதையும் அதுவாகவே ஆகிறது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீ பாபுஜி அவர்கள் யாக்ஞ வல்கியர், புத்தர், ஏசு கிறிஸ்து, முகம்மது நபி, கபீர், ஸ்ரீ சைதன்யா, ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் மற்றும் சுவாமி விவேகானந்தா ஆகியோரின் மிக உயர்ந்த பாரம்பரியத்தை தனது மாஸ்டர் வணக்கத்திற்குரிய ஸ்ரீ லாலாஜி சாகேப் மூலமாகவே வருங்காலத்துக்கு அளிக்கிறார். தானும் அதற்குப் பிரதிநிதியாக இருக்கிறார். பதஞ்சலி மற்றும் வியாசர் ஆகிய மகரிஷிகளின் மற்றும்

புத்தகோச விஞ்ஞான பிக்ஷு மற்றும் பலர் மூலமாக அவரிடம் கொடுக்கப்பட்ட இந்தப் பாரம்பரியத்தின் நறுமணத்துடன், இன்னும் எத்தனையோ பழங்காலத்துப் பெயர் தெரியாத மகான்களின் பதிவு செய்யப்பட்ட விஷயங்களும், அதற்கு மேலும் மணம் சேர்க்கின்றன. இந்தப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக ஆரம்பிக்கப்பட்ட சகஜமார்க்கப் பயிற்சி முறை, வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் அவருடைய தெய்வீகமான தன்மையுடைய மனிதத் துணைவியாகிய வணக்கத்திற்குரிய ராதா அம்மையார் ஆகியோருடன் இணைந்ததாக இருக்கிறது. சிவபெருமான், அன்னை பார்வதி மற்றும் ஸ்ரீ ஹனுமான் ஆகியோருடன் அவருக்கு அவர்கள் வெளிப்படுத்தப்பட்டவாறு இணைந்திருப்பதில் அவருக்கு எந்த மனத்தடுமாற்றமும் இருக்கவில்லை. மேலும், இந்தியாவில் சனாதன தர்மம் என்று சொல்லப்பட்ட பழையதாகித் தேய்ந்துபோன மதத்தின புகழ்பெற்ற கருத்தினை உள்ளடக்கிய, ஆசார நெறிகளுடைய சன்னியாசம் மற்றும் புரோகிதர்கள், பூஜாரிகளின் சடங்குமுறைப் பழக்கங்கள் அனைத்தையும், ஆதி சங்கராச்சாரியாரையுமே கூட ஒரேயடியாக ஒதுக்கித்தள்ளுவதில் அவருக்குத் தயக்கமே இருக்கவில்லை. மதம், ஆன்மீகம், தெய்வீகத்தை மற்றும் இம்மாதிரி விஷயங்களிலிருந்து அவர் சாரமாகக் கடைந்தெடுத்திருப்பது, மனிதகுலத்தில் ஒவ்வொருவருக்கும் ஜாதி, நிறம், இனம், வசிப்பிடம் போன்ற அனைத்து எல்லைகளையும் (கட்டுப்பாடுகளையும்) கடந்த ஒரு விஷயமாகும். அதற்கு வருவதற்கான ஒரே தகுதி, அனைவருக்கும் சொந்தமானதாகிய, அசலான சத்தியத்தை நேர்மையுடன், உண்மையுடன் நாடியிருப்பது தான். அதுவே தனி மனிதனாகவும், ஒரு முழுமையான மனிதகுலமாகவும் அமைந்த மனித வாழ்க்கை மற்றும் கலாசாரத்தின சாரமாக இருக்கிறது. நித்தியமான, களங்கமற்ற சத்தியம் (ருதம் சத்யம்) மற்றும் அது பற்றிய அறிவு (வேதம்) வறட்சிமிக்க நூலறிவு அல்லது குழப்பமான மறைபொருள் ஞானம் இவற்றுக்கு அப்பாற்பட்டதாக, (ரிச்சா என்ற வடிவில்) ஞானக் கருத்துக்களாக வெளிப்படுத்தப்பட்டன. அவை தான் சகஜமார்க்கப் பயிற்சி முறை எனப்படும் யோகவழிமுறை மற்றும் கொள்கையின் உறுதியான கட்டிடமாக அமைந்துள்ளன.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீ பாபுஜியின் ஆயுட்காலத்தில் பதிப்பிக்கப்பட்ட அவருடைய புத்தகங்கள், சகஜமார்க்க முறையின் கீழ் செய்யப்படும் பயிற்சி மற்றும் அதன் கொள்கை பற்றிய ஒரு எளிய அறிமுகத்தையும், சில சமயங்களில் விரிவான விளக்கங்களையும்

கொடுக்கின்றன. அவருடைய சுயசரிதத்தின் இரண்டாம் பாகத்தை உள்ளடக்கிய இத்தொகுதிகள், அதன் அசலான மூலவடிவத்தில் நமக்குக் கிடைக்கச் செய்கின்றன. மேலும் அதன் நிகழ்வுகளின் போக்கில் நமக்கு ஒரு பார்வையைக் கொடுக்கின்றன. ஆயினும் இந்திய தத்துவஞானம் மற்றும் கலாசாரம் ஆகிகயவை பற்றிய சாதனா எனப்படும் செயல்முறைப் பயிற்சி சம்பந்தமாக, கல்விமுறை சார்ந்து ஆய்வு செய்வதில் ஆர்வம் உடைய ஒருவருக்கு இன்னும் கூட அதிகமாக அதில் இருக்கிறது. வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் பங்களிப்பில் அடங்கியுள்ள முக்கியமான அம்சங்கள் இதனுள் கண்ணுக்குத் தெரிகின்ற மேற்பரப்புக்குக் கீழே, எழுதப்பட்டுள்ள வரிகளுக்கு இடையே கண்டறியக் கூடியவையாக உள்ளன. அதைப் பற்றி எனக்குத் தெளிவு ஏற்படுத்திக் கொள்வதற்காக, இங்கு ஓரளவுக்கு நான் முயற்சி செய்கிறேன்.

1) முதலாவதாக, உலகைவிட்டுப் பிரிந்து ஆன்மாக்களுடன் அல்லது உச்சநிலை சத்தியத்துடன் அல்லது சத்தியத்துக்கும் அப்பால் உள்ள தெய்வீகத் தன்மையுடன் அல்லது எந்த ஒரு ஆன்மாவுடனும் உள்முகமான தகவல் தொடர்பு கொள்வது பற்றிய உண்மை அல்லது கற்பனை இருக்கிறது. எல்லாவிதமான ரிஷிகள், முனிவர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளுக்கு (மேலே உள்ள இறைத் தன்மையிலிருந்து) கட்டளைகளும், மெய்ஞ்ஞான உண்மைகளும் வந்திறங்குவது சம்பந்தமான கொள்கை காலங்காலமாக இருந்திருக்கிறது. இது சம்பந்தமாக நோய்க் காரணம் கண்டறிதல் மற்றும் இதுபோல சமுதாயத்தினால் பாராட்டப் பெற்ற பலவிதமான பெருமை கூறுதல் எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. இதன் கூடுதலான விளைவும் மனிதனுக்கான பயன்பாடு பற்றிய சிந்தனையும் அனுகூலமானவையாக இருக்கலாம். ஆனால், அவை ஏமாற்று (மோசடி) மற்றும் கற்பனையிலிருந்து வேறுபடுத்திக் காணக்கூடியதா? என்ற விதத்தில் உண்மையான விஷயத்துக்கான தகுதியைக் கண்டறிய சரியாக உதவுவதில்லை. மிகவும் அரிதாகவே இருந்தாலும் கூட ஒரு நிகழ்வின் உண்மைத் தன்மை மட்டுமே, முக்கியமாக கருதப்பட வேண்டும். இவற்றை வெறுமே அதிசயமாகக் கருதுவது அல்லது ஏமாற்றமாக நினைப்பது இவற்றுக்குப்பதிலாக காரணரீதியான நிலைமைகளைக் கொண்டே ஆராய வேண்டும் மற்றும் தீர்மானிக்க வேண்டும். வணக்கத்திற்குரிய மாஸ்டரே இதுபற்றி (30-4-1988 இல் ஷாஜஹான்பூரில் வெளியிடப்பட்ட அருட்செய்தி) தகவல் தொடர்பின் செயல்முறையில் சம்பந்தப்பட்ட மனிதர்களின் சுயவிருப்பங்களுக்கு இடையிலான ஒத்திசைவு

என்ற கருத்தில் விளக்கம் கூறியுள்ளார். கட்டளைகளை, செய்திகளை அல்லது மெய்ஞ்ஞான வெளிப்பாடுகளைப் பெறுகின்ற மனிதருக்கு இருக்கவேண்டிய தகுதிகள்: முதலில் அவர் சுயவிருப்பத்தை முற்றிலும் இழந்தவராக, ஒரு கருவியாக பயன்படுத்தக்கூடியவராக இருக்கவேண்டும். அதேபோல எதிர்ப்புத்தன்மை இல்லாமல் ஒரு கருவியாக சுலபமாக, லகுவாக செயல்படுவதற்காகவும் முற்றிலும் சுயவிருப்பம் (சொந்த அபிப்பிராயம்) அற்றவராக இருக்க வேண்டும். இதயம் மற்றும் மனத்தில் தேவையான சுத்தத்தன்மை, தனிமனித வாழ்க்கையில் நோக்கத்தின் தூய்மையோடு இணைந்து, மிக மேலான மாஸ்டருக்கு ஒரு கருவியாக சேவை செய்வதற்குத் தேவைப்படுகின்றன. அது அந்தக் கருவியின் சேவை யாருக்குத் தேவைப்படுகிறதோ அந்த மனிதரின் சுயவிருப்பத்தை நிறைவேற்றுவதாக இருக்கவேண்டும். இந்த விளக்கம் மிகவும் காரண பூர்வமாக, ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும், இங்கே குறிப்பிடப்படுகிற நிகழ்வினை (உள்முகத் தகவல் தொடர்பு பெறுவதை) உண்டாக்குவதற்கான மிகச்சரியான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானவையாக இல்லாமல் போகலாம். ஒரு மிக விசேஷமான விதத்தில் அந்தக் கருவி தேவைப்படுகிற மற்றும் பயன்படுத்துகின்ற ஒருவரின் சுயவிருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, ஒரு கருவியாக சிறப்பான பலனளிக்கும் விதத்தில் பயன்படுத்தப்படுவதற்கு உரியவராக மாறுவதே அவரது ஒரே சுயவிருப்பம் என்பது தான் ‘சுயவிருப்பத்தை முற்றிலும் இழந்திருப்பதாகும்’ என்பது மிகவும் நன்றாகவும், வியக்கத்தக்கதாகவும் இருக்கும் மிகச் சிறந்த விளக்கமாக இருக்கலாம். எனினும், கற்றறிதல் மற்றும் ஆராய்ச்சி செய்தலாகிய எந்த ஒரு முறையான துறையையும் போலவே, ஆன்மீகம் மற்றும் அதற்கு அப்பாற்பட்ட ஒன்றினை ஒரு சரியான ஒழுங்கு முறை அல்லது விஞ்ஞானமாக உருவாக்கும் அக்கறையில் (ஆர்வத்தில்) திறமை வாய்ந்த கட்டுப்பாடு மற்றும் தெளிவான புரிந்துகொள்ளுதல் இவற்றுக்காக, இப்போது ஆய்வுக்கு உட்பட்டிருக்கிற நிகழ்வினை நிரூபிக்கத் தேவையான மிகச்சரியான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தை அது நிறைவேற்றவில்லை. விஞ்ஞானத்தைப் பற்றி இழிவாகப் பேசுவது சுலபமாக இருக்கலாம்; மேலும் ஆன்மீகத்துறை மற்றும் ஆன்மீகம் என்ற விஷயம், மந்திரவித்தை மற்றும் மதத்தின் மறைபொருள் ஞானம் சார்ந்தது என்று வாதமும் செய்யலாம். ஆனால் இந்த சுயசரிதத் தொகுதிகளின் வணக்கத்திற்குரிய ஆசிரியர் (பாபுஜி) எதற்குப் பிரதிநிதியாக இருந்தாரோ, எதை உலகிற்கு அளித்தாரோ, அந்த யோகமுறை ஆராய்ச்சியின் உண்மையான உணர்வுடன் அது இசைந்ததாக

இல்லை. இந்த யோகமுறை பாரம்பரியத்தின் மாஸ்டர்கள், ஆன்மீக நிகழ்வுகள் என்று அறியப்படுகிற அனைத்து மர்மங்களின் சம்பந்தமாகவும், அவற்றைப் பற்றிய புரியாத விஷயங்களின் மயக்கத்தை வெறுமே எதிர்ப்பதற்குப் பதிலாக, தெளிவாக விளக்கிச் சொல்வதற்கே முயற்சி செய்திருக்கிறார்கள். வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜி இந்த உள்முகத் தகவல் தொடர்புகளையும், தனது சுயசரிதத்தில் இந்தப் பணிவான உணர்வுடன் தான் அளித்திருக்கிறார். சத்தியத்தையும் அதற்கு அப்பாலிருப்பது எதுவாயினும் அதனையும் வெளிப்படுத்துவது ஒரு எளிமையான இயற்கையான வழியாகவே எப்போதும் இருக்கிறது. அதுவே சத்தியத்தின் மற்றும் அதற்கப்பால் இருப்பதன் மிகமேலான சுய விருப்பமாக இருக்கிறது.

2) இதனை அடுத்து இயற்கையின் கருவியாக வேலை செய்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதரின் சங்கல்ப சக்தியைப் பயன்படுத்துவதன் மூலமாக இயற்கையின் பணியைச் செய்வது சம்பந்தமான விளக்கங்கள், இன்னும் சரியாகச் சொன்னால் மறைமுகமான கட்டளைகளுக்கு வருகிறோம். இந்த சுயசரிதத் தொகுதிகளில் பௌதீக பொருள் சார்ந்த அல்லது சமுதாய அரசியல் முக்கியத்துவம் உடையதான நிகழ்ச்சிகளில் அழிவு மற்றும் ஆக்கப்பணி செய்யப்பட்டது குறித்து மிகச் சுருக்கமான குறிப்புகள் மட்டுமே உள்ளன. இங்கே அடுத்துவரும் பாராவில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் இந்தக் குறிப்புகளுக்குப் பொருந்தும். வணக்கத்திற்குரிய மாஸ்டர் இவை சம்பந்தப்பட்ட தனது வேலையைப்பற்றி அதிகம் சொல்லாமலிருப்பதில் மிகுந்த அக்கறையுடன் (கவனமுடன்) இருந்தார் என்பது கவனிக்கத்தக்கது. ஆனால், தனக்கு வழிகாட்டுவதற்காக சொல்லப்பட்ட முக்கியமான அனைத்து முன்னெச்சரிக்கைகளையும், விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளையும் குறிப்பிட்டிருக்கிறார். அதுவும் அப்படி சக்தி அளிக்கப்பட்ட அல்லது அதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தனிமனிதருக்காக இல்லாமல், இந்த ஒரு உயர்நிலையிலான யோகமுறை பயிற்சி மற்றும் கொள்கையில், ஆன்மீகம் மற்றும் அதற்கப்பாற்பட்ட ஒன்றினைப் பற்றிய சீரான முறையிலமைந்த விஞ்ஞானத்தின் / ஒழுங்குமுறையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு கூறியுள்ளார். இந்த முன்னெச்சரிக்கைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அனைத்தையும் பற்றி சுருக்கமாகவோ, விளக்கமாகவோ கூறுவது தேவையில்லை. அதில் விருப்பமுடைய யாரும் இதைக் கவனமாகப் படித்து அறிய முடியும். இந்த வகையில் போதுமான அளவுக்கு அருள்வரம் பெற்றவர்கள், இந்தப் பட்டியலில் இன்னும் கொஞ்சம் சேர்க்கலாம். ஆனால், அதில் தேவையான

ஒரே முன்னெச்சரிக்கை என்னவெனில், தேவதைகளே நடக்க அஞ்சும் பாதையில் (மூடத்தனமாக) வேகமாக ஓடாதிருப்பதுதான்.

3) இந்த சுயசரிதத் தொகுதிகள் முழுமையும் எதற்கு அர்ப்பணிக்கப்பட்டதாகத் தோன்ற வேண்டுமோ அந்த ஆன்மீகம் மற்றும் பிரம்மவித்யா (பரம்பொருள் பற்றிய விஞ்ஞான) முறையில் ஒரு சிறப்புத் தகுதி உடைய மாஸ்டரின் பிரதிநிதி மற்றும் பதவியின் வாரிசாக இருப்பவர் பற்றிய முக்கியமான பிரச்னைக்கு இப்போது வருகிறோம். உண்மையான பெருமை மிகுந்த ஆன்மீக குருநாதர் ஒருவர், தனது சுமையிலிருந்து முற்றிலும் விடுபட்டு, முழு விடுதலை அடைவதற்காக, தான் சம்பாதித்த ஆன்மீகச் செல்வம் அத்தனையையும் யாரிடம் ஒப்படைக்க வேண்டுமோ அதற்கு ஏற்றவராக யாரையாவது கண்டறிந்து உருவாக்கவேண்டும் என்று ஏக்கத்துடன் இருக்கிறார். எனவே, அது ஒரு மாஸ்டரைத் தேர்ந்தெடுக்கும் விஷயமாக மட்டும் இருந்தால், மிக உயர்ந்த சிறப்புத் தகுதி பெற்ற எத்தனையோ ரிஷிகளும், முனிவர்களும், தங்கள் பொறுப்பின் சுமையிலிருந்து விடுபடுவதற்கு ஏன் பல நூற்றாண்டுகள் காத்திருக்க வேண்டும்? மேலும், அதில் நாட்டமுடைய ஒரு சீடர், தன் முயற்சியினாலோ, அல்லது ஒரு குழுவின் ஒத்தழைப்புடனோ அவர் ஆசைப்படுகிற லட்சியத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கான வெறும் திட்டம் மற்றும் சதியினால் பெறக்கூடியதாக இருந்தால், வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் சுயசரிதம் இரண்டாம் பாகத்தின் முழுத்தொகுப்புக்கான சாத்தியமும், தேவையும் எங்கிருந்து வருகிறது? எனவே, இந்த விஷயமாக முடிவெடுக்கும் செயல்முறை எளிமையானதல்ல என்பது வெளிப்படையாக தோன்றுகிறது. அது மேலோட்டமாகக் கண்ணுக்குத் தெரிகின்ற மற்றும் கிடைக்கக்கூடிய எந்த ஒரு காட்சியின் பிடிக்கும் எட்டாமல் அப்பாற்பட்டு இருக்கவேண்டும். இது ஒரு பெரிய பாரம்பரியத்தின் அனைத்து பரிணாமங்களிலும், தன்மைகளிலும், உண்மைகளிலும் திகழும் விதியுடன் சம்பந்தப்பட்டதாகும். இந்தப் பாரம்பரியத்தின் விதி இப்போது பணயம் வைக்கப்பட்டிருப்பதாகத் தோன்றினாலும், மனித வரலாற்றின் போக்கில் காலம்காலமாக எத்தனையோ அதிர்ச்சிகளைத் தாங்கி நிற்கின்ற இடையறாத தொடர்ச்சியாகவே இருக்கிறது. ஆன்மீக சாம்ராஜ்யத்தின் விளிம்பாக இது அமையும் என்பதால் இந்த அளவில் இதை நிறுத்திக்கொண்டு, புரியாத மர்மம் எதிலும் ஈடுபடுவதைத் தவிர்த்து காத்திருப்பதே சரியாக இருக்கும்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீ பாபுஜி அவர்களுக்கு, மிக முக்கியமானதாக அவராக என்னிடம் கொடுக்கப்பட்ட பெரும்பணியின் மகிழ்ச்சியான நிறைவுக்காக நெஞ்சார்ந்த நன்றிகள். உண்மையைச் சொன்னால் இந்தப் பொறுப்பின் சுமை அனைத்தையும் தாங்கி நிறைவேற்றியவர் அவர் ஒருவர் மட்டுமே என்பதால் எவ்வளவுதான் நன்றி சொன்னாலும் அது போதுமானதாக இருக்காது. அவருடைய பங்களிப்பு உறுதியாக நிலைத்து நின்று, எந்நாளும் மேலும் மேலும் பலனளிப்பதாக விளங்கட்டும்! அவரது நித்தியமான என்றும் பெருகுகின்ற பொருள் எப்போதும் அனைவருக்கும் கிடைத்து, தேவைப்படுவது எதுவாயினும் அதை நிறைவேற்றட்டும்.

19-10-1989

**S.P.ஸ்ரீவஸ்தவா**